நூற்றாண்டு விழா மலர்

கொக்குவில் இந்துக் கல்லூரி

1910–2010



வெளியீடு :


நூற்றாண்டு விழாச் சபை,

கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Founder



E.Chelliah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிக் கீதம்

தெளிதரு கலை பயில் பல மாணவர் தேர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்கூர்க்கு இந்துக் கல்லூரி நீ தீபம்
கிராமத்துக் கொண்மணி மகுடம்
நின துயர் கலை முறை நிதம் நிதம் பெற்றோம்
நின தருள் யாமினி மறவோம்
நீயே வித்தையின் உறையுள் நினதே எங்களின் உயர்வு
நின தடி ஏத்து வோமே!

Chors

நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ!
நீ தரு ஞான மதீதம்
அறிவுச் சுடர் கொண்டறம் பொருளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழி நீ
காட்டினை நீடுக எனவே
அற்புத நடமாடமலன் அடிமன னொடு வழிபடுவோம்
வழிமுறை மிளர்க நின் நாமம்!

Chors

நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ ! ஜெயஹோ ! ஜெயஹோ ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ !
நீ தரு ஞான மதீதம்
உள்ளத் துறுதி தருவா யுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலாம்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன னொடு மகிழ்வாக
கொக்குவில் இந்து நமதே! கொக்குவில் இந்து நமதே!

Chors


நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ ! ஜெயஹோ ! ஜெயஹோ ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ !
நீ தரு ஞான மதீதம் .

இயற்றியவர் : ஏ.நாகலிங்கம்
இசைஅமைத்தவர் : சரஸ்வதி பாக்கியராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரிக் கொடி



எமது பாடசாலைக் கொடியானது 1940ஆம் ஆண்டு ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.சி.கே.கந்தசாமி, திரு.மு.தர்மலிங்கம் ஆகியோரின் ஆலோசனைப் படி சிவப்பும், வெள்ளையும் கலந்த நிறங்களாக அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு இணங்க உருவாக்கப்பட்டது. இதில் சிவப்பு வெற்றியையும், வெள்ளை தூய்மையையும் குறிக்கின்றது. இக் கொடி 91 CM உயரமும் 120 CM அகலமும் ஒவ்வொன்றும் 7 CM உயரமும் கொண்ட வெள்ளைக் கோடுகளையும் 6 சிவப்புக் கோடுகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் மத்தியில் பாடசாலைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கொடியின் வாழ்த்துப்பாவினை எமது முன்னாள் ஆசிரியரான திரு.எஸ்.வேலாயுதபிள்ளை (கனடா) அவர்களால் 26.11.1995 ஆண்டு எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரிக் கொடி வாழ்த்துப்பாட்டு

பல்லவி

கொக்குவில் இந்துக் கொடியிது பாரீர்
குனிந்து வணங்கி வாழ்த்துவோம் வாரீர்

சரணங்கள்

கம்பத்தின் உச்சியில் ஓங்கி - அது
"கற்ற தொழுகு" எனும் வாசகம் தாங்கி
செம்பட்டி சேர்வெண் பட்டுக்கொடி - இது
செம்மையும் தூய்மையும் உணர்த்துதல் காணீர்! (கொக்குவில்)

ஓங்கார எழுத்து வடிவத்தினுள்ளே - சுடர்
ஒளிதரும் குத்து விளக்கினைக் காணீர்:
பாங்கிலே சங்கு சங்கரப் படையும் - நல்ல
பதுமமும் கொண்ட சின்னத்தைப் பாரீர் (கொக்குவில்)

எட்டுத் திக்கும் கலையொளி பரப்பி - விளங்கும்
எங்கள் கலைக்கொடிக் (கு) இணையில்லை என்போம்
பட்டுக்கொடியென லாமோ - தமிழ்ப்
பண்பாட்டுக் கொடி என்பதே சாலும் (கொக்குவில்)

செந்தமிழ் ஆங்கிலம் செழுங்கலை - விஞ்ஞானம்
தேர்ந்து பயிற்றும் கல்லூரிக் கொடியிது:
இந்துப் பண்பாட்டு க்கு இலச்சினையாய் - எம்மை
இறுமாந் திருக்கச் செய்வதெம் கொடியே (கொக்குவில்)

எங்கள் மணிக்கொடி வாழியவே - என்றும்
எங்கலைக்கோயிலும் வாழியவே
மங்கலத் தமிழ்மொழி வாழியவே - ஈழ
மணித்திரு நாடும் வாழியவே (கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி இலச்சினை (சின்னம்)



எமது கல்லூரியின் சின்னம் 1937ஆம் ஆண்டளவில் ஓம் என்ற வடிவத்தில் உருவாக்கப்பட்டு அதன் மத்தியில் கலைமகளின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. 1940 ஆம் ஆண்டு கலைமகள் உருவத்திற்குப் பதிலாக நடராஜப்பெருமானை நினைவு படுத்தி ஓம் என்ற வடிவத்தில் பாடசாலைச் சின்னம் உருவாக்கப்பட்டு அதில் "கற்றாங்கொழுகு" என்ற மகுட வாசகம் எழுதப்பட்டிருந்தது. 1950 ஆம் ஆண்டளவில் இச் சின்னம் முற்றாக மாற்றப்பட்டு மேற்கட்டியவாறான அமைப்பில் உருவாக்கப்பட்டது. இச் சின்னம் ஓம், விளக்கு, சங்கு , சக்கரம், தாமரை , கற்றதொழுகு என்ற வாசகம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஓம் என்பது இந்து சமயப்பண்பாட்டின் ஒழுக்கத்தையும், பிரணவத்தையும் குறிப்பதாகவும், விளக்கு அறிவு வளர்வதையும், சங்கு வெண்மையையும், தூய்மையையும், சக்கரம் தர்மசிந்தனையையும், தாமரை செல்வத்தையும் அழகையும் உயர்வையும், கற்றதொழுகு என்ற வாசகம் கற்க வேண்டி வற்றை ஐயந் திரிபுறக் கற்று அதன் படி ஒழுக வேண்டும் என்பதையும் சுட்டிநிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின்

தூரநோக்கு

மாற்றமுறும் சமூக, தேசிய சர்வதேச தேவைக்கமைய உத்தம விளைதிறனுடைய தேசிய ரீதியான முதன்மைப் பாடசாலையாக மிளிர்தல்.

Vision

Blossoming into a leading institution at the national level with optimal effectiveness keeping pace with the changing socio - national and International needs.

பணிக்கூற்று

மாணவர்களது ஆற்றல் மற்றும் விழுமிய முன்னேற்றம் பெற்றோர்களின் முழுமையான பங்கேற்பு, ஆசிரியர்களின் வினைத்திறன், சமூகத்தின் சமநிலை கொண்ட உத்தம வளர்ச்சி என்பவற்றை அடைவதை உ றுதிப்படுத்தும் வகையில் சிறந்த கல்வி நிறுவனமாக தொழிற்படுவதை உறுதிப்படுத்தல்.

Mission

Ensuring optimal growth as a leading educational institution that encompasses the development of talents and moral values of the students, parents involvement, teacher efficiency and social equality through purposeful education.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Principal



A.Ahiladas B.A, PGDE, MEd S.L.P.S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Principals



E.Chelliah
1910-1926




S.Thiagarajah
1926-1928



M.Karthigesu
1928-1942



S.Seenivasagam
1943-1946



V.Nagalingam
1946-1949




S.Handy Perinbanayagam
1949-1960



C.K.Kanthaswami
1960-1971



C.Gunapalasingam
1971Jan-1971May




P.S.Cumarasamy
1971-1972



M.Mahadeva
1972-1980



A.Panchalingam
1980-1991



R.Mahendran
1991-1996



T.Kanesapillai
1996 Jan-1996 Sept



P.Kamalanathan
1996-2007



S.V.Mahendran
2007 May-2007 Sept



A.Ahiladas
2007-Up to Date

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியர்களின் பேனாவில் இருந்து...





காலநதியின் நீரோட்டத்தில் பல சோதனைகளைச் சாதனைகளாக்கிப் பத்துத் தசாப்தங்களின் நிறைவில் கொக்குவில் இந்துக்கல்லூரி என்கின்ற அரியாசனத்தில் இந்து அன்னை இனிதே அமர்ந் திருக்கின்றாள். அன்னையின் பாதகமலங்களை சிரம்தாழ்த்தி வணங்கி எம்மையெல்லாம் தலை நிமிர்ந்து நிற்கும்படியான அறிவினையும், திறனையும் எமக்கு அள்ளி வழங்கிய மேன்மைசால் அதிபர் களையும், ஆசான்களையும் நெஞ்சிலே நிறுத்திப் பணிந்து கல்லூரியின் பெருமை மிக்க வரலாற்றுத் தகவல்களுடன் முழுமையான நூற்றாண்டு மலரினை வெளியிடவிளைகிறோம். இச் சிறப்பான பணியை எமக்கு நல்கிய கல்லூரிசார் பெரியோர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தற்போது தங்கள் கரங்களில் தவழும் அழகிய நூற்றாண்டுமலர் ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகாலப் பலரது அரும் பெரும் முயற்சியின் அறுவடையாகும். இந்து அன்னையின் நூற்றாண்டுக் கால வியத்தகு சாதனைகளை, வரலாற்றுப் பதிவுகளைத் திரட்டித் தொகுத்துச் செப்பனிட்டு வடிவமைக்க கிடைத்த காலம் மிகவும் குறுகிய தென்றே கூறவேண்டும்.

நூற்றாண்டுகளுக்கு முன் எம்மூர்ச் சான்றோர் சிலரின் எண்ணங்களில் முகிழ்த்த "திண்ணைப் பள்ளி" என்ற சிறிய வித்தே இன்று பெரிய ஆலமரமாக வளர்ந்து விழுதுகள் பல பரப்பி பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு நிழல் தந்து நிற்கின்றது. "ஒரு பாடசாலை மூடப்படும் போது நூறு சிறைச் சாலைகள் திறக்கப்படும்" என்பது மேற்கு நாட்டு அறிஞர் ஒருவரின் கூற்று. புனிதமான எமது மண் ணின் மைந்தர்கள் கல்லூரித் தாயின் அரவணைப்பினால் உள, உடல் விருத்தியடைந்ததன் பேறாக "மனத்தின் கண் மாசிலா மணிகளாக" விளங்கியதால், குற்றச் செயல்கள் அற்ற மாண்பு மிக்க சமுதாயம் ஒன்று உருவாகும் வாய்ப்பு எம்மூர் மக்களுக்குக் கிடைத்தது எமது மண்ணும் வாழ்ந்தது. எமது மண்ணின் புதல்வர்களும் வாழ்ந்தனர். எமது ஊர் தேசங்களுக்கு அப்பால் அலைகடல் தாண் டியும் பல்துறைகளிலும் விற்பன்னர்களாக விளங்கும் புதல்வர்களால் கல்லூரி அன்னையும் புகழுடன் வாழ்கின்றாள். மேலும் பல நூறாண்டுகள் எமது அன்னை இளமைகுன்றாது காலத்தின் மாற்றங் களை உள்வாங்கிப் புதுமெருகுடன் வாழ இறையாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மலாக்குழுவினராகிய நாம் எமது கல்லூரியின் நூற்றாண்டு மலரை வெளியிடுவதற்காக கல்லூரிசார் தகவல்கள், நினைவுப்பதிவுகள், ஆக்கங்கள் என்பனவற்றைத் தந்துதவுமாறு பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியப் பெருந்தகைகள், கல்லூரிசார் சான்றோர்கள் ஆகியோர்களிடம், பத்திரிகைகள் வாயிலாகவும், இணையத்தளங்கள் ஊடாகவும் பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தோம். எமது வேண்டுகோளை ஏற்று அவர்களால் பல தகவல்களும் ஆக்கங்களும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் பல இடையூறுகளுக்கு மத்தியில் இயன்றவரை சிறப்பாக மலரை வெளியிட முயற்சி செய்துள் ளோம் அவைகள் யாவும் மலர்குழுவினரால் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர் முக்கிய விடயங்கள் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் பிரசுரிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் நூற்றாண்டுமலர் ஆறு அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயம் ஆன்மிகத்தலைவர்கள் கல்விப் புலத்துச் சான்றோர், அறிஞர்கள் பழைய மாணவர்கள் ஆகியோரின் ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் கொண்டு அமைந்துள்ளது.

இரண்டாவது அத்தியாயம் நூற்றாண்டு நிறைவில் கொண்டாடப்பட்ட அனைத்து விழாக்களின் நிழற் படப் பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

மூன்றாவது இயலில் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளும் கல்லூரியின் அச்சாணிகளாக விளங்கிய அதிபர்களின் வரலாற்றுக் குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

நான்காவது பதிகுயில் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை விளையாட்டுக்கள் மன்றங்கள் அவற் றின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது பகுதி கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பழையமாணவர்சங்கம் தொடர்பான தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆறாவது இயலில் புகழ்பூத்த ஆசான்கள் ஒரு சிலர் பற்றிய தகவல்களுடன் பழைய மாணவர் ஆக்கங் கள், புலமை சார் அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்களது தமிழ் ஆங்கில ஆக்கங்கள் கொண் டனவையாக விளங்குகின்றன.

இறுதியில் மலர் வெளியிட உறுதுணையாக விளங்கியவர்களுக்கான நன்றி நவிலல் இடம் பெறுகின்றது.

மலர் மணம் பரப்ப ஆசிச்செய்திகளையும், ஆக்கங்களையும் தந்துதவியோர் பலர், ஆன்மீகத்தலைவர் கள், கல்விப்புலத்துச் சான்றோர்கள் பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், முன்னாள் அதிபர் ,ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை நவில்கின்றோம்.

தேவையான ஆலோசனைகளை வழங்கி உதவிய கல்லூரி முதல்வர் அ.அகிலதாஸ், மா.சின்னத்தம்பி அவர்களுக்கும் எமது நன்றிகள், மற்றும் மலர் வெளியிட எமக்குத் தோள் கொடுத்து உதவிய மலர்க் குழுவினர் அனைவருக்கும் எமது நன்றிகளைச் சமாப்பித்துக் கொள்ளுகிறோம். கல்லூரி அன்னை இ ன்னும் பலநூற்றாண்டுகள் வாழ்ந்து கல்விப்பணி ஆற்றிட கிருபாகரசுப்பிரமணியசுவாமிகள் அருள் புரிவாராக.

இதழாசிரியர்கள்.
திருமதி.சு.திருச்செல்வம்,
திருமதி.சி.விஸ்வலிங்கம்,
திருமதி.க.சுந்தரேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

நிறுவுனர்

கல்லூரிக் கீதம்

கல்லூரிக்கொடி

கொடிக்கீதம்

கல்லூரிச் சின்னம்

தூரநோக்கு, பணிக்கூற்று

இதழாசிரியர்களின் பேனாவிலிருந்து...

❖ நூற்றாண்டு பதிவுகள்

❖ கல்லூரி வரலாறு 1 - 10

அதிபர் வரலாறு 11 – 38

பெறுபேற்று விபரம் 39 - 57

❖ இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் 58 – 116

❖ கல்லூரி அபிவிருத்திச் சங்கம் 117 – 122

பழைய மாணவர் சங்கம் 123 - 156

பழைய மாணவர் நம்பிக்கை நிதியம் 157 - 162

❖ மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், புலமைசார் அறிஞர்களின் ஆக்கங்கள் 163 - 375

நன்றியுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி சார் பெருந்தகையீர்



கொக்குவில் இந்துக் கல்லூரி இன்று தனது 100வது ஆண்டை அடைந் திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். தமிழினத்தின் கல்வி வளர்ச்சியில் அன்றும் இன்றும் பாடசாலைகள் பணியாற்றியிருக்கின்றன. இந்நிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரி கல்வி வளர்ச்சியில் தனக் கென ஒரு இடத்தை வகுத்துக் கொண்டது. கொக்குவில் மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கல்வியை ஊட்டிய பெருமைக் குரியது. கல்வி மனிதனை மனித நேயத்தோடு வாழ வழிவகுக்கின்றது. இதனை ஒவ்வொரு மனிதனும் அடைய வேண்டும் என்பதற்காக பாடசாலைகள் அனைத்தும் செயற்பட்டு வருகின்றன.

இப்பணியில் 100 ஆண்டுகள் நீடித்த கொக்குவில் இந்துக் கல்லூரி கல்வியிலும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. எல் லோருக்கும் கல்வி எனும் வள்ளுவர் கூற்றுக்கு அமைய

"உலகம் தழிஇயது ஒட்பம் - மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு"

எனும் வள்ளுவர் தெரிநின்று அனைவரும் கல்வியைப் பெற்று நூறு ஆண்டுகள் சேவையாற்றிய அதிபர். ஆசிரியர்களை வாழ்த்திப்பாராட்டுகின்றோம். தொடர்ந்தும் இக்கல்லூரி பல்லாண்டு காலம் வளர்ச்சியடைந்து அன்பும் ஒழுக்கமும் நிறைந்த பிரதேசத்தை உருவாக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிச்செய்தி



பாரெல்லாம் புகழ் பூத்து நிற்கும் கொக்குவில் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வழங்கும் ஆசிச்செய்தி.

நூறு ஆண்டுகளாகப் பல தலைமுறையினருக்குக் கல்விச் செல்வத்தினை அள்ளித் தந்து கொண்டிருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி உருவாகி இன்று நூறு ஆண்டுகளைக் கண்டுவிட்டது. எத்தனையோ டாக்டர்கள், எஞ்சினியர்கள், ஆசிரிய ஆசிரியைகள் இன்னும் பல தொழிற் துறைகளில் சிறந்து விளங்கும் பெரியோர்களை உருவாக்கித் தந்த, தந்து கொண்டிருக்கின்ற, தரப்போகின்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எல்லாம் வல்ல வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீ கிருபாகரசிவசுப்பிரமணிய சுவாமியின் கிருபையுடன் மேன் மேலும் இக்கல்லூரி வளர்ந்தோங்கி நிற்க எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

சிவஸ்ரீ .க.சிவதாசக்குருக்கள்
புதுக்கோவில்,
கொக்குவில் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message from the president of the Kovil Kirupakara Sivasubramaniya Swami Kovil



It's with great pleasure that I am sending this message of greeting to J / Kokuvil Hindu College which is marking 100 years of its service in Jaffna.

From 1910, when it was inaugurated Kokuvil Hindu College has won a respected place in the community as the pre education services in Jaffna.

It's with pride that I look back at the 100 years history of Kokuvil Hindu College. Kokuvil Hindu College has met the challenges passed over the years and responded to the needs effectively. Above all, Kokuvil Hindu College has continued to maintain a high standard of Education, sports and many other extra – curricular activities.

There are many old students of Kokuvil Hindu College hold high posts in various government departments, private firms and in non government organizations. They are very proud to say that "We are old students of Kokuvil Hindu College."

I wish the centenary celebration of Kokuvil Hindu College every success in all its future endeavors.

S. Selvaranjan S.B.St.J,
President of
Kokuvil Kirupakara Sivasubramaniya Swami Kovil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆரம்பகால அதிபர் உயர்திரு செல்லையா அவர்கள் தொட்டு 2009 ஆம் ஆண்டு வரை இருந்த அதிபர்கள் இந்து கலாசாரத்தை பேணிப் பாதுகாத்தும் கொக்குவில் பாரம் பரியத்தையும் சமூகத்தையும் பேணிப் பாதுகாத்தும் வந்துள்ளார்கள். அதே போல் நூற்றாண்டு காணும் 2010 ஆம் ஆண்டிலிருந்தும் அவற்றை தொடர்ந்து பேணிப் பாதுகாத்து வர வேண்டும் என எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகனை வேண்டுகின்றேன்.

2010 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா சிறப்புற நடந்தேற வேண்டுமென வாழ்த்தி அத்துடன் குழுவைத் திறம்பட வழிநடத்திட வேண்டும் என முருகனை வேண்டுகின்றேன்.

"கொக்குவில் இந்து ஆயிரம் ஆண்டு உயர்ந்திட வாழ்த்துகிறேன்."

கா.பாலசுப்பிரமணியம்,
தலைவர்
தர்மகர்த்தா சபை
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் செயலாளரிடமிருந்து



கொக்குவில் கிராமத்தில் சைவப்பண்பாட்டுடன் கூடிய கல்வியை வழங்க வேண்டிய தேவைப்பாடு இருந்தமையால் 1910 ஆம் ஆண்டில் ஆரம்ப பாடசாலையாகத் தொடங்கி பின்னர் கனிஷ்ட பாடசாலை தராதர வகுப்புக் கள் ஆங்கிலமொழி மூலம் வழங்கி ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்கும் இந்துப் பாடசாலை அணியில் இணைந்து இவ்வருடம் நூற்றாண்டினை நிறைவு செய்கின்றது.

இலங்கையின் சுதந்திரத்துக்கான முன்னெடுப்புக்களில் "யாழ்ப்பாண வாலிபர் சங்கம்" முன்னிலையில் நின்றமை யாவரும் அறிந்ததொன்றாகும். சுதந்திரமடைந்த காலத்தில் இளம் அரசியலாளரான திருவாளர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் 1960 ஆம் ஆண்டு வரை அதிபராகவிருந்து கல்லூரியை உயர் நிலைக்கு கொண்டு சென்றமை அனைவரும் அறிந்ததே. இவரது பணியினை பத்து அதிபர்கள் தொடர்ந்து முன்னெடுத்து கல்லூரியினை கல்விச் சாதனையிலும், விளையாட்டுக்களிலும் முன்னிலை வகிப்பது போற்றுதற் குரியதாகும்.

பாடசாலையின் வளங்கள் அரசினால் மாத்திரமன்றி பாடசாலையின் பழைய மாணவர் களினாலும் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளமை ஊரின் மேலுள்ள பற்றினை எடுத்துக் காட்டு கின்றது. குறிப்பாக பழைய மாணவராகிய திருவாளர் மா. சுப்பிரமணியம் இருமாடிக் கட்டிடம், விளையாட்டு அரங்கு, திறந்தவெளி அரங்கு ஆகியவற்றை அன்பளிப்புச் செய்தமை போற்றுதற் குரியதாகும்.

மாணவர் சங்கங்களினால் The Breeze, சாரதி, வணிகச்சுடர், தேமதுரம் ஆகிய சஞ்சிகைகள் வெளியீடு செய்வதும் பாடசாலையின் ஆற்றலை வெளிப்படுத்துவதாகும்.

நூற்றாண்டு விழாச் சபையினருக்கு இம்முன்னெடுப்பிற்காக பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் உங்கள் கல்லூரி கொக்குவில் பிரதேச மாணவர்களுக்கு அறிவும் ஒழுக்க வாழ்வும் ஊட்டி தொடர்ந்து நடுநாயகமாகத் திகழ இறைவனை வேண்டுகின்றேன்.

இ. இளங்கோவன்
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிப் பாதையில் கொக்குவில் இந்து



பாடசாலையும் ஆலயமும் இரு கண்களாய் எங்கு பொலிவுற்று திகழ் கின்றதோ அந்தக் கிராமம் பெரும் பேறுபெற்றது. அந்த வகையில் சிறுகத் தொடங்கி பெருவிருட்சமாக உயர்கல்விச் சிகரமாக கொக்குவில் இந்துக் கல்லூரி 100வது ஆண்டில் கொக்குவில் கிராமத்தை அழகுபடுத்துகின்றது. இங்கு 2000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். மாணவர்கள் வரவு உயருவதற்கு ஏற்ற வகையில் கல்வி கற்பித்தலும் கற்றலும் நிகழ்வதுடன் ஒழுங்கும் ஒழுக்கமும் சிறந்தோங்கிக் காணப்படுகின்றது. வள்ளல்கள் வாரி வழங்கும் இல்லமாக, கற்பக விருட்சமாக தன்கெனத் தனித்து வத்தைப் பேணி விரல்விட்டு எண்ணும் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாக தன்னைப் பரிணமித்துக் கொண்டமை பாராட்டுதற்குரியது.

கல்விப் புலத்தில் உயர்தரத்தில் கலை, வர்த்தகம், கணித விஞ்ஞானத்துறை சார்ந்த வகையில் ஏராளமான மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பக்கூடிய திறமை மிக்க ஆசிரியர்கள் குடியிருக்கும் கோயிலாக விளங்குகின்றது. 2009 ஆம் ஆண்டு கணிதத்துறையில் யாழ் மாவட்டத்தில் 2ம் இடத்தையும் தேசிய மட்டத்தில் 5ம் இடத்தையும் பெற்று பெருமை சேர்த்துக் கொண்டது. இவ்வாறு பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என வாழ்த்து வதுடன் கலைத்துறையிலும் தனக்கென சாதனை படைத்து வருகின்றது. தமிழ்த்தினப் போட்டி களில் பல இடங்களைத் தனதாக்கிக்கொள்ளும் இக்கல்லூரி விளையாட்டிலும் பெருமை பெற்றுப் பொலிந்து காணப்படுகின்றது.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

என்ற கூற்றுக்கு அமைய கல்லூரிப் புதல்வர்கள் பல்துறையிலும் மிளிருகின்றனர்.

இக்கல்லூரியின் பழைய மாணவர்களும் சமூகமும் கல்லூரி வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்து வருகின்றனர்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலும்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளி நிறுத்தல்
அன்னையாவிலும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற பாரதியின் கூற்றுக்கு அமைய பழைய மாணவர்கள் வாரி வழங்கி நூற்றாண்டை கண்ட இக்கல்லூரியை கொக்குவிலின் கலங்கரை விளக்காக ஒளிபரப்பவைத்துள்ளனர். இக்கல்லூரியின் பொலிவையும், திறனையும், அழகையும் நேரில் காணும் பாக்கியம் பெற்ற நான் எவற்றிலும் குறைவின்றி கல்வியாலும் கலைக்கோயிலாயும் திகழ மனமார வாழ்த்துவதோடு இவ்விழாவை முன்னெடுக்கும் கல்லூரிச் சமூகத்தை வாழ்த்துவதிலும் பெருமையடைகின்றேன்.


"நீடு வாழ்க நின் புகழ்"

வீ. இராசையா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்,
வரோதயநகர்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



நூற்றாண்டு விழாக் காணும் கொக்குவில் இந்துக் கல்லூரியை வாழ்த்தும் இந்தவேளை பெறுமதியானது. கல்வியே எங்களின் பெருநிதியம் காலத்தினால் அழியாத அருள் நிதியம். இந்த வகையில் பெறுமதியான, அர்ப்பணிப்பான கல்விப்பணியின் வழி எங்களின் சமூக அசைவியக்கத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி கொண்ட இடம் குறிப்பிடத்தக்கது.

குடியேற்ற நாடாதிக்க காலத்து சுதேச பண்பாட்டு எழுச்சியிலே முகிழ்ந்த கொக்குவில் இந்துக் கல்லூரியானது, கடந்த ஒரு நூற்றாண்டு காலத்து, எங்கள் பண்பாடு கண்ட உன்னத ஆளுமைகளை தன் அதிபர்களாய் காணும் பேறு பெற்றது.

மரபார்ந்த கல்விச் சிந்தனையாளர்களிலிருந்து முற்போக்கான சமூக மாற்றத்துக்கான உயர்விசைகளான செயல்வீரர்கள் வரையான பலரினதும் அயராத உழைப்பின் பலாபலனே இன்றைய நூற்றாண்டு விழா பெருமையின் அடிப்படை என்றால் மிகையில்லை.

இன்றுவரை நாம் அவாவிநிற்கும் மேலான சமூகத்துக்கான இலக்கணங்களைத் தெளிவாக்கி, அதற்கான இலக்கியமாகவே வாழ்ந்த பேரறிஞர் ஹன்டிபேரின்பநாயகம் முதலாய கல்வியாளர்களின் தடத்திலே அழகிய நாளையைப் படைக்கும் எங்கள் காலக் கடமையில் இந்நூற்றாண்டு விழா வேளை அனைவரும் ஒன்றிணைந்திடுவோம்.

பெருமைக்குரிய கல்லூரியின் நூற்றாண்டு விழா மங்களகரமாய் அமைந்திடவும் அர்த்தங்களை நிறைத்திடவும் எல்லையில்லாத என் அன்பு வாழ்த்துக்கள்.

யாழ் மண் ஈன்றெடுத்த பெரும் புகழ் கொண்ட அறச்சாலையம் கல்விச் சாலைகளில் ஒன்றாகிய கொக்குவில் இந்துக் கல்லூரிக்குத் தனக்கென ஒரு தனியிடம் உண்டு.

பேராசிரியர். நா.சண்முகலிங்கன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message from the Government Agent, Jaffna District




July, 2010 marks the centenary of J / Kokuvil Hindu College which underwent extensive changes over the past hundred years and is now becoming one of the leading schools in Sri Lanka. This shows the determination of this school to conquer the future challenges. The objective of Late E. Chelliah, the Founder and the first Principal, became a reality. He stood firmly by his principles to achieve this task. It needed courage, perseverance, and persistence to deal with the resistance he encountered. He displayed responsible leadership and met the challenges, dangers, dilemmas, indeed, the past and present principals and staff too have made tremendous sacrifices for this singular triumph. Loyalty and dedication seem to be their trade mark. All of their pursuits were characterized by a common thread : dedication to the task at hand and a tireless search for excellence. As a result, students' numbers are rapidly expanding and exceeded 2200 at present. Mathematics, Biology, Commerce and Arts are the four streams in G.C.E. (A/L) and almost 95% of students are now entering the universities for higher studies. This is really an outstanding achievement. The J / Kokuvil Hindu College never lost its enthusiasm for publishing. School magazines such as "The Breeze", "Sarathy", Vanikach Sudar", and "The Themathuram" are published by English Union, Science Union, and Tamil Union respectively. J / Kokuvil Hindu College take part in a range of sporting activities as Divisional, Zonal, Provincial and National Level and emerged victorious with flying colours. A cricket encounter between J / Kokuvil Hindu College and J / Jaffna Hindu College popularly known as the "Battle of the Hindus" is the eagerly anticipated sporting event since 2008 and it raises the profile of this College. It is a great pleasure and privilege for me to deliver this message for the centenary year souvenir and I wish J / Kokuvil Hindu College wholeheartedly to flourish to be an outstanding school par excellence in the future.

K. Ganesh,
Govt. Agent / District Secretary
Jaffna District.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பூத்த கல்லூரி



நூறாண்டுகள் ஒரு மனிதன் வாழ்வது அரிது. ஆனால் மனிதர்களினால் தொண்டாற்றும் நிறுவனம் நீண்டகாலம் நிலைத்துநின்று செல்வங்களிற் சிறந்த செல்வமான கல்வித் தொண்டை வழங்குவது போற்றுதற் குரியதாகும். அந்த வகையில் யா / கொக்குவில் இந்துக் கல்லூரி சைவ பாரம்பரியத்தில் உருவாகி அதன் பண்பாடு, மெருகு என்பன பேணப்பட்டு எமது சமூகத்திற்கு ஏற்ற மாணவர்களை உருவாக்கியுள்ளது.

சிறந்த பொறியியலாளர்கள், வைத்தியர்கள், கணக்காளர்கள், கல்வியியலாளர்கள், வர்த்தகர்கள் ஆகியோரை உருவாக்கி நீண்ட பட்டியலை இப்பாடசாலை கொண்டுள்ளது. இப்பாடசாலைக்குத் தூண்களாகப் பழைய மாணவர் சங்கம், பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் என்பன பௌதீக வளம், பொருள் வளம் என்பவற்றைத் தேவையறிந்து வழங்கி இப்பாடசாலையை வளம்மிக்க பாடசாலையாக மாற்றியுள்ளன. அத்துடன் இப்பாடசாலையின் ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவையும் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களைப் பேணி கல்வியிற் சாதனை படைக்க உதவியுள்ளனர். இணைப்பாடவிதான செயற்பாட்டில் மாகாண மட்டம், தேசிய மட்டப் போட்டிகளில் சாதனை படைத்து கல்லூரிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கும் பெருமை தேடித்தந்த மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்கள் நன்நெறி நின்று வழிகாட்டிய அதிபர் ஆகியோர் பாராட்டிற்குரியவர்கள். பொதுப்பரீட்சைகளிலும், கல்வியடைவிலும் சாதனை படைத்த இக்கல்லூரியில் இந்நூற்றாண்டு விழாக் காலத்தில் கடமையாற்றும் அதிபர் திரு.அ.அகிதாஸ் அவரோடிணைந்த முகாமைத்துவக்குழு, ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையே காரண-மாகும். நூற்றாண்டு காலம் கல்வித் தொண்டாற்றிய கலாலயம் சகல வளங்களையும் பெற்று பன்னெடுங்காலம் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

திரு. வே. தி. செல்வரத்தினம்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ் மண் ஈன்றெடுத்த பெரும் புகழ் கொண்ட கல்விச் சாலைகளில் ஒன்றாகிய கொக்குவில் இந்துக் கல்லூரிக்குத் தனக்கென ஒரு தனியிடம் உண்டு. கலாசாரங்களையும், கலையம்சங்களையும், ஏனைய பிறவழிசங்கங்களையும் தலைமுறைக்குப் பரிமாறும் பண்பில் இக்கல்லூரி பின்னிற்பதே இல்லை.

உயிர் காக்கும் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும், வர்த்தகர்களையும், அறம்காத்து நிற்கும் அறிஞர் பெருமக்களையும், அஞ்ஞானத்தை அறவே அகற்றி மெஞ் ஞானத்தை மிளிரச் செய்யும் ஆசான்களையும் இது போன்ற பற்பல படைப்பாளிகளை படைத்தளித்து, பாரும் ஊரும் சிறக்கச் செய்யும் கொக்குவில் இந்துக் கல்லூரி தன்னை வளர்த்த மண்ணுக்கு நன்றிக்கடன் செலுத்தி நிற்கும் பெரு ஆலவிருட்சம் போல ஓங்கி உயர்ந்து நிற்கும் போது உண்மையிலேயே உள்ளம் ஊக்கமும் பூரிப்பும் ஒருங்குசேரப் பெறுகின்றது.

இன்று பல்வேறு இடங்களில் இருந்து வந்து சங்கமிக்கும் சிறார்களை ஒழுக்கத்தாலும் பழக்கத்தாலும் உயர் குணங்களாலும் உலகை நடாத்துவதற்கும், சிறப்புடனும், குறிக் கோளுடனும் வாழ்வுக்கு வழிகாட்ட என்றும் தன்னை அர்ப்பணித்து அரவணைத்து நிற்கும் அன்னையாம் கொக்குவில் இந்துக் கல்லூரி, பொன்விழா, வைரவிழா, பவளவிழா, போன்ற விழாக்களைக் கண்டு, நூற்றாண்டு விழாவில் மகுடம் சூட்டும் இந்நாளில் கல்லூரி பல வகையாலும் புகழ் பெற்று நறுமணம் பரப்ப வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திருமதி.அருளேஸ்வரி வேதநாயகம்,
வலயக் கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரித் தாயின் பிறந்ததின வாழ்த்துச் செய்தி



எமது கொக்குவில் இந்துக் கல்லூரித் தாய் இன்று நூறாவது பிறந்ததினத்தை கொண்டாடுவதனையிட்டு உளமாரப் பேருவகை கொண்டு கல்லூரித் தாயை வாழ்த்துவதில் இன்பமடைகின்றேன்.

சைவமும் தமிழும் தளைத்தோங்கி நிற்கும் நற்குடிகளின் பதியாம் கொக்குவில் தனில் இந்துக் கல்லூரியாய் தோன்றி. உயர் மாடிக் கட்டிடங்களினூடே உயர் கல்வியினை உயர்வாய் எண்ணிக் கற்கும் நல்மாணாக்கரை பெற்று, வளர்த்து உயர்பணி கதிரைகளில் அமர்த்தி, அவர் தம் உயர் சேவை கண்டு, இன்றைய நூறாவது பிறந்த நாளிலும் இன்பமாய் இறுமாப்பும் பெருமையும் கொண்டவளை வாழ்த்துவோம் பல நூறு தடவைகள். கல்லூரித்தாய் தான் கடந்து வந்த நூறாண்டுகளிலே தன்னை வளர்ப்பதிலும், அழகுபடுத்துவதிலும், வளங்களைப் பெற்றுக் கொள்வதிலும் வேதனைகளினூடே படைத்து நின்ற சாதனைகளின் பெருமைகளைக் காதாற் கேட்டு மனதாற் சுவைத்து இன்பமுறும் இன்றைய நாள் இக்கல்லூரியின் வாழ்நாளில் பொன்னாளாகும்.

இந்நாட்டிற்குத் தேவையான நற்பிரஜைகளை உருவாக்குவதே பாடசாலைகளின் முக்கிய குறிக் கோளாக இருக்க வேண்டுமென்பது கல்விக்கொள்கையாகும். இதன் முழுமை நிலையை உருவாக்குபவளாக நூற்றாண்டு விழாக் காணும் கொக்குவில் இந்துத் தாய் மிளிர்வதையிட்டு நாம் பெருமைகொள்ளாது இருக்க முடியாது.

இக்கல்லூரித்தாய் நூற்றாண்டு விழாவினை தலை நிமிர்ந்து நின்று கொண்டாடுவதற்கு அவளால் மறக்கமுடியாத நான்கு சக்கரங்களாக அமைந்து விளங்கிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் என்றும் அவளின் நன்றிக்கும் ஆசீர்வாதத்திற்கும் உரியவர் கள் என்றால் சாலப்பொருந்தும்.

நூற்றாண்டு விழாக் காலத்தில் அதிபராகவும், ஆசிரியர்களாகவும், மாணவர்களாகவும் இருக்கக் கிடைத்தது அவர்கள் செய்த பூர்வ புண்ணிய பலனாகும். அதிலும் குறிப்பாக துணிச்சலும், உயர் ஆற்றலும் கொண்ட அதிபர் இக்காலத்தில் கல்லூரித் தாயை வழிநடத்திச் செல்லும் தலைவனாக கிடைத்தது கல்லூரித் தாய்க்கு கிடைத்த மிகப் பெரும் சொத்து என்றால் மிகையாகாது.

வீ. சீ. மாணிக்கராஜா.
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



"உடையார் முன் இல்லார் போல் ஏக்காற்றும் கற்றார்
கடையாரே கல்லாதவர்"

என்று திருவள்ளுவர் குறிப்பிட்டது போல ஆசிரியர் மூலம் கல்வி பெறாதவன் வாழ்க்கை இருட்டறை போன்றதாகும். இந்தக் கல்விச் செல்வமே நிலையான சொத்து என்று காலாதிகாலமாக நம்பி வாழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணத்து மக்களின் மேன்மையை உலகறியச் செய்ததும் கல்வியாகும். அதே போல் யாழ்ப்பாணத்து மக்களுக்கு கல்வித் தானத்தைக் குறைவின்றி வழங்கிய கல்லூரிகள், பாடசாலைகள் தமது மாணவர்களினால் புகழ் பூத்து விளங்குகின்றன.

அந்த வகையில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி இவ் வருடம் தன் கல்விச் சேவையில் நூற்றாண்டு விழாவை கொண்டாடுவதை அறிந்து அகமகிழ் வடைகின்றேன். கொக்குவில் பகுதியை மட்டுமல்ல அதை அண்டிய வேறும் பல கிராம மக்களின் அறிவுப்பசியை நிறைவு செய்த பிரதான ஸ்தாபனமாக இக்கல்லூரி விளங்கி வருகின்றது. ஆறாம் வகுப்பு தொடக்கம் உயர்தர வகுப்பு வரை மாணவர்களுக்கு கல்வி புகட்டுவது மட்டுமல்லாது விளையாட்டு, கலை போன்ற கல்விசாரா நடவடிக்கைகளிலும் இக்கல்லூரி ஈடுபட்டு வருதை வருடா வருடம் மாவட்ட மட்ட மற்றும் தேசிய மட்டத்தில் போட்டிகளில் பெறுகின்ற வெற்றிகள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.

மேலும் இக்கல்லூரி இன்று மாடிக்கட்டிடங்கள், நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி நிலையம் மற்றும் விளையாட்டு மைதானம் போன்றவற்றைக் கொண்டமைந்திருப்பதை நோக்கும் போது கடந்த காலங்களில் இக்கல்லூரியின் வளர்ச்சியில் பாடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் பழைய மாணவர்களின் தன்னலமற்ற பணி போற்றப்பட வேண்டியதாகும். இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் இன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் கல்விமான்களாக உயர்பதவிகள் வகித்து வருவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய புகழ் மிக்கதும் யாழ்ப்பாணத்தில் சைவசமய மக்களின் கல்வி வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்டதுமான கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர்வரும் காலங்களிலும் எமது சமுதாயத்தில் பல புகழ் மிக்க கல்விமான்களை உருவாக்கி சகல துறைகளிலும் அகில இலங்கை ரீதியில் தனது புகழை நிலைநாட்ட வேண்டுமென மனதார வாழ்த்துவதோடு நூற்றாண்டு விழாச் சிறப்பாக நடைபெற எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பா. செந்தில்நந்தனன்
பிரதேச செயலர்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அதிபரின் இதயத்திலிருந்து....



நூற்றாண்டு கால கல்விப்பாரம்பரியத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி தமது இமாலயப் பணிகளை நிறைவேற்றி கல்வி என்னும் ஒளியை சமூகத்திற்கு கொடுத்து கொண்டிருக்கும் இவ்வேளையில், நூற்றாண்டு தடத்தில் இவ்வறிவாலயத்தின் அதிபராக இருந்து பணியாற்றும் அடியேன் விழா மலரை வாழ்த்துவதற்கு கிடைத்த இக் கௌரவத்தை இறைவனின் அருளாக எண்ணுகின்றேன்.

"கல்விப்பணி கடவுள் பணி" எனக் கூறுவார்கள். அறிவாலயங்களும் , ஆலயங்களும் மனித வரலாற்றுப் பாரம்பரியத்தில் இரண்டு கண்களாக போற்றப்பட வேண்டியவை. நல்ல மனிதர்களை உருவாக்குவதில் ஆன்மீகமும், கல்வியும் மிக முக்கியமான கருவிகளாகும். கொக்குவில் கிராமத்தில் இதனை நாம் மிகத் துல்லியமாக காணமுடிகின்றது. கல்லூரி வரலாற்றில் இதற்கான தடயங்கள் மிக உன்னிப்பாக அவதானிக்க முடிகின்றது.

கல்விக்காக தம்மையே அர்ப்பணிக்கின்ற உன்னதமான மனிதர்களைப் பிரசவித்த கொக்குவில் மண் நிமிர்ந்து நிற்கின்றது. தமிழர் தம் கல்விப் பாரம்பரியத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் வரலாற்றுப் புகழ்மிக்க கல்விப்பணி காலத்தையும் வென்று நிற்கின்றது. அடையாளப்படுத்தக்கூடிய அறப்பணியை எழுந்து நிற்கும் பௌதீக வளங்கள் துல்லியமாக உணர்த்துவதுடன் பலரது புருவங்களையும் உயரவைத்த வரலாற்றைக் கொண்டது இக்கல்லூரி. நூற்றாண்டுகால வளர்ச்சிப் போக்கில் கல்லூரி உன்னதமான பல சான்றோர்களை உருவாக்கி யுள்ளது. தன்னை, தனது கல்லூரியை, தாம் பிறந்த கிராமத்தை நேசிக்கும் உயர்ந்த உள்ளங் களைக் கொண்ட எமது கல்லூரிச் சமூகம் காலத்தின் தேவை கருதி கல்லூரியின் உயர்வுக்காக உழைக்கின்றது.

சமகால உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப தன்னிடம் வருகின்ற மாணவர்களை உரிய நெறிமுறையில் வளர்த்தெடுத்து நல்ல சமூகக் குடிமக்களை உருவாக்கும் நற்பணியில் கொக்குவில் இந்துக் கல்லூரி தனது வரலாற்றுக் கடமையைச் செய்து வருகிறது. கலைத்திட்ட அமுலாக்கம் வெற்றியடைவதில் ஒரு கல்லூரியின் கற்றல் - கற்பித்தலும், இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளும் முழு வீச்சுடன் அர்த்தமுள்ள வகையில் அமுலாக்கப்பட்டாலே கலைத்திட்ட இலக்கினை அடைய முடியும். அர்ப்பணிப்பு கல்லூரி மீது நேசிப்பு, மாணவர்கள் மீது பற்று, விடா முயற்சி, கடின உழைப்பு இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமே கல்லூரி நிமிர்ந்து நிற்க முடியும். இது காலத்தின் தேவையாகும். வெற்றிகள் இலகுவாகக் கிடைத்து விடாது. நிறுவனப்பற்று - விசுவாசம் - சமூகப் பொறுப்புணர்வு வகைகூறும் கடப்பாடு நேர்மனப்பாங்கு, வினைதிறன் மிக்கதான தொழிற்பாடு என்பவற்றை தாரக மந்திரமாகக் கொண்ட ஆளணியினரின் உழைப்பினாலேதான் வெற்றிகளை எட்ட முடியும். இந்த நோக்கில் கொக்குவில் இந்துக் கல்லூரி பயணிக்கின்றதென்று நான் நம்புகின்றேன். கல்லூரியின் விழுதுகளாக பெரு விருட்சத்தை தாங்கி நிற்கும் பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கல்லூரித் தாயை போற்றி நிற்பது மனதைத் தொடுகின்றது. இப்படிப்பட்ட நல்ல உள்ளங்களை உருவாக்கிய கல்லூரித்தாயின் பெருமைகண்டு வியப்படைகின்றேன். "கல்விக்கு உயிர் கொடுத்தோன் மரணிப்பதில்லை" என்பது நபிகள் நாயகம் அவர்கள் வாக்காகும். "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" உலகில் எல்லா வகையான அறப்பணிகளை விட மிக உயர்வானதாகும்.

கல்விக் கண்ணைத் திறந்து விடுதல் என்பது ஒரு வரலாற்றுத் தொண்டாகக் கருதமுடியும். ஒரு குடும்பத்தில் ஒருவனின் கல்வியைச் சரியான முறையில் வளர்த்தெடுத்தால் அந்தக் குடும்பம் உலகில் தானாகவே தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும். ஒவ்வொரு கல்லூரியும், பாடசாலையும், இதனைத் தனது தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் காணவிரும்பும் இலட்சிய சமுதாயம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு காலத் திருப்புமுனையில் நிற்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி உலகளாவிய செல் நெறிகளுக்கு ஏற்ப புதிய வியூகங்களை அமைக்க வேண்டுமென்பது எனது மனப்பதிவாகும். யாழ் மாவட்டத்தில் உள்ள தேசியப் பாடசாலைகளுக்கு நிகரான வகையில் மிகப் பெரும் மாணவர் பலத் தையும், கணிசமான பௌதீக வளங்களையும் தற்போது எமது கல்லூரி கொண்டுள்ளது. எதிர் காலம் பற்றிய கல்விச் சிந்தனையில் இக்கல்லூரியையொரு தேசியக் கல்லூரியாக தரமுயர்த்த வேண்டியது காலத்தின் தேவையாக எண்ணுகின்றேன். இதற்கான முன்னெடுப்புகளில் கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம் கல்வியாளர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான செயற் பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை சற்றுப்பின் நோக்கிப் பார்த்தால் விடுதி வசதியுள்ள கல்லூரிகளில் விடுதியில் தங்கியிருந்து கற்ற மாணவர்கள் கல்வியில் உன்னத நிலையை எட்டியுள்ளதை அவதானிக்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் விடுதி வசதிகள் பற்றி சிந்திப்பது பொருத்தமானதாக இருக்குமென எண்ணுகின்றேன். கிராமப்புற மக்களின் குடும்ப, வீட்டுச்சூழல் எல்லா விடயங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. அவர்களை ஒரு புதிய சூழலுக்கு கொண்டு வருவது இன்றைய தேவையாக உள்ளது. கிராமப்புற மாணவர்களை விடுதியில் தங்கவைத்து கற்பிப்பதன் மூலம் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென நம்புகின்றேன். எனவே எமது கல்லூரியில் விடுதிகளை அமைப்பது பற்றி கல்லூரிச் சமூகம் சிந்திப்பது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் விடுதிகள் அமைப்பதென்பது முடியாத காரியமல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில் கடந்தகால வரலாற்று அனுபவங்கள், பௌதீகவள அபிவிருத்தியில் கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம் காத்திரமான பங்கை வகித்ததை கல்வி உலகம் நன்றாக அறியும். விடுதிகளை ஆரம்பித்தால் கல்லூரி மேலும் ஒரு பாய்ச்சலை தன தாக்கிக்கொள்ள முடியுமென எண்ணுகின்றேன்.

இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளில் அண்மைக்காலத்தில் விளையாட்டுத்துறை அபரி மிதமான வளர்ச்சியை ஏற்படுத்தி வருவது உணரக்கூடியதாகவுள்ளது. சர்வதேச நிலையிலும் விளையாட்டுத்துறை பலருக்கு வேலைவாய்ப்புகளை வழாங்குகின்ற துறையாகவும் மாற்றம் பெற்று வருகின்றது. இதற்கேற்ப கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பல்பரிமாணங்களைக் கொண்டாதாக விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. நூற்றாண்டு விழாக் காலத்தில் விளையாட்டு மைதான விஸ்தரிப்பு, பார்வையாளர் அரங்கு, திறந்தவெளி அரங்கு ஆகியவை விளையாட்டுத்துறைக்கு புதியதொரு உந்து விசையைக் கொடுத்துள்ளது. இது மேலும் உள்ளக விளையாட்டுக்கள், நீச்சல் தடாகம், ஜிம்நாஸ்ரிக் ஆகிய துறைகளிலும் கவனம் செலுத்தி உலக விளையாட்டுத்துறையின் போக்கிற்கு ஏற்ப விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாகவும் எதிர்காலத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எனது உள்ளத்தில் எழும் எண்ணங்களை இந்நாளில் உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளேன். கல்லூரித்தாயின் எதிர்கால விருத்திக்காய் நாம் எல்லோரும் ஒன்றாய் உழைக்க கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு எமது செயற்பாடுகளை கல்லூரிக்காக அர்ப்பணிப்பதற்கு இந்த நல்ல நாளில் உறுதியெடுக்க வேண்டுமெனக் கேட்டு நூற்றாண்டு விழா இனிதே நிறைவேற இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியடைகின்றேன்.


நன்றி.

அ. அகிலதாஸ்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message from the Secretary of International Centenary Committee
Kokuvil Hindu College



I have great pleasure in giving this message to the souvenir to be published in the centenary year 2010. As the secretary of the centenary committee. I feel proud in associating with the activities of Kokuvil Hindu College.

My association with the college starts from 1949 when I was admitted as a student in form 1 (now grade 6) Mr. Handy Perinpanayakam was the principal. Every thing was new for me as I had come from Malaysia. As it was mid year Mr. Handy Perinpanayakan interviewed me. Along with him was Mr. C. K. Kanthaswamy Vice principal.

I was asked to read a passage in English and Tamil. It is still fresh in my mind. My stay at Kokuvil Hindu College was enjoyable as the principal gave lot of freedom to the students. I have never seen him carrying a cane but the discipline at school was perfect.

I joined the teaching staff in 1987 Mr. A. Panchalingam was Principal. For me he was like my elder brother. Within three months he made me a Supervisor and later as Sectional Head and giving more responsibilities. His leadership was different . He spoke a few words but his actions were appreciable.

On his transfer to Jaffna Hindu College Mr. R. Mahendran assumed duties as principal. For me he was a friend as we were acquainted in trade Union activities. It was during his time the English Union was formed and the magazine "The Breeze" published. He promoted me as a Deputy principal.

In 1997 Mr. P. Kamalanathan became principal. I worked under him for a shorter period less than an year. It was during his time a two storied building was donated in the southern part of the school. I retired from service after serving nearly 12 yrs at Kokuvil Hindu College.

Though retired from service my association with the school continues. Being a member of the O.S.A. I was president and secretary too still I am continuing as vice president.

Mr. A. Ahiladas the present principal succeeded P.Kamalanathan and he was fortunate enough as centenary year falls during his tenure of office. He is of dynamic personality During his time the playground has been extended and a stadium and an open air theatre are being constructed.

Mr. Ahiladas is persevering to celebrate the centenary year in a Grand scale. I wish him all success.

T. Devarajah
Secretary, International Centenary Committee
Former Deputy Principal & Prefect of Games.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச் செருக்குடன் வளர்ந்து மிளிர்க..



யாழ்ப்பாண நகரின் தனித்துவங்களின் கூர்மையானது அதன் உன்னத கல்விப் பாரம்பரியமாகும். அப்பாரம்பரிய செழுமையின் ஊற்றுக்கண்களின் ஒன்றுதான் கொக்குவில் இந்துக் கல்லூரியாகும். யாழ் நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் நகரவளர்ச்சியின் விளிம்பில் உள்ள கொக்குவில் கிராமம் நகரத்துக்கான மாண்புகளையும், கிராமியப் பண்புக் கோலங்களையும் கொண்டதாகும். இத்தகு இணையம்சங்களின் விளைபொருளாகவும் சமூக அறிவியல் மற்றும் பண்பாட்டு பெருநிலையமாகவும் வளர்ந்து பெருமையுடன் நிமிர்ந்து நிற்பது கொக்குவில் இந்துக் கல்லூரியாகும்.

இலங்கையின் பலபாகங்களிலும் உயர் பதவி வகிப்போரையும். வெளிநாடுகள் பலவற்றில் கல்வியில் முத்திரை பதிப்போரையும், சீர்மிகு வணிகப்பெருமக்களையும், அறிவுசார் ஆசான்களையும் பத்துத் தசாப்தங்களாக உருவாக்கிய பெருமையுணர்வுடன் தனது நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடி மகிழ்கின்றது ஒப்புயர்வற்ற இக்கல்லூரி.

மூன்று தலைமுறைகளை மேன்மைமிக்கவர்களாக மாற்றியிருப்பதோடு எதிர்காலத்தில் பலதலைமுறையினரை உருவாக்கும் தன்னம்பிக்கையுடனும், ஞானச்செருக்குடனும் கொக்குவில் இந்து தன் நூற்றாண்டினை எண்ணிப் பெருமையுறுகின்றது.

புரவலர்களும், தனவந்தர்களும், கல்விமான்களும், சமூக ஆரவலர்களும் உயர் உள்ளத்துடன் நூற்றாண்டுகளுக்கு முன்பு புனிதமான இப்பாடசாலையை நிறுவியிருந்தனர். ஆளுமை மிக்க பல அதிபர்களினதும், அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர்களினதும் அயரா உழைப்பினால் நூறு வயதை நிறைவு செய்துள்ளது. பெற்றோரின் பேரார்வமும், பிள்ளைகளின் அதியுயர் அறிவு நாட்டமும் ஈழத்து வடபுலத்தின் கல்விக் கலங்கரை விளக்காக இதனை வளர்த்துள்ளது.

நூறு வருட கல்லூரி வளர்ச்சிக்கு உரமிட்ட அனைத்து வரலாற்று மாந்தர்களும் நினைவு கூரத்தக்கவர்கள். கொக்குவில் இந்து இதற்காகவே தனது நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுகின்றது. ஏதிர்வரும் பலநூறு ஆண்டுகள் தான் உறுதியுடன் பணியாற்றப் போவதை நம்பிக்கைத் தொனியுடன் உயரத்திலிருந்து உரத்துச் சொல்லும் செய்திதான் நூற்றாண்டுச் சாதனையாகும்.

தனது ஞான வியத்தகு வித்தியா பணியில் பெற்ற சாதனைகளையும், ஊக்குவித்து உதவிய சான்றோர்தம் வள்ளண்மையும், ஆசிரியர்தம் அளப்பரிய கற்பித்தல் பணியையும், மாணவர் தம் கலை, கல்வி, அறிவியல், விளையாட்டு சாதனைகளையும் ஆவணப்படுத்துவதாக இந்த அழகான நூற்றாண்டு விழாமலர் வெளிவருவது பாராட்டுக்குரியது.

இத்தகைய மலரை வரலாற்று ஆவணமாக மிளிரச் செய்வதற்கு பங்களிப்புச் செய்த அதிபர். திரு.அ.அகிலதாஸ் அவர்களும், மலர் வெளியீட்டுக் குழுவினரும் பாராட்டப்படவேண்டியவர்கள். அவர்களை வாழ்த்துவதோடு கொக்குவில் இந்து அன்னை மேலும் செழுமையும் பெருமையும் கொண்டு வளரவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

பேராசிரியர்.மா.சின்னத்தம்பி,
தலைவர் சட்டத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

சமூகப்புரவலர் மா.சுப்பிரமணியம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக்கல்லூரி அன்னை நூறாவது அகவைத் தாண்டும் இந்நன்னாளில் எனது நெஞ்சைவிட்டகலாத சில நினைவுகளைப் பகிர்ந்து அன்னையை மனதாரப்பாராட்டி வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.

காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு கனிவு தரும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு
இதை வழக்கப்படுத்தி கொள்ளு பாப்பா

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாப்பாப் பாட்டில் அறிவுரை கூறியுள்ளார். படிப்பு எவ்வளவு மனிதனுக்கு முக்கியமோ அதே போன்று விளையாட்டும் முக்கியமானது என்பதை தனது பாடல் மூலம் அறிவுறுத்தியுள்ளார். நான் 1950 ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப்பிரிவில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது ஐந்து விளையாட்டு இல்லங்கள் காணப்பட்டன. கல்லூரியுடன் மிகவும் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்த பெரியார்களின் பெயர்களை முறையே செல்லையா இல்லம், சபாரத்தினம் இல்லம், நாகலிங்கம் இல்லம், கார்த்திகேசு இல்லம், சபாபதி இல்லம், சபாரத்தினம் இல்லம் நாகலிங்கம் இல்லம், கார்த்திகேசு இல்லம் , சபாபதி இல்லம் என இல்லங்களுக்கு சூட்டப்பட்டிருந்தன. அக்காலத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி முதலாவது அணி, இரண்டாவது அணி என உதைப்பந்தாட்டக்குழுக்கள் இருந்தன. அந்தக் காலத்தில் துடுப்பாட்டப் போட்டியிலும் பார்க்க (Cricket) உதைப்பந்தாட்டத்திற்கு முக்கியத்துவம் கூடுதலாக காணப்பட்டது. காரணம் பொதுமக்கள் விறுவிறுப்பான உற்சாக ஆட்டமான உதைப்பந்தாட்டத்தை விரும்பிப் பார்ப்பார்கள். தற்சமயம் தென்னாபிரிக்காவில் உலக்கிண்ண உதைப்பந்தாட்டத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதை வானொலியிலும் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் பார்க்கின்றோம். அந்தக்காலத்தில் உதைப்பந்தாட்டத்தைப் பார்ப்பதற்கு யாழ் முற்றவெளி மைதானம் சனக்கூட்டங்களால் அலைமோதும் எங்கள் கல்லூரி உதைப்பந்தாட்ட அணிகளுக்கு பயிற்சி ஆசிரியராக பரமானந்தம் மாஸ்ரர் அவர்கள் இருந்தார். ஒரு Sports பெனியனும் காற்சட்டையும் வாயில் ஒரு கோடாச் சுருட்டுமாகக காட்சியளிப்பார். எங்கள் அணி கோல் போடும் போது ஒவ்வொரு கோலுக்கும் ஒரு புதுச்சுருட்டுப் பற்றவைப்பார். அவரது அரிய சேவையினாலும் கொடுத்த பயிற்சியினாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி உதைப் பந்தாட்டத்தில் கொடி கட்டிப்பறந்தது. அக்காலத்தில் கல்லூரி இப்பொழுது உள்ளது போல் பௌதீக வளங்களைக் கொண்டிருக்கவில்லை. நம் ஊரிலிருந்த சிலரின் உதவிகள் மட்டுமே கல்லூரி அன்னைக்கு நிதி வளங்களை வாரி வழங்கினார்கள். அதிலிருந்து தான் கல்லூரியின் பொற்காலம் ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டகைகள் தான் பின்பு இரண்டு மாடி , மூன்று மாடிக் கட்டடங்களாகவும் இவற்றில் பௌதீக, இரசாயன, உயிரியல், கணனி ஆய்வுகூடங்களும் உருவாகின முதலாவது கொக்குவில் இந்துக் கல்லூரியின் இரண்டு மாடிக் கட்டிடம் மிகுந்த சிரமத்துடன் நிதிப் பற்றாக்குறையால் நத்தை வேகத்தில் நடந்துகொண்டிருந்தன. முதலாவது மாடிக்கான கொங்கிறீற் போடும் வேலைகள் நடந்துகொண்டிருந்த வேளையில் மாணவர்களோடு நானும் சேர்ந்து சீமெந்துக்கல்லினைச் சுமந்து சென்றதை நினைத்துப் பார்க்கின்றேன். நாமும் இப்படியொரு கட்டடம் கட்டுவோமா! என்று அப்பொழுது எனது மனதில் சிறு எண்ணம் துளிர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்போலவே வகுப்பில் இத்தாலியில் பைசா நகரில் சாய்ந்த கோபுரத்தைப் பற்றி ஆசிரியர் விளக்கும் போது அதைப்பார்க்கும் சந்தர்ப்பம் வருமா? என்றும் ஆனந்த விகடன் பத்திரிகையில் யு.ஏ.ஆ மெய்யப்பச் செட்டியார். மேற்குலக நாடுகளைப்பற்றித் தனது பயண அனுபவங்களை எழுதும் போது அங்கு போக முடியுமா? என்ற நப்பாசைகள் தோன்றி மறையும் இவையெல்லாம் எனது இளமைக்கால கனவுகளாகவே இருந்தன. பிற்காலத்தில் அந்தக் கனவுகள் எல்லாம் நனவுகளாகவே அமைந்தன. 1956ஆம் ஆண்டு நான் பாடசாலையை விட்டு விலகும் போது "ஆற்றங்கரை மரமும், அரசறிய வீற்றிருந்த வாழ்வும் ஒரு நாள் விழுமன்றோ" என்பது போல தகப்பனாருக்கு ஏற்பட்ட சுகயீனமும் அவருக்குத் தொழிலில் ஏற்பட்ட நஷ்டமும் பேரோடு வாழ்ந்து கொண்டிருந்த எம் குடும்பம் வேரோடு சாய்ந்தது. கொக்குவில் மேற்கில் அந்தக்காலத்தில் நாற்சார் கல்வீடுகள் நாலு சாலைகள் நடுவில் ஒரு முற்றம்) விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருந்தன. செல்வச் செழிப்பைக் காட்டும் அந்தக் காட்சிகளாக அதில் எங்கள் வீடும் ஒன்று 1950 - 1956 ஆண்டு காலப்பகுதிகளில் எங்களுக்குக் கஷ்டகாலமாக இருந்தது. மேற்கொண்டு படிப்பைத் தொடரமுடியாமல் கொழும்புக்கு வியாபாரம் செய்யப் புறப்பட்டேன். S.S.C பரீட்சையில் சித்தியடைந்திருந்தேன். ஏதாவது உத்தியோகம் (White Collar Job) கூடத் தேடினேன். கிடைக்கும் போல் இருந்தது. இருந்தும் வியாபாரத்தில் பணம் ஈட்டலாம் முன்னேற்றம் காணலாம் என்று ஒரு எண்ணம் தோன்றி வியாபாரத்தில் முழுமையாக ஈடுபட்டேன் . அப்படி உத்தியோத்தில் இணைந்திருந்தால் இந்த மாதிரி நற்பணிகளை செய்திருப்பேனோ? என்னவோ! இதைத்தான் என்னுடைய பால்ய வகுப்பு நண்பன் நிலஅளவையாளர் சிவானந்தனும் என்னைப் பற்றிய பாராட்டு மலரில் ஆசியுரை வழங்கையில் குறிப்பிட்டிருந்தார்.

நான் ஒரு தடவை கனடா சென்றிருந்த போது எங்கள் கல்லூரியின் கனடா பழைய மாணவர் சங்கம் இரவு விருந்து உபசாரம் ஒன்றினை எனக்களித்தார்கள். "சுகிர்தரீச்சரும்" உடனிருந்தார். முடிவில் நான் நன்றியுரை கூறும் போது என்னையும் அறியாமல் எனது பாடசாலைக்கு ஒரு விளையாட்டு "பார்வையாளர் அரங்கு" அமைப்பது பற்றிக் கூறியபோது பலத்த ஆரவாரம் கொண்ட நிறைந்த கரகோசத்துடன் கூட்டம் முடிவுற்றது.

அதன் பின் நாட்டில் நடந்த அமைதியின்மை எனது எண்ணம் காரணமாக பிற்போடவேண்டிய தாயிற்று இப்பொழுது தான் அந்த எண்ணம் செயற்பட்டு ஒரு விளையாட்டு அரங்கினையும். திறந்த வெளி அரங்கினையும் நிர்மாணிக்க ஆண்டவன் அருள்பாலித்துள்ளார். பணத்தைக் கொடுத்தாலும் சரிவர இயங்கி ஒரு நல்ல பணியை நிறைவேற்றுவதற்கு உதவ நல்ல உள்ளங் கொண்டவர்கள் தேவை அந்த வகையில் நமது கல்லூரியின் எனது முதற்பணியான மூன்று மாடிக் கட்டட நிர்மாணத் திற்கும் அதனைத் தொடர்ந்த பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து நிறைவேற்றுவதற்கு உதவிய எனது இன்னொரு பால்ய வகுப்பு நண்பர் அமரர் திரு.இ.நடராசா (ஓய்வு பெற்ற பொறியியலாளர்) அவர் களுக்கும் அவருடன் சேர்ந்த குழுவினர்களுக்கும் நன்றிகூறுகின்றேன். அவர் உடல் நலமுற்று இருந்த காலத்திலும் கட்டட மீதிப் பொருட்களை சரியான முறையில் களஞ்சியப்படுத்தி என்னிடம் ஒப்படைத்தமை தொடரும் வேலைக்கு பேருதவியாகவிருந்தது. இதைப் போல் பார்வையாளர் அரங்கு, திறந்தவெளி அரங்கு நிர்மாண வேலைகளை அமைப்பதற்கு உதவிய செயற்குழு உறுப்பினர்கள். நிர்மாணத் தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்கிய பொறியியலாளர் திரு. தயாபரன் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (தனித்தனி பெயர்களை குறிப்பிட்டால் சிலபெயர்கள் விடுபட்டு விடும்) எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து எங்கள் கல்லூரி அன்னைக்கு மேலும் மேலும் அணிகலன்களை அணிவித்து அழகு பார்க்க அனைவரும் முன்வந்து உதவ வேண்டி மீண்டும் நூறாவது அகவை கொண்டாடும் எமது அன்னை பலநூற்றாண்டுகள் கண்டு பார்புகழத் திகழ வேண்டுமென வாழ்த்திப் பாராட்டி விடைபெறுகின்றேன்.

மா.சுப்பிரமணியம்

கொழும்பு – 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்து கலாங்கரை விளக்கு



யாழ்ப்பாண நகர்ப்புறத்தின் எல்லையில் அமைந்து கிராமச் சூழலை அரவணைத்து இவ்வருடம் நூற்றாண்டு விழாவை நிறைவு செய்து வெளிவருகின்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு மலருக்கு உரிமையுடனும் உள்ளன்புடனும் வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது கல்லூரித் தாய் பெற்ற பேறாகவே கருதி பெருமிதம் கொள்கின்றேன். இந்நாள் கொக்குவில் இந்துவின் வரலாற்றில் பொன்னாளாகும்.

ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மாணவ மணிகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல் கலைக்கழகங்களையும் அலங்கரித்து வருகின்றனர். முத்திறக் கலைகளுடன் அறிவியல் கலைகளையும் கற்றுச் சிறந்த கல்வி நிலையெனெ வளம் பெற்றுத் திகழ்கின்றது. காலத்தின் தேவையறிந்து பெற்றோர் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பொது மக்கள் அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்காக கைம்மாறு கருதாமல் உழைத்து வருவதை நினைத்து மகிழ்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த அதிபர்களாக விளங்கிய திரு.இ.சபாலிங்கம், திரு.P.S.குமாரசாமி, திரு.அ.பஞ்சலிங்கம் ஆகியோர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பெற்ற பயிற்சியினாலும் பட்டறிவினாலும் எமது கல்லூரியையும் வழிப்படுத்தி கல்லூரியைத் தழைத்தோங்க வைத்தமையை எண்ணி நன்றியுடன் பெருமைப்படுகின்றேன். அவர்களது முயற்சிகள் எங்கும் எதிலும் வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தது. எடுத்த காரியங்கள் அனைத்திலும் சாதனை படைக்க இன்றும் உதவுகின்றன.

கொக்குவில் இந்துவின் நூற்றாளண்டு விழாவை முன்னிட்டு இவ்வாண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற இந்துக்களின் சமர் என்ற துடுப்பாட்ட நிகழ்ச்சியில் மூன்றாவது ஆண்டும் சமநிலையில் முடிந்தது பெருவிருந்தாகக் கொண்டு அனைவரும் மகிழ்ந்தார்கள். இந்துக்களின் சமர் என்ற துடுப்பாட்டப் போட்டியில் ஈடுபட்ட நல்லுள்ளங்கள் அனைவருக்கும் இந்நாளில் இதய பூர்வமான அன்பினைத் தெரிவிக்கின்றேன். இரு கல்லூரிகளினதும் கொடிகள் வானத்து மைதானத்தில் பட்டொளி வீசிப் பறந்த காட்சி கல்லூரிகளின் வளர்ச்சிக்கு சாட்சி பகருகின்றன. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றுமறியேன் பராபரமே என்பதை உள்ளத்தில் கொண்டு இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு.ஏ. கணேசராஜா
அதிபர்.
யாழ் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message from the President of Jaffna Hindu College Old Boys Association.



The humble request made by the principal of Kokuvil Hindu College extremely makes me write this message to his college Centenary number and I personally and generally feel proud of congratulating Kokuvil Hindu College on celebrating her centennial year.

In fact words fail me but I have no hesitation to frankly express the inseparable and firm ties of friendship the leading Hindu Institutions have, ever since they were established in this beautiful country.

1910 - கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு முதலாவது தலைமை யாசிரியராகத் திரு.இ.செல்லையா அவர்கள் யாழ் இந்து முகாமைத்துவ சபையால் நியமனம் செய்யப்பட்டார்.

1914 - அரச மானியம் பெறும் பாடசாலை யாக [Grant in Aid School] அரச தினைக்களத்தால் பதிவு செய்யப் பட்டது.

1916 - இப்பாடசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முகாமைத் துவ சபையிடம் கையளிக்கப்பட்ட துடன் கல்வி கற்கப் பெண் பிள்ளை களும் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் திரு.இ.செல்லையா அவர் களால் புதுக்கோவிலின் தெற்குப் பகுதியில் புகையிரத வீதிக்கு அண்மையில் ஒரு நிலம் பெறப்பட்டு புதிதாக ஒரு மண்டபம் அமைக்கப் பட்டது. புதுக்கோவிலின் வடக்குப் பகுதியில் ஓலைக் கொட்டிலில் கல்வி கற்ற சுமார் 100 மாணவர்கள் இங்கு மாற்றப்பட்டனர். இதேயாண்டு தமிழ்ப் பிரிவும் பிறிதொரு மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

1926 - தமிழ்ப் பிரிவு தரம்–5 வரையும், ஆங்கிலப் பிரிவு J.S.C வரையும் வகுப்புக்கள் அமைக்கப் பட்டு 'C' தரப் பாடசாலையாக விளங்கியது.

1927 - தமிழ்ப் பிரிவுக்குத் தனியானதொரு தலைமை ஆசிரியர் நியமிக்கப்பட் டார். தமிழ்ப் பிரிவின் முதலாவது தலைமை ஆசிரியராக தூவடியைச் சேர்ந்த திரு.பொன்னையா அவர்கள் நியமனம் செய்யப்பட்டார்.

1937 - அதிபர் திரு.மு.கார்த்திகேசு அவர்களால் வெள்ளி விழாக் கொண்டாடப்பட்டது. முன்னாள் தலைமை ஆசிரியர் திரு.இ.செல் லையா அவர்களின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. பாட சாலைச் சின்னம் "கற்றாங் கொழுகு" என்ற மகுட வாசகத்துடன் உருவாக் கப்பட்டது. இவ்வாண்டிலேயே பாடசாலை முதன் முறையாக தீக்கிரையாக்கப்பட்டது.

1939 - சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலை யாகத் தரம் ['B' Grade] உயர்த்தப் பட்டது.

1940 - "கொக்குவில் இந்துக் கல்லூரி" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கல்லூரியாகத் தரம் உயர்த்தப் பட்டது. புதுக்கோவிலின் தென் பகுதியில் அதிபர் திரு.மு.கார்த்தி கேசு அவர்களால் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டு அதில் ஒரு பிரிவு விஞ்ஞான ஆய்வு கூடமாகவும், மறு பிரிவு இரு வகுப்பறைகளாகவும் இயங்கத் தொடங்கியது. இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்டில் முதன் முறையாக கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி இயங்கும் பழைய புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரிக் கொடியும் "சிவப்பு, வெள்ளை" நிறங்களில் உருவாக்கப்புட்டது. இவ்வாண்டு கல்லூரி நூல் நிலையமும் உருவாக்கப்பட்டது.

1941 - முதன் முதலாக Kokuvil Mirror என்ற கல்லூரி சஞ்சிகை இவ்வாண்டில் வெளியிடப்பட்டது. இதன் பத்திரிகை ஆசிரியராக திரு.N.கணேசலிங்கம் அவர்கள் விளங்கினார்.

1943 - கல்லூரியில் சாரணர் இயக்கம் திரு.ஏ.சிவசுப்பிரமணியம் அவர்களால் உருவாக்கப்பட்டது.

1944 - கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரியின் காற்பந்து, கரப்பந்து அணிகள் உருவாக்கப்பட்டன.

1945 - C.W.W. கன்னங்கரா அவர்களால் இலவசக்கல்வித் திட்டம் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்காலத்தில் அதிபராக இருந்த V.நாகலிங்கம் என்பவரால் மாணவர் முதல்வர் சபை "Student Council" உருவாக்கப்பட்டது.

1946 - அதிபர் திரு.V.நாகலிங்கம் அவர்களால் புதுக்கோவிலின் தென்பகுதியில் கல்லூரி ஒழுங்கை அருகில் நான்கு பரப்புக் காணி அன்பளிப்பாகப் பெறப்பட்டு ஐந்து வகுப்பறைகள் கொண்ட மண்டபம் அமைக்கப்பட்டது.

1947 - கல்லூரிக் கீதம் ஆசிரியர் திரு. A.நாகலிங்கம் அவர்களால் இயற்றப்பட்டது. அதிபர் திரு.V.நாகலிங்கம் அவர்களால் நாற்பத்து மூன்று(43) பரப்புக் காணி விளையாட்டு மைதானத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்டது.

1948 - கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தரப் பாடசாலையாகத் தரம் உயர்ந்தது. (College Level) இவ்வாண்டு மகாத்மா காந்தியின் அஸ்தி கொண்டு வரப்பட்டு மாணவர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

1950 - 50களில் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. "Linga Light" களியாட்ட விழா கொண்டாடப்பட்டது. தென்னிந்தியக் கலைஞர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. கிரிக்கெற் அணியும் உருவாக்கப்பட்டது.

1951 - கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டி முதன் முதலாக நடைபெற்றது.

1952 - வழிகாட்டிகள் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1953 - பரிசளிப்பு விழா முதன் முதலாக கொண்டாடப்பட்டது.

1954 - வலைப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டது. நாட்டின் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல கல்லூரிக்கு வருகை தந்தார். அன்றிரவு கல்லூரி தீக்கிரையாக்கப்பட்டது.

1955 - தனித்து இயங்கிய தமிழ்ப் பிரிவு கல்லூரியுடன் இணைக்கப்பட்டது.

1960 - கல்லூரி அரச பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டது. இவ்வாண்டு கல்லூரியில் நலன் விரும்பியான திரு.பொன்னுத்துரை அவர்கள் பதினேழு (17) பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்தார்.

1964 - மூன்று மாடிக்கட்டடம் நிறைவு செய்யப்பட்டு விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு வளாகத்தில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் இருந்தன. பின்பு வடக்கு வளாகத்தில் ஹண்டி பேரின்ப நாயகம் அவர்களால் மூன்று மாடிக் கட்டடம் நிறைவு செய்யப்பட்ட பின் கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் பௌதீக, இரசாயன ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டன.

1966 - கொக்குவில் இந்துக் கல்லூரி Super Grade – 1AB பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

1970 - கல்லூரியின் வடக்கு வளாகத்தின் கிழக்குப் பகுதியில் புதிய இரு மாடிக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டது.

1972 - எமது கல்லூரியின் மேற்குப் புற வாயில் காங்கேசன்துறை வீதியுடன் இணைக்கும் பாதை திரு.ச.வே.சண் முகம்பிள்ளை அவர்களின் மரு மகனான வைத்திய கலாநிதி. சு.அருட்பிரகாசம் அவர்களினால் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய் யப்பட்டது. பின்னர் 2010ல் அவர்களின் குடும்பங்கள் சார்பில் திரு.அ.ஜெயந்திரனால் தார் ஊற்றப்பட்டு செப்பனிடப்பட்டது.

1976 - கொக்குவில் இந்து ஆரம்பப் பாட சாலை தனியாகப் பிரிந்து புதிய நிர்வாகச் செயற்பாடுகளுடன் இயங்கத் தொடங்கியது.

1980 - பிரதான கல்லூரி வளாகத்தின் (அலுவலகப் பகுதி) தெற்குப் பகுதியில் புதிய இரு மாடிக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டது.

1985 - கணனிக் கல்வி அறிமுகப்படுத்தப் பட்டது.

1987 - இந்திய அமைதி காக்கும் படை வட பகுதியில் இராணுவ நடவடிக்கை மேற்கொண்ட போது பலத்த சேதத்திற்குள்ளானது.

1989 - பான்ட் வாத்திய அணி உருவாக் கப்பட்டது.

1994 - ஆண்களுக்கான பான்ட் வாத்திய அணி உருவாக்கப்பட்டது.

1995 - குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சியில் தங்கிய போது எமது கல்லூரியும் அங்கு இயங்கியது.

1998 - நவீன வசதிகளுடன் கணனி நிலை யம் உருவாக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கிழக்குப் புறத்திலுள்ள 4½ பரப்புக் காணி திரு.திருமதி. தாமோதரம் யோகேஸ்வரியிடமிருந்தும் கொழும்பு, லண்டன், பழைய மாண வர் சங்கங்களினாலும் அத்துடன் அப்பையா பாக்கியநாதன், சத்திய பாமா பாக்கியநாதனின் 3½ பரப்புக் காணி கொக்குவில் இந்துக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு நம்பிக்கை நிதி யத்திடம் கையளிக்கப்பட்டது.

திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களால் 3 பரப்புக் காணியும் வீடும் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையுடன் இணைக்கப் பட்டது. இக் கட்டடம் புனரமைக் கப்பட்டு அவரது சகோதரியான இராஜ பரமேஸ்வரியின் ஞாப கார்த்தமாக கணனி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

1999 - பாடசாலைக்கு கிழக்கேயுள்ள ஆறு பரப்பு வீட்டுடன் சேர்ந்த காணி திரு.திருமதி. சொரூபி இராம கிருஸ்ணன் தம்பதிகளிடம் அன் பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப் பட்டது.

2001 - திரு.மயில்வாகனம் சிவசுப்பிர மணியத்தின் 1½ பரப்புக்காணி (K.C.C.C க்கு அருகில்) கொழும்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் பழைய மாணவர் சங்கங்களின் நிதியுதவியுடன் பெறப்பட்டு நம்பிக்கை நிதியத் திடம் கையளிக்கப்பட்டது.

2002 - திருமதி.பாலலக்ஷ்சுமி சோமசுந்த ரத்தின் காணி திரு.மாணிக்கம் சுப்பிரமணியத்தால் கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரிக்கு அன் பளிப்புச் செய்யப்பட்டது.

2003 - திரு.வேலாயுதபிள்ளை சூரிய குமாரின் 3 பரப்புக் காணி சுவிற் சலாந்து பழைய மாணவர்களால் கொள்வனவு செய்யப்பட்டது.

2004 - திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களால் மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபம் கல்லூரியின் தெற்குப் பகுதியில் புகையிரத நிலைய வீதிக்கு அண்மையில் மூன்று மாடிக் கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது.

2005 - முன்னாள் ஆசிரியர் T.சின்னத்தம்பி அவர்களின் பிள்ளைகளான திரு.பாலகுமார், திருமதி.ரேவதி கமலசிங்கம் ஆகியோரால் புதுக் கோவிலின் தெற்குப் பகுதி வளா கத்தில் இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

Basket Ball ஆடுகளம் அமைக்கப் பட்டது. கந்தசாமிப் படிப்பகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2008 - கல்லூரியின் இரசாயனவியல் ஆய்வுகூடம் கணனி மயமாக்கப் பட்டு பல்லூடக தொழில்நுட்ப வசதி யும் [Multi Media] ஏற்படுத்தப்பட்டது. கல்லூரியின் உள்ளக தொடர்பாடல் வசதி [Inter Com] ஏற்படுத்தப் பட்டது. கல்லூரியில் அதிபர் அலு வலகம் நவீன மயப்படுத்தப்பட்டு அதனோடு இணைந்து கலந்துரை யாடல் அறையும் [Conference Room] அமைக்கப்பட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்கும் இடையில் Battle of Hindus எனப்படும் இந்துக் களின் போர் அறிமுகப்படுத்தப் பட்டது.

முன்னாள் அதிபர் E.சபாலிங்கம் ஞாப கார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 50 ஓவர் கிரிக்கற் சுற்றுப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது.

2010 - கல்லூரியின் வடகிழக்கு மூலை யிலுள்ள திரு.கிருஸ்ணபிள்ளை சண்முகராஜாவினுடைய காணி கொள்வனவு செய்யப்பட்டு விளை யாட்டு மைதானம் விஸ்தரிக்கப் பட்டுள்ளது.

மைதானத்தின் கிழக்குப் பகுதியில் மாணிக்கம் சுப்பிரமணியத்தின் நிதியுதவியுடன் பார்வையாளர் அரங்கு Pavilion அமைக்கப்பட்டது.

20/20 கிரிக்கெற் போட்டி முதன் முதலாக கொக்குவில் இந்துக் கல் லூரி பழைய மாணவர்களுக்கும், யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்றது.

இவ்வாறு பல்வேறு படிநிலைகளைத் தாண்டி அதியுன்னத வளர்ச்சி கொண்டி ருக்கும் எமது கொக்குவில் இந்து தாயானவள் மேலும் பல நூற்றாண்டுகள் உலகிற்கு கலைப் பொக்கிஷமாய் வாழ இறையாசி கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலுக்கு வளம் சேர்க்கும் எமது நூலகம்

ஒரு பாடசாலையின் இருதயமாக அமைவது அங்குள்ள நூலகம் என்று தான் கூறமுடியும். வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். நூல்களே இனிய நண்பன் போன்ற கூற்றுக்கள் நூலகத்தின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது. அந்த வகையில் எமது கல்லூரியின் ஆரம்ப காலத்தில் திருமதி பார்க்கவி அம்மாவினால் விதைக்கப்பட்ட வித்தே இன்ற பல கிளைகளைத் தாங்கி விழுது விட்டு நிற்கும் ஆலமரம் போன்று காணப்படும் நூல்நிலையமாகும்.

"அக்காலத்தில் ஒவ்வொரு தரத்திற்கும் ஏற்ற வகையில் Bright Story Readers என்ற ஆங்கில இலக்கியப் புத்தகங்கள் ஒரு அலுமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தான் ஒரு புகழ்பெற்ற எழுத்தாளராக வருவதற்கு காரணம் அக்கால வகுப்பறை நூலகமே" என திரு. சிவநாயகம் என்ற மாணவன் குறிப்பிட்டதிலிருந்து அதனை அறியமுடிகிறது.

பின்னர் 1940ஆம் ஆண்டு வகுப்பறை நூலகம் பொது நூலகமாக திரு. S.C.தில்லைநாதனின் மேற்பார்வையில் அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சீனிவாசகம் அதிபராக இருந்த காலத்தில் புதிய புத்தகங்கள் சேர்க்கப்பட்டன. அக் காலத்தில் நூல்களோ, உதவியாளர்களோ இல்லாததால் அதிபர் சீனிவாசகமே சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் புத்தகங்களை இறாக்கையில் ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொண்டார்.

திரு.வி. நாகலிங்கம் அவர்கள் மேலும் பல ஆங்கிலப் புத்தகங்களைச் சேகரிப் பதில் முன்னின்று உழைத்தார். 1949ஆம் ஆண்டு அதிபர் ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து நூல்களின் பெயர்ப் பட்டியலைப் பெற்று கொக்குவில் இந்து நூலகத்திற்கு மேலும் பல புத்தகங்களைச் சேகரித்து வளப்படுத்தினார்.

எமது கல்லூரியின் முதலாவது நூலகராக கோண்டாவிலைச் சேர்ந்த S.நவரட்ணம் நியமிக்கப்பட்டார். இவர் 31.08.1959ஆம் ஆண்ட வரை பணி யாற்றிய காலப்பகுதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் அந்நூலகத்தில் இருந்தன. அவருக்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரான திரு.S.C.தில்லைநாதன் நியமிக்கப்பட்டார். இவருடைய அநேகமான தமிழ், ஆங்கிலப் புத்தகங்கள் சேகரிக் கப்பட்டன. 1960ஆம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதனால் திரு.S.C.தில்லைநாதன் தமது பணியைத் தொடர்ந்து புரிய முடியாமல் போகவே பின்னர் 1962ஆம் ஆண்டு திரு.சு.அர சரட்ணம் அப்பதவியைப் பொறுப்பேற்றார். அவருக்குப் பின்னர் திருமதி.S.சிவ குருநாதன் கடமையாற்றினார்.

1987ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி திரு.அ.தனபாலசிங்கம் அவர்கள் ஆசிரியரல்லாத நூலகராகப் பதவியேற்ற காரணத்தால் பாடசாலை விடுமுறைக் காலங்களில் கூட மாணவர்களின் நன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி எமது நூலகம் பாவனைக்கு விடப்பட்டிருந்ததால் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய மாணவர்களும் எமது நூலகத்தை சிறந்த முறையில் பயன்படுத்த முடிந்தது. அவரைத் தொடர்ந்து செல்வி. S.சங்கரப்பிள்ளை அவர்களும் நூலகர்களாகக் கடமையாற்றியாற்றினார். அப்பொழுது நூலகத்தில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்தது. அக்காலப் பகுதியில் கோவிலின் தென் புறத்தில் செல்லையா மண்டபத்தில் இயங்கிய நூலகம் கோவிலுக்கு வடக்கே உள்ள பகுதியில் கிழக்குப் புறமாக உள்ள மாடிக்கட்டடத்தின் 3ம் மாடியில் இன்று வரை இயங்கி வருகிறது. தற்போது திரு.C.K.கந்தசாமி எனப் பெயரிடப்பட்ட மாடிக் கட்டடம். இந்த நூலகம் ஒரே நேரத்தில் ஐம்பதிற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து கற்கக் கூடிய இடவசதியையும் கொண்டமைந்துள்ளது. புத்தகங்கள் பாட ரீதியாக கண்ணாடி அலுமாரிகளில் ஒழுங்குபடுத்தப்பட்டு மாணவர்களின் அறிவுப்பசியைப் போக்குவதற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்காக ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளிவந்த புதினப்பத்திரிகைகள், மாதாந்த சஞ்சிகைகள், உசாத்துணை நூல்கள் போன்றனவும் வைக்கப்பட்டுள்ளன.

1987இல் நாட்டின் சூழ்நிலை காரணமாக எமது நூலகத்திற்குப் பங்கம் ஏற்பட்டது. ஏறத்தாழ ஆயிரத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் இழக்கப்பட்டன. பாடசாலையின் பாரம்பரியத்தை அறிய உதவும் ஆவணங்கள், அறிக்கைகள் யாவும் இழக்கப்பட்டன. பின்பு பழைய மாணவர் சங்கத்தின் உதவியினால் மீண்டும் நூலகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. 2003 ஆம் ஆண்டு இலண்டன் பழைய மாணவர் சங்கம் கல்லூரி நூல் நிலையத்திற்கு பெறுமதி வாய்ந்த நூல்களை அனுப்பி வைத்துள்ளது. சுவிஸ் நாட்டைச் சேர்ந்த திரு.தர்மலிங்கம் என்பவர் நூல்களை கொள்வனவு செய்வதற்காக 1,00,000 ரூபா வழங்கியிருந்தார்.

1994 - 1995 காலப்பகுதியில் கல்லூரியின் தெற்குப் பகுதியில் கனிஷ்ட மாணவர்களுக்கான சிறுவர் நூலகம் பின்னர் கல்லூரியின் கிழக்குப் பகுதியில் 'ன்டி பேரின்பநாயகம் சிறுவர் நூலகமாக இயங்கி வந்தது. தற்போது அந்நூலகம் மீண்டும் கல்லூரியின் தெற்குப் பகுதியில் உள்ள மகேந்திரன் மாடிக்கட்டடத்தின் வடகிழக்கு மூலையில் சிறுவர் நூலகமாகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. எமது கல்லூரியின் வடக்குப் புறத்தில் உள்ள நூலகத்திற்கு நூலக ஆசிரியராக எஸ்.சதீஸ்குமாரும் அவருக்கு உதவியாக P. மகாதேவனும் தற்போது பணியாற்றி வருகின்றனர். அதேபோல தெற்குப் புறத்தில் அமைந்துள்ள சிறுவர் நூலகத்திற்கு ஆரம்பத்தில் திருமதி. வி. லிங்கராஜா என்பவர் பொறுப்பாக இருந்தார். தற்போது திருமதி. யோ. தவராஜா என்பவர் செயலாற்றி வருகின்றார்.

தற்போது எமது கல்லூரியின் பழைய மாணவனான கொக்குவில் மேற்கைச் சேர்ந்த மு.ஏ.சற்குணம் குடும்பத்தினர் பத்து இலட்சம் ரூபாவை நூல் நிலையத்திற்கு வழங்கியுள்ளனர். அதில் ஏழு இலட்சம் ரூபா புனரமைப்பதற்கும், மூன்று இலட்சம் ரூபாவை அதனைப் பராமரிப்பதற்கும் பழைய மாணவர் நம்பிக்கை நிதியத்திடம் கையளித்துள்ளனர். இவரது பரந்த உள்ளம் கொண்ட செயற்பாடானது வளர்ந்து வரும் சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாகும் என்பதற்கு ஐயமில்லை.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் – தென்பகுதி





நூலகம் – வடபகுதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் விடுதி

போக்குவரத்து சாதனங்கள் அதிக மில்லாத காலத்தில் தூர இடங்களிலிருந்து கல்லூரியை நோக்கி வரும் ஆசிரியர் களும் மாணவர்களும் தங்குவதற்கு ஒரு விடுதி தேவைப்பட்டது. இதன் காரணமாக 1928ம் ஆண்டு எமது பாடசாலையில் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடுதி பாடசாலையின் வடகிழக்கு மூலையில் கிணற்றிற்கு அருகாமையில் அமைக்கப் பட்டிருந்தது. அக்காலத்தில் இவ்விடுதி செய்த சேவையினால் யாழ்ப்பாணத்தில் பல ஆங்கில அறிஞர்கள் தோன்றுவதற்கும் அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழி களிலும் கல்வியைப் பரப்புவதற்கும் வழி கோலியது என்பது மறக்கப்பட முடியாத விடயமாகும்.

1928ல் இப்பாடசாலையின் அதிபராக திரு.ஆ.கார்த்திகேசு கடமையாற்றினார். அவர் புலோலியைச் சேர்ந்தவர். அவர் தினமும் வீடு சென்று வரமுடியாத காரணத்தினால் இப்பாடசாலையின் விடுதியிலேயே தங்கியிருந்து தனது பணிகளை மேற்கொண்டார். அப்பொழுது மலையாளத்தைச் சேர்ந்த நாயர் என்பவர் சமையல் பணிகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டார். அதிபர் திரு.M. கார்த்திகேசு அவர்களுடன் அவரது மகள் செல்வி.சாவித்திரியும் இவ்விடுதியில் தங்கியிருந்தார். சிலஆண்டுக்குப் பின்னர் திரு.M.கார்த்திகேசு அவர்களின் மருமகன் T. புவனேந்திரம் என்பவர் இப்பாடசாலை யில் கல்வி கற்பதற்காகச் சேர்க்கப்பட்டார். அவரே இவ்விடுதியின் முதல் மாணவராவார்.

அக்காலத்தில் தூர இடங்களிலிருந்து வந்து இங்கு கல்வி கற்ற மாணவர்களும், ஆசிரியர்களில் பெரும்பாலானோரும் இவ்விடுதியிலேயே தமது மதிய உணவைப் பெற்றுக்கொண்டனர். இவ்விடுதியில் வழங்கப்பட்ட சைவ உணவு மிகவும் தரமானதாக இருந்ததென அங்கு உணவு உண்ட பலரும் கூறினார்கள். அப்போது இவ்விடுதியின் பொறுப்பாளராக திரு.A. நாகலிங்கம் என்பவர் அமர்த்தப்பட்டார். அவர் தினமும் காலையிலேயே அன்றைய தினம் உணவு தேவைப்படுவோரின் பெயர்களைப் பதிவு செய்து கொள்வார். அவர்களது சாப்பாட்டுக்குரிய பணம் மாத இறுதியிலேயே அறவிடப்பட்டது.

1945ம் ஆண்டு கடமையாற்றிய ஆசிரியர் திரு.P.நவரத்தினம் அவர்களும், 1946ல் சுழிபுரத்தைச் சேர்ந்த திரு.S.கதிரேசன் என்பவரும் இவ்விடுதியிலேயே தங்கி யிருந்தனர். அவர்கள் அக்காலத்தில் திரு. கார்த்திகேசு என்பவரது மாட்டுவண்டியில் திரு.கண்ணுத்துரை திருவடிநிலை சுற்றுலா மையத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்றனர்.

1947ல் பருத்தித்துறையைச் சேர்ந்த ஆசிரியர் திரு.S.வீரகத்திப்பிள்ளை என்பவரும் இவ்விடுதியிலேயே சேர்ந்து கொண்டார். இவர் ஓர் சிறந்த நாடகக் கலைஞர். அதுமட்டுமன்றி புகழ்பெற்ற W.M.குமார சாமி நாட்டியக்குழுவின் அங்கத்துவரு மாவார். அப்போது விடுதியில் நல்ல வசதியான அறைகளோ, படுக்கைகளோ இல்லை. எனவே வகுப்பறைகளிலுள்ள நீண்ட மேசைகளையும், பாய்களையும் படுக்கைக்குப் பயன்படுத்தினர். அவர்களுடன் திரு.மு.பத்மநாதன் என்னும் ஆசிரியரும் இவ் விடுதியிலேயே தங்கியிருந்த போது அயலிலுள்ள மாணவர்களுக்கு எவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டணமும் இன்றி இலவசமாகக் கல்வி கற்பித்து வந்தார். அப்போது அவர்களிடம் கல்வி கற்ற மாணவர்களில் திரு.மு.பால கிருஸ்ணர், திரு.ஏ.இராஜசேகரம், திரு.S. ரட்ணப்பிரகாசம் ஆகியோரும் அடங்குவர்.

தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகிய கரவெட்டியைச் சேர்ந்த திரு.ஏ.கணபதிப்பிள்ளை அவர்களும் இவ்விடுதியில் தங்கியிருந்தவர்களுள் ஒருவராவர். அவரது புதல்வர்களான தணிகாசலம், பூலோகசிங்கம் ஆகிய இருவரும் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையில் மாணவர்களாக இணைந்து இவ்விடுதியில் தங்கினர்.

1947ல் மெட்ராஸ் ஐச் சேர்ந்த திரு.S. பார்த்தசாரதி கொக்குவில் இந்துவில் ஆசிரியராக இணைந்து விடுதியில் தங்கியிருந்தார். 1947ல் திரு.M.சின்னத் தம்பி ஆசிரியரிடம் தமிழ்மொழியைக் கற்பதற்காக இங்கு வந்த மதிப்பிற்குரிய தேரர் தர்மரணவும் இவ்விடுதியிலேயே தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரியைச் சேர்ந்த சித்திர ஆசிரியர் திரு.சுந்தரலிங்கம் என்பவரும் இவ்விடுதியிலேயே தங்கியிருந்தார். இவர் ஒரு யதார்த்த கலைஞர். இயற்கையழகில் தன்னைப் பறிகொடுத்து அதனை ரசித்து சித்திரம் வரைவதில் திறமை பெற்றவர். அவர் மாணவர்களையும் உற்சாகப்படுத்தி அதில் ஈடுபாடு கொள்ள வைத்து சித்திரத்தைக் கற்பிப்பார். அழகிய இயற்கைக் காட்சிகளைத் தானே வரைந்து கொக்குவில் இந்துவின் ஆசிரியர் அறையில் அவற்றைத் தொங்க விடுவார். இப்பணியினை அவர் மேற்கொள்வதற்கு இப் பாடசாலையின் விடுதியில் அவர் தங்கியிருந்தமையே பேருதவியாக அமைந்தது எனலாம்.


19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் கல்லூரிகளில் மாணவர்கள் தங்கியிருந்து கற்பதற்கு வசதியான இடங்களின்மை பெருங்குறைபாடாக இருந்தது என்பது யாவரும் அறிந்த உண்மை. அவ்வேளையில் எமது கல்லூரியில் அமைக்கப்பட்ட விடுதி வழங்கிய பேருதவியே யாழ்ப்பாணம் கல்வித்துறையில் மேம்பாடடைவதற்கு காரணம் என்று கூறின் மிகையாகாது.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J / KOKKUVIL HINDU COLLEGE

SCALE 1 : 2000



Drawn by : T.A.ARULNESAN,
SURVEYOR,
Alady Lane,
Kondavil East,
Kondavil

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர்களின் வரலாறு

சங்கொலி முழங்க சரித்திரம் படைத்த சங்கிலியன் ஆண்ட யாழ்ப்பாண நன்னகரில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு அறிவொளி ஏற்றும் ஆலயமாக இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி திகழ்கின்றது. 1910ம் ஆண்டில் சிறிய கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 2010ம் ஆண்டளவிலே வானளாவிய கட்டடங்களுடன் 1AB தர பாடசாலையின் வரிசையில் முத்திரை பதிக்க காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் ஆலமர விழுதுகள் போன்ற இக்கல்லூரி அதிபர்களே என்றால் மிகையாகாது.

கல்வி அறிவிலும், ஒழுக்கம் பண்பாட்டிலும் மேம்பட்டு விளங்குவதுடன் கல்வித்தர விருத்தியிலும், இணைபாட விதானச் செயற்பாடுகளிலும், இலங்கையிலுள்ள முன்னணி வகிக்கும் பாடசாலைகளுள் ஒன்றான இக்கல்லூரியானது நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் கல்லூரியின் ஆணிவேர்களான அதிபர், பதிலதிபர்களை நினைவு கூருவது இக்கல்லூரிச் சமூகத்தின் தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இளையப்பா செல்லையா
(1910 – 1926)
E. செல்லையா



"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற கூற்றுக்கிணங்க கொக்குவில் மத்தியில் காங்கேசன்துறை வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் ஆரம்பித்த கற்றல் கற்பித்தல் நிகழ்வானது திரு.E. செல்லையா அவர்களின் அரும்பெரும் முயற்சியால் புதுக்கோவிலின் வடபால் சிறிய நிலத்தில் தற்காலிக ஓலைக் கொட்டிலில் ஒரு பாட சாலையாக உருவானது.

1910 ஒக்டோபரில் திரு. E. செல்லையா அவர்கள் திண்ணைப்பள்ளியில் கல்வி போதித்து வந்த திரு.N. செல்லப்பா (மட்ராஸ் மற்றிகுலேஷன்) ஆங்கில ஆசிரியரின் துணையுடன் அயலிலி ருந்தும், அயற்கிராமங்களிலிருந்தும் வரத் தொடங்கிய பல்வேறு தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார். வெகு விரைவில் மாணவர் தொகை அதிகரித்த துடன் சிறந்த ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் நிர்வகிக்கப்பட்டு பின்னர் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது.

ஸ்தாபகரான திரு.E. செல்லையா அவர்கள் முதலாவது தலைமை ஆசிரி யராகக் கடமையாற்றினார். மாணவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டு வந்தபோது இட நெருக்கடி ஏற்பட்டது. திரு.E. செல்லையா அவர்கள் புதுக்கோவிலின் தெற்குப் பகுதி யில் கொக்குவில் புகையிரத வீதியில் ஒரு நிலத்தைப் பெற்று நிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைத்தார். அம்மண்டபத்தில் நூறு மாணவர்கள் இருந்து கற்கக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் திரு.E. செல்லையா அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முகாமைத்துவ சபையிடம் 1916ம் ஆண்டளவில் இப்பாடசாலையின் பொறுப்பைக் கையளித்தார். அத்துடன் அக்காலத்தில் பெண்கள் தூர இடங்களுக்கு சென்று கல்வி கற்க வேண்டியிருந்ததால் அநேக பெற்றோர்களின் வேண்டுகோளின் படி பெண்களும் அப்பாடசாலையில் கல்வி கற்க அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் இப்பாடசாலையில் புதுக் கோவிலின் தெற்குப் பக்கத்திலுள்ள இடத்தில் இரண்டு மண்டபங்கள் அமைத்து ஒரு மண்டபத்தில் தமிழ்ப்பிரிவு ஆரம் பிக்கப்பட்டது. இப்பாடசாலை சகல வகை யிலும் திருப்திகரமான முறையில் முன் னேற்றமடைந்து வந்தது. ஆரம்ப கர்த்தா வாக விளங்கிய திரு. E. செல்லையா அவர்கள் 1926ம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. S. தியாகராசா
(1926 – 1928)



திரு.E. செல்லையாவினை அடியொற்றி திரு.S.தியாகராசா அவர்கள் இரண்டாவது தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தெல்லிப்பளை கொல்லங் கலட்டியைச் சேர்ந்த இவர் அளவெட்டி அருணோதயாப் பாடசாலையில் ஆசிரியராக 1922ல் சேர்ந்து பணியாற்றினார். 1924ல் மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்று, பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரது காலத்தில் ஆரம்ப ஆங்கிலப் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையில் J.S.C எனப்படுகின்ற கனிஷ்ட தராதரப்பத்திர சான்றிதழ் பரீட்சை வரை கல்விப்பிரிவுகள் அனுமதிக்கப்பட்டன. கல்வி நிலையும், மாணவர் எண்ணிக்கையும் உயர்ந்து வரும்நிலையில் 1928ல் தலைமை ஆசிரியர் அவர்கள் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைப் பரிசோதகராக நியமனம் பெற்றுச் சென்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. M. கார்த்திகேசு
(1928 - 1942)



கொக்குவில் இந்துவின் இலக்கணத்தை பிரதி பலிக்கும் வகையில் திரு.ஆ.கார்த்திகேசு அவர்கள் திரு. S. தியாகராசா அவர்களின் பின் தலைமைப் பொறுப்பை ஏற்று முதல்வராக விளங்கினார். ஏறத்தாழ பதினான்கு வருடங்கள் தலைமைப் பொறுப்பை ஏற்ற இவர் கல்வி விருத்தி யிலும் இணைப்பாட விதான செயற்பாட்டிலும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியவராக விளங்கினார். பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த இவர் 1928ம் ஆண்டு செப்டெம்பர் 1ம் திகதி பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அக்காலத்தில் தனது சொந்த வீட்டிற்குச் சென்று வர முடியாததால் பாடசாலையில் செல்லையா மண்டபத்தில் ஒரு பகுதியில் அவர் தங்கியிருந்தார். தூர இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் தங்குவதற்காக ஒரு விடுதியையும், உணவு வழங்கும் வசதியையும் ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் அவர் தங்கியிருந்ததால் பாடசாலைச் சொத்துக்குப் பாதுகாப்பாகவும் இருந்தது. அங்கு அவர் ஒரு சிறிய தோட்டத்தையும் உருவாக்கியிருந்தார். அதனைப் பாதுகாப்பதற்காக பாடசாலையைச் சுற்றி வேலியையும் அமைத்தார்.

பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ஒழுங்கு கட்டுப்பாடுகளை கண்டிப்புடன் கையாண்டார். இவரது காலத்தில் ஒரு தலைமையின் கீழ் இருந்த நிர்வாகம் தமிழ்ப்பிரிவு வேறாகவும், ஆங்கிலப் பிரிவு வேறாகவும் மாற்றப்பட்டது. திரு. M. கார்த்திகேசு அவர்கள் தரம் I தொடக்கம் தரம் V வரையான ஆங்கிலப் பிரிவிற்கு பொறுப்பாகவும், திரு.பொன்னையா அவர்கள் தரம் I தொடக்கம் தரம் V வரையான தமிழ்ப் பிரிவிற்கு பொறுப்பாகவும் இருந்தார்கள். திரு. M. கார்த்திகேசு அவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியராக விளங்கினார்.

1937ம் ஆண்டு பாடசாலையின் வெள்ளி விழாவானது ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோரது சிறந்த ஒத்துழைப்புடன் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கொடியேற்றும் நிகழ்வுடன் ஆரம்பித்த விழாவின் போது முதலாவது தலைமை ஆசிரியரான திரு.E. செல்லையா அவர்களின் உருவப் படமும் திறந்து வைக்கப்பட்டமை முக்கிய நிகழ்வாகும். அதனைத் தொடர்ந்து நாடகம், கலைநிகழ்ச்சி என்பன சிறப்பாக நடை பெற்றன. இவை யாவற்றையும் நோக்கும் போது அதிபர் கார்த்திகேசு அவர்களின் ஆளுமைத் திறனை உணரக்கூடியதாக உள்ளது.

மேலும் விஞ்ஞானக் கல்வி மேம்பாட்டுக்காக விஞ்ஞான ஆய்வுகூடம், மேலதிக வகுப்பறைகள், சுவர்க் கரும்பலகைகள் என்பன அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டது. இக்கட்டடங்களின் கூரை ஓடுகளாலும், தரை சீமெந்தாலும் அமைக்கப்பட்டன. இவ்வாறு மாணவர்களது கல்வித்தரம் உயர பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய காலத்தில் நடராஜப்பெரு மானை நினைவுபடுத்தி ஓம் என்ற வடி வத்தில் பாடசாலைச்சின்னம் உருவாக்கப் பட்டு அதில் "கற்றாங் கொழுகு" என்ற மகுட வாசகம் பொறிக்கப்பட்டது. மாணவர் அப்பி யாசக் கொப்பிகளிலும் மகுடவாசகம் பொறிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. 1940ம் ஆண்டளவில் பாடசாலைக்கீதம் திரு.A. நாகலிங்கம் ஆசிரியர் அவர்களால் ஆக்கிக் கொடுக்கப்பட்டு, முக்கிய நிகழ்வுகளில் மாணவர்களால் பாடப்பட்டு வந்தது. பின்னர் பாடசாலை மண்டபம் தீக்கிரையானதால் ஓலைக்குப் பதிலாக ஓடு போடப்பட்டு புனரமைக்கப்பட்டது. இவருடைய காலத்தில் பாரம்பரிய விளையாட்டான பங்கம் PANKAM (போர்த்தேங்காய் அடித்தல்) விளையாட்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆசிரியர்களுடன் இணைந்து பாட சாலையின் ஒழுங்கு, கட்டுப்பாட்டைப்பேண மாணவ தலைவர்கள் (Prefects) உருவாக் கப்பட்டனர். இவர்களுக்குப் பொறுப்பாக திரு.A. நாகலிங்கம் இருந்தார். ஆசிரியர் திரு.கணேசலிங்கத்துடன் இணைந்து ஏனைய ஆசிரியர்களது உதவியால் KOKUVIL MIRROR என்ற கல்லூரிச் சஞ்சிகை 1941இல் வெளியிடப்பட்டது.

இவரது காலத்தில் இல்லங்களுக்கிடை யேயான மெய்வல்லுனர் போட்டியானது முதன் முறையாக நடைபெற்றது. பாடசாலை யின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய மூன்று முக்கிய பிரமுகர்களின் பெயர்கள் இல்லங் களுக்குச் சூட்டப்பட்டன. பாடசாலையின் ஸ்தாபகரும் முதலாவது தலைமை ஆசிரி யருமான திரு.E.செல்லையா அவர்களின் பெயரில் ஒரு இல்லமும், கொக்குவில் தலை யாழியைச் சேர்ந்தவரும் சட்டசபைக்கு இரண்டாவது தமிழ்ப் பிரிதிநிதியாக நியமனம் செய்யப்பட்டவரும், தமிழ்மொழி, சைவசமயம் என்பவற்றிற்காகப் பாடுபட்ட வரும், பாடசாலை வளர்ச்சிக்கு உதவியவரு மான சபாபதி அவர்களின் பெயரில் இரண் டாவது இல்லமும், கொக்குவில் வாசியும், சைவசமயத் தொண்டாற்றியவரும், பாட சாலையின் வளர்ச்சிக்கு உதவி யவருமான திரு.சபாரட்ண முதலியாரின் பெயரில் மூன்றாவது இல்லமும் உருவாக்கப்பட்டது.

பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத காரணத்தால் மாணவர் களின் விளையாட்டுப் பயிற்சிகள் புதுக் கோவில் வீதிகளிலே பயிற்றப்பட்டன. இல்ல மெய்வல்லுனர் நிகழ்வுகள் அப்போது கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் மிகக் கோலா கலமாக நடைபெற்றன. இதன்போது சிவப்பு - வெள்ளை கொடியின் நிறமாக ஏற்கப்பட்டது. உதைப்பந்தாட்டம், கரப் பந்தாட்டம் என்பன மாணவர் மத்தியில் செல்வாக்குப் பெற்று வேறு பாடசாலை களுடன் மோதும் அளவிற்கு திறமையான அணிகளாக வளர்ந்தன.

இவருடைய காலத்தில் அதாவது 1941இல் இப்பாடசாலை கல்லூரியாகத் தரம் உயர்த்தப்பட்டது. இவருடைய தலை மைத்துவப் பண்பினது சிறப்பினால் தலைமை ஆசிரியர் என்ற பதவியிலிருந்து அதிபர் என்ற அந்தஸ்தைப் பெறமுடிந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் முத லாவது அதிபர் என்ற பெருமை இவரையே சாரும். இவரது காலத்தில் 400 ற்கும் அதிக மான மாணவர்களுக்கு கல்வி போதிக்க 15 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர்.

கல்லூரிக்காக அயராது சேவையாற்றிய கல்லூரி அதிபர் திரு. M. கார்த்திகேசு அவர்கள் 1942 மே மாதம் தனது சேவை யிலிருந்து இளைப்பாறிக் கொண்டார்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ஆ. சீனிவாசகம்

(1942 - 1946)



திரு.M. கார்த்திகேசு அவர்கள் 1942 மே மாதம் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து உப அதிபராக இருந்த திரு.C.K. கந்தசாமி அவர்கள் 1943 மாசி மாதம் வரை பதிலதிபராகக் கடமை புரிந்தார்.

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. S. சீனிவாசகம் அவர்கள் 1943 பெப்ரவரியில் அதிபராக நியமனம் பெற்றார். தனது ஆரம்பக் கல்வியை மலேசியாவிலுள்ள விக்டோறியாக் கல்லூரியில் பயின்றார். அங்கே "கேம்பிறிட்ஜ் யூனியர்" பரீட்சையை முடித்துக் கொண்டு திரும்பவும் இலங்கைக்கு வந்து கொழும்பு முகத்துவாரத்திலுள்ள சென். தோமஸ் கல்லூரியில் கற்றலைத் தொடர்ந்தார். பின்னர் லண்டன் மாநகரம் சென்று பொருளியலிலும் பொது நிர்வாகத்துறையிலும் சிறப்புப்பட்டம் பெற்று இங்கு "லேக் கவுஸ்" பத்திரிகை நிறுவனத்தில் உதவிப் பத்திராதிபராகப் பணியாற்றினார். இந்நிலையில் கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகத்தால் அதிபராகப் பணியாற்றுமாறு அழைக்கப்பட்டார்.

கல்லூரியில் மாணவர் தொகையும் அதிகரித்துச் செல்லச் செல்ல தேவைகளும் அதிகரித்தன. கல்லூரி சமூகத்துடன் ஒன்றிணைந்து சேவையாற்றியதன் மூலமாக கல்லூரிக்குத் தேவையான பௌதீக வளங்களை அவர் பெற்றுக் கொண்டமை அவரின் நிர்வாகச் சிறப்பிற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

1944ம் ஆண்டு பெப்ரவரியில் கொக்குவில் இந்துவின் பழைய மாணவர் சங்கம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சம்பவம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிப் படிநிலையில் வரலாற்றுப் பதிவாக அமைந்திருந்தது.

அதிபர், மாணவர்களது ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை உருவாக்கினார். உதாரணமாக தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக அதிகமான பழமொழிகளைத் தேடித் தொகுப்போருக்கு பரிசில்கள் வழங்க முற்பட்டார். தற்போதைய கல்வித்திட்டத்தில் முதன்மைப்படுத்தப்படும் களப்பிரயாணங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டை உட்பட பல்வேறு முக்கிய இடங்களுக்கும் மாணவர்களை அழைத்துச் சென்று உற்சாகப்படுத்தினார்.

உணவும் சுகாதாரமும் என்ற பெயரில் ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்தார். எமது பாரம்பரிய ஓலையான பனை ஓலையில் அழகான முறையில் அழைப்பிதழ் அமைத்து அனைவருக்கும் அனுப்பியமை ஒரு புதுமையான அம்சமாகும். ஆசிரியர்களும், மாணவர்களும் அயராது பாடுபட்டு மிகத்தரமான கண்காட்சியை ஒழுங்கு படுத்தினர். அயற் பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்திரளான மாணவர்களும், மக்களும் வந்து பார்வையிட்டுச் சென்றனர். இக் கண்காட்சியை நடாத்திய அதிபர், ஆசிரியர்களை பெற்றோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவர்களும் பெரிதும் பாராட்டினர்.

இவர் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக (N.P.T.A) இருந்து சிறப்பான பணியினை மேற்கொண்டார். இச்சபை 8ம் தரத்தில் மாணவரது கல்வித் தரத்தை மேம்படுத்தும் முகமாக ஆண்டுதோறும் ஒரு பரீட்சையை நடாத்தி வந்தது.

இவ்வாறு கல்லூரியின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண் டிருந்த திரு.சீனிவாசகம் அவர்கள் நோய்வாய்ப்பட்டமையால் வேலைப்பழு மிக்க அதிபர் கடமைகளைச் செய்ய முடியாத நிலையில் 1946 ஜனவரியில் பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றார்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வை. நாகலிங்கம்
(யூலை 1946 - மார்ச் 1949)



திரு.S.சீனிவாசகம் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் உப அதிபராகக் கடமையாற்றிய திரு.C.K. கந்தசாமி அவர்கள் பதிலதிபராகப் பணியாற்றினார். அவரை நிரந்தர அதிபராக நியமிக்க நிர்வாகம் விரும்பிய போதிலும் அப்பதவியை அவர் விரும்பாத காரணத்தால் புதிய அதிபரை நியமிக்க வேண்டிய நிலையேற்பட்டது.

கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட அதிபர் திரு.வை.நாகலிங்கம் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை இந்தியா கல்கத்தா பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார். ஆங்கில இலக்கியங்களை சிறப்பாக போதித்தமையாலும் ஆங்கிலக் கவிஞர் "சேக்ஸ்பியரின்" இலக்கியங்களில் சிறந்த புலமை கொண்டிருந்தமையாலும் "சேக்ஸ்பியர் நாகலிங்கம்" என எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்களில் ஆங்கில இலக்கியம், வரலாறு என்பவற்றை சிறப்பாகக் கற்பித்துக் கொண்டிருந்த போது அவரின் ஆளுமைத்திறனில் நம்பிக்கை கொண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

பின்பு அவர் 1946ம் ஆண்டு யூலை மாதம் அதிபராகக் கடமையேற்றுக் கொண்டார். சிறந்த நிர்வாகத்திறனாலும், மாணவர்கள் மீது கொண்ட கரிசனையினாலும் மாணவர் வரவு அதிகரித்தது. இதனால் இடநெருக்கடி, தளபாடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர் விளையாட மைதானம் இன்மை போன்ற பல பிரச்சினைகளை அவர் சமாளிக்க வேண்டியிருந்தது. இதன் காரணமாக சமூகத்தினரதும், பழைய மாணவர்களதும் பூரண ஒத்துழைப்பு அவருக்கு நன்றாகவே கிடைத்தது.

இடநெருக்கடியைத் தீர்க்கும்முகமாக செல்லையா மண்டபம் இருந்த பகுதியில் கல்லூரி ஒழுங்கையையும், புகையிரத வீதியையும் இணைக்கும் வகையில் ஒரு நிலம் அமைந்திருந்தது. முன்னாள் அதிபர் திரு.E. செல்லையாவின் உறவினர்களுடன் கலந்துரையாடி நான்கு பரப்புக் காணியை அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்டார். அந்த நிலத்தில் ஐந்து வகுப்பறைகள் சீமெந்து கட்டடமாக அமைக்கப்பட்டாலும் நிலமானது பூசப்படாமல் குருமணல் பரப்பப்பட்டது.

மேலும் தற்போது விளையாட்டு மைதானம் அமைந்துள்ள 43 பரப்பு நிலமானது திரு.V. நாகலிங்கம் அவர்களால் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்குத் தேவையான பெருமளவான நிதியில் ஒரு பகுதியான ரூபா 25000 இந்துக் கல்லூரியின் முகாமைத்துவச் சபையினால் கடனாக வழங்கப்பட்டது. மிகுதிப் பணம் கல்லூரிச் சமூகத்திடமிருந்தும், பழைய மாணவர்களிடமிருந்தும் பெறப்பட்டது. கொழும்பு பழைய மாணவர் சங்கம் வர்த்தகர்களிடமிருந்தும், கலை விழாக்களை நடாத்தியும் பணத்தை சேகரித்து உதவினர். கொக்குவில் இந்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியிலும் நாடகங்கள் நடாத்தியும் பணம் சேகரிக்கப்பட்டது. திரு. V. நாகலிங்கம் அவர்களது அயராத சேவையினால் பெறப்பட்ட மைதானம் என்ற காரணத்தால் நன்றி மறவாத கல்லூரிச் சமூகம் "நாகலிங்கம் மைதானம்" என அழைத்து வந்தனர். அத்துடன் ஐந்து இல்லங்களில் ஒரு இல்லத்திற்கு நாகலிங்கம் இல்லம் என்ற பெயரும் சூட்டப்பட்டது. இசைக்கல்வியை மாணவர்களிடையே பயிற்றுவதற்காக திருமதி.பாக்கியராஜாவை (செல்வி. S.N. சரஸ்வதி) ஏற்பாடு செய்தார்.

இவ்வாறு பல துறைகளிலும் அதாவது பௌதீக வளத்திலும், கல்வித் தரத்திலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதி உன்னத நிலையைப் பெற்றிருந்த படியால் 1948ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தரம் I (Grade I) கல்லூரியாக தரமுயர்த் தப்பட்டது. மிகக் குறுகிய காலத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த பெருமை இவரையே சாரும்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. ச. ஹண்டி பேரின்ப நாயகம்

(1949 - 1960)



அதிபர் .திரு. V.நாகலிங்கம் அவர்களுக்குப் பின்னர் திரு.ச.ஹண்டி பேரின்ப நாயகம் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இவர் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பின்னர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றிய பின் எமது கல்லூரிக்கு அதிபராக அழைக் கப்பட்டார். இவர் மாணவர் உள்ளங்களைக் கவர்ந்த நல்லாசிரியராகவும், நேர்மையான காந்தியவாதியாகவும், முற்போக்குச் சிந்தனையாளராகவும், ஆளுமையும் அர்ப்பணிப்பும் நிறைந்த அதிபராகவும், பல்பரிமாணங்களைக் கொண்டவராகவும் விளங்கினார். இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பதவியை 1949 - 1960 வரை நிறைவாகச் செய்து இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் அதன் பெருமையைத் துலங்கச் செய்தார்.

திரு.ச.பேரின்பநாயகம் அவர்கள் இந்து மதத்திலும் தமிழர் பண்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டவர். எமது பண்பாட்டு விழுமியங்களுடன் நவீன வாழ்வியலுக்கு உகந்ததான கல்வி முறையை ஏற்படுத்துவதற்கு பல திட்டங்களை வகுத்துக் கொண்டார். ஆசிரியர் கூட்டங்களில் தனது கல்வித் திட்டங்களை எடுத்து விளக்கி நடைமுறைப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண் டார். "கல்வியானது மாணவர் மையக் கல்வியாகவும் அத்துடன் தொழிற்கல்வியும் அழகியற் கல்வியும் உள்ளடங்கியதாகவும் இருத்தல் வேண்டும்" என்ற அவரது கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த தொழில்நுட்பப் பாடங்களான உலோக வேலை, மரவேலை, மட்பாண்டவேலை, விவசாயம், தையற்கலை ஆகியனவற்றையும் அழகியற் பாடங்களான சித்திரம், சங்கீதம், நடனம் என்பனவற்றையும் உரிய ஆசிரியர் களை நியமித்து நடைமுறைப்படுத்தினார். அதிபர் அவர்களின் கல்விக்கொள்கை 1972களில் ஏற்பட்ட கல்விச் சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்து கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவரது காலத்தில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததால் இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மாடிக்கட்டடம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற எண்ணம் ஹண்டி அவர்களின் மனதில் உதயமானது.

தேவையான பெருமளவு நிதி திரட்டுவதற்கு "LINGA LIGHTS" எனப்படும் களியாட்ட விழா 1950 மார்ச் 24 - ஏப்ரல் 2ம் திகதி வரை சிறப்புற நடாத்தினார். தென்னிந்தியப் புகழ்பெற்ற கலைவாணர் N.S. கிருஸ்ணன் மதுரம் தம்பதிகளும், தமிழ் நாடகப் புகழ் டி.கே.எஸ் சகோதரர்களும், திரையுலக நடிகர்கள் ரஞ்சன், சூரியகுமாரி அவர்களும் கலந்து சிறப்பான நிகழ்வு களை நடாத்தினர். இதில் கிடைத்த நிதியைக் கொண்டு திரு.V. நாகலிங்கம் அவர்கள் மைதானத்திற்கான காணியைக் கொள்வனவு செய்தமைக்குப் பெறப்பட்ட கடன் மீளளிக் கப்பட்டது. மிகுதிப் பணத்தின் மூலம் மைதானத்திற்கு அருகிலுள்ள மூன்றுமாடிக் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் நிதி திரட்டுவதற்காக மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று கிடைத்த நிதியைக் கொண்டு கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

இவரது காலத்தில் பரிசு தின விழாக்கள், இல்ல மெய்வன்மைப் போட்டிகள், உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வுகள் வருடந்தோறும் நடைபெற்று வந்தன.

அதிபர் கார்த்திகேசு காலத்தில் வெளி வந்த Kokuvil Mirror என்ற கல்லூரிச் சஞ்சிகை பின்னர் Kokuvil Hindu College Magazine என்ற பெயரிலும், ஹன்டி பேரின்ப நாயகம் அவர்கள் காலத்தில் Kokuvil என்ற பெயரிலும் 1950ல் 1வது சஞ்சிகையாக வெளிவந்தது. பின்னர் 1951, 1952, 1956, 1957, 1959 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. இச்சஞ்சிகை யில் மாணவரது தமிழ் ஆங்கிலக் கட்டு ரைகள், கல்லூரி நிகழ்வுகள், இணைப்பாட விதான செயற்பாடுகள், மாணவர் சாதனைகள் என்பன உள்ளடங்கியிருந்தன. கல்லூரி வளர்ச்சிக்கு உதவுவதற்காக பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றை உரு வாக்கினார். 1954 டிசம்பரில் முதலாவது சங்கம் யாப்பு விதிகள் உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் அமைக்கப்பட்டது.

அதேபோல் யாழ்ப்பாணத்திலும் யாப்பு விதிகளுக்கு அமைவாக ஒரு பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது. முன்பு தேவைக்கேற்ப அவ்வப்போது பழைய மாணவர் ஒன்று கூடினரே தவிர ஒரு முறையான சங்கமாக அமைந்திருக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இச் சங்கத்தின் முதலாவது தலைவராக அதிபர் திரு.ஹன்டி பேரின்ப நாயகம் அவர்களும், செயலாளராக ஆசிரியர் M. கந்தசாமி அவர்களும் 1954ம் ஆண்டு தொடக்கம் செயலாற்றத் தொடங்கினர்.

ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் தாய் மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்த அதே வேளையில் ஒன்றுபட்ட இலங்கையில் சிங்கள, தமிழ் மக்கள் இணைந்து வாழ்தல் என்ற இன ஐக்கியக் கொள்கையும் கொண்டவராக விளங்கினார். சிங்களவர் தமிழ் மொழியையும், தமிழர் சிங்கள மொழியையும் கற்றல் வேண்டும் என்ற இன சமத்துவக் கோட்பாடுகளையும் செயற்படுத்த விரும்பினார். அவருக்கு அன்றைய அரசியல் தலைவர்கள் பலர் நட்புடையவர்களாகவும் விளங்கினர். கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஒன்று கூடல் நிகழ்வுகள், உயர்தர மாணவர்கள் இரவு ஒன்றுகூடல் நிகழ்வுகள் என்பவற் றிற்குச் சிங்களத் தலைவர்களை அழைத்து வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வடிப் படையில் சிங்களத் தலைவர்களான N.M. பெரேரா, சேர்.ஜோன்.கொத்தலாவல, பிலிப் குணவர்த்தனா, தகநாயக்கா, Dr.G.P. மலல சேகரா, வில்மட் பெரேரா, J.R. ஜெயவர்த்தனா போன்ற சிங்களத் தலைவர்களை அழைத்து இன ஐக்கியத் திற்காகப் பாடுபட்டவராகக் காணப்பட்டார். 1954ல் இலங்கையின் பிரதமராக சேர்.ஜோன் கொத்தலாவல இங்கு அழைத்து வரப்பட்டபோது இதனை விரும்பாத சில சக்திகள் பாடசாலைக் கட்டடத்தின் ஓலைக் கூரையைத் தீக்கிரையாக்கியமை குறிப் பிடத்தக்கது.

மேலும் கல்லூரியின் பௌதீக வள விருத்திக்கு உதவுவதற்காக 1957ல் கொக்குவில் இந்துக் கல்லூரி "நலன் விரும்பிகள் சபை" ஒன்றை உருவாக்கினார். K.H.C. Well Wishers Association சபையின் தலைவராக இருந்து பல பணிகளை ஆற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக தனது அரசியல் சமூகச் செல்வாக்கு அனைத்தையும் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தி அரிய பல சாதனைகளைப் புரிந்து இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசமெங்கும் புகழ் பரவும் வகை செய்த சேவையானது காலத்தால் அழியாதது மட்டுமன்றி இந்துவின் வரலாற்றில் திரு.ச. ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் காலம் பொற்காலம் எனப் போற்றத் தகுந்ததுமாக அமைந்துள்ளது எனலாம். நன்றி மறவாத கல்லூரிச் சமூகம், அவரது நினைவாக அவரால் ஆரம்பிக் கப்பட்ட மூன்று மாடிக் கட்டடத்திற்கு ஹன்டி பேரின்பநாயகம் என்ற பெயரைச் சூட்டியுள்ளது.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னப்பா கனகரட்ணம் கந்தசுவாமி

(1960 - 1971) (C.K.K)



சி.கே.கே என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் சின்னப்பா கனகரட்ணம் கந்தசாமி அவர்கள் எண்ணம், சொல், செயல் மூன்றையும் உயிர் மூச்சாக கொக்குவில் இந்துவுக்கே அர்ப்பணம் செய்து அதில் மனநிறைவு கண்ட பெருந் தகையாவார். சுமார் முப்பதாண்டுகளாக ஆசிரியராக, உப அதிபராக, பதிலதிபராக இறுதியில் அதிபராக தன்னுடைய வாழ் வோடு கல்லூரியின் வாழ்வையும் இணைத் துக் கொண்டவர்.

இவர் தனது கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றபின் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் கற்று விஞ்ஞானப் பட்டதாரியானார்.

ஆரம்பத்தில் மேலைநாட்டு நடை யுடை பாவனையில் குதிரை வண்டியில் வந்தவர் காலகதியில் வேட்டி சேட்டுடன் கழுத்தைச் சுற்றிய சால்வையுமாக தேசிய உடையில் துவிச்சக்கரவண்டியில் பாட சாலைக்கு வருகிற அளவுக்கு தன்னை சூழலுக்கு ஏற்றவாறு இசைவாக்கிக் கொண்டார்.

1940 இல் சி.கே.கே அவர்களின் வருகை கல்லூரிகளின் விஞ்ஞானத் துறையின் வரலாற்றில் சிறந்த திருப்பு முனையாக அமைந்திருந்தமை யாவராலும் மறுக்க முடியாத அம்சமாகும். இரசாயன வியல், பௌதீகவியல் போன்ற பாடங்களை யாவரும் எளிதில் விளங்கக்கூடிய வகை யில் மிகவும் மென்மையாகவும், இலகு வாகவும் கற்பிப்பதில் வல்லவர். ஆய்வு கூட வசதிகள் இல்லாத அக்காலத்தில் கரும்பலகையில் எழுதி விளக்கி புரிய வைக்கும் மிகவும் சிரமமான கற்பித்தலை மிக இலகுவாகச் செய்து வெற்றி கண்டவர்.

அதிபர் திரு.சீனிவாசகம் அவர்கள் சேவையிலிருந்து இடமாற்றம் பெற்ற போது 1946 பெப்ரவரியிலிருந்து பதி லதிபராகப் பணியாற்றிய வேளை அதிபர் பதவியை ஏற்குமாறு நிர்வாகம் கேட்டுக் கொண்ட போதும் தனக்கு அதிபர் பதவிக்கான முதிர்ச்சிகள் இல்லை எனக்கருதி பதவியை ஏற்க மறுத்ததுடன் தனது ஆசானாக விளங்கிய சேக்ஸ்பியர் நாகலிங்கம் அவர்களை அதிபராக்க தீவிர முயற்சி எடுத்துத் கொண்டார்.

கொக்குவில் இந்துவின் விஞ்ஞானத் துறைக்கு அத்திவாரமிட்டவர் இவரே. இவரது கைவண்ணத்தில் உருவானவையே இரசாயனவியல், பௌதீகவியல், தாவர வியல், உயிரியல் ஆய்வு கூடங்கள். அவை இன்றுவரை பேணப்பட்டு வரு கின்றமை இவரது திறமைக்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இவரது காலத்தில் சாரணியம், வழிகாட்டி ஆகிய இணைப்பாடவிதான செயற்பாடுகள் சிறந்த முறையில் இயங்கின. திரு. சிவசுப்பிரமணியம், திரு. இ. மகேந்திரன் சாரணருக்கும், திருமதி. நித்தியலட்சுமி குணபாலசிங்கம் வழி காட்டிகளுக்கும் பொறுப்பாக இருந்தனர். ஒரே தடவையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தொரு இராணிச் சாரணர்களை இவர் காலத்தில் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவரது காலத்தில் தான் உயர்தர வகுப்புகளில் வணிகத்துறை ஆரம்ப மானது. கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகள் சிறப்பான பெறுபேறுகள் கிடைத்துப் பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றனர். இவரது காலத்தில் தான் ஒரே நிர்வாகத்தின் கீழ் இருந்த ஆரம்பப் பிரிவு தனியான நிர்வாகமாக இயங்க ஆரம்பித்தது. மாணவர்களது ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். உயர் தரங்களைக் கொண்ட கலவன் பாடசாலை ஒன்று இவ்வாறு சிறப்பான ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் இயங்குவது மிகவும் கடினமான விடயமாகும். உப அதிபர், திரு. E. சபாலிங்கம், திரு. A. R. இராஜநாயகம், திருமதி. சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம் ஆகியோர் ஒழுங்கைப் பேண பெரிதும் உதவினர். சமயப் பற்றுடைய C.K.K அவர்கள் மாணவர்களது சைவப் பாரம் பரியத்தை பேணி வளர்க்கப் பாடுபட்டார். சைவப் பிள்ளைகள் பண்ணோடு தேவாரம் பாடவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து பண்ணிசை வித்தகர் திரு. இராசையா அவர்களைக் கொண்டு மாணவர்களுக்கு தேவார வகுப்புக்களை ஆரம்பித்தார். எமது கல்லூரி மாணவர்களை ஆண்டுதோறும் திருக்கேதீஸ்வரத்திற்கு அழைத்துச் சென்றார். யாழ்ப்பாணப் பாடசாலைகளை யும் திருக்கேதீஸ்வரத்துடன் இணைக்க நடவடிக்கை மேற்கொண்டார். அதிபர் அவர்களும் பண்ணோடு தேவாரம் பாட வல்லவர். நல்லூர்க்கந்தன் ஆலயத்திற்கு அடிக்கடி செல்வார். கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் ஆலயத்திற்குப் (புதுக்கோயில்) பல திருப்பணிச் சேவை களை பாடசாலையுடன் இணைந்து மேற்கொண்டுள்ளார்.

இவ்வாறாக C.K.K அவர்கள் அதிபராக விளங்கிய காலத்தில் கொக்குவில் இந்து கல்வி மேம்பாட்டிலும், இணைப்பாட விதான செயற்பாட்டிலும், சமய ஒழுக்க நெறிகளிலும், ஒழுங்கு கட்டுப்பாட்டிலும் சிறந்து விளங்கியதோடு இலங்கையிலுள்ள முதல் தரக் கல்லூரிகளில் 1AB ஒன்றாக மலர்ந்தது. அதிபர் அவர்களும் கல்வி அமைச்சினால் அதி உயர்தர அதிபராக Super Grade Principal ஆக நியமிக்கப் பட்டார். 1970 ஆம் ஆண்டு அதிபர் சேவை யிலிருந்து ஓய்வு பெற்றார். அவரது ஞாப கார்த்த நினைவாக எமது கல்லூரியின் பிரதான வளாகத்தின் கிழக்குப் புறத்தில் அமைக்கப்பட்டுள்ள "C.K.கந்தசாமி கட்டடமும் மேற்குப் புறத்தில் அமைக்கப் பட்டுள்ள படிப்பகமும்" அவரது சேவையை என்றென்றும் நினைவு கூரத்தக்க வகையில் உள்ளது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. C. குணபாலசிங்கம்

பதிலதிபர்

(1971 ஜனவரி - 1971 மே)



C. K. கந்தசாமி அவர்கள் 1970 டிசெம்பரில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து 1971 ஜனவரி தொடக்கம் 1971 மே வரை திரு. குணபாலசிங்கம் பதிலதிபராக பணியாற்றினார்.


திரு. C. குணபாலசிங்கம் அவர்கள் 1954 ஆம் ஆண்டு கலைப்பட்டதாரியாக கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் குழுவில் இணைந்துகொண்டார். பின்னர் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தை யும் பெற்றிருந்தார். இவர் உயர்தர கலைத் துறை வகுப்புகளில் புவியியல், அரசியல் ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்த துடன் கல்லூரியின் ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்த மூத்த ஆசிரியராவார். திரு. C.K கந்தசாமி அவர்கள் சேவையிலிருந்து இளைப்பாறிய போது பிரதி அதிபராக 1970ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.C.குணபாலசிங்கம் பதில் அதிபராகக் கடமையேற்று ஐந்து மாதங்கள் சிறப்புற பணியாற்றினார். பின்னர் திரு.C.குணபால சிங்கம் அவர்கள் 1974ம் ஆண்டு வேலணை மத்திய கல்லூரிக்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. P. S. குமாரசுவாமி

(1971 ஜூன் - 1972 மே)



திரு. P. S. குமாரசுவாமி அவர்கள் திரு. C.K. கந்தசாமி அவர்களின் பின் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவியை பதிலதிபர் திரு. C. குணபாலசிங்கம் அவர்களிடமிருந்து 1971 ஆம் ஆண்டு யூன் மாதம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய பின்னர் கொக்குவில் இந்துவின் அதிபராக ஓர் ஆண்டு மட்டும் பணியாற்றினார். இவர் கொக்குவில் இந்துவின் பாரம்பரிய மரபுகளைப் பேணி வந்ததுடன் பிரதான வளாகத்தின் கிழக்குப் புறத்திலுள்ள கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஆரம்பித்தார். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் உதவிகளையும் நாடினார். சிறந்த தலைமைத்துவமும் நிர்வாகத் திறமையும் கொண்ட இவர் 1972 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் மகாஜனாக் கல்லூரியின் அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. மாணிக்கவாசகர் மகாதேவா

(1972 ஜூன் - 1980 ஜனவரி)



திரு. மா. மகாதேவா அவர்கள் கொக்குவில் இந்துவின் மாணவனாகவும், ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய பெருமைக்குரியவராவார். இவர் கல்லூரியின் ஆரம்பகாலத்திலிருந்து கல்லூரியை வளர்க்க அரும் பாடுபட்ட குடும்பப் பின்னணியைக் கொண்டவர். இவரது பேரன் சபாரத்தின முதலியார் (சபாரட்ணம் இல்லம்) அவர்கள் கல்லூரியை ஸ்தாபித்த வர்களில் ஒருவர் ஆவார்.

இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் பெற்றார். 1942 இலங்கைச் சர்வகலாசாலையில் பட்டக்கல்வியை மேற்கொண்டு 1945 இல் பட்டதாரியாக வெளியேறினார். சில காலம் கொக்குவில் இந்துவின் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1946 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்களில் சரித்திரம் கற்பிப்பதற்கான நியமனம் பெற்றார். பின்னர் 1972 ஆம் ஆண்டு யூன் மாதம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபர் பதவி வெற்றிடமாக இருந்த வேளையில் நிர்வாகத்தினால் அதிபர் பதவியை ஏற்குமாறு அழைக்கப்பட்டார். தனது சொந்த ஊரில் தான் கற்ற பாடசாலையில் அதிபராகப் பணியாற்றச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வு அடைந்தார். மனநிறைவோடு 1980 ஆம் ஆண்டு வரை அப்பதவியைச் சிறப்பாக ஆற்றினார்.

இவரது காலத்தில் கல்வித்துறைகளிலும், விளையாட்டுத் துறைகளிலும் மாணவர்கள் சாதனை படைத்தனர். மாணவர் நலன்கருதிக் கூட்டுறவுப் புத்தகசாலையும் உருவாக்கப் பட்டது. இவரது முயற்சியால் பிரதான வளாகத்தின் கிழக்குப் பக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டு பூர்த்தி செய்யப்படாதிருந்த இருமாடிக் கட்டிடம் நிறைவு பெற்றது. மேல் மாடியில் அழகான வசதியான நூலகமும் அமைக்கப்பட்டது. அதிபர் இதற்கான நிதி வளங்களைப் பாடசாலைச் சமூகம், பழைய மாணவர் சங்கம், பெற்றார், ஆசிரியர் சங்கம் போன்றோர்களிடமிருந்து பெற்று இதனை நிறைவேற்றினார்.

கல்லூரியின் படிமுறை வரலாற்றில் இவரது காலம் பல முன்னேற்றகரமான அம்சங் களைக் கொண்டிருந்தமை சிறப்பம்சமாகும். இவரது ஞாபகார்த்தமாக பிரதான வளாகத்தின் தெற்குப் புறமாக அமைந்த ஞாபகார்த்த கட்டடத்திற்கு "மகாதேவா கட்டடம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அப்பாத்துரை பஞ்சலிங்கம்

(1980 ஜனவரி - 1991 மார்ச்)



கொக்குவில் இந்துவின் அதிபர் வரலாற்றில் திரு வாளர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர் களின் வகிபாகம் மிகக் காத்திரமானது. கொக்குவில் இந்துவின் பெருமைக்குரிய மாணவனாக, மாணவர் மனங்கவர்ந்த நல்லாசிரியனாக, சக ஆசிரியர்களைப் பேணி மதித்த நண் பனாக, உப அதிபராக, அதிபராக இன்றளவும் கல்லூரி அன்னையின் வளர்ச்சியே தன் உயிர் மூச்சு எனச் செயற்படும் பழைய மாணவர் சங்கத் தலைவராக, பல்கோணங்களில் தன்னை அர்ப்பணித்த பேறு பெற்றவராக விளங்குகிறார்.

கொக்குவில் மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆரம்ப இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்று நன் மாணாக்கராகத் திகழ்ந்தார். உயர் தரக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியில் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகம் சென்றார். 1958 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறினார். அதே ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராக தன்னை இணைத்துக்கொண்டார்.

தனது நுட்பமான கற்பித்தல் முறைமை யால் இரசாயனவியல் பாடத்தைச் சிறப்புறக் கற்பித்து மாணவர் மட்டத்தில் நல்லாசானாக இடம் பெற்றார். 1972 ஆம் ஆண்டில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்து, பின்னர் கொக்குவில் இந்துவில் மீண்டும் ஆசிரியராக இணைந்து கொண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம், உயர் தரங்களில் விஞ்ஞான, இரசாயன வியல் பாடங்களைக் கற்பித்து பெறுபேறு கள் மிக உயர்நிலையடைய அர்ப்பணிப் புடன் சேவையாற்றினார். அவரது கற்பித்தற் பணியும், ஏனைய நிர்வாக ஒத்துழைப்பும் பாடசாலை வளர்ச்சியில் காட்டிய அக்கறையும் முதலாம்தர விசேட ஆசிரியர் பதவியை அவருக்குக் கொடுத்தது. அவரது அயராத சேவையினால் 1980 ஜனவரியில் கொக்குவில் இந்துவின் அதிபர் என்ற பதவி அவருக்குக் கிடைத்தது. 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அதிபர் பதவியை மிகச் சிறப்பாக ஆற்றி கல்லூரியின் வரலாற்றில் முக்கிய பதிவுகளை இட்டுச்சென்றார்.

1982 இல் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் தரம் III இல் உள்வாங்கப்பட்டார். 1985 இல் சுவீடன் சர்வதேச உதவி நிதியம் அளித்த புலமைப்பரிசிலையும் பெற்று புதுடில்லி சென்று "கல்வித் திட்டமிடலும் முகாமைத்துவமும்" தொடர்பான டிப்ளோமா பயிற்சியைப் பெற்றுக்கொண்டார். பின்னர் அக்காலத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தரத்தினை உயர்த்துவதற்கு க.பொ.த (சா/த) சித்தியடைந்தவுடன் உயர்தரக் கல்வியைப் பெற மாணவர்கள் வேறு கல்லூரிக்குச் செல்லும் மரபு ஒன்று நிலவியது. இந்நிலமையைத் தடுத்து நிறுத்தவும் மாணவர் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். வறிய திறமையான மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதியம் ஒன்றை உருவாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுதோறும் பரிசளிப்பு விழாக்களை நடாத்தி அதில் உயர்கல்வி பெறுபவர் களுக்கு பலமைப் பரிசில் வழங்கும் நடவடிக்கை மாணவர்களுக்குப் பெரும் சேவையாக அமைந்தது. இவரது காலத்தில் மாணவர்களது எண்ணிக்கை 1897 ஆக உயர்ந்தது. தேசிய மட்டத்தில் உயர்தரப் பெறுபேறுகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி 5ம் இடத்தைப் பெற்றுச் சாதனை நிலைநாட்டியது. பௌதீக வளத்தைப் பொறுத்தவரை 1985 ஆம் ஆண்டில் தற்போதைய மைதானத்தின் தெற்குப் புறத்தில் அமைந்துள்ள மாடிக்கட்டடத் தொகுதியை உருவாக்கினார்.

இவை மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் கல்லூரி முன்னேற்றம் கண்டது. பெண்களுக்கான "பான்ட்" இசைக்குழுவை அமைத்து மாணவர் களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார். விளையாட்டுத்துறையை விருத்தி செய்ய தேவையான செயற்பாடு களை மேற்கொண்டு உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய துறைகளில் மாணவர்கள் பல சாதனை புரிய நடவடிக்கை எடுத்தார். விளை யாட்டுப் பயிற்சிகள் நடைபெறும் போது மாணவர்களுடனிருந்து ஊக்குவித்தும் வந்தார். "பேசுவதை விட செயலாற்றுவதே சிறந்தது" என்பது அவரது கொள்கை. எச்செயலையும் அவசரப்பட்டுச் செய்ய மாட்டார். இவரது குணப்பண்புகள் இவரது நிர்வாகச் செயற்பாடுகள் வெற்றி பெறக் காரணமாக அமைந்திருந்தது எனலாம்.

இவரது காலத்தில் முன்னாள் உப அதிபர் திருமதி. S. சுப்பிரமணியம் அவர்கள் இவரைப் பற்றிக் கூறும்போது "பல்வேறு பிரச்சினைகளோடு புயலாக அலுவலகத்தினுள்ளே நுழைபவர்கள் தென்றலாகத் தெளிந்த மனத்துடன் வருவதைக் காணலாம்" என்கிறார். இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையில் தங்கியிருந்த வேளையில் முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவு மோசமான பாதிப்பை இக்கல்லூரி சந்தித்தது. இங்கு அகதிகளாகத் தங்கியிருந்த மக்கள் பலர் கொல்லப்பட்டதுடன் கட்டிடங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகின. மீளக் கட்டியெழுப்பும் பணியைத் துரிதமாக மேற்கொண்டார். கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் சீரடையச் செய்தார். இதற்கு கல்லூரிச் சமூகமும், பழைய மாணவர்களும் பெரிதும் உதவினர்.


றோட்டரிக் கழகத்தின் இளைஞர் அமைப்பான "இன்ரறக்" கழகத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியில் உருவாக்கி மாணவர்களின் ஆளுமை விருத்தியையும், தலைமைத்துவப் பயிற்சியையும் வழங்க பல சேவைகளைச் செய்தார். கல்லூரிக்கு இவர் ஆற்றிய சேவையை நினைவு கூரும் முகமாக "பஞ்சவிங்கம் கேட்போர் கூடம்" அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாளர் இராஜதுங்கம் மகேந்திரன்

(1991 ஏப்ரல் - 1996 ஜனவரி)



கொக்குவில் இந்துவின் அதிபர் களில் பல்துறை ஆற்றல்மிக்க அதி பராக திருவாளர் இ. மகேந்திரன் அவர்கள் விளங்குகின்றார். இவர் சிறந்த பேச்சாளராக, நல்ல எழுத்தாளராக, சாரணராக, விளை யாட்டு வீரராக, விளையாட்டு பயிற்று விப்பாளராக, திறமை மிக்க ஆசிரியராக, பொறுப்பு வாய்ந்த உப அதிபராக, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாள ராக பல்வேறு துறைகளில் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். கொக்குவில் இந்துக் கல்லூரி இன்று இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் மிக உயர்வான நிலையை அடைந்திருப்பதற்கு அதிபர் திரு. இ. மகேந்திரன் அவர்களின் பங்களிப்பும் மிகவும் காத்திரமானது.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ் இந்து தமிழ் பாடசாலையிலும் இடைநிலை, உயர் நிலைக் கல்வியை யாழ் இந்துவிலும் பல்கலைக்கழக அனுமதிக்காக யாழ்ப் பாணக் கல்லூரியிலும் கல்வி கற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டத்தையும் (B.A), பட்டப்பின் கல்வியை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக் கொண்டார். 09.10.1960 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தன்னை ஆசிரியராக இணைத்துக் கொண்டார். இவர் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் தமிழ், வரலாறு, அரசியல், பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்பித்து பெருந்தொகையான மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமைக்குரியவர் ஆவார். நல்ல ஆசிரியராக மட்டுமன்றி, கல்லூரியின் ஒழுக்கமும் பண்பாடும் உயர் நிலையில் வைத்திருப்பதில் கண்டிப்பான கொள்கை யையும் கடைப்பிடித்தார்.

இவர் சாரணியத்துறைக்குப் பொறுப்பா சிரியராக விளங்கிய காலத்தில் சாரணியம் மிக உயர்வான நிலையில் விளங்கியது. பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற சாரணர் ஒன்று கூடலில் பங்கு பற்றியதுடன் நிகழ்வு ஒன்றுக்குத் தலைமை தாங்கும் பெருமையும் அவர் பெற்றுக்கொண்டார். ஒரே நேரத்தில் 21 இராணிச் சாரணர் விருது பெற்ற மாணவர்களை உருவாக்கிச் சாதனை புரிந்தார்.

திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களைத் தொடர்ந்து 02.05.1991 தொடக்கம் அதிபர் பதவியை ஏற்று பணியாற்றினார். இவர் காலத்தில் கல்லூரி பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்றது. இவர் கல்லூரியின் மைதானத்திற்கு வடக்கே அமைந்துள்ள காணியைப் புனருத்தாரணம் செய்து விவசாயக் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தப் பாடுபட்டார். அத்துடன் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற துறைகளில் பல்வேறு சாதனைகளைப் புரிய வழிகாட்டினார். இவருடைய காலத்தில் ஆண்களுக்கான "பான்ட்" இசைக்குழு அமைக்கப்பட்டு யாழ் மாவட்டத்திலேயே சிறந்த இசைக்குழுவாக விளங்க அரும்பாடுபட்டார்.

1991 இல் ஆங்கில மன்றம் (English Union) உருவாக்கப்பட்டு 1993ல் "Breeze"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. அத்துடன் இவரது காலத்தில் நாவலர், பாரதி ஆகிய தமிழ் மன்றங்கள் உருவாக்கப்பட்டு மாணவர்களின் திறன்கள் வெளிக்கொணரப்பட்டன. இவை மட்டுமன்றி வணிக மன்றத்தால் வணிகச்சுடரும், விஞ்ஞான மன்றத்தால் சாரதி என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டதுடன் இவை தற்போது தொடர்ந்து வெளியிடப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவரது காலப்பகுதியில் அதாவது 1993ல் பாட ரீதியான முறையில் கல்விக் கணிகாட்சி நடைபெற்றதுடன் அயற் பாடசாலை மாணவர்கள் உட்பட பெருந்தொகையான மாணவர்களும், மக்களும் வந்து பார்வையிட்டுச் சென்றனர். இக்கல்விக் கண்காட்சியை நடாத்திய அதிபர் ஆசிரியர்களை கல்விச் சமூகம் பாராட்டிக் கௌரவித்தது. சைவ சமய வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார். சைவ பரிபாலன சபைத் தலைவராக பல காலம் பணியாற்றியதுடன் இந்து சாதன பத்திரிகை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் சுடர் எனும் சஞ்சிகையின் பொறுப்பாளராக இருந்ததுடன் சிறந்த இலக்கியவாதியாகவும் விளங்கியமையால் சுடர் மகேந்திரன் என்று யாவராலும் அழைக்கப்பட்டார்.

இவருக்கு 1995ல் முதலாம் தர அதிபர் தரம் கிடைத்தது. 1996 ஜனவரியில் யாழ் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். இவரது சேவையின் நினைவாக தெற்கு வளாகத்தின் கிழக்குப் புறத்தில் கட்டப்பட்டுள்ள "மகேந்திரன் கட்டடம்" அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தம்பு கணேசபிள்ளை

பதிலதிபர்

(1996 ஜனவரி - 1996 செப்ரெம்பர்)



மிகவும் இடர் நிறைந்த கால கட்டத்தில் கொக்கு வில் இந்துவின் தலைமைப் பொறுப்பை ஏற்று மிகத் திறம்பட நடாத்திய திரு. த. கணேசபிள்ளை அவர்கள் யாவ ராலும் மதிக்கப்படுகின்றார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை கொக்குவில் மேற்கு சி.சி. தமிழ்க்கலவன் பாடசாலையிலும். இடைநிலைக்கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட ஆசிரியராக பணிபுரிந்தார்.

தமிழ்மொழி மீதுள்ள பற்றின் காரண மாகப் பண்டிதர் பரீட்சையில் சித்திய டைந்ததுடன் வெளிவாரி மாணவனாக கலைத்துறையில் B.A பட்டத்தையும் பெற்றுக்கொண்டு கொக்குவில் இந்துவில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் நல்லாசிரியர் என்ற பெயரை மாணவர்களிடையே பெற்றுக் கொண்டவர். இந்துமன்ற நிகழ்வுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தார்.

குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை காரணமாக கல்லூரியின் சீரழிவைக் கண்டு அதனை மீண்டும் கட்டியெழுப்புவதில் அயராது பாடுபட்டார். 1995 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டு மக்கள் இடம்பெயர்ந்த போது பிரதி அதிபராக இருந்த திரு. த. கணேசபிள்ளை அவர்கள் சாவகச்சேரியில் தற்காலிகமாகக் கல்லூரி இயங்கிய போது அதன் நடவடிக்கைகள் சீர்குலையாமல் பாதுகாத்தார். அவரது ஆசிரியப்பணி, பிரதி அதிபர் பணி என்பன போற்று தற்குரியன. யாழ்ப்பாணத்தில் எமது கல்லூரி 1996இல் இயங்கிய போது மீண்டும் பதிலதிபராக இவர் ஆற்றிய பணிகள் மறக்கப்பட முடியாதவை என்பதில் ஐயமில்லை.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பொன்னுத்துரை கமலநாதன்

(1996 செப்ரெம்பர் - 2007 மே)



வரலாற்றுப் பெருமை மிக்க கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் வரிசையில் அடுத்து வருபவர் திரு.பொ.கமலநாதன் ஆவார். தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து இடைநிலைக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நிறைவு செய்தார். இவர் 1965 முதல் 1968 வரை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் வர்த்தக தகைமைகாண் பயிற்சி நெறியைக் கற்றுத் தேறியதனைத் தொடர்ந்து 1969 முதல் 1971 வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச் சேவையில் பணியாற்றினார். பின்னர் 1972/1973 காலப் பகுதியில் ஆசிரியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வர்த்தக ஆசிரியராக பயிற்சியை நிறைவேற்றிக் கொண்ட இவர் 1974 ஜனவரி முதல் களுத்துறை ஷாஹிரா கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியர் பணியை ஆரம்பித்துக் கொண்டார்.

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பினை மேற்கொண்டு 1979இல் வணிகமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 1981 யூன் முதல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றுக் கொண்ட இவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1990ம் ஆண்டில் பெற்றுக்கொண்டார். 1991ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய இவர் தமிழ்மொழி மூல பரீட்சார்த்திகளுக்குள் யாழ். மாவட்டத்தில் முதல் நிலையிலும், தேசிய மட்டத்தில் இரண்டாவது நிலையிலுமான புள்ளிகளைப் பெற்று இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு தெரிவாகியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதனடிப்படையில் 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தான் ஆசிரியராகப் பணியாற்றிய யூனியன் கல்லூரியில் பிரதி அதிபராகவும், 1994 மார்ச் மாதம் முதல் அதிபராகவும் கடமையைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்தினார். இவர் 1996 செப்ரெம்பர் முதல் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அதிபர் கடமையைப் பொறுப்பேற்றிருந்தார். இக்கல்லூரியில் இவர் கடந்த ஒரு தசாப் தத்திற்கும் மேலாக கடமையாற்றியதுடன் ஒரு நீண்டகால இடைவெளியின் பின் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இளைப்பாறும் வரை பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரி இவரது காலத்தில் என்றுமில்லாத வாறு பல பௌதீக வளங்களைப் பெற்றுக் கொண்டது. குறிப்பாக கல்லூரிக்கென காணிகள் பழைய மாணவர் சங்கத்தினால் கொள்வனவு செய்து சேர்க்கப்பட்டமை, மாணிக்கம் பாக்கியம் தம்பதிகள் ஞாபகார்த்தமான மூன்று மாடிக் கட்டடம், பஞ்சலிங்கம் கேட்போர் கூடம், C.K. கந்தசாமி ஞாபகார்த்த படிப்பக மண்டபம் அமைந்திருக்கும் மூன்று மாடிக் கட்டடம், பாடசாலையின் தென்பகுதியில் அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் புற மேல்மாடிக் கட்டடம், திரு. சின்னத்தம்பியின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் ஆகியவை கட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். இவருடைய காலத்தில் மாணவர்கள் விளையாட்டுத் துறையிலும், தமிழ்மொழி, கலைத்திறன் போட்டிகளிலும், தேசிய மட்டம் வரை பங்குபற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இவருடைய காலத்தில் கூடைப்பந் தாட்டத்திடல் ஒன்று அமைக்கப்பட்ட தனைத் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியில் கூடைப்பந்தாட்டம் அறிமுக மானது. இவ்விளையாட்டில் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் விளையாடி வந்தனர். மிகக் குறுகிய காலத்தில் ஆண் கள் அணி மாகாண மட்டம் வரையிலும், பெண்கள் அணி தேசிய மட்டம் வரையிலும் போட்டிகளில் பங்குபற்றியதன் மூலம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தன.

இவர் தனது அதிபர் பதவியை வகித்து வந்த காலத்தில் பொதுப் பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார். குறிப்பாக யாழ் மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தின் தலைவராகவும், யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் செயலாளராகவும், நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் அதிபர் சங்கத் தலை வராகவும் செயற்பட்டதுடன் சமூகப் பணியாக விழிப்புல வலுவிழந்தோர் இல்லமான வாழ்வகத்தின் பொருளாள ராகவும் பணியாற்றி வந்துள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் அழைப்பின் பேரில் இவர் 2005ம் ஆண்டு லண்டன் பயணமாகியிருந்தார். அங்கு பழைய மாணவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கலை விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போது இவரது உரை தொனிப் பொருளாக கல்லூரிக்கென சகல வசதி களையும் கொண்ட படிப்பகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுதலை உள்ளடக்கியிருந்தது. இவர் லண்டனில் தங்கியிருந்த ஒரு மாத காலத்தில் அமரர் C.K. கந்தசாமி ஞாபகார்த்தமாக படிப்பகக் கட்டடம் அமைப்பதற்கான நிதியினை லண்டன் வாழ் பழைய மாணவர் சங்கத்தி டமிருந்து திரட்டிக்கொள்வதற்கு உதவி யாயிருந்தார். இந்நிதியினைக் கொண்டு படிப்பகத்திற்கான கட்டட வேலைகள் நிறைவு செய்யப்பட்டதுடன் தற்போது இதற்கான தளபாடங்கள், உபகரணங்கள், கணனிகள், நூல்கள் என்பன பெறப்பட்டு மாணவர்கள் தமது கற்றற் செயற் பாட்டினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

"பௌதீக வளங்களின் பொற்காலம்" எனக் குறிப்பிடும் இவரது சேவையை நினைவுகூருமுகமாக கல்லூரியின் வடக்கு வளாகத்தின் மேற்குப் புறத்தில் "கமலநாதன் கட்டடம்" அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

❖ ❖ ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சுப்பையா வேலாயுதம் மகேந்திரன்
பதிலதிபர்
(2007 மே - 2007 செப்)



திரு. பொ. கமலநாதன் 2007 மே மாதம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து S.V.M என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட திரு. வேலாயுதம் மகேந்திரன் அவர்கள் 2007 செப்டெம்பர் வரை பதிலதிபராக கொக்குவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றினார்.

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக்கல்வியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் அமைதியான சுபாவம் கொண்டவராகவும், ஆழ்ந்த கணித அறிவு உடையவராகவும், விளங்கினார். இவர் 1978 இல் கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து 1982/1983 காலப் பகுதியில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கணித ஆசிரியராக பயிற்சியை நிறைவேற்றிக் கொண்ட இவர் 1984 ஜனவரி முதல் மட்டக்களப்பு கதிரவெளி தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தன்னை ஒரு வெளிவாரிப் பட்டதாரியாக இணைத்து 1983 இல் B.Sc. பட்டப்படிப்பை நிறைவு செய்தார். பின்னர் 1985 இல் மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். இவர் 1987.07.01 இல் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கணிதப் பட்டதாரி ஆசிரியராக இணைந்து கொண்டு கணிதப்பிரிவில் தூயகணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களை சிறப்பாக கற்பித்ததுடன் ஏனைய நிர்வாகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார்.

இக்கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியைப் பயின்று உயர் தொழிற் தகைமையைப் பெற்றார்.

கணித பாட இணைப்பாளராகவும், பகுதித் தலைவராகவும், பரீட்சைப் பகுதிக்குப் பொறுப்பானவராகவும், பிரதி அதிபராகவும் பல்வேறு பதவிகளைப் பெற்றவராக விளங்கினார். பதிலதிபராக கடமையாற்றிய போது உள்ளகத் தொடர்பாடல் (Inter Com) வசதியை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவர்களுக்கு கணனி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டு கணனிக் கல்வி பயில அச்சாணியாக விளங்கினார். இவர் தற்போது உதவிக் கல்விப் பணிப்பாளராக (கணிதம்) பதவியுயர்வு பெற்று யாழ். கல்வி வலயத்தில் பணியாற்றி வருகிறார். அவரது பணி தொடர இறைவன் அருள் புரிவாராக.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அருணாசலம் அகிலதாஸ்

(2007 செப் - இன்று வரை)



நூற்றாண்டு விழாவினைக் காண விளையும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களின் வரிசையில் தற்போதைய அதிபர் திரு.அ. அகிலதாஸ் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்.

தென்மராட்சிக் கிராமம் மிருசுவிலில் பிறந்த இவர் தமது ஆரம்பக் கல்வியை யா/ஒட்டுவெளி அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் பெற்றதோடு நின்றுவிடாது உயர்கல்வியுடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகலைமாணி பட்டங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார்.

இவர் தமது ஆசிரியப் பணியை பு/கற்பிட்டி அல் ஆக்ஷா தேசிய பாடசாலை, பு/காரைதீவு மகா வித்தியாலயம், யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலும் ஆற்றியதோடு தாம் கல்வி பெற்ற யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபராகவும் பணி புரிந்தார். தமது அதிபர் பதவியை யா/கச்சாய் தமிழ்க் கலவன் பாடசாலையில் பொறுப்பேற்ற இவர் யா/ கோப்பாய் மகாவித்தியாலயத்திலும், யா/ கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியிலும் பணியை செவ்வனே ஆற்றி தொடர்ந்து 2007ம் ஆண்டு புரட்டாதி 14ம் திகதி தொடக்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக இணைந்து கொண்டார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாரம்பரியத்தையும், விழுமியங்களையும் பாதுகாப்பதில் பழைய அதிபர்களுக்கு தானும் சளைத்தவரல்ல என்பதை வெளிப் படுத்தும் வகையில் இவரது பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவரது காலப்பகுதியில் அதிபர் அலுவலகம் கல்வி நிர்வாக, முகாமைத் துவச் செயற்பாடுகளுக்கேற்ப புனரமைக்கப் பட்டு அதனுடன் இணைந்ததாக கலந்துரை யாடல் அறையும் (Conference Room) புதி தாக அமைக்கப்பட்டது. இத்துடன் கல்லூரி யின் கற்றல் - கற்பித்தல் நிர்வாகச் செயற் பாட்டை வினைத்திறனுடையதாக மாற்றி யமைக்க புதியதாக உள்ளகத் தொடர்பாடல் (Intercom) முறையும் இணைக்கப்பட்டு வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப் படுகின்றது.

கணனி மற்றும் ஆங்கிலக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்காக அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களின் காலத்தில் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட சி.கே.கந்தசுவாமி படிப்பகம் (Learning Centre) இவரது காலத்தில் 22.01.2008 இல் திறந்து வைக்கப்பட்டது. கற்றல் செயற் பாட்டை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் இரசாயனவியல் (Chemistry Lab) பௌதீகவியல் (Physics Lab) ஆய்வு கூடங்கள் கணனி மயப்படுத்தப்பட்டன. கல்லூரியின் தென்பகுதி மாணவர்களின் கணனிக் கற்றலுக்காக என தனியான கணனி ஆய்வுகூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் ஒரு குறிப்பிடத்தக்க செயற்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியின் பிரதான அலுவலக நுழைவாயில் கல்லூரியின் பழைய மாணவியும், பிரபல சட்டத்தரணியுமான செல்வி. எஸ். ஞானலோஜினி அவர்களினால் அவரது தந்தை வைத்திய கலாநிதி சிவஞானம் அவர்களது ஞாபகார்த்தமாக புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. நுழைவாயிலின் மேற்புறமாக பொறிக்கப்பட்டிருக்கும் ரிஷபங்கள், சங்கு, சக்கரம், மகுட வாக்கியம், சேது நாணயம் என்பவை கொக்குவில் இந்து அன்னையின் நூற்றாண்டு கடந்த இந்து தமிழ் பண்பாட்டையும் கல்லூரியின் பாரம்பரியத்தையும் கட்டியம் கூறுவனவாக அமைந்துள்ளன. மேலும் கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கான நுழைவாயில் முன்னை நாள் ஆசிரியரான திருமதி. முத்தம்மா தம்பாப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்த மாக அவரது பேரப்பிள்ளை திருமதி. யசோதா ஜெயபாலதேவன் அவர்களினால் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

இவரது காலத்தில் கல்லூரியின் சகல கட்டிடங்களும் திருத்தப்பட்டு வர்ணம் பூசப்பட்டு புதுப் பொலிவுடன் மிளிர் கின்றன. நூற்றாண்டு விழாச் சபையின் மூலம் கூடைப்பந்தாட்ட பார்வையாளர் அரங்கு அமைக்கப்பட்டது. வெளிநாட்டு பழைய மாணவர் சங்கங்களின் பேருதவி யினால் கல்லூரியின் விளையாட்டு மைதானம் விரிவுபடுத்தப்பட்டது. ஜேர்மன் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவி மூலம் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்திற்குத் தேவையான ஆசனங்கள் பெறப்பட்டுள்ளன. திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களால் பாக்கியம் சுப்பிரமணியம் மண்டபத்திற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

கல்லூரியின் விளையாட்டு மைதானத் தின் கிழக்குப் பகுதியில் 10 மில்லியன் ரூபா செலவில் திரு.மாணிக்கம் சுப்பிர மணியம் அவர்களால் பார்வையாளர் அரங்கு (Pavilion) திறந்தவெளி அரங்கு அமைக்கப்பட்டுவருவது நூற்றாண்டு காணும் கல்லூரியின் சிறப்பாகும்.

ஆசிரியர், மாணவர் நலன் கருதி கல்லூரியின் வடக்கு, தெற்கு பகுதிகளில் சிற்றுண்டிச்சாலைகள் விரிவுபடுத்தப்பட்ட தோடு நவீன மயப்படுத்தப்பட்டும் உள்ளன.

இவற்றை விட குறிப்பிடத்தக்க மற்றுமொரு அம்சம் கல்லூரிக் கீதம் இறுவெட்டில் இசையமைக்கப்பட்டு கல்லூரியின் ஆரம்பத்திலும், நிறைவிலும் தினந்தோறும் இசைக்கப்பட்டு வருகின்றது.

2008ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெறும் மாணவர்களை கல்லூரியில் இணைத்துக் கொள்ளும் நோக்குடன் வருடந்தோறும் பத்து மாணவர்களுக்கு கனடா பழைய மாணவர் சங்க உதவியுடன் ஊக்குவிப்புக்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு தொடக்கம் ஜேர்மனி யில் வதியும் திரு.வே.குணசேகரம் தமது தந்தையார் திரு.வேலாயுதம் அவர்களின் ஞாபகார்த்தமாக தரம் 6இல் கல்வி கற்கும் 10 வறிய மாணவர்களுக்கு ஊக்குவிப் புக்கள் வழங்கி கற்றலை மேம்படுத்த உதவி வருவதும் குறிப்பிடத்தக்கது.

2008இல் ஆண் பிள்ளைகளும் கழுத்துப்பட்டி அணியும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் மரபுவழி ஆற்றுகைக் கழகம் அமைக்கப்பட்டு பாரம்பரியக் கலைகளை வளர்த்தெடுக்கும் பணியும் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

விளையாட்டுத்துறையை பொறுத்த மட்டில் முதன் முதலாக 2008 இல் எமது கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் இணைந்து "இந்துக்களின் போர்" எனும் துடுப்பாட்டப் போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனுடன் இணைந்து கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திரு.E.சபாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 ஓவர் கொண்ட ஒரு நாள் துடுப்பாட்டப் போட்டியும் இரு கல்லூரிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களிடையே நல்லுறவைப் பேணும் நோக்குடன் 'T20' போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

பாடசாலைகளுக்கிடையேயான மாகாண மட்டப் போட்டிகளில் நீண்ட காலங்களின் பின்னர் அதிக இடங்களை கல்லூரி பெற்றுக்கொண்டமையும் குறிப் பிடத்தக்கது.

கல்லூரியின் பல்துறைசார் செயற்பாடு களிலும் அதிபரின் பங்கும், பணியும் பாராட் டத்தக்க வகையில் சென்றுகொண்டிருப்பதைக் குறிப்பிடும் அதேவேளை இவரது பணிகள் தொடர்ந்தும் மேன்மையுடன் விளங்கட்டும்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. பொ. த. சா / த பெறுபேற்று விபரம் 2000 - 2009

இல	பாடம்	2000		2001		2002		2003		2004		2005		.2006		2007		2008		2009	
		மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %
1	இந்து சமயம்	166	98	147	99	173	100	192	100	199	98	240	99	203	100	202	100	209	100	221	96
2	R.C	-	-	2	100	1	100	1	100	-				1	100	2	50	1	100	-	-
3	N.R.C	-	-	-	-	1	0	1	100	-		2	100	1	100			1	100	3	100
4	தமிழ்	166	97	149	95	175	95	195	98	201	94	247	97	205	99	204	98	211	99	224	99
5	ஆங்கிலம்	166	45	149	31	175	38	241	46	244	55	254	59	205	64	204	70	211	47	224	70
6	விஞ்ஞானம்	166	86	149	85	175	83	205	83	200	73	242	73	205	84	204	87	211	82	201	85
7	விஞ்ஞானம் - ஆங்கி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	23	96
8	கணிதம்	166	74	149	88	175	83	204	82	205	78	242	81	205	90	204	90	211	92	201	92
9	கணிதம் - ஆங்கி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	23	100
10	சமூகக்கல்வி	166	93	149	95	175	94	294	93	199	86	241	91	205	98	204	98	-	-	-	-
11	சித்திரம்	81	38	59	29	86	51	95	39	62	37	111	73	82	89	81	60	21	100	29	100
12	சங்கீதம்	57	88	68	90	64	94	80	68	66	92	91	73	88	98	86	80	19	100	30	100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. பொ. த. சா / த பெறுபேற்று விபரம் 2000 - 2009


இல	பாடம்	2000		2001		2002		2003		2004		2005		2006		2007		2008		2009	
		மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %
13	நடனம்	21	90	13	100	25	96	22	100	33	91	33	85	35	100	37	95	9	100	15	93
14	ஆங்கில இலக்கி	-	-	6	50	18	22	12	67	5	40	12	8	11	64	13	23	1	100	32	94
15	தமிழ் இலக்கியம்	-	-	126	80	157	80	178	88	190	93	226	89	194	90	191	96	157	92	115	95
16	வரலாறு	-	-	8	100	16	75	16	100	77	82	7	71	25	84	28	79	211	95	201	92
17	வரலாறு - ஆங்கி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	23	100
18	புவியியல்	-	-	62	90	103	91	146	93	153	72	228	89	92	97	176	98	60	95	28	86
19	புவியியல் - ஆங்கி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	8	100
20	சுகாதாரம்	-	-	77	92	56	100	32	84	3	100	1	100	88	100	-	-	26	96	48	100
21	விவசாயம்	15	93	46	83	30	97	42	100	40	83	48	92	37	97	44	93	140	89	28	82
22	மனைப்பொருளியல்	12	10	4	75	-	-	3	100	1	100	4	100	3	100	7	57	14	100	16	100
23	வணிகம்	128	92	87	89	135	92	138	79	156	78	180	82	165	87	88	77	141	85	176	90
24	ICT	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	65	97	42	98	109	96
25	ICT - Eng	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	23	100
26	குடியுரிமைக்கல்வி	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	11	100	12	91
27	நாடகமும் அரங்கியலும்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	4	100	-	-
28	மின் இலத்திரனியல்	5	100	9	22	10	0	12	17	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க.பொ.த. (சா/த) பெறுபேற்று விபரம் 2005-2009 வரைபு ரீதியாக










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. பொ. த. உ / த பெறுபேற்று விபரம் 2000 - 2009


		2000		2001		2002		2003		2004		2005		2006		2007		2008		2009	
இல	பாடம்	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %	மாண எண்	சித்தி %
1	உயிரியல்	12	75	22	91	37	70	33	69	34	79	36	78	53	75	43	88	44	57	59	54
2	பௌதீகவியல்	61	59	130	77	151	57	145	65	136	54	130	48	153	59	124	65	123	61	135	67
3	இரசாயனவியல்	61	67	131	64	151	37	145	41	136	48	130	42	153	49	124	52	123	54	135	71
4	இணைந்தகணிதம்	49	57	108	58	114	52	112	65	102	64	77	29	101	57	81	56	44	57	76	42
5	பொருளியல்	72	89	162	91	143	72	118	76	120	69	121	91	108	83	99	75	99	77	100	87
6	கணக்கியல்	73	92	118	87	73	92	83	81	90	82	105	82	92	86	65	92	75	84	94	79
7	வணிகக்கல்வி	73	94	89	94	73	94	83	90	90	81	105	83	92	96	65	91	75	92	94	83
8	தமிழ்	33	76	67	95	33	76	58	86	85	90	77	94	82	96	94	87	94	90	96	82
9	இந்துநாகரிகம்	47	94	83	93	47	94	63	76	77	97	67	91	77	97	81	96	80	89	78	74
10	சங்கீதம்	1	100	5	80	6	100	4	75	4	100	7	100	5	80	8	100	6	100	6	100
11	சித்திரம்	3	33	3	100	4	25	1	100	1	100	1	100	-	-	-	-	8	75	2	100
12	புவியியல்	68	98	84	96	43	88	37	92	54	93	60	93	63	97	60	95	69	93	59	71
13	நடனம்	2	100	1	100	2	100	-	-	4	100	1	100	-	-	5	80	2	100	2	100
14	வரலாறு	-	-	8	100	4	100	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	31	90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க.பொ.த. (உ/த) பெறுபேற்று விபரம் 2005-2009 வரைபு ரீதியாக










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு	இடம்	2004				2005				2006				2007				2008				2009				2010			
		தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி	தேர்ச்சி	ஆண்கள்	பெண்கள்	மாற்றுத்திறனாளி
21 வயது	1	–	–	–	–	–	–	–	–	–	–	–	–	2	–	–	–	4	2	–	1	–	–	–	–				
	2	1	–	1	–	–	–	–	–	–	–	–	–	2	1	1		2	2	–	–	4	1	1	1				
	3	1	–	1	–	–	–	–	–	–	–	–	–	3	2	–		1	1	1	–	2	–	–	1				
19 வயது	1	6	1	–	–	7	–	5	1	8	–	6	1	8	3	–		4	–	–	–	13	2	–	–	1		1	
	2	9	1	–	–	8	1	6	1	–	3	–	–	7	3	–		5	1	–	–	9	2	1	–	–		–	
	3	4	2	–	–	6	5	1	–	3	–	3	–	4	2	–		2	–	–	–	5	5	–	–	1		1	
17 வயது	1	9	1	–	–	6	2	0	–	7	2	5	–	10	–	–		10	–	–	–	11	–	–	1	2		2	1
	2	7	3	–	–	6	2	1	–	5	1	–	–	5	2	–		12	6	–	–	7	1	2	1	1		1	1
	3	5	–	–	–	5	1	1	–	2	2	2	–	4	–	–		8	2	2	–	2	1	–	–	2		2	2
15 வயது	1	4	3	1	–	1	–	–	–	2	2	1	–	3	–	–		11	1	–	–	5	3	2	–	3		–	
	2	4	1	1	–	8	–	–	–	4	2	–	–	6	1	–		9	4	3	2	4	3	1	1	1		2	
	3	4	1	–	–	4	2	–	–	4	–	–	–	5	1	–		3	1	1	1	3	2	–	1	1		–	
13 வயது	1	4	0	–	–	4	–	–	–	1	1	1	–	4	–	–		6	–	–	–	1	–	–	–	–			
	2	2	1	2	–		1	–	–	1	2	–	–	5	2	–		5	1	–	–	1	–	–	–	1			
	3	3	–	–	–	2	1	–	–	–	–	–	–	6	1	–		2	1	1	–	2	–	–	–	–			
மொத்தம்		63	14	4	0	57	15	3	0	31	18	5	0	74	15	1	0	84	22	8	4	69	21	8	6	0	0	13	6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையாளர்



Schoolboy Cricketer (Northern Province) - Winner - Chandrasathan Mathuson - Hindu College, Kokkuvil
Presented by Mr. Kym Bradley
The Chief Guest
Chairman - Board of Cricket Control Sri Lanka - Mr. Thilanga Sumathipala

சிறந்த துடுப்பாட்ட வீரன் வடமாகாணம் சந்திரநாதன் மதூஷன் கிறிக்கற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர், திரு.திலங்க சுமதிபால விடம் பரிசுபெறுதல்



தேவராஜா விதுர்ஷன்
மாகாண மட்டம் தேசிய மட்டம், ஆங்கிலப் பேச்சு,
பரதநாட்டியம், தேசிய மட்டம் 3ஆம் இடம்



செல்வி.தர்சிகா குணரட்ணம
சைவபரிபாலன சபை சமயப் பேச்சுப் போட்டியில்
அகில இலங்கை 1ஆம் இடம்
மாகாண மட்டம் பேச்சுப் போட்டி தமிழ் 1ஆம் இடம்
5 வருட பாடசாலை மட்டத்தில் சம்பியன்



ஜெ.மதூஷிகன்
பாவோதல் தேசிய மட்டம் 2ஆம் இடம்
மாகாண மட்டம் பேச்சுப் போட்டி தமிழ் 3ஆம் இடம்



எ.வினோஜா
மாகாண மட்டம் நீளம் பாய்தல் 2ஆம் இடம்
6 வருடங்கள் பாடசாலை மட்டத்தில் சம்பியன்



ப.விஜயதீபா
தனி நடனம் மாவட்ட மட்டம் 2ஆம் இடம்



கி.டல்ஜினி
சமூகக்கல்வி தேசிய மட்டம் 1ஆம் இடம்



இ.தரசுதா
மாகாண மட்டம் உயரம் பாய்தல்
வடமாகாண உயரம் பாய்தலில்
புதிய சாதனையை நிலைநாட்டியவர்



எஸ். சிதர்சன்
முப்பாய்ச்சலில் தேசிய மட்டம்



சி.சுகுமாரி
சிறுகதை மாகாண மட்டம்
1ஆம் இடம் தேசிய மட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOKUVIL HINDU COLLEGE

Students's Strength & Teachers's Strength

Year	Students		Total	No. of Teacher
	Boys	Girls		
1910			14	1
1911			18	2
1916			100	5
1926			139	
1927	156	25	181	
1928	210	64	274	
1930			400	15
1931	227	74	301	
1932	454	253	707	29
1933	502	301	803	33
1934	786	486	1272	
1935			1581	
1948				58
1949			1523	53
1950	988	644	1632	58
1951	1024	596	1620	61
1952	1036	590	1626	67
1953	926	520	1446	
1954	968	418	1386	
1956			1752	
1957				58
1958	1367	329	1696	60
1959				
1960	1392	437	1829	60
1961			1897	
1962	1426	496	1922	65
1963				
1964	1381	608	1989	68
1965	1175	877	2052	79
1967	784	400	1184	65
1968	832	433	1265	64
1969	911	530	1441	Part Time 4, Vol-4
1970	984	45	1029	68
1971	1020	390	1410	65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Year	Students		Total	No. of Teacher
	Boys	Girls		
1972	1095	385	1480	74
1973	1200	440	1640	66
1974	1195	438	1633	69
1975	1235	420	1655	77
1976	1264	397	1661	77
1977	1212	458	1670	19
1978	1212	470	1682	84
1979	1307	513	1820	92
1980	1348	835	2183	92
1981	926	520	1446	-

Year	6-11	A/L	Total	No. of Teacher
1982	968	418	1386	-
1984	-	-	1752	58
1986	1367	329	1696	60
1988	1392	437	1829	60
1989			1897	60
1990	1426	496	1922	65
1991-1994	1381	608	1989	68
1995	1175	877	2052	79
1997	784	400	1184	65
1998	832	433	1265	64
1999	911	530	1441	72
2000	984	451	1335	61+7
2001	1020	390	1410	57+8
2002	1095	385	1480	67+7
2003	1200	440	1640	60+6
2004	1195	438	1653	62+7
2005	1235	420	1655	72+5
2006	1264	397	1661	73+4
2007	1112	458	1670	73+6
2008	1112	470	1682	79+5
200[illegible]	1307	513	1820	88+4
2010	1348	835	2183	92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைமை	ஆசிரியர் எண்ணிக்கை	
	ஆண்	பெண்
அதிபர் - முதுகல்விமாணி அதிபர் சேவை தரம் I	01	-
ஆசிரியர் கலாசாலைப் பயிற்சி ஆசிரியர்	03	08
பயிலுனர் பயிற்சி ஆசிரியர்	03	02
ஆசிரியர் கலாசாலைப் பயிற்சியுடன் பட்டதாரி	03	04
பட்டதாரிப் பயிலுனர்	-	01
பட்டதாரி	03	04
பட்டதாரி – கல்வி பின் டிப்ளோமா	14	18
பட்டதாரி – ஆங்கிலமொழி மூல நியமனம்	01	03
கல்வியியற் கல்லூரிப் பயிற்சி – தமிழ்மொழி மூலம்	04	04
கல்வியியற் கல்லூரிப் பயிற்சி – ஆங்கிலமொழி மூலம்	02	03
விசேட நியமனம் - பட்டதாரி – நூலக சேவை	01	-
முதுகல்விமாணி	03	-
மொத்தம்	38	47
தற்காலிக இணைப்பு ஆசிரியர்கள்	01	03

இல	துறைகள்	மாணவர் எண்ணிக்கை				
		2004	2005	2006	2007	2008
1	பொறியியல் துறை	2	2	4	4	8
2	ஏனைய கணிதத்துறைகள்	8	7	13	25	15
3	மருத்துவத்துறை	3	-	1	2	-
4	ஏனைய விஞ்ஞானத் துறைகள்	6	4	15	8	9
5	முகாமைத்துவம்	6	3	6	7	5
6	வர்த்தகத் துறை	1	3	1	-	2
7	கலைத் துறை	5	6	7	1	9
8	நுண்கலைத் துறை	4	-	2	4	6
	மொத்தம்	35	25	49	51	54

வயதுப்பிரிவு	நிகழ்ச்சி	இடம்	மாணவர் பெயர்
17 வயது ஆண்	110m தடைதாண்டல்	2	சு. ராகுலன்
	தட்டெறிதல்	1	சு. ராகுலன்
21 வயது ஆண்	உயரம் பாய்தல்	2	ச. வல்லவக்குமரன்
	ஈட்டி எறிதல்	3	S. செந்தூரன்
15 வயது பெண்	உயரம் பாய்தல்	2	இ. தரசுதா
	200m ஓட்டம்	3	இ. தரசுதா
19 வயது பெண்	உயரம் பாய்தல்	4	பு. துஸ்யந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் பகுதி

மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்

கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மாணவர்கள் விளையாடுவதற்கு ஒரு மைதானம் இருக்கவில்லை. மதிய போசன இடைவேளையின் போது கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள புதுக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் விளையாடினர். (ஓடிப்பிடித்தல், கெந்தி அடித்தல் போன்ற விளையாட்டுக்கள்) 1940ஆம் ஆண்டளவில் கலட்டிப் பகுதியில் கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரிக்கு அருகாமையில் - புகையிரத நிலையத்துக்கு முன்பாக உள்ள செப்பனிடப்படாத காணியை(செக்கராடு) அதிபர் குத்தகைக்கு எடுத்து பழைய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் யாவரும் இணைந்து விளையாட்டு மைதானமாக அமைத்தார்கள். அந்த மைதானத்தில் முதன் முதலாக மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது.

1941ஆம் (04.07.1941) ஆண்டு பொதுவான மத்தியஸ்தர்கள், தீர்ப்பாளர்களை நியமித்து மிகச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி ஒன்றினை நடாத்தினர். அப்போது மூன்று இல்லங்கள் இருந்தன. அவை செல்லையா இல்லம், சபாரட்ணம் இல்லம், சபாபதி இல்லம். இவ் இல்லங்களுக்கு முறையே காலஞ் சென்றவர்களான திரு.V.சிவசுப்பிரமணியம், திரு.A.நாகலிங்கம், திரு.சி.சின்னத்தம்பி ஆகியோர் பொறுப்பாசிரியர்களாக இருந்தனர். அவ்விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற சுவட்டு (Track), மைதான (Field) நிகழ்ச்சிகள் தரமான நிலையிலிருந்ததால் கல்லூரி J.S.S.A சங்கத்துடன் இணைந்தது. அக்காலத்தில் உதைபந்து, கரப்பந்து (Volley Ball) ஆகிய விளையாட்டுக்களை பெரிய கல்லூரிகளுடன் சிநேகபூர்வமாக விளையாடினர். 1942ஆம் ஆண்டு கல்லூரிகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பங்குபற்றினர். 1944ஆம் ஆண்டு யாழ் மாவட்ட பாடசாலை விளையாட்டு சங்கத்தினால் (J.S.S.A) நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றினர். திரு.மு.கனகசிங்கம் ஒரு மைல் ஓட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றார். 1946ஆம் ஆண்டில் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக திரு.A.பரமானந்தம் (Sando) மாணவர்களுக்கு மல்யுத்தம், குத்துச்சண்டை ஆகியவற்றில் பயிற்சி அளித்து சம்பியனாக வருவதற்கு முன்னின்று உழைத்தார். அவரது காலத்தில் விளையாட்டுத்துறை மேலும் வளர்ச்சியடைந்தது. 1947ஆம் ஆண்டு J.S.S.A நடாத்திய மெய்வல்லுனர் போட்டியில் மெய்வல்லுநர் தலைவர் செல்வன்.T.இராஜரட்ணம் ஒரு மைல் ஓட்டம், அரை மைல் ஓட்டங்களில் முதலாம் இடங்களைப் பெற்றார். அச்சாதனை 1952ஆம் ஆண்டு வரை முறியடிக்கப்படவில்லை. இவரின் தனிப்பட்ட இவ் வெற்றிக்கு அவ்வருடம் இவருக்கு பார்சன்ஸ் வெற்றிக்கிண்ணம் (Parson's Challenge Cup) கிடைத்தது பாராட்டுதற்குரியது. பின் 1948இல் செல்வன்.ஆர்.துரைசிங்கம் (மெய்வல்லுநர் தலைவர்), அதே போன்று ஒரு மைல், அரை மைல் ஓட்டங்களின் முறையே முதலாம் இடங்களைப் பெற்றார் (C.P.S.S.A – Meet of 1948). 1949ஆம் ஆண்டு மெய்வல்லுநர் தலைவர் A.லக்ஷ்மணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு மைல, அரை மைல் ஓட்டங்களில் 1ம் இடங்களைப் பெற்றார். அவரின் தனிப்பட்ட திறமைக்கு பார்சன்ஸ் வெற்றிக்கிண்ணம் (Parson's Challenge Cup) கிடைத்தது. 1949 C.P.S.S.A Meet இல் நடாத்தப்பட்ட போட்டிகளில் அரை மைல் ஓட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றார். பெண் பிள்ளைகளில் செல்வி .P.சரஸ்வதி 100 யார் ஓட்டத்தில் 3ம் இடத்தைப் பெற்றார். கடைசியாக 1951ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கல்லூரி களுக்கிடையிலான மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் (சுவட்டு, மைதான) பொதுத்திறமை அடிப்படையில் எமது கல்லூரி 3ம் இடத்தைப் பெற்றது. அதில் P.நவரத்தினம், ஏ.ராதாகிருஸ்ணன், A.சொர்ணலிங்கம், A .தர்மராஜா அவர்கள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

1947ஆம் ஆண்டு அதிபர் வி.நாகலிங்கம் அவர்களால் வாங்கப்பட்ட நாகலிங்கம் மைதானத்தில் 1951 ஆம் ஆண்டு முதன்முதலாக மெய்வன்மைப் போட்டி சிறந்த முறையில் நடாத்தப்பட்டது.






1954ஆம் ஆ கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுவேந்திரராஜா J.S.S.A யினால் நடாத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் 1ம் இடம் பெற்றுச் சம்பியன் ஆனார். அத்துடன் 11 வருடத்தின் பின் நீளம் பாய்தலில் கடந்த வருடங்களைவிட 5" கூடப் பாய்ந்து (15'10") சாதனையை நிலை நாட்டினர்.



1954ஆம் ஆண்டு குத்துச்சண்டை அணி



1954ஆம் ஆண்டு மல்யுத்த அணி

1955ஆம் ஆண்டு எமது கல்லூரி மல் யுத்த அணி யினர் வட மாகாணத்திலே சம்பியன் அணியாகத் திகழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955ல் அகில இலங்கை கல்லூரிகளுக்கான போட்டியில் செல்வன் எஸ்.சிவபாலன் (1ம் இடம்) சம்பியனாக வந்தார்.



COLLEGE WRESTLERS — CHAMPIONS NORTHERN PROVINCE - 1955



COLLEGE BOXERS 1955



All Ceylon Inter-Collegiate Champion (Under 50 LBS)

1964 - வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. S.U.சோமசேகரம் பிரதம விருந்தினராக வருகை தந்தார். கார்த்திகேசு இல்லம் சம்பியனானது. பழைய மாணவர்களால் வழங்கப்பட்ட வெற்றிக் கேடயம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மத்திய பிரிவினர் Sprint Events தெரிவு செய்யப்பட்டு Public School Meet இற்கு பங்குபற்றினர்.

1965 - எமது கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் திரு.எஸ்.தணிகாசலம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்) பிரதம விருந்தினராக வருகை தந்தார். இவ்வருடமும் கார்த்திகேசு இல்லம் சம்பியனானது. கல்லூரியின் கீழ்ப்பிரிவு அஞ்சலோட்ட அணி Public School Meet இல் பங்குபற்றினர். 14 வயதின் கீழ் 100m ஓட்டப்போட்டியில் எமது கல்லூரி மாணவன் தெரிவு செய்யப்பட்டார்.

1966-1967 - யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுச் சங்கம் நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில் எமது கல்லூரி 3ம் இடத்தைப் பெற்றது. எமது கல்லூரி மாணவர் மூவர் அகில இலங்கை கல்லூரிகளுக்கிடையிலான போட்டிக்குத் தெரிவாகினர். எமது கல்லூரி கனிஷ்ட பிரிவு அஞ்சல் ஓட்டக்குழு அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றியது. செல்வன். P.விஜயராசா ஈட்டி எறிவதில் யாழ்ப்பாணப்பிரிவில் ஒரு புதிய சாதனையை நிறுவினர். அவர் கனிஷ்ட பிரிவில் மிகத் திறமையான விளையாட்டு வீரனுக்கான வெற்றிக்கிண்ணத்தை யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்டார்.

1970 - கல்லூரிகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் எமது மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். அகில இலங்கைப் பாடசாலை மெய்வல்லுநர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் எமது வீரர்கள் பங்குபற்றிச் சாதனை படைத்தார்கள். அதில் கீழ்பிரிவில் சு.சண்முகராஜாவும், மேற்பிரிவில் P.விஜயராஜாவும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. செல்வன்கள் N.இராஜகுலசிங்கம், ப.தனஞ்சயன் ஆகியோரும் ஓரிரு இடங்களைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 - யாழ் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுச் சங்கம் நடாத்திய தடகளப் போட்டியில் 17 வயதின் கீழ்ப்பிரிவில் நா.பாலகுமார் ஈட்டி எறிதலில் 149'85" எறிந்து சாதனை படைத்தார்.

1976 - இக்காலப்பகுதியில் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு பழைய மாணவனும், வருமான வரி உதவியாளருமான திரு.மு.தங்கராஜா பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார். இவ்வருடம் அகில இலங்கைப் பாடசாலை போட்டியில் நா.ரஞ்சித்குமார் ஈட்டி எறிதலில் தங்கப்பதக்கம் பெற்றார். செல்வன்.ந.ரவிச்சந்திரன் ஈட்டி எறிதல், நீளம் பாய்தலில் பரிசில்கள் பெற்றார். யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் நா.பாலகுமார் 17 வயதுக்குட்பட்ட பிரிவில் ஈட்டி எறிதலில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார். அ.தயாபரன் 12 வயதுக்குட்பட்டோர் பிரிவில் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்றதோடு பலரின் பாராட்டுக்களையும் பெற்றார்கள்.

1977 - J.S.S.A மெய்வல்லுநர் நிகழ்ச்சியில் 17 வயதிற்குட்பட்டோர் ஈட்டி எறிதல் போட்டியில் எமது கல்லூரியைச் சேர்ந்த A. கஜாகரன் 1ம் இடத்தைப் பெற்றார். மைதான நிகழ்ச்சிக்கு சிறப்புப்பரிசு கிடைத்தது.
19 வயதிற்குட்பட்ட உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் 1ம் இடத்தையும், ஈட்டி எறிதல் நிகழ்ச்சியில் 2ம் இடத்தையும் செல்வன் N.பாலகுமார் பெற்றார். 17 வயதுப் பிரிவில் முரளிதரன் பரிதிவட்டம் எறிதலில் 1ம் இடத்தையும், தடை தாண்டல் நிகழ்ச்சியில் 2ம் இடத்தையும் பெற்றார். 15 வயதுப் பிரிவில் S. சுதாகர் ஈட்டி எறிதலில் 3ம் இடத்தைப் பெற்றார். ஆ.ரவிமூர்த்தி 100m ஓட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றார்.

1978 - இக்காலப்பகுதியில் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் திரு.T.வில்வராசாவும், அவருடன் கல்லூரியின் பழைய மாணவனும் ஒரு சிறந்த விளையாட்டு வீரனுமான திரு.ஏ.பவசிங்கம் பயிற்றுனராக மெய்வல்லுநர் நிகழ்ச்சிக்கும், விளையாட்டுத்துறைக்கும் ஊக்கத்துடன் பயிற்சியளித்து வந்தனர்.

1980-1981- மெய்வல்லுநர் நிகழ்ச்சியில் செல்வி.வு.சந்திரலோசினி உயரம் பாய்தலில் 1ம் இடத்தைப் பெற்றார். 19 வயதுப்பிரிவு T.கிருபாகரமூர்த்தி திறமைத்தகுதி பெற்றார். உயரம் பாய்தலில் 1ம் இடத்தைப் பெற்றார். 17 வயதுப் பிரிவில் S. கேதீஸ்வரன் குண்டெறிதல் 1ம் இடத்தைப் பெற்றார். இல்ல மெய்வல்லுநர் போட்டி சிறப்பாக நடைபெற்றது. Chief Quest வைத்திய கலாநிதி S.ஏகாம்பரம்.

1982 - நல்லூர் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. எமது மாணவர் 2ம் இடம் பெற்று யாழ் மாவட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். ஆசிரியர் வு.வில்வராசா, மு.பசுபதி ஆகியோர் நெறிப்படுத்தினர்.

1984 - இல்ல மெய்வல்லுநர் போட்டி நடாத்தப்பட்டது. கல்வித் திணைக்களம் நடாத்திய ஆண்களுக்கான வட்டாரப் போட்டி எமது கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைதானத்தில் நடாத்தப்பட்டது. எமது கல்லூரி முதன்மை பெற்றது. 13, 18 வயது தவிர்ந்த ஏனைய பிரிவுகள் சிறந்த வீரர் விருதுகளைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

பெண்களின் வட்டாரப் போட்டி யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்டது. பல நிகழ்ச்சிகளில் எமது மாணவிகள் முதல் 3 இடங்களைப் பெற்றனர். மாவட்ட மட்டத்தில் 06பேர் முதலாமிடத்தையும், ஒருவர் 2ம் இடத்தையும், மூவர் 3ம் இடத்தையும் பெற்றனர்.

1985 - அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் செல்வன் ந.நந்தகுமார், செல்வன்.ச.சத்தியேந்திரன், செல்விகள் அ.இசைவாணி, எஸ்.மீனலோசினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

1986 - இல்லங்களுக்கிடையே மெய்வன்மைப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. வட்டார மட்டப் போட்டிகளில் அநேகர் பங்குபற்றி மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகினர். உயரம் பாய்தலில் 15 வயதுப்பிரிவில் சு.பிரேமச் சந்திரனும், 17 வயதுப் பிரிவில் மு.வில்வநாத்தும் புதிய சாதனையை நிலை நாட்டினர். அகில இலங்கை மெய்வன்மைப் போட்டியில் பங்குபற்றினர். பயிற்றுனராக N.பாலசுப்பிரமணியம் செயற்பட்டார்.

1989 - இக்காலப்பகுதியில் நடைபெற்ற யாழ். மாவட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயதுப் பிரிவு செல்வன். பொ. பிரதாபன் 3ம் இடத்தையும் செல்வன் மு.விஸ்வநாத் உயரம் பாய்தலில் 3ம் இடத்தையும், செல்வன். செந்தில்நாதன் தட்டெறிதலில் 3ம் இடத்தையும் பெற்றனர்.

1990 - யாழ் மாவட்ட மெய்வன்மைப் போட்டியில் 17 வயதுப் பிரிவு ஆண்களில் செல்வன்.சொ.ஐங்கரலிங்கம் தடியூன்றிப் பாய்தலில் முதலாவது இடத்தையும், செல்வன்.எம்.ரமேஸ் 800m போட்டியில் 2ம் இடத்தையும், 15 வயதுப் பெண்கள் பிரிவில் செல்வி.பொ.தெய்வஜானகி குண்டெறிதலில் 2ம் இடத்தையும் பெற்றமை பாராட்டுதற்குரியது.

1992 - பாடசாலையில் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதி பொன்னம்பலம் சொர்ணலிங்கம் கலந்து கொண்டார். பரிசில்கள் ஜெயராணி சொர்ணலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. அவ்வருடம் கார்த்திகேசு 702 புள்ளிகளைப் பெற்று சம்பியன் இல்லமாகத் திகழ்ந்தது. 17 வயதுப் பிரிவில் S.தணிகேஸ்வரன் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

1997 - பாடசாலையில் மெய்வல்லுநர்ப் போட்டி நடைபெற்றது. வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி அநேக மாணவர்கள் 1ம், 2ம் இடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகினர்.

1998 - நல்லூர்க் கோட்ட மட்டப் போட்டியில் எமது கல்லூரி ஆண்கள், பெண்கள் பிரிவினர் (15, 17, 19 வயதுப் பிரிவினர்) பல 1ம் இடங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டினர். 15, 19 வயதுப் பிரிவினர்களுக்கு சம்பியன் கிடைத்தன. யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற அஞ்சலோட்டத்திற்குரிய வெற்றிக்கேடயம் எமது கல்லூரிக்கு கிடைத்தது மாபெரும் வெற்றியாகும். வெற்றியீட்டிய மாணவர்கள் மாகாண மட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்குத் தெரிவாகினர். மேலும் உப மாகாணப் போட்டியில் பங்குபற்றி 10 நிகழ்ச்சியில் (நீளம் பாய்தல், உயரம் பாய்தல், 100m ஓட்டம், போன்றவை) முதலாம் இடங்களைப் பெற்றனர்.

21 வயது ஆண்கள் பிரிவில் ஐ.சசிக்குமார் நீளம் பாய்தல், உயரம் பாய்தல், முப்பாய்ச்சல் ஆகிய போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த வகையில் 1999ம் ஆண்டு தொடக்கம் 2009ம் ஆண்டு வரை எமது வீரர்கள் மாகாண மட்டம் வரை பங்குபற்றி வெற்றியீட்டினர்.

2001ம் ஆண்டு பெண்கள் பிரிவில் செல்வி . வினோஜா எழில்மோகன் மாகாண மட்டப் போட்டியில் நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் 2ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப்போட்டியில் பங்குபற்றினார்.

2005ம் ஆண்டு நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் 15 வயதுப் பிரிவைச் சேர்ந்த ச.நிதர்சன் மாகாண மட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றினார்.

2008ம் ஆண்டு மாகாண மட்டப்போட்டியில் பெண்கள் பிரிவில் செல்வி.இ.தரசுதா 400m போட்டியில் 2ம் இடத்தையும், 15வயது ஆண்கள் பிரிவில் ஈட்டி எறிதலில் ஸ்ரீகோகுலன் 2ம் இடத்தையும், 21 வயது ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தலில் A.ஜெயரூபன் 1ம் இடத்தையும் பெற்றுத் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

ஆண்கள்

பொறுப்பாசிரியர் திரு. S. உமாசுதன்

பெண்கள் :

பொறுப்பாசிரியர்கள் : திருமதி. சி. குணரட்ணம் (1989 – 2003 வரை)
திருமதி. P. மகேஸ்வரன் (2004 – 2006 வரை)
செல்வி.S. தீபா (2006 – 2010) இன்று வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009 ம் ஆண்டு மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்

மாணவர் பெயர்	வயதுப் பிரிவு	நிகழ்ச்சி	இடம்
சு. ராகுலன்	17 வயது ஆண்	110m தடைதாண்டல்	2
		தட்டெறிதல்	1
ச. வல்லவகுமரன்	21 வயது ஆண்	உயரம் பாய்தல்	2
S. செந்தூரன்	21 வயது ஆண்	ஈட்டி எறிதல்	3
இ. தரசுதா	15 வயது பெண்	உயரம் பாய்தல்	2
		200 m ஓட்டம்	3
பு. துஸ்யந்தி	19 வயது பெண்	உயரம் பாய்தல்	4


வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் சம்பியன் பெற்ற இல்லங்கள்

ஆண்டு	சம்பியன் பெற்ற இல்லம்
1964	கார்த்திகேசு
1965	கார்த்திகேசு
1970	நாகலிங்கம்
1977	சுபாபதி
1992	கார்த்திகேசு
1993	கார்த்திகேசு
1994	நாகலிங்கம்
1997	சபாரட்ணம்
1998	சபாரட்ணம்
1999	சபாரட்ணம்
2000	நாகலிங்கம்
2001	நாகலிங்கம்
2002	நாகலிங்கம்
2003	செல்லையா
2004	செல்லையா
2005	நாகலிங்கம்
2006	செல்லையா
2007	நாகலிங்கம்
2008	நாகலிங்கம்
2010	நாகலிங்கம்

2011
2012
2013
2014 நாகலிங்
2015 சபாரட்ணம்
2016 சுபாபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


OUR PREFECT OF GAMES


A.PARAMANANTHAM


E.SABALINGAM


C.BALAKRISHNAN


V.GANESHALINGAM



R.MAHENDRAN


T.VILVARAJAH


T.BUVANASUNDARARAJAH


T.SRIPATKUNAM


T.DEVARAJAH


R.S.UMASUTHAN


MRS.S.GUNARATNAM


MRS.P.MAHESWARAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கல்லூரியில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

செல்லையா இல்லம்

இல்லப் பொறுப்பாசிரியர்கள்	:	திரு. A. ஆனந்தராஜா திருமதி. P. மகாதேவன்
இல்லத் தலைவன்	:	செல்வன். சு. ஞானானந்தசர்மா
இல்லத் தலைவி	:	செல்வி. கு. வைஷ்ணவி
விளையாட்டுத் துறைத்தலைவன்	:	செல்வன். கு. விதுர்ஷன்
விளையாட்டுத் துறைத்தலைவி	:	செல்வி. வி. ஆரணி

2010இல் நடைபெற்ற இல்ல மெய் வல்லுநர் போட்டியில் எமது இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அணிநடைப் போட்டி களில் எமது இல்ல மாணவர்கள் சிறப்பாகப் பங்குபற்றியதுடன் இல்ல அலங்கரிப்பு நிகழ்விலும் 1ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 2007ஆம் ஆண்டு 17 வயதுப் பெண்கள் பிரிவில் உயரம் பாய்தலில் கார்த்திகேசு இல்லத்தைச் சேர்ந்த செல்வி.பு.துஷ்யந்தி என்பவரால் நிலைநாட்டப்பட்ட சாதனை (1.30m) 2010ஆம் ஆண்டில் எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி.சு.தரசுதா (1.33m) பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டி எமது இல்லத்துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறு செல்லையா இல்லம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

சபாரட்ணம் இல்லம்

இல்லப் பொறுப்பாசிரியர்கள்	:	திரு. பொ. அதீசன் திருமதி. T. சிவகுமாரசர்மா
இல்லத் தலைவன்	:	செல்வன். B. மயூரதன்
இல்லத் தலைவி	:	செல்வி. P. அபிராமி
விளையாட்டுத் துறைத்தலைவன்	:	செல்வன். ஆ. நிரோஜன்
விளையாட்டுத் துறைத்தலைவி	:	செல்வி. S. சுஜாதா

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் நிகழ்வின் போது 13 வயதுப் பிரிவைச் சேர்ந்த செல்வி.கோசலாயினி, 17 வயதுப் பிரிவில் செல்வன்.மு.சிலோயன், 19 வயதுப் பிரிவில் செல்வன்.S.மயூரன் ஆகியோர் முதன்மை வீரர்களாகத் (Champion) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 2003ஆம் ஆண்டு 17 வயதுப் பிரிவில் நீளம் பாய்தலில் செல்லையா இல்லத்தைச் சேர்ந்த செல்வன்.மு.கபில்தாஸ் என்பவரால் நிலைநாட்டப்பட்ட சாதனை (5.13m) 2010ஆம் ஆண்டில் எமது இல்ல மாணவனான செல்வன்.T.சந்துசன் என்பவரால் (5.19m) பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டி எமது இல்லத் துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறு சபாரட்ணம் இல்லம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன் னெடுத்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி இல்லம்

இல்லப் பொறுப்பாசிரியர்கள்	:	திரு. சு. ரவிச்சந்திரன் செல்வி. N. கலா
இல்லத் தலைவன்	:	செல்வன். சி. உத்தமக்குமரன்
இல்லத் தலைவி	:	செல்வி. ஸ்ரீ. நிவேகா
விளையாட்டுத் துறைத்தலைவன்	:	செல்வன். நி. ஆதித்தன்
விளையாட்டுத் துறைத்தலைவி	:	செல்வி. செ. ராஜ்வதனி

2010இல் நடைபெற்ற இல்ல மெய் வல்லுநர் போட்டியின் போது எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி.S.ராஜ்வதனி 19 வயதுப் பெண்கள் பிரிவில் முதன்மை வீராங்கனையாகத் (Champian) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் பல புதிய சாதனைகளையும் நிலைநாட்டியுள்ளனர். 19 வயதுப் பெண்கள் பிரிவில் 1983ஆம் ஆண்டு கார்த்திகேசு இல்லத்தைச் சேர்ந்த S.கம்சலா என்பவரால் நிலைநாட்டிய தட்டெறிதல் நிகழ்ச்சியை (20.12m) எமது இல்லத்தைச் சேர்ந்த S.நிவேகா (21.25m) தூரம் எறிந்து புதிய சாதனையையும், மேலும் 2009ஆம் ஆண்டு எமது இல்லத்தைச் சேர்ந்த செல்வி.S.ராஜ்வதனி 400m சுவட்டு நிகழ்வில் 1:23:2 ஆக இருந்த சாதனையை 2010ஆம் ஆண்டு அதே மாணவி 1:17:1 என்ற நேரத்தில் ஓடி புதிய சாதனையை நிலைநாட்டி உள்ளார். 2003ல் சபாரட்ணம் இல்லத்தைச் சேர்ந்த E.அரிகரன் நிலைநாட்டிய நீளம் பாய்தல் நிகழ்ச்சியை (5.24m) 2010ஆம் ஆண்டில் எமது இல்லத்தைச் சேர்ந்த ல.ஆதித்தன் (6.26m) பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டி எமது இல்லத் துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவ்வாறு சபாபதி இல்லம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

கார்த்திகேசு இல்லம்

இல்லப் பொறுப்பாசிரியர்கள்	:	திரு. N.கந்தவனச்செல்வன் செல்வி.ஆ.மதிவதனி
இல்லத் தலைவன்	:	செல்வன். P.தனஞ்சயன்
இல்லத் தலைவி	:	செல்வி. கு.துஷ்யந்தி
விளையாட்டுத் துறைத்தலைவன்	:	செல்வன் .S. மயூரதன்
விளையாட்டுத் துறைத்தலைவி	:	செல்வி. ச. மதுரா

2010இல் நடைபெற்ற இல்ல மெய் வல்லுநர் போட்டியின் போது எமது இல்ல மாணவர்கள் பெரு விளையாட்டுக்களிலும், சுவட்டு நிகழ்ச்சிகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டியுள்ளனர். 15 வயது ஆண்கள் பிரிவில் முபவிதரனும், 17 வயதுப் பெண்கள் பிரிவில் செல்வி.சுரேக்காவும், 19 வயதுப் பெண்கள் பிரிவில் செல்வி.மு.சுரேக்காவும் முன்மை வீரர்களாகத் (Champian) தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் வீதியோட்ட நிகழ்வின் போது செல்வன் A.அரிகரன் 1ம் இடத்தைப் பெற்றதுடன் 21 வயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் பிரிவில் முதன்மை வீரனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கார்த்திகேசு இல்லம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

நாகலிங்கம் இல்லம்

இல்லப் பொறுப்பாசிரியர்கள்	:	திரு. து. குமாரதேவன் திருமதி. S. திருச்செல்வம்
இல்லத் தலைவன்	:	செல்வன். மு. ஜனுதாஸ்
இல்லத் தலைவி	:	செல்வி. E. ராகவி
விளையாட்டுத் துறைத்தலைவன்	:	செல்வன். சு. ராகுலன்
விளையாட்டுத் துறைத்தலைவி	:	செல்வி. S. மஞ்சூரி

இவ்வருடம் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் நாகலிங்கம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றதுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 13 வயதுப் பிரிவைச் சேர்ந்த மு.விதுர்ஷன், 15 வயதுப் பிரிவைச் சேர்ந்த சு.ஜனரஞ்சனி, 17 வயதுப் பிரிவைச் சேர்ந்த L.ஆதித்தன், 19 வயதுப் பிரிவைச் சேர்ந்த S.மஞ்சூரி ஆகியோர் சிறந்த முதன்மை வீரர், வீராங்கனைகளாகத் (Champian) தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் 1977ஆம் ஆண்டு 19 வயதுக்குட்பட்ட பிரிவில் தட்டெறிதல் நிகழ்ச்சியில் செல்லையா இல்லத்தைச் சேர்ந்த A.முரளிதரனால் (33.45m) நிலைநாட்டிய சாதனையை மு.ராகுலனால் (35.61m) முறியடிக்கப்பட்டதுடன், 1978ஆம் ஆண்டு குண்டு போடுதல் நிகழ்ச்சியில் அதே இல்லத்தைச் சேர்ந்த A. முரளிதரனால் நிலைநாட்டிய சாதனையை (10.82m) எமது இல்லத்தைச் சேர்ந்த அதே முராகுலனால் (11.08m) முறியடிக்கப்பட்டு புதிய இரு சாதனைகளை நிலைநாட்டியமை பெருமைக்குரிய விடயமாகும். இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

இவ்வாறு நாகலிங்கம் இல்லம் தனது செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்பயிற்சி

எமது கல்லூரி மாணவர்களின் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக கல்வி அமைச்சின் ஆலோசனைப்படி உடற்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக திருமதி. S.ஏகாம்பரம் நியமிக்கப்பட்டார். 1966ஆம் ஆண்டு வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான (J.S.S.A) உடற்பயிற்சிப் போட்டியில் எமது கல்லூரி கீழ்ப்பிரிவு மாணவர்கள் 3ம் இடத்தைப் பெற்றனர்.

1964ஆம் ஆண்டு கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வட்டார ரீதியான எமது கல்லூரி மத்திய பிரிவு அணி பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்றது. கீழ்ப்பிரிவு அணியினரும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாணப் போட்டியில் பங்குபற்றினர்.

1965, 1966இல் எமது கல்லூரி மத்திய பிரிவு உடற்பயிற்சி அணியினர் நல்லூர் வட்டாரப் போட்டியில் பங்குபற்றி 1ம் இடத்தைப் பெற்றனர்.

1984 இல் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வட்டார ரீதியான போட்டியில் எமது கல்லூரி மாணவ, மாணவிகள் பங்குபற்றினர். 17வயதிற்குட்பட்ட போட்டியில் எமது கல்லூரி ஆண்கள் அணி 2ம் இடத்தைப் பெற்றது.

1985 இல் வட்டார ரீதியான உடற்பயிற்சிப் போட்டியில் எமது கல்லூரி 13 வயதுப் பிரிவு, 19வயதுப் பிரிவு பெண்கள் 1ம் இடத்தைப் பெற்றனர். மாவட்ட மட்டப் போட்டியில் இவ்விரு அணிகளும் பங்குபற்றி 13 வயதுப்பிரிவு அணியினர் 3ம் இடத்தையும், 19 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தையும் பெற்றனர்.

1988ஆம் ஆண்டில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் 13 வயது ஆண்கள் பிரிவு 3ம் இடத்தைப் பெற்றது.

1989 இல் யாழ் மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயதுப் பிரிவு ஆண்கள் 3ம் இடத்தைப் பெற்றனர்.

1993 எமது கல்லூரியின் விளையாட்டுப் போட்டிக்கு 15வயதுப் பிரிவு பெண்கள் அணியினர் உடற்பயிற்சிக் கண்காட்சி (கோலாட்டம்) நடாத்தி பலரின் பாராட்டைப் பெற்றனர்.

1994 இல் நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் எமது கல்லூரி ஆண்கள் அணியின் 19 வயதுப் பிரிவினர் 1ம் இடத்தைப் பெற்று வலய மட்டப் போட்டியில் பங்குபற்றி 3ம் இடத்தைப் பெற்றனர்.

1999ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டியின் போது எமது கல்லூரி 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு பெண்கள் உடற்பயிற்சி அணியினர் (ஜிம்னாஸ்ரிக்) உட்பட மிகத் திறமையான உடற்பயிற்சிக் கண்காட்சியை நடாத்தினர். பின்பு 15,17 வயதுப்பிரிவு அணியின் கோட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி இரு அணியினரும் சம்பியன் அணியாக (1ம் இடம்) திகழ்ந்தனர். (யா / இந்து மகளிர் கல்லூரி அணியை விட மிகத் திறமையாக உடற்பயிற்சி செய்தனர்)

2000, 2002, 2003 இல் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் போது 15 வயதுப் பிரிவு (கீழ்ப்பிரிவு), 17 வயதுப்பிரிவினர் மிகச் சிறந்த உடற்பயிற்சிக் கண்காட்சியை நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு விளையாட்டுக்கள்

உதைபந்தாட்டம் (Football)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை வரலாற்றில் கல்லூரிக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது உதைபந்தாட்டம் என்றால் மிகையாகாது.

1934ஆம் ஆண்டிலிருந்து (J.S.S.A) யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு சங்கத்தினால், யாழ் மாவட்டப் பாடசாலைக்கிடையே 19 வயதிற்குட்பட்ட 1 ஆம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வந்தது.

1941இல் கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்கு பற்றியது. முதலாவது போட்டியில் காரைநகர் இந்துக் கல்லூரியுடன் விளையாடி வெற்றியைத் தமதாக்கிக் கொண்டது.

1943 - கல்லூரியின் 2ம் பிரிவினர் திறமையாக விளையாடி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

1944 - கல்லூரிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் 2ஆம் பிரிவினர் திறமையாக விளையாடி யாவரினதும் பாராட்டைப் பெற்றனர். போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவுற்றதால் இணைச்சம்பியன் (Bracket Champion) ஆயினர். 1 ம் பிரிவு அணியினர் J.S.S.A போட்டிகளில் பங்குபற்றி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

1945 - கல்லூரிகளிற்கிடையிலான போட்டிகளில் 2ம் பிரிவினர் பங்குபற்றி இறுதிப் போட்டியில் மீண்டும் இணைச்சம்பியன் ஆயினர்.

1946 - கல்லூரியின் முதலாம், 2 ஆம் பிரிவு அணியினர் J.S.S.A இனால் நடாத்தப்பட்ட போட்டிகளில் சம்பியன் அணிகளாகத் திகழ்ந்தனர். திரு.A.சண்முகராஜா, திரு.C.கண்ணுத்துரை ஆகியோர் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட முதலாம் பிரிவு அணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை பாராட்டுவதற்குரியதாகும்.

1947 - J.S.S.A இனால் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ஆம் பிரினர் 2ஆம் தடவையாக உதைபந்தாட்ட சம்பியன் அணிகளாகத் திகழ்ந்தனர். இவ்வாண்டு கல்லூரியில் முதன் முதலாக "வர்ண சிறந்த விருது" (Colours) கொடுக்கப்பட்டது.

1948 - கல்லூரியின் இவ்வருட அணியில் திரு.S.இராஜரெட்ணம், திரு.A.சண்முகராஜா, திரு.C. கண்ணுத்துரை, திரு.S. ஸ்ரீதரன், திரு.சு.துரைசிங்கம், திரு.S. லட்சுமணன், திரு.S.சுந்தரலிங்கம், திரு.குமாரசாமி, திரு.முருகையா மற்றும் பல வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இவ்வாண்டில் நடை பெற்ற இறுதிப் போட்டியில், எமது கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இந்துக் கல்லூரியை எதிர்த்து விளையாடியது. இது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததால் இரு கல்லூரிகளும் இணைச்சம்பியனாயின.

1951 - கல்லூரியின் 2ஆம் பிரிவினர் சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

உதைபந்தாட்ட அணியில் உள்ள 1 ம் பிரிவு வீரர்களையும், இரண்டாம் பிரிவு வீரர்களையும் படத்தில் காணலாம். எமது கல்லூரி அணி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியுடனும் யா/ வைத்தீஸ்வராக் கல்லூரியுடன் விளையாடி வெற்றியிட்டு எங்கள் வலயத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

1957 - J.S.S.A யினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் A பிரிவில் எமது கல்லூரி சம்பியன் அணியானது. அடுத்ததாக பரமேஸ்வராக் கல்லூரியுடன் விளையாடி C பிரிவு சம்பியனானது. இவ்வருடம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் எமது கல்லூரி அணி, யாழ் இந்துக் கல்லூரி அணியுடன் விளையாடியது. போட்டி முடிவுறும் தறுவாயில் பார்வையாளரினால் ஏற்பட்ட குழப்பத்தினால் போட்டி இடைநிறுத்தப்பட்டடது.

1967 - இவ்வாண்டில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் எமது கல்லூரி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியுடன் மோதியது. இவ் அணியில் உள்ளோர் விபரம்.

(1) திரு.P.சுந்தரானந்தன் (தலைவர்)
(2) திரு. N.மகேந்திரன் (உபதலைவர்)
(3) திரு.T. பாலசுந்தரம் (பந்துக்காப்பாளர்)
(4) திரு. A. ஸ்ரீகாந்தன்
(5) திரு. P. விஜயராஜா
(6) திரு. C. சத்தியநாதன்
(7) திரு. P. யோகலிங்கம்
(8) திரு. சு. செல்வராஜா
(9) திரு. சு. இராஜேந்திரம்
(10) திரு. மு. தனபாலசிங்கம்
(11) திரு. N. சந்திரமோகன்
(12) திரு. S. பவானந்தன்

போட்டியில் இரு அணிகளும் இணைச் சம்பியனைப் பெற்றன.

1968 - J.S.S.A இனால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் 3 வது பிரிவு அணியினர் சம்பியனாக திகழ்ந்தனர். இவ் அணியில் பங்குபற்றியவர்களின் பெயர்கள் பின்வருமாறு :

(1) திரு. மு. மனோகரன் (தலைவர்)
(2) திரு. P. தனஞ்சயன் (உபதலைவர்)
(3) திரு. N. இராஜகுலேந்திரன்
(4) திரு. K. சிவராஜா
(5) திரு. S. சிவகுமார்
(6) திரு. S. அமிர்தலிங்கம்
(7) திரு .N. செல்வகுமார்
(8) திரு. A. மகாலிங்கம்
(9) திரு. S. தம்பி
(10) திரு. T. சந்திரகுமார்
(11) திரு. G. ஆனந்தா
(12) திரு. S. ஸ்ரீஸ்கந்தராஜா
(13) திரு. P. பரமேஸ்வரன்

இவ்வாண்டு யாழ் மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்க தெரிவு அணியில் முதலாம் பிரிவிலிருந்து P.விஜயராஜா, S.பவானந்தன், V.பவசிங் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம் - 2010


Under 13


Under 15


Under 17


Under 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்




SOCCER SECOND TEAM J. S. S. A. CHAMPIONS 1951




SOCCER FIRST ELEVEN — 1957







SOCCER — THIRD TEAM 1970



1970





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969 - இவ்வாண்டில் தெரிவு அணியில் திரு.S.பவானந்தன், திரு.N. இராஜகுலசிங்கம், திரு.S.புவனேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1970 - இவ்வருடம் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் எமது கல்லூரி தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியுடன் மோதியது. ஆட்ட ஆரம்ப நிகழ்வு மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது. இடைவேளையின் முன் மகாஜனாக் கல்லூரி கோல்போட்டு முன் நிலையில் நின்றது. இடைவேளையின் பின் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. மைதானத்தின் நடுவே நின்ற சந்திரநாதன் என்ற வீரர் உதைத்த உதைப்பால் பந்து எதிரணியினரின் பந்துக் காப்பகத்தினுள் ஊடுருவிச் சென்றமையால் இறுதியில் 1 : 1 என்ற நிலையில் இணைச்சம்பியனானது.

இவ் அணியில் உள்ள வீரர்கள் :

திரு. ந. இராஜகுலசிங்கம் (தலைவர்)
திரு. பொ. சந்திரநாதன்
திரு. மு. இரத்தினசிங்கம்
திரு. S. பவானந்தன்
திரு. மு. சிவனேஸ்வரன்
திரு. ப. தனஞ்சயன்
திரு. மு. கருணாகரன் (உப தலைவர்)
திரு. S. சரவணபவன்
திரு. T. ஸ்ரீகாந்தன்
திரு. சு. பரராஜசிங்கம்
திரு. S. சிவபாதசுந்தரம்
திரு. ஏ. புவனேசன்
திரு. மு. மனோகரன்

எமது கல்லூரி 2 ஆம் பிரிவு 2 ஆம் இடத்தைப் பெற்றது. அத்துடன் இவ்வாண்டு J.S.S.A இனால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் திரு.எஸ்.பவானந்தன் தலைவராக தெரிவு செய்யப்பட்டதுடன், திரு.கே.இரத்தினசிங்கம், திரு. மு.சிவனேஸ்வரன், திரு. சீ. பவானந்தன், திரு. பொ. சந்திரநாதன், திரு.கே.மனோகரன் ஆகியோரும் இவ்வணிக்குத் தெரிவாகினர்.

1971 - முன்னைய வருடத்தில் பங்குபற்றிய 19 வயதுப் பிரிவினரே இவ்வாண்டிலும் பங்குபற்றினர். தை மாதம் அகில இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தினால் பிராந்தியப் பாடசாலைகளிற்கிடையிலான சுற்றுப் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டது. இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த அனைத்துப் பாடசாலை அணிகளும் எல்லாப் பிராந்தியங்களிலிருந்தும் வந்து பங்கு பற்றினர். 20 வயதெல்லை கொண்டதாக அமைந்திருந்த இப்போட்டியில் முதல் சுற்றில் திருமலை சென். ஜோசப் கல்லூரியை வென்ற எமது அணி இரண்டாம் சுற்றில் நாவலப்பிட்டி சென்மேரிஸ் அணியை வெற்றி கொண்டது. இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரி அணியுடன் மோதி 3 : 0 என்ற அடிப்படையில் மகாஜனக் கல்லூரி வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொள்ள, எமது கல்லூரி 2 ம் இடத்தைப் பெற்றது.

1975 - J.S.S.A இனால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் 3 வது பிரிவினர் அரை இறுதி வரை சென்றனர். 1 ம் பிரிவு அணியின் தலைவராக திரு.A. பாலசுப்பிரமணியம், 2 ம் பிரிவுத் தலைவராக திரு.பு. பிரபாகரனும், 3 ம் பிரிவுத் தலைவராக திரு.N. ரமணகுமாரும் செயற்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டு நடைபெற்ற போட்டிகளில் முதலாம் பிரிவு அணி எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, ஏனைய பாடசாலை அணிகளால் வெற்றி கொள்ள முடியாத அணிகளாகத் திகழ்ந்தது. மகாஜனக் கல்லூரியுடனான இறுதிப் போட்டியில் திரு.சே.பாலகுமார், திரு.சு.சிவராஜா ஆகியோர் திறமையாக கோல் போட்டு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உதவினர்.

FIRST ELEVEN THE UNBEATEN TEAM J.S.S.A CHAMPIONS – 1975

Left to Right

Standing - Mr.N.Selvanathan, Mr.N.Sivanantharajah, Mr.N.Theiventhiran, Mr.N.Ravimohan, Mr.N.Ravichandran, Mr.N. Balakumar, Mr.B.Pirabaharan, Mr.R.Ratnasothy, Mr.A.Kaileswaran

Sitting - Mr.V.Bavasink, Mr.A.Panchalingam (V.Principal), Mr.K.Sivarajah, Mr.A.Balasubramaniam (Captain), Mr.S.Thiruketheeswaran, Mr.M.Mahadeva (Principal), Mr.R.Mahendran, Mr.V.Kanesalingam (P.O.G), Mr.T.Thevaruban, Mr.A.Prabakaran (Goal Keeper)

1977 - எமது கல்லூரி மாணவன் திரு. நா.பாலகுமார் அகில இலங்கைப் பாடசாலைகள் அணிக்குத் தெரிவாகி, தெற்காசிய நாடுகள் பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றுவதற்காக இந்தியாவிலுள்ள (ஆக்ரா) நகருக்குச் சென்று வந்தமை பாராட்டுதற்குரியதாகும்.

1981 – J.S.S.A நடாத்திய போட்டிகளில் மூன்று பிரிவு அணிகளும் அரையிறுதிக்குத் தெரிவாகின.

1982 – எமது கல்லூரி J.S.S.A நடாத்திய போட்டிகளிலும், கல்வித் திணைக்களம் நடாத்திய போட்டிகளிலும், ஸ்ரீலங்கா பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் நடாத்தும் போட்டிகளிலும் பங்கு பற்றியது. அதில் எமது 2ஆம் பிரிவு அணி அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று யாழ் மாவட்டத் தெரிவு அணியானது.

1984 - எமது கல்லூரியின் உதைபந்தாட்ட அணியினர் அகில இலங்கை பாடசாலைளிற் கிடையிலான போட்டிகளில் பங்குபற்றினர். 14 வயதுப் பிரிவு அணி அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

1985 - யாழ் கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் எமது கல்லூரி 3 பிரிவு அணிகளும் பங்குபற்றினர். மூன்றாம் பிரிவு அணி இறுதிப் போட்டியிலும் தெரிவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986 - கல்வித்திணைக்களத்தால் நடாத்திய மாவட்டப் போட்டியில் 4 பிரிவுகளும் பங்குபற்றின.

இவற்றுள் 2ஆம் பிரிவு இறுதிப் போட்டியில் பங்குபற்றி 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. J.S.S.A நடாத்திய போட்டிகளில் 3ஆம் பிரிவு அணி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் யூனியன் கல்லூரிக்கு எதிராக விளையாடி 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

1994 – கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்ட மட்ட இறுதிப் போட்டியில் எமது கல்லூரி அணி ஹென்றி அரசர் கல்லூரியுடன் (இளவாலை) மோதி 2ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

2009 - எமது கல்லூரியின் 16 வயது, 18 வயதுப் பிரிவு அணியினர் வலயத்தில் பங்குபற்றி முறையே 3 ம் இடத்தையும், 2 ம் இடத்தையும் பெற்றனர். 18 வயதுப் பிரிவினர் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவாகினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி
உதைபந்தாட்ட முதலாம் பிரிவு அணித்தலைவர்கள்

1941	திரு.சு. நாகலிங்கம்	1982	திரு. T. புவனேஸ்வரன்
1952	திரு.க. சிவலிங்கம்	1983	திரு. லோ. நகுலேந்திரன்
1955	திரு.அ. பாலசுப்பிரமணியம்	1985	திரு. ந. சத்தியநாதன்
1957	திரு.V. கணேசலிங்கம்	1986	திரு.T. மோகன்
1965	திரு.அ. கமலநாதன்	1987	திரு.ந. சத்தியநாதன்
1967	திரு P. சுந்தரானந்தா	1999	திரு.வி. விஜயகஜன்
1968	திரு.கேமனோகரன்	2000	திரு.வி. ரஜீவன்
1970	திரு.ந. இராஜகுலசிங்கம்	2001	திரு.அ பிரசன்னா
1975	திரு.அ. பாலசுப்பிரமணியம்	2002	திரு.இ. ஜங்கரன்
1976	திரு.ந. ரவீந்திரன்	2003	திரு.எஸ். சைலொளிபவன்
1977	திரு.எஸ். சிவமனோகரன்	2004	திரு.ச. பிரதாபன்
1978	திரு.நா. பாலகுமார்	2005	திரு.யோ. தினேஸ்பாபு
1979	திரு.நா. இராஜேந்திரம்	2006	திரு.ப. தசாகரன்
1980	திரு. ச. சச்சிதானந்தன்	2007	திரு.K. யூட்பெனோசன்
1981	திரு.த. சிவபாலன்	2008	திரு.V. அனோஜன்
		2009	திரு.இ. செந்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

எமது கல்லூரி இவ்விளையாட்டை 1950ஆம் ஆண்டிலிருந்து விளையாடப்பட்டு வருகின்றது. திரு.எஸ். சுந்தரசிவம், V.C. இராமநாதன் ஆசிரியர்கள் தரமான கிரிக்கெட் அணியை உருவாக்கினர்.

1954 ஆம் ஆண்டு தொடக்கம் எமது மாணவர்கள் கிரிக்கெட் விளையாட்டிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள். ஆசிரியர் திரு.C.பாலகிருஷ்ணன், திரு.V.C.இராமநாதன் மாணவர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளித்து வந்தனர்.

1959 ஆம் ஆண்டு யாழ் மாவட்டப் பாடசாலை கிரிக்கெட் அணிக்கு S.சோதிராஜா தெரிவு செய்யப்பட்டார். 1967 இல் எமது கல்லூரியின் 2nd Team வடமாகாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (J.S.C.A) நடாத்திய சுற்றுப் போட்டிகளில் விளையாடி (Champion) 1ம் இடத்தைப் பெற்றது. இவ்வெற்றியின் பெருமைக்குரிய ஆசிரியர் திரு.சொ.பாலகிருஷ்ணன் ஆவார். 2ஆம் பிரிவு அணியினர் 1967, 1968 இல் அடுத்தடுத்து சம்பியனாகத் திகழ்ந்தார்கள். 1967 இல் சம்பியனாக வந்த அணியின் வீரர்கள் வருமாறு :

1967 இல் சம்பியன் அணியினர்

1. K. தெய்வேந்திரன் (தலைவர்)
2. S. பவானந்தன் (உபதலைவர்)
3. N. இராஜகுலசிங்கம்
4. P. சந்திரநாதன்
5. T. தர்மகுலேந்திரன்
6. P. விஜயராஜா
7. V. பவசிங்
8. T. சந்திரகௌரீசன்
9. K. சாந்தசொரூபன்
10. N. மகேந்திரன்
11. M. ஜெயக்குமார்
12. P. சிவபாலசுந்தரம்
13. S. சிவராஜா

1968 இல் சம்பியன் அணியினர்

1. S. பவானந்தன் (தலைவர்)
2. N. இராஜகுலசிங்கம் (உபதலைவர்)
3. P. சந்திரநாதன்
4. மு. கருணாகரன்
5. P. யோகநாதன்
6. P. விஜயராஜா
7. K. சாந்தரூபன்
8. S. நாகராஜா
9. S. ரவிவர்மா
10. S. சரவணபவன்
11. T. சந்திரகௌரீஸ்வரன்
12. A. மகாலிங்கம்
13. K. சிவநேஸ்வரன்
14. K. ஆனந்தகுமார்
15. S. பரமேஸ்வரன்

1970 ஆம் ஆண்டு P.விஜயராஜா, S.பவானந்தன், மு.சாந்தசொரூபன், ஏ.பவசிங் ஆகியோர் J.S.C.A. பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். வலயங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டிகளை அகில இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடாத்தியது. 1970 இல் மு.தெய்வேந்திரன், ஏ.பவசிங் ஆகிய இருவரும் யாழ்ப்பாண அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் எமது கல்லூரி அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Cricket Coaches



C.Balakrishnan
1952 -1976



V.Bavasing
1982-1985



S.Umashankar
1989-1991



R.Selvarajah
1989-1991



S.Kokulan
1992-1994,2002-2010



K. Sasikaran
1998



K.Suthakaran
1992 - 1993



B.Sasikumaran
1999 - 2001



N. Janarthan
1999-2001



R.Piratheepan,
Asst.Coach 1999-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பியனானது. சிறந்த பந்துவீச்சாளருக்கான வெற்றிக் கிண்ணத்தை ஏ.பவசிங் பெற்றுக்கொண்டார்.

1971 ஆம் ஆண்டு பாடசாலைகளுக்கிடையில் 19 வயதுப்பிரிவினருக்கான துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து எமது கல்லூரி விளையாடி கல்லூரியின் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக அக்கல்லூரியை இன்னிங் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இவ்வெற்றிக்கு திரு.பொ.சந்திரநாதன் பெற்றுக்கொண்ட 104 ஓட்டங்களும், திரு.ஏ.பவசிங் இரண்டு இன்னிங்சிலும் 94 ஓட்டங்களைக் கொடுத்து 11 விக்கெட்டுக்களையும் பெற்றிருந்தமையும் காரணங்களாக அமைந்திருந்தன. திரு.பொ.சந்திரநாதன் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

1989ஆம் ஆண்டு எமது முதலாவது பிரிவு யாழ் மாவட்டத்தில் வெற்றிவாகை சூடிய ஒரு அணியாகத் திகழ்ந்தது.

1998 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் 15,17 வயதுப் பிரிவினர் J.S.C.A நடாத்திய போட்டிகளில் பங்குபற்றி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றனர். 1998ஆம் ஆண்டு எமது கல்லூரியைச் சேர்ந்த செல்வன். சபாஆனந், சசிகரன் ஆகியோர் திரு.கோகுலனுடன் யாழ் மாவட்ட துடுப்பாட்ட அணியுடன் தென்மாகாணம் சென்று விளையாடினர். கொழும்பு வெஸ்லிக் கல்லூரியின் 125ம் ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்ட 6 பேர் கொண்ட அணிக்கான துடுப்பாட்டப் போட்டிக்கு செல்வன்.சி.சபாஆனந், பிரகாஷ் ஆகியோர் பங்குபற்றி மாவட்ட அணிக்குத் தெரிவாகினர்.

1999 யாழ் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வலயமட்ட மென்பந்து துடுப்பாட்டத்தில் கல்லூரி அணி 2ம் இடத்தைப் பெற்றது. J.S.C.A நடாத்திய சுற்றுப் போட்டிகளில் 15,19 வயதுப்பிரிவினர் பங்குபற்றினர். 15 வயதுப்பிரிவு அணியினர் தலைவர் உமாசங்கர் யாழ் மாவட்ட பாடசாலைகள் சம்பியன் அணிக்குரிய வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டார். கொழும்பு சென்.தோமஸ் கல்லூரியுடனும், கம்பஹா மாவட்ட பண்டாரநாயக்கா மத்திய மகா வித்தியாலய போட்டியிலும் கலந்துகொண்டனர். மு.பிரகாஷ் J.S.C.A அணிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

2000ஆம் ஆண்டு கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வலயமட்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப்பிரிவினர் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். 15,17 வயதுப்பிரிவினர் (J.S.C.A) இனால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றினர். 17 வயதுப்பிரிவினர் நீண்டகால இடைவெளிக்குப் பின் 1வது சம்பியன் அணிக்குரிய வெற்றிக் கேடயத்தைப் பெற்றனர். இவ் இறுதிப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர் சி.சிவசங்கர் (அணித்தலைவர்) சகலதுறை ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்துவீச்சாளராகவும் சு.சிற்சபேசன் தெரிவு செய்யப்பட்டார். 15 வயதுப்பிரிவினர் அரையிறுதி ஆட்டம் வரை பங்குபற்றி 3ம் இடத்தைப் பெற்றனர். 15 வயதுப் பிரிவில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக ச.மதுஷன் (அணித்தலைவர்) தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2001 இல் யாழ் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி கோட்ட மட்டத்தில் சம்பியன் அணியாகவும், வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்று திருமலையில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் கலந்துகொண்டனர்.

2002 ஆம் ஆண்டு 19 வயதுப்பிரிவினர் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் வலய மட்டத்தில் சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று திருமலையில் நடைபெற்ற மாகாண மட்டப்போட்டியில் பங்குபற்றினர். 13,15,17 வயதுப்பிரிவினர் J.S.C.A நடாத்திய சுற்றப் போட்டிகளில் பங்குபற்றினர். இதில் 13 வயதுப்பிரிவு அணி அரையிறுதிப் போட்டியில் தெரிவாக இறுதிப் போட்டியில் பங்குபற்றியது. அதில் 2 வது இடத்திற்கான (Runner up) வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர். 17 வயதுப்பிரிவினர் ச.மதூசன், இ.ஐங்கரன் ஆகிய இருவரும் யாழ் மாவட்டப் பாடசாலை துடுப்பாட்ட அணியில் சேர்க்கப்பட்டு திருமலையில் மன்னார் மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றினர். ச.மதூசன் முறையே 80,59 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து யாழ் மாவட்ட அணியை வெற்றிபெறச் செய்தார். இவர் மாகாண அணிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.
2003 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையிலான தோற்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் எமது கல்லூரி மாணவன் செல்வன்.ச.மதூசன் தனது திறமையைச் சிறப்பாக வெளிப்படுத்தியமையால் வடக்கின் சிறந்த துடுப்பாட்ட பாடசாலை மாணவன் (Best School boy Cricketer of the North) என்ற புகழைப் பெற்றுக் கொண்டார். இவ்வாண்டு இவர் 4 சதங்கள் (Century), இரண்டு அரைசதங்கள் (half century) உட்பட 738 ஓட்டங்கள் பெற்றிருந்ததோடு 31 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தமை இப்புகழ் பெற்றமைக்கு காரணங்களாகும். அத்துடன் யாழ் மத்திய கல்லூரியுடன் விளையாடிய துடுப்பாட்டத்தில் குறித்த ஓவருக்கான 6 பந்துகளுக்கும் 6 சிக்சர்கள் அடித்து சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்காக OBSERVER – BATA நிறுவனங்கள் இணைந்து நடாத்திய (School Boy Cricketer of the Year) வைபவத்தில் செல்வன் ச. மதூஷன் தெரிவு செய்யப்பட்டு கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற பாராட்டு நிகழ்வில் பரிசில்கள் பெற்றார். மேலும் யாழ் மாவட்டத் தெரிவு அணிக்கு எமது கல்லூரியில் இருந்து ச.உமாநாத், ச.மதூசன், இ.ஐங்கரன், தே.பிரகாஷ், ஆ.பிரசாந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். வடக்கு கிழக்கு மாகாண அணிக்கு செல்வன்.ச.உமாநாத் தெரிவுசெய்யப்பட்டு போட்டியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

2004 இல் மென்பந்துச் சுற்றுப்போட்டியில் வலய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டி மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி 1வது இடத்தைப் பெற்று சம்பியன் அணியாக விளங்கியது. திருமலையில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகினர்.

2005 ஆம் ஆண்டு 19 வயதுப்பிரிவில் யாழ் மாவட்ட தெரிவு அணிக்கு எமது கல்லூரி மாணவன் ஏ.வினோஷன் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. அகில இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடுப்பாட்டச் சங்கத்தினால் "அஸ்ரா" நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் 13,15,17 வயதுப்பிரிவினருக்கான போட்டிகளில் 13 வயதுப்பிரிவினர் 1வது சுற்றுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டு 2வது சுற்றுப் போட்டியில் பங்குபற்றினர். மேலும் துடுப்பாட்டச் சங்கம் நடாத்திய போட்டிகளில் 17 வயதுப்பிரிவு அரையிறுதிப் போட்டி வரை விளையாடினர்.

2006 – மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எமது அணியினர் விளையாடி கோட்ட மட்ட வலய மட்டங்களில் 2ம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றினர்.
தோற்பந்து 19 வயதுப்பிரிவினர் அகில இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் 15,17 வயதுப்பிரிவினர் பங்குபற்றி சிறப்பாக விளையாடினர்.

2008 இல் மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் எமது அணியினர் கோட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும், வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

தோற்பந்து போட்டியில் J.S.S.A போட்டியில் 13,15,17 வயதுப் பிரிவினர் பங்குபற்றினர். 17 வயதுப்பிரிவினர் அரையிறுதிப் போட்டி வரை விளையாடினர்.
2009 மென்பந்து போட்டியில் கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தையும், வலய மட்டத்தில் 2ம் இடத்தையம் மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தையும் பெற்றது.
தோற்பந்து : 2008 ஆம் ஆண்டு முதல் முதல் நோயல் விமலேந்திரா ஞாபகார்த்த 20-20 சுற்றுப் போட்டியில் எமது கல்லூரி அணியினர் சம்பியன் அணியாகத் திகழ்ந்தது. அதற்குரிய வெற்றிக் கிண்ணத்தையம் பெற்றனர். முதன் முதலாக மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும்இ மகாஜனாக் கல்லூரிகளுக்கிடையே 20-20 முக்கோணச் சுற்றுப் போட்டியில் சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த பந்துவீச்சாளராகவும், ஆட்ட நாயகனாகவும் செல்வன்.ளு.வல்லவக்குமரன் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வருடம் J.S.S.A இனால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளில் ஒவ்வொரு அணியிலும் சிறந்த வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்ப்பட்டனர்.
13 வயதுப்பிரிவு : T. சத்தியன், G. லிங்கநாதன், R. பார்த்தீபன்
15 வயதுப்பிரிவு : P. பங்குஜன், L. ஆதித்தன், V. சதுர்ஷன்
17 வயதுப்பிரிவு : K. நிரோஜன், சு. பவீந்திரன், K. ஜனுதாஸ்

2009 இல் J.S.C.A நடாத்திய சுற்றுப்போட்டியில் 19 வ
அரையிறுதிப்போட்டி வரை விளையாடினர். இப்பிரிவில் C
மாவட்ட அணிக்கு தெரிவுசெய்யப்பட்டு மாகாண ம
மேற்படி சுற்றுப் போட்டியில் 13,15,17 அணிகள்
சுற்றான SUPER SIX போட்டிக்குத் தெரிவு செய்
மாவட்ட அணிக்கு கு.ஜனுதாஸ், க. இராகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BIG MATCH

"Battle of Hindus" என்ற பெயருடன் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய இரு இந்துக்களுக்கிடையே முதன் முதலாக மார்ச் 2008 ஆம் ஆண்டு 29, 30 ஆம் திகதிகளில் பிரகடனப்படுத்தப்பட்டது. 2008ம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில், 2009ம் ஆண்டு யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தப்பட்டன. இவ்வாண்டும் 2010 கொக்குவில் இந்து மைதானத்தில் நடைபெற்றது. இவ் ஒழுங்கிலேயே வருடாவருடமும் மாறிமாறி நடாத்தப்படும்.

திரு. இ. சபாலிங்கம் ஞாபகார்த்தமாக சபாலிங்கம் கேடயத்துக்கான 50 – 50 ஓவர் கிரிக்கெட் போட்டி யாழ் இந்துக் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது.

2010ஆம் ஆண்டு யாழ். இந்து பழைய மாணவர்களுக்கும் கொக்குவில் இந்து பழைய மாணவர்களுக்குமிடையே T/20 கிரிக்கெற் போட்டியில் முதன் முதலாக நடைபெற்றது. அதில் கொக்குவில் இந்து பழைய மாணவர் அணி வெற்றிபெற்றது.

இவ்வாண்டு BMICH மண்டபத்தில் Mobitel நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முன்னேறிவரும் மூன்று அணிகளில் எமது கல்லூரி அணியும் தெரிவு செய்யப்பட்டு விருதைப் பெற்றது.

எமது கல்லூரியின் துடுப்பாட்ட அணித் தலைவர்கள்

ஆண்டு	அணித் தலைவர்	ஆண்டு	அணித் தலைவர்
1967	K. தெய்வேந்திரன்	1968	S. பவானந்தன்
1969	N. ராஜகுலசிங்கம்	1970	P. சந்திரநாதன்
1971	S. தர்மலிங்கம்	1972	S. பிறேம்குமார்
1973	T. சந்திரகுமார்	1974	N. ரவிச்சந்திரன்
1975	S. திருக்கேதீஸ்வரன்	1976	K. சிவராஜா
1977	N. செல்வநாதன்	1978	N. பாலகுமார்
1979	N. இராஜேந்திரம்	1980	S. விஜயகுமார்
1981	L. நகுலேந்திரன்	1982	T. நந்தனகுமார்
1983	N. விஜயகுமார்	1984	N. விஜயகுமார்
1985	C. சதீஸ்குமார்	1986	V. மதிதரன்
1987	K. கிருபாநந்தன்	1988	------
1989	L. நற்குணேந்திரன்	1990	K. சுதாகரன்
1991	L. நவீந்திரன்	1992	S. சிறீகரன்
1993	V. ஆரூரன்	1994	P. கேதீஸ்ராஜ்
1995	S. தணிகேஸ்வரன்	1996	------
1997	T. றொபேசன்	1998	S. ஜனகன்
1999	A. செந்தூரன்	2000	T. சுரேஸ்குமார்
2001	S. சிவசங்கர்	2002	சிற்சபேசன்
2003	S. உமாநாத்	2004	C. மதூஷன்
2005	S. ரஜிந்தன்	2006	S. பிரதாபன்
2007	----------	2008	E. வாகீஸ்
2009	V. ஜனாத்தனன்	2010	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு விளையாட்டுக்கள்

பெரும் விளையாட்டுக்களான வலைப்பந்து, கூடைப்பந்து, கரப்பந்து ஆகிய விளையாட்டுக்களில் வலைப்பந்தாட்ட அணியே முதன்முதலாக 1954ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் திருமதி.இ.ஏகாம்பரம் உடற்கல்வி ஆசிரியராகக் கடமை புரிந்தார். அவர் இல்லங்களுக்கிடையே வலைப்பந்தாட்டப் போட்டியை நடாத்தினார். 1954ம் ஆண்டு செல்லையா இல்ல அணி சம்பியனாகத் திகழ்ந்தது.

அப்போட்டிகளில் தெரிவு செய்து கல்லூரி வலைப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டது.

1956ம் ஆண்டு கீழ்ப்பிரிவு அணி (Junior), மேற்பிரிவு (Senior) ஆகிய இரு அணிகள் கல்லூரியில் உருவாக்கப்பட்டது.

1957ம் ஆண்டு வலைப்பந்தாட்ட அணிகள் யாழ் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளுக்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றினர். பின்பு 1960ம் ஆண்டளவில் வட்டார ரீதியான போட்டிகளில் எமது கல்லூரி அணியும் பங்குபற்றியது. அக்காலகட்டத்தில் எமது கல்லூரியில் பெண்கள் விளையாடுவதற்கென மைதான வசதிகள் இருக்கவில்லை.

பல ஆண்டுகள் இடைவெளியின் பின் 1980ம் ஆண்டு திருமதி.பு.மணிவாசகர், மற்றும் பழைய மாணவி செல்வி.S.ரவீந்திராவின் ஒத்துழைப்பினால் வலைப்பந்தாட்ட அணி பயிற்சி பெற்று வட்டார ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றினர். 1982ம் ஆண்டு வட்டார ரீதியான போட்டியில் யா/ கனகரத்தினம் மகா வித்தியாலய வலைப்பந்தாட்ட அணியுடன் விளையாடி வெற்றியீட்டினர். பின்னர் திரு.அபஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் தெற்குப் பகுதியிலுள்ள வலைப்பந்தாட்டத்திடலை திருத்தியமைத்து கொடுத்தார்.

1999ம் ஆண்டு 15,17,19 வயதுப் பெண்கள் அணி கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றினர். வலய மட்டத்தில் அச்சுவேலி மகளிர் கல்லூரியுடன் விளையாடி வெற்றியீட்டி இறுதியாட்டத்திற்குத் தெரிவாகினர்.

2000ம் ஆண்டு வலைப்பந்தாட்ட அணியின் முன்னேற்றம் கருதி திருமதி.சி.குணரட்ணம் அவர்கள் இல்லங்களுக்கிடையே (15,17,19 வயதுப் பெண்கள் அணி) நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கினார். அத்துடன் முதலாம் இடங்களைப் பெற்ற இல்லங்களுக்கு Dr. சொர்ணலிங்கம் காலம் சென்ற தாயார் திருமதி.பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக 3 கேடயங்களை வழங்கினார். இக் கேடயங்கள் 1ம் இடங்களைப் பெறும் 15,17,19 வயதுப் பிரிவனருக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதே போன்று 2ம் இடங்களைப் பெறும் இல்லங்களுக்கு 3 பிரிவினருக்கும் திரு.இ.செல்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.சண்முகநாதன் ஞாபகார்த்தமாக 3 கேடயங்கள் வழங்கினார். இதனால் வலைப்பந்தாட்ட பெண்கள் அணிகள் மிக உற்சாகத்துடனும், திறமையுடனும் விளையாட முன்வந்தனர்.

2001ம் ஆண்டு எமது கல்லூரி வலைப்பந்தாட்ட 15,17,19 வயதுப் பிரிவினர் கோட்ட, வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டினர். அதில் 15 வயதுப் பிரிவினர் மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப்போட்டிக்குத் தெரிவாகினர். இவ்வருடம் எமது கல்லூரி வலைப்பந்தாட்ட அணி சரித்திரத்திலே முதன்முதலாக மாகாண மட்டப் போட்டிக்கு பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது. மாகாண மட்டப்போட்டி திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்றது. எமது அணியினர் சிறப்பாக விளையாடினர். மாகாண மட்டப்போட்டியில் விளையாடிய வீராங்கணைகளின் பெயர்கள் பின்வருமாறு.
ப. கோபிகா (தலைவி), எ.வினோஜா, ம.ஜிரோசனா, ப.ஜனனி, ம.உஷாயினி, உ.சயனிகா, ச.சண்முகாசினி, ஐ.ஹேமப்பிரிந்தினி.

2002 - வலய மட்டப்போட்டியில் 15 வயது, 17 வயதுப் பிரிவு அணியினர் சம்பியன் (Champion) அணியாகத் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.
15 வயது தலைவி உ. சயனிகா
17 வயது தலைவி ம. ஜிரோசனா

2003 - வலய மட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவினர் சம்பியன் அணியாகத் (1ம் இடம்) தெரிவுசெய்யப்பட்டனர்.
15 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி. ச. பிரகாசினி,
17 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி.எ. வினோஜா

2004 - வலய மட்டப்போட்டிகளில் 17 வயதுப்பிரிவினர், 19 வயதுப்பிரிவு இரு அணிகளும் சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
17 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி ப. ஜனனி
19 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி.ப.கோபிகா

2005ம் ஆண்டு எமது கல்லூரியின் 15,17,19 வயதுப் பிரிவு அணிகள் கோட்ட மட்டத்தில் சம்பியன் அணிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப்போட்டிகளில் பங்குபற்றினர். அப்போட்டியில் எமது 3 பிரிவு அணிகளும் சம்பியன் அணிகளாகத் தெரிவுசெய்யப்பட்டமை பாராட்டுதற்குரியது.
15 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி.P.தமயந்தி
17 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி. B.சிவசுதாஜினி
19 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி.V.வினோஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுப் பிரிவு அணி மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றி 2ஆம் இடத்தைப் பெற்று வவுனியாவில் நடந்த மாகாண மட்டப்போட்டிகளில் பங்குபற்றினர்.

2006ம் ஆண்டு பல வருடங்களின் பின் எமது கல்லூரிக்கு செல்வி.சி.தீபா உடற்கல்வி ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். அவரின் வழிநடத்தலில் 19 வயதுப் பிரிவினர் வலய மட்டத்தில் சம்பியன் அணியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.
19 வயதுப் பிரிவு அணித்தலைவி செல்வி.ம.உஷாயினி

2007 - வலய மட்டத்தில் 19 வயதுப்பிரிவினர் 1ம் இடத்தினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

2008ல் 15,17,19 வயதுப்பிரிவினர் கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்று 3 அணியினரும் சம்பியன் ஆயினர். அத்துடன் வலய மட்டத்தில் 17, 19 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தினைப் பெற்று, மாவட்ட மட்டத்தில் பங்குபற்றத் தெரிவாகினர்.

2009ம் ஆண்டு மூன்று அணியினரும் (15,17,19) கோட்ட மட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்று வலய மட்டத்தில் 15,17, 19 வயதுப்பிரிவினர் முறையே 3ம், 2ம்,1ம் இடத்தினைப் பெற்றனர். மாவட்ட மட்டத்தில் 19 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தினையும், மாகாண மட்டத்தில் 2ம் இடத்தினையும் பெற்று தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடைப் பந்து [Basket Ball]

எமது கல்லூரி முன்னாள் அதிபரான ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக ஒரு கூடைப்பந்தாட்ட ஆடுகளம் எமது பழைய மாணவர் சங்கத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

அதற்கான காணி திரு.திருமதி. இந்திராணி தேவராசாவும், அவர்களது புதல்வியான திரு.திருமதி. இராமகிருஷ்ணன் (இலண்டன்) ஆகியோரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இக்காணியில் கூடைப் பந்தாட்டத் திடலை (பழைய மாணவர் சங்கம்) தலைவர் திரு.இ.நடராசா (பொறியியலாளர்) தனது மனைவி ஜெகதீஸ்வரி ஞாபகார்த்தமாக அமைத்துக் கொடுப்பதற்கு பெரும் பங்காற்றினார். அத்துடன் பழைய மாணவர்களும் இணைந்து நிதி திரட்டி இவ் ஆடுகளத்தை அமைத்துக் கொடுக்க உதவினர்.

2000ம் ஆண்டில் முதன் முதலில் பெண்களிற்கான கூடைப்பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டது. கற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆண், பெண் இரு பாலரும் கலந்து கொண்டனர். இதில் பெண்கள் அணி 3ம் இடத்தைப் பெற்றது.

2001ம் ஆண்டு யாழ் மாவட்ட கூடைப்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் 17 வயதிற்குட்பட்ட பெண்கள் மிகச் சிறப்பாக விளையாடி 1ம் இடத்தைப் பெற்றமை பாராட்டுதற்குரியது.

2002ம் ஆண்டு எமது கல்லூரி கூடைப்பந்து பெண்கள் பிரிவு யாழ் மாவட்ட கூடைப்பந்து சம்மேளத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் 13 வயதுப்பிரிவு மாவட்ட மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்றது. அத்துடன் 13 வயதுப் பிரிவினருக்கு கூடைப்பந்து சம்பந்தமான பொது அறிவுப் போட்டியையும் அச்சம்மேளனம் நடாத்தியது. அப்போட்டியில் முதல் 10 இடங்களில் முதல் 9 இடங்களையும் எமது கல்லூரி மாணவிகள் பெற்றமை பாராட்டுதற்குரியது. செல்வி ச. பிரகாசினி 1ம் இடத்தைப் பெற்றார். ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரனையுடன் நடாத்தப்பட்ட யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் எமது கல்லூரியின் 21 வயதின் கீழ் பெண்கள் அணி 2ம் இடத்தைப் பெற்றது. அத்துடன் யாழ் மாவட்ட கூடைப்பந்து சம்மேளனம் HNB அனுசரனையுடன் நடாத்திய போட்டியில் எமது கல்லூரியின் 17 வயதின் கீழ் பெண்கள் பிரிவு சம்பியன் அணியாக (1ம் இடம்) தெரிவுசெய்யப்பட்டது. அப்போட்டியில் யாழ் மாவட்ட பிரபல பெண்கள் பாடசாலைகள் பங்குபற்றின. குழுவில் பங்கு பற்றிய மாணவிகள் விபரம். எ.வினோஜா (தலைவி), ப.கோபிகா, ப.ஜனனி, ம.ஜிரோசனா, ம.உஷாயினி, பு.சயனிகா, அ.லாவண்யா, ஜ.ஹேமப்பிரிந்தினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ம் ஆண்டு யாழ் மாவட்ட கூடைப்பந்து சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளிலும், யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலும் எமது கல்லூரி 13, 15, 17 வயது அணியினர் பங்குபற்றி வெற்றிகள் பெற்றனர். HNB அனுசரனையுடன் நடாத்திய இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாடி கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியன் அணியாகத் (1ம் இடம்) திகழ்ந்தது.

2004ம் ஆண்டு 15,19 வயதுப் பிரிவு பெண்கள் சிநேகபூர்வமாக போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றனர். அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண தெரிவு அணிக்கு செல்விகள் எ. வினோஜா, ப.கோபிகா, ம.ஜிரோசனா ஆகிய மாணவிகள் தெரிவுசெய்யப்பட்டு பதுளையில் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

2005ம் ஆண்டு கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் மாகாண மட்டப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று, சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டு, தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகினர். யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கு எமது கல்லூரியைச் சேர்ந்த செல்வி எ.வினோஜா, ம.ஜிரோசனா, ப.கோபிகா ஆகிய மாணவிகள் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டுதற்குரியது.

2006ம் ஆண்டு யாழ் கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டிகளில் எமது பெண்கள் அணி பங்குபற்றி வலய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர். ஆண்கள் அணி வலய மட்டம் 2ம் இடத்தைப் பெற்று மாகாணமட்டம் 3ம் இடத்தைப் பெற்றனர்.

2007ம் ஆண்டு கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வலய மட்டப் போட்டிகளில் 19 வயதுப் பெண்கள் பிரிவினர் 2ம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றினர். அணித்தலைவி செல்வி.றபிக்கா

2008ம் ஆண்டு எமது கல்லூரி அணி மாவட்டம், மாகாண போட்டிகளில் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்றதுடன், தேசிய மட்டத்திலும் பங்கு பற்றுவதற்கு தெரிவாகினர். அணித்தலைவி P.லதீபா.

2009ம் ஆண்டு எமது பெண்கள் அணி வலய மட்டப்போட்டியில் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப் பந்து [Volley Ball]

எமது கல்லூரியில் இவ் விளையாட்டு 1945ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது. கோயிலுக்கு தென்பகுதி வளாகத்தின் மேற்குப் பகுதியில் நாற்சதுர திடலில் இவ்விளையாட்டுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் சபாபதி இல்லம் முதன் முதலாகச் சம்பியனாகத் திகழ்ந்தது. இவ் அணியில் திரு.அருட்பிரகாசம் மிகச் சிறப்பாக விளையாடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

1947ம் ஆண்டு உரும்பிராய் இந்துக் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக் சல்லூரி அணிக்கும் நடைபெற்ற போட்டியில் எமது கல்லூரி அணி வெற்றியீட்டியது. கிராம மக்களும் இளைஞர்களும் விளையாடுவதற்கு கோவிலுக்கு வடக்கே இரண்டாவது கரப்பந்து மைதானம் அமைக்கப்பட்டது. திரு.கே.தர்மலிங்கம் கொக்குவில் இளைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக இலவசமாக இவ்விளையாட்டுக்குரிய வலை (net), பந்து ஆகியவற்றை வழங்கி வந்தார். அத்துடன் இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர் ஆவார். இவ் உபகரணங்களை திரு.சோமசேகரம் (அருமை) பாதுகாத்து வைத்திருந்தார். திருமதி.பார்க்கவி அம்மா ஆசிரியரின் சகோதரரான திரு.இராமகிருஸ்ண நாயர், திரு.சி.பழனித்துரை ஆகியோரும் இவ்விளையாட்டில் ஆர்வம் காட்டி சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர். 1954ம் ஆண்டு இல்லங்களுக்கிடையே நடாத்தப்பட்ட ஆண்கள் பிரிவில் நாகலிங்கம் இல்லம் சம்பியன் அணி ஆனது.

நீண்ட கால இடைவெளியின் பின் ஆண்கள் அணி உருவாக்கப்பட்டு இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டன. எமது கல்லூரி கரப்பந்தாட்ட அணி 2008ம் ஆண்டு (15 வயது பிரிவு) கோட்ட மட்டத்தில் பங்குபற்றி 3ம் இடத்தைப் பெற்றதுடன், 2009ம் ஆண்டு கோட்ட மட்டத்தில் பங்குபற்றி 15, 17 வயதுப் பிரிவினர் 2ம் இடங்களைப் பெற்றனர். பயிற்றுனர் I. சசிக்குமார். பொறுப்பாசிரியர் திரு.கந்தவனச்செல்வன். 2010ம் ஆண்டு (15, 17, 19 வயது பிரிவு ஆண்கள் அணி) கோட்ட மட்டத்தில் பங்குபற்றினர். அதில் 15 வயதுப்பிரிவு, 19 வயதுப்பிரிவு 1ம் இடத்தையும், 17 வயதுப்பிரிவு 2ம் இடத்தையும் பெற்றனர்.

பெண்கள் :

பெண்களுக்கான கரப்பந்தாட்டம் 2008ம் ஆண்டு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளை உடற்பயிற்சி ஆசிரியர் செல்வி. தீபா சிவயோகமும், அவருடன் இணைந்து திரு.S.இளங்கோவனும் பயிற்றுவித்தனர். பொறுப்பாசிரியராக திருமதி. இளங்கோவன் செயற்பட்டு வந்தார். கோட்ட மட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவு அணியினர் 1ம் இடத்தையும், 17, 19 வயதுப் பிரிவினர் 2ம் இடங்களையும் பெற்று வலய மட்டப்போட்டிகளில் பங்குபற்றினர்.

2009ம் ஆண்டு 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகள் கோட்ட மட்டத்தில் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்று, மூன்று பிரிவும் வலய மட்டப்போட்டிக்குத் தெரிவாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்து















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வருடமும் கல்லூரி இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டன. அத்துடன் கல்லூரி ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் கோட்ட மட்டத்தில் பங்குபற்றினர்.கோட்ட மட்டத்தில்,

15, 19 வயது ஆண்கள் அணியும், பெண்கள் அணி 1ம் இடத்தையும், 17 வயது ஆண்கள் அணி 2ம் இடத்தையும், பெண்கள் அணி 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்கள் அணிக்குப் பயிற்றுனராக திரு. கந்தவனச்செல்வனும், பெண்கள் அணிக்குப் பயிற்றுனராக செல்வி.S. தீபாவும் செயற்பட்டு வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளக விளையாட்டுக்கள்

பட்மின்ரன் (Badminton)
(பூப்பந்தாட்டம்)

எமது கல்லூரியில் இன்ரறக் கழகம் 1992ம் ஆண்டு பூப்பந்தாட்டத்தை ஆரம்பித்து வைத்தது. அக்காலப்பகுதியில் இன்ரறக்கழகம் ஏனைய பாடசாலைக் கழக உறுப்பினர்களிற்கிடையே சுற்றுப் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கியது. பின் 1999ஆம் ஆண்டு நிதி சேகரித்து பூப்பந்தாட்டத் திடல் அமைக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு மீண்டும் பூப்பந்தாட்டம் புத்துயிர் பெற்றது. இவ்விளையாட்டை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு வருடமும் இன்ரறக் கழக அங்கத்தவரிகளிடையேயும், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்கள், மாணவர் தலைவர்களிற்கிடையேயும் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் தொடர்ந்தும் வருடா வருடம் நடாத்தப்பட்டு வருகின்றது. 2008, 2009, 2010 போன்ற வருடங்களில் யாழ் கல்வி வலயம் நடாத்திய போட்டியில் 19 வயதுப் பிரிவினர் 3ம் இடத்தைப் பெற்றமை பாராட்டுதற்குரியது.

மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக இல்லங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் நாகலிங்க இல்லம் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

சதுரங்கம்

எமது கல்லூரியில் 1948ம் ஆண்டு சதுரங்கம் உள்ளக விளையாட்டாக அறிமுகப்படுத்தப்பட்டது. அக்கால கட்டத்தில் உப அதிபரான திரு.சி.கே.கந்தசாமி இவ்விளையாட்டில் மாணவர்கள் காட்டிய ஈடுபாட்டினைக் கண்டு அவர்களை ஊக்குவித்தற் பொருட்டு போட்டி ஒன்றினை நடாத்தினார். அதில் சிவநாயகம் என்ற மாணவன் ரூபா 25ஐ பரிசாகப் பெற்றமை சதுரங்க விளையாட்டை ஆரம்பிக்க காரணமாகியது.

மீண்டும் 1980ம் ஆண்டு சதுரங்கக் கழகம் திரு.ஏ.கணேசலிங்க ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்டது. எமது கல்லூரிப் பெண்கள் அணி வட இலங்கை சதுரங்கக் கழகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றி, செல்வி.பு.சுபாஷினி 1ம் இடத்தைப் பெற்றார். 1983 காலப்பகுதியில் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட சதுரங்கப்போட்டியில் எமது கல்லூரி அணி பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய ரீதியில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றது.

1992 – 1997ம் ஆண்டு காலப்பகுதியில் சதுரங்க விளையாட்டை இன்ரறக்கழகம் பொறுப்பேற்று நடாத்தியது. 1997ம் ஆண்டில் வலயமட்டத்தில் நடாத்திய சதுரங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதுரங்கக் கழகம் – 2010











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் எமது கல்லூரி அணி பங்குபற்றி 15வயது பெண்கள் பிரிவில் செல்விகள் இ.காயத்திரி, எஸ்.சர்மிளா ஆகியோர் 2ம் இடங்களைப் பெற்றனர். அத்துடன் 1998ம் ஆண்டு மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட் போட்டியில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் அ.லாவண்யா 1ம் இடத்தைப் பெற்று அதற்குரிய வெற்றிக்கேடயத்தையும் தமதாக்கிக் கொண்டார

2002ம் ஆண்டு எமது கல்லூரி 19 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி வலய மட்டத்தில் சம்பியன் அணியாகத் திகழ்ந்தது. எமது கல்லூரியின் சதுரங்கக் கழகம் யாழ் மாவட்ட சதுரங்கக் கழகத்தில் அங்கம் வகித்து வருகின்றது. யாழ் மாவட்ட சதுரங்க கழகத்தினால் நடாத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் செல்வன் ஐங்கரன் தெரிவாகி அகில இலங்கை சுற்றுப்போட்டியில் பங்குபற்றினார்.

2003 - 2004ம் ஆண்டு காலப்பகுதியில் எமது கல்லூரியின் சதுரங்கக் கழகத்தினால் நடாத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் சிறந்த சதுரங்க வீரனாக செல்வன். சிவல்லவகுமரனும், சிறந்த வீராங்கணையாக செல்வி.ந.தாரங்கனியும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

2005 காலப்பகுதியில் ஆசிரியர் திரு.இ.சடாச்சரா அவர்களின் தலைமையில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவ்வருடம் இல்ல ரீதியாக 17, 19 வயதுப் பிரிவு மாணவர்களுக்கு போட்டிகள் நடாத்தப்பட்டன. இதில் 17 வயதுப் பிரிவைச் சேர்ந்த செல்வன்.சி.வல்லவகுமரன் (நாகலிங்க இல்லம்), 19 வயதுப் பிரிவில் செல்வன்.தெ.ஜனகன் 1ம் இடங்களைப் பெற்றனர். எமது கழக [illegible]ப்பினர் செல்வன்.சி.வல்லவகுமரன் அகில இலங்கை சதுரங்க சம்மேளனம் நடாத்திய [illegible]ண மட்டப் போட்டிகளில் 1ம் இடத்தைப் பெற்று அதற்குரிய தங்கப் பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டார். மேலும் கேகாலையில் நடைபெற்ற தேசிய ரீதியிலான போட்டிகளிலும் பங்குபற்றினார்.

2005 காலப்பகுதியில் யாழ் கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப்போட்டியில் எமது கல்லூரி 15, 19 வயதுப் பிரிவு அணிகள் பங்குபற்றி இரு அணிகளும் 3ம் இடத்தைப் பெற்றனர்.

2007 – 2008 காலப்பகுதியில் பெண்களுக்குப் பொறுப்பாக செல்வி.சி.தீபா இணைந்து பயிற்சி அளித்து வந்தார். வழமை போல் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும் சுற்றுப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றினர். அத்துடன் இல்லங்களிற்கிடையேயும் போட்டிகள் வைத்து சான்றிதழ், பரிசில்கள் வழங்கி வருகின்றனர்.

2009ம் ஆண்டு வழமைபோல் இல்லங்களுக்கிடையே 13, 15, 17, 19 ஆகிய பிரிவுகளுக்கு ஆண்கள், பெண்களுக்கு தனித் தனியாகப் போட்டிகளை நடாத்தி வருகின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களையும், வெற்றிக்கிண்ணங்களையும் வழங்கி வருகின்றனர். மேலும் பரிசளிப்பு விழாவையொட்டி திறந்த போட்டியாக இருபாலருக்கும் போட்டியை நடாத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் பிரிவில் செல்வன்.ச.பிரணவனும், பெண்கள் பிரிவில் செல்வி.செ.நிவேகா ஆகியோர் 1ம் இடங்களைப் பெற்றனர்.

யாழ் தினக்குரல் பத்திரிகை நிறுவனத்தால் கற்றன் நஷனல் வங்கி அனுசரணையுடன் ஏப்ரல் 2010ல் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவருக்கிடையிலான தனிநபர் சதுரங்க சுற்றுப்போட்டியில் எமது பாடசாலை மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

18 வயதுப் பிரிவு பெண்கள் - ஏ.கஸ்தூரி - மாவட்ட மட்டம் 1ம் இடம்.

14 வயதுப் பெண்கள் வலய மட்டம் முதல் நான்கு இடங்களையும் எமது மாணவர்கள் பெற்றுள்ளனர்.

1ம் இடம் - சி. சாவித்திரி, 2ம் இடம் - பு. றொசானா, 3ம் இடம் - சி. ஆரணி 4ம் இடம் - கு. சரன்யா.

திருமதி.சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாற்பத்து இரண்டு ஆண்டுகள் ஆசிரிய சேவையில் அர்ப்பணிப்புச் செய்தமையைக் கௌரவிக்கும் முகமாக திரு. ரகு, திருமதி.சுகன்யா ரகு தம்பதிகளினால் பணப்பரிசில்கள், கேடயங்கள், சான்றிதழ்கள் போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கி (50,000/-) வருகின்றனர். அவர்கள் சேவைகள் தொடர வாழ்த்துகிறோம்.

மேசைப்பந்து [Table Tennis]

எமது கல்லூரியில் 1999ம் ஆண்டு முதன் முதலாக பெண்களுக்கான மேசைப்பந்து திருமதி.சி.குணரட்ணம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பின்னர் ஆண்களும் இவ்விளையாட்டில் பங்குபற்றி பயிற்சி பெற்றனர். 2009, 2010ம் ஆண்டுகளில் இல்லங்களுக்கு இடையிலான போட்டிகள் நடாத்தப்பட்டது. இதில் 2009ம் ஆண்டு நாகலிங்கம் இல்லம் சம்பியனைப் பெற்றது. இதே ஆண்டில் யாழ் வலயத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் 15, 19 வயதுப் பிரிவினர் பங்குபற்றினர். இதில் 15 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

மீண்டும் 2005ம் ஆண்டு வடக்கு, கிழக்கு மாகாண சபை விளையாட்டுத் துறையினரால் மேசைப்பந்தும், மேசையும் வழங்கப்பட்டது.

2009ம் ஆண்டு சில ஆண்டுகளின் பின் மேசைப் பந்தாட்டம் புத்துயிர் பெற்று தற்போது வளர்ச்சியையும் கண்டுள்ளது. இவ்வருடம் இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டது. அதில் நாகலிங்கம் இல்லம் சம்பியன் ஆனது. கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் எமது கல்லூரி 19 வயதுப்பிரிவு அணியினர் முதன் முதலாகக் கலந்து சிறப்பித்தனர். வலய மட்டப்போட்டிகளில் எமது கல்லூரியின் 15 வயதுக்குட்பட்ட அணியினர் பங்குபற்றி 2ம் இடத்தைப் பெற்றனர்.

2010ஆம் ஆண்டு இல்லங்களுக்கிடையே போட்டிகள் நடாத்தப்பட்டு இல்ல மெய்வல்லுநர் விளையாட்டின் போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ முதல்வர்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர் இயக்கம் (Boys scouts)

சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பிரபு பேடன்பவல் (ஸ்ரீவின்சன் சிமித் பேடன்) ஆவார். இவர் 1907 ம் ஆண்டு சாரண இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். இலங்கையில் 1910ம் ஆண்டு மாத்தளை தேவாலய பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் இயக்கமானது 1911ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், பின் 1943ம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப்பட்டது. இச்சாரணர் குழுவை திரு.விசிவசுப்பிரமணியம் ஆசிரியர் முதன் முதலாக ஆரம்பித்து வைத்தார். ஒவ்வொரு கல்லூரி சாரணர் குழுவிற்கும் தலைமையகத்தில் பதிவு செய்யும் ஒழுங்கில் எமது கல்லூரிக்கு 8வது (8th of Jaffna) யாழ்ப்பாணம் என்னும் இலக்கம் வழங்கப்பட்டது.

சாரணர் குழுவினர் அவர்களின் வயதெல்லைக்கேற்ப பின்வருமாறு பிரிக்கப்பட்டனர்.

சாரணர் பிரிவுகள்

வயதெல்லை	*பிரிவினர்*
11 வயதின் கீழ் உள்ளோர்	குருளைச் சாரணர் (Cups)
12 – 16 வயது உள்ளோர்	சாரணர் (Scouts)
16 – 18 வயது உள்ளோர்	சிரேஷ்ட சாரணர் (Senior Scout)
18 வயதிற்கு மேற்பட்டோர்	திரி சாரணர் (Rovers)

எமது கல்லூரியின் 1950ம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது செல்வன் S. சின்னராசா. N. யோகநாதன், ஆகியோர் சிறந்த சாரணர்களிற்கான பரிசில்களைப் பெற்றனர். இவர்களிற்கான பரிசில்களை மேல் மாகாணக் கல்வி அதிகாரி திரு. S.U.சோமசேகரம் அன்பளிப்புச் செய்திருந்தார்.

1952 ம் ஆண்டு இக்குழுவினர் வருடாந்த பாசறைத் தீ (Campfire) நிகழ்வினை நடாத்தி பெற்ற பணத்தைக் (ரூபா 500/-) கொண்டு, கொழும்பில் நடந்த ஜம்போறி (Jamporee) விழாவிற்குச் செல்வதற்குப் பயன்படுத்தினர். ஆசிரியர் T.அருளானந்தம்பிள்ளை அவர்களின் தலைமையில் சென்ற இக்குழுவினர் அங்கு திறமையான ஓர் இந்தியன் நிகழ்ச்சியை வழங்கினர்.

சாரணியம் சார்ந்த பெறுமதி மிக்க நூல்களை சேகரித்ததுடன், 'வேதன வேலை வாரத்தை' (Chip for jop) முழுமனதோடும் புன்முறுவலோடும் ஏற்று வெற்றிகரமாக உழைத்தார்கள். இக்காலப் பகுதியில் பிரதம மந்திரி சேர். ஜோன் கொத்தலாவல யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த போது எமது சாரணர்கள் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.


சாரணர் குழுவினர் இலங்கை சுற்றுலா மேற்கொள்வதற்காக் திரு. K. சிதம்பரப்பிள்ளையின் உதவியுடன் "ஏழை அழுதகண்ணீர்" என்ற நாடகத்தை நடித்துப் பணம் பெற்றனர். 1960 – இவ் ஆண்டு காலப்பகுதியில் சூறாவளியினால் இடர்ப்பட்ட ஏழை மக்களுக்கு உதவும் பொருட்டு வீடுகள் தோறும் சென்று உணவுப் பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரித்துக் கொடுத்தனர். இலங்கை முழுவதும் உள்ள சாரணர் குழுக்களில் இரண்டாவது பெருந்தொகைப் பணத்தைச் சேகரித்துக் கொடுத்த பெருமை எமது கல்லூரி சாரணர்களைச் சேர்ந்தது. பாடசாலைக் கட்டட வேலைகள் நடைபெற்ற காலங்களில் சாரணர்கள் நாடகங்கள், கதம்ப நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடாத்தி நிதி சேகரித்து உதவினர். கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற பொன் விழாவின் போது எமது கல்லூரி சாரணர்களும் பங்குபற்றி மிகத் திறமையான யோகாசனங்களைச் செய்து பலரின் பாராட்டைப் பெற்றனர்.

1964 - இவ்வருடத்தில் எமது கல்லூரி சாரணர்கள் 53 பேரில் 9 பேர் முதலாம் வகுப்புச் சாரணர் சின்னம் பெற்றிருந்தனர். மார்ச் மாதத்தில் கொழும்பில் நடைபெற்ற ஜம்போறியில் 12 பேர் பிரதிநிதிகளாகச் சென்று சிறப்பித்தனர். 1965 இல் சாரணர்கள், இராணிச் சாரணர் கொடியும், அகில இலங்கை சமூகசேவைக் கேடயமும் அதேயாண்டில் இவர்கள் பெற்றுக் கொண்டனர். இவ் அரிய சாதனையைக் கௌரவிக்கும் முகமாக 1966 ஆம் ஆண்டு கல்லூரியினால் ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டது.

Queen's Scouts – (இராணிச்சின்னம் பெற்றோர்)





1966 இல் எமது கல்லூரியில் நடந்ததாகக் கருதப்படும் மகாநாடு ஒன்றினை சாரணர் ஆசிரியர் திரு.இ.மகேந்திரன் சிறந்த முறையில் நெறிப்படுத்தியிருந்தார்.

12 இராணிச்சாரணர்களை உருவாக்கிய எமது சாரணர் குழுவிற்கு மீண்டும் இவ்வருடம் அகில இலங்கைச் சாரணர் கொடி வழங்கப்பட்டது. வடமாநில வருடாந்த சாரணர் பாசறைப் போட்டிகளில் எமது கல்லூரி 3 ம் இடத்தைப் பெற்றது. மற்றும் கிழக்கிலங்கையில் நடைபெற்ற திரி சாரணர் வருடாந்த பாசறைக்கு எமது கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணர் குழு











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரணரும் பங்கு பற்றினார். 1976 இல் சாரணர் குழுவில் குருளைச் சாரணர் 30 பேரும், கனிஷ்ட சாரணர் 25 பேரும், சிரேஷ்ட சாரணர் - 15 பேரும் அங்கம் வகித்தனர். அனுராதபுரத்தில் நடைபெற்ற மூன்றாவது தேசிய ஜம்போறியில் எமது கல்லூரிச் சாரணர்களும் கலந்து கொண்டு, தேசிய சாரணர் வாரத்தை மரங்கள் நாட்டி சிறப்பாகக் கொண்டாடினார்கள். 1986 இல் முதலாம் வகுப்புச்சின்னம் பெறுவதற்கான 2 நாள் பாசறைகள் அமைத்துப் பயிற்சி பெற்றதோடல்லாது, வேதன வேலை வாரத்தில் கூடுதலான நிதியினைத் திரட்டினர். வட்டாரக்கல்வி பெருட்காட்சியில் 2 நாள் கடமைபுரிந்தனர். 1992இல் திரு. இமகேந்திரன் யாழ். மாவட்ட சாரண ஆணையாளராக நியமிக்கப்பட்டதனால் திரு.ந. புவிராஜசேகரம் உதவி மாவட்ட ஆளையாளராகவும், திரு. S. உமாசுதன் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டனர்.

அத்துடன் குருநாகலில் "வெலகெதர" ஸ்ரேடியத்தில் நடைபெற்ற 4வது தேசிய ஜம்போறியில் எமது சாரணர்கள் யாழ் மாவட்டத்திலேயே அதிக அளவில் பங்கு பற்றினர். யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தால் நடாத்தப்பட்ட அவத்தை 1, அவத்தை 2 சாரணர் தலைவர் களுக்கான பயிற்சிப் பாசறைகளில் எமது சாரணர்கள் பங்கு பற்றினார்கள். வினாடி வினாப் போட்டியில் எமது சாரணர் குழு 2ம் இடத்தைப் பெற்றது. 6 சாரணர்கள் பச்சைநாடா விருதையும், 7 சாரணர்கள் ஜனாதிபதி விருதையும் பெற்றனர். எமது சாரணர் துருப்பானது 50வது அகவையில் காலடி பதித்தது. தொடர்ந்தும் பல சேவைகளை ஆற்றி வந்தனர்.

பச்சைநாடா விருது பெற்ற கனிஷ்ட சாரணர்கள் :

N தர்மேந்திரதாஸ், K. ரவீந்திரன், S. நிரூபன், S. கங்காதரன், S. அனோஜன், K. முரளீஸ்வரன்.

ஜனதிபதி விருது பெற்றோர்

S. ஆனந்த், சி.சந்திரதாஸ், க. துஷாந்தன், செ. சந்திரமோகன், து. ஹேமதாஜ், ச. காண்டீபன், தெ. அரவீந்தன்.

1997-2002 காலப்பகுதியில் வேதன வேலை வாரத்தில் சிறப்பாக சேவையாற்றியுள்ளார்கள். 2 பேர் முதலாம் தரச்சின்னத்தையும், 28 பேர் 2ம் தரச் சின்னத்தையும் பெற்றனர். பயிற்சிப் பாசறைகளும் நடாத்தப்பட்டன. செல்வன் இ.சிவமயூரன் 1999இல் ஜனாதிபதி விருதினைப் பெற்றுக்கொண்டார். 2002ல் இலண்டன் பழைய மாணவர் சங்கம் இவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு உதவிகள் வழங்கியது. பின்னர் திரு.S.சுகுமார் ஆசிரியர் அவர்கள் பொறுப்பாக இருந்த போது அணித்தலைவர் களுக்கான பயிற்சிப் பாசறையில் மாணவர்களைப் பங்குபெறச் செய்தார். இதில் எமது கல்லூரி சாரணர் 9 பேருக்கு "மாவட்ட சாரணர் நாடா விருது" கிடைத்தது.

2010 நூற்றாண்டு வருடத்தில் திரு.M.ஸ்ரீதரன், எஸ்.கோகுலன் ஆகியோர் பொறுப்பாக செயலாற்றி வருகின்றனர். கல்லூரித் தாய் கோலாகலமாக விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சாரணர் தமது பங்களிப்பினைத் தொடர்ந்து சிறப்பாக ஆற்றி வருகின்றனர்.

"தயாராய் இரு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guides (சாரணீயர்)

சாரணியம் ஓலேவ்பேடன்பவல் அம்மையாரால் 1912 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலே பெண்களிற்கான சாரணீய இயக்கம் 1917 ஆம் ஆண்டு கண்டி மெதடிஸ் பெண்கள் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு, 1921ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், 1950ஆம் ஆண்டளவில் எமது கல்லூரியிலும் ஆரம்பிக்கப்பட்டது. தலைமையகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கில் எமது கல்லூரிக்கு 33வது யாழ்ப்பாணம் என்னும் இலக்கம் வழங்கப்பட்டது. அப்போது சாரணீயத் தலைவியாக செல்வி G.P. ஞானசுந்தரமும், உபதலைவியாக செல்வி M. தம்புவும் நியமிக்கப்பட்டார்கள். 1951ஆம் ஆண்டு யூன் 19 ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ் அணிக்கு யூலை 28ஆம் திகதி யாழ் மாவட்ட ஆணையாளராக இருந்த செல்வி.முத்தையாவும், செயலாளராக இருந்த திருமதி.R. இராஜநாயகம் அவர்களும் எமது கல்லூரிக்கு வருகை தந்து சாரணீயர்களுக்குச் சின்னஞ் சூட்டினர்.

1972 இல் 20 சிறுதோழர்கள் இருந்தார்கள். அவர்களில் 12 பேர் 2 ஆம் தரச் சின்னத்திற்குரிய பரீட்சையில் சித்தியடைந்தார்கள். மீண்டும் புதிதாக சாரணீயர்கள் இணைக்கப்பட்டு இளம்பாதப் பரீட்சை (Tender foot Test) வைக்கப்பட்டு தேர்ச்சி அடைந்தவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது.

பின்னர் அனுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கைப் பயிற்சிப் பாசறையில் எமது கல்லூரி சாரணீயர் 5 பேர் பங்குபற்றி சிறந்த அனுபவத்தைப் பெற்றார்கள். 1988 - 1989 இக்காலப்பகுதியில் திருமதி க. திருநாவுக்கரசு அவர்களுக்கு சாரணீயர் ஒரு பிரிவுபசார வைபவமும் நடாத்தினர்.

1990 - "சிந்தனை நாள்" (Thinking Day) அதாவது பேடன்பவல், அம்மையார் பேடன்பவல் ஆகிய இருவரதும் கூட்டுப் பிறந்த நாள் பெப்ரவரி 22ம் நாள் கொண்டாடப்பட்டது. இவ் ஆண்டில் முதன் முதலாக பேடன் பவல் தினம் (சிந்தனை நாள்) திருமதி சி. குணரட்னம் ஆசிரியரின் வழிகாட்டலில் எமது கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1991 - 1992 முதன் முதலாக ஆசிரியர்களிற்கான பயிற்சி முகாம் எமது கல்லூரியில் நடாத்தப்பட்டது. 1994 - திருமதி சி. குணரட்னம் யாழ் மாவட்ட ஆணையாளராக (1992 - 1997 வரை) கடமையாற்றினார். இவர் அனைத்துலக ஆணையாளருக்கான 10 நாள் பயிற்சி கொழும்பு S.L.F.I இல் நடைபெற்றது. அதில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்றமை எமது கல்லூரியிக்கு பெருமையாகும்.

1995 - இவ்வாண்டில் எமது கல்லூரி சாரணீயர் குழாமில் 35 பேர் அங்கத்தவராயுள்ளனர். யாழ் மாவட்ட சாரணீயர்களுக்கு 3 நாள் பயிற்சி முகாம் ஒன்று இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. எமது கல்லூரியில் 17 பேர் பயிற்சிப்பாசறையில் பங்கு பற்றினர். 1997 இல் சாரணீய குழாத்தில் 36 பேர் இணைவுத் தேர்வுப் பரீட்சையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Girls Guides









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியடைந்து சின்னம் சூட்டப்பட்டனர். 28 பேர் 2 ஆம் தரச் சின்னத்திற்கான பரீட்சையில் சித்தியடைந்தனர். இவர்களில் யோ.வேணுகாதேவி, கு. தர்சிகா முதலாம் தரச்சின்னத்தைப் பெற்றமை பாரட்டுதற்குரியது. இவர்கள் இருவரும் எமது சாரணீயக் கல்லூரி வரலாற்றில் முதன்முதலாக முதலாம் தரச்சின்னத்தை பெற்றனர்.

எமது கல்லூரி சாரணீய குழாத்தில் 20 பேர் 1 ம் தரச்சின்னத்திற்கான பயிற்சியில் பங்கு கொண்டனர்.

2010ம் ஆண்டு திருமதி.இ.நாகராஜா, திருமதி.பா.மோகன்ராஜ் ஆகியோரின் வழிகாட்டலில் சாரணீயர்கள் எமது கல்லூரி விளையாட்டின் போது அணிவகுப்பு மரியாதையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

"தயாராய் இரு எனும் குறிக்கோளுக்கமைய சாரணீயர்கள் இயங்கி வருவார்கள் என்பது திண்ணம்"

Junior Cadet Battalion
(கனிஷ்ட மாணவர் பயிலுனர் படை)

எமது கல்லூரி அதிபர் C.K.கந்தசாமி அவர்களின் காலப்பகுதியில் 1970ம் ஆண்டு இப்படை அணி உருவாக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாசிரியராக திரு.இ.மகேந்திரன் செயற்பட்டு வந்தார். இவ் அணிக்குக்கு A. சிறிராம் (Lsgl), T. சிறிகாந்தன் (Sgl), R. வரதராஜன் (Cpl),T. குணபாலன் (Lcpl), M. சிறிதரன் (Cpl), K.ஜெயக்குமார் (Lcpl), N. றஞ்சித்குமார் (Lcpl) குழுத் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். முதன் முதலாக தியத்தலாவையில் நடைபெற்ற பயிற்சிப் பாசறைக்கு சென்றமை ஒவ்வொரு மாணவனுக்கும் புதிய அனுபவத்தைப் பெற வாய்ப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து திரு.M.குலசேகரமும், திரு.T.வில்வராஜாவும் செயற்பட்டு வந்தனர். பொலநறுவையில் நடைபெற்ற பாசறையில் எமது கனிஷ்ட மாணாக்கர் படை பல்வேறு போட்டிகளிலும் பங்குபற்றினர். அத்துடன் புராதன நகரைப் பார்க்கும் அதிர்ஷ்டமும் அவர்களுக்குக் கிடைத்தது. பின்பு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற பாசறைக்கு கிழக்கு மாகாணம், வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணங்களைச் சார்ந்த 45 பாடசாலை பயிலுனர் படைகள் பங்குபற்றினர்.

1977ம் ஆண்டு பெப்ரவரி 12ம் திகதி தெரிவுப் பாசறை யாழ் மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டது. அதில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எட்டுப் பாடசாலைகள் பங்குபற்றின. அதில் எமது பாடசாலை 4ம் இடத்தைப் பெற்றது. இவ்வாண்டு பெப்ரவரி 27ம் திகதி தலைமைக் காரியாலயத்தில் நடாத்தப்பட்ட பாசறையில் எமது அணியும் பங்குபற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து எமது பிரிவில் 35 மாணவர்கள் அங்கத்துவம் பெற்றனர். தியத்தலாவையில் 1978ல் நடைபெற்ற வருடாந்தப் பயிற்சிப் பாசறையில் (C.V.F) வடமத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணத்திலிருந்து 15 பாடசாலைகளும், எமது கல்லூரி மாணவர்களும் மூன்று நாள் தங்கி பயிற்சிகள் பெற்றனர். எமது கல்லூரி கனிஷ்ட மாணவர் பயிலுனர் படை இவ்வருடம் பெப்ரவரி மாதம் யாழ் இந்துக் கல்லூரியில் நடாத்தப்பட்ட தெரிவுப் பயிற்சியில் பங்குபற்றினர்.

2010 - இவ்வாண்டு மீண்டும் இப்படை உருவாக்கப்பட்டது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை

(புனித ஜோன் அம்புலன்ஸ் சேவை)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் 1930ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை எமது கல்லூரியில் 1976ல் முதன்முதலாக உருவாக்கப்பட்டது. திரு. C.E. தேவகடாட்சம், டாக்டர் T. கங்காதரன் ஆகியோர்கள் வகுப்புக்களை நடாத்தியுள்ளனர். அவர்கள் 40 மாணவர்கள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைய உதவினர். (இது நூறு சதவீத சித்தியாகும்) 1981களில் அதிபர் திரு.அபஞ்சலிங்கம் காப்பளாராகவும், திரு ப. ஜெகநாதன், திருமதி க. திருநாவுக்கரசு ஆசிரியர்களின் பெரும் முயற்சியினால் இப்படையானது மீண்டும் இயங்கத் தொடங்கியது. இவ் அணியில் 75 மாணவர்கள் இணைந்துகொண்டனர்.

எமது முதலுதவிப் படையினரின் சேவையைப் பாராட்டித் தலைமை அலுவலகம் முதலுதவிச் சிகிச்சைப்பெட்டி ஒன்றை 1985ஆம் ஆண்டு பரிசாக வழங்கியது. செல்வன் வி. மதிதரன் பிரிவு 2 உத்தியோகத்தராகவும், செல்வன் ப. நிர்மலன், சு.கிருஷ்ணவேணன் ஆகியோர் சார்ஜண்டாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். எமது முதலுதவிப்படையினர் ஒவ்வொரு ஆண்டும் நல்லூர், நயினாதீவு வருடாந்த உற்சவங்களின் போது தமது பணிகளைச் சிறப்பாக ஆற்றி வருகின்றனர்.

1991 ஆண்டிலிருந்து இன்று வரை எமது கல்லூரி பழைய மாணவன் திரு. S.செல்வரஞ்சன் மாவட்ட ஆணையாளராகக் கடமை புரிந்து வருகின்றார். இவர் எமது கல்லூரியின் இப்படைப்பிரிவிற்குப் பெரிதும் உதவி புரிந்து வருகின்றார். 2000ம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற தேசியப் பாசறைகளிலும் கலந்து சிறப்பித்தனர்.

2010ஆம் ஆண்டு முதலுதவிப் படைப் பிரிவுக்கு திரு.எஸ்.இளங்கோ, திரு.சோ.ரஜீவ், திருமதி.தா.விஸ்ணுகாந்தன் ஆகியோர் சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர். முதலுதவிப் படையினர் வழமை போல் பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவி சிகிச்சைகளை மேற்கொண்டு வருவதுடன், ஆலய உற்சவ காலங்களிலும், இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போதும் மற்றும் கல்லூரி நிகழ்வுகளின் போதும் தமது சேவையைச் சிறப்பாக இன்று வரை ஆற்றி வருகின்றமை போற்றத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

School Band













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Band (பான்ட்)

எமது கல்லூரியில் 1988ம் ஆண்டளவில் அதிபர் திரு.அ. பஞ்சலிங்கம் அவர்களின் காலத்தில் திருமதி.ஜீவரட்ணம் நவரட்ணம் அவர்கள் பெண்களுக்கான பான்ட் அணியினை பல சிரமங்களுக்கு மத்தியில் ஆரம்பித்துவைத்தார். ஆண்களுக்கான பான்ட் அணி திரு.இ. மகேந்திரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. 1989ம் ஆண்டு திருமதி.சி.குணரட்ணம் அவர்களால் பெண்களுக்கான பான்ட் அணி உருவாக்கப்பட்டது.

பின்னர் 1993ஆம் ஆண்டளவில் ஆண்களிற்கான பான்ட் அணி முதன் முதல் திரு.இ. மகேந்திரன் அவர்களால் உருவாக்கப்பட்டது.

எமது கல்லூரியின் பான்ட் அணியினர் 1988ம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் கல்வி வலயம் - I இனால் நடாத்தப்பட்ட ஆண்களுக்கான பான்ட் அணிப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கேடயத்தையும், பரிசில்களையும் தமதாக்கிக் கொண்டனர். இவ் அணியை பலாலி இராணுவ முகாம் பாதுகாப்பு அமைச்சர் அழைத்து, மதிய போசன விருந்தும் அளித்துக் கௌரவித்தார். அத்துடன் யாழ் பல்கலைக்கழக வெள்ளி விழாவிற்கும் எமது கல்லூரியின் இரு அணிகளும் பான்ட் இசையுடன் அணிவகுப்பு மரியாதை வழங்கிப் பலரின் பாராட்டையும் பெற்றுக்கொண்டனர்.

2010ஆம் ஆண்டு பான்ட் அணிகளுக்குப் பொறுப்பாசிரியர்களாக திரு.S.ரஜீவ், திரு.N.மதிரூபன், செல்வி.S.தீபா, திருமதி.பு. இராஜேந்திரகுமார், திருமதி.S. நந்தகோபன் ஆகியோர் அதனைத் தொடர்ந்து வழிநடத்தி வருகின்றனர். எமது கல்லூரியின் தரம் - 06 மாணவர்களின் கால்கோள் விழா, இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள், பரிசளிப்பு விழா, நல்லூர் பிரதேச செயலகம் நடாத்திய விளையாட்டு விழாவில் அரச அதிபரின் வரவேற்பு, பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட விளையாட்டு போட்டி மற்றும் எமது கல்லூரியில் முதன் முதலாக நடைபெற்ற மாபெரும் துடுப்பாட்ட விழா போன்றவற்றிற்கும் இரு அணிகளும் அணிவகுப்பு மரியாதையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமா மன்றம்

ஈழ மண்ணில் கிறீஸ்தவப் பள்ளிகள் தோற்றம் பெற்ற போது அதற்கு இணையாக இந்துப் பாடசாலைகளும் எழுச்சி பெற்றன. சைவமும், தமிழும் தழைத்தோங்க வேண்டும் எனும் உயரிய நோக்கில் அமைக்கப்பட்ட இந்துக் கல்லூரிகளின் நோக்கை பூரணமாக நிறைவேற்றும் பணியை இக்கல்லூரிகளில் செயலாற்றும் இந்துமா மன்றங்கள் ஆற்றி வருகின்றன. அந்த வகையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1964 இல் இந்துமா மன்றம் சைவ இளைஞர் மன்றம் எனும் பெயரில் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது.

மன்றம் ஆரம்பமான காலங்களில் தேவாரங்களை ஒதுவார்களைக் கொண்டு 8ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு தேவார வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்தன. தலைவராக ஆசிரியர் திரு. எம். சின்னத்தம்பியும், செயலாளராக திரு. சி. சோமாஸ்கந்தரும் இருந்து மன்றத்தை வழிப்படுத்தினர். அன்று தொடக்கம் இன்று வரை சமய, கலாசார நிகழ்ச்சிகள், நாயன்மார்களின் குருபூசைத் தினங்கள், சிவராத்திரி, நவராத்திரி பூசை வழிபாடுகள் என ஆன்மீக வளர்ச்சிக்கான பணியை மன்றம் தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது. இவற்றை விட திருக்கேதீஸ்வரம், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயங்களின் திருவிழாக்களைச் செய்து வருகின்றது.

1967 இல் நவராத்திரி பூசையின் இறுதி நாளான விஜயதசமியன்று "சைவ இளைஞர் சிறப்பிதழ்" எனும் நூல் வெளியிடப்பட்டது. இம்மலரில் மாணவர்களின் ஆக்கங்கள் வெளிவந்தன. தைப்பொங்கல் தினத்தில் பாடசாலை முன்றலில் பொங்கல் நடாத்தி வருகின்றனர். 1981 இல் விவேகானந்த சபையுடன் சைவபரிபாலன சபையினரும் இணைந்து நடத்தும் பரீட்சையில் செல்வி. ம. ஜெயதேவி தங்கப் பதக்கம் பெற்றார். 1984 இல் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட பரீட்சையில் தரம் 12 இல் கல்வி கற்ற செல்வி. மு. கலாதேவி முதற்பரிசு பெற்றுப் புகழ் சேர்த்தார்.

1986 இல் அப்பர் சுவாமிகளின் ஊர்வலம் மன்றத்தால் பொறுப்பேற்று நடாத்தப்பட்டது. 1988 இல் திரு.த.கணேச பிள்ளை ஆசிரியரும், திருகு. சண்முகநாதன் ஆசிரியரும் இணைந்து காப்பாளராக செயற்பட்டனர். நவராத்திரி விழாவில் கலை விழாக்களை நடாத்தி மாணவர்களின் கலையார்வத்தை வெளிப்படுத்தினர். 1990 இல் சிவகாமி அம்மை, நடராஜப் பெருமானின் திருவுருவ வர்ணப்படங்கள் உருவாக்கப்பட்டன. சைவபரிபாலன சபையால் நாவன்மைப் போட்டி நடாத்தியபோது மத்திய பிரிவில் கு. தர்சிகா முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கமும் பெற்றார்.

1998 இல் இம்மன்றத்தினர் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்திற்கு புனருத்தாரண வேலைகளில் பொருளுதவி செய்து மகா கும்பாபிஷேகத்திலும் மன்றத்தினர் கலந்து கொண்டனர். 1999 இல் திரு. ந. விஜயசுந்தரம் வழி காட்டலில் திரு. ஆறு. திருமுருகனின் சொற்பொழிவு இடம் பெற்றதுடன் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டார். மற்றும் செல்வன். தே.விதுர்ஷன் யாழ் சைவ பரிபாலன சபையால் நடாத்தப்படும் புண்ணிய நாச்சியம்மையார் பண்ணிசைப் போட்டியில் கல்லூரியின் இந்துமா மன்றத்தின் ஊடாக இப்போட்டியில் பங்குபற்றி மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துமா மன்றம்









சேவைக் கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளிலும் முதலாம் இடம்பெற்று தங்கப் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத் துள்ளார். 2001 கீழ்ப்பிரிவிலும், 2004 மத்திய பிரிவிலும், 2007 மேற்பிரிவிலும் 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளார்.

மேலும் தே. விதூர்ஷன் இந்து கலாசார அமைச்சினால் 2ம் உலக இந்து மகா நாட்டையொட்டி நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் மாவட்ட ரீதியில் 3ம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டி யிலும் கல்லூரியின் சார்பில் பங்கு பற்றி கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். அத்துடன் 2005 ஆம் ஆண்டு யாழ் றோட்டரிக் கழகத்தினால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் கல்லூரியின் சார்பில் பங்குபற்றி 1ம் இடத்தைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

2004 இல் மன்றச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போது நீண்ட கால இடைவெளியின் பின் திருக்கேதீஸ்வர ஆலய திருவிழாவை தொடர்ந்து செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

2005இல் ஆசிரியர் திரு.தே. ஜெய குமாரின் வழிகாட்டலில் தொடர்ந்து மன்றம் செயற்பட்டு வருகின்றது. 2007 - 2008இல் செல்வன். கிருபஜீவன் தலைமையில் தொழிற்பட்ட மன்றம் ஆன்மீக செயற்பாடு களை முன்னெடுத்துச் செல்வதில் அரும்பணி யாற்றி வந்தது. திருநாவுக்கரசர் குரு பூசையின்போது திரு. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களின் சமயச் சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது. ஹன்டி பேரின்பநாயகம் கட்டடத்தின் மூன்றாம் மாடியில் அமைந்துள்ள பிரார்த்தனை மண்டபத்தில் 2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி சனிக்கிழமை (தைப்பூச தினத்தன்று) சரஸ்வதி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

2010இல் தைப்பொங்கல் விழா, புதுவருடப் பிறப்பு, கிருபாகர சிவசுப்பிர மணிய ஆலய வருடாந்த உற்சவம், திருக்கேதீஸ்வர வருடாந்த உற்சவம், நகுலேஸ்வர ஆலய உற்சவம் போன்ற சமய விழாக்களை சிறப்பாக நிறைவேற்றி தன் சேவையைத் திறம்பட ஆற்றி வருவது குறிட [illegible]த்தக்கது. இவ்வாறு இந்துமா மன்றம் தன சேவையை ஆற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம்

கொக்குவில் கிராமம் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதில் தனக்கென்றோர் தனியிடம் பெற்றுள்ளது. மாணவர் மத்தியில் இலைமறை காயாய் மறைந்திருக்கும் மொழிசார் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் தமிழ் மன்றம் செயற்பட்டு வருகின்றது. மேலும் மாணவர்களின் பேச்சுத் திறன், தலைமை தாங்கும் பண்புகளை வளர்க்கும் நோக்குடன் மன்றச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மாணவர்கள் மத்தியில் கட்டுரை, பேச்சு, கவிதை, இலக்கணம், நடனம், இசை, நாடகம் போன்ற போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தமிழ்த்தின விழா அன்று சான்றிதழ்களை வழங்கி ஊக்குவிப்பதுடன் மாணவர்களிடையே சிறந்த தேர்ச்சியையும் ஏற்படுத்தி வருகின்றது. அத்துடன் தமிழ்த் தின போட்டிகள் தவிர்ந்த ஏனைய நிறு வனங்களால் நடாத்தப்படும் போட்டிகளில் எமது மாணவர்களை பங்குபெறச் செய்து வழிப்படுத்தி வருகின்றது.

அக்கால கிராமியப் பண்பாடோடு வளர்ச்சி பெற்ற இசைக்கலை திருநாகலிங்கம் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் "இசைக்குயில்" திருமதி. சரஸ்வதி பாக்கிய ராஜாவினால் வளர்த்தெடுக்கப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து செல்வி. எஸ். சாந்தநாயகி, திருமதி.நே. நாகராஜா, திருமதி. எஸ். திருஞானம், திருமதி. ப.தாமோதரகுமார், திருமதி. கே. தேவராஜா, திருமதி.க.உதயந்தி, திரு.மதி ரூபன் போன்ற ஆசிரியர்களால் மன்றச் செயற் பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பண்ணிசையும் குப்பிளான் செல்லத்துரை, பண்டிதர் இராசையா ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் தொடரப் பட்டு போட்டிகளிலும் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கல்லூரியின் நடனக்கலை வளர்ச்சிக்கு வித்திட்டவர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்கள். அவரிடம் நடனம் பயின்ற மாணவர்கள் பலர் நடனப் பயிற்றுவிப்பாளர்களாக விளங்குகின்றனர். கல்லூரி விழாக்களில் மாணவர்களை பயிற்றுவித்து நடன நிகழ்ச்சிகளையும் அரங்கேற்றினார். இவரைத் தொடர்ந்து திரு.ஞானசேகரம் நடனக்கலையைத் தொடர்ந்தும் நடாத்தினார். இவரைத் தொடர்ந்து செல்வி. இ. ஜெகசொரூபி, திருமதி. ப. செல்வேந்திரகுமார், திருமதி. ஸ்ரீ.ஸ்ரீகாந்தன் போன்ற நடன ஆசிரியர் களால் தமிழ்த்தினப் போட்டிகளில் மாணவர்களை பங்குபெறச் செய்து கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற முன்னின்று உழைத்து வருகின்றார்கள்.

திரு. இ.மா. சிவசுப்பிரமணியம் பொறுப்பாசிரியராக இருந்தபோது தமிழ் மன்றங்களுக்கு ஊடாக நாடகம் 1977 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1997 ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டி களுக்கு திருமதி.க.சுந்தரேசன் அவர்களால் இலக்கிய நாடகம் மேடையேற்றப்பட்டு "குசேலன் நாடகம்" மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. கல்லூரி விழாக்களிலும் நாடகங்கள் மேடையேற் றப்பட்டு மாணவர்களிடையே நாடகத்துறை வளர்த்தெடுக்கப்படுகிறது. தற்போது நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தின் ஊடாக இவை மேலும் மெருகூட்டப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மன்றம் தமிழ்த்தின விழாவின் போது திருமதி. ரதி சந்திரநாதன் அவர்களால் "தேமதுரம்" என்ற நூல் மாணவரது ஆக்கங்களைத் தாங்கி வெளியிடப்படுகின்றது. எதிர்காலத்தில் இத்தமிழ் மன்றத்தின் செயற்பாடு திறன் மிக்கதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

"தேமதுர தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்னும் பாரதியின் முழக்கம் வலுவுற்றோங்கட்டும்.

வைத்திய கலாநிதி இராஜச்சந்திரன் பேச்சுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றோர்

ஆண்டு	மேற்பிரிவு	கீழ்ப்பிரிவு
1977 - 1978	செல்வன் மு. இராஜச்சந்திரன்	செல்வி சு. பத்மினி
1979	செல்வன். N. கிருஷ்ணகுமார்	செல்வி. M. சந்திரிக்கா
1978	செல்வன். N. கண்ணன்	செல்வி. N. சாந்திலா
1981	செல்வன். S. உருத்திரநாதன்	செல்வி. A. கலைவாணி
1982	செல்வன். K. ரகுபதி	செல்வி. R. பத்மினி
1983	செல்வன். S. முரளிதரன்	செல்வி. S. கம்சலா
1984 – 1985	செல்வன். அ. சரவணபவானந்தராஜ்	செல்வி. S. சுமதி
1986	செல்வன். வி. மதிதரன்	செல்வி. அ. இசைவாணி
1987	-	-
1988	செல்வன். து. சிவரூபன்	செல்வி. ந. நகுலினி
1989	செல்வன். T. ராகுலன்	செல்வி. பா. சாயிஜனனி
1990	-	-
1991	தனித்தனி ஆண்கள், பெண்களுக்குமாக தங்கப்பதம் வழங்கப்பட்டது.	
1992	-	-
1993	செல்வி ப. ஜெயரூபி	-
1994		-
1995 – 1996	செல்வி S. பிரபாலினி	-
1997	செல்வி கு. தர்ஷிகா	செல்வி தி. ஜனுஜா
1998	செல்வி தி. அருள்நிதி	செல்வி தி. காயத்திரி
1999	செல்வி ந. சுகந்தி	செல்வி வை. அபர்ணா
2000	செல்வி ப. சசிகலா	செல்வி கு. சிவாஜினி
2001	செல்வி இ. கஜேந்தினி	செல்வி வை. மீரா
2002	செல்வி த. அம்பாலிகா	செல்வி ப. போஜினி
2003	செல்வி யோ. சித்திரா	செல்வி த. தனுஜா
2004	செல்வி ப. மகிழினி	செல்வி தே. விதுர்சன்
2005	செல்வன். வி. நரேஷ்குமார்	செல்வன். வி. சஜரூபன்
2006	செல்வன். அ. உஷாந்தன்	செல்வி ஜெ. மதூஷிகன்
2007	-	-
2008	செல்வவி த. நாராயணி	செல்வி கு. இந்துஜா
2009	செல்வன். கு. தர்ஷிகா	செல்வி உ. சாந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப் போட்டிகள் விபரம்

ஆண்டு	போட்டிகள்	பிரிவு	இடம்	பெயர்கள்
1975	சடமாகாண ஆசிரிய சங்க போட்டி கட்டுரை இசை கூட்டுப்பாடல்	 1 2 3	 2 1 3	 ஆண்கள், பெண்கள்
1977	மாவட்டம் - சங்கீதம் / நடனம் பிரதேச பாடசாலைக்கு இடையிலான போட்டி – சங்கீதம் நடனம்		 1 2 1	பெயர்கள் குறிப்பிடவில்லை
1978	வட்டாரம் மாவட்டம் - கூட்டுப்பாடல்	- -	1 2	பெயர்கள் குறிப்பிடவில்லை
1979	வட்டாரம் - கூட்டு நடனம் கூட்டு நடனம் மாவட்டம் - கூட்டு நடனம் கூட்டு நடனம் அகில இலங்கை ஆறுமுக நாவலர் பேச்சுப்போட்டி கூட்டுறவு அபிவிருத்தி தினைக்களத்தின் 50வது ஆண்டு நிறைவு விழா அகில இலங்கை – கட்டுரை	 கீழ்் மேல்	 1 2 2 2 1 1	பெயர்கள் குறிப்பிடப்படவில்லை செல்வி. தி. இந்துமதி செல்வன். N. கண்ணன்
1980	நாவலர் நூற்றாண்டு விழா – பேச்சு மாவட்ட நிலை – நடனம்-குழு	கீழ் மேல்	அகில இலங்கை 1 2	செல்வி. தி. இந்துமதி செல்வி. N. சாந்திகா
1981	வட்டாரம் - குழுநடனம் வட்டாரம் - குழுநடனம் வலயம் - இசைப்போட்டி – குழு	மேல் கீழ் மேல் மேல்	1 2 1 1	பெயர்கள் குறிப்பிடப்படவில்லை
1982	சர்வதேச சுவஜன வாக்குரிமை 50ம் ஆண்டு நிறைவுப் போட்டி – பேச்சு திருக்குறள் - மனனம் பேச்சு மாவட்ட நடனம் - குழு கதகளி வலயம் - இசை – தனி மாவட்டம் - இசை – குழு	கனிஷ்ட சிரேஷ்ட தனி மத்திய மத்திய மத்திய திறந்த போட்டி 3	1 2 3 1 2 3 3 3 2 2 1 1	செல்வி து. சுரேஜினி செல்வி சி. சிவாஜினி செல்வி ம. ஜெயதேவி செல்வி தி. இந்துமதி செல்வன். மு. ஸ்ரீநாதன் செல்வி இ. இளங்கேஸ்வரி செல்வன். செ. ஸ்ரீனிவாசன் செல்வி க. சிவசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு	போட்டிகள்	பிரிவு	இடம்	பெயர்கள்
1983	வட்டாரம் - தனி இசை			
	வட்டாரம் - கூட்டுப்பாடல்	மேல்	2	மாணவன் (பெயர்
	வட்டாரம் - நடனம்	கீழ்	1	குறிப்பிடப்படவில்லை)
	வட்டாரம் - நடனம் - கதகளி குழு நடனம்	மத்திய	3	மாணவிகள்
	வட்டாரம் - பண்ணிசை	மத்திய	1	செல்வி. ந. நகுலினி
	தனிப்பாடல்			செல்வி. தே. சுபாசினி
		மேல்	1	செல்வி. இ. துஷ்யந்தி
		மேல்	1	செல்வி. செ. ரூபகாந்தி
				பெண் (பெயர்
				குறிப்பிடப்படவில்லை)
				செல்வன். தி. கருணாகரன்
1984-1987	மாவட்டம் - நடனம் - குழு நடனம்	மத்திய	2	பெயர்கள்
	கதகளி	மேல்	2	குறிப்பிடவில்லை
1988	மாவட்டம் - கிராமிய இசை	மேல்	1	மாணவர்கள்
		கீழ்		
1989	கர்நாடக இசை — புல்லாங்குழல்	கீழ்	1	செல்வன். கு. நக்கீரன்
1991	மாவட்டம் - பண்ணிசை	மேல்	1	செல்வன். க. சாரங்கன்
	குழு-இசை	3	2	மாணவிகள்
	நடனம்	3	3	செல்வி. ச. தேவகிதேனுமதி
1992	கொத்தணி-இசை-தனி	3	1	செல்வி. இ. சுகந்தினி
1993-1994	கிளிநொச்சி — நாவன்மை	-	1	செல்வி. கு. தர்ஷிகா
	மாவட்டம் - சாஸ்திரிய நடனம்	3, 4	1	
1995-1996	மாவட்டம் - ஆக்க நடனம்	4	2	
	மாவட்டம் - நடனம் குழு	3	2	
	ஆரிய திராவிட பாஷாவிருத்தி		1	
	சுங்கப்போட்டி	மேல்		செல்வன். வி. விஜயநாதன்
1997	மாவட்டம்	2	1	செல்வன். நா. கஜேந்திரா
	மாவட்டம் - தனி நடனம்	3	1	செல்வி. அ. லாவண்யா
	மாவட்டம் - குழு நடனம்	-	3	
	நாட்டார் பாடல்	-	2	
	மாகாணம் பாவோதல்	திறந்தபோட்டி	2	
	மாகாணம் நாடகம்	4		
		திறந்தபோட்டி	3	செல்வி. நா. சுகந்தி
1998	மாகாணம் பேச்சு	5	3	செல்விதி. அருள்நிதி
	மாவட்டத் தெரிவுகள்	3	1	
	வலயம் - தனி இசை	3	2	செல்வி. ந. தனலொரூபி
	மாவட்டம் - குழு இசை	திறந்தபோட்டி	2	
	வலயம் - பாவோதல்	5	2	செல்வி. பா. யசிந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு	போட்டிகள்	பிரிவு	இடம்	பெயர்கள்
1999	மாவட்டம் - இசை	4	2	செல்வி. ந. தனசொரூபி
	மாவட்டம் - நடனம் தனி	3	1	செல்வன். தி. ரவிதர்ஷன்
	மாவட்டம் - இசை குழு		2	
2000	மாவட்டம் - தனிநடனம்	3	2	செல்வி. ப. விஜயதீபா
	மாவட்டம் - பாவோதல்	கீழ்	1	செல்வி. ந. தனசொரூபி
	மாவட்டம் - தனி இசை	5	1	செல்வி. சு. சிந்துஜா
	மாவட்டம் - பாவோதல்	மேல்	1	செல்வி. செ. ஊர்மிளா
	மாவட்டம் இசை — குழு I	திறந்த	3	பெண்கள்
	மாவட்டம் - இசை குழு II	போட்டி	2	
2001	மாவட்டம் - பேச்சு	கீழ்	2	செல்வன். தே. விதுர்ஷன்
	தேசிய மட்டம் -	5	1	செல்வவி. ந. தனசொரூபி
	தனி இசை			
2002	மாவட்டம் - பேச்சு	திறந்த	3	மாணவிகள்
	தேசிய மட்டம் -	போட்டி	2	செல்வி. ப. காயத்திரி
	தனி இசை	4	2	
2003	தேசிய — நடனம்	2		செல்வன். தே. விதுர்ஷன்
	மாவட்டம் - இசை	4	3	செல்வன். அ.
	மாகாணம் - குழு நடனம் I	திறந்த	2	அமிர்தவோஜன்
		போட்டி	3	மாணவிகள்
	மாவட்டம் - வயலின்			மாணவ, மாணவிகள்
			2. 3	
	தேசியம் - பண்ணிசை	4		செல்வி. ப. காயத்திரி
	உலக இந்து மாநாடு)			செல்வி. ப. ரோகினி
				செல்வன். தே. விதுர்ஷன்
2004	மாகாணம் - தனிநடனம்	3	1	செல்வன். தே. விதுர்ஷன்
	தேசியம் - தனிநடனம்	3	2	செல்வன். தே. விதுர்ஷன்
	தமிழியற் கட்டுரை	5	1	செல்வி. க. கஜேந்தினி
	மாவட்டம் - தனி இசை	5	2	செல்வி. சி. வலஜி
	மாவட்டம் - குழுநடனம் ஐ	மேற்பிரிவு	1	மாணவர்கள்
	மாவட்டம் - குழுநடனம்	திறந்தபோட்டி	2	மாணவர்கள்
2005	மாவட்டம் - தனிநடனம்	2	2	செல்வி. ஜெ. டிவ்யா
	மாவட்டம் - பேச்சு	4	3	செல்வன். லி. நரேஷ்குமார்
	மாவட்டம் - பாவோதல்	1	1	செல்வன். ஜெ. மதூஷிகன்
	மாவட்டம் - குழு இசை ஐஐ			செல்வன். ஜெ. மதூஷிகன்
	மாகாணம் - பாவோதல்	1	2	
2006	மாவட்டம் - குழு நடனம் ஐ	திறந்த	2	மாணவ, மாணவியர்
	மாவட்டம் - தனி இசை	போட்டி		
		2	2	
2007	மாவட்டம் - பாவோதல்			செல்வன். ஜெ. மதூஷிகன்
	மாகாணம் - பாவோதல்	2	1	செல்வன். ஜெ. மதூஷிகன்
	தேசியம் - பாவோதல்	2	2	செல்வன். ஜெ. மதூஷிகன்
	மாவட்டம் - குழு இசை	2	3	
		திறந்தபோட்டி	2	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு	போட்டிகள்	பிரிவு	இடம்	பெயர்கள்
2008	மாவட்டம் - நாட்டுக்கூத்து சிந்துநடை	திறந்த போட்டி	2	மாணவியர்
	மாவட்டம் - பேச்சு	3	1	செல்வன். ஜெ. மதூஷிகன்
	மாகாணம் - பேச்சு	3	3	செல்வன். ஜெ. மதூஷிகன்
2009	மாவட்டம் - பேச்சு	3	3	செல்வி. க. யஸ்மிதா
	மாவட்டம் - பாவோதல்	2	2	செல்வி. கோபிகா
	மாவட்டம் - சிறுகதையாக்கம்	4	1	செல்வி. ஸ்ரீ சுகுமாரி (தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்)
	மாவட்டம் - இலக்கணப்போட்டி	4	3	செல்வி. அ. பிரியங்கா
2010	வலயம் - தனிநடனம்	2	2	செல்வி. கு. கல்பனா
	மாவட்டம் - பேச்சு	2	2	செல்வன். மதுராங்கன்
	மாவட்டம் - கவிதையாக்கம்	5	3	செல்வி. ச. தருக்ஷனா
	வலயம் - தனிநடனம்	5	2	செல்வன். இ. நிரோஜன்

மகேஸ்வரி புலமைப்பரிசில்

கர்நாடக சங்கீதத்தையும், பண்ணிசையையும் வளர்க்கும் பொருட்டு திரு.ப. செல்வநாயகம் அவர்களால் 1981இல் 7500/- வங்கி வைப்புச் செய்யப்பட்டு போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

ஆண்டு	கீழ்ப்பிரிவு	மேற்பிரிவு	
1982	செல்வி. சி. வத்சலா செல்வி. சி. கலையரசி செல்வி. செ. கிருஷாந்தினி	செல்வி. தி. மாலினி செல்வி. தி. வினோதினி செல்வி. இ. சிரோமினி	
1983	செல்வி. வை. சேதா செல்வி. சி. கலையரசி செல்வி. ந. சந்திரிக்கா	செல்வி. ச. சத்தியபாமா செல்வி. ச. விஜயலக்சுமி செல்வன். க. தவராஜா	
ஆண்டு	**மத்திய பிரிவு**	**மேற்பிரிவு**	**அதிமேற் பிரிவு**
1985-1986	செல்வி. த. தேவிகா செல்வி. க. சிவநந்தினி செல்வி. ந. வாசுகி செல்வன். ஸ்ரீ சந்திரமோகன் செல்வன். செ. சத்தியராஜா செல்வன். ம. சுந்தரேஸ்வரன்	செல்வி. செ. சேதா செல்வி. வை. யசோதை செல்வி. வை. கல்யாணி செல்வன். கு. தாமோதரன் செல்வன். கு. நக்கீரன்	செல்வி. யோ. கிருஷாந்தி செல்வி. ந. சந்திரிக்கா செல்வன். தி. கருணாகரன்
	மத்திய பிரிவு	**மேற்பிரிவு**	**அதிமேற் பிரிவு**
1987	செல்வன். க. ஆனந்தகுமார் செல்வன். கு. நக்கீரன் செல்வன். ம. கு. தாமோதரன் செல்வி. வை. யசோதா செல்வி. வை. கல்யாணி செல்வி. சு. சுபத்திரா	செல்வி. யோ. கிருஷாந்தி செல்வி. தே. சுருனேஸ்வரி செல்வி. கு. றேமளா செல்வி. த. நகுலினி - -	செல்வன். ஸ்ரீ. சந்திரமோகன் செல்வன். செ. சத்தியராஜா செல்வன். க. சிவதாசன் செல்வி. ச. நில்மேரா செல்வி. பொ. சுகந்தி செல்வி. ந. வாசுகி
2007	செல்வன். தே. விதுர்ஷன்	-	செல்வன். ஜெ. மதூஷிகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கழகம்

ஆசிரியர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக இக்கழகம் 1950 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. 1950களிலிருந்து தினசரி வாரப் பத்திரி கைகளையும், சஞ்சிகைகளையும் பெற்று ஆசிரியர்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் களிக்க இக்கழகம் உதவுகின்றது.

எமது கல்லூரியில் புதிதாக இணைந்து கொள்ளும் ஆசிரியர்களை வரவேற்று உப சரிப்பதுடன் இடமாற்றம் பெறறு அல்லது ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களைக் கௌரவித்து வழியனுப்பி வைப்பதும் இக்கழகத்தின் தலையாய கடமையாகும்.

மற்றும் ஆசிரியர்களின் இல்லங்களில் நடைபெறும் மங்கல அமங்கல நிகழ்வு களில் பங்குபற்றிச் சகல உதவிகளையும் நல்கி வருகின்றது. மேலும் ஆசிரியர்களின் நலன் கருதி கடன் சேவை ஒன்றினையும் மேற்கொண்டு வருகின்றது. 25 வருட சேவையை பூர்த்தி செய்த ஆசிரியர்களை ஆசிரியர்தின விழாவின் போது கௌர வித்தும் வருகிறது. இவ்வாறு காலத்துக்குக் காலம் பல்வேறு கருமங்களை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

♣ ♣ ♣

உயர்தர மாணவர் மன்றம்

மாணவர்களின் தமிழ், ஆங்கில மொழி யாற்றல்களையும் ஆளுமைத் திறன் களையும் விருத்தி செய்யும் நோக்கமாக 1952 ஆம் ஆண்டளவில் CURIA, HISTORICA என்ற பெயரில் மன்றம் இயங்கி வந்தது. காலஓட்டத்தில் இம்மன்றம் உயர்தர மாணவர் மன்றம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. இம்மன்றத்தின் ஊடாக சகோதரப் பாடசாலை மாணவர்களுடன் நல்லெண்ணங்கொண்ட மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கும், சமத்துவத்தை பேணவும், தலைமைத்துவப் பண்பை வளர்க்கவும் செயலாற்றி வருகின்றது.

1985ஆம் ஆண்டு வரை இம்மன்றம் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலின் போது பிரதம விருந்தினர்களையும், மாணவ பிரதிநிதிகளையும், பொறுப்பாசிரி யர்களையும் அழைத்து இராப்போசன விருந் துபசாரம் வழங்கி மகிழ்வித்தது. பின்னர் மதிய போசன விருந்துபசாரமாக மாற்ற மடைந்து தற்போதும் இயங்கி வருகின்றது.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித விஞ்ஞான மன்றம்









புத்தாக்குனர் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித விஞ்ஞான மாணவர் மன்றம்

எமது கல்லூரி மாணவர்களின் கணித, விஞ்ஞான அறிவை விருத்தி செய்யும் நோக்கமாக 1976ஆம் ஆண்டு திரு.க.சந்திர மௌலீசன் ஆசிரியரால் உருவாக்கப் பட்டது. அதாவது மாணவரிடையே விஞ்ஞான அறிவை விருத்தி செய்யவும், மறைந்திருக்கும் மாணவர்களின் ஆற்றலை வெளிக்கொணரவும், அவர்களை ஆளுமை மிக்கவர்களாக, சுயசிந்தனை உடை யவர்களாக ஆக்குவதுமாகும்.

1991, 1992 காலப்பகுதிகளில் கணித விஞ்ஞான மன்றத்திற்கு பொறுப்பாசிரி யராக திரு.க.வேலாயுதம் விளங்கினார். இம்மன்றம் வாரம் ஒரு முறை கூட்டப்படு கின்றது. வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்து விரி வுரைகள் நடாத்தப்பட்டன. இவைகள் மாணவரின் அறிவு விருத்திக்கு ஊக்க மளிக்கப்பட்டன.

1993, 1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து கணித விஞ்ஞான மன்றப் பொறுப்பாசிரிய திரு.க.வேலாயுதம் தொடர்ந்தும் மேற்கொண்டார். 1995 ஆம் ஆண்டு முதன் முதலாக "சாரதி" சஞ்சிகை வெளியிடப் பட்டது. இதுவரை எட்டு சஞ்சிகைகள் வெளிவந்தமை பாராட்டு தற்குரியது.

2004 இல் வலய மட்டத்தில் நடாத் தப்பட்ட கணித விஞ்ஞானப் போட்டியில் தரம் 7 மாணவன் செல்வன் வி. நிரோஜன் மாவட்ட, மாகாண போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடத்தை பெற்றுள்ளார். மேலும் இம்மாணவன் 2005, 2006 காலப்பகுதியில் தரம் 8ல் வலய மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவாகியமை பாராட்டுதற்குரியது.

மற்றும் எமது மாணவர்கள் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினால் நடாத்தப்பட்ட வினாவிடைப் போட்டி, விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி, பொருட்காட்சி ஆகிய வற்றில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றுள்ளனர். 2008ஆம் ஆண்டு வலயமட்ட கணித வினா விடைப் போட்டியில் தரம் 8A சேர்ந்த செல்வன். எஸ்.தனுசன் முதலாம் இடத்தைப் பெற்றமை பாராட்டுதற்குரியதாகும்.

இவ்வாறு கணித விஞ்ஞான மன்றம் மாணவர்களிடையே கணித பாடத்தை வலுவூட்டும் செயற்பாடாக 2009 ஆம் ஆண்டு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கணிதப் பாசறை நிகழ்வை நடாத்தி ஊக்கமளித்துள்ளது.

சாரதி இதழ் 2இற்கு சேகரித்த பணத்தின் மீதியில் மேடையில் நின்று பேசுவதற்கு உதவும் Podium (stand) பாடசாலைக்கு கொடுக்கப்பட்டதுடன் சாரதி இதழ் 4இற்கு சேகரித்த பணத்தின் மீதியில் பாடசாலை நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. மேலும் சாரதி இதழ் 5இற்கு சேகரித்த பணத்தின் மீதியில் சிறுவர் நூலகத்திற்குக் கண்ணாடி அலுமாரி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

2010இல் திரு. க.வேலாயுதம், திரு.ந. கந்தவனச்செல்வன், செல்வி. க. நமசிவாயம் ஆகியோரின் பொறுப்பில் இம்மன்றம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரறக்ட் கழகம்

இணைப்பாடவிதான செயற்பாட்டில் மன்றங்கள், கழகங்கள் இயங்கி வருகின்றன. இவை மாணவரிடையே கற்றல் மட்டுமன்றி ஆளுமைத்திறன், பேச்சாற்றல், சமூக ஒருமைப்பாடு என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அந்த வகையில் இன்ரரக்ட் கழகம் 1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் றோட்றிக் கழகத்தின் மாணவக் கழகமாகும். திரு.அ.பஞ்சலிங்கம் அதிபராக இருந்த போது மாணவர்களின் திறனை வெளிக் கொணரவேண்டும் என்ற பெருவிருப்புடன் திரு. கிருஷ்ணகுமார் ஆசிரியரின் பொறுப்பில் ஆரம்பிக்கப்பட்டு தொடர் சேவையாற்றி வருகின்றது. இக்கழக உறுப்பினர்கள் பாடசாலைக்கும், பாடசாலைக்கு வெளியேயும் சமூகத்துடனும் இணைந்து சேவையாற்றி வருகின்றனர். இக்கழகத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களே உறுப்பினர்களாக இணைந்து கொள்ள முடியும். 1995 வரை சமூகநலன் கருதி பல செயற்கரிய சேவைகளை ஆற்றி வந்துள்ளது.

இக்கழகத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம், பூப்பந்து என்பவற்றை சகோதரப் பாடசாலை இன்ரறக்ட் கழக உறுப்பினர்களிடையே போட்டிகளை நடாத்தி பரிசில் வழங்கி கௌரவித்தனர்.

மாணவர்களுக்கு வருடாவருடம் சின்னம் சூட்டப்பட்டது.

கொக்குவில் C.C.T.M பாடசாலை தூய்மை செய்யப்பட்டதுடன், கைதடி முதியோர் இல்லம் சென்று சிரமதானமும் செய்யப் பட்டது.

எமது பாடசாலை, விடுமுறைக் காலங்களில் தூய்மை செய்து கொடுக்கப்பட்டது.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்பும் முடி வடைந்த பின்னும் வீதி ஒழுங்கு பேணப்படுகிறது.

1996ம் ஆண்டின் பின்னர் இன்ரறக்ட் கழகமானது பணவருவாய் பெறும் நோக்கமாகத் தமது சேவையை விரிவாக்கியது.

நல்லூர் திருவிழாவின் போது எமது கழகம் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் நடாத்தி பணவருவாயைப் பெற்றுக் கொண்டது.

வீதிப் பாதுகாப்புச் சபை உறுப்பினரை அழைத்து இன்ரறக்ட் கழக உறுப்பினர் களுக்கு வீதி ஒழுங்கு விதிகள் பற்றி கருத்துரை வழங்கப்பட்டது.

பாடசாலையில் 30,000/= செலவில் பூப்பந்தாட்டத் திடல் 1999ம் ஆண்டு கால இன்ரறக்ட் கழக உறுப்பினர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

"சுரபி" என்னும் சஞ்சிகை இன்ரறக்ட் கழகத்தினால் வருடா வருடம் வெளி யிடப்பட்டு வருகின்றது.

பாடசாலை விழாக்களுக்கு அலங்கரிப் பதற்கான அலங்கார மாலை செய்து கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரறக்ட் கழகம்



2010 அங்கத்தவர்கள்



2010 கம்பனி அங்கத்தவர்கள்



2009 இரத்த தானம்



யாழ் மாவட்டம் சிறந்த இன்ரறக்ட் கழகம்

கணினிக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மேடைக்கு திரைச்சேலை மறைப்புச் செய்து கொடுக்கப்பட்டது.

சமூக சேவையாக வருடா வருடம் சுகாதார உத்தியோகத்தரின் துணையுடன் கொக்குவில் கிராம மக்களின் கிணறு களுக்கு குளோரின் இடப்பட்டது.

டெங்குநோய் ஒழிப்புக்கான கருத் தரங்கு நடாத்தியதுடன் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது.

பாடசாலையை அழகுபடுத்தும் நோக் குடன் வடபகுதி முன்வாயில் பூமரம் நடுவதற்கான வளைவு 40,000/- செலவில் அமைத்து பூமரம் நாட்டப்பட்டதுடன் நடைபாதையும் போடப்பட்டது.

உரும்பிராயில் பொக்கணை என்ற இடத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டி நடாத்தி பரிசில் களும் வழங்கப்பட்டன.

கொக்குவிலில் ஐந்து பாலர் பாடசாலை களுக்கும் மருத்துவ தாதியின் வேண்டு கோளுக்கு அமைய பற்தூரிகையும், பற் பசையும் கொடுத்து ஆலோசனை வழங்கப் பட்டது.

எமது பாடசாலையில் இன்ரநெட் தகவல் தொடர்பாடலை ஏற்படுத்த ஆரம்பிக்கப் பட்டு அதற்கான தகவல் சு.வே.மகேந்திரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

றோட்டறிக் கழக ஆலோசனைக்கு அமைய பாடசாலையில் 'மல்டிக் கொம்பி ளெக்ஸ்'என்ற பெயரில் வர்த்தக மையம் ஆரம் பித்து முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

விழிப்புலனற்றோர் வாழ்வகத்திற்கு உதவும் முகமாக வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு வாழ்வக நிர்வாகியான ரவீந் திரனை அழைத்து கௌரவிக்கப்பட்டது.

வாழ்வக முகாமையாளரின் வேண்டு கோளுக்கமைய ஆவணம் பேணும் அலுமாரி ஒன்று 10,000/- பெறுமதியில் வழங் கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு 79 பேர் இரத்த தானம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ் பல்கலைக் கழகத்தினால் நடாத் தப்பட்ட லூதர் ஜெயசிங் நினைவு வினா விடை போட்டியில் பங்குபற்றி க. மகேஸ் வரன் அதிக புள்ளிகளைப் பெற்று பரிசில் வாங்கியதுடன் சிறந்த இன்ரறக்ட் விருதையும் பெற்றுக் கொண்டார்.

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் எமது கழகம் கலந்து முதலிடத்தை செல்வன். பிறேம்குமார் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறாக பல சேவைகளை காலம் காலமாக செய்து வருவதனால் யாழ்ப்பாண இன்ரறக்ட் கழகம் அமைந்துள்ள கல்லூரி களில் கொக்குவில் இந்துக் கல்லூரி முதன்மை யுடையதாக பலரது பாராட்டையும் பெற்று சிறந்து விளங்குவதுடன் றோட்டறிக் கழ கத்தினால் வழங்கப்படும் சிறந்த இன்ரறக்ட் கழக விருதினையும் பெற்று வருகிறது.

இத்தகைய செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் திருமதி. கலா சுந்தரேசனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக மன்றம்

1989 இல் திரு. இ. மகேந்திரன் உப அதிபர் அவர்களின் அனுசரணையுடன் வணிக மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இம்மன்றம் 1993 இல் திரு.மு. வேலாயுத பிள்ளை பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் வணிகச்சுடர் முதன் முதலாக வெளியிடப்பட்டது. இது மாணவர்களின் ஆக்கங்களையும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்தது. இம்மன்றம் வாரத்துக்கொரு முறை கூடி மாணவர்களின் ஆளுமைகளை வளர்த்துக் கொண்டது. இதனால் வணிகத்துறை எமது கல்லூரியின் சிறந்த இடத்தைப் பெற்றுக் கொண்டது.

1999 இல் றோட்டறிக் கழகத்தினால் நடாத்தப்பட்ட முயற்சியாண்மை என்பதை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. அதற்கமைய வலம்புரி என்ற பெயரில் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த பாராட்டையும் பெற்றுக் கொண்டது. 2006ம் ஆண்டு மீண்டும் றோட்டறிக் கழகத்தின் முயற்சியாண்மை மதிப்பீட்டில் இன்ரறக்ட் கழகம் சார்ந்த வணிக மாணவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டுத் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டது. அதற்கு ஆலோசகராக செல்வி. பு. கனகசபை ஆசிரியர் அவர்கள் விளங்கினார்.

இவை மட்டுமன்றி வங்கிப்பழக்கத்தை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொருட்டு வணிக மன்ற மாணவர்களைக் கொண்டு இலங்கை வங்கி பொன் அரும்புத் திட்டம் என்ற பிரிவினை இப்பாடசாலையில் ஆரம்பித்தது. இது போன்று மக்கள் வங்கியும் "சிசு உதான" என்ற பிரிவினை இப்பாடசாலையில் ஆரம்பித்து பொது அறிவுப் போட்டியையும் நடாத்தி முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டு எட்டாவது வணிகச்சுடர் வெளியிடப்பட்டது. இவ்வணிக மன்றம் திரு.மு.வேலாயுதபிள்ளையின் தலைமையில் இயங்கி வந்த போது வர்த்தகத்துறையை விரிவுபடுத்த கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இவ் வணிகத்துறையில் வருடா வருடம் 3A சித்தி பெற்று பல மாணவர்கள் பல்கலைக் கழகம் தெரிவாகிவருவதும் குறிப்பிடத் தக்கதொன்றாகும். யாழ் மாவட்டத்தில் வணிகக்கல்வியை சிறப்பாகக் கற்பிக்கும் கல்லூரியாக கொக்குவில் இந்துக் கல்லூரி விளங்குவது இம்மன்றத்தின் முயற்சியே ஆகும்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரக் கலாமன்றம்



வணிக மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரக் கழகம் – 2010



சுற்றுப்புற சூழல் கழகம் – 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக் கழகம்

மாணவர்களிடையே ஒழுங்கையும், கடமையுணர்வையும் ஏற்படுத்தும் பொருட்டு சேவைக்கழகம் 1989 ஆம் ஆண்டு திரு. த.தேவராஜா, திரு.எஸ்.வி. மகேந்திரன் ஆகியோரைப் பொறுப்பாசிரியர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் இணைந்து கொண்ட மாணவர்கள் பாடசாலைக்குள் மாணவர்களின் துவிச்சக்கரவண்டிகளை ஒழுங்காகப் பாதுகாத்தல், பரீட்சை மண்டபத்தினை ஒழுங்கு செய்தல், பூந்தோட்டங்களை பராமரித்தல், உடற் பயிற்சி நடைபெறும் போது அங்கு ஒழுங்கினைக் கண்காணித்தல் முதலிய சேவைகளை செய்து வருகின்றனர்.

இக்கழகம் பாடசாலைக்குள் இயங்கி கல்லூரியின் சூழலையும் தூய்மை செய்து வருகின்றது. மாணவரிடையே சேவை மனப்பாங்கை வளர்த்தற் பொருட்டு 1997இல் திருமதி. க. இராஜசுந்தரம், திரு. ஆனந்தராஜா ஆகியோர் பொறுப்பாசிரியராக இருந்தபோது அங்கத்தவர்களுக்குச் சின்னம் சூட்டியதுடன் சிறந்த சேவையாளர் பரிசும் வழங்கி ஊக்கு விக்கப்பட்டது. 2005ம் ஆண்டு யாழ்ப்பாண விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தினால் எமது கல்லூரியில் மூன்று தினங்களாக நடைபெற்ற கண்காட்சியின் போது துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பினை மேற்கொண்டு நிதி சேகரித்தது. இவ்வாறு வருடா வருடம் அங்கத்தவர்களை தெரிவு செய்து இயங்கி வருவது சிறப்பம்சமாகும்.

தற்போது இம்மன்றம் திரு.சி. சிவராம், திரு.சோ.முகுந்தன், திருமதி. இ. தயானந்தன் ஆகியோர் தலைமையில் இம்மன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English Union

The key to the world of knowledge is English Language. Our mother tongue is unable to bring us the new trends of the various fields of education. Therefore the schools are looked upon by everyone to provide the children with all the facilities to learn this language.

English unions are one among the best to make the child interested in learning English. Among the activities of English Union, English Day celebrations are looked forward by the students with great zest. Realizing this Mr.T.Devarajah, our former Deputy Principal and the Head of the English Department first started the English Day Celebrations in the year 1991 and it has become an annual feature of Our College. Mr.Thurai Thiagarajah Deputy Director of Education was the Chief Guest on this Occasion. Oratory, Action Songs, Choral Recitation and Dramas were staged.

Every year the English Language Day Competitions are held in order to motivate the students in learning English. The highlight of the event in the English Day Celebrations in 1993 was the publication of the English magazine ***"The Breeze"*** This was a historical in the history of our English Union.

In 1995 and 1996 English Day Celebrations were not held owing to the reasons beyond our control. In 1997 the English Day Celebrations was in full swing and the Magazine ***"The Breeze"*** was published as usual. Another remarkable event in this year was ***"Sivananthan Oratorical Contest"*** in which the winners of the 1st places in both the Junior and the Senior levels were awarded Gold Medals sponsored by Mr.K.Sivanantham, Attorney - at - law, an old student of Our College. This contest is being conducted annually and the winners of the 1st places are being awarded gold medals and the winners of the 2nd and 3rd places are being awarded cash prizes.

In the following years we beat all the schools in the Divisional Level English Day Competitions. The number of winners exceeded every year and English Day Celebrations were held regularly. All the usual activities of the English Union and English Language Competitions in particular the release of magazine have been going on uninterupted. The English Union has been commended for its remarkable achievements and its contributions towards the uplift of English Language. We are really proud and happy to declare that our students performances have been commended well in all these occasions.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

English Union





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Year	Divisional Level			Zonal Level			District Level			Provincial Level		
	1st	2nd	3rd	1st	2nd	3rd	1st	2nd	3rd	1st	2nd	3rd
1991	18	16	5	4	3	2	2	1	_	_	_	_
1992	19	17	3	2	7	1	_	_	_	_	_	_
1993	24	26	3	6	8	1	_	_	_	_	_	_
1994	11	10	13	5	8	7	_	_	_	_	_	_
1995	*No English Language Competitions were held*											
1996	13	12	14	6	7	8	_	_	_	_	_	_
1997	10	14	16	3	2	1	2	1	_	_	_	_
1999	8	12	11	2	2	2	_	_	_	_	_	_
2000	13	14	10	2	2	6	_	_	_	_	_	_
2001	11	12	9	1	3	2	_	_	_	_	_	_
2002	9	8	10	2	2	1	_	_	_	_	_	_
2003	10	12	5	1	3	1	_	_	_	_	_	_
2004	11	10	2	3	2	1	_	_	_	_	_	_
2005	12	10	7	3	4	5	1	2	_	_	_	_
2006	8	10	7	4	3	3	_	_	_	_	_	_
2007	11	10	11	4	3	2	_	_	_	_	_	_
2008	12	8	8	4	3	3	_	_	_	_	_	_
2009	8	7	9	1	5	3	2	_	_	1	_	_

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய விஞ்ஞானக் கழகம்

1995ஆம் ஆண்டு ஆசிரியர் திரு. அ. தனபாலசிங்கம் அவர்களைக் காப்பாளராகக் கொண்டு இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகம் விவசாய விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களை உள்ளடக்கி அவர்களின் கல்வி விருத்திக்கு உதவி வந்துள்ளது.

இக்கழகம் விவசாய செய்முறையை பெருக்கும் நோக்குடன் பாடசாலை நிர்வாகத்தில் புதிதாக சீரமைக்கப்பட்ட விவசாயக் காணியில் பல பயன்தரு மரங்களையும் பயிர் வகைகளையும் நாட்டி அவற்றைப் பாதுகாப்புச் செய்து வந்துள்ளது. பாடசாலைச் சூழலை அழகுபடுத்தும் முயற்சிகளும் எடுத்து வருகின்றது. மற்றும் மாணவரிடையே விவசாய அறிவை வளர்த்தல் பொருட்டு பொது அறிவுப் போட்டிகளை நடாத்தி அவர்களுக்கு சான்றிதழ்கள் பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்பட்டு வருகின்றது.

2005 இல் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட குறுவினாப் போட்டியில் செல்வி. கி.டல்சினி, செல்வி. வி.துளசிகா ஆகியோர் 1ம், 2ம் இடங்களைப் பெற்ற தோடு தரம் 10 மாணவர்களான செல்வி. செ. தர்சனா, செல்வன். இ. வினுசரன் ஆகியோரும் 1ம், 2ம் இடங்களைப் பெற்றனர். இக்கழகம் 2010இல் திரு.ஆ.ஸ்ரீதரன் ஆசிரியரின் தலைமையில் தொடர்ந்தும் செயலாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

* * *

றேடியோ கழகம்

மாணவர்களுக்கு தொழில்நுட்பத்தை கற்பித்தற் பொருட்டு திரு. ஊ. சிவசோதி ஆசிரியரால் இக்கழகம் ஆரம்பிக்கப் பட்டது. இக்கழகத்தில் மின்கம்பி பொருத்தும் பயிற்சி வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டது. இவருடைய காலப் பகுதியில் நடைபெற்ற கண்காட்சியில் மாதிரிப் புகையிரதம் 'யாழ்தேவி" என்ற பெயரில் வைக்கப்பட்டது. இது பலரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது. பின்னர் தொழில்நுட்பக் கழகம் என்ற பெயரில் திரு.புவிராஜசேகரமும், திரு.சிகுபேந்திரனும் தொடர்ந்து இதனை நடாத்தி வந்தனர்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரக்கலா மன்றம்

அதிபர் திரு.இ. மகேந்திரனின் காலப்பகுதியில் 1993 ஆம் ஆண்டு திரு.ச.துரைவீரசிங்கம் ஆசிரியரால் இக்கழகம் உருவாக்கப்பட்டது. சித்திரப் பாடத்தில் ஏற்பட்ட புதிய திருப்பத்தின் காரணமாக 1995 ஆம் ஆண்டு ஐந்துபேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

'ரணகெகுளு' சித்திரப்போட்டியில் சியாமளன் சிறப்புப் பரிசை பெற்றதுடன் சிறுவர் தினத்தை ஒட்டி நடைபெற்ற போட்டியில் ச.சாமந்தி 2ம் இடம், ம.பாமினி 3ம் இடம், து.தஜந்தன் 1ம் இடங்களையும் பெற்று மன்றத்திற்கு பெருமை சேர்த் துள்ளனர். கல்வித் திணைக்களத்தினாலும் சமூக நிறுவனங்களினாலும் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டிகளிலும் பங்குகொண்டு வருவதுடன் கியூடெக் நிறுவனத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட போட்டியிலும் இன்ரறக்ட் கழகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் செல்வன். சி.ஸ்ரீவெங்கடேசன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இக்கழகம் பாடசாலை மட்டத்தில் சித்திரக் கண்காட்சியினை மேற்கொண்டு வருகின்றது.

2005ஆம் ஆண்டு கல்வியமைச்சின் அனுசரணையுடன் "அற்லஸ் சித்ரு" போட்டி யில் போட்டியில் வடமாகாணத்தில் செமாதூரன் 1ம் இடத்தைப் பெற்றமை பாராட் டுதற்குரியது. 2009 ஆம் ஆண்டு அரச சிறுவர் ஓவிய விழா சித்திரப் போட்டியில் உயர்தரப் பிரிவில் பா.ரெனீசன் அகில இலங்கை ரீதியில் 4ம் இடத்தைப் பெற்றார்.

2010 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனம் நடாத்திய போட்டியில் ச.சஞ்சீவன் 2ம் இடத்தையும், சு.மகிதாமன் 3ம் இடத்தைப் பெற்றனர். புவி வெப்பமடைதல் சித்திரப் போட்டியில் செல்வன். தனுஜன் 3ம் இடத்தைப் பெற்றதுடன் ஏனைய மாணவர்களுக்கும் சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தற்போது திருமதி. ரா. நாகராஜாவுடன் திருமதி. ச. ஆனந்தராஜாவும் இணைந்து இம்மன்றத்தைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றனர்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞான மன்றம்

மாணவர்களிடையே சமூக விஞ்ஞான அறிவை வளர்த்தற் பொருட்டு 2010 ஆம் ஆண்டு திரு.அ.அகிலதாஸ் அதிபரின் காலப்பகுதியில் இம் மன்றம் ஆரம்பிக்கப் பட்டது. மன்றத்தின் பொறுப்பாசிரி யர்களாக திருமதி.சு.திருச்செல்வம் (வரலாறு), திரு.க.ஜெகதீஸ்வரன் (புவி யியில்), திரு.சு.பரமேஸ்வரன் (குடி யுரிமைக்கல்வி) ஆகியோர் செயற்பட்டு வருகிறார்கள். மாணவர்களிடையே சமூகத்திறன், தலைமைதாங்கும் பண்பு ஆகியவற்றை விருத்தி செய்வதே இம் மன்றத்தின் பிரதான நோக்கமாகும்.

வருடா வருடம் கல்வித் திணைக்களத் தினால் நடாத்தப்படும் சமூகக்கல்விப் போட்டி நிகழ்வுகளில் எமது கல்லூரி மாணவர்கள் பங்குபற்றி பாடசாலைக்குப் புகழை ஈட்டி வருகின்றனர். 2003 ஆம் ஆண்டு மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட தரம் 8, 9 பிரிவுகளுக்கான சமூகக்கல்விப் போட்டியில் எமது பாடசாலையைச் சேர்ந்த செல்வி. கி.டல்ஜினி மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் 1ம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தினையும், பெறுமதிமிக்க நூல்களையும் பெற்றுக்கொண்டமை பெருமைக்குரிய விடயமாகும். அதே போட்டியில் தரம் 6, 7 பிரிவில் செல்வன். வ. சுவேந்திரமுதலி மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றதுடன் 2005ஆம் நடைபெற்ற சமூகக்கல்விப் போட்டியில் வலயமட்டத்தில் மூன்றா மிடத்தையும் பெற்றுள்ளார்.

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழி மூல சமூக விஞ்ஞானப் போட்டியில் செல்வன் இ.நிதர்சன் வலய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். 2008ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மொழி மூல சமூக விஞ்ஞானப் போட்டியில் செல்வன்.த.தேவதயாராஜ் வலய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். 2009ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக நல்லிணக்க தினப் போட்டியில் வலய மட்டத்தில் செல்வன் க.சர்ஜனன் 2ம் இடத்தையும், கு.ஜிந்துஜா 3ம் இடத்தையும் பெற்று பெறுமதிமிக்கப் பணப்பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியில் லோ. வேணுகா மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாணவர்களின் கற்றலை இலகுவாக்கு வதற்கு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங் களைப் பார்வையிடுவதற்காக கல்விச் சுற்று லாக்களை மேற்கொண்டும், வருடந்தோறும் வினாடி வினாப் போட்டிகளை நடாத்தியும் பொது அறிவுத்திறனை வளர்ப்பதற்கு இம்மன்றம் ஊக்குவித்து வருகின்றது.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழிஆற்றுகைக் கழகம்



சமூக விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபுவழி ஆற்றுகைக் கழகம்

பாரம்பரிய கலைகளை மாணவர் களிடையே வளர்க்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டு திரு. அ. அகிலதாஸ் அதிபரின் ஆதரவுடன் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. மன்ற ஆலோசகராக திரு.மு.வேலாயுத பிள்ளையும், பொறுப்பா சிரியராக திருமதி. வ. இளங்கோவன், திரு. மா. ராம்குமார் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

இக்கழகம் பல்வேறு வகையான கூத்துக்கள், நாட்டார் பாடல்கள், கிராமிய நடனங்கள் என்பவற்றை நெறிப்படுத்தி அரங்கேற்றமும் செய்து பரிசில்கள் பெற்ற துடன் பாராட்டையும் பெற்றுக் கொண்டது. இக்கழகம் திருமறைக்கலா மன்றத்தின் உதவியுடன் நாடகப் பட்டறை நடாத்தி சான்றி தழ்களும் வழங்கியது. நல்லூர் பிரதேச சபை யினால் நடாத்தப்பட்ட "சிறுவர் துஷ்பிர யோகம்" என்ற கோட் பாட்டுக்கான நாடகம் நடித்து முதலாமிடமும் பெற்றுக் கொண்டது.

மற்றும் பாடசாலையின் இல்ல மெய் வல்லுனர் போட்டி இடைவேளை நிகழ்வில் எல்லா வகை கிராமிய நடனங்களும் உள்ள டக்கிய நிகழ்ச்சியை நடாத்தியது. தமிழ்த் தின விழாவின் போது திருப்பாற்கடல் என்ற நாட்டிய நாடகத்தை நடாத்தி அனைவரது பாராட்டையும் பெற்றுக் கொண்டது. திரு.பொ.கமலநாதன் அவர்களின் ஓய்வின் போது சேவை நலன் பாராட்டில் பல சாஸ்திர நடனங்களை ஒன்றிணைத்து வரவேற்பு நடனம் நடாத்தியது. மேலும் கலைச்சங்கமம் என்ற இறுவெட்டினை வெளியிட்டு தமது கழகத்திற்கு பணம் திரட்டிக் கொண்டது. 2008 இல் ஓயிலாட்டம், சிந்துநடைக் கூத்து என்பன மாணவர் களிடையே அறிமுகப்படுத்தப்பட்டது. 2010ஆம் ஆண்டு தமிழ்த்தின போட்டியின் போது தென்மோடி நாட்டுக்கூத்தினை (சோழன் மகன்) நடாத்தி தேசியமட்டம் வரை செல்லவுள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

♣ ♣ ♣

புத்தாக்குனர் கழகம்

எமது கல்லூரியில் இக்கழகம் திரு. வே. உருத்திரேஸ்வரன், திருமா. கருணாநிதி, ஆகியோரின தலைமையில் மாணவ ரிடையே புத்தாக்கத்திறனை விருத்தி செய்யும் நோக்குடன் 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாணவருடைய புத்துணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட புத்தாக்கப் போட்டியில் செல்வன். நா. விமலேந்திரா செல்வன். பா. பாலகிரீசன் ஆகியோர் பங்குபற்றி வெற்றி பெற்று பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். செல்வன். காலிங்கராசா, ஹரிச்சந்திரா (2011ம் கல்வியாண்டு உயிரியல் பிரிவு மாணவன்) மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் Inno mech - 09 என்ற நிறுவனம் ஒழுங்கு செய்த புத்தாக்கப் போட்டியில் "இயற்கையோடு இணைந்த விஞ்ஞான இல்லம்" என்ற காட்சிப் பொருளிற்கு தேசிய மட்டச் சான்றிதழை 2009 நவம்பரில் பெற்றுள்ளார். இக்கழகம் புத்துணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் நோக்குடன் 2010இல் திரு.மா.கருணாநிதி, திரு. ரமணிதரன் ஆகியோரின் பொறுப்பில் இயங்கி வருகின்றது.

✸ ✸ ✸

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைப்பொருளியல் மன்றம்

எமது கல்லூரியின் செயற்பாடுகளில் பல்வேறு மன்றங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. அந்த வகையில் தொழில் முன்னிலைப் பாடநெறியில் ஒன்றாக விளங்கும் மனைப்பொருளியல் பாடம் அத்தியாவசியமாக விளங்குகின்றது. இம்மன்றம் 2010ஆம் ஆண்டு திரு. அ.அகிலதாஸ் அதிபரின் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பொறுப் பாசிரியராக திருமதி. K. தவராஜா செயற்படுகின்றார்.

இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் தம் வாழ்க்கைக்குத் தேவையான திறன் களையும், ஆற்றல்களையும் விருத்தி செய்து சமூகமான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும். இதன் பயனாக மாணவர்கள் கற்கும் காலத்திலேயே உணவு சமைத்தல், வீட்டு அலங்காரங்கள், மலர் அலங்காரங்கள், தையல் வேலைகள், கழிவுப்பொருட் பயன்பாடு, சுகநலம் பேணல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடப் பெரிதும் உதவுகின்றன.

அத்துடன் சுயதொழில் முயற்சியில் திறமையுடையவர்களைச் அத்தொழிலில் ஈடுபடுவதற்கு கற்க வழி சமைக்கின்றது. இம்மன்றம் ஆரம்பிப்பதற்கு முன்பே கல்லூரியில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் பங்களிப்பினை மேற்கொண்டு வருகிறது.

மேலும் கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படும் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். 2009ம் ஆண்டு நடைபெற்ற வலயமட்டப் போட்டியில் கோலமிடலில் த. தர்மிகா 1ம் இடத்தையும் செ. உமாயினி 2ம் இடத்தையும, நாகசடை செய்தலில் ம. தர்சனா 2ம் இடத்தையும் வி. சாந்தி 3ஆம் இடத்தையும், பூச்செய்வதில் தர்மிகா 3ஆம் இடத்தையும், "மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன" என்ற தலைப்பில் நடைபெற்ற ஆக்கப்போட்டியில் வி. சாந்தா, செ. உமாயினி முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டமை ஏனைய மாணவர் களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலுதவிப் படையினர்



மனப்பொருளியல் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்க அறிக்கை

அறிமுகம் :

பாடசாலைகளின் அபிவிருத்தியையும், நலன்களையும் நோக்கமாகக் கொண்டு பல்வேறு அமைப்புக்கள் பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து வந்துள்ளதை காண முடிகிறது. இதன் ஓர் வடிவமாகவே கல்லூரிகளின் அபிவிருத்தி சங்க செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறன. எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு கல்லூரியின் அபிவிருத்தி சங்கம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக் களையும் தெரிவித்துக்கொண்டு சங்கம் தொடர்பான வரலாற்று பார்வை மற்றும் கல்லூரியின் அபிவிருத்தியில்சங்கம் ஆற்றிய பங்களிப்புக்களை உள்ளடக்கிய வகையில் அறிக்கையை முன்வைக்கிறேன்.

அங்குரார்ப்பணம் :

18-11-1961 அன்று அதிபராக இருந்த திரு.சி.கந்தசாமி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற பெற்றோர், ஆசிரியர் சங்க கூட்டத்தில் பெற்றோர், ஆசிரியர் சங்க நகல் சட்டத்திற்கு அமைவாக பெற்றோர், ஆசிரிய சங்க அமைப்பு உருவாகியது. சங்கத்தின் முதல் நிர்வாக சபைக்கூட்டம் 01-01-1962 இல் நடைபெற்றது.

செயற்பாடுகள்:

1992

நிர்வாக சபைக் கூட்டத்தில் கல்லூரியின் ஆக்க வேலைகள், சுகாதாரமும் உணவு விநியோகமும், சமயமும் கலாசாரமும் ஆகியவற்றுக்கு மூன்று உப சபைகள் அமைக்கப்பட்டு செயற்பாடுகள் விரிவாக் கப்பட்டன.

1963-1964

- கல்லூரியின் வடபகுதியில் கட்டப்பட்டு நிறைவு பெறாமல் இருந்த மூன்று மாடிக்கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டது.
- கல்லூரியின் எல்லைச் சுவர்கள் கட்டப்பட்டது. வேலைக்கான பெரு மளவு நிதி அரசாங்கத்தினால் வழங்கப்பட்டது. நிதியை பெற உதவியாக இருந்த பழையமாணவர்கள் குறிப்பாக திரு.எஸ்.குமாரவேல்
- மற்றும் கல்வித்திணைக்கள அதி காரிகள் பாராட்டப்பட்டார்கள்.
- கட்டடத்தின் மூன்றாவது மாடியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.
- கல்லூரியின் வடபகுதியை காங்கேசன் துறையுடன் வீதியுடன் இணைக்கும் பாதை முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு.சோமசேகரம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது

1964-1966

- மூன்று மாடிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் விஞ்ஞானகூடம் அமைந்தது.
- கல்லூரியை ஆண்கள், பெண்கள் பகுதியாகப் பிரிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டன. பின்னர் அடுத்துவரும் காலப்பகுதியில் தொடரலாம் என தீர்மானிக்கப்பட்டது.

1966-1967

குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் மேற் கொள்ளப்படவில்லை.

1967-1969

- குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1969-1970

கல்லூரி அபிவிருத்திக்காக மக்கள் குழு சபையினரால் அமைக்கப்பட்டது.

1970-1971

- மக்கள் குழுவினால் அபிவிருத்தி சம்பந்தமான போதியளவு முயற்சிகள் இடம்பெறவில்லை.

1971-1975

- அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்பட்டு குறிப் பிடப்படவில்லை

1975-1979

- செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கையில் காணப்படவில்லை.

1979-1981

- அரசாங்க நகல் சட்டத்திற்கு அமைவாக பாடசாலை அபிவிருத்திசபை புதிதாக உருவாக்கப்பட்டது.

1981-1982

- அபிவிருத்தி செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

1982-1984

- பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் உதவிகள் கிடைக்கப்பெற்று கல்லூரியை அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருந்ததாகத் தலைவர் கூறியுள்ளார்.

1984-1987

- அத்தியாவசியமானதும், பெறுமதி மிக்கதுமான பொருட்கள் துப்பாக்கி முனையில் களவாடப்பட்டன.
- இவ்விழப்பை நிவர்த்தி செய்ய அபிவிருத்தி சபை மாணவர்கள் ஊடாகவும், பெற்றோர், நலன்விரும்பிகள் ஊடாகவும் அன்பளிப்புகளை பெற்று நிவர்த்தி செய்தது.

1987-1989

- கல்லூரியின் தென்பகுதியில் 75வது ஆண்டு நினைவாக திரு.சு.குமாரவேல் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு முதலாவது மாடி அபிவிருத்திச் சபை நிதியினாலும், இரண்டாவது மாடி திணைக்கள சிபாரிசின் மூலமும் அர சாங்கச் செலவிலும் பூர்த்தியாக்கப் பட்டன.

1996-1998

- எமது கல்லூரி தேசிய பாடசாலையாக மிளிர வேண்டும் என்ற விருப்பையும், ஆலோசனையையும் திரு.கே.விநாயக மூர்த்தி சபையில் தெரிவித்தமை முக்கிய அம்சமாகும்.
- தேசிய சேமிப்பு வங்கியில் ரூபா 100000 நிலையான வைப்பில் இடப் பட்டது மட்டுமல்லாமல் ஆசிரியர்தினம், வருடாந்த மெய்வல்லுனர் போட்டி, பரிசுதினம் சிறப்பாக இடம்பெற உதவியது.

1998-2000

- ஆசிரியர் தினம் பழையமாணவர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டது.
- பன்னிரெண்டு நிர்வாகசபை கூட்டங்கள் கூட்டப்பட்டது.
- இல்ல விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு தினத்திற்கு நிதி உதவி அளித்தது.
- கல்லூரியின் தென்பகுதியில் உள்ள வகுப்பறைகள் திருத்தம் செய்யப் பட்டன.அத்துடன் தளபாடங்களும் திருத்தம் செய்யப்பட்டன.
- கல்லூரி வலைப்பந்தாட்ட அணியின ருக்குச் சீருடை வாங்கிக்கொடுக்கப் பட்டது.
- கல்லூரிக்கு தீந்தை பூசி அழகு படுத்தப்பட்டது.
- பழைய மாணவ சங்கத்துடன் இணைந்து பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்று சென்ற திரு.T.தேவராஜா அவர்களுக்கும், அதிபராக இருந்து இடமாற்றல் பெற்ற பின்னர் ஓய்வு பெற்ற திரு.இமகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது.

- பழுதடைந்த மலசலகூடங்கள் திருத்தப் பட்டதுடன், GTZ உதவியுடன் எமது சங்கம் இணைந்து புதிய மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
- ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டது.
- நிறுவனத்தின் உதவியுடன் வறிய மாணவர்களுக்கு உடைகள் வழங்கப் பட்டன.

2000-2003

- முன்னைய காலத்தில் ஆரம்பிக்கப் பட்ட மலசலகூட வேலைகள் பூர்த்தி யாக்கப்பட்டன.
- அரசாங்க நிதியுடன் விஞ்ஞான ஆய்வுகூடம் திருத்தியமைக்கப்பட்டது.
- நீர் விநியோக வசதி செய்து கொடுக் கப்பட்டது.
- வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம் என்பவற்றிற்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
- பெற்றோரிடமிருந்து கிடைக்கப் பெற்ற நன்கொடையிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியில் 150000 ரூபாயும், இலங்கை வங்கியில் 100000 ரூபாவும் நிலையான வைப்பிலிடப்பட்டது.
- கல்வித்திணைக்கள நிதியுதவியுடன் வகுப்பறை ஒன்று கணனி அறையாக மாற்றப்பட்டது.
- மாணவர் கழுத்துப்பட்டி, தேர்ச்சிப் புத்தகம் போன்றன பெறுவதற்கு உதவியது.
- கணனி அறை, ஆய்வுகூடத்திற்கு தேவையான உபகரணங்களை கொள் வனவு செய்ய நிதியுதவி அளித்தது.
- ஆய்வுகூடத்திற்கு மின்னிணைப்பு வழங்க நிதியுதவி அளிக்கப்பட்டது.
- பாராளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் வழங்கப்பட்ட ரூபா பத்துலட்சம் நிதியுடன் மேலும் 43497 ரூபா செலவு செய்து புதிய வகுப்பறைகள் அமைக்கப்பட்டது.
- ஐக்கிய இராச்சிய ப.மா.சங்க நிதி யுதவியுடன் புனரமைக்கப்பட்ட கேட்போர்கூட கட்டிடத்தின் இரண்டாம் மாடிக்கட்டிடத்தின் ஒரு பகுதியை கிட்டத்தட்ட 645000 ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்டது.
- கணனி அறை மேலதிக வேலை, கட்புல செவிப்புல அறை வேலைகளை சங்கம் திணைக்கள உதவியுடன் மேற்கொண்டது.

2003-2007

- சென்றகால செயற்திட்டங்களான திணைக்கள உதவியுடன் கிடைக்கப் பெற்ற நிதி உதவியுடன் 56 கதிரைகளும், ஏற்கனவே இருந்த வகுப்பறையை கட்புல செவிப்புல அறையாக வடி வமைக்கப்பட்டது.
- ஆங்கில மொழியிலான வகுப்புகள் செயற்படுத்தப்பட்டது.
- கேட்போர் கூடத்திற்கு பின்னால் பூர்த்தி செய்யப்படாமல் இருந்த கட்டிடம் மீளக் கட்டப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டது.
- இருப்பிலான A தரத்திலான கதிரைகள் 200 அபிவிருத்தி செய்யப்பட்டது.
- பெற்றோரிடம் நன்கொடையாகப் பெற்ற 150000 ரூபா நிலையான வைப்பிலிடப்பட்டது.
- நூலகத்திற்குத் தேவையான பத்திரிகை கள், சஞ்சிகைகள், நூல்கள் சங்கத்தினால் வாங்கி வழங்கப்பட்டது.
- கல்லூரியின் தென்பகுதி கிழக்குமாடி வகுப்பறைக் கட்டடங்களுக்கு திணைக்கள நிதியுடன், சங்கநிதியையும் சேர்த்து தீந்தை அடித்து அழகுபடுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலக உணவுத்திட்டத்திற்கு சமையல் பாத்திரங்கள் ரூபா 51600ற்கு கொள்வனவு செய்யப்பட்டது.

2007

- பதில் அதிபராக இருந்த திரு.எஸ்.வி. மகேந்திரன் அவர்களை அதிபராக கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானத்தை சங்கம் மேற்கொண்டு கல்வி அதி காரிகளுக்கு அனுப்பியும், நேரில் பேசியும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டது.
- இலங்கை வங்கியில் ரூபா ஒரு லட்சமும், சேமிப்பு வங்கியில் இரண்டு நிலையான வைப்புக்களை முறையே ஒரு லட்சம் ரூபா, ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா இடப்பட்டது.
- புதிய கூட்டிடங்களுக்கு மின் இணைப்பு, தீந்தை பூசி அழகுபடுத்தலை மேற் கொண்டமை.
- ஹன்டி பேரின்பநாயகம் கட்டிடத்தின் மூன்றாம் மாடியிலிருந்த தண்ணீர்த் தாங்கி திருத்தியமைக்கப்பட்டது.
- எமது சங்கமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து ஓய்வுபெற்ற அதிபருக்கு பெரியளவிலான பாராட்டு விழாவை நடாத்தி சிறப்பு மலர் ஒன்றும வெளியிடப்பட்டது.
- திரு.எஸ்.வி.மகேந்திரன் அதிபராக இருந்த காலத்தில் மின் இணைப்பு பெறாத கல்லூரியின் 1ஆது, 2ஆது மாடி கட்டிடத்தின் வகுப்பறைகளுக்கு மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப் பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது.
- தென்பகுதியிலிருந்த பிரதிஅதிபர் அலுவலகம் தீந்தை பூசி அழகு படுத்தப்பட்டது.
- Intercom வசதிகள் வடபகுதிக்கும் தென் பகுதிக்கும் செய்து கொடுக்கப்பட்டது.
- கணனித்துறை வலைப்பின்னல் வழி யாக கணனிக்கல்வியைப் பெறுவதற்கு பொருட்கள் வழங்கப்பட்டு வசதிசெய்து கொடுக்கப்பட்டது.
- கற்றல் கற்பித்தல் பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டது.
திருமதி. P. P. பார்கவி அம்மா அவர்கள் கேரளாவில் உள்ள திருவாங்கூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அன்றைய காலத்தில் ஆசிரியை கிடைப்பது அரிது. K.H.E.S கலவன் பாடசாலை 'கலவன்' என்ற சொல் இல்லாமலேயே இயங்கி வந்தது. பெண் ஆசிரியர் கிடைக்காத காரணத்தால் "இந்து" பத்திரிகையில் விளம்பரப்படுத்த அதன் பலனாக எமக்கு ஒரு நல்ல தாய் போன்று செல்வி பார்கவி அம்மா வந்து சேர்ந்தார். அவரே எம் பாடசாலையின் முதற் பெண் ஆசிரியர். சரித்திரம், தையல் ஆகிய பாடங்களைக் கற்பித்தார். தலையாழியில் ஒரு வீட்டில் வசித்தார். தன் ஆடை அணியும் முறைகளையும் மாற்றி தமிழிலும் தேர்ச்சி பெற்று ஊரோடு ஒன்றி வாழ்ந்து அரும்பணியாற்றி மாணவி களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருந்தார். திரு. மாதவன் பிள்ளையை மணந்து பத்மாவதி என்னும் பெண்ணும், சந்திர சேகரன் என்ற ஆணும் மக்களாக வாய்க் கப்பெற்று நீண்டகால ஆசிரியரானார். அவரது இரு பிள்ளைகளும் கொக்குவில் இந்துவிலேயே கல்வி பயின்றனர். தங்கள் தாய்மொழி மலையாளத்தையும் மறவாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றனர். அவரது தம்பியார் இராமகிருஷ்ண நாயர் இவர்களுடன் கூட இருந்து தொழில் புரிந்தவர். 1957ம் ஆண்டு தன் 55வது வயதில் இளைப்பாறிய போது யாழ்ப்பாணத்தில் பெரு வெள்ளம் ஏற்பட்ட காரணத்தால் பிரியாவிடை நடத்த முடியாமல் திடீரென தாய்நாடு போய்ச் சேர்ந்தார். இவர் கல்லூரிக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறு. இன்னும் அவரைப் பேரன்புடனும், பெருமதிப்புடனும் நினைக்கின்றோம். அவரிடம் கல்வி கற்று அவருடன் ஆசிரியத் தொழில் புரியக் கிடைத்தது எனக்கு ஒரு பெரும் பாக்கியம்.

திரு. M. கார்த்திகேசு அவர்கள் காலத்தில் தரம் 1 இலிருந்து 8 வரை வகுப்புகள் நடை பெற்றன. 8ம் வகுப்பில் (J.S.C) Junior School Certificate சித்தி பெற்ற மாணவர்கள் மேற் படிப்புக்காக வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. இந்நிலை திரு. M. கார்த்திகேசுவின் காலத்தில் மாறி பாடசாலை "கொக்குவில் இந்துக் கல்லூரி" என்ற பெயர் மாற்றம் பெற்று உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று உயர் வகுப்புக்கள், உயர் கல்வி என்பன கிடைக்கப் பெற்றன. J.S.C வகுப்புச் சித்தியடைந்து 1938 இல் மேற்படிப்புக்கு இராமநாதன் கல்லூரிக்குச் சென்று 1940 ஜனவரியில் London Matriculation பரீட்சை எழுதி திரும்பி வந்தபோது பாடசாலை கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயர் மாறி K.H.C ஆனது. இதுவும் ஒரு பொற்காலம். K.H.C இன் முதலாவது அதிபர் திரு. M. கார்த்திகேசு அவர்கள். இவரது பதவிக் காலத்திலேயே கல்லூரியின் வெள்ளிவிழா கோலாகலமாக நடைபெற்றது. செல்லையா மண்டபத்தில் ஸ்தாபகரின் படம் மண்ட பத்தை அலங்கரிக்க, சரஸ்வதி நடுவே வீற்றிருக்க, ஓம் என்ற இலச்சினை "கற்றதொழுகு" என்ற வாசகத்தைத் தாங்கி நிற்க முற்றத்தின் நடுவே உயர்ந்து நின்ற கொடிக்கம்பம் பலவர்ணக் கடதாசிக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு கலை நிகழ்ச்சிகளுடன் விழா கொண்டாடப் பட்டது. கல்லூரியின் இத்துணை அரிய சேவைகளை 15 வருட காலம் ஆற்றி 1943 இல் இளைப்பாறினார். கல்லூரி முற்றத்திலே அவரின் பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது. அவ்விழாவின் போது பாடுவதற்கு இசை வல்லார் குப்பிளான் செல்லத்துரை அவர்கள் இயற்றிய "இறைவா கார்த்திகேயா" என்ற பாட்டைப் பாடி பிரியாவிடை கூறினோம்.

ஸ்தாபகரின் குறிக்கோளை முதன்மைப் படுத்தி அடுத்தடுத்து வந்த அதிபர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் அரிய பங்காற்றி வந்துள்ளனர். இந்துப் பாடசாலை என்ற பெயருக்கேற்ப சமயபாடம், சமய விழாக்கள் என்பன கிரமமாக நடைபெற்றன. அடுத்த அதிபராக திரு. S. சீனிவாசகம் பொறுப்பேற்றார். அவர் ஒழுங்கமைத்து நடாத்திய உணவு, சுகாதாரக் கண்காட்சி பலரது பாராட்டைப் பெற்றது. பாடசாலை அபிவிருத்திக்கென அவர் கண்ட கனவுகள் பல. எனினும் அவரது உடல்நிலை அதற்கு ஈடுகொடுக்கவில்லை. 1943 - 1946 காலப்பகுதி அவருக்குரியது. தற்பொழுது பல நாடுகளிலும் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கங்கள் செயற்பட்டுக் கல்லூரியை விழுதுகளெனத் தாங்கி நிற்கின்றன. இவற்றின் முன்னோடி யாக உள்ளதே கொழும்பு பழைய மாணவர் சங்கம். முதன் முதலாகவுள்ள இச்சங்கத்தை 1944 இல் ஸ்தாபித்த பெருமையும் திரு. S. சீனிவாசகம் அவர்களுக்கே உரியது.

திரு. S. சீனிவாசகத்தைத் தொடர்ந்து திரு. V. நாகலிங்கம் (Shakespeare நாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிங்கம்) கல்லூரியைப் பொறுப்பேற்றார். யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த அவரை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அதிபராக அனுப்பினர். கல்லூரி வளர, மாணவர் தொகை அதிகரிக்க இடம் தேட வேண்டிய பொறுப்பு இவருக்கானது. புதுக்கோவிலின் வடக்கேயுள்ள காணியை வாங்கும் வசதி ஏற்பட்டது. இதற்குப் பணம் தேவை. சில மாணவ மாணவிகளை கலைநிகழ்ச்சிக்காகப் பழக்கி கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய இடங்களுக்குக் கூட்டிச் சென்று நிகழ்ச்சிகளை நடாத்திப் பணம் சேகரிக்கப்பட்டது. பரத நாட்டியம், வசந்த நடனம், அரிவி வெட்டு நடனம், நாடகம், கும்மி, பாட்டு என பல்சுவை நிகழ்ச்சிகள் எங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றன. திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா வின் வயலின் இசையுடனும் அவரின் சகோதரி பரமேஸ்வரியின் மிருதங்க வாத்தியத்துடனும் திரு. S. ஞானசேகரம் இந்நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். அவரும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவன். 14 ஆண்களும் 12 பெண்களும் இக்கலைக் கோஷ்டியில் அடங்கினர். அதிபர் அவர்கள், திரு. அமிர்தலிங்கம், திருமதி. P. P. பார்கவி அம்மா, செல்வி. ஞானாம்பிகை, செல்வி. சுகிர்தலக்ஷ்மி, செல்வன். A. K. சந்திரபாலன் ஆகியோர் மாணவர்களைக் கூட்டிச் சென்றனர். 1947 இல் நடந்த இந்நிகழ்வுகள் காணிக் கொள்வனவுக்குப் பெரிதும் உதவின. துரதிஷ்ட வசத்தினால் எம் அதிபர் சுகவீனமுற்று 1948 இல் அமரரானார். அவருடைய முயற்சியின் பலனைக் காணாமலேயே எம்மை விட்டுப் பிரிந்தார். அவரின் பெயரிலேயே அக்காணி "நாகலிங்கம் மைதானம்" என்ற பெயருடன் விளங்குகின்றது. இதே மைதானத்தில் இவர் பெயரில் "Linga Lights" களியாட்ட விழாவை இவரைத் தொடர்ந்து அதிபரான திரு. S. ஹண்டிப் பேரின்பநாயகம் நடாத்தி வைத்தார்.

திரு. V. நாகலிங்கத்தின் பிள்ளைகளும் கொக்குவில் இந்துவிலேயே கல்வி பயின்று உயர் பதவி வகித்தனர். விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத காலத்தில் கோவில் வீதியிலேயே உடற்பயிற்சி நடாத்தப்பட்டது. பழைய பள்ளிக்கூட முற்றத்தில் பலமுறை ஓடிப் பழகுவர் மாணவர். தற்பொழுது தொழில்நுட்பக் கல்லூரி அமைந்திருக்கும் இடத்திலேயே விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. கல்லூரிக்கென மைதானம் கிடைத்த பின் ஆண்டுதோறும் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று வந்தது. மாணவர்களின் கல்வியும் மேம்பாடடைந்து வந்தது. மாணவர்கள் இல்லங்களிடையே பிரிக்கப் பட்டு போட்டிகள் நடைபெறும். ஸ்தாபகர் பெயரில் செல்லையா இல்லமும், கொக்குவில் கல்விமானும் அதிபர் M. மகாதேவனின் பேரனும் அரசாங்கத்தினால் முதலியார் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவரும் கல்வியில் பெரும் பங்கு கொண்டவருமான திரு. சபாரட்ண முதலியாரின் பெயரில் சபா ரட்ணம் இல்லமும், கல்லூரி வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய சபாபதிப்பிள்ளை நினைவாக சபாபதி இல்லமும் என 3 இல்லங்களாக மாணவர்கள் சேர்விலக்க ஒழுங்கில் பிரிக்கப்பட்டு வந்தனர். திரு. M. கார்த்திகேசு அதிபரின் பெயரில் ஒரு இல்லம் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒவ்வொரு நிறம் வழங்கப்பட்டது. செல்லையா இல்லம் நீலம், சபாரட்ணம் இல்லம் பச்சை, சபாபதி இல்லம் இளஞ்சிவப்பு, கார்த்திகேசு இல்லம் மஞ்சள் என வழங்கப்பட்டன. திரு. V. நாகலிங்கம் அமரரான பின் அவர் பெயரிலும் இல்லம் பெயரிடப்பட்டு ஊதா நிறமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அதிபரும் கல்லூரியை படிப் படியாக முன்னேற்றி கல்வியிலும் விளை யாட்டுத் துறையிலும் இவற்றுக்கு அப்பாற் பட்ட செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்குவித்தனர். கல்லூரிக்கு உரிய நிறம் சிவப்பும் வெள்ளையும் ஆகும். இவ்விரு நிறக் கொடியுடன், மாணவத் தலைவர் முறை, ஆண், பெண் இருபாலாருக்கும் பான்ட் வாத்தியக் கோஷ்டிகள், சமய விழாக்கள் எனப் பல துறைகளிலும் பிரபல்யம் அடைந்து கிராமத்து ஒண்மணி மகுடமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரி திகழ்கின்றது. திரு.A. நாகலிங்கம் இயற்றிய கல்லூரி கீதத்தை எமது சங்கீத ஆசிரியை திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா மெட்டு அமைக் கப்பட்டு இன்றும் பாடப்பட்டு வருகின்றது.

எமக்கென ஒரு கொடி அமைக்கப்பட்ட துடன் அதற்கென ஒரு கொடிக்கீதம் எம் முன்னைநாள் ஆசிரியர் அமரர் திரு. S. வேலாயுதபிள்ளை அவர்களால் இயற்றப் பட்டு எமக்கு அளிக்கப்பட்டது. இதற்கு மெட்டமைத்து கல்லூரியில் இசைக்கப்படு கின்றது. எம் கல்லூரி கீதம் பழைய மாணவர் சங்கங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒலிக்கின்றது. கொழும்பில் 1944 இலும் யாழ்ப்பாணத்தில் 1950இலும் சிட்னி (அவுஸ்திரேலியா) யில் 1991 இலும், ஐக்கிய இராச்சியத்தில் 1992 இலும், கனடாவில் 1994 இலும், நோர்வேயில் 2005 இலும் ஜேர்மனியில் 2006 இலும், விக்டோரியா (அவுஸ்திரேலியா) வில் 2008 இலும் பழைய மாணவர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இங்கெல்லாம் கல்லூரி கீதம் ஒலிக்கின்றது. கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் போது யாழ் பழைய மாணவர் சங்கம் வைரவிழாக் காண்கின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் தீவைப்புக்கும் 1937 இல் இருந்து நெருங்கிய தொடர்பு உண்டு. சாம்பலில் இருந்து (Phoenix) பினிக்ஸ் பறவை உயிர்த் தெழுந்தது போல கொக்குவில் இந்துக் கல்லூரியும் புத்துயிர் பெற்று புதுப் பொலி வுடன் வானுயர வளர்ந்து நிற்கின்றது. அன்றொரு நாள் காலை வணக்கத்தில் மாணவர்களாகிய நாம் ஈடுபட்டுக்கொண் டிருந்த வேளை கூரையில் புகை எழுந்தது. அதிஷ்டவசமாக உடனடியாக தீ அணைக் கப்பட்டுப் பாரிய சேதம் தவிர்க்கப்பட்டது. பின் ஒரு முறை விஷமிகள் phosphorusஐ வைத்து விட்டுச் செல்ல வெயில் சூட்டில் தீ ஏற்பட்டது. இதில் பாரிய சேதத்தை ஏற்படுத்திய தீ ஓலைக் கொட்டில்களை எரித்து மேசை வாங்குகளையும் தீக்காயங் களுக்குள்ளாக்கி வடுக்களை உண்டாக் கியது. 1940ம் ஆண்டில் மீண்டும் ஆட்கள் இல்லாதவிடத்தில் தீப்பற்றி அயலவர்கள் அணைத்தனர். அதன்பின் ஓலைக்கூரை ஓட்டுக்கூரையானது. நாகலிங்கம் மைதா னத்தில் வகுப்பறைகள் கிடுகுக் கூரை யுடனும் தட்டிகளுடனும் அமைக்கப்பட்டன. இது திரு. ஹன்டியின் தலைமைப் பதவிக் காலம். காலை பாடசாலைக்கு ஆசிரியர்கள், மாணவர்கள் வந்துகொண்டிருந்த நேரம் கொட்டில்கள் எரிந்து கிடந்தன. அதிபர் வந்து பார்த்தார். அவர் எதையும் திட சிந்தை யுடனும், ஆழ்ந்த அறிவுடனும், தத்து வார்த்தத்துடனும் அணுகும் இயல்புடை யவர். சுருட்டுப் புகைக்கும் பழக்கமுடை யவர். எவ்வித சலனமும் இல்லாமல் ஒரு சுருட்டை எடுத்து சாம்பல் குவியலுக்குள் கிடந்த நெருப்புத் தணலில் சுருட்டுப் பற்றவைத்த சம்பவம் மறக்கப்படமாட்டாது. அந்த நேரம் அவர் மனத்தில் ஒரு உறுதியான எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் ஓலைக் கொட்டில்கள் வகுப்பறைகளாவது இல்லை என்பதே அதுவாக இருந்திருக்கும். ஏனெனில் அதிபரும் அவரின் உதவி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. C.K. கந்தசுவாமி அவர்களும் மலேசியா சென்று நிதி சேகரித்தனர். அங்கும் அதிபரின் அமைதியான பொறுமையான குணம் வெளிப்பட்டு சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல் பணம் சேகரிக்கப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் அவரின் வேண்டுகோளின் பின் ஒரு சிறுதொகைப் பணமே கொடுக்கப் பட்டதாகவும் உப அதிபர் தன் அதிருப்தி யைத் தெரிவிக்க அதிபரின் பதில் எதிர்மாறாக இருந்ததாகவும் நன்கொடை யாக வந்த பணம் பாடசாலைக்கே அன்றி தனக்கல்ல எனக் கூறியதாகவும் அறிந்தோம். அவரின் மனப்போக்கையும் அமைதியான பண்பட்ட குணத்தையும் அறிகிறோம். அவர் ஒரு அறிவு மேதை.

திரு. ஹன்டியின் காலத்தில் நாகலிங்கம் மைதானத்தில் அமைந்த மாடிக் கட்டிடம் அவரின் பெயரைத் தாங்கி நிற்கின்றது. அரசியல் ஞானம் உடையவர். தெற்கில் இருந்து கல்விமான்கள், அரசியல் தலை வர்கள் ஆகியோரை பிரதம விருந்தினர்களாக அழைத்து சிரேஷ்ட மாணவர் ஒன்றிய வருடாந்த இராப்போசன விருந்து நடாத்தி பாடசாலையின் பெயரை தெற்கிலும் அறிய வைத்தார். திரு. ஹன்டியின் தலைமையின் கீழ் பாடசாலை மிகவும் முன்னேறியது. திரு. V. நாகலிங்கத்தின் பெயரை செம்மையாக விளங்கச் செய்தார். களியாட்ட விழாவை 1950 இல் அவர் பெயரில் நடத்தியதுமல்லாமல் செல்லையா, கார்த்திகேசு, சபாரட்ணம், சபாபதி என்பவர்களின் பெயரில் 4 இல்லங்களாக மாணவர்கள் பிரிக்கப்பட்டிருந்த போது மறைந்த அதிபர் திரு. V. நாகலிங்கம் அவர்களின் பெயரிலும் மாணவர்கள் 5 இல்லங்களாகப் பிரிக்கப்பட்டனர். கல்லூரியின் பெயரைக் கல்வித் துறையில் தெற்கிலும் விளங்கச் செய்தார். அவரது புகழினால் கொக்குவில் இந்துவும் புகழ் பெற்றது. ஆசிரியராகிய நாங்கள் புகழ் பெற்றோம். ஒவ்வொரு அதிபரின் கீழும் கடமை புரிந்ததனால் பல அறிவுரைகளை யும், அனுபவங்களையும் பெற்றோம். இவை எம் வாழ்க்கையில் உறுதுணையாக இருக்கின்றன. 1960 இல் திரு. ஹன்டி ஓய்வு பெற்றுச் சென்றார்.

திரு. சீனிவாசகம், திரு. V. நாகலிங்கம் ஆகியோரின் பின்பும் அதிபர் பொறுப்பை ஏற்க மறுத்த திரு. C. K. கந்தசுவாமி அவர்கள் திரு. ஹன்டி அவர்களின் பின் தலைமைப் பொறுப்பை 1960 ஆண்டில் ஏற்று பத்து ஆண்டுகள் கல்லூரியைத் தான் பெற்ற அனுபவத்துடன் திறம்பட நிர்வ கித்தார். "கல்லூரிக்காக எழுதப்பட்டவன்" என்று சொல்லியே கல்லூரியின் மேம் பாட்டுக்கு உழைத்தவர். முதலாவது விஞ்ஞானப் பட்டதாரி என்ற பெருமையும் அவருக்கே உண்டு. 1940 இல் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக வந்து சேர்ந்த பின் விஞ்ஞானப் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இரசாயனம், பௌதீகம் ஆகிய பாடங் களைக் கற்பித்தார். மாணவர்களும் சிரத்தையுடன் கற்று சிறந்த பெறுபேறு களைப் பெற்று பல்கலைக்கழகம் சென்றனர். பௌதீகம் கற்பிப்பதில் மிகத் திறமை உள்ளவர். ஒரு மாணவன் மலேசியாவில் இருந்து வந்து சேர்ந்தவர். அவரின் திறமையை அறிந்து மேலதிகமாகத் தன் வீட்டுக்கு அழைத்துக் கற்பித்து ஒரு வருடத்தில் G.C.E. A/L வகுப்புப் பரீட்சை யில் சித்தியடையச் செய்தார். அவர்தான் Dr. M. சுந்தரலிங்கம். Ohio மாநிலத்தில் Columbus பல்கலைக்கழகத்தில் புகழ்பூத்த பேராசிரியராக ஆராய்ச்சித் துறையிலும் உயர்பதவி வகித்தார். விடுமுறையைக் கழிக்கத் திருகோண மலைக்குச் சென்றபோது சுனாமி அனர்த்தத்தில் இறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஆசிரியர்களில் ஒரு தனித்தன்மை உண்டு. மாணவர்களின் கல்வியிலும், நல்லொழுக்கத்திலும் விசேட கவனம் செலுத்தி மாணவர்களை நல்லாக்குவதில் அதீத கவனம் செலுத்துவர். B. A(Lond.) பரீட்சைக்குத் தோற்றும் போது எனக்கும் கணித பாடத்தில் உதவியுள்ளார். வண்ணார்பண்ணையில் தன் அயல் வீட்டில் வசித்த எமது ஆசிரியர் திரு. S. நாகலிங்கத்தையும் குதிரை வண்டியில் அழைத்து வருவார். காலக்கிரமத்தில் துவிச்சக்கரவண்டியிலும், பின் மோட்டார் வண்டியிலும் வந்துகொண்டிருந்தார். மேல்நாட்டு உடையும் வேட்டி சால்வையாக மாறியது. ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்று பலர் போற்றும் பாடசாலையாக கொக்குவில் இந்துவை ஆக்கினார். ஸ்தாபகரின் குறிக்கோளை மனதில் இருத்தியே அதிபர்கள், ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். இத்தகைய அதிபர்களின் கீழ் பணி புரிந்ததை ஒரு பெரும் பேறாக எண்ணுகின்றோம். தன் கடைசிக் காலத்தை அவுஸ்திரேலியாவில் மக்களுடன் வாழ்ந்து கழித்து 2004ம் ஆண்டு தன் 88வது வயதில் இறைபதம் எய்தினார். கதைப்பதெல்லாம் கொக்குவில் இந்துவைப் பற்றியே இருக்கும். கொக்குவில் இந்துக் கல்லூரிக்காகவே வாழ்ந்தவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களின் சிறப்பம்சங்களில் இதுவும் ஒன்று. மேலதிக உதவி எந்தத் துறையில் மாணவனுக்கு தேவை ஏற்படுகின்றதோ அந்தத் துறையில் அம்மாணவனுக்கு உதவியளிப்பர். பெற்றோர் அந்த நம்பிக்கையுடனேயே தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். ஆசிரியர்களும் பெற்றோர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருப்பர். இது ஒரு ஊர்ப் பள்ளிக்கூடம். எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும். மாணவர்கள் வழிதவறிப் போகச் சந்தர்ப்பங்கள் மிக அரிது. மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் கொக்குவில் வீடொன்றில் வசித்து தன் மக்களையும் கல்லூரியில் சேர்த்து கொக்குவில் மக்களுடன் தானும் ஒருவராக இருந்து அவர்கள் வீட்டில் நடைபெறும் வைபவங்களிலும் கலந்து தானும் ஒரு கொக்குவில் வாசியானார். பலரும் அவரை மதிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இம்முறையை திரு. C. K. கந்தசுவாமி அவர்களும் பின்பற்றினார். இப்பெரியார்களிடம் இருந்து ஆசிரியராகிய நாங்கள் நல்லறிவு, நல்லனுபவங்களைப் பெற்று ஆசிரியத் தொழிலைத் திறமையாகச் செய்யப் பழகிக் கொண்டோம். இதற்காக நாங்கள் அவர்களுக்கு நன்றிக் கடன் செய்ய வேண்டும். மாணவர்கள் பயனடைந்தது போல நாமும் பயனடைந்தோம்.

திரு.C. K.கந்தசுவாமி அதிபர் இளைப்பாறிச் சென்ற பின் அடுத்த அதிபர் பொறுப்பேற்கும் வரை திரு. C. குணபாலசிங்கம் அவர்கள் தற்காலிக அதிபராகச் சிறிது காலம் கடமையாற்றிய பின் திரு. P. S. குமாரசாமி அதிபராக நியமனம் பெற்று ஒரு வருடம் கடமை புரிந்தார். அவரின் பின் கல்லூரியின் பழைய மாணவனும் கொக்குவில் வாசியுமான திரு. M. மகாதேவா அதிபரானார். இவரே ஒரு பழைய மாணவன் அதிபரானவர்களில் முதலாமவர். 1972 இல் இருந்து 1980 வரை அதிபராக இருந்த பொழுது திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் அதிபருக்கு வலது கரமாக இருந்து கல்லூரியின் தரத்தைப் பேணிப் பாதுகாத்து வந்தார். 1972 - 1980 காலப்பகுதியில் கடமையாற்றி இளைப்பாறிய இவரின் இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளும் கொக்குவில் இந்துவின் ஆசிரியர்கள். இவர்களின் தாய்வழிப் பேரன் திரு. சபாரட்ண முதலியார், தகப்பன் வழிப் பேரன் திரு. ம. க. வேற்பிள்ளை (மட்டுவில் கதிரவேற்பிள்ளை). இருவழிப் பேரன்மாரும் தமிழ் அறிவுக்கடல். இப்புலமை மகள் திருமதி. A. சதாசிவம் அவர்களிடம் இருந்தது. சைவசமய நெறியை முழுமையாகப் பின்பற்றினர்.

நிர்வாகத் திறமை, நிதானமான அணுகு முறை, ஆழ்ந்த அறிவு உடைய அதிபர்களின் வரிசையில் திரு. M. மகாதேவாவின் உப அதிபராகப் பணியாற்றிய திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள் 1980 இல் அதிபர் பொறுப்பை ஏற்றார். சில மாணவர்கள் கல்லூரியை விட்டு விலகி வேறு பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தவழி செய்தார். முறைப்பாடு சொல்ல வரும் பெற்றோருடன் சாந்தமாக உரையாடி நியாயத்தை உணர வைத்து அவர்களை மன நிறைவுடன் செல்ல வைப்பார். பிரச்சினைகளை அவர் அணுகும் முறையே தனி. உப அதிபராக இருந்த காலத்தில் எங்கள் கலந்துரையாடல் எல்லாம் அவருடனே அன்றி அதிபருடன் அல்ல. Diploma பட்டத்துடன் மீண்டும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வந்து பல துறைகளிலும் கல்லூரியை முன்னேற்றினார். கல்லூரி மாணவனாக, ஆசிரியராக, உப அதிபராக பின் அதிபராக அரை நூற்றாண்டு காலத் தொடர்புடையவர். இரசாயனவியலில் ஆழ்ந்த அறிவும் அதை கற்பிக்கும் திறமையும் உடையவர். அவரிடம் இரசாயனம் கற்போர் மேலதிகப் படிப்புக்கு வேறு ஆசிரியரைத் தேட வேண்டிய தேவையில்லை. 1985 இல் அரசாங்க புலமைப்பரிசில் பெற்று புதுடெல்கி சென்று International Diploma in Educational Planning and Administration பட்டம் பெற்றார். இது அவருடைய திறமையை எடுத்துக் காட்டுகின்றது. பல பெரியார்கள் இவரைப் போற்றியுள்ளனர். திரு. C. K. கந்தசுவாமி, திரு. ஊ. சுப்பிரமணியம் (Orator) திரு. சரவணபவன் (சிற்பி) ஆகியோர் இவரின் திறமையை வியந்து பாராட்டியுள்ளனர்.

அவரது காலத்தில் பரிசளிப்பு விழாக்கள், இல்ல விளையாட்டுப் போட்டிகள், கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர் ஒன்றிய இராப்போசன விருந்து என்பன ஆண்டுதோறும் நடைபெற்று வந்தன. கல்வியிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். பழைய மாணவர்களை பாடசாலை விழாக்களுக்குப் பிரதம விருந்தினராக அழைக்கக்கூடிய தகுதியைக் கல்லூரி பெற்றிருந்தது. இப்பாரம்பரியத்தை பழைய மாணவர் சங்கங்கள் கைக்கொள்கின்றன. பல துறைகளிலும் எம் பழைய மாணவர் பல நாடுகளிலும் உயர்பதவி வகித்து கல்லூரியின் நன்மதிப்பை உயர்த்தியும் பேணியும் வருகின்றனர். தங்களை அந்த உயர் நிலைக்கு இட்டுச் சென்ற கல்லூரித் தாயை அவர்கள் மறக்கவில்லை. கல்லூரியின் வளர்ச்சிக்காக உதவுகின்றனர். திரு. பஞ்சலிங்கம் அவர்கள் 1991 இல் ஓய்வு பெற்ற பின்பும் இன்று வரை பாடசாலை அபிவிருத்தியில் பங்குகொண்டு செயலாற்றி வருகின்றார்.

ஆசிரியராக கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்த திரு. இ. மகேந்திரன் விளையாட்டுத் துறையில் பெரும் பங்காற்றியவர். உதைபந்தாட்டம், சாரணியம் என்பவற்றில் மாணவர்களைப் பயிற்றுவித்து பல வெற்றிகளைக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்தவர். மாணவர்களோடு ஒருவராக நின்று பயிற்றுவித்து அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். திரு. V. சிவசுப்பிரமணியம் ஆசிரியர் 1943 இல் சாரணர் இயக்கத்தைத் ஆரம்பித்தார். 1965 வரை இவ்வியக்கம் பாரிய வளர்ச்சி கண்டது. திரு. R. மகேந்திரன் பின் இப் பொறுப்பை ஏற்று சாரணர் பல விருது களைப் பெற்றுப் பாடசாலைக்கு உயர் ஸ்தானத்தைப் பெற்றுக் கொடுத்தனர். சாரணர் பெற்ற பயிற்சி பாடசாலைக் கட்டடம் எரிந்த பொழுதும் வேறு சந்தர்ப் பங்களிலும் மிகவும் பிரயோசனப்பட்டது. பின் உதவி அதிபராகி திரு. அ. பஞ்சலிங்கம் மாற்றலாகி யாழ் இந்துக் கல்லூரிக்குச் சென்ற போது அதிபரானார். மாணவர்களின் கல்வியில் மட்டுமல்ல நல்லொழுக்கம் பேணுவதிலும் கண்டிப்பாய் இருந்தவர். சிறந்த விளையாட்டு வீரர்.

இவ்வண்ணம் பாடசாலை கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் நல்லொழுக் கத்திலும் மேல்நிலை அடைந்து வந்தது. அடுத்த அதிபராக திரு. பொ. கமலநாதன் தனக்கு முன்பு கடமையாற்றிய அதிபர் களின் வழியைப் பின்பற்றி பற்றுறுதியுடன் பாடசாலையை நிர்வகித்து இளைப்பாறிய பின் திரு. அ. அகிலதாஸ் அவர்கள் அதிப ராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொள்ளாத போதும் கொக்குவிலில் வசிக்கும் கொக்குவில் இந்துவின் பழைய மாணவியை மணந்த காரணத்தால் கொக்கு விலில் வசித்து கல்லூரி நிர்வாகத்தை திறமையாக நடாத்தி வருகின்றார்.

ஸ்தாபகர் திரு. E. செல்லையா, ஸ்தாபக ஆசிரியர் திரு. N. செல்லப்பா, தாவடி திரு. சோமசுந்தரர் இம்மூன்று பெரியார் களுக்கும் எமது சமூகம் நன்றி உள்ளவர் களாக இருக்க வேண்டும். எம் ஊருக்கு ஒரு சிறந்த பாடசாலை, கிராமத்திற்கு ஒண்மணி மகுடம் எனத்திகழ்ந்து பல கல்விமான்கள், தொழில் வல்லுனர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டவித்தகர்கள் எனப் பல திறமைகளைப் பெற்ற பழைய மாணவர்களைக் கொண்ட தாக யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த கல்விக்கூடமாக விளங்குவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். கல்லூரியை சிறப்பான நிலைக்கு உயர்த்திய அனை வரையும் போற்றி வணங்குகின்றோம்.

எமது கல்லூரியின் புலமைப்பரிசில் திட்டம் ஒரு நீண்ட சரித்திரத்தையுடையது. பல ஆண்டு காலங்களுக்கு முன் ஆரம் பித்தவர் தற்போது கனடாவில் வசிக்கும் எங்கள் மூத்த பழைய மாணவனான திரு. R. அரசரட்ணம் அவர்கள். தன் தந்தையின் பெயரில் "இராஜரட்ணம் புலமைப் பரிசில்" என ஒரு தொகைப் பணத்தை வருடா வருடம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அவரின் திறமை, வசதிக் குறைவு என்னும் அடிப்படையில் வழங்கினார். அவரின் அண்ணன் திரு. R. சிவரட்ணம் அதிபரிடம் கொடுப்பார். இதைத் தொடர்ந்து "கர்நாடக சங்கீத புலமைப்பரிசில்", "Dr.இராஜா புலமைப் பரிசில்", "இராஜேந்திரம் புலமைப்பரிசில்" எனப் புலமைப் பரிசில்கள் வழங்குவோர் தொகை அதிகரித்தது. இதை நடை முறைப்படுத்த ஒரு புலமைப்பரிசில் சபை ஏற்படுத்தப்பட்டு பரிசில் வழங்குவதை நிர்வகித்து வந்தது. நாட்டின் குழப்பநிலை காரணமாக இவை செயலிழந்து போயின.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா புலமைப் பரிசில் திட்டத்தை ஆரம்பித்து நம்பிக்கை நிதி யத்தில் பணத்தை வைப்புச் செய்தது. இத்திட் டத்தை வகுத்தவர் திரு.M. உமாகரன். அவருக்கு உதவியாளர்களாக இருந்தவர்கள் திரு.V. இராஜகுலேந்திரன், திரு. Y. தவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். இதைத் தொடர்ந்து கல்லூரியில் "கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்" சிறப்பாக இயங்கி வருகின்றது. இவ்வகையில் இன்னுமொரு பெரியாரைக் குறிப்பிட வேண்டும். ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் வைத்திய கலாநிதி திரு. T. இராஜச்சந்திரன் அவர்கள். தமிழ் அறிவை வளர்க்கவும், பேச்சாற்றலை ஊக்குவிக்க வும் ஆண்டுதோறும் "இராஜச்சந்திரன் பேச்சுப் போட்டி" எனப் பெயரிட்டு நவ ராத்திரி காலத்தில் போட்டிகள் நடாத்தி தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருவதை யிட்டு நாம் பெருமையடைகின்றோம். அவ ரது தாயார் திருமதி. R. N. தம்பித்துரை கொக்குவிலில் வசிக்கும் வரை அவரைப் பாடசாலைக்கு அழைத்து வந்து விஜயதசமி விழாவன்று வெற்றி பெற்ற மாணவர் களுக்கு அவர் பதக்கங்களை அணிவிப்பார். திரு. இராஜச்சந்திரன் அவர்கள் உயர் பதவியில் இருந்து தான் கற்ற கல்லூரியை மறவாது இத்தகைய சிறப்பான செயலைச் செய்துகொண்டிருக்கின்றார். அவருக்கு எம் வாழ்த்துக்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம் பிக்கப்பட்ட கொக்குவில் ஆரம்ப பாட சாலையின் பாரிய வளர்ச்சியை நினைக்கும் போது எமக்கே வியப்பாக உள்ளது. காரியாலயம் ஒரு சிறிய அறை. அதில் அதிபர் மாத்திரமே இருப்பார். உதவி அதிபர், பிரதி அதிபர், உப அதிபர் என்றொருவர் இல்லை. காரியாலய வேலைகளும் மிகக்குறைவு. காலப் போக்கில் காரியாலய அலுவல்கள் அதிகரிக்க ஒரு சில ஆசிரியர்கள் அலுவலகத்தில் உதவி புரிந்தனர். திரு. C. குணபாலசிங்கம், திரு. S. மகேஸ்வரஐயர் ஆகியோர் பெரிதும் உதவினர். காலக் கிரமத்தில் நிரந்தரமான காரியாலய அலுவலர் நியமிக்கப்பட்டு ஒழுங்காக அலுவல்கள் நடைபெற்று வருகின்றன.

விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அப்போது இல்லை. உடற்பயிற்சி, தையல் இத்தகைய பாடங்களைப் பொதுவான ஆசிரியர்களே கற்பிப்பர். ஆனால் இப்போதெல்லாம் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களே அந்தந்தப் பாடங்களைக் கற்பிக்கின்றனர். தற்கால மாணவர்கள் இத்துணை வசதிகளைப் பெற்றுள்ளனர். இவ்வசதி வாய்ப்புகளை மாணவர்கள் பயன்படுத்தி நல்லறிவைப் பெற்று நல்லவர்களாக வாழப் பழக வேண்டும்.

நூறாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வாண்டு 2010 இல் நாமும் பங்குபற்றக் கிடைத்த வாய்ப்பைப் பெரும் பேறாகக் கருதி கல்லூரி மேலும் சிறப்படைய கல்லூரியின் காவல் தெய்வம் கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானை வணங்கி வேண்டுகின்றோம்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சுவடுகள்...

இ. மகேந்திரன்
கொ. இ. க. முன்னாள் அதிபர்
தலைவர், கொ.இ.க.ப.மா.ச.,
கனடா.

இதயத்தின் அடித்தளத்திலிருந்து அலை அலையாக எழும் நினைவலைகள். அவை பசுமையான வரலாற்றின் சுவடுகள். கிராமத்தின் மணிமகுடம் - ஆசிரியர்களின் அன்பு அன்னை — மாணவர்களின் தெய்வத்தாய் - கொக்குவில் இந்துக் கல்லூரியின் சிறப்புக்களை பெருமைகளைப் பேசுகின்றன, பாடுகின்றன!.

1960 ஆம் ஆண்டு பத்தாம் மாதம் பதினைந்தாம் நாள் மறக்கமுடியாத நாள். கல்லூரியில் நான் ஆசிரியராக இணைந்த இனிய நாள். அதிபர் திருசி.கேகந்தசுவாமி. பிரதி அதிபர் திரு.இ.சபாலிங்கம். இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தின் மிகப் புகழ் வாய்ந்த அதிபர்களாகப் பாராட்டப்பட்டவர்கள். இருவரும் தமிழ்த்தேசிய உடையில் கல்லூரிக்கு வருவதை காணக் கண்கோடி வேண்டும். இவர்களின் வழிகாட்டலில் ஆசிரியப் பெருந்தகைகள் கல்லூரியின் வளர்ச்சிக்காக, மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அயராது உழைத்தார்கள். இவர்களது இணையற்ற இலட்சிய தாகமே என்னை மிகவும் கவர்ந்தது. என்னை மாத்திரமா? எண்ணற்ற மாணவர்களின் மனதைக் கவர்ந்த ஆசிரியப் பெருந்தகைகளை அவர்களது மகத்தான சேவையை மறந்துவிட முடியுமா?

கொக்குவில் இந்துவின் இதயம் "விளையாட்டு மைதானம்" என்றால் மிகையாகாது. 1960ஆம் ஆண்டில் திரு.ஆ.பரமானந்தம் விளையாட்டுத்துறை ஆசிரியராக இருந்தார். கொக்குவில் இந்துவின் வரலாற்றில் பரமானந்தம் மறக்கப்பட முடியாதவர். கல்லூரியின் பல வேலைகளைச் சேவையாக முன்னின்று செய்தவர். மெய்வல்லுனர், மல்யுத்தம், குத்துச்சண்டை என்று பல துறைகளில் பரமானந்தம் தனது முத்திரையைப் பதித்திருந்தார். இவரது பயிற்சித் திறனால் கல்லூரி உதைபந்தாட்டத்தில் உயர்நிலையைப் பிடித்தது. 1941 ஆம் ஆண்டில் தான் கொக்குவில் இந்து முதலாவது உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றியது.

இப்போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. காரை நகர் இந்துக் கல்லூரியை இப்போட்டியில் கொக்குவில் இந்து வென்றது. கொக்குவில் இந்துவின் தலைவராக இருந்தவர் திரு.சு.நாகலிங்கம். இவர் தான் இளைப்பாறிய காலத்தில் கொக்குவில் இந்துவில் இணைந்து பல வருடங்கள் மகத்தான சேவை செய்தார். பின் கனடா பழைய மாணவர் சங்கத்தில் யாப்பினை உருவாக்க பெரிதும் காரணமாக அமைந்தார். இன்றுவரை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றார் என்பதே குறிப்பிடத்தக்கதாகும். இவரை அடியொற்றி இவரது மகன் நா. பாலகுமார் கனடா பழைய மாணவர் சங்கத்தின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் உதவி வருகின்றார். 1946 இல் திரு.ஆ.பரமானந்தம் விளையாட்டுத்துறை ஆசிரியராக பொறுப்பேற்றார். 1947 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து முதன்மை விருது பெற்றது. 1948, 1952, 1957 ஆண்டுகளில் இறுதிப் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். 1952 ஆம் ஆண்டிலும் முதன்மை விருது பெற்றது. 1957 ஆம் ஆண்டு இறுதிப் போட்டி மறக்க முடியாததாகும். இப்போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு எதிராக கொக்குவில் இந்து களம் இறங்கியது. இரண்டு கோல்களால் முன்னணி வகித்த நேரத்தில் இரசிகர்கள் களத்தினுள் குளப்பம் விளைவித்ததால் போட்டி கைவிடப்பட்டது. இப்போட்டி பின் நடத்தப்படவில்லை. இப்போட்டியில் பங்குபற்றிய கொக்குவில் இந்து அணி தோல்வியே கண்டிராத அணியாகத் திகழ்ந்தது. இந்த அணியின் படம் கல்லூரியின் சஞ்சிகையில் போடப்பட்டிருந்தது. படத்திற்கு "கடவுளுக்குத் தெரியும்" என்று மகுடமிடப்பட்டிருந்தது. இப்போட்டியில் விளையாடிய பிரபல வீரன் திரு. ஏ.கணேசலிங்கம் 1960ஆம் ஆண்டில் கல்லூரியின் விளையாட்டு ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1960 ஆம் ஆண்டில் திரு.ஆ.பரமானந்தம் திடீரென இறைபதம் அடைந்தார். ஆயினும் அவரது சீடரான ஏ.கணேசலிங்கம் விளையாட்டுத்துறை ஆசிரியராக சேவையைத் தொடர்ந்து மிகுந்த புகழ் ஈட்டினார்.

திரு.ஏ.கணேசலிங்கத்தின் வழிகாட்டலில் எமது கல்லூரி பல்வேறு துறைகளில் பெரும் புகழ் ஈட்டியது என்றால் மிகையாகாது. 1975ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில் மகாஜனாக் கல்லூரியை கொக்குவில் இந்து வெற்றி கொண்டது. இந்த அணியை பயிற்றுவித்த பெருமை திரு.ஏ.கணேசலிங்கம் அவர்களுக்கே உரியதாகும். போட்டி முடிவடைந்த பின் உதை பந்தாட்ட அணி மேளதாளத்துடன் மாலை மரியாதைகளுடன் தட்டாதெரு சந்தியிலிருந்து கல்லூரி வரை தோளிலே சுமந்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அணியில் A. பாலசுப்பிரமணியம் (தலைவர்), க.சிவராசா, பு.பிரபாகரன், இரத்தினசோதி, ந.ரவிச்சந்திரன், ந. ரவிமோகன், நா.செல்வநாதன், நா.பாலகுமார், அ.கைலேஸ்வரன், தெய்வேந்திரன், ந.சிவானந்தராசா ஆகியோர் பங்குபற்றி யிருந்தனர். இந்தப் போட்டியைப் போலவே 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியையும் குறிப்பிடலாம். முதலாவது நடந்த இறுதிப் போட்டியில் மகாஜனாக் கல்லூரியுடன் சமநிலையில் போட்டி முடிவடைந்ததினால் இரண்டாவது தடவையும் போட்டி நடைபெற்றது. போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான இரசிகர்களின் ஆவேசக் கூக்குரலுடன் போட்டி நடந்தது. மகாஜனா ஒரு கோல் முன்னணியில் இருந்து போட்டி முடிவடைய 10 நிமிடமே இருந்தது. மகாஜனா வெற்றி என்று கூறிக்கொண்டே இரசிகர்கள் வெளியேறத் தொடங்கினார்கள். கொக்குவில் இந்து தளராமல் வீராவேகமாக விளையாடியது. திடீரென்று பொ. சந்திரநாதன் உதைத்த பந்து புயலென மேலெழுந்து சீறிச் சென்று கோலுக்குள் புகுந்தது. திரும்பிச் சென்ற எல்லோரும் விழுந்தடித்து மீண்டும் ஓடி வந்தனர். போட்டியில் கொக்குவில் இந்து இணைச் சம்பியன் ஆகியது. கொக்குவில் இந்து 1970 ஆம் ஆண்டின் சிறந்த அணியாக விளங்கியது. சிநேக பூர்வமான போட்டியில் வெற்றி கொள்ள முடியாத அணி எனப் புகழப்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியையும், இளவாலை சென் கென்றீஸ் அணியையும் வெற்றி கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அணியில் ந.இராஜகுலசிங்கம் (தலைவர்), கருணாகரன் (உபதலைவர்), பவானந்தன், இரத்தினசிங்கம், மனோகரன், பொ.சந்திரநாதன், ரா. பரராஜசிங்கம், சிவனேஸ்வரன், புவனேசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகாந்தன், சரவணபவான், சிவபாதசுந்தரம் ஆகியோர் அங்கம் வகித்தனர். இந்த அணியின் பயிற்சியாளராக இருந்தது குறித்து நான் மிகவும் பெருமைப்படுகின்றேன். 1971 ஆம் ஆண்டு அகில இலங்கைப் பாட சாலைகள் சங்கம் நடாத்திய போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டியில் தனஞ்சயன் திறமையாக விளையாடினார் என்பது நினைவில் நிற்கின்றது. 1968 ஆம் ஆண்டு கல்லூரியின் மூன்றாவது பிரிவுக் கோஷ்டிக்கு பயிற்சியாளராக இருந்தேன். இந்த அணி மிகவும் திறமையான அணியாக திகழ்ந்தது. சம்பியன் விருதினை வென்றது. மனோகரன் (தலைவர்), தனஞ்சயன் (உப தலைவர்), ந. இராஜகுலேந்திரன், மகாலிங்கம், சிவராசா, தம்பி, சிவகுமார், ஆனந்தா, செல்வகுமார், அமிர்தலிங்கம், சிறீஸ்கந்தராசா, பரமேஸ்வரன் ஆகியோர் அணியில் விளை யாடினார்கள். 1967 ஆம் ஆண்டு கொக்குவில் இந்து முதலாம் கோஷ்டி மகாஜனக் கல்லூரி யுடன் இணைச் சம்பியன் ஆகியது. சுந்த ரானந்தா (தலைவர்), மகேந் திரன் (உப தலைவர்), பாலசுந்தரம், சிறிஸ்கந்தராசா, விஜயராசா, சிறிகாந்தன், சத்தியநாதன், தனபாலசிங்கம், யோகலிங்கம், சுதந்திரன், சந்திரமோகன், செல்வராஜா, பவானந்தன், இராசேந்திரன் ஆகியோர் அணியில் திறம்பட விளையாடினார்கள். கொக்குவில் இந்துவின் பயிற்சியாளர்களாக இருந்த கல்லூரி ஆசிரியர்கள், சபாலிங்கம், கணேசலிங்கம், இராமநாதன், பாலகிருஸ்ணன், மகேந்திரன், வில்வராசா, திருமதி. ஏகாம்பரம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர். பழைய மாணவர்களாகிய செல்வராசா, பவசிங், ஞானஸ்காந்தா, ரஞ்சித்குமார், பாலகுமார், உமாசங்கர், செல்வநாதன், பொ.சந்திரநாதன், கோகுலன், சத்தியகலா, திருமதி. குணரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இலங்கை சாரணர் வரலாற்றில் கொக்கு வில் இந்து தனது பெயரை பொன்னெழுத் துக்களால் பொறித்துள்ளது என்றால் மிகை யாகாது. 1960 ஆம் ஆண்டு திருசிவசுப்பிர மணியம் அவர்களுடன் சாரண ஆசிரியராக இணைந்து செயற்படத் தொடங்கினேன். மிகவும் சுறுசுறுப்பான ஆசிரியர். 1943ஆம் ஆண்டு 7ம் மாதம் 7ஆம் திகதி சாரணர் குழு உருவாக்கப்பட்டது. ஆனால் 1941 ஆம் ஆண்டு குருளைச் சாரணர் அணி திரு.நாகலிங்கம், செல்வி. பொன்னுத்துரை ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். இந்தியாவில் பெங்களூரில் நடைபெற்ற ஜம்போரியில் எமது கல்லூரிச் சாரணர்கள் பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1965 ஆம் ஆண்டு 21 இராணிச் சாரணர்களை உருவாக்கி வரலாறு படைத்தது மறக்க முடியாத சம்பவமாகும். அகில இலங்கை இராணிச் சாரணர் கொடி வழங்கப்பட்டது. அத்துடன் அகில இலங்கை சமூக சேவை திட்ட கேடயமும் வழங்கப் பட்டது. இந்த இருபத்தியொரு சாரணர்களை கொழும்பு இராணி மாளிகையில் நடைபெற்ற வைபவத்திற்கு நானும் கணேசலிங்கமும் அழைத்துச் சென்றோம். 1966 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி கல்லூரியில் சாரணர் களதினம் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இலங்கை கௌரவ பிரதம சாரணர் ஆணையாளர் திரு.மு.சோம சுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன் பின்னர் மீண்டும் 1969 ஆம் ஆண்டில் 12 இராணிச் சாரணர்களை உருவாக்கி அகில இலங்கை இராணிச் சாரணர் கொடியினை எமது கல்லூரி பெற்றுக்கொண்டது. கல்லூரிச் சாரணர் இயக்கத்தின் ஆசிரியராக இருந்ததால் சாரணிய அனுபவமும் பயிற்சியும் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றேன். நுவரெலியாவில் நடாத்தப்பட்ட இயக்கத்தில் ஆசிரியராக இருந்தால் சாரணிய அனுபவமும் பயிற்சியும் மிகவும் பெற்றேன். நுவரெலியாவில் நடாத்தப்பட்ட "வூட்பாட்ஜ்" பயிற்சியில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றேன். பிலிப்பைன்ஸ் தீவில் நடாத்தப்பட்ட இளைஞர் விழாவிலும் பங்குபற்றினேன். யாழ்ப்பாணத்தின் சாரண ஆணையாளராக சேவை செய்யும் பெரும் பேறும் கிடைக்கப்பெற்றேன்.

எமது கல்லூரியில் முதன் முதலாக "கனிஸ்ட கடேற்" அணியை உருவாக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. இந்த அணியின் முதலாவது பொறுப்பாசிரியராக அணியினை டியத்தலாவைக்கு அழைத்துச் சென்றது மறக்க முடியாத சம்பவமாகும். கடேற் அணியின் பயிற்றப்பட்ட அலுவல ராக திரு.வு.வில்வராசா பின் பொறுப்பேற்று திறம்பட இயக்கினார்.

எமது கல்லூரியின் ஆண்களுக்கான பான்ட் வாத்தியக்குழுவை உருவாக்கியதை மறக்க முடியாது. கல்லூரி வருடாந்த தடகளப் போட்டியின் போது இக்குழு அரங்கேற்றம் செய்தது. இக்குழுவின் இசையையும் அணி வகுப்பையும் அப்போதைய கல்விப் பணிப்பாளர் திரு.சுந்தரலிங்கம் மிகவும் பாராட்டிப் பேசினார என்பது நினைவுக்கு வருகின்றது.

கூடைப்பந்தாட்டத்திடல் எமது கல்லூரி யில் இருக்கவில்லை. ஆயினும் பெண் களுக்கு பயிற்சியளித்து அணியொன்றை உருவாக்கியது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு போட்டிகளில் எமது மாணவிகள் பங்குபற்றினார்கள். செல்வி சத்தியகலா மாணவிகளை வழிநடாத்துவதிலும் பயிற்சி கொடுப்பதிலும் பெரிதும் உதவியாக இருந்தார்.

க.பொ.த சாதாரண வகுப்புகளில் "G" என்ற பிரிவு உருவாக்கப்பட்டது. அதனுடைய வகுப்பாசிரியராக நியமிக்கப்பட்டேன். பொருளியல் பாடத்தை முதன் முதலாக கொக்குவில் இந்துவில் கற்பிக்கும் பொறுப்பும் எனக்கு கிடைத்தது. பொதுப்பரீட்சையில் சுமார் 20 மாணவர்கள் சிறந்த பெறுபேறு களைப் பெற்றார்கள். உயர்தர வகுப்பில் வர்த்தகப் பிரிவை ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது வேண்டுகோள் ஏற்கப்பட வில்லை. இதனால் சில மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் சென்றார்கள். ஆயினும் அதிபர் திரு.சி.கே.கந்தசுவாமி அடுத்த ஆண்டே எனது வேண்டுகோளை ஏற்றார்.

பொருளியல், வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களைக் கற்பிக்க அதிபர் வழிவகுத்தார். வேறு பாடசாலைக்குச் சென்ற பல மாணவர்கள் திரும்பி வந்தார்கள். தமது ஒரு வருடத்தை தியாகம் செய்தே வந்தார்கள். பொருளியலைக் கற்பிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. திரு.சரவணபவான், திரு.பேரம்பலம், திரு.குலசேகரம், செல்வி வேலுப்பிள்ளை, செல்வி. உ. கந்தையா ஆகியோர் வர்த்தக பாடங்களை கற்பித்தனர். இன்று வர்த்தகத் துறையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாகவும் சிரேஷ்ட விரிவுரை யாளர்களாகவும் எமது மாணவர்கள் பிரகாசிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதே மாதிரி தமிழ்த்துறையிலும் எமது மாண வர்கள் விரிவுரையாளர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

2003ஆம் ஆண்டு எமது கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சி மிகப் பெரிய வெற்றி எனலாம். பல பாடசாலை களைச் சேர்ந்த மாணவர்கள் திரள் திரளாக திரண்டு வந்ததை மறக்க முடியுமா? அக்காலத்தில் யாழ்ப்பணத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த நாளேடுகள் இக்கண்காட்சியைப் பாராட்டி எழுதியிருந்தார்.

எமது பாடசாலை மாணவ மாணவிகள் பேச்சாற்றல் மிக்கவர்களாவதற்கும் பல மன்றங்களை அமைத்தோம். வணிக மன்றம் அமைக்கப்பட்டது. மு.வேலாயுதபிள்ளை அதன் பொறுப்பாசிரியராக விளங்கினார். வணிகச்சுடர் என்ற சஞ்சிகை வெளியிடப் பட்டது. வணிகச்சுடர் 2010 ஆம் ஆண்டு வரை தவறாது ஆண்டுதோறும் வெளியிடப் பட்டு வருகின்றது. இவ்வாறே விஞ்ஞான மன்றமும் வருடா வருடம் சஞ்சிகை வெளி யிடப்பட்டது. திருவாளர்கள். க.வேலாயுதம், வே.மகேந்திரன் பொறுப்பாசிரியர்களாக திறம்படச் செயற்பட்டனர். திரு.த.தேவராஜா, பிரதி அதிபர் அவர்களின் பெருமுயற்சியால் ஆங்கில மன்றம் அமைக்கப்பட்டது. வருடா வருடம் சஞ்சிகை வெளியிடப்பட்டது பாராட்டத்தக்கதாகும். இந்த மன்றங்கள் வருடா வருடம் விழா எடுப்பது வழக்க மாகும். குறு நாடகங்கள் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து தமிழ் மன்றத்தினை திறம்பட இயக்கிய பெருமை திரு.இமாசிவசுப்பிரமணியம் அவர்களையே சாரும். பட்டிமன்றங்களிலும் விவாதங் களிலும் பங்குபற்றி பாராட்டும் புகழும் எமது கல்லூரி பெற்றது.

வரலாற்றில் மிகச் சுவையான சம்பவம் திரு.அபஞ்சலிங்கம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றார். அதே சமயம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராக நான் பொறுப்பேற்றேன். என்னுடன் கல்லூரி ஆசிரியர்கள் பலர் யாழ் இந்துவிற்குச் சென்று அவரை வாழ்த்தி னோம். அதேமாதிரி யாழ் இந்துவிலிருந்து என்னையும் பாராட்டினார்கள். எங்கள் இருவருக்கும் சேர்த்தே கொக்குவில் இந்துவில் பாராட்டு விழா நடாத்தப்பட்டது. இரண்டு கல்லூரி அதிபர்களுக்கு ஒரே விழா நடந்தது என்பது பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

விளையாட்டுத்துறை பற்றி மீண்டும் எழுதுவது அவசியமாகின்றது. திருவாளர் இ.சபாலிங்கம் அவர்களே முதல் பொறுப்பாசி ரியர். அவரைத் தொடர்ந்து பாலகிருஷ்ணன், ஏ.கணேசலிங்கம், இ.மகேந்திரன், புவன சுந்தரராஜா, T.வில்வராஜா, சிறிபற்குணம், த.தேவராஜா ஆகியோர் பொறுப்பாசிரியர் களாகக் கடமையாற்றினார்கள். திருவாளர் சபாலிங்கம், பாலகிருஷ்ணன், கசேணலிங்கம், மகேந்திரன் ஆகியோர் யாழ்ப்பாணம் பாடசாலைகள் சங்கத்தின் செயலாளர்களாக கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். தி .த.தேவராஜா அவர்கள் வடமாகாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றினார். மேலும் திருவாளர்கள் இ.சபாலிங்கம், A.R.இராசநாயகம், த.தேவராஜா, இ.மகேந்திரன் ஆகியோர் வடமாகாண ஆசிரியர் சங்கத்திலும், சகாயநிதியத்திலும் பதவி வகித்து புகழ் பெற்றவர்களாவர். திரு.புவனசுந்தரராஜா பாராளுமன்றப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். திரு. S.P.நடராசா ஆசிரியராக சேவை செய்த காலத்தில் உரும்பிராய், ஊரெழு பட்டின சபையின் தலைவராக இருந்தார். இளைப்பாறிய பின் திரு.வி.எஸ்.சிவசுப்பிர மணியம் யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பின ராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மதிப்பிற்குரிய ஹன்டிப் பேரின்பநாயகம் அவர்கள் இளைஞர் காங்கிரஸ் மூலம் அரசியலில் பெரும் புகழ் பெற்றவராவர்.

எமது கல்லூரி வரலாற்றில் பழைய மாணவனான மாணிக்கம் சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே தனிய மூன்று மாடிக் கட்டிடம் கட்டிக்கொடுத்தது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இது மாத்திரமா? விளையாட்டு மைதான விரிவாக்கத்திற்கு வீடும் வளவும் வாங்கிக் கொடுத்தார். சிகரம் வைத்தது போல் "பார்வையாளர் மண்டபம்" கட்டியது அமைந்துள்ளது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக தெற்கு மூலையில் அமைந்துள்ள வீட்டினை வாங்குவதற்கு வங்கிக் கடன் பெறுவதற்கு பெரிதும் காரணமாக அமைந் துள்ளார். இவரைப் போன்ற பழைய மாண வனைப் பெறுவதற்கு கொக்குவில் இந்து பெரிதும் அதிஷ்டம் பெற்றுள்ளது எனலாம். அதே மாதிரி ஜெயமனோகரன் என்ற பழைய மாணவன் (கனடா) பத்து இலட்சம் ரூபா மைதானத்தை விரிவாக்கி அமைக்க நன்கொடை அளித்துள்ளார். தேவராஜா குடும் பத்தினர் தாம் வாழ்ந்த இனிய இல்லத்தினை உள்ளம் உவந்து கல்லூரிக்கு நன்கொடை செய்துள்ளனர் என்பது பெரிதும் பாராட்டு தற்குரியதாகும். தேவராஜா குடும்பத்தின் ரகு (கனடா) அவர்கள் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பல பரிசுகளை வருடந்தோறும் வழங்குவதற்கு "நிரந்தர நிதியை" வைப்பிலிட்டு உதவியுள்ளார். நன்கொடை என்ற நிதியானது கல்லூரி ஸ்தாபகர் செல்லையா அவர்களுடன் ஊற்றெடுத்து பொன்னுத்துரை அவர்களின் குளப்பிட்டி வளவு நன்கொடை, காங்கேசன் துறை வீதியில் கல்லூரிக்கு பாதை வழங்கிய அருட்பிரகாசம் மைதான விரிவாக்கத்திற்கு வீடும் காணியும் வாங்கிக் கொடுத்த சுப்பிரமணியம் என்று தொடர்ந்து வளர்ந்து கொண்டு இருக்கின்றது. சி.கே.கந்தசுவாமி கட்டிடம், T.S.சின்னத்தம்பி கட்டிடம் என்பவையும் சிறந்த நன்கொடைகளாகும்.

கொக்குவில் இந்துவின் மைந்தர்கள் உலகின் பலபாகங்களில் வாழ்ந்தாலும் தமது தாயாகிய கொக்குவில் இந்துவின் மீது பெரும்பாசமும் பற்றும் கொண்டவர்களாக வாழ்கின்றார்கள். கனடாவில் இருக்கும் பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகின்றது. மாணவர் புலமைப்பரிசு நிதியத்தின் மூலம் பல மாணவர்களுக்கு உதவி வருகின்றது. கணனிகளைப் பெற்றுக் கொடுத்து கல்வி வளர்ச்சிக்கு கைகொடுத்து வருகின்றது. உதை பந்தாட்டம், சாரணியம் ஆகியவற்றில் ஈடு பட்டு புகழ்பெற்ற மாணவர்கள் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் மிகவும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்க தாகும். கட்டிடப் பராமரிப்பு, விளையாட்டு மைதான விரிவாக்கம் போன்றவற்றிற்கு பெரிதும் உதவி வருகின்றார்கள்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறக்கமுடியாத ஆசிரியர்கள்

அ. முத்துலிங்கம்
கனடா.

மனித வாழ்க்கை என்பது மறதியை நோக்கிய பயணம் தான். வயது கூடக்கூட மறதியும் கூடுகிறது. உலகப் பிரசித்தமான விஞ்ஞானி கலிலியோ தன் முதிய வயதில் தான் எழுதிய விஞ்ஞான சித்தாந்தங்களை தனக்கு முன்னால் பரப்பி வைத்து புரியாமல் பார்த்துக் கொண்டே இருப்பாராம். எல்லாமே அவருக்கு மறந்து விட்டது. என்னைப் படிப்பித்த ஆசிரியர்களில் பலரை நான் மறந்து விட்டாலும் சிலருடைய நினைவுகள் இடைக்கிடை எழும். அமிர்தலிங்க மாஸ்ரருடைய நினைவும் அப்படித்தான். முறம் போல செருப்பும், மூக்குப்பொடி பட்டையும் இவருடைய அடையாளங்கள். காலையில் வெள்ளையாக இவர் கையில் காட்சியளிக்கும் கைக்குட்டை மாலையில் பழுப்பு நிறமாகிவிடும். ஆங்கிலக் கவிதைகளைப் பாடமாக்கி இவரிடம் ஒப்பிக்க வேண்டும். இவருக்குப் பிடித்த பாடல் Under a spreading chestnut tree. எங்கேயோ தூரதேசத்திலிருந்து ஒரு வெள்ளைக்காரன் பாடி வைத்தது. எப்படித்தான் இரவிரவாக கண்விழித்து பாடமாக்கினாலும் மாஸ்டருக்கு முன் போய் நின்றவுடன் இரத்தமெல்லாம் தண்ணியாகிவிடும். வாயைத் திறந்தால் காற்றுத்தான் வரும். 'அது என்ன சேர் chestnut tree? மாமரம் போல இருக்குமா?' என்று கேட்டால் பிடிக்காது. பிரம்பு மரம் போல இருக்கும் என்று பிரம்பை எடுத்துக் காட்டுவார்.

அந்தக் காலத்தில் எல்லா ஆசிரியர்களும் மாணவர்கள் மனப்பாடம் செய்ய வேண்டும் என்றே எதிர்பார்த்தார்கள். சரித்திரம், விஞ்ஞானம், கணிதம், பூமிசாஸ்திரம் என ஒன்றுக்குமே விதிவிலக்கில்லை. 'புல்லர்' என்று ஓர் ஆசிரியர், அவருடைய உண்மையான பெயர் மறந்துவிட்டேன். பள்ளிக்கூடத்திலேயே ஆக நீளமான கம்பு அவரிடம் தான் உண்டு. மேசையில் துள்ளி ஏறி அக்கிராசினர் போல அமர்ந்தவாறே கடைசி வாங்கு மாணவனை அவரால் எட்டி அடிக்க முடியும். அவருடைய திட்டம் படிப்படியான சித்திரவதை. நாளுக்கு மூன்று திருக்குறள் பாடமாக்கச் சொல்வார்.

செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான்
-அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்.

எங்கே கோபம் செல்லுமோ அங்கே அதைக் காக்க வேண்டும் என்பது பொருள். இதை மனனம் செய்யவில்லை என்பதற்காகத்தான் என்னைப் போட்டு அடித்தார். அடிப்பாரே ஒழிய அந்தக்குறள் என்ன சொல்கிறது என்பதைப் பார்ப்பதில்லை. சனி, ஞாயிறு ஓய்வாக இருக்கலாம் என்றால் இரண்டு நாளுக்கும் சேர்த்து ஆறு திருக்குறள் சொல்லவேண்டும். 'கொக்கொக்க' என்று தொடங்கும் ஒரு திருக்குறள். நான் அதை இப்படி ஒப்பித்தேன்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
கொத்தொக்க சீர்த்த இடத்து.

இதற்கும் அடி விழுந்தது. 'குத்தொக்க சீர்த்த இடத்து' என்பது தான் சரி. 'குருவி கொத்தும், கொக்கு கொத்தாது, குத்தும் மீனை அது செங்குத்தாகக் குத்திப் பிடிக்கும்' என்று அந்த ஆசிரியர் விளக்கம் சொல்லித் தரவில்லை. முப்பது வருடங்களுக்குப் பிறகு நானாகக் கண்டு பிடித்தது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைநாதர் என்ற ஆசிரியர் என்னுடைய ஆகச்சின்ன வயதில் படிப்பித்தார். வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, அங்க வஸ்திரம் அணிந்திருப்பார். ஆற்றிலே இறங்கப் போவது போல வேட்டியை சற்று தூக்கிப் பிடித்துக் கொண்டு பிள்ளைத் தாய்ச்சி போல அசைந்து அசைந்து நடப்பார். வகுப்பு மணி அடித்து ஐந்து நிமிடம் கழித்துத் தான் வருவார். இவர் அடிப்பது கிடையாது. ஆனால் புதுவிதமான தண்டனைகளை உண்டாக்குவார். எங்கள் பாடப்புத்தகத்தில் இரட்டைப் புலவர் பாடல்கள் இருந்தன. இவர்கள் சோடியாகவே பயணம் செய்வார்கள். ஒருவர் முதல் இரண்டு அடிகளைப் பாட மற்றவர் கடைசி இரண்டு அடிகளையும் பாடி முடிப்பார். அப்படி அவர்களுக்கிடையில் ஓர் ஏற்பாடு. எங்கள் வேலை அவற்றை மனனம் செய்வது. ஒரு நாள் இரட்டையரில் ஒருவர் ஆற்றிலே தன் கந்தல் ஆடையை தப்பிய போது அது ஆற்றோடு போய்விட்டது.

ஆற்றிலே தோய்த்து அடித்தடித்து
- நாளுமதை
தப்பினால் நம்மை அது தப்பாதோ.

என்று அவர் பாட மற்றவர் இப்படி முடித்தார்.

இப்புவியில் - ஆனாலும் கந்தை அதிலும்
-ஓராயிரம் கண்
போனாலும் போச்சென்ன போ.

இந்தப் பாடலை அன்று வகுப்பில் பாடமாக்காதது இரண்டே இரண்டு பேர் தான். ஒன்று நான், மற்றது ஜெகராஜசிங்கம். மனனம் செய்யும் வேலையில் நாங்களும் கிட்டத்தட்ட இரட்டைப்புலவர் போலத்தான். வகுப்பில் வேப்ப மரத்தில் செய்த புது அலுமாரி வந்து இறங்கியிருந்தது. வகுப்பு முடியுமட்டும் ஆசிரியர் எங்களை அலுமாரியில் வைத்துப் பூட்டி விட்டார். இப்பொழுது நினைத்துப் பார்த்தால் பெரிய தண்டனையாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அது மிகச் சாதாரணம். என் வீட்டிலே கூட ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் கூடிய தண்டனையாகக் கொடுத்திருக்கலாம் என்று ஐயா அபிப்பிராயப்பட்டார். படிப்பென்றால் மனனம் செய்வது என்ற எண்ணம் தீவிரமாகப் பரவியிருந்த காலம் அது. யார் வகுப்பில் அதிகமாக மனனம் செய்யும் திறமை பெற்றிருக்கிறாரோ அவரே கெட்டிக்காரர்.

எங்களுக்கு ஒரு சங்கீத ரீச்சர் கூட இருந்தார். அவர் இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு சிங்கப்பூரிலிருந்து வந்தவர். எஸ்.என்.சரஸ்வதி என்று பெயர். எங்கள் கிராமத்தாரை ஆச்சரியப்படவைக்கும் சதுரமான கண்ணாடி அணிந்து, சிங்கப்பூர் ஸ்டைலில் சேலை கட்டி, அழகான தோற்ற முடன் இருப்பார். இனிமையான குரலில் பாடுவார். காலை மாலை எப்பொழுது பார்த்தாலும் அப்பொழுது தான் புகைப்படத்துக்குத் தயாரானது போல மெல்லிய ஒப்பனையில் காணப்படுவார். முதல் நாள் முதல் வகுப்பில் தியாகராஜருடைய கீர்த்தனை ஒன்றை எடுத்த எடுப்பில் சொல்லித் தந்தார். 'ஸரஸ சாமதான பேத தண்ட சதுர' என்று அது தொடங்கும். ஆங்கிலத்தில் கவிதை பாடமாக்கி களைத்து, தமிழ் பாடல்களைப் பாடமாக்கி களைத்திருந்த எனக்கு தெலுங்கிலும் மனப்பாடம் செய்யவேண்டிய கட்டாயம். ஒரு தவணை முழுக்க அவர் என்னைப் படிப்பித்தார். அப்படியும் பழக்கப்படாத என் மூளைக்குள் தெலுங்கு ஏறச் சம்மதிக்க வில்லை.

சமீபத்தில் கனடாவில் ஒரு திருமண விருந்தில் இங்கிலாந்திலிருந்து வந்து கலந்து கொண்ட என்னுடைய சங்கீத குருவைச் சந்தித்தேன். அதே சதுரமான கண்ணாடி, அதே இனிமையான குரல், 'என்னை ஞாபகமிருக்கிறதா?' என்று கேட்டேன். ஒரு நிமிடம் கூட யோசிக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்றார். 'ஸரஸ சாம' என்று தொடங்கும் தியாகராஜருடைய கீர்த்தனையில் பல்லவியை காபிநாராயணி ராகத்தில் அத்தனை சனங்களின் முன்பும் பொய்க் குரலில் பாடிக் காண்பித்தேன். எனக்குப் பின்னாலிருந்த நாற்காலி திடீரென்று பாடத் தொடங்கியது போல ஸ்தம்பித்துப் போய் நின்றார். என் முகத்தை ஞாபகத்துக்கு கொண்டுவர முயன்று முயன்று தோற்றார். திருமண விருந்து முடிவுக்கு வரும் வரை நான் யார் என்பதை அவருக்கு சொல்ல வில்லை. ஒரு வஞ்சம் தீர்ப்பதில் உள்ள இன்பம் ஈடு இணையற்றது.

எங்கள் பள்ளிக்கூடத்தில் படித்த சகல மாணவரையும் கலங்க வைத்த ஓர் ஆசிரியர் இருந்தார். அவருடைய பெயர் எம். எஸ். நேரசூசிகையை விளம்பரப் பலகையில் ஒட்டியதும் மாணவர்கள் ஓடிப் போய் முதலில் பார்ப்பது எம்.எஸ் ஏதாவது பாடம் எடுக்கிறாரா என்பது தான். அவர் பாடம் எடுக்கும் வகுப்புக்களைப் பார்த்து ஏனைய மாணவர்கள் ஆறுதல் சொல்வார்கள். குதிரை மேலிருந்து பார்ப்பது போலத்தான் அவர் மாணவரைப் பார்ப்பார். அவர் எங்களுக்கு பூமிசாஸ்திரம் பாடம் எடுத்தார். பிழைகள் பொறுக்க மாட்டாதவர். [illegible] வகுப்பை தொடங்க முன்னர் பட்டினத்தாருடைய 'கல்லாப் பிழையும், கருதாப் பிழையும்' பாடலை முழுதாக மனதுக்குள் ஒருமுறை சொல்லிக்கொள்வேன்.

ஆங்கிலக் கவிதை, தமிழ்க்கவிதை, தெலுங்குக் கீர்த்தனை என்று பாடமாக்கச் சொன்னால் கொஞ்சம் முயன்று பார்க்கலாம் ஆனால் எம்எஸ் வரைபடத்தை மனனம் செய்யச் சொல்லுவார். வெண்கட்டியை எடுத்து உலக வரைபடத்தை கரும்பலகையில் கையெடுக்காமல் வரைவார். இலங்கையின் ஆகத் தெற்குப் புள்ளி தேவேந்திர முனை. அதிலேயிருந்து ஒருவர் தெற்குப் பக்கமாக நேராகப் போனால் சரியாக தென் துருவத்துக்கு போய்விடலாமாம். அதைக் கீறியும் காட்டுவார். உலகத்தில் எத்தனை நாடுகள் இருக்கின்றன, அத்தனையையும் நினைவில் வைக்க வேண்டும். அட்சரரேகை, தீர்க்கரேகை, கண்டங்கள், சமுத்திரங்கள், நாடுகள், கடல்கள், மலைகள், ஆறுகள், நகரங்கள் என்று முடிக்கின்ற காரியமா? எங்களை ஒவ்வொருவராக அழைப்பார். பால்குத்த வந்தவனிடம் போவது போல நாங்கள் அரக்கி அரக்கி போவோம். அவருடைய வரைபடத்தில் அவர் சொல்லும் இடங்களை நாங்கள் தொட்டுக் காட்ட வேண்டும். "அந்தமான் நிக்கோபார்" என்பார். திரும்பி மானைத் தேடும் போது தண்டனை ஆரம்பித்து விடும்.

வந்தியத்தேவன் பனை இலச்சினை மோதிரத்தை எடுப்பது போல அன்பொழுக கதைத்தபடி தன் விரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றி அடுத்த கைவிரலுக்கு மாற்றுவார். குட்டு விழப்போகிறது. இவர் குட்டினால் பள்ளத்தில் ஒரு பட்டை தண்ணீர் நிற்கும் என்பது ஐதீகம். இடி போல குட்டு இடப்பக்கம் இறங்கும். அன்று வரை இடப் பக்க மூளையில் சேகரமாயிருந்த தகவல் எல்லாம் வலப்பக்க மூளைக்கு மாறிவிடும்.

இவரை நான் மன்னித்து விட்டேன். கடைசி வரைக்கும் மன்னிக்க முடியாத ஓர் ஆசிரியர் இருந்தார். அவர் பெயர் ஹென்ஸ்மன். இவர் எங்களுக்கு வேதியியல் முழுக்க பாடம் எடுத்தார். வேதியியல் முழுக்க சமாந்திரங்கள் நிறைந்திருக்கும். ஆனால் இவர் அவற்றை நாங்கள் பாடமாக்க வேண்டும் என்று சித்திரவதை செய்வதில்லை. நாங்கள் வணக்கம் சொல்லி விட்டு உட்கார்ந்ததும் அம்மனிதர் நடந்து கொண்டே வாயைத் திறந்து பேசத் தொடங்குவார். வார்த்தைகள் சங்கிலிக் கோர்வையாக விழும். வகுப்பின் கடைசியில் போய் நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் போது வார்த்தைகள் பின்னாலிருந்து முன்னுக்கு வரும். ஒன்றுமே புரியாது. அது நல்ல வசதியாக இருந்ததால் நாங்கள் எங்கள் பாட்டுக்கு ஏதாவது செய்து நேரத்தை உபயோகமாகக் கழிப்போம்.

ஒரு தடவை என் கையில் கல்கி தீபாவளி மலர் கிடைத்தது. அது ஒரு பொக்கிஷம் போல. ஒன்றே கால் அடி நீளம், ஓரடி அகலத்தில் தொக்கையாக இருக்கும். மத்தியானம் நன்றாகச் சாப்பிட்டிருந்தால் ஒழிய அதைத் தூக்க முடியாது. 20பேர் படித்து முடித்த பிறகு அது என்னிடம் வந்திருந்தது. எனக்குப் பிறகு இன்னும் 20 பேர் காத்துக்கொண்டிருந்தார்கள். இரவல் வாங்கிய தீபாவளி மலரை நான் வீட்டாருக்குத் தெரியாமல் எடுத்து வந்திருந்தேன். பெரிய பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் எழுதியிருந்தார்கள். வழுவழுப்பான காகிதம். அற்புதமான படங்கள். அந்தக் காலத்தில் கல்கி தீபாவளி மலரில் ஓர் ஆக்கம் வந்திருந்தால் அதுவே உச்சமான அங்கீகாரம். அன்று ஹென்ஸ்மன் மாஸ்ரர் பிராண வாயு பற்றி பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். நான் மேசைக்கு கீழே தீபாவளி மலரை விரித்து வைத்து அடுத்த நிமிடம் பிராணன் போய்விடக்கூடும் என்பது போல ரகசியமாய்ப் படித்துக் கொண்டிருந்தேன். அதை ஹென்ஸ்மன் மாஸ்ரர் எப்படியோ தன் சஞ்சாரத்தில் கண்டுபிடித்து மலரைப் பறித்துக்கொண்டு போய்விட்டார். எவ்வளவு கெஞ்சியும் திருப்பித் தரவில்லை. அடுத்து தீபாவளி வந்த போது கூட அது திரும்ப என் கையில் கிடைக்கவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் கல்கி தீபாவளி மலரில் என்னுடைய சிறுகதை ஒன்று பிரசுரமாகியிருந்தது. நல்ல தாளில் நல்ல வண்ணச் சித்திரத்துடன் வெளியாகியிருந்த கதையை படித்த போது எங்கேயாவது ஓய்விலிருக்கும் ஹென்ஸ்மன் மாஸ்ரர் அதைப் படிக்கக்கூடும் என்று ஒரு சின்ன நம்பிக்கை. அப்பொழுதாவது என்னிடமிருந்து பறித்துக்கொண்டு போன தீபாவளி மலர் ஞாபகம் அவருக்கு வந்திருக்குமோ என்னவோ?

இரட்டைப் புலவர் இருந்தது போலவே எங்கள் பள்ளிக்கூடத்தில் இரட்டை ஆசிரியைகளும் இருந்தார்கள். இருவருக்கும் வயது 19, 20 இருக்கும். ஒரே மாதிரி மடிப்பு வைத்து, ஒரே கலரில் சேலை உடுத்தி வருவார்கள். சுகிர்தம் ரீச்சரின் முகம் முட்டை வடிவில் இருக்கும். ஞானாம்பிகை ரீச்சரின் முகம் கோணங்களால் உருவானது. இருவரும் மான்குட்டிகள் போல துள்ளித் துள்ளிப் படியேறுவார்கள். எப்ப பார்த்தாலும் ஒன்றாகவே திரியும் அவர்கள் ஒன்றே ஒன்றில் மட்டும் வித்தியாசப்படுவார்கள். சுகிர்தம் ரீச்சர் வாயைக் கையினால் மறைத்துகளுக் என்று ஒரு ஸ்வரத்தில் சிரிப்பார். ஞானாம்பிகை ரீச்சர் விழுந்து விழுந்து நீளமாகச் சிரிப்பார்.

சுகிர்தம் ரீச்சர் எங்களுக்கு சரித்திரம் படிப்பித்தார். ஒரு நாட்டின் சரித்திரம் அதை ஆண்ட அரசர்களின் சரித்திரம் தான் என்று நினைத்த யாரோ எழுதிய புத்தகம். இந்தப் புத்தகத்தில் நிறைய அரசர்கள் வந்து வந்து போவார்கள். போர் புரிந்து அடுத்தவர் இராச்சியத்தை கைப்பற்றுவார்கள். தோற்றால் ஓடிப்போய் குகைகளில் ஒழிந்து கொள்வார்கள். மலையைப் பிடித்துக் கோட்டை கட்டுவார்கள். அதற்கு முன் தகப்பனை கொன்று சுவருக்குள் புதைத்து வைக்க மறக்க மாட்டார்கள். ராணியும் சும்மா இருப்பதில்லை. நிறையப் புருசர்களை அடுக்கடுக்காக நஞ்சு வைத்துக் கொல்லுவாள். பொலநறுவையைப் பிடித்து தமிழர்களை துரத்துவார்கள். பின்னர் தலைநகரத்தை மாற்றுவார்கள். போர் எல்லாம் முடிந்து ஒன்றும் செய்ய இல்லாவிட்டால் குளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுவார்கள். முடிகிற காரியமா? இவர் கள் வென்ற தேதிகள், தோற்று குகையைப் பிடித்த தேதிகள், நஞ்சு வைத்துக் கொன்ற புருசர்களின் எண்ணிக்கை, கட்டிய குளங் களின் பெயர்கள், வெட்டாத கால்வாய்களின் பெயர்கள் எல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

எந்தவொரு புது வகுப்புக்குப் போனா லும் நான் வழக்கப்படி என் பெயரை மேசை யின் மூலையில் கூரிய ஆயுதத்தால் எழுதி வைத்துவிடுவேன். சம்பந்தர் தன்னுடைய தேவாரங் களில் 'சிவஞானசம் பந்தன் சொன்ன இம்மாலையீரைந்தும்' என்று ஞாபகமாக தன் பெயரைப் பாடி வைப்பது போல நானும் வருங்கால சந்ததியின ருக்காக என் பெயரை செதுக்கியிருப்பேன். உலகத்திலே மேசை இருக்கும் வரை என் பெயரும் நிலைக்கும். அத்துடன் நிற்காமல் சரித்திர பாடத்தில் முக்கியமாகப் படித்த தேதிகளையும் செதுக்கி வைத்திருப்பேன். ஆனால் சோதனை அன்று மேசைகளை மாற்றி வைத்துவிட்டபடியால் சரித்திரத்தில் நூறுக்கு நூறு மதிப்பெண் பெறும் என் முயற்சி தோற்றது. அதைத் தெரிந்தே சுகிர்தம் ரீச்சர் செய்தார் என்று நினைக்கிறேன். நான் இல்லாத சமயமாகப் பார்த்து கையினால் வாயை மூடி கிளுக் என்று சிரித்தாலும் சிரித்திருப்பார்.

ஞானாம்பிகை ரீச்சர் படிப்பித்தது கேத்திர கணிதம். கோணங்களாலான முகம் கொண்ட அவர் கேத்திர கணிதம் படிப்பித்தது மிகப்பொருத்தமானது தான். இரண்டு சம அளவான பக்கங்களைக் கொண்ட முக்கோணத்தை சரி பாதியாகப் பிளந்து உண்டாக்கும் இரண்டு முக்கோணங்களும் சமம் என்று நிரூபிக்கச் சொல்வார். அதை ஏன் நிரூபிக்க வேண்டும்? பார்த்தவுடனேயே தெரிகிறது. நிரூபணத்தை கடுமையாக யோசித்து எழுதிக் கொண்டு போனால் பென்சிலைக் கடித்துக் கொண்டு நான் எழுதியதை படித்துப் பார்த்து விட்டு 'உன் னுடைய மூளை நான் சொல்லித் தாறதை உடனுக்குடன் மறந்து விடுகிறது' என்று சொல்லி என் தலையில் என்னுடைய கொப்பியாலேயே செல்லமாக ஒரு தட்டு தட்டி அனுப்பிவிடுவார்.

எங்கள் வகுப்பில் இரண்டே இரண்டு பெண்கள் தான். அதில் ஒருத்தியின் பெயர் வாகேஸ்வரியோ பாகேஸ்வரியோ என்னவோ, மறந்துவிட்டது. பல்லி போல ஒல்லி உடம்பு. கணுக்காலைத் தொடாமல் கட்டையாகிவிட்ட ஒரே பாவாடையை தினம் அணிந்து வருவாள். சுபாஷ் ஹொட்டலில் ஒன்றுக்கு மேல் ஒன்றாக உயரமாக அடுக்கி வைத்திருக்கும் கழுவாத கோப்பைகள் போல எந்த நேரமும் விழுந்துவிடலாம் என்பது போல அசைந்தபடி நிற்பாள். இவள் கேத்திரகணிதத்தில் கெட்டிக்காரி. கொப்பியில் மூக்குத் தொடுகிற மாதிரி குனிந்து கணக்கை எழுதி விட்டு கொப்பியைத் தூக்கிக்கொண்டு ரீச்சரிடம் முதலில் ஓடுவது இவள் தான். வாயில் குறுக்காக ஒரு சதக் குத்தியை வைத்து விசில் அடிப்பது போன்ற கீச்சுக்குரலில் இவள் கதைக்க, ரீச்சர் இவளை மகிமைப்படுத்துவார். எங்களால் பொறுக்க முடியாமல் போகும்.

ஒரு நாள் எப்படியும் இவளை தோற்கடிக்க வேண்டும் என்று வேகமாகக் கணக்கைப் போட்டேன். எங்கள் வகுப்பறைத் தரையில் மணல் தான் இருக்கும். என்னுடைய பென்சில் தேய்ந்து தேய்ந்து ஆட்டுப் பிழுக்கை சைசுக்கு வந்து விட்டது. இரண்டு விரல்களால் தந்திரமாகப் பிடித்தால் தான் எழுதமுடியும். அவசரத்தில் எழுதும் போது பென்சில் மணலில் விழுந்து, விழுந்த கணமே மறைந்து விட்டது. எவ்வளவு தேடியும் கிடைக்காததால் தொடங்கிய கணக்கை நான் முடிக்கவில்லை. அன்று ஞானாம்பிகை ரீச்சர் கோபம் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய வெறும் கொப்பியில் இரண்டு கோடுகள் குறுக்காக கீறியது இன்றைக்கும் நினைவில் நிற்கிறது.

அவருடைய ஞாபகம் சில வருடங் களுக்கு முன்னர் எனக்கு மீட்கப்பட்டது. நான் பாகிஸ்தானில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் விருந்திலே இளம்பெண் ஒருவரைச் சந்தித்தேன். அவர் உலக வங்கியில் அதிகாரியாக பணியாற்றி னார். பெயர் ஜீவா என்று சொன்னார். அவருடைய வாழ்க்கையை பின்னோக்கித் தள்ளிக்கொண்டு போனதில் அவர் ஞானாம்பிகை ரீச்சரின் மகள் என்பது தெரிய வந்தது. 'உங்களுடைய அம்மா கண்டிப்பான ஆசிரியை' என்று சொன்ன நான் மணலில் பென்சிலை தொலைத்த கதை யைக் கூறிவிட்டு 'இன்றைக்கும் என்னுடைய பென்சில் அந்த மணலில் கிடக்கும்' என்றேன். மகள் நான் வேறு ஏதோ மொழியைப் பேசியது போல என்னையே பார்த்தார். பிறகு திடீரென்று விழுந்து விழுந்து பல ஸ்வரங்களில சிரித்தார்.

Under a spreading chestnut tree பாடலை பாடமாக்கச் சொன்ன அமிர்தலிங்கம் மாஸ்டரை நினைவுக்கு கொண்டு வரும் சம்பவம் சமீபத்தில் நான் பொஸ்டனுக்கு போன போது நடந்தது. அங்கே ஒரு பாலத்தை 'லோங்ஃபெல்லோ' பாலம் என்று அழைத் தார்கள். லோங்ஃபெல்லோ இளைஞனாக இருந்த காலத்தில் தன் காதலியைப் பார்க்க அந்தப் பாலம் வழியாகப் போய் வருவாராம். அந்த ஞாபகமாக பாலத்துக்கு அவர் பெயரை சூட்டியிருந்தார்கள். லோங்ஃபெல்லோ வாழ்ந்த மாளிகையை இப்பொழுது மியூசியமாக மாற்றியிருக்கிறார்கள். இவருடைய பாடலைத் தான் நான் 60 வருடங்களுக்கு முன்னர் மணிக் கணக்காக உட்கார்ந்து மனப்பாடம் செய்திருக்கிறேன்.

Under a spreading chestnut – tree
The village smithy stands;
The smith, a mighty man is he,
With large and sinewy hands;
And the muscles of his brawny arms
Are strong as iron bands.

அவர் பாடிய செஸ்நட் மரத்தை வெட்டிய போது அந்த ஊர் குழந்தைகள் ஒரு சாய்வு நாற்காலியை அதே மரத்தில் செய்து லோங்ஃபெல்லோவுக்கு பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். கவியும் தன் முதுமைக் காலத்தை கணப்பு அடுப்புக்கு முன் செஸ்நட் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடியே கழித்தாராம்.

இதுவா அந்த செஸ்நட் மரம்? பிரம்பு மரம் போல இல்லையே! அந்த மரத்தினால் செய்யப்பட்ட நாற்காலியா இது? வழிகாட்டிப் பெண் இல்லாத சமயம் பார்த்து அந்த நாற் காலியில் நான் ஒரு நிமிடம் அமைதியாக சாய்ந்து கண்மூடி அமர்ந்து கொண்டேன். கைவிளக்கு ஒளியில் தனிமையில் உட்கார்ந்து மொழி புரியாத பாடலை மனனம் செய்யும் ஒரு சிறுவனின் உருவம் தெரிந்தது. இரண்டு மொழிகளைக் கற்று, இரண்டு நாடு களில் வசித்து, இரண்டு நூற்றாண்டுகளைப் பார்த்துவிட்ட எனக்கு அந்தக் கணம் மறக்க முடியாததாகத் தோன்றியது. அந்தப் பாடலைப் பாடிய கவியையோ, மரத்தின் கீழ் நின்று நாள் முழுக்க வேலை செய்த கொல்லரையோ, அந்த நாற்காலியை செய்து கொடுத்த குழந் தைகளையோ அப்பொழுது நான் நினைக்க வில்லை. நான் நினைத்ததெல்லாம் அமிர்த லிங்கம் மாஸ்டரைத் தான்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்து நமதே!

அ. குணபாலசிங்கம்,
(பழைய மாணவன்)
அஞ்சல் அதிபர்,
கொக்குவில்.

1967 நவம்பர் மாதம் என்று நினைக் கின்றேன். திரு.ரி.நீதிராஜா அவர்கள் "செனேற்றராக" பதவி ஏற்றதைப் பாராட்டும் முகமாக ஹோட்டல் தப்ரபேனில் ஒழுங்கு செய்யப்பட்ட விருந்துபசார வைபவம் ஆரம்பமாகும் நேரம் கொக்குவில் இந்துவின் பழைய மாணவர் ஒருவர் முதன் முறையாக பாராளுமன்றப் பதவி பெற்றுள்ள சந்தர்ப்பம். இவ்விருந்துபசாரம் பழைய மாணவ சங்க கொழும்புக்கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ரம்மியமான சூழலில் அரசியல் தலைவர்கள், அமைச்சர் கள், கல்லூரி அதிபர் மற்றும் பல பிரமுகர்களி னால் விருந்தினர் மண்டபம் நிரம்பி வழிந்தது. நிகழ்ச்சியின் ஆரம்பக்கட்டம். அப்போது ஒலிபெருக்கி ஒலித்தது. திருவாளர்கள் குணபாலசிங்கம், நடராஜா இன்னும் சில பெயர்களை குறிப்பிட்டு "கல் லூரிக் கீதம் இசைப்பதற்கு ஒலிபெருக்கிக்கு வரவும்" முன்னறிவிப்பு எதுவுமில்லை. ஆயத்தமாக வரவும் இல்லை. இருப்பினும் குறிப்பிட்டவர்கள் ஒன்றுகூடினோம்.

தெளிதரு கலைபயில் பலமாணவர்
- தேர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.....

என்று ஆரம்பித்து கொக்குவில் இந்து நமதே! என்று ஒருவாறுபாடி முடித்தோம். எமது நாட்டின் தேசிய கீதத்தின் முதல்வரி கூடத் தெரியாத அன்றைய சந்தர்ப்பத்தில் எமது கல்லூரி கீதத்திற்கு யாவரும் எழுந்து நின்று கௌரவித்த நிகழ்வு எல்லோர் மனதையும் தொட்டு நின்றது. பெருமிதப் பட்டோம்.

எமது கல்லூரி கீதத்திற்கு ஒரு பெருமை உண்டு. இனிய தமிழில் அர்த்தம் பொதிந்த வரிகளோடு அதை ஆக்கித்தந்தவர் "ஏனா தியர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்த ஆசிரியர் ஏ.நாகலிங்கம் அவர்கள். இதற்கு மெட்டு அமைத்து பாட்டிசைத்தவர் எஸ்.என்.சரஸ்வதி என்னும் சங்கீத ஆசிரியை. இவர் மலேசியாவில் இந்திய தேசியப் படையில் உறுப்பினராக இருந்து, இந்திய தேசிய கீதத்தை பாடிப் பயிற்சி பெற்றவரும், பின்பு கொக்குவில் இந்து ஆசிரியையாக பரிணமித்தவரும் ஆவார். எனவே தானோ எமது கல்லூரி கீதத்திற்கும் இந்திய தேசிய கீதத்தின் "ஜன கண" மெட்டையே அமைத்துக் கொண்டார். அந்த மெட்டில் கல்லூரி கீதத்தைக் கேட்கும் போது ஏற்படும் உணர்ச்சியும், உத்வேகமும் மனதை மெய்சிலிர்க்க வைக்கும். இன்றைய மாணவர்களில் எத்தனை பேருக்கு இக்கீதம் அத்துப்படியானது? எத்தனை பேர் கல்லூரி கீதத்தை கேட்ட மாத்திரத்தில் அதற்குரிய கௌரவத்தையும் அங்கீகாரத்தையும் செலுத்துகின்றார்கள்?

பொதுவாக மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகும் போது மிகுந்த மனக் கவலைக்கும் வேதனைக்கும் ஆளாவ துண்டு. இருப்பினும் வேறு சிலர் மன விரக்தி யுடனும், மனவெறுப்புடனும் வெளியேறு வதும் உண்டு. இதைக் கூறும் பொழுது ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஒரு சமயம் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நிர்வாகசபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ரீதியில் எங்களில் சிலர் வெள்ள வத்தையிலுள்ள பழைய மாணவர்களை நாடி உறுப்பினர்களாகச் சேர்த்து சந்தாப் பணம் அறவிடும் நோக்குடன் வலம் வந்தோம். அறையொன்றில் இருக்கும் மாணவர் ஒருவரிடம் சென்றோம். அவர் பல்கலைக் கழகத்தில் பயின்றுகொண்டிருக்கும் முதலாம் ஆண்டு பொறியியல் மாணவர். அவரிடம் நாங்கள் வந்த விடயத்தை எடுத்துக் கூறினோம். அவர் எம்மைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாரே பார்க்கலாம் "இந்த ஸ்கூல் எனக்கு என்னத்தைச் செய்தது?" கொக்குவில் மண்ணில் பிறந்து, கொக்குவில் இந்துவில் கல்வி கற்று, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி, பொறியியல் பீடத்தில் படித்துக்கொண்டிருக்கும் ஒரு மாணவனின் வாயிலிருந்து புறப்பட்டது தான் அந்தக் கேள்வி. நாம் வாயடைத்து நின்றோம். இதற்குப் பதிலளித்து சந்தாப் பணமாக ரூபா 5/= பெற்றுக்கொள்வதே வீண்விரயம் என்று நினைத்து திரும்பிவிட்டோம். அதே மாணவன் இன்று பொறியியல் துறையில் நிபுணத்துவம் பெற்று மேலைத்தேய நாடொன்றில் பிரபல்யமாகத் தொழில் புரிந்து வருகின்றார் என்று அறிகின்றோம். எனவே தான், பாடசாலை எனக்கென்ன செய்தது என்று கேட்பதை விட நான் பாடசாலைக்கு என்ன செய்தேன் என்று எவனொருவன் சிந்திக்கின்றானோ அவனே உண்மையான நன்றி விசுவாசமுள்ள மாணவனாகக் கருதப்படவேண்டியவன்.

இதைப்பற்றிச் சிந்திக்கும்பொழுது என்னை அறியாமலே என்மீது ஒருவித பெருமிதம் ஏற்படுகின்றது. 1947ஆம் ஆண்டளவில் பாடசாலை நிதிசேகரிப்புக்காக கலைக்குழுவொன்று கொழும்பு, கண்டி, மாத்தளை ஆகிய நகரங்களுக்குச் செல்வதற்கு ஏற்பாடகி இருந்தது. அந்தக் கலைக்குழுவில் என்னோடு எனது சகோதரர்கள் இருவரும் இணைந்திருந்தனர். அந்தப் பச்சிளம் வயதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் இடம்பெற்றது ஒரு சிறப்புத் தான். எமது தந்தையார் பாடசாலை அதிபரைச் சந்தித்து "ஐயா எனது மூன்று முத்துக்களையும் அனுப்புகிறேன். அவர்களை பக்குவமாக மீண்டும் எம்மிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று கண்கலங்கியபடியே கூறியது இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கிறது. இந்தக்கலை நிகழ்ச்சியில் பங்குபற்றியதன் மூலம் நாம் பெற்ற அனுபவம் அளப்பரியது. இந்நிகழ்ச்சிகள் மூலம் சேர்க்கப்பட்ட நிதியை அடித்தளமாகக் கொண்டு "நாகலிங்கம் மைதானம்" என்று அழைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தை உருவாக்க முடிந்தது. அதிலேதான் "லிங்காலைற்" என்னும் பிரமாண்டமான களியாட்ட நிகழ்ச்சி, 1950 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிகழ்த்தப்பட்டதும் யாவரும் அறிந்ததே!. இந்த மைதானம் உருப்பெற்ற பின்புதான் விளையாட்டுத் துறையில் எமது பாடசாலை பரிணமிக்கத் தொடங்கியது. விளையாட்டுத்துறையில் என்னை நான் இணைத்துக் கொண்டதும் இந்த மைதானத்தில்தான். உதைபந்தாட்டக் குழுவில் இடம்பெற்று வடபிராந்திய போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளை ஈட்டி பாடசாலையின் நற்பெயருக்கு மெருகேற்ற உதவியாய் இருந்தேன். உதைபந்தாட்ட இரு அணிகளிலும் தொடர்ச்சியாக இருந்து பல கல்லூரிகளுடன் போட்டியிட்டு வெற்றியீட்டிய அந்த நாட்கள் இன்றும் என்மனதில் பசுமையாகவே உள்ளது. இவையாவும் பாடசாலைக்கு எம்மால் ஆற்றக்கூடிய சேவையாகவே கருத்தில் கொண்டிருந்தோம்.

பாடசாலை நாட்களை நினைத்து அசை போட்டு பார்க்கும் போது ஒருசில விடயங்கள் இன்றும் பசுமை மாறாது இருப்பதையே உணருகின்றேன். கொக்குவில் இந்து ஒரு கலவன் பாடசாலை மாணவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவிகளுக்கும் இடையில் படிப்பிலும் சரி ஏனைய நிகழ்வுகளிலும் சரி போட்டிகள் இருந்தனவே தவிர பொறாமை கொண்டோ அல்லது நட்பு, காதல் என்றோ அலைந்ததாக எனக்கு ஞாபகமில்லை. ஹன்டி பேரின்ப நாயகம் அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை நிர்வாகத்தில் கண்டிப்பு, கடும் போக்கு என்பன சிறிது தளர்வடைந்திருந்த போதிலும் மாணவர்களிடையே நிலவிய ஒழுக்கத்திலும் அடக்கத்திலும் எதுவித விரிசலும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. அதிபர் அவர்கள் ஒரு சமத்துவவாதி. காந்தியத்தில் பற்றுடையவர். அமைதியான போக்கு டையவர். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதையும் செய்யமுற்படாதவர்.

எனது வகுப்பறையில் நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. எட்டாம் வகுப்பில் நான் கற்றுக் கொண்டிருந்த சமயம் எமது வகுப்பறை பழைய பாடசாலை வளவில் அதிபர் அறை யிலிருந்து கிழக்கு நோக்கி நீண்டு செல்லும் ஒரு கட்டடத்தொகுதியில் அமைந்தி ருந்தது. மதியபோசன இடைவேளை நேரம் மாணவர்கள் வகுப்பறையில் கூத்தும் கும்மாளமும். மாணவிகள் அனைவரும் வகுப்பு வித்தியாசமின்றி விறாந்தையில் அணிவகுத்து நிற்கின்றார்கள். அவர்களைக் கடந்து செல்வதென்பது சிரமந்தான். அப்படித் துணிந்து முடிவெடுக்கும் தைரியமும் எமக்கில்லை. வகுப்பறைக்குள் தான் எமது வீரமும் விளையாட்டும் எமது வகுப்பறையில் மரத்தினால் கடைந்து செய்யப்பட்ட முக்கோண, சதுர, நீள்சதுர, உருளை வடிவங்கள் இருந்தன. அவற்றுள் உருளை வடிவத்திலான மரக்குற்றியை எடுத்து நிலத்தில் உருட்டி விளையாடிக்கொண்டி ருந்தோம். நான் ஒரு புறமிருந்து உருட்ட, வாசற்புறம் நின்ற நண்பன் தவராஜலிங்கம் அதைக்காலால் தடுத்து நிறுத்தி மீண்டும் என்னை நோக்கி வேகமாக உருட்டுவான். என்னை நோக்கி வரும் உருளையை மீண்டும் உருட்டுவேன். இதுதான் எங்கள் விளையாட்டு. இந்த விளையாட்டு பெரும் வினையாக வந்து முடியுமென்று யார் அறிந்தார்?. விளை யாட்டின்போது ஒரு தடவை பாரமான அந்த உருளையை வேகமாக உருட்டி விட்டேன். அதை தடுத்து மறிக்க வேண்டிய நண்பன் அதன் வேகத்தை கண்டு பயந்து விலகிவிட்டான். 'ஜெற்' வேகத்தில் வந்த உருளை வாசலைத்தாண்டி விறாந்தையை யும் தாண்டி மாணவியரின் அரணை உடைத்துக்கொண்டு விசுக்கென நிலத்தில் விழுந்து உருண்டு சென்று ஓய்ந்தது. மாணவியரின் கீச்சிடும் குரல் கேட்டு எமது வகுப்பறையில் பயங்கர அமைதி. எல்லோரும் சமர்த்துப் பிள்ளைகளாகத் தத்தமது வாங்கு களில் அமர்ந்துவிட்டோம். ஐந்து நிமிடங்கள் ஆகியிருக்கும். துல்லியமான வெள்ளை உடையில் வலது கையின் இடையில் அடைக்கலமாகியிருந்த வெள்ளை நிறச் சால்வையுடன் தாண்டித் தாண்டி வந்து நின்றார் அதிபர் ஹன்டி அவர்கள். அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டதென்பார்களே! அந்த நிலையில் நாங்கள். எங்கும் நிசப்தமோ நிசப்தம். அறைவாசலில் முண்டிஅடித்துக் கொண்டு நின்ற ஆரணங்குகள், ஏதோ கொலைக் குற்றவாளியை கையும் மெய்யுமாக பிடித்து விட்டோமென்ற அலட்சியத்தில் நிற்பது தெரிந்தது.

'யார் இந்த உருளையை உருட்டியது'? ஏதோ கிணற்றுக்கடியில் இருந்து கேட்பது போன்ற தொனியில் அதிபரின் கேள்வி. எங்கும் மயான அமைதி. மீண்டும் அதிபரின் குரல் சிறிது உரத்த தொனியில் யாரப்பா இந்த வேலையைச் செய்தது? "கப்சிப்", மாண வர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. அநியா யத்துக்கும் அவர்கள் முகத்தில் அப்படியொரு பரிதாபத் தோற்றம். எனக்கு கைகால் உதறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தது. என்ன விபரீதம் ஏற்படப் போகின்றதோ! மீண்டும் ஹன்டி சேர் கட்டளைத் தளபதி படையினரிடம் வினவுவது போல், "சொல்லமாட்டீர்களா உண்மையை"? என்று கேட்டதில் கடுமை தெரிந்தது. நான் மெதுவாக எழுந்து நின்றேன். ஏதோ சொல்வதற்கு முயன்றேன். முடியவில்லை. வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவர மறுத்தன. "வாருங்காணும் ஓவ்வீசுக்கு". திரும்பி நடந்தார் அதிபர். கொலைக்களத் திற்குச் செல்பவன் போல் பின்தொடர்ந்தேன் நான். விசாரணை ஆரம்பமாகியது. "என்ன நடந்தது காணும்"? உருட்டி விளையாடினோம். ஏதிரில் நின்றவர் அதைத் தடுக்கத் தவறி விட்டார். அது அப்படியே போய்..... ஏதேதோ உளறினேன். நான் சொன்னதை நம்பினாரோ இல்லையோ! அவரின் முகத்தை பார்த்திருந்தால் தானே தெரியும். "போங்காணும்" போய் அதை எடுத்து உள்ளே வையும்". மீண்டும் வகுப்பறைக்கு வந்தேன். நடைப்பிணமாக மாணவிகளை விலக்கிக் கொண்டு விறாந்தையில் இருந்து கீழிறங்கி உருளையை தூக்கிக்கொண்டு மீண்டும் படியேறி வகுப்புக்குள் சென்றேன். அந்த சொற்ப வேளையில் வெட்கத்தால் உறைந்தேன். என்னை உயிரற்ற ஜடமாக உணர்ந்தேன். பிரம்படிபட்டு உருக்குலைந்த நிலையில் வருவேன் என எதிர்பார்த்திருந்து மாணவியர் மத்தியில் சிறு சலசலப்பு, ஏமாற்றப் பெருமூச்சு. ஆனால் என் மனதிலோ ஐயோ இரண்டு மூன்று பிரம்படி கொடுத்து என்னைத் தண்டித்திருக்கலாமே. இப்படி மாணவியர் மத்தியில் அவமானப்பட வைத்துவிட்டாரே இந்த அதிபர். எனது ஆதங்கத்தை யார் அறிவார்?

இதுதான் அந்தப் பெருமகனார் ஹன்டி அவர்கள் காட்டிய வழிமுறைகள். தண்டிப் பவரும் தண்டிக்கப்படுபவரும் தமது உணர்ச்சி களை வெளிப்படையாகவே உணர்ந்து கொள்ளக்கூடிய வழிமுறை. இவற்றைக் கூறும் பொழுது வகுப்பறைகளை வதைமுகாம்களாக மாற்றியமைக்கும் ஆசிரியர்களும் இருந்தி ருக்கின்றார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மாணவர்களுக்கு எவ்வாறு கற்பித்தால் இலகுவில் புரிந்து கொள் வார்கள் என்ற தந்திரோபாயங்களை கையாளும் ஆசிரியர்களும் எமது கல்லூரியில் இருந்திருக்கின்றார்கள். இதில் எம்.எஸ்.மாஸ்டர் என்றழைக்கப்படும் பண்டிதர் எம்சின்னத்தம்பி அவர்கள் குறிப் பிடத்தக்க ஒருவர். அவருக்கு அடிக்கடி கோபம் வருவதுண்டு. கோபம் வந்து மாணவர் தலையில் குட்டினால் "இரண்டு பட்டை தண்ணீர் தலையில் தேங்கும்" என்று கூறிக் கொள்வதில் அவருக்குப் பெருமையுண்டு. அவரின் குட்டுக்குப் பயந்தே வகுப்பில் வாய்திறக்காமல் இருப்பவர்கள் அநேகம். அவர் கூறும் பகிடிகளுக்கு சிரிக்காமல் இருந்தாலும் கட்டாயம் தண்டனை உண்டு. இதற்காகவே எம்மில் சிலர் பகிடிகள் விளங்கா விட்டாலும் உரக்கச் சிரித்து சமாளிப்போம். இவருடைய பூகோள சாஸ்திர வகுப் பென்றால் மாணவர்களிடையே பயமும் இருக்கும். பகிடிகளைக் கேட்டு மகிழ்வதற்கு ஆர்வமும் இருக்கும்.

ஒரு தடவை "அந்தமான் நிக்காபார்" தீவு களைப் பற்றி மிகவும் சிலாகித்து விளக்கிக் கொண்டிருந்தார் எம்.எஸ்மாஸ்டர். மாணவர் மத்தியில் அந்தத் தீவுகள் பற்றி எதுவும் பதிந்ததாக இல்லை. எத்தனை முறைகளில் தான் மாணவர்களைத் தண்டிக்க முடியும்? திடீரென ஒரு மாணவனைப் பார்த்து ஓர் திசையை சுட்டிக்காட்டி. "அந்தோ மான் நிக்கோபார்" என்று உரத்த குரலில் கூவினார். அவர் காட்டிய திசையைப் பார்த்தோம் அங்கு மானும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. ஆனால் "அந்தமான் நிக்கோபர்" தீவுகளின் பெயர்கள் எம்மனதில் பதிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன. ஆம்! பதிய வைத்துவிட்டார் எம்.எஸ்.மாஸ்டர். இன்று வரை அப்பெயர் கள் எம்மனதில் நிலைத்து நிற்கின்றன. இதுவும் கற்பிக்கும் முறையில் கைக்கொள்ளப்பட வேண்டிய சிறந்த உத்திதான்.

ஆனாலும் வகுப்பில் குளப்படி செய்யும் மாணவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது இன்றுவரை தீராத பிரச்சினைதான். எங்கள் வகுப்பில் நிகழ்ந்த வேறு ஒரு சம்பவம் மிகச் சுவாரஸ்யமானது. ஏழாம் வகுப்பு என்பது எனது ஞாபகம் தற்காலிகமான வகுப்பறை ஒன்றில் வகுப்பு நடக்கிறது. சீமெந்து போடப்படாத நிலம். கொக்கு விலுக்கே உரித்தான செம்மண்ணினால் நிரப் பப்பட்ட தரை. வாங்குகளில் உட்கார்ந்திருக் கின்றோம். அப்பொழுது சீருடைகள் இல்லை. பாதணிகள் அணியும் வழக்கமும் இல்லை. கால்களுக்கு கவசம் செம்புழுதிதான். அன்று ஆங்கிலப் பாடம் நடக்கவேண்டிய நேரம். ஆனால் ஆங்கில மாஸ்டர் வகுப்புக்கு வரவில்லை. மாணவர்களுக்கு பெரிய நிம்மதி. காரணம் ஆங்கில வகுப்பு நேரத்தில் தமிழில் கதைத்தால் ஐந்துசதம் தண்டனை விதிக்கப்படும். இதற்காக வகுப்பு நேரத்தில் வாயைத் திறக்காமல் இருப்பது எம்போன்றோருக்கு சௌகரியமாக இருந்தது. ஐஸ்பழம் வேண்டுவதற்கு அம்மா விடம் ஐந்துசதம் வேண்டுவதே பெரிய போராட்டம். அந்த நிலையில் ஐந்துசதம் கட்டுப் பணம் செலுத்துவதென்பது கட்டுப்படி யாகாதது. ஆங்கில ஆசிரியர் வகுப்புக்கு வராதது எமக்கு பெரிய அதிஷ்டமாகத் தெரிந்தது. அதனால் வகுப்பில் மாணவர்களின் குதியாட்டம் எல்லையைக் கடந்தது. எமது தொல்லைகளை தாங்கமாட்டாத அடுத்த வகுப்பு ஆசிரியர் இரு தடவைகள் வந்து "சத்தம் போடாதீர்கள் தயவுசெய்து அமைதி யாக இருங்கள் என்னை வகுப்பு நடத்த விடுங்கள்" என்று பவ்வியமாகவும் சிறது கடுந்தொனியிலும் கூறிச் சென்றார். ஆயினும் மாணவர்களோ அவரின் வேண்டுதலுக்கு செவி சாய்ப்பவர்களாக இல்லை. பொறுக்க முடியாத அடுத்த வகுப்பு ஆசிரியர் மீண்டும் திடீரென வந்தார். நெடுஞ்சாணாக மண் தரையில் வீழ்ந்து வணங்கினார். நொடிப் பொழுதில் எழுந்து கூப்பிய கரங்களுடனும் செம்மண் தோய்ந்த வெண்ணிற ஆடையுடனும் தனது வகுப்பறைக்குச் சென்றுவிட்டார். ஒருசொல் கூட அவர் வாயிலிருந்து வெளி வரவில்லை. எமது வகுப்பிலோ பயங்கர அமைதி. ஆம்! அந்த வகுப்பு முடியும் வரை அதே மயான அமைதிதான். எப்படி இதுபோன்ற முடிவுக்கு அந்த ஆசிரியர் வந்தார் என்பது புரியாத புதிராகவே இருந்தது. இப்படி புதுமையானதோர் முடிவுக்கு வந்து வெற்றி கண்டவர் வேறுயாருமில்லை. ஏனாதியார் என்று அன்புடன் அழைக்கப்பட்டவரும், காந்தியவாதியுமான திரு.ஏ.நாகலிங்கம் அவர்கள்தான். மெய்சிலிர்க்க வைத்த இந்த நிகழ்ச்சி எம்மனதில் நீங்காத நிலையை பெற்றுக்கொண்டது.

ஆங்கில வகுப்பைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது வாய்விட்டுச் சிரிக்கும் அளவிற்கு நிகழ்ந்த வேடிக்கைச் சம்பவம் பற்றியும் குறிப்பிடாது விட முடியவில்லை. எமது கல்லூரியில் "வார்கீஸ்" என்ற பெயர் கொண்ட ஆசிரியர் ஒருவர் இந்தியாவிலிருந்து வந்து பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் ஆங்கிலம் பேசும் போது ஏற்படும் 'சர் புர்' என்ற சொற்பதங்கள் எம்மை சிரிப்பில் ஆழ்த்தும். "சர்கம்விறன்ஸ் ஒப் த சர்க்கிள்" என்று தொடங்கினார் என்றால் சிரிப்பலைகள் ஓய்வதற்கு சிறிதுநேரம் எடுக்கும் ஒரு தடவை வகுப்பு நடாத்தும் போது நிகழ்ந்தவற்றை அப்படியே தருகின்றேன்.

ஆசிரியர் : தம்பி! ஸ்பெல்லடா ப்புல்லு (Spell the word Bull)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் : (Bull) ப்பி.யு.எல்எல் சேர்!
ஆசிரியர் : என்னடா மீனிங்கு (What is the meaning)
மாணவன் : கவுஸ் ஹஸ்பண்ட் சேர்! (Cow's Husband Sir)

சிரிப்பை அடக்க முடியாது திக்கித்து நின்ற மாணவர்களைப் பார்த்து ஆசிரியரும் சிரித்து சமாளித்தார். இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் மனக்கண்முன் வந்துகொண்டே இருக்கின்றது.

ஒரு பாடசாலை சிறப்புற இயங்குகிறது என்றால் அதற்கு அந்தக் கல்லூரியின் அதிபரின் ஆளுமையே முதற் காரணமாக இருக்கும். அப்படி ஆளுமையும், அர்ப் பணிப்பும் நிறைந்த பல அதிபர்களை பெறும் வாய்ப்பினை பெற்றிருந்தது நமது பாடசாலை. இதில் குறிப்பிடக்கூடிய சிலரை எனது பள்ளிப்பருவத்தில் கண்டும், அவர்களிடம் கற்றும் அனுபவித்த அதிஷ்டம் எனக்குண்டு. அவர்களுள் திருவாளர்கள் A. நாகலிங்கம், ஹன்டி பேரின்பநாயகம், சி.கே.கந்தசாமி போன்றவர்களை என்னால் மறக்கமுடியாது. அவர்களால் பாடசாலை பெற்ற பெருமை கீர்த்தி அளவிடக்கரியது. இப்படிக்கூறும் பொழுது ஆசிரியர்களின் பங்கை குறைத்துக் கூறுவதாக கருதக்கூடாது. சங்கீதம் என்றால் என்னவென்று தெரியாதிருந்த எனக்கும் எனது சகோதரர்களுக்கும் சங்கீதத்தை கற்றுத் தந்து பாடசாலை கலை நிகழ்ச்சிகளுக்காக வெளிமாவட்டங்களுக்கும், யாழ் முற்ற வெளியில் நிகழ்ந்த வைபவங்களுக்கும் பங்குகொள்ளச் செய்து, பாடசாலையின் புகழை ஊரறியச் செய்தவர். எமக்கெல்லாம் தாய் போன்ற ஸ்தானத்திலிருந்து கல்வி புகட்டிய "சுகிர்த ரீச்சரை" எம்மால் மறக்க முடியுமா? அவர் தனது சகோதரியின் மகளை பால்குடி மறவாத வயதில் நடனம் கற்பித்து "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" என்ற பாட்டுக்கு ஆடவைத்து நாடு முழுவதும் பார்த்துப் பிரமிக்க வைத்த பெருமையும் அவர்களையே சாரும். "ஆடுவோமே" என்று எம்மெல்லோராலும் செல்லமாக அழைக் கப்பட்ட அந்தக் குழந்தை நட்சத்திரம் ஜெயதேவி பாடசாலைக்கு ஈட்டிக்கொடுத்த பெருமை ஒப்பிடற்கரியது. இவ்வாறு தன்னல மற்ற சேவைக்கும், தனது கல்லூரிக்குரிய முன் னேற்றத்திற்கும் அயராது பாடுபட்ட பெருந் தகை ஆசிரியை சுகிர்தா ரீச்சர் என்றால் அது மிகையாகாது. அவர் என்றும் எம்மனதில் வைத்து பூஜிக்கப்பட வேண்டியவர்.

எனது பாடசாலை நாட்களை மீட்டுப் பார்க்கும் போது ஏற்படுகின்ற ஆனந்தம் இருக்கே அதைச் சொல்லில் வடிக்க முடிய வில்லை. நான் பாடசாலையை விட்டு நீங்கி உத்தியோகம் நிமித்தம் கொழும்பு சென்ற பின் ஏதோ விதத்தில் பாடசாலையுடன் தொடர்பு வைத்துக்கொண்டுதான் இருந்தேன். பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருப்பதை அறிந்தேன். இரத்தினபிரகாசம், எம்விதியாக ராஜா ஆகியோர் முன்னின்று உழைத்து கொழும்புக் கிளையை பிரபல்ஜப்படுத்திக் கொண்டிருந்தனர். எனது பாடசாலை மீது கொண்டிருந்த ஆர்வமிகுதியால் நானும் கொழும்புக் கிளை நிர்வாகத்தில் இணைந்து சேவையாற்ற முற்பட்டேன். திரு.கே.சிவா னந்தன் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட சமயம் நான் பொருளாளராக இருந்து கொழும்புக் கிளையை புத்துயிரோடு இயங்க வைத்துக் கொண்டிந்தேன். 83 யூலைக் கலவரத்துடன் இடம்பெயர்ந்து யாழ் சென்று வகுபப்புத் தோழனும் நண்பனுமாகிய திரு.அபஞ்சலிங்கம் அவர்கள் கல்லூரியின் அதிபராக பதவியை அலங்கரித்துக் கொண் டிருந்தார். அச்சமயத்தில் நான் அஞ்சல் அதிபராக பணியாற்றக் கிடைத்ததை ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியமாகக் கருதினேன். அவரின் காலத்தில் பழைய மாணவர் சங்க நிர்வாகத்தில் இணைந்து சேவையாற்றக் கிடைத்தது எனது அதிஷ்டமே!

ஒரு சமயம் நான் கொக்குவில் அஞ்சல் அதிபராக கடமையாற்றிக்கொண்டிருந்த வேளையில் எனது மேசையின் முன்னால் ஒரு உருவம் நிற்பது போன்ற பிரமை ஏற்பட்டு தலை நிமிர்ந்து பார்த்தேன். நெடிய உருவம், மெலிந்த தேகம், துல்லியமான வெள்ளை உடையில் நின்று கொண்டிருந்தார் அதிபர் சிகேகேயர் ஆம் சிகேகந்தசாமி அவர்கள். துடித்துப் பதைத்து எழுந்து என்ன சேர்! இங்கு..... வாங்கோ..... உட்காருங்கள் என்று திக்கித் தடுமாறினேன். "கொக்குவில் இந்து மாணவன் ஒருவர் முதற் தடவையாக அஞ்சல் அதிபராக வந்திருக்கின்றார் என்று கேள்விப்பட்டேன். அது யாராக இருக்கும் என்று பார்த்துப் போகவே வந்தேன்" என்றார். "குணபாலன் நீர்தான் அவர் என்பது அறிந்து சந்தோஷம்" என்று கூறியதும் எனது கண்கள் குளமாயின. "இதுகால வரை இந்தக் கந்தோருக்கு நான் வந்ததில்லை. இனிமேல் இங்குதான் என் பென்ஷன் எடுக்க வருவேன்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

பாடசாலையை புனரமைப்பதில் இந்திய படைத்தளபதிகளுடன் வாதாடி வெற்றி பெற்ற அதிபர் பஞ்சலிங்கம் அவர்களைப் போல் என்னால் சிதைந்து போயிருந்த தபாற் கந்தோரை சிறிதளவுதன்னும் திருத்தியமைக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் என்னுள் இருந்துகொண்டே இருந்தது. இந்தியப் படையினரின் ஆக்கிரோசமான தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அகதிகளாக வந்த ஏழாயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்களுக்கு அடைக்கம் கொடுத்து காப்பாற்றிய எமது கல்லூரியை துவம்சம் செய்த போதும், எறிகணைகளால் உயிரிழந்த அப்பாவிக் குடிமக்கள் 33 பேருக்கு கல்லூரி மைதானம் இடுகாடாக மாறிய போதும் நெஞ்சம் தளராது ஓடி ஒழியாது பிரச்சினைகள் அத்தனைக்கும் முகம் கொடுத்து பாடசாலையை மீண்டும் திறந்து படிப்பினை ஆரம்பிப்பதையே குறிக் கோளாகக் கொண்டு அதிபர் பஞ்சலிங்கம் இயக்கியதைக் கண்டு மெச்சினோம். இந்திய யப்படை அதிகாரிகளை பல தடவைகள் கண்டு, உருவழிந்து நின்ற பாடசாலைக் கட்டடத்திற்கும், தொலைந்த உபகரணங்களுக்கும் மாற்றீடாக நிவாரணம் பெற்றுக் கொள்வதில் மிக உத்வேகத்துடன் முனைந்து வெற்றியும் பெற்றார். இதுவே அதிபர் பஞ்சலிங்கத்தின் ஆளுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

இதே அவலநிலையில் தான் கொக்குவில் அஞ்சல் நிலையமும் இருந்தது. பீரங்கியின் தாக்குதலுக்கு இலக்காகி சின்னா பின்னப் பட்டுக் கிடந்தது. அஞ்சலகம் நாம் சென்று பார்த்த போது அஞ்சல் அதிபரின் மேசையில் ஆட்டுக்கடா ஒன்று அறுக்கப்பட்ட நிலையில் அதன் தோலும், இரத்தமும், பிழுக்கையுமாக துர்நாற்றத்துடன் காட்சி தந்தது. கந்தோரின் இரு இரும்புப் பெட்டகங்களும் மற்றும் உபகரணங்களும் உருத்தெரியாதவாறு சிதைந்து கிடந்தன. தண்ணீர் குடிப்பதற்கு கிணற்றடிப் பக்கம் சென்ற போது அங்கு இரு பஞ்சாப்பிய இந்திய ஜவான்கள் தலைவிரி கோலமாக ஒருவருக்கொருவர் பேன் பார்த்துக் கொண்டிருந்த கண்றாவிக் காட்சியை கண்டு மிரண்டு நின்றோம். சிதைவுற்றுக் கிடந்த தபாற் கந்தோரையும், தேங்கிக் கிடந்த தபாற் பொதிகளையும் பற்றியெடுத்துக் கூறி அலுவலகத்தை சீரமைத்துத் தருமாறு இந்தியப் படைத் தளபதிகளை பலதடவைகள் பார்த்து முறையீடுகள் செய்தோம். ஒவ்வொரு தடவையும் குளப்பிட்டி படையினர் முகாமுக்கு சென்று வந்த போது எமது அஞ்சலகக் குடியிருக்கையில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவாடப்பட்ட வீட்டுத் தளபாடங்களில் அமர்ந்திருந்தபடி எமக்குப் பதில் சொல்லி நாட்களைக் கடத்தியதைத் தான் கண்டோம். இறுதிவரை எமக்கு எதுவித உதவியோ, நிவாரணமோ கிட்டவில்லை.

கடந்தகால கல்லூரி நாட்களை மீட்டுப் பார்க்கையில் மேற்கூறிய நிகழ்வுகள் வந்து மனதை உறுத்துவதை தவிர்க்க முடியவில்லை. எமது கல்லூரி அகதிமுகாமாக மாறியதையும் அதில் அநேகர் படுகொலை செய்யப்பட்ட தையும், விளையாட்டு மைதானம் இடுகாடாக மாறியதையும் இந்தியப் படையினரின் அட்டூழியங்களை உலகுக்கு எடுத்துக் காட்டியதையும் கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு கால வரலாற்றில் தவறாது பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகளாகும்.

கல்விக்கூடம் மாணவருக்கு இன்னுமோர் வீடு. இளமைப் பருவத்தின் முக்கிய முதல் பதினைந்து ஆண்டுகளையும் அங்கு தான் கழிக்கின்றனர் மாணவர்கள். பாடசாலை வீடென்றால், ஆசிரியர்கள் அன்னையைப் போன்றவர்கள். மாணவர் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் ஆரம்பத்தையம், அதன் அர்த்தத்தையும் வளர்ச்சியையும் பாட சாலையிலிருந்தே கற்றுக்கொள்கின்றனர்.

"எந்தக் குழந்தையும் மண்ணிற் பிறக்கையில் தீயவனாவதில்லை. அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே"


எனவே எந்தவொரு மாணவனும் கல்லூரியை விட்டு வெளியேறும்போது எவ்வித தோற்றத்தில் வெளியேறுகின்றானோ, அதுவே அவன் கற்று வெளிவந்த கல்லூரியின் தராதரத்தை உணர்த்துவதாக அமைகிறது. இந்த உண்மையை "பாடசாலை எனக்கு என்ன செய்தது" என்று கேட்கும் மாணவனுக்கும், "நான் பாடசாலைக்கு என்ன செய்தேன்" என்று கேட்கும் மாணவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு நன்கு உணர்த்துகின்றது. இதுவே யதார்த்தமும் கூட!

"கொக்குவில் இந்து நமதே" என்ற ஓசை ஒவ்வொரு மாணவரின் நெஞ்சத்திலும் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்.

வாழ்க கொக்குவில் இந்து! வளர்க அதன் பணிகள்!

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



REMINISCENCE OF MY DAYS AT KOKUVIL HINDU COLLEGE

S. Nagalingam
old student.

My career at Kokuvil Hindu College commenced in 1932 and ended in 1941, just before the Principal Mr.M.Karthigesu retired in 1942.

At the time I came to the age of attending School, there were two buildings in the land to the south of Kokuvil Kirupakara Sivasupramaniya Swamy Temple, popularly known as Puthukkovil. One was a shed that ran north to south to the west, parallel to the K.K.S. Road and the other was a hall that ran east to west to the north parallel to the temple. The former was the "**Kokuvil Hindu Vernacular Preparatory School**" with classes from kindergarten to 3rd Standard and the latter was "**Kokuvil Hindu English Mixed School**" with classes from 1st year to E.S.L.C. (English School Leaving Certificate). The land belonged to the late Mr. E. Chelliah, the founder of the Kokuvil Hindu English Mixed School and extended east to west from school lane to K.K.S. Road and north to south from the southern outer courtyard of the temple to Station Road. The two buildings occupied almost half of the land and **palmyrah palms** occupied the remaining land to the east. Both had separate entrances on the northern boundary.

I joined the Kokuvil Hindu Vernacular Preparatory School at the age of five on 15th May, 1928 and, on passing the 3rd standard in 1932, I gained admission to the first year at Kokuvil Hindu English Mixed School on 5th October, 1932. The late Mr. Murugesu Karthigesu of Viyaparimoolai, Puloly West, Point Pedro was the Headmaster then. There were about four classrooms in the main hall, partitioned by wooden screens and two classes in each of the verandahs at the western and eastern ends of the hall. There were also two classes in the temporary shed by the side of the canal along station road. The two classes were the two divisions of the 1st year class. There were not many teachers as there were not many classes and each class had about 20 to 25 students. Besides the headmaster Mr. M.Karthigesu, the other teachers at that time were-

Mr.N.Chellappah of 3rd milepost, Kokuvil.
Mr.S.C.Thillainathan of Thalayali, Vannarpannai.

Mr.T.Sinnathamby of Thalayali, Vannarpannai.
Mr.K.Kandasamy of Kondavil.

Mr.A.Amirthalingam of Thalayali, Kokuvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr.V. Ponniah of Potpathy Road, Kokuvil.
Mr. A. Nagalingam of Araly.
Mr.Kumarasamy of Suthumalai.
Mr.M.Arunachalam of Potpathy Road, Kokuvil.
Mrs.P.P.Bhargaviamma of Travancore.
Mrs.P.P.Bhargaviamma,B.A.(Madras) was the only graduate teacher of the school at that time. Mr.S.Nagalingam and Mr.N.Ganeshalingam joined the staff of the school later.

Each class had two monitors and it was their duty to bring the students' Attendance Register and the Teacher's Record Book every morning from the Headmaster's office and keeps them on the class teacher's table and at the end of the day, to replace them. It was also their duty to see that sufficient chalk pieces were available in the class for the use of the teachers. They had to bring the chalk pieces from the Headmaster's office. They also had to see that there was ink in the ink-wells. In those days there were long desks where four students could sit and shorter ones which two students could occupy. The long desks had four holes and the shorter ones had two holes at the front edge of the desk to hold ink-wells and ink was supplied by the school. The school charged a fee called the '**term fee**' for supplying ink and for the supply of stationery during examination. The fee was Rs.3.00 per term. There were no peons or labourers to sweep the class rooms and the students themselves took turn to do the job. This was done every morning before the commencement of the classes. The school bought and kept sufficient coir brooms for this purpose.

Every morning the classes commenced with prayer - singing of Thevaram. For this purpose students assembled along the northern corridor of the hall at about 8.15 a.m. Announcement, if any, was made by the headmaster soon after the prayer and before the students filed back to their classes.

The curriculum consisted of (1) English, Arithmetic and Religion in the lower forms (2) English, Tamil, Religion, Health and Arithmetic in the middle forms and (3) English, Tamil, Latin, History, Geography, Mathematics and Rural Science (Later General Science) in the upper forms.

Names of the teachers and the subjects taught by them :-
Mr.N.Chellappah ... Arithmetic.
Mr.T.Sinnathamby ... Arithmetic, English, Rural Science.
Mr.A.Amirthalingam...English, Latin.
Mr.M.Arunachalam ... Mathematics, Geography.
Mr.A.Nagalingam... Arithmetic, Tamil.
Mr.K.Kandasamy ... English, Tamil and Health
Mr.S.C.Thillainathan... English, History.
Mr.Kumarasamy ... Tamil, Religion.
Mr.V.Ponniah... English, History, Tamil.
Mr.S.Nagalingam ... History.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. M.Karthigesu... Tamil, English.
Mr.N.Ganeshalingam ... English, General Science
Mrs.P.P.Bhargaviamma
... English, History, Needle work.

Mr.Karthigesu, the Headmaster, was a teacher par excellence. He was living alone in the school, occupying a portion of his office room adjoining the southern end of the Vernacular Preparatory School building. After the evening ablution and the fall of night he used to bring and keep a deck chair in the open courtyard opposite his office and beside that he would keep a stool and on that hurricane lantern. Then he would bring one or two books and keep them also on the stool. After all this he would recline on the deck chair. In the cool of the night and a clear blue sky and twinkling stars 'up above the world so high', he would pick a book and go through some of its pages leisurely but with deep concentration. Sometimes he took notes and underlined certain portions to highlight them. This is an exercise he did frequently to prepare the lessons to be taught on the morrow. I do not know whether all teachers adhere to this practice. If practised it will benefit both the teacher and the students immensely. His method of teaching was unique and what he taught got impressed easily in the minds of the students.

It was the practice for the teacher to carry the work-books (Exercise books) of the students of his class home to do the correction, if he could not do it in the school itself. Whenever the teacher found it difficult to carry the exercise books all by himself, the students who used to accompany him help him to carry them. Those days the teachers and students, almost all of them, walked to the school.

Mr. Karthigesu was a lover of music and sports. Very often, he engaged talented music teachers like Kuppilan Sellathurai of Kokuvil, Moorthy Iyer and Puththuvaddi Ratnam both from Vannarpannai, to teach hymns (song in praise of God) and carnatic music to selected students, outside school hours.

As we had no playground, students who stayed after school, ran around the school building and, invariably, the Headmaster too joined them. There was a period for drill and it was conducted in the outer southern courtyard of the temple.

There was a small square plot of vacant land between K.K.S Road and the Vernacular Preparatory School. We had our volleyball court there. After school, some of the senior students stayed behind to play volleyball and the headmaster Mr. M.Karthigesu, Mr.A.Amirthalingam (teacher) and Ramakrishna Nair, brother of our lady teacher Mrs.P.P.Bhargaviamma, all of whom were veterans in the game , joined us and made the game very

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

interesting. Mr.Ramakrishna Nair was famous for his 'cut' (dashing) and he was considered one of the best volley ball players of Jaffna at that time. I was in charge of all sports materials viz: volley balls, volley ball nets, badminton nets, badminton racquets and shuttlecocks.

Mr. Karthigesu had elegant manners. He was neatly dressed and he spoke softly and in a pleasing manner. He was a model to other teachers and students. He taught many things more by example than by precept. As a part of extra curricular activities he taught us, among other things, home gardening and running the well-sweep(துலாமிதித்தல்). He had a rural background and he had great passion for farming. This he exemplified by arranging with the Headmaster (or Principal?) of the Thirunelveli Government Farm School Mr.Gunaratnam, for some of us to attend its classes on Saturdays to learn the basics of farming. We attended the classes for nearly one year and we liked going there not only for its intrinsic value but also for the opportunity it afforded us to have a bath in the huge water tank that was used for irrigating the farm.

When Mr. Karthigesu went home to point pedro during week-ends, sometimes he used to bring ingredients needed to prepare sweet porridge (ஊதுமாக்கூழ்).Then one day he would have the porridge prepared by Nair, the Malayalee cook and, after school, he would ask some of us (about four or five) who usually stay behind after school to play volley –ball and or sweep the school compound with 'eekle brooms' (as a volunteer work) to go to the boarding house and wait there. He would come there after sometimes wearing a four cubit dhoti and a small towel on one of his shoulders and ask nair to bring the porridge. Nair would bring it in a large brass pan and keep it in the centre of the boarding hall. At the same time, he would ask us to bring jack leaves which we plucked from the jack tree in front of the boarding house and folded them into cups. He would then ask us to sit on the floor in a semicircle and serve the porridge with his own hands like a mother. While we were thus enjoying the porridge he would explain to us the health giving properties of the porridge and the necessity of including such food in our dietary program. He too partook of the porridge.

Mr.Karthigesu maintained very cordial relations with the neighbourhood who held him in high esteem and respected him very much. During the palmyrah fruit-bearing season, the riped fruits that fall to the ground were collected and piled at a sunny spot among the palmyrah palms and allowed to dry. Around August/ September beds were prepared by heaping earth to a height of about one or one and a half feet and the dried palmyrah seeds were packed on and around the beds and allowed to

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

remain there. In the course of time the seeds would germinate and send the roots down through the heaped earth (bed) By the time the school reopens after the December holidays in January, the roots would have grown and become matured enough to be consumed. Then one evening a few of us would go and squat around the beds (there would be four or five beds or even more) and extract the roots. The same night or on the night following these roots were boiled in large cauldrons borrowed from the neighbours and then allowed to cool. The next day, during the interval, the boiled roots were distributed among the students, each getting about two or three. At the same time the Headmaster Mr.Karthigesu, would send a bundle of these roots, each containing about five or more roots, to every house in the immediate neighbourhood, through the students. The teachers too got their share.

Once about 30 or 40 students were taken in a bus on tour to Kayts to see the sea fort which was built entirely of wooden planks, to Keerimalai to have a dip in the famous Keeirmalai tank and to worship the historical Naguleswarar Temple and to Elephant Pass to see the salterns and watch the sunset. For most of us who had never been out of Jaffna before, this tour was a thrilling experience.

On another occasion, on a cloudless night; a few students were taken to Keerimalai beach to view the 'PLOUGH' (a group of stars called the Great Bear) and the Polar star in the northern sky. We were accompanied by the headmaster Mr. Karthigesu and one or two other teachers including Mr.A.Nagalingam.

It was during Mr. Karthigesu's time that the first ever concrete building was put up at the eastern boundary of the land that belonged to the school then, that is almost at the centre of the entire land. It had a large room (the General Science Room) at the southern end near the canal and two classrooms to the north of it. Mr. Ganeshalingam was the General Science teacher.

It was behind this building a Bookshop was opened to meet the needs of the students. Shanmuganathan Book Depot near the Vannarpannai Sivan Temple was the main supplier of the books and other stationery items. Usually I was sent to fetch them from the Book Depot which I did on a bicycle.

At this juncture I would like to mention that the Headmaster Mr.Karthigesu used to send me out on various errands. Some of the teachers also followed suit, very often to buy snuff at a Chettiar's shop in the Jaffna town. Needless to say, before long I too became a snuff addict.

Mr. C. K. Kanthaswami joined the staff of our school in the year 1940.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was the first Science Graduate teacher of our school. He was tall, handsome, soft spoken and kind. At the beginning he came to the school in a horse carriage, dressed in western attire. Mr. S.Nagalingam, his neighbour at Vannarpannai and a fellow teacher at our school, too travelled with him in the same horse carriage. Mr. Nagalingam wore National dress and very soon Mr.C. K. Kanthaswami discarded his western attire & began to don the all-white National dress to conform to the dress the other teachers wore. I was one of the first students to study chemistry under Mr.C.K.Kanthaswami. I liked the subject but gave it up after following it for about three months.

Our school (Kokuvil Hindu English School) was elevated to collegiate status in 1941. It was renamed Kokuvil Hindu College & Mr.M. Karthigesu, the headmaster of Kokuvil Hindu English School, was made its principal. Mr.C.K.Kanthaswami's appointment to our school was, perhaps, a prelude to raising the status of our school.

In the same year, Mr.S. Seenivasagam from Moolai, a B.Sc (Economics) graduate, joined the staff of our college. He was a good teacher of English, Chemistry and Geography. I studied Geography under him and many a time he applauded me for supplementing my answers to Geography questions with maps drawn fairly accurately.


Colleges have a tradition and, to conform to this tradition, the college was soon divided into houses (Chelliah, Sabaratnam and Sabapathy). Student Prefects were nominated and Sports Captain and House Captains were elected. I was nominated Senior Prefect and I was also elected Sports Captain by secret ballot. A plot of land at Kaladdy belonging to the Hindu College board was leased out and converted into a playground. (On this land stands the present Jaffna Technical College). It was the rocky land with a large number of palmyrah palms and thorny shrubs. After the palmyrah palms were felled down and cleared, it took several week-ends for a group of students under my leadership to excavate the projecting rocks and clear the thorny shrubs. With great jubilation and enthusiasm, the first Inter-house sports meet was held at this ground on 4th July, 1941 and Chelliah house emerged champion. I belonged to Chelliah house and became the senior champion at this meet. Mr.R.Navaratnam also of Chelliah house and Mr.S.Somasekaram of Sabaratnam house became the intermediate and junior champions respectively.

In the same year (1941) the College published its 1st magazine entitled "Kokuvil mirror". I was asked to contribute an article to it and I gave one under the caption "Ceylon & the present war". It appeared as the first article in the magazine.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The year 1941 was a memorable one. Many important events took place during that year. My school career was also coming to an end. After appearing for the Government Senior School Certificate (English) Examination of 1941, I bade GOODBYE to my Alma Mater and with a heavy heart and eyes full of tears; I left the college on the 31st day of January, 1942 to seek fresh woods and pastures anew.

LONG LIVE KOKUVIL HINDU COLLEGE!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த நாள் ஞாபகம்

மு. மாசிலாமணி
(பழைய மாணவன்)
தூவடி.

எனது பெயர் முத்தையா மாசிலாமணி. 1947ம் ஆண்டு எனக்கு வயது பத்து. எனது குடும்பத்தில் 06 உறுப்பினர்கள் உள்ளனர். 3 அண்ணா, 2 அக்காமார்கள். கொக்குவில் இந்துவில் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். எனது சொந்த ஊரான தாவடியிலிருந்து நடந்தே படிக்கப் போவார்கள். நான் தாவடி ஆரம்பப் பாடசாலையில் 3ம் வகுப்புக் கற்றுக் கொண்டிருந்தேன். ஆனால் மனமெல்லாம் கொக்குவில் பள்ளியில் சேர வேண்டும் என்ற எண்ணம் தான். ஆனால் அம்மா அரசியல் வாதியாக காலம் கடத்திக் கொண்டிருந்தார். ஒரு நாள் அக்காமார் கொக்குவிலுக்கு வெளிக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். சமயம் பார்த்து அவர்கள் பின்னால் ஓடினேன். அவர்களோ என்னைத் திரும்பிப் போகச் சொன்னார்கள். விடாப்பிடியாகக் கொக்கு விலுக்கு திரும்பிப் போய்விட்டேன். அப்போது ஆரம்பப் பாடசாலை அதிபர் திருஏகணபதிப் பிள்ளை என்னையும் அவர்களுடன் வகுப்பில் இருத்தி விட்டார். அதிபர் கரவெட்டியைச் சேர்ந்தவர். ஆனால் கொக்குவில் சம்பியன் லேனில் பழைய வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்தவர். உயரமான கம்பீரமான தோற்றம். பின்னர் எமக்கு J.S.C படிக்கும் போது தமிழ் பாடம் எடுத்தவர். அவருடைய பல புத்தி ர்களும் கொக்குவில் இந்துவில் பயின்றனர். ஒரு மகன் திரு.விக்னராஜா எனது வகுப்பில் படித்தார்.

கணபதிப்பிள்ளை ஆசிரியர் தமிழ் பழமொழிகள் கற்றுக்கொடுத்து விட்டு ஒவ்வொரு மாணவ, மாணவிகளை அப்பழமொழிகளைத் திரும்பச் சொல்லச் சொல்வார். வகுப்பில் மலேசியாவில் இருந்து வந்து படித்த சில மாணவர்களுக்கு சுட்டுப் போட்டாலும் தமிழ் வராது. அதில் சிவராசா என் நண்பன். அவரது முறை வரும் போது அவசர அவசரமாக என்னைக் கேட்டார். மச்சான் டக்கெண்டு 2 பழமொழி சொல்லித்தா என்று "கந்தையானாலும் கசக்கிக் கட்டு", "கூழானாலும் குளித்துக் குடி" என்றேன். அவரது முறை வந்ததும் உசாராக எழும்பி "கந்தையானாலும் கசக்கிக் குடி" என்றார். வகுப்பறை கொல் என்றது. சில் என்றது அவரது செவிப்பறை.

கசந்த பாடங்களில் கணிதம் முதலிடம். அதையும் மயில்வாகனம் மாஸ்ரர் வாயால் வரும் போது வேப்பெண்ணெய் மயில்வாகனம் மாஸ்ரர் வராத நாள் சுதந்திர நாளாக நினைத்துக் கொண்டாடுவோம். சித்திரப் பாடம் எடுத்தவர் திரு.கிருஸ்ணபிள்ளை. நகைச்சுவையாகப் பேசி சித்திரம் வரைவார். ஆக்கத்திறன் எந்த மாணவ, மாணவிகளிடம் இருந்தாலும் அதைப் பிற மாணவர்களுக்குச் சொல்லித் திருப்திப் படுவார். இவரிடம் 100 மாக்ஸ் வாங்கிய சில மாணவர்களில் நானும் ஒருவன். சித்திரம் கற்பிப்பதுடன் நிற்காமல் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் கடிதங்களை ஒவ்வொரு வகுப்பாகக் கொண்டு திரிந்து கொடுப்பார். பெயர்களையும் உரத்த குரலில் வாசித்துக் காட்டுவார். இதை அறிந்த எனக்கு மேல் வகுப்பில் படித்த துரைசிங்கம் (பரமானந்த மாஸ்ரரிடம் குத்துச்சண்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயின்று கொண்டிருந்தவர்) தனக்குத் தானே போஸ்ற்காட் போடுவார். முகவரி Mr.துரை சிங்கம், FAMOUS BOXER – K.H.C கொக்குவில் என, இதைக் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் வகுப்பு வகுப்பாய் கூப்பிட்டுக் கொண்டே போவார். இதனால் துரைசிங்கம் ஆசைப் பட்டது போல Popular ஆனார்.

அடுத்து எனது ஞாபகத் திரையில் தோன்றுபவர் திரு. S.C.தில்லைநாதன் ஆசிரியர். இவர் ஆங்கிலம், சரித்திரம் ஆகிய பாடங் களைப் பண்பாகச் சொல்லித் தருவார். நாங்கள் வெறுக்கும் பிரம்பை அவரும் வெறுத்தார். அதனால் அவர் பாடம் எடுக்க வரும் போது எமக்குப் பயம் இருக்காது. பக்தி தான் தோன்றும். அடுத்து மெல்ல மெல்ல நடந்து வரும் ரீச்சர் கொக்குவில் சுகிர்த ரீச்சர். அவர் எமக்கு வகுப்பாசிரியராகவும் இருந்து எண்கணிதம் படிப்பித்தார். எனது கணிப்பின் படி இவர் தான் அதிக காலம் ஆசிரியையாகவும், பின்பு உப அதிபராகவும் பல மாணவ, மாணவி களை நல்ல பிரஜைகளாக்கினார் எனலாம். எனது சக மாணவர்களில் பலரால் பேசப் பட்டவர்களில் சிலர் இரத்தினசிங்கம், மாம்பழம் சோதிராஜா, சொர்ணலிங்கம் (சொக்கன்), E.பத்மநாதன் (E.P), பொலீஸ் நடராஜா, கணேசலிங்கம் (காகம் கிளிச்சான்), இணுவில் திரு.த.தேவராஜா (முன்னாள் உப அதிபர் – கொக்குவில் இந்து), இராசநாயகம் (தற்சமயம் ஆங்கில ஆசான்) ஆகியோரைக் குறிப்பிடலாம். பட்டப்பெயரை குறிப்பிட்டதை மன்னிக்கவும் – நட்பின் பாசம், தவிர சுட்டையா எனும் மாணவன் எனது S.S.C வகுப்பில் நெருங்கிய நண்பனாக றேடியோ அம்பிளி வயர் செய்வதில் வல்லவர். எனக்கு அத் துறையில் ஆர் வத்தைத் தூண்டியவர் எனலாம்.

ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வராத மாண வர்களில் இராசலிங்கத்தைக் குறிப்பிடலாம். அக்காலத்தில் கின்னஸ் புத்தகம் இருந்ததோ தெரியாது. அதில் இடம் பிடிக்க – இவர் எமது கல்லூரியின் லிங்கா லைற்ஸ் காணிவெல் 1950ம் ஆண்டு நடைபெற்று முடிந்த கையோடு ஒழுங்காகவும், காலையில் 7 மணிக்கு எல்லாம் வரத் தொடங்கி விட்டார். காரணம் காணிவல் நடந்த இடத்தில் 10 சதம், 25 சதம் நாணயக்குற்றிகள் 50, 100 எனப் பொறுக்கி சாதனை புரிந்தார். பின்னர் பிரபல வர்த்தகராக விளங்கினார்.

மலேயா தேசத்தில் இருந்து வந்த நண்பர் களில் ஒருவர் இராசநாயகம். வகுப்பில் இருந்தால் கலகலப்பாக இருக்கும். எமது ஆசிரியர்கள் போல் பேசி மிமிக்ரி செய்வதில் வல்லவர். இவரது திறமை ஆசிரியர்களுக்கு தெரிய வரவே Staff Room இல் அழைக்கப் பட்டு இவரது மிமிக்ரியைக் கேட்டும், பார்த்தும் மகிழ்ந்தனர். ஆங்கிலம் சரளமாகப் பேசுவார். பின்னர் கொக்குவில் இந்துவில் ஆங்கில ஆசானாகவும் இருந்தார். சிறந்த பாடகரும் ஆவார்.

ஏ.கணேசலிங்கம் (காகம் கிளிச்சான்) சிறந்த உதைபந்தாட்ட வீரர். Corner Kick அடித்தால் goal கம்பத்துடன் பந்து வந்து இறங்கும் காட்சியைக் கண்டு வியக்காதவர் இல்லை எனலாம். பின்பு இவர் கல்வி இலாகாவில் விளையாட்டுத் துறைக்கு பொறுப்பான பதவியில் இருந்தார்.

1950ம் ஆண்டு எனது மூத்த சகோதரி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு கணிதத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். நான் அறிந்த அளவில் இவர் தான் முதல் பெண்ணாகவும், தாவடியில் முதல் பெண்ணாகவும் இருந் தாலும் சம காலத்தில் படித்ததால் ஆசிரியர்கள் எனது முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தி ஒப்பிட்டு சில அறிவுரைகள் தவிர Comments அடிப்பார்கள். கணித பாடம் எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசப்பாக இருந்தது. ஆனால் அக்காவோ கணித சிறப்புப் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருந்தார்.

தவிர எனது நாட்டம் ஆங்கிலத்திலும், பௌதீகவியலிலும் சென்றது. S.S.C வகுப்பு படிக்கும் போது திரு.E.சபாலிங்கம் ஆசிரியர் பௌதீகவியல் பாடம் எடுத்தார். தம்பிநாதன் எனும் ஊழியர் ஆய்வுகூட உதவி யாளர். அவரை அடிக்கடி திரு.E.சபாலிங்கம் கூப்பிடுவார். இதைத் தீர்க்க நான் ஒரு மின்மணி (Electric Bell) செய்து ஆய்வு கூடத்தில் பொருத்தி பொத்தானை அழுத்தி தம்பிநாதனை அழைக்க உதவினேன். இதை சபாலிங்க மாஸ்ரர் பெரிதும் பாராட் டினார். இந்தப் பாராட்டும் திரு.சிவசோதி ஆசிரியரின் ஊக்குவிப்பும் நான் H.S.C வகுப்பில் படிக்கும் போது Radio clupல் என்னை இணைத்து எனது நண்பன் நல்லையாவுடன் முதன் முதலாக 1957ம் ஆண்டு 3 Value Radio ஒன்றை தயாரித் தோம் - தனித்தனியாக. இது எனது மின்னியல் ஆர்வத்திற்கு மேலும் வலுவூட்டியது. எமது புகைப்படம் கொக்குவில் இந்து சஞ்சிகை யில் வெளியானது. இது பற்றி எனது சமகால பள்ளி நண்பர்கள் இன்றும் கூறு வார்கள். தவிர நான் 1967ம் ஆண்டு குடி யேற்றத்திட்ட அதிகாரியாக நியமனம் பெற்று (மட்டக்களப்பில்) கல்முனையில் முதல் சம்பளம் வாங்கிய 236 ரூபாவில் நூறு ரூபாவைச் செலவு செய்து Main Current இல் இயங்கும் றேடியோ செய்து நண்பர் களுடன் மகிழ்ந்தேன். கொக்குவில் இந்துவில் கல்வி கற்ற நாள் முதல் திரு. ஹன்டி பேரின்ப நாயகம் அதிபராக இருந்தார். இவரின் அரிய குணங்களின் சிறப்பை பலர் பேசக் கேட்டதுண்டு. ஒரு சமயம் எமது கல்லூரிக்கு கல்கி சஞ்சிகை ஆசிரியர் கல்யாணசுந்தரம் கிருஸ்ணமூர்த்தி வந்திருந்தார். அவர் பேசும்போது திரு.ஹன்டியைப் பார்த்து நகைச்சுவையாக 'கைத்தடி வைத்திருக் கிறீர்கள். ஆனால் மாணவர்களை அடித்தது கிடையாது என்கிறார்களே' எனக் குறிப் பிட்டார். தவிர திரு.ஹன்டி ஞாபக மறதியுள்ள பண்பாளர். அவரது ஞாபக மறதி பற்றிப் பல நகைச்சுவை கதைகள் சொல்வார்கள். ஆனால் நான் அதை நேரில் அனுபவித் துள்ளேன். H.S.C வகுப்பில் படிக்கும் போது பொது அறிவுப் பாடம் எடுத்தார். ஒருநாள் இவரது பாடம் வகுப்புக்கு வருவார் வருவார் எனப் பார்த்திருந்தேன். வரவில்லை. எனக்கோ வெளியில் சென்று ஒரு கருமம் ஆற்றவேண்டியிருந்தது. நேராக அதிபரின் அலுவலகத்திற்குள் புகுந்து அவரிடம் "சேர் நான் ஒருக்கா வெளியில் போய் விட்டு 10 நிமிடத்தில் திரும்பி விடுவேன் எனக்கு அனுமதி தாருங்கள்" என்றேன். அதற்கு அவர் "அனுமதி என்னிடம் ஏன் கேட்கிறீர் வகுப்பு எடுக்கும் ஆசிரியரிடம் சொல்லி விட்டுப் போகலாம் தானே" என்றார். நான் இல்லை சேர் நீங்கள் தான் பாடம் எனத் தயங்கினேன். அதன் பிறகு தான் அவர் அப்படியா? எனச் சொல்லிக் கொண்டு சுவர் மணிக்கூட்டைப் பார்த்து விட்டு கைத்தடியை எடுத்துக் கொண்டு வகுப்பிற்கு வந்தார். நான் படிக்கும் காலத்தில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் தான் (தமிழ், சமயம் தவிர) S.S.C வகுப்பு தமிழ்ப் பாடம் எடுத்தவர் திரு.எம்.சின்னத்தம்பி. ஒரு சமயம் சுப்பிரமணிய பாரதியார் பற்றி கட்டுரை எழுதச் சொன்னார். எனது கட்டுரையில் பல எழுத்துப் பிழைகள். சிவப்பு மையால் எழுத்துப் பிழைகளைச் சுட்டிக்காட்டி விட்டு கடைசியில் ஒரு குறிப்புரையையும் எழுதித் தந்தார். அதில் "கெடுவதற்குப் பந்தயம் பிடிக் கின்றீர் வெற்றி உம்முடையதே" என்றிருந்தது.

பின்பு வந்த வகுப்புகளில் திருமதி. கணேசலிங்கம் (ஆச்சி) தமிழ்ப் பாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லித் தந்தார். இந்த இரு ஆசிரியர்களும் நாம் பிழை விட்டால் எமது மண்டையில் சச்சினைப் போல் இலக்கு தவறாது தாக்குவதில் வல்லவர்கள். அந்தக் குட்டுக்கள் தான் எனது பின் வாழ்க்கையில் இலங்கை வானொலிக்கு 100க்கு மேற்பட்ட நகைச்சுவை நாடகங்களை எழுத உதவியது என்பதை உணர முடிகிறது.

பல வகுப்புகளில் என்னுடன் படித்தவர் களில் பாலகுமாரன் என்பவர் ஒருவர். இவர் கணக்கில் புலி. ஞானாம்பிகை ரீச்சர் Black boardல் கணக்கு எழுதி முடிப்பதற்குள் மறுமொழி சொல்லி விடுவார். ஒரு சமயம் S.S.C பரீட்சையில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. நாங்கள் மண்டையைச் சொறிந்து கொண்டிருந்தோம். பாலகுமாரன் எழும்பி நின்றார். ஆசிரியர் வந்து என்ன வேணும் என்றார். கணக்கு Set பண்ணியது பிழை என்றார். இது தான் தருணம் என்று மண்டையைச் சொறிந்து கொண்டிருந்த நானும் எனது சக மாணவர்களும் (வயிற்றெ ரிச்சலைத் தீர்க்க) ஓம் ஓம் பிழை என்றோம். நல்ல காலம் எத்தனையாவது கணக்கு என்று ஆசிரியர் திருப்பிக் கேட்கவில்லை. சக ஆசிரியர்களையும் கலந்து விட்டு குறிப்பிட்ட கணக்கை விட்டு விட்டுச் செய் யுங்கள் என்றார் அந்த ஆசிரியர். பின்னர் பாலகுமாரனை அவரது தந்தையார் டொக்டருக்குப் படிப்பிக்க பாடத்தை மாற்றி பாதையையே மாற்றி விட்டார். இது பெற்றோர் செய்யும் தவறு என்பதைப் பலர் ஏற்றுக்கொள்வார்கள்.

தவிர விளையாட்டுப் போட்டிகள் பல வற்றில் பங்குபற்றி பரிசுகள் நாகலிங்கம் இல்லத்துக்குப் பெற்றுக்கொடுத்ததுண்டு. கல்லூரி கைப்பந்தாட்ட அணியில் இருந்தேன். பரமானந்தம் மாஸ்ரர் தான் விளை யாட்டு ஆசிரியர். உயரம் பாய்தலில் பரிசு பெற்றேன். இதைப்பற்றி திருமதி.பார்க்கவி யம்மா ரீச்சர் (கேரள மாநிலத்தைச் சேர்ந் தவர்) மலையாளத் தமிழில்-அது ஹைய் ஜம்பும் பாயும், லோங் ஜம்பும் பாயும், படிப்பிலை ஆட்ஸ்ம் செய்யும், சயன்சும் செய்யும் என்று எனது அக்காவுக்குச் சொன்னாராம்.

பரந்த மனப்பான்மை உள்ள ஆபரமா னந்தம் மாஸ்ரர் விளையாட்டு மாஸ்ரராக இருப்பினும் விளையாட்டு உத்திகள் சொல்லித் தரார். ஆனால் நாகலிங்கம் இல்லத்துக்காக ஓட்டப் போட்டிகளில் ஓடியபோது அமிர்த லிங்கம் மாஸ்ரர் தந்த உபதேசம் "விசர் நாய் கலைக்குது எண்டு நினைச்சுக் கொண்டு ஓடுங்கோ" என்பது ஞாபகத்தில் வருகிறது.

தில்லைநாதன் ஆசிரியர் J.S.C வகுப்பில் ஆங்கிலம் கற்பித்தார். எமது காலத்தில் மொனிற்றர் ஆவதற்குத் தகைமை வித்தி யாசமானது. இணுவிலைச் சேர்ந்த வைரவ நாதன் தான் மொனிற்றர். மயில்வாகனம் மாஸ்ரர் ஒரு சமயம் ஆங்கிலப் பாடம் எடுத்த போது வைரவநாதனுக்கு ஆங்கிலம் வராது. நாக்கை உருக்கி வார்க்க வேண்டும் எனச் சொன்னவர் அதே வைரவநாதனுக்கு தில்லைநாதன் மாஸ்ரருக்கு தான் இல்லாத சமயம் யாராவது தமிழில் கதைத்தால் ஒரு சொல்லுக்கு 10 சதம் அறவிடவேண்டும் என Standing Order போட்டிருந்தார். அன்று ஒரு நாள் தில்லைநாதன் மாஸ்ரர் பாடமெடுக்க வரவில்லை. மொனிற்றர் தனது கடமையைச் செய்ய ஆயத்தமானார். எவ்வளவு நேரம் தான் வாயை மூடிக் கொண்டிருப்பது. நண்பன் ரத்தினசிங்கம் டேய் மச்சான் என ஆரம்பித்தார். Alert ஆன வைரவநாதன் "ஐ சே யூ தமிழ்" என்றார். பதிலும் ரத்தின சிங்கம் "யூ ஓல் சோ தமிழ்" என்றார். வைரவ நாதன் "ஐ ஆம் நொற் தமிழ்" என வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டது இன்றும் ஞாபகத்தில் வருகிறது.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியமும், சமூகப் பண்பாட்டைப் பேணுவதில் கொக்குவில் இந்துக் கல்லூரியும்



க. சிவராசா
முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
இரசாயன பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

உலகத்தில் மனித இனம் தோன்றி முப் பத்தைந்து இலட்சம் ஆண்டுகள் வரையில் ஆகியிருக்கலாம் என்று அறிவியலாளர் கூறுகின்றனர். மனித நாகரிகத்தின் பரிணாம வளர்ச்சி, இது தான் உச்ச நிலை என்று சொல்லும் அளவிற்கு வியக்கத்தக்க நிலையை எட்டியுள்ளது. இந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது அவனுடைய சமூக வாழ்க்கையே என்றால் அது மிகை யாகாது. தனியாக வாழ்ந்த மனிதன் தான் எதிர்கொண்ட இடர்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உபாயமாகச் சிறு சிறு கூட்டங் களாக வாழத் தொடங்கினான். இக் கூட் டங்களே பிற்காலத்தில் சமூகங்களாகவும் சமுதாயங்களாகவும் வளர்ச்சி பெற்றன.

மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கூறுவர். "மாவும் மாக்களும் ஐயறிவுயிரே" என்கிறது தொல்காப்பியம். பகுத்தறி வாகிய ஆறாம் அறிவு சமூக வாழ்க்கையின் வளர்ச்சியாலேயே கிட்டப் பெற்றது. பல்வேறு மொழிகள், இனங்கள், மதங்கள் தோன்றுவதற்குச் சிந்தனைத் திறனே ஆதாரமாக இருந்திருக்கிறது. இந்த வகை யில் மிகச் சிறிய நாடாகிய இலங்கையிலும் பல இன,மத,மொழி பேசும் மக்கள் வாழ்கி றார்கள். தமிழ், சிங்களம் ஆகிய இரண்டை யும் தாய் மொழியாக உடையவர்களாகவும் சைவம், பௌத்தம், கிறீஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு மதங்களைப் பின்பற்றுபவர் ஆகவும் இவர்கள் இருக்கின்றனர். இலங்கையருக்கு ஆங்கிலம் மூன்றாவது மொழியாகும்.

அன்னியர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற இலங்கையில் சைவமும், தமிழும் தமது பெருமைகளை இழந்திருக் கின்றன. குறிப்பாக ஐரோப்பியர் எமது நாட் டிற்கு 16ஆம் நூற்றாண்டில் வந்ததிலிருந்து இந்த இடர்கள் ஆரம்பமாயின. ஆங்கிலேயர் காலத்தில் இது மேலும் வளர்ந்து நின்றது. ஆறுமுக நாவலரின் பெரு முயற்சியின் பயனாக தமிழ்மக்கள் விழிப்புப் பெற்றனர். சைவமும் தமிழும் பிரிக்க முடியாததென்று கூறி அவர் அரும்பாடுபட்டார். அதன் பய னாகவே தமிழர் செறிவாக வாழும் பிரதே சங்களில் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

நாவலரின் மரபைப் பின்பற்றி இந்து மகாசபை இராமகிருஸ்ண மிஷனும் இப்பணியைத் தொடர்ந்தன. இப்படியான ஒரு முயற்சியாகத் தான் கொக்குவிலில் அதிபர் E.செல்லையா அவர்களால் 1910ம் ஆண்டு கொக்குவில் இந்து ஆங்கிலப் பாட சாலை என்ற பெயரில் ஒரு சிறிய பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. பல வளர்ச்சிப் படி களைத் தாண்டி பெரிய விருட்சமாக ஓங்கி இன்று 2010ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழா காண்கிறது. இந்த நூற்றாண்டு வரலாற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கல்வி நிறுவனம் வளர்த்தெடுத்த விழுமிய சமூகப் பண்பாடும் பாரம்பரியமும் பற்றி சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய மேலைத்தேச மாதிரியிலான கல்வி முறைமை பெரிய அளவில் இன்னமும் மாறிவிட்டதாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் அவ்வப்போது எமது நாட்டிற்கு ஏற்ற முறையில் வளர்த் தெடுக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக் கின்றன. கல்வியின் நோக்கம் ஒரு பண் புள்ள மனிதனை உருவாக்குவதே என்று சொல்லுவார்கள். ஆனால் நடைமுறையில் தொழில் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்டே கல்வி போதிக்கப்படுகின்றது. நடைமுறையோடு விழுமியங்களையும் இணைத்துப் போதிக்கப்படுவதே விழு மியக்கல்வி என்று இன்று பேசப்படுகின்றது. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று புறநானூற்றுப் புலவன் அன்றே கூறி வைத்தான். சான்றோரால் செய்யத்தக்கன இவையென்று சொல்லப்பட்டவற்றை ஒழுக்க நெறியாகக் கொள்ளுவதும், செய் யத்தகாதன என விலக்கப்பட்டவற்றை நீக்குதலுமே நல்ல வாழ்க்கையின் பற்றுக் கோடாகும்.

புறநகர்ப் பகுதியிலுள்ள கிராமத்தில் தோற்றம் பெற்றதால் கிராமத்துக்கும் நகரத்துக்கும் உரிய பண்புகளின் சேர்வை யாகவே கொக்குவில் இந்துக் கல்லூரி விளங்கி வருகின்றது. இடைக் காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியின் நிர்வாகத்தின் கீழ் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. எப்போதும் நகரத்துப் பாடசாலைகளில் துடுப்பாட்டமே பிரசித்தமான விளை யாட்டாக இருந்து வருகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரியில் கரப்பந்தாட்ட அணியும், உதைப் பந்தாட்ட அணியும் தொடர்ந்து சாதனைகளை ஈட்டி வருவதை இங்கு உதா ரணமாக சொல்லலாம். தமிழர் பண்பாட்டை அகவாழ்க்கையாகவும், புற வாழ்க்கையாகவும் சங்கப் புலவர்கள் பாடி வைத்தனர். இவற்றை இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் கனிச் சாற்றில் குழைத்துத் தந்திருக்கிறார்கள். எமது கல்லூரியும் இந்த மரபைப் போற்றி வளர்த்து வருகிறது என்று துணிந்து கூற முடியும்.

துறை சார்ந்த வல்லுனர்கள் இன்றும் பாடசாலைச் சமூகத்திலும், கொக்குவில் பிரதேசத்திலும் வாழ்ந்து வருவதைக் காண முடியும். பத்திரிகைத்துறை, சமயத்துறை, இலக்கியம் மட்டுமல்லாது ஆங்கிலத்திலும் பாட நூல்களை எழுதியும், புகழ் பெற்ற ஒரு மரபு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இருக்கிறது. ஓய்வு காலத்திலும், சமூகப் பணியாற்றி, அதில் சிறப்பாகப் பார்வையற்ற குழந்தைகளை வாழ்விக்கும் இல்லத்தில் முழுநேரச் சேவை செய்யும் ஒருவரையும் எமது கல்லூரி தந்திருப்பதைப் பெருமையுடன் குறிப்பிட வேண்டும்.

இன்று ஆரம்பப்பிரிவு தனியாகச் செயற்பட்டு வருகின்றது. மாற்று வலுவுடைய நான் அந்தப் பக்கமாகச் செல்லும் போதெல் லாம் பாடசாலைச் சிறுவர்கள் ஓடி வந்து எனது கரத்தைப் பற்றிக்கொண்டு உதவிக்கு வருவதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். இன்றைய சிறுவர்கள் நாளைய நம்பிக்கைகள். இந்த நம்பிக்கைகளுக்கு வெறுமனே வாய்ச் சொற்களால் பேசி விட்டுச் செல்லாமல் தாங்கள் உதாரண மனிதர்களாக வாழ்ந்து காட்டி வருவதனாலேயே இவ்வா றான ஒரு பழக்கத்தை ஊட்ட முடிந் திருக்கிறது.

ஒரு நிறுவனம் வெற்றிகரமாக இயங்கு வதற்கு அது அமைந்திருக்கின்ற நிலை யமும் ஒரு காரணமாகும். சங்ககாலப் புலவர்கள் நால்வகை நிலங்களாகத் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைப் பகுத்துப் பாடி வைத்தார்கள். நிலங்களின் இருப்புக்கு இயைந்த வாழ்க்கை யிலேயே மக்களின் வாழ்க்கை, ஒழுக்கம், வழிபாடு, விழாக்கள் முதலியன இருப்பதை சங்கப் புலவர்கள் தெளிவாகக் காட்டி இருக் கிறார்கள். மிகச் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம் விஸ்தரிக்கப்பட வேண்டிய கால கட்டங்களில் எல்லாம் மனமுவந்து வாரி வழங்கிய இப்பிரதேச மக்களின் பண்பு நலன்களும் கல்லூரியின் சார்புடையதே என்று கூறமுடியும்.

நூற்றாண்டு வரலாறுடைய இந்தப் பாட சாலையில் முதல் அதிபர் திரு.E.செல்லையா முதல் இன்றைய அதிபர் திரு.அ.அகிலதாஸ் வரையில் வளர்த்தெடுக்கப்பட்ட சிறப்பான பாரம்பரியத்துக்கு மேலே சொல்லப்பட்ட அமைவிடப் பின்னணியும் அனுசரணையாக இருந்து வருகின்றது என்பதையும் இங்கு குறிப்பிட முடியும். சுற்றிவர அமைந்துள்ள புகழ் பூத்த ஆலயங்களும், பிரார்த்தனைக் கூடங்களும் சமய விழுமியங்களை ஆற்றுப் படுத்திக் கொண்டிருக்கின்றன. சமய விழாக் களும், பண்டிகைகளும், பண்டைத் தமிழர் பண்பாடு இன்னமும் புறந்தள்ளப்படவில்லை என்பதைப் புலப்படுத்துகின்றன. நாட்டில் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக அவ்வப்போது ஏற்பட்ட நெருக்கடிகளின் போது மக்களின் துயர் துடைக்கும் நிலை யமாகவும் இப்பாடசாலை இருந்திருக்கிறது.

தற்போது தனியாக இயங்கிக் கொண் டிருக்கும் ஆரம்பப் பாடசாலையையும் சேர்த்துக் கொண்டு பார்த்தால் மாணவர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டு கிறது. 60ற்கும் குறைந்த மாணவரோடு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் இன்றைய மாணவர் எண்ணிக்கை, கொக்குவில் இந்துக் கல்லூரி மக்களிடையே எவ்வளவு நம்பிக்கையை வளர்த்தெடுக்கிறது என் பதையே காட்டுகிறது. கிராமியம் சாராமலும் நகரத்துவத்துக்குள் சிக்கிக் கொள்ளாமலும் எமது பாடசாலை இருந்து வருவதும் இதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. நாட்டுக் கூத்து, இசைநாடகம், கரகம், காவடி, பொய்க் கால்க் குதிரை முதலான இன்னோரன்ன கிராமியக் கலைகளை மாணவருக்கு கற்றுக் கொடுப்பதன் மூலம் அவற்றின் பெருமை களை நாளைய சந்ததிகளும் நயந்து போற்றுவதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி களம் அமைத்துத் தந்திருப்பதை பெருமையோடு சொல்ல முடியும்.

நகரத்துப் பாடசாலைகளில் இருக்கின்ற மாணவர் மன்றங்களோடு பார்த்தால் கொஞ்சமும் குறைவுபடாமல் பல்வேறு துறைகள் சார்ந்த 19 மாணவர் மன்றங்கள் இங்கும் இயங்கி வருகின்றன. இவை புறக் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும், மாணவரின் ஆளுமையை விருத்தி செய்வதிலும் பெரும்பணியாற்றி வரு கின்றன. இப்படியான மன்றங்களின் செயற்பாடுகளுக்குப் பிரதேச மக்கள் பாடசாலை அபிவிருத்திச் சபையாரோடு கைகோர்த்துக் கொண்டு செயலாற்றி வரு வதும் எமது கல்லூரியினால் வளர்த்தெடுக் கப்பட்ட பண்பாட்டின் அடையாளமாகச் சொல்லமுடியும்.

ஒரு பாடசாலை தனது சேவையில் சதம் போடுகிறது என்றால் அங்கிருந்து கல்வி கற்று வெளியேறியவர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டி அப்பாலும் செல்லும் என்பதை எவரும் கணக்கிட்டுக் கொள்ள முடியும். உயர் அரச சேவைகள் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விளையாட்டு வீரர்கள், சாரணியர்கள் எனப் பல துறை களிலும் பணியாற்றும் துறை சாரந்த வல்லுனர்களை உருவாக்க உதவியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது 'குன்றில் இட்ட தீபம் போல' வெளிப்படையான விடயமாகும். இவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய அல்லது ஆற்றி வருகின்ற சேவைகள் பாடசாலையின் பாரம்பரியத்துக்கு எல்லா வகையிலும் பெருமை சேர்ப்பதாகவே இருக்கும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை எனலாம்.

நமது நாட்டிலிருந்து இலட்சக்கணக்கான தமிழர்கள் உலகம் முழுவதும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் நாட்டிலிருந்து வெளியேறி வெளிநாடுகளில் வாழ்வதற்கான காரணங்கள் வேறு வேறாக இருக்கலாம். ஆனாலும் நம்மவர்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளிலெல்லாம் எமது மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், சமயம் முதலியவற்றை எல்லாம் மறந்து போகாமல் இறுகப் பற்றிக் கொள்ளும் கொள்கை உடையவர்களாய் இருப்பதைக் கண்டு வெளிநாட்டவர்கள் கூட அகன்ற விழிகளோடு வியந்து பாராட்டுகிறார்கள். தாங்கள் கல்வி பயின்ற பாடசாலைகள், வணங்கி வரம் பெற்ற ஆலயங்கள், உலாவியும் குலாவியும் மகிழ்ந்த கிராமங்கள், பெற்றோர், சுற்றம், நட்பு முதலியவற்றை எல்லாம் மறக்காமல் நினைவில் வைத்துக் கொண்டு உதவி செய்யும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். தாம் வாழும் நாடுகளில் ஒரே கல்லூரியைச் சேர்ந்தவர்கள், பழைய மாணவர் சங்கம் அமைத்து தம்மை ஆளாக்கி விட்ட கல்லூரிக்கு உதவியும் வருகிறார்கள். இந்த வகையில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் புலம்பெயர்ந்த மாணவர் அமைப்புக்களின் சேவை கல்லூரியின் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்கி வருகிறதென பெருமையுடன் கூற முடியும்.

நீண்ட வரலாற்றை உடைய ஒரு கல்லூரியால் வளர்த்தெடுக்கப்பட்ட சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியம், கலாசார விழுமியங்கள் பற்றி எழுதப் புகுந்தது குறு முனிவர் பெருஞ்சமுத்திரத்தை உள்ளங் கைக்குள் அடக்கி வைத்ததைப் போன்ற செயல் என்றே நினைக்கின்றேன். குறு முனியோ பூமித்தட்டை சமப்படுத்திய மகாமுனிவர், சிற்றறிவும் சிறுமதியும் உடைய எனது அகத்திய முயற்சி குறை குற்றங்கள் மிகுந்தது என்பதை நான் உணர்கிறேன். இருந்தாலும் எடுத்த முயற்சியின் பெருமை கருதி பெரியோர்கள் குணத்தை மட்டும் கொள்வாரென நம்புகிறேன்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEMORIES OF MY ALMA MATER - KOKUVIL HINDU COLLEGE



Mrs. Kanagampikai Ranganathan
B.A. (London),
Dip.in.Edu. (Ceylon).

Kokuvil Hindu College has reached a ripe old age of a one hundred years, an age that is a miraculous achievement for a human being but for an educational institution an age that is still vibrant and promising with a vision of progress and power in imparting education in its fullest sense to the children of today. As Kokuvil Hindu College gets ready to launch its centenary celebrations, spanning a period of 1910 to 2010, one can only wonder how a village school of a hundred students in its roll has transformed itself into a mighty, impressive institution of well-nigh two thousand students and manned by almost hundred staff members. Hailing from Kokuvil and from a family that is interwoven with the history of the school from its inception. I am very much overjoyed at the prospect of the school reaching the century milestone. My maternal grandfather, Mudaliyar S. Sabaratnam was one of the founder members of the school which was started to serve the educational needs of the village of Kokuvil and its suburbs. Being a great scholar with some well-known publications to his credit and holding a high position of assistant Government Agent of the Jaffna peninsula, he was a man of repute and respect in the area. He realized the advantage that a school could bestow to the children of his area and hence whole-heartedly threw his time, effort and money in helping this dream of a school come true. My father, a lawyer by profession, though saddled with the tremendous work of his legal profession added to his responsibility of educating his six children, involved himself in the development of the school and carried on the good work of his father-in-law, sabaratna Mudaliyar. My siblings too contributed their efforts in uplifting the school with my eldest brother Mahadeva serving as principal of the institution for a few years and my two sisters and another brother serving on the school staff as teachers from time to time.

As I let my memories of my dear Alma mater, Kokuvil Hindu College, drift to that far-away time of nineteen thirty four when as a child of barely three years I entered the portals of that hallowed institution with my older siblings to learn in the pre-kindergarten class, I cannot but recollect an image of another village school aptly described by the famous English Poet, Oliver Goldsmith in his

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

poem "The Deserted Village". Thus the description goes —

"Beside you straggling fence that skirts the way
With blossomed furze unprofitable gay,
There in his noisy mansion, skill'd to rule
The village master taught his little school."

In my village school where I met with reverence and awe the teachers and my companions at the tender age of three, I was struck dumb at the novelty of this new experience of schooling and everything around me looked so strange and threatening. Even the teacher's booming voice which in my present memory evokes the voice of the school master in Goldsmith's "The Deserted Village" - 'While words of learned truth and thundering sound; amazed the gazing rustics ranged around' – sent a shudder through my frail, little body. The passage of time and familiarity of the surroundings made me gradually more comfortable in school as I began to pay attention to what was taught by the respective teachers. My earliest memories of my primary education up to standard three, where I was taught through the medium of my own language Tamil are rather vague but pleasant. We were taught well the three basic skills-reading, writing and arithmetic-by teachers who meant well, but who had certainly the least idea of what a child-centered educational programme was. The smooth transition from the Tamil primary school into the English primary school, where the medium of instruction was in English owes its success more or less to my father who, amidst his busy life as a lawyer, found the time to introduce us, his children, to the alphabet and writing of the English Language long before we entered the first primary class in the English School. In the English primary school where the classes went up to form 1 – grade six at the present time —, we were taught much more than the basic skills of reading, writing and arithmetic. We were introduced to subjects such as history, geography, nature studies, general science, music, religion, English literature and Tamil literature. Besides our studies, we were taught the basic rudiments of physical education and literary societies. We had several side activities to lighten our school life – concerts with music and dance, competitions and prize-giving occasions, short excursions or trips to nearby places of interest. Try as I might, yet I cannot bring up distant memories of specific teachers during this period of my school time. I can relate to my school experience only in general terms—it was a pleasant time in childhood and innocent enjoyment with companions of my own age, with no particular interest to excel in the educational sphere. It was a home away from home, where the teachers taught and disciplined us and where, we the children were all bonded members of a larger community.

I can recall vividly a greater part of my school life and educational

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

experience in the high school from Form 2 – grade seven of the present day – to the highest class in the school, namely Senior School Certificate. It was at this time from my eleventh year onwards that my slumbering spirit which hitherto was content to jog along in the educational sphere woke up suddenly to explore the riches found in all the subjects taught to me – English literature, Tamil, Mathematics, Latin, Religion and all other allied social subjects. My avidity for learning and my insatiable desire to delve deeper and deeper into the mysterious realm of knowledge were equally matched by most of the teachers whose primary purpose was to impart all that they knew. With little distractions to turn our minds away from books, fired by an enthusiasm that was overwhelming and inexplicable. I let my mind endlessly roam through pleasant pastures — the alluring background of classic novels, the breath –taking beauty of Shakespeare's dramas, the poignancy and pathos of poetry, the miraculous stories of Hindu saints, the conjugation of Latin verbs and its power of access to Latin literature, the recorded history of ancient Sri Lankan Kings, and in, no unequal way, the intricacies of mathematics. Whatever rich academic qualifications I have today, whatever interest I have at present, whether it be in appreciating literature, in myself composing literary and poetical pieces, in giving inspirational talks on any given topic, or in any other sphere of life, it could be traced to the encouragement I received from the teachers who taught me at this time. Their dedication and interest was so admirable that these teachers were able to help the diligent students who cared to absorb all that was imparted to reach to the top. These four years of studies, which culminated in my sitting for the national S.S.C examination conducted by the Ministry of Education, not only helped me to pass the examination with flying colours, but also equipped me very well to enter my undergraduate studies at Jaffna College. When my name appeared in the national daily paper under the pass list, with asterisk to note distinctions and first class, I have a silent prayer in my heart to my father who in his matured wisdom chose to send me to this local school — K.H.C.

More than half a century and ten years have passed since I left the portals of my Alma Mater to seek my own life and destiny in an unknown future. Living in the capital city of U.S.A for the last thirty five years, my life has been enriched with exposure to the educational systems existing in other various places, Colombo in Sri Lanka, in England and in U.S.A. My four children whose educational experience has been influenced by the different geographical places in which they have lived and also by the recent evolutionary changes in the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

educational system itself, may perhaps not understand the blessing bestowed on me by my alma mater — a firm base on which I built the structure of my life which, in my opinion, is a glowing tribute to K.H.C. Visiting Sri Lanka in January and February of this year, I had the great opportunity to visit my old school that natured and nourished me in my early formative years. I was fortunate enough to spend a whole morning on a Saturday, unhampered my any activity of the school children, with the current principal of the school, Mr.Ahiladas, the dynamic erstwhile principal Mr.Panchalingam and with a group of dedicated old students and a few staff members. It was a joy to be there after all these years of separation and drink deep the familiar, nostalgic remembrances of my early, educational period. The sight of the school, which I knew as my old small village school, was a wonder to behold, both refreshing and resplendent. In place of the few buildings which I knew so well, there stood now many block of modern buildings on either side of the village temple which have an aura of sanctity and blessing to this hallowed centre of learning. The blocks of buildings themselves on either side of the temple had an open courtyard in their midst so as to allow a free flow of the blowing of the wind as well as serving a place for children to roam and play during their recess. From what I gathered that morning in the company of these educators and administrators, the funds for these majestic and modern buildings had come freely from the coffers of a few old students who were active in supporting the school that gave them the treasure of knowledge. It was their holy mission to make this school a shining beacon of light and learning to all who sought its succour. It startled me to think suddenly that I might be one of the very few of the old students of this institution still alive to see the wonderful transformation from a small village school to a magnificent, impressive educational center of high standing to serve the needs of all who seek its assistance. True to the old adage of the book that in its own meanderings says, "Men may come and men may go but I go on forever", whatever changes may take place in the staff, student body or administration, the school stands firm and resolute to go on forever. I was also thrilled to learn that my little village school, now the mighty, shiny K.H.C was getting ready to celebrate its centenary celebrations. What a great tribute this event is for founders of this institution, the principals of the school both past and present, the old students with their rich offerings and the present staff and student body for keeping alive the wonderful tradition of the school! May our beloved Lord Murugan, the presiding deity of the school endow it with all the richest blessings now and in many more years to come!

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீயே வித்தையின் உறையுள் நினதே எங்களின் உயர்வு ....

திருமதி. க. இராஜசேகரம்
முன்னாள் ஆசிரியை.

எனது ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழகம் புகும் வரை கொக்குவில் இந்துக் கல்லூரியிலேயே கல்வி கற்ற பெருமையிலும், மகிழ்ச்சியிலும் எனது கல்லூரிக் காலத்தில் நடந்த சில சம்பவங் களையும், சாதனைகளையும் இக்கால மாணவர்களும் வருங்கால மாணவர்களும் அறியவேண்டுமென்ற அவாவினால் நூற்றாண்டு மலருக்காக இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன்.

கொக்குவில் இந்து ஒரு நூற்றாண்டு காலத்துள் பிரமிக்கத்தக்க வகையில் வளர்ச்சி கண்டுள்ளதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இந்தப் பெரு முன்னேற்றத்திற்கு அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனை வருமே பாராட்டிற்குரியவர்கள்.

திண்ணைப் பாடசாலையாக ஆரம்பித்து இன்று உயர்ந்த பல மாடிக் கட்டடங்களைக் கொண்ட முதல் தரக் கல்லூரிகளில் ஒன்றாக உயர்ந்து நிற்பதற்கு மனவுறுதியுடனும், அர்ப்பணிப்புகளுடனும் செயற்பட்ட அதிபர்கள் வரிசையில் என்னால் அறியப் பட்டவர்களுள் முதன்மையானவர் "ஹன்டியர்" என எல்லோராலும் இன்றும் அழைக்கப்படும் திரு.ஹன்டி. பேரின்ப நாயகம் ஆவார்.

1953இல் இலங்கையின் பிரதமராக விளங்கிய சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் 1954இல் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் பொழுது எம் கல்லூரிக்கும் வருகை தந்து சிறப்பித்தி ருந்தார். இன்றைய விளையாட்டு மைதான வளவில் காட்சி தரும் மாடிக் கட்டடங்கள் இருந்த இடங்களில் ஓலைக் கொட்டில்களே அன்றைய வகுப்பறைகள். தென்புறக் கல்லூரி வளவில் காரியாலயம், ஆசிரியர் அறை. சில வகுப்பறைகள் காணப்பட்டன. பிரதமர் வருகைக்கு முதல் நாள் இரவு மைதான வளவில் அமைந்திருந்த ஓலைக் கொட்டில்கள் அனைத்தும் விஷமிகளால் எரிக்கப்பட்டன. ஆனால் பிரதமர் வருகை தடைப்பட வில்லை.தீக்கிரையான வகுப்பறைகள் எங்கும் மேசைகள், மரத்தூண்கள் புகைந்த காட்சி இன்றும் என் மனதில் நிழலாடுகின்றது.

வகுப்பறைகள் அற்ற நிலையில் மாணவர்களது கல்வியைத் தொடர இருந்த சிக்கலை பின்பு வந்த அதிபரும் கல்லூரியை வளர்த்தெடுக்க அரும் தொண்டுகள் ஆற்றியவரும், கல்லூரித் தாயின் வளர்ச்சிக்காக தனக்குக் கிடைத்த அதிபர் பதவியை விட்டுக் கொடுத்தவருமான "சி.கே"யர் என இன்றும் அனைவராலும் அழைக்கப்படும் முன்னாள் அதிபர் திரு.சி.கே.கந்தசுவாமி அவர்களது ஆலோ சனைப்படி பாடசாலை ஆறு நாட்கள் கொண்ட இருநேர அமர்வாக்கப்பட்டது. காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12.40 வரை ஒரு அமர்வும், மதியம் ஒரு மணி தொடக்கம் மாலை 5.40 வரை மறு அமர்வுமாக வகுப்புக்கள் ஒழுங்கமைக்கப் பட்டன. ஆசிரியர்களும் இரு பிரிவாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டாலும் ஒரு சிலர் இரு நேரங் களிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். ஐந்தாம் வகுப்பிற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகள் கே.கே.எஸ் வீதியின் மேற்குப் புறத்தே திருமதி.அப்பாக்குட்டி என்பவரது நாற்சார் வீட்டிலும் வளவிலும் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. குறித்த வீடு இன்று அழிவடைந்துள்ளது. பழைய மாணவன் சண்முகரத்தினம் பிறேம்குமார் அவர்களது வீடு என்று குறிப்பிட்டால் இன்று அனேக ருக்குத் தெரியவரும். குறிப்பிட்ட வீட்டின் வளவு கொக்குவில் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் ஆடியபாதம் வீதி வரை பரந்து மாமரச் சோலையாகக் காணப்பட்டது. ஒவ்வொரு மாமர நிழலும் ஒவ்வொரு வகுப்பறைகளாகியது. மாணவர் இருக்கை யாக பாய்கள் விரிக்கப்பட்டன. ஆசிரியர் களுக்கு மட்டும் கதிரை இருந்தது.

அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பி களது முடிவுப்படி ஊரிலும், நாட்டிலும் வெளிநாடுகளிலும் நிதி திரட்டி மாடிக் கட்டடம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. திட்டத்தின் முதற்கட்டமாக விடுமுறை தினத்தன்று ஒவ்வொரு மாணவரிடமும் ஐம்பது சதம் தொடக்கம் ரூபா 100/- வரை பெறுமதி கொண்ட முத்திரை வடிவிலான அட்டைகள் வழங்கப்பட்டு மாணவர் மூலம் அவை விடுமுறையில் விற்கப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் "ஹன்டியர்" தலைமையில் ஒரு குழுவால் நிதி திரட்டப்பட்டு மூன்று மாடிக் கட்டடத்திற்கு அத்திவாரமிடப்பட்டு குறுகிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டது. அக்கட்டடமே 'ஹன்டி ஞாபகார்த்த மண்டபமாக' இன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

அதிபர் "ஹன்டி" உயர் வகுப்புகளில் கல்வி போதித்தவர். அவரது சிறப்பான கற்பித்தல் முறை பற்றி எனது மூத்த சகோ தரி (நேசம் அக்கா) அடிக்கடி கதைப்ப துண்டு. அவரிடம் கல்வி கற்கவில்லை என்ற ஆதங்கம் எனக்கு நீண்ட காலம் இருந்தது. எனது முதல் நியமனம் 1971இல் கூட்டு றவுத்துறையில் அமைந்திருந்தது. அதற்கென குறுகிய காலப் பயிற்சிநெறி ஒன்று வழங்கப்பட்டது. பயிற்சியில் 'சட்டம்' எனும் பாடத்திற்கு ஆசிரியராக ஓய்வு பெற்ற அதிபர் 'ஹன்டி' நியமிக்கப்பட்டிருந்தமை எனக்குப் பெருமகிழ்ச்சி. அறிமுக நாளில் நான் கொக்குவிலைச் சேர்ந்தவர். கொக்கு வில் இந்துவின் பழைய மாணவியென்பதை அறிந்த 'ஹன்டி' மாஸ்ரர் என்னை 'கொக்குவில்' என்றே அழைப்பார். ஏனையவர்கள் வெளி மாவட்டத்தவர்கள். என்னில் கொக்குவில் இந்துவைக் கண்டார் போலும். இதிலிருந்து அவர் கொக்குவில் இந்துவை எப்படி நேசித்தார், வளர்த்தார் என்பதை உணரலாம். இவரால் தமிழ் மொழியில் அக்காலத்தில் எழுதப்பட்ட 'ஆட்சியியல்' எனும் அரசியல் பாடநூல் உயர் வகுப்புகளில் அரசியல் பாடம் கற்ற மாணவர்களுக்குப் பேருதவியாக இருந்தது.

எனக்கு ஆரம்பக் கல்வியைப் புகட்டிய 'முத்தம்மா' ரீச்சர், 'பள்ளிக்கூடத்தக்கா' (திருமதி.சதாசிவம்) போன்றோரை நான் அல்ல அவர்களிடம் படித்த எவருமே என்றும் மறக்க மாட்டார்கள். என்னை ஆறாம் வகுப்புத் தொடக்கம் O/L வரை கற்பித்த 'ஆச்சி' ரீச்சர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட திருமதிஇகணேச லிங்கம் நிறைந்த கல்வித் தகைமை கொண்டவர். முன்னாள் கோப்பாய்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.வன்னியசிங்கம் அவர்களது சகோதரி. வெண்ணிற ஆடை விபூதிக்குறி, கண்ணாடி என யாவரும் மதிப்பளிக்கும் தோற்றம். பாட நேரத்தில் வகுப்பறையில் கல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சஞ்சிகைகளை தந்து வாசிக்க அனுமதித்த பெருமாட்டி. வாசிப்பது அறிவை வளர்க்கும் என்ற நம்பிக்கையுடையவர். 1960இல் யாழ். கச்சேரி முன்றலில் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தில் கல்லூரி சார்பாக சீருடையில் தானே தலைமை தாங்கி கல்லூரியிலிருந்து ஊர்வலமாக எம்மை வழிநடத்திச் சென்றவர்.

கல்லூரியில் ஒழுக்கக் கட்டுப்பாடு பெரிதும் பேணப்பட்டமைக்கு ஒரு சம்பவத்தை இவ்விடத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன். 1961இல் நான் O/L வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது மாணவன் ஒருவன் சுவர் ஏறி இன்று 'கல்லூரி ஒழுங்கை' என்றழைக்கப் படும் ஒழுங்கையால் வீட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டார். சம்பவத்தைக் கண்ட ஆசிரியர் அதிபருக்கு முறையிட்டு மாணவனது பெயரையும் குறிப்பிட்டு விட்டார். அதிபராக இருந்த திரு.சி.கேகந்த சுவாமி அவர்களுக்கு தர்ம சங்கடமான நிலை. காரணம் மாணவனின் தந்தையும், கல்லூரியில் ஓர் ஆசிரியர். அதிபர் தந்தையை அழைத்து சம்பவத்தைக் கூறி "மகனுக்கு என்ன தண்டனை வழங்க?" என்ற வினாவிற்கு மனுநீதி கண்ட சோழனாக "இன்னொரு மாணவன் இத் தவறைச் செய்திருந்தால் என்ன தண்டனை கொடுப்பீர்களோ அதனைக் கொடுக்கவும்" என்று அத்தந்தை கூற குறித்த மாணவன் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டார். குறித்த ஆசிரியர் 'ஏ.கே'யர் என எல்லோராலும் இன்றும் அழைக்கப்படும் முன்னைநாள் கல்லூரியின் முதல் வர்த்தக ஆசிரியர் திரு. அ.கந்தசுவாமி ஆவர். குறித்த மாணவன் சம்பவத்திற்கு முன் எழுதிய O/L பரீட்சையில் சிறப்பான தேர்ச்சி பெற்று எழுதுவினைஞராக நியமனம் பெற்று புகையிரத திணைக்களத்தில் கணக்காளராக உயர் பதவி வகித்து ஓய்வு பெற்றுமுள்ளார். அவ்வாசிரியரின் ஏனைய பிள்ளைகள் அதிபர் தரம் - I பொறியியலாளர்களாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ளனர். இத்தகைய உத்தம சேவைகளை வழங்கிய பல ஆசிரியர்களால் தான் இன்று உலகளாவிய ரீதியில் கல்லூரியின் பழைய மாணவர்கள் பெரும் பதவிகளில் சாதனையாளராக இருப்பதுடன் கல்லூரித் தாயின் வளர்ச்சிக்கும் உதவும் உத்தமர்களாக உள்ளனர்.

என்னை உருவாக்கிய அனைத்து ஆசிரியர்களின் பெயர்களை வெளியிட தனிச் சஞ்சிகை தான் வெளியிட வேண்டும். எனினும் இடைநிலைக் கல்வியைச் தந்த மூத்த ஆசிரியர்கள் சிலரை மறக்கமுடியாது. "லேடி ரீச்சர்" என்றழைக்கப்பட்ட கல்லூரியின் முதலாவது பட்டதாரிபெண் ஆசிரியை திருமதி.மா.பார்கவி அம்மா. இவர் இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சொந்த இடமாகக் கொண்டிருந்தாலும், தனது 28 ஆண்டு காலச் சேவையை எமது கல்லூரிக்கு அளித்துக் கொக்குவிலிலேயே வாழ்ந்தவர். எம்.எஸ் என இன்றும் அழைக்கப்படும் திரு.எம்.சின்னத்தம்பி, திருமதி. பு.மணிவாசகம், செல்வி.பறுபபத்தினி இராசதுரை, திரு.எஸ்.பி.நடராசா, செல்வி. வி.நாகேஸ்வரி (திருமதி.நா.துரைராஜசிங்கம் - கல்லூரி ஸ்தாபகரின் பேத்தி), திரு.சி. குணபாலசிங்கம், செல்வி.புனிதவதி முருகேசு (திருமதி.பு.செல்லத்துரை), திருமதி.எஸ்.ஏகாம்பரம் போன்றோரை மறக்க முடியாது. உயர்தரக் கல்வியை எனக்களித்து பல்கலைக்கழகம் செல்ல ஊன்றுகோலாயிருந்த திரு.திருமதி. குணபாலசிங்கம், திருமதி.பு.விஜயரத்தினம், திருமதி.சிவஞானம் ஆகியோர் என்றும் என்னால் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் நான் படித்த காலத்தில் விளையாட்டுப் போட்டிகளில் முன்னின்று உழைத்த ஆசிரியர்கள் வரிசையில் திரு.A.பரமானந்தம், திருமதி.எஸ். ஏகாம்பரம், திரு.சி.நாகலிங்கம், திரு.சொ. பாலகிருஷ்ணன், திரு.சி.குணபாலசிங்கம் ஆகியோரை அக்காலத்தில் கல்வி கற்ற எவராலும் மறக்க முடியாது. இவர்களில் இன்று உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.சொ.பாலகிருஷ்ணன் அவர்களை அவரது இல்லத்தில் கண்டு உரையாடும் சந்தர்ப்பம் அண்மையில் கிட்டியது. விளையாட்டு வீரர்களுடன் ஓடி ஓடி முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பதில் முன்னணி வகித்த இவ் ஆசிரியர் தற்சமயம் நோய் காரணமாக ஒரு கால் அகற்றப்பட்டு சக்கர நாற்காலியில் இருந்தவாறே என்னுடன் உரையாடினார்.

பழைய மாணவர்களது அன்பளிப்பு களால் கல்லூரித்தாய் இன்று வளர்ந்து பரந்து கல்லூரி ஒழுங்கை வரை விரிவுபட்டு வாழ்கின்றாள். அன்று அதிபர் 'ஹன்டி' மூன்று மாடிக் கட்டடம் கட்டுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நிதி திரட்டினார். ஆனால் இன்று தனி ஒரு பழைய மாணவனால் புகையிரத வீதியில் தன் பெற்றோரின் ஞாபகார்த்தமாக மாணிக்கம் பாக்கியம் என்ற பெயர் கொண்ட மூன்று மாடிக் கட்டடம் கட்டப் பட்டு கம்பீரமாகக் காட்சி தருவது கல்லூரி அன்னையின் பிள்ளைகள் நல்வழியில் சிந்தித்து சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். எதிர்காலத்திலும் செயற் பட்டு வருவார்கள் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

எனது ஆசிரிய சேவையில் இறுதிப் பத்தாண்டுகளும் எனது கல்லூரியில் அமைந்தமையை பெரும் பேறாகக் கருதுகின்றேன். கல்லூரித்தாயின் விளை யாட்டு மைதானத்தின் வடகிழக்கு மூலை ஒழுங்கற்ற அமைப்புடன் ஊனமுற்றுக் காணப்படுவது போலுள்ளது. இவ் ஊனத்தை பெருமனதுடன் உரிமைக்காரர்கள், பழைய மாணவர்கள், நிர்வாகத்தினர் சீர் செய் வார்கள் என்ற நம்பிக்கையுடன் கல்லூரித் தாயை வாழ்த்தி வணங்கி விடைபெறு கின்றேன்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

An Old Student Looks Back

Dr. M. Kanthasamy
An old Student,
USA.

Shakespeare in one of his plays, in Twelfth Night, speaks of some men being born great, some achieving greatness and some others as having greatness thrust upon them.

One is tempted to think that it is possible to categorize institutions of learning like Kokuvil Hindu College along the same lines (though with a slight slant to the meaning of the word "thrust", as will be seen shortly below).

Royal College in Colombo and Trinity College in Kandy, Jafffna College in Vaddukottai and Jafffna Hindu College in Vannarponnai could be considers as born great. From the very inception they were recognized as such.

Now confining our attention to the Jaffna peninsula, Mahajana College in Tellipallai and Skanthavarodaya College in Chunnakam could nbe looked upon as institutions that achieved greatness by the steady and swelling stream of students they were able to send to the University of Ceylon.

Kokuvil Hindu College was not born great; it was conceived, instituted and remained for a long time as a feeder school to Jaffna Hindu College. Nor did it achieved greatness by the royal path trod by the two Colleges just mentioned. (There are good reason for it. One of them is: it was never an established boarding school.)

However greatness came to it (this is the slant to the meaning of the word "thrust", mentioned earlier) through the stewardship of two principals. The first one raised it from the status of a village school to one that had to be reckoned with at the peninsular and at the provincial level. The principal that I refer to here is Mr.V. Nagalingam. A long time teacher as Jaffna Hindu College, known among the educated as Shakespeare Nagalingam, he was able, within a short time, to collegiate status, permitting it to prepare students for the University Entrance Examination! Furthermore, it shone in soccer. Even the big names of those times were apprehensive of meeting us on the soccer field. He also instilled in his students a taste for the English Language – Mr.S. Sivanayagam of journalistic fame was one of his first few products. Moreover he was a great admirer of Gandhi and he rubbed a little of his enthusiasm on his students.

The second principal was Mr. Handy Perinpanayagam. He had been a teacher of great renown at Jafffna College and a

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

man of no little fame at the national level, has been a leader of the Youth Congress that was responsible for bringing Mahatma Gandhi of Ceylon. If Mr. Nagalingam had been the figure that earned for the college a prestigious position in the Jaffna Province, it was with Handy Perinpanayagam that Kokuvil Hindu found a place in the educational map of the island. What other institution in Jaffna (or for that matter in SriLanka) could say that it had invited year after year such dignitaries as Dr. N.M.Perera, Mr. Wilmot Perera, Sir Claude Corea and Mr.J.R. Jeyawardena? These men of national fame came not to Kokuvil Hindu College but to Handy's school. It may be mentioned here that during the time of the Linga Lights Carnival these was talk of Rajaji coming to open one of its sessions. Handy made use of his name both at home and abroad to raise the three storeyed building .

I am too far away geographically and too near historically (that is, too near in time to events that happened latterly) to say anything with any degree of objectivity. However, as an oid student, I cannot help putting on record the stupendous efforts attened by conspicuous success, of two students, one in Colombo and the other in Toronto, Canada. Mr. S. Ratnapragasam and Mrs.S. Supiramaniam, in my opinion, have done much to keep alive the flame of our Alma Mater burning bright in the hearts of many an old student.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது மனப் பதிவுகள்

திருமதி. ஞா. இராஜேந்திரகுமார்
B.Sc. Dip. In. Edu.

கொக்குவிலின் மணிமகுடமாம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு நூற் றாண்டு விழா எடுப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரியில் நான் ஒரு மாணவியாக இருந்து பல்கலைக்கழகம் சென்று பட்டப் படிப்பை முடித்து வெளியேறி இக்கல்லூ ரியிலேயே ஆசிரியையாகக் கடமை புரிவதில் பெருமையடைகின்றேன். அப்போது கல்லூரி இருந்த நிலையையும் இப்போது கல்லூரி இருக்கும் நிலையையும் எண்ணிப் பார்க்கின்றேன். அப்போது ஒரே யொரு மூன்று மாடிக் கட்டிடம் தான். தற்பொழுது பல மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுக் கம்பீரமாக தோற்றமளிக் கின்றன. இது மாத்திரமன்றி கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் பாடத்திட் டத்திற்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபட வசதி வாய்ப்புகள் உள.

எமது காலத்தில் உயர்தர மாணவர் ஒன்றியம், சைவசமய அபிவிருத்திச் சங்கம் என்பன இயங்கி வந்தன. தற்பொழுது மாணவர்களின் தனித்துவமான ஆற்றல் களை வெளிக்கொணர பல்வேறு கழகங்கள் உள்ளன. தமிழ் மன்றம், கணித விஞ்ஞான மன்றம், கவின்கலை மன்றம், சித்திரக்கலா மன்றம், வணிக மன்றம், ஆங்கில மன்றம், இன்ரறக்ட் (Interact) கழகம், முதலுதவிக் கழகம், மரபுவழி ஆற்றுகைக் கழகம் எனப் பல. இத்தனை வருடங்களாகக் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்கள் தம் கல்வித்தாயை மறவாது பல வழிகளில் பிரதி உபகாரம் செய்கின்றனர். கட்டிடங்கள் மட்டும் உயர்ந்ததல்லாமல் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் மிகச் சிறந்த நிலையை எங்கள் கல்லூரி அடைந் துள்ளது.

இந்துக் கல்லூரி என்ற பெயருக்கேற்ப சமய விழாக்கள், சமயச் சொற்பொழிவுகள், நாயன்மார்களின் குருபூசை, நவராத்திரி பூசை எனப் பல சமய நிகழ்வுகள் மாணவர் கள் சமய நெறிகளைப் பின்பற்ற உதவு கின்றன. கிருபாகர சிவசுப்பிரமணிய கோவில் பாடசாலைக்கு அருகே இருப்பது மாணவர்கள் சைவநெறியைப் பின்பற்றப் பெரிதும் உதவுகின்றது. நவராத்திரி விழாவில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி உண்டு. மாணவர்கள் வகுப்பு வாரியாகப் பிரிக்கப் பட்டு தமிழ் பேச்சுப் போட்டி நடாத்தப் பட்டு கீழ்ப்பிரிவிலும், மேற்பிரிவிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படுகின்றது. இப்பதக் கத்தை வழங்கும் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி T. இராஜச் சந்திரன் ஐக்கிய இராச்சியத்தில் உயர் பதவி வகித்து வருகின்றார். அமரர் திரு. K. சிவானந்தன் அவர்கள் ஆங்கிலப் பேச்சு வன்மையை மாணவர்களிடையே வளர்க்க பரிசுகள் வழங்கி வந்தார். ஆண்டுதோறும் போட்டிகள் நடாத்தி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு இரண்டிலும் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர் களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகின்றது. இப் பெரியார் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு முன் காலமானார். இப்போது இப்பரிசுகள் அவரின் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகின்றன. அவரின் பெயரை மாணவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். இப்பரிசு வழங்கல் மாணவர்களை ஊக்குவிக்கின்றது. நாமும் பெருமையடைகின்றோம்.

எமது கல்லூரி பழைய மாணவர்கள் பல புலமைப்பரிசில்கள் வழங்கியுள்ளனர். வசதி குறைந்த மாணவர்களுக்கு இப் பரிசில் பெரிதும் உதவுகின்றது. தங்களைப் போன்று இன்றைய மாணவர்களும் கல்வி கற்று மேல்நிலை அடைய வேண்டும் என்ற நல்லெண்ணமே இதைச் செய்யத் தூண்டு கின்றது. இவ்வாறே விளையாட்டுத் துறையை மேம்படுத்த பழைய மாணவர்கள் உதவியுள்ளனர். அண்மைக் காலங்களில் துடுப்பாட்டம் முதன்மை பெற்றுள்ளது. இவ்விளையாட்டை மாணவர்களிடையே ஊக்குவிக்க கனடாவில் வசிக்கும் திரு. ரகு தேவராஜா, திருமதி. சுகன்யா தேவராஜா அவர்கள் வெற்றி வீரர்களுக்கு கேடயங்கள், பணப் பரிசுகள் வழங்குகின்றனர். படிப்பில் திறமை உள்ளவர்களுக்கும் பரிசுகள் வழங்குகின்றனர். இத்திட்டங்கள் அனைத்தும் அதிபர் திரு. A. அகிலதாஸ் அவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தில் நன்கொடைப் பணம் வைப்பில் இடப்பட்டு வருடா வருடம் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிதியத்தைப் பொறுப் பேற்று நடாத்தும் சபை திறமையாகச் செயற்பட்டு வருகின்றது. அதன் காரண மாக பரிசு வழங்குவோர் இந்நிதியத்தில் பரிசுப் பணத்தை வைப்பில் இடுகின்றனர். இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க் கின்றேன். இத்தகைய தயாள குணம் படைத்தவர்கள் பாராட்டப்பட வேண்டி யவர்கள். எனவே மாணவர்கள் இவ்வசதி களைப் பயன்படுத்தி முழுமையான கல்வியறிவைப் பெற்று வெளியேற வேண்டும்.

கல்லூரியின் அருகேயுள்ள தங்கள் இல்லத்தையும் அது சார்ந்த 5இலாச்சம் 9.63 குழி பரப்பளவுள்ள காணியையும் பழைய மாணவன் திரு. N. P. தேவராஜா, அவர் துணைவியார் பழைய மாணவி திருமதி. இந்திராணி தேவராஜா அவர்களின் புதல்வி பழைய மாணவி திருமதி. சொரூபி இராமகிருஷ்ணனும் அவரது கணவர் திரு. V. இராமகிருஷ்ணன் அவர்களும் பாட சாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இது பாடசாலைக்குக் கிடைத்த அரும்பெரும் கொடையாகும். இதன் தொடர்ச்சியாகத் துடுப்பாட்ட வீரர்களுக்கு பணப் பரிசுகள், கேடயங்கள் வழங்க திரு. திருமதி ரகு, சுகன்யா தம்பதியினர் நம்பிக்கை நிதியத்தில் ஒரு தொகைப் பணத்தை வைப்பிலிட்டிருக்கின்றனர். 2008 ஆம் ஆண்டிலிருந்து இப்பரிசு வழங்கல் நடைமுறையில் உள்ளது. இப்பரிசுகள் துடுப்பாட்டத்தை மேம்படுத்த உழைத்த ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக வழங்கப்படுகின்றன.

துடுப்பாட்டத்தைக் கல்லூரியில் 1951 இல் ஆரம்பித்து வைத்த எம் ஆசிரியர் திரு. V. C. இராமநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாகவும் அவருக்குப் பின் துடுப்பாட்டத்தைப் பொறுப்பேற்று போட்டிகளில் வெற்றியீட்டக் காரணமாக இருந்த திரு. C. பாலகிருஷ்ணன் அவர்களைக் கௌரவிக்குமுகமாகவும், அவருடன் இணைந்தும் பின் தனியாகவும் விளை யாட்டுத் துறையை மேலும் உயர்வடையச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த திரு.V. கணேஷலிங்கம் அவர்களைக் கௌரவிக்கவும், எம் மாணவன் திரு.V. பவசிங், (திறமையான பந்து வீச்சாளர், பயிற்றுனர்) ஞாபகார்த்தமாகவும், திரு. ரகுவின் தந்தையார் திரு. N. P. தேவ ராஜாவின் ஞாபகார்த்தமாகவும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. 13, 15, 17, 19 வயதிற்குட்பட்ட துடுப்பாட்ட வீரர்களுக் கான பரிசுகள் விபரம் பின்வருமாறு :

1. பாடசாலைகளுக்கிடையேயான துடுப்பாட்டப் போட்டி (each inning)

100 ஓட்டங்கள்	ரூபா	5,000
50 ஓட்டங்கள்	ரூபா	1,000
05 இலக்குகள்	ரூபா	2,000

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக் கிடையேயான துடுப்பாட்டத் தொடரில் அதிகூடிய

மொத்த ஓட்டங்கள்	ரூபா	5,000
மொத்த இலக்குகள்	ரூபா	5,000
அதிசிறந்த துடுப்பாட்ட வீரர் விருது	ரூபா	5,000

(1 run = 1 point, 1 wicket = 10 points, 1 catch = 3 points)

மேற்குறிப்பிட்ட துடுப்பாட்டத் தொட ரில் முதலாவது அல்லது இரண்டாவது இடத்தைப் பெறும் சந்தர்ப்பத்தில் அணிக்கு ரூபா 6,000 வழங்கப்படுகின்றது.

2. இந்துக் கல்லூரிகளுக்கிடையேயான மட்டுப்படுத்தப்படாத பெரும் துடுப்பாட்டப் போட்டிப் பரிசுகள் (each inning)

100 ஓட்டங்கள்	ரூபா	5,200
50 ஓட்டங்கள்	ரூபா	2,000
05 இலக்குகள்	ரூபா	3,000
6உம் அதற்கு மேற்பட்ட இலக்குகள் (both innings)	ரூபா	1,500
அதிசிறந்த துடுப்பாட்ட வீரர் விருது	ரூபா	5,600

உம் சுழல் கேடயமும்

இப்போட்டியில் வெற்றி பெற்றால் அணிக்கும் ரூபா 6,000 வழங்கப்படுகின்றது.

3. இந்துக்களுக்கிடையேயான மட்டுப் படுத்தப்பட்ட (50 overs) போட்டிப் பரிசுகள்

100 ஓட்டங்கள்	ரூபா	5,200
50 ஓட்டங்கள்	ரூபா	2,000
05 இலக்குகள்	ரூபா	3,000
அதிசிறந்த துடுப்பாட்ட வீரர் விருது	ரூபா	5,600

உம் சுழல் கேடயமும்

இப்போட்டியில் வெற்றி பெற்றால் அவ் அணிக்கும் ரூபா 6,000 வழங்கப்படுகின்றது.

4. பாடசாலைகளுக்கிடையேயான வேறு துடுப்பாட்டப் போட்டிப் பரிசுகள் (இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றால்)

அதிசிறந்த துடுப்பாட்ட வீரர் விருது	ரூபா	5,000
(for all matches played) இறுதிப்போட்டியின் "Man of the Match"	ரூபா	1,000
அணிக்கு	ரூபா	6,000

வழங்கப்படுகின்றது.

சில காலங்களின் முன் சதுரங்கம் எம் மாணவர்கள் விளையாடியுள்ளனர். தற்போது இவ்விளையாட்டுக்குப் புதிய உத்வேகம் கொடுத்துள்ளனர் திரு. ரகு, திருமதி சுகன்யா தம்பதியினர். மாணவர்களின் சிந்தனைத் திறன், ஞாபகசத்தி என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் செயற்பட்டு வரும் சதுரங்கக் கழகம் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியில் 13,15,17,19 வயதுப் பிரிவுகளில் ஆண்கள், பெண் களுக்கான போட்டிகளை நடாத்தி முதல் மூன்று இடங்களைப் பெறுகின்ற இல்லங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் வழங்கி பெருமை சேர்த்து வருகின்றது. இப்பரிசுகளை திரு. திருமதி. ரகு, சுகன்யா தம்பதிகள், திரு. N. P. தேவராஜா ஞாபகார்த்தமாக வழங்குகின்றனர்.

இத்துடன் வருடாந்த பரிசளிப்பு விழாவையொட்டி திறந்த போட்டியாக இரு பாலாருக்கும் தனித்தனியே வயது வேறுபாடின்றி போட்டி நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பின்வரும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

- ♣ முதலிடம் பெற்ற மாணவன், மாணவிக்கு தலா ரூபா 5,000, சுழல் கிண்ணம், வெற்றிக்கிண்ணம், சான்றிதழ்
- ♣ இரண்டாம் இடம் பெற்ற மாணவன், மாணவிக்கு தலா ரூபா 2,500, சான்றிதழ்
- ♣ மூன்றாம் இடம் பெற்ற மாணவன், மாணவிக்கு தலா ரூபா 1,250, சான்றிதழ்
- ♣ அடுத்துவரும் பன்னிரெண்டு வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் (ஆண், பெண் தனித்தனியாக) தலா ரூபா 500, சான்றிதழ்.

மேற்குறிப்பிட்ட சதுரங்கப் போட்டிப் பரிசுகள் பழைய மாணவியும் (1927 - 1937), நீண்டகால ஆசிரியையும் (1942 - 1980), பிரதி அதிபருமான (1981 - 1983) திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்களைக் கௌரவிக்குமுகமாக வழங்கப்படுகின்றன.

மாணவர்களாகிய எமக்கு கல்வியறிவூட்டி நல்வழிகளைப் பின்பற்றச் செய்து நன் மாணாக்கர்களாகக் கல்லூரியை விட்டு வெளியேறச் செய்த நல்லாசிரியர்களை பேரன்புடனும் நன்றியுடனும் நினைவு கூருகிறேன். அவர்களுள் திரு. S. பாலயோகன், அமரர் திருமதி. S. பாலயோகன், திரு. K. சந்திர மௌலீசன், திரு. A. பஞ்சலிங்கம் முக்கிய மானவர்கள். மாணவர் சமுதாயத்தில் ஒழுக்கம் மிக அவசியம். இதை மாணவர்களிடம் ஏற்படுத்த திருமதி. சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம், திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா, திருமதி. ஞானாம்பிகை மணிவாசகம் ஆகியோர் பெரிதும் உதவினர். வழிகாட்டிகளின் தலைவியாக திருமதி. நித்தியலக்ஷ்மி குணபாலசிங்கம், திருமதி. கனகாம்பிகை திருநாவுக்கரசு ஆகியோரும், பெண்கள் விளையாட்டுத் துறை ஆசிரியையாக திருமதி. சரஸ்வதி ஏகாம்பரமும் எம்மை வழிநடத்தினர்.

இவ்விடயங்கள் அனைத்தையும் மனதில் பதித்து எம் ஆசிரியர்களைச் சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன். எம் கல்லூரி மேலும் வளர்ச்சியடைந்து எம் சிறார்களை நற்பிரஜைகளாக்க எம் கல்லூரியின் காவல் தெய்வம் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருளை வேண்டி நிற்கிறேன்

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kokuvil Hindu And Concept of A Balanced Curriculum

Prof. Saba Jeyarasa

The concept of a balanced curriculum has been realized by Kokuvil Hindu long before the introduction of a Balanced Curriculum in Sri Lanka in the year 1972. A balanced curricular development needs to draw analyses of society and culture studies the learner and the learning process and analyses of the nature of the knowledge in order to determine the purpose of the school and the nature of the curriculum. Considering the above theoretical base late Mr. S. Handy Perinpanayagam had introduced a balanced curriculum in Kokuvil Hindu College in 1950.

The Hindu movement in education emphasized the creative role of education in society by stressing the development of a creative individual.

This point of view was implemented by centering educational effort on the development of all the powers of the individual and specially on the creative imagination, freedom, right to self discovery and emotional power. The balanced curriculum is the only means to achieve a balanced personality which promotes creative self expression, individuality, activity, and development from within.

The Hindu educational movement throws light on the following curricular outcomes.

1) *The development of effective ways of thinking.*
2) *Improved physical health.*
3) *Improved emotional stability.*
4) *The acquisition of important information and ideas.*
5) *The development of cognitive and aesthetic experiences.*
6) *The development of increased sensitivity to social problems.*
7) *The formulation and clarification of the Hindu philosophy of life.*

The school curriculum like any activity, is directed by the expectations of certain outcomes. If the curriculum is to be plan for outcomes, its content and learning experiences need to be organized. The followed is probably one of the most potent factors in determining how learning proceeds. The curricular organization should preserve and protect both the logic of the subject matter and the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

psychological sequence of the learning experiences. Different individuals need different types of learning activities for their self development.

The Balanced Curriculum is essentially an effort to overcome the limitations of the traditional curricular designs. The main advantage of the Balanced Curriculum is that it permits a greater integration of the subject matter. Its design is planned specifically to counteract the passivity and sterility of learning and the isolation from the needs and interests of children of the conventional curriculum.

The most serious weakness of the traditional concept of subject curriculum is that its detachment from the social reality. The weakness was pointed out by late Mr. S. Handy Perinpanayagam. Based on Gandhian educational principles he introduced various life skill activities in the school.

The earlier form of subject curriculum did overstress the learning of details, ; paid little attention to the development of active thought processes.

A balanced curriculum development is more than a pedagogic response. It has political, ideological, social and economic implications. For Balanced curriculum theorizing, there are many objects and processes to theorize about.

1) *Curriculum development*
2) *Curriculum operations*
3) *Curriculum evaluation*
4) *Curriculum materials*

Late Mr. Handy Perinpanayagam attempted to do some of the ideas mentioned above, and linked what has transpired with Gandhian ideas and problems which in turn benefitted the development of Kokuvil Hindu College.

A more complex view of the Balanced Curriculum is needed if the teacher is to do justice to the content and the learner. Late Mr. Handy Perinpanayagam emphadized the following elements in the Balanced Curriculum.

- *(a) Objectives*
- *(b) Content*
- *(c) Methods*
- *(d) Evaluation and feed back*

The elements are closely interrelated and each elements influenced by and influences the others. The following are the main dimensions of the objectives.

- *(a) Information about the level of development of the pupils, their needs and interests.*
- *(b) Social conditions and problems which the children are likely to encounter.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(c) *The nature of the subject matter and the types of learning which can arise from the study of the subject matter.*

how the pupil learns. Methods like objectives are constrained by a large number of factors. The do not exist independently of the context in which they are employed.

Content of the Balanced Curriculum covers, Science, Arts, Aesthetic and Handicraft subjects. The organization of the content stems form the structure of the disciplines and the ways of thinking these disciplines embody. The integration of content concerns the relationship between the learning in various areas of the curriculum.

In selecting and organizing the method of achieving curriculum objectives the primary consideration is

Evaluation facilitates teaching and learning and promotes self development and self assessment. If provides continuing feedback into the larger question of curriculum development and educational policy.

Many of the key themes of curriculum emphasized by late Mr. Handy Perinpanayagam remain with us in education to the present knowledge economic context. His thoughts are dynamic and inspiring.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டவர் வழக்காற்று வகைமைகளின் இருப்பில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்

கலாநிதி க. விசாகரூபன்
M.Phil (Jaffna),
Ph.D (Thanjavour)

முன்னுரை

தமிழ் மக்களிடையே பன்னெடுங் காலமாகத் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்த நாட்டார் வழக்காறுகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருவதைப்பார்க்க முடிகிறது. இவ்வழக்காற்று வகைகள் பலவும் பல்வேறு வகையான மாற்றங்கள் மற்றும் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றன.

உலகளாவிய நிலையில் நின்று பார்க்கும்போது இவ்வாறான சவால்கள் வெறுமனே தமிழ்நாட்டார் வழக்காறு களுக்கு மட்டும் பொருந்துவதாக அமையாது உலகின் பல்வேறு இனங்களின் சுதேசியப் பண்பாடு ர் ந்த வழக்காற்று வகைமை களுக்கும் ருந்துவதாகவே உள்ளமை கருதத்த ம்.

தமிழர் பண்பாட்டில் நாட்டார் பண் பாட்டு வகைமைகள் பெறும் முக்கியத்துவ மான வகிபங்கானது (role) இவ்வழக்காற்று வகைமைகளைச் செழுமையுடன் தக்க வைத்துக் கொள்வது தொடர்பான புலமைச் சிரத்தையினை இது தொடர்பான ஆய்வா ளர்களிடையே அண்மைக்காலமாக ஏற் படுத்தி வருகிறது. பண்பாட்டு சமூகவியல், இலக்கியம் மற்றும் மானுடவியல் முதலான ஆய்வுப்புலங்களில் அடிப்படைத்தரவு களாக அமையக்கூடிய இவ்வழக்காற்று வகைமைகள் ஒரு இனத்தின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதிலும் கணிசமான பங்கை அளிக்கக் கூடியனவாகும்.

விபரண ஆய்வு முறையியல் சார்ந்து வருகின்ற இக்கட்டுரையானது யாழ்ப் பாணக்குடாநாட்டின் பல்வேறு பிரதேசங் களிலும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுத் தரவுகளின் வழியே இவ்வழக்காற்று வகைமைகள் எதிர்கொள்ளும் சவால்களை முறைப்படுத்தி அவற்றை உயிர்த்துடிப்புடன் தக்க வைப்பது தொடர்பான தீர்வுகள் சில வற்றையும் முன்வைப்பதாக அமைகிறது.

நாட்டார் வழக்காற்று வகைகள் எனும் போது அவற்றுள் வாய்மொழிசார் நாட்டார் வழக்காறுகள் (verbal folklore), வழக்கங்கள் சார்ந்த நாட்டார் வழக்காறுகள் (customary folklore), பொருள்சார்ந்த நாட்டார் வழக்க காறுகள் (material folklore) என்பன உள்ள டங்குகின்றன. மேலே குறிப்பிட்ட வகைப் பாடுகளைச் சார்ந்து வருகின்ற நாட்டார் பேச்சு முறைமைகள், மரபுவழித் தொடர்கள், வாக்கிய அமைப்புக்கள், பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள், இசைமரபுகள், நாட்டுப்புறநம்பிக்கைகள், நாட்டுப்புற பழக்கங்கள், விழாக்கள், நாட்டார் நடனங்கள், நாடகங்கள், சைகைகள், நாட்டுப்புற விளை யாட்டுக்கள், நாட்டார் கட்டடக்கலை, கைவினைப் பொருட்கள், கலைகள், ஆடைகள், உணவு நடைமுறைகள் முதலான கேள்விப்புல மற்றும் பார்வைப்புல வழக்காற்று வகைமைகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

நாட்டார் வழக்காற்று வகைமைக்குச் சவால் விடுகின்ற காரணிகளாகப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைச் சுட்ட முடியும். பொதுநிலையில் பார்க்கும்போது சமகால அரசியல், சமூகம், அறிவியல், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் சமயம் முதலானவற்றில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு விதமான வளர்ச்சிகள், மாற்றங்கள் குறித்த இனத்தின் பண்பாட்டு வேர்களை, அந்த இனத்தின் தனித்துவங்களை மிகவும் பாதிப்பனவாக அமைந்து காணப்படுகின்றன. இவற்றை வருமாறு வகைப்படுத்தி நோக்க முடியும்.

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் அழிவுக்கான காரணிகளைப் பிரதானமாக இரண்டு வகையாகப் பகுத்து நோக்கலாம், அவையாவன

1. இயற்கை அழிவு
2. செயற்கை அழிவு

மேலே சுட்டிய இரண்டு விதமான வகைப்பாடுகளுக்குள்ளும் பல்வேறு காரணிகளைச் சுட்ட முடிகிறது.

1.1 இயற்கை அனர்த்தங்கள்

வழக்காறுகள் இயற்கையாகவே அழிந்து போதல் என்பது குறித்த விடயப் பரப்பால் நிலநடுக்கம், சூறாவளி, வெள்ளப் பெருக்கு, எரிமலை வெடிப்பு முதலானவை முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றின் சிலவகையான அழிவுகள் எமது பௌதீக மற்றும் புவியியல் அமைப்புக்காரணமாக எமக்குத் தொடர்பில்லாதவையாக இருக்கலாம். ஆயினும் இவை தவிர்ந்த பிற அழிவுகளுக்கான சாத்தியப்பாடுகள் நிறையவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "சுனாமி" (tsunami) என்ற கடல்கோள் தொடர்பான அனுபவத்தை நாம் நேரடியாக அனுபவித்த போது அது எமது சமூக,பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் ஏற்படுத்திய தாக்கங்களையும் நாம் உணர்ந்து கொண்டோம். கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலே கடல்கோளைப் பார்த்திருந்தவர்களுக்கு சுனாமியால் வடக்குக் கிழக்கின் பாரம்பரியமான பூர்வீகக்கிராமங்கள் பலவும் அவற்றின் வழக்காறுகளுடன் கழுவப்பட்டுப் போனதைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. செம்மலை, நாயாறு, முல்லைத்தீவு, பொக்கனை, மாத்தளன், தாளையடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நாகர்கோவில், செம்பியன்பற்று முதலான மீனவக்கிராமங்கள் பலவும் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பு அவர்களின் சுதேசியப் பண்பாட்டு அடையாளங்களையும் விட்டுவைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ்வகையான எதிர்பாராத இயற்கை சார்ந்த அனர்த்தங்களினால் வழக்காறுகள் பலவும் அவற்றைப் படைப்போருடன் சேர்த்து அழிந்து போவது சாத்தியமாகிறது.

1.2 கையளிப்புக் குறைபாடு

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பாரம்பரியத்தின் கையளிப்புக் குறைபாடும் ஒரு காரணமாகும். வழக்காற்று வகைமைகள் தொடர்பான கையளிப்பை அல்லது பரிமாறலைத் தொடர்ந்து வரும் தலைமுறையினரிடம் கையளிக்க எம்முன்னோரில் பலரும் தவறி விட்டனர். சோதிடம், மருத்துவம், கைவினைக்கலைகள் மற்றும் பலவகைக் கலைப்பயிற்சிகள் முதலானவை தொடர்பான தெளிவான தகவல்களைத் தமது சொந்தப் பிள்ளைகளுக்கே முழுமையாகக் கையளிப்பதை எம் முன்னோரில் பலரும் திட்டமிட்டுத் தவிர்த்திருக்கின்றனர். முழுமையாகக் கற்றுக் கொடுத்தால் தமது தனித்துவம் இழக்கப்பட்டுவிடும் என்ற ஒரே காரணத்துக்காகப் பராம்பரியமாகப்பேணி வந்த பல்வேறு விடங்களை இவர்களில் பலரும் தம்முடனேயே கொண்டு சென்று விட்டனர். முறையான பயிற்சியின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடம், மருத்துவம் தொடர்பான குறியீட்டு வாசகங்களை (code word) விளங்கிக் கொள்ள முடியாதென்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக தீப்புண்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சை முறை குறித்த குறியீட்டு வாசகத்தை இவ்விடயத்தில் வகை மாதிரியாகத் தருதல் பொருத்தமானதாகும். வாசகம் வருமாறு

"தாயைக் கொன்றான் சாறெடுத்து
தடவிக் கொண்டால் தீர்ந்திடுமே"

பாடலில் வரும் தாயைக் கொன்றான் என்ற சொற்றொடர் குறித்துநிற்கும் தாவரத்தின் வெளிப்படையான பெயர் என்ன என்பது சிக்கலான விடயமாக உள்ளது. மேற்படி சொற்றொடர் வாழை மரத்தையே சுட்டி நிற்கிறது. குலையீன்ற வாழை ஈற்றில் தன்னையே இழந்து கொள்வது வழமையாகும். இப்படிப் பல்வேறு குறியீட்டு வாசகங்கள் பாரம்பரிய மருத்துவம் மற்றும் சோதிடம் முதலான வழக்காறுகளில் பயில் நிலையில் இன்றும் இருந்து வருகிறது.

1.3 கையளிப்பு ஊடகக் குறைபாடு

வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பண்பாட்டில் முன்னர் பயில் நிலையில் இருந்த கையளிப்பு ஊடகங்களின் பலவீனமான தன்மைகளும் ஒரு வகைக்காரணம் எனலாம். குறிப்பாக எழுத்து நிலைப்பட்ட பதிவுகள் பலவற்றுக்கும் நாம் பனை ஓலையையே நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பனையோலையிலேயே சோதிடம், மருத்துவம், வானியல், மற்றும் இலக்கியங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களும் பதிவு செய்யப்பட்டன. குறைந்தது ஐம்பது வருடங்களே தாக்குப் பிடிக்கக்கூடிய இப்பனையோலைச் சுவடிகளைத் தொடந்து வரும் சந்ததிகளுக்குக் கையளிப்பதில் பல்வேறு சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டன. நாம் பனையோலையைப் பயன்படுத்திய காலகட்டங்களில் உலகின் பிற பண்பாடுகள் பலவும் மரப்பட்டை, மிருகத்தோல், சுடுமண் கட்டிகள் முதலான ஊடகங்களைப் பயன்படுத்தி வந்தமையை இவ்விடயத்தில் சுட்டுதல் வேண்டும்.

1.4 வழக்காற்றைப் படைப்போரின் தாழ்வுணர்ச்சி

வழக்காற்றைப் படைப்போரிடத்துக் காணப்படுகின்ற தாழ்வுணர்ச்சி, ஈடுபாடின்மை, மறதி, குழப்பம், தொடர்ச்சியான பயில்வின்மை, பொருளாதாரச் சிக்கல்கள் முதலானவையும் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டுப்புற மக்கள் பலரும் தம்மிடையேயுள்ள தனித்துவத்தை வினைத்திறனை உணர்ந்தவர்களாகப் பலபோது இருப்பதில்லை. இன்றைய இளந்தலைமுறையினரிடத்துப் பல்வேறு வழக்காறுகளைப் படைப்பது குறித்த பயிற்சி இன்மை பரவலாகக் காணப்படுகின்றது. வகைமாதிரியாக

- பாய்பின்னுதல் (பலவகைப் பாய்கள், தடுக்கு, பந்திப்பாய், களப்பாய், புற்பாய்)
- சுளகு, பெட்டி முடைதல் (பலவகைச் சுளகு, மூடல்பெட்டி, அடுக்குப்பெட்டி, நீத்துப்பெட்டி, பனங்கட்டிக்குட்டான்)
- பனைமட்டை வரிச்சு
- பனையோலைப் பதப்படுத்துனை (ஓலைத்தெரிவுநுட்பம், பதப்படுத்துகை, வார்தல்நுட்பம், சாயமூட்டுதல், பனையேலை வேய்தல்.)
- பட்டை இழைத்தல் (துலாப்பட்டை, கைப்பட்டை, பீலிப்பட்டை.)

முதலான பொருள்சார் வழக்காறுகளைப் படைக்கும் திறன் அருகிவருகிறது. பண்ணாட்டுக்கலாசாரப் பின்புலத்தில் நாட்டார் பண்பாடு சார்ந்த உற்பத்திகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை (demand) மற்றும் சந்தைவாய்ப் புக்கள் (marketing facilities) பெருகியுள்ள சூழலில் இவற்றைப்படைக்கூடிய வினை யாளர்களைத் தேடிப்பிடிப்பது கடினமாக உள்ளது. தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு முதலான பெரு நகரங்களில் தமிழர்களின் பாரம்பரிய உணவு தொடர் பான விளம்பரங்கள் வெகு கவர்ச்சியாக காட்சிப்படுத்தப்பட்டு வருவதை இவ்விட யத்தில் குறிப்பிடலாம். குறிப்பாக கூழ், அதனுள் அடங்கியுள்ள பல்வேறு கடல்சார் உணவுகளின் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வழக்காற்று வகைமைகளைப் பாரம் பரியமாகப் பேணுவதைச் சிலர் தாழ்வுணர் வாகக் கருதுகின்றனர். தமது 'அடிப்டைச் சின்னமாக' இவ்வழக்காற்று வகைமைகள் சிலவற்றை இவர்கள் பார்க்கின்றனர். ஆற்றுகைக் கலைகளை இவ்வாறான தாழ்வுணர்ச்சிக்கான பொருத்தமான எடுத்துக்காட்டுக்களாகச் சுட்ட முடியும். பறைமேளம் அடித்தல், உடுக்கு அடித்தல், கூத்தாடுதல், கூத்துப்பழக்குதல் முதலான வற்றைத் தொடர்ந்து செய்வதினால் சமூக அதிகார அடுக்கமைவினால் தமக்கான இடம் மேலும் பின்தள்ளப்படும் என்றே இவர் களில் பலரும் நம்புகின்றனர். கூத்தாடிகள், சின்னமேளம், ஆட்டக்காரர்கள், நாடகக் காரர் முதலான பட்டப் பெயர்கள் (nickname) தாங்கி நிற்கும் சமூகப் பொருண் மைகளையும் இவ்விடத்தில் இணைத்துப் பார்த்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வழக்காறுகளைப் பேணுதல், பின்பற்றுதல் என்பது தமது அடையாளத்தைத் தாமே மீண்டும் புதுப் பித்துக் கொள்வதாக இக்கலைஞர்களில் பலரும் கருதுவதால் பல்வேறு கலைகளும் தொடர்ச்சியான பயில்வு இன்றி இயற் கையாக அழிந்து போகக் காரணமாகிறது. மிருதங்கத்தைப் பயில்வதில் காணப்படும் ஆர்வத்தை மத்தளத்தைப் பயில்வதிலோ அல்லது பறைமேளம் அல்லது தவிலைப் பழகுவதிலோ காணமுடியாது. சாஸ்திரீய நிலைப்பட்ட கருவிகளைப் பயில்வதில் சமூக அந்தஸ்திலும் செல்வாக்குச் செலுத்துவ தாகக் காணப்படுகிறது.

1.5 வழக்காற்றும் பயில்வின் குறுகிய வட்டம்

தமிழர் பண்பாட்டிலுள்ள நாட்டுப் புறக்கலைகள் பலவும் துர்அதிஷ்டவசமாக சிலவகையான சாதிக் குழுக்களிடம் தலை முறை தலைமுறையாக அடைக்கலம் கொண்டுள்ளமை இவ்விடயத்தில் குறிப் பிடத்தக்கதாகும். இவ்வகைப் பயில்வுக் கான வகைமாதிரியான எடுத்துக்காட்டாகக் காத்தவராயன் கூத்தைக் குறிப்பிட்ட முடியும். கலைப்பயில்வையும் சமூகவிடு தலையையும் ஒன்றாக முடிச்சுப்போடும் முயற்சி இவ்வகைக்கலைகளின் அருந்தலுக்கு மேலும் உரமூட்டி வருகிறது.

1.6 நவீன உற்பத்திகளுடன் போட்டிபோட முடியாமை

பொருள்சார் நாட்டார் வழக்காற்றுவகை மைகளைப் படைக்கும் பலரும் இன்று அவற் றைப்படைக்கும் முயற்சியை வேகமாகக் கைவிட்டு வருகிறார்கள். நவீன தொழில் நுட்ப உத்திகளை உள்வாங்கி கவர்ச்சிகர மாகச் சந்தைகளில் உலாவி வரும் நவீன உற்பத்திகளுடன் பாரம்பரியமான தொழில் நுட்பங்களைத்தாங்கி வரும் நாட்டுப்புற பொருள்சார் உற்பத்தி வகைமைகளால் போட்டிபோட முடியாதிருக்கின்றது. பிளாஸ்ரிக், அலுமினியம், இரும்பு முதலான பல்வகையான உலோகங்களிலான புழங்கு பொருட்கள் பலவும் மரபுசார் புழங்கு பொருட்கள் பலவற்றுக்கும் சவாலாக உள்ளன. பிளாஸ்ரிக் கதிரை, பிளாஸ்ரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய், பிளாஸ்ரிக் சட்டிகள், பிளாஸ்ரிக் சுளகு, நவீன வர்ணக்குழப்புகள், நவீன உணவு வகைகள் 'கொக்கோகோலா', 'பெப்சி', 'பன்ரா' முதலான நவீன குளிர் பானங்கள் முதலானவற்றுடன் ஓலைப் பாயும், ஈக்குச் சுளகும், கோழிச்சாயமும், புழுக்கொடியல் மாவும், ஒடியல் மாவும், பனாட்டும், மோரும், பழங்களுஞ்சியும் போட்டிபோடுவதென்பது சிக்கலான விடயமாக உள்ளது.

பருத்தித்துறை நகரை அண்டியிருந்த ஓடக்கரைப் பலகாரக்கடைகள் பலவும் இன்று மூடுவிழாக் கண்டு வருகின்றன. சில கடைகளின் 'துவாரங்கள்' சீமெந்துக் கலவைகள் கொண்டு நிரந்தரமாக அடைக்கப்பட்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். பாரம்பரிய உணவுகள் மீதான நாட்டமின்மையும் பலகாரம் சுட்டு நிற்கும் பிழைப்புக் குறித்த சமூக அந்தஸ்து நிலைப்பாடும் இவ்வகைச் சிறு கைத்தொழில் முயற்சிகளைப் பாதித்து வருவதனைப் பார்க்க முடிகிறது.

2 செயற்கையான அழிவுகள்

செயற்கையாக நாட்டார் வழக்காற்று வகைமைகள் அழிந்து போவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அவற்றை வருமாறு நோக்கலாம்.

2.1 உற்பத்திச் செயற்பாடுகளில் நவீன கருவிகளின் வருகை

நாட்டார் வழக்காற்று வகைமைகள் பலவும் நவீன கருவிகளின் வரவால் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக விவசாயம், மீன்பிடி, கைவினைத் தொழில் முதலான செயற்பாடுகளில் ஆரம்ப காலகங்களில் நவீன கருவகளைப் பயன்படுத்துவது அருந்தலாகவே காணப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பலருங்கூடி இவ்வேலைகளைச் செய்து வந்தார்கள். இவ்வகையான உற்பத்தி முயற்சிகளின் போது பாரம்பரியத் தொழில்நுட்பத்துடனான கருவிகளின் பயன்பாடு மற்றும் அக்கருவிகளின் உற்பத்தியும் அதிகரித்திருந்தது. அத்துடன் வாய்மொழி சார்ந்த கலை வடிவங்களுக்கான பயில்நிலைச் சாத்தியமும் பாரம்பரியத் தொழில் முயற்சிகளில் அதிகமாகவே இருந்தது.

வயற்களங்களில் வேலை செய்யும்போது ஆண்கள்பாடும் பாட்டும் பெண்கள் எதிரிப் பாட்டுப் பாடுதலும், பழமொழி சொல்லுதலும் விடுகதைபோடுவதும் என வயற்களமே கலகலத்திருந்தது. பலர் சேர்ந்து தோணியைக் கடலினுள் பாய்ச்சும்போதும் அதனை மீண்டும் கரையேற்றும் போதும் வலையிழுக்கும் போதும் ஏலேலோப் பாட்டுக்களைப் பாடினர். இத்தகைய தொழில்சார்ந்த ஆழ்நிலைகள் வாய்மொழிக்கலைகளின் செழிப்பான இருப்புக்கு வாய்ப்பாக அமைந்திருந்தன.

புராண இதிகாசக்கதைகளையும் நாட்டுப்புறக்கதைகளையும் கேட்டுக் கொண்டு சுருட்டுச்சுற்றவும் பிற கைவினைக் கலைகளை இயற்றவும் முடிந்த சூழலை இன்றைய "சூஆ வானொலி" முற்றாகத் தலைகீழாக புரட்டிப்போட்டுள்ளது.

வயல்வேலைகளில் நீர்ப்பம்பிகளும் (water pump), உழவு இயந்திரங்களும் (tractor) முழுமையாக ஈடுபடுத்தப்படுத்தப் படுகின்றன. இவற்றின் பல்முனைப்பயன்பாடு (multiple use) மனித வளத்தின் பயன்பாட்டினைக் கணிசமாகக் குறைத்துள்ளது. நீரிறைத்தல், அருவிவெட்டுதல், சூடடித்தல், விளைபொருட்களை வீட்டுக்குக் கொண்டு வருதல் என அனைத்து வேலைகளையும் மேற்படி இயந்திரங்களே செய்து வருகின்றன. பலர் சேர்ந்து வலையை இழுக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியை விசைப்படகின் இயந்திரம் ஒன்றே சாதித்து விடுகிறது. இத்தகு நவீன முயற்சிகள் இத்தொழில்களுடன் சேர்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகள் பலவற்றையும் இல்லாது ஒழித்துவிடுகிறது.

பொருளாதார அடிக்கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நவீனமயப்படுத்தல்கள் சுதேசியப் பொருளாதாரக் கட்டமைப்புக்களோடு சேர்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகளை மிகவும் நலிவடையச் செய்கின்றன எனலாம்.

2.2 புலப்பெயர்வு

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் பாரம்பரியத் தொழில்களைப் புரிவதில் உள்ள அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நலக் குறைவு முதலியன காரணமாக பன்னாட்டு மற்றும் தொழில் வினையாளர் வளரும் வேகமாகத் தமது பூர்வீகக் கிராமங்களைவிட்டுப் புலம் பெயர்ந்து வருகிறார்கள். வழக்காறுகளை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லவேண்டிய இளந்தலைமுறையினர் பலரும் பெருவாரியாகப் பிற நாடுகளில் நிரந்தரமாகத் தங்கி விடுவதும் இவ்வகையான வழக்காறுகளின் வழக்கிழப்புக்குக் காரணமாகி விடுகிறது.

கொழும்பு மத்திய கிழக்கு நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகள் முதலாக இவர்களின் புலப்பெயர்வு அமைந்து காணப்படுகிறது. உயிர்ப்பாதுகாப்பு பொருளாதார மேம்பாடு முதலானவற்றை மட்டும் முன்னிறுத்தாது சமூக அந்தஸ்தையும் முன்னிறுத்தி இத்தகைய புலப்பெயர்வுகள் நடைபெற்று வருகின்றன. இதனால் பன்னாட்டுக் கலாசாரங்களும் தமிழர் பண்பாட்டில் ஊடுருவ வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளமையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

2.3 சமயம்

வழக்காற்று வகைமைகள் பலவற்றின் வழக்கிழப்பிற்கு சமயமும் ஒருவகைக் காரணம் எனலாம். சமயம் என்னும்போது பிறமத ஊடாட்டம், சமஸ்கிருதமயப் பயன்பாடு வழிபாட்டு மரபுகள் மீதான மாறுதல்கள் முதலானவற்றை குவிமையப்படுத்த முடியும்.

சைவசமயத்தை மையப்படுத்திய தமிழ்நாட்டார் வழக்காற்று வகைமைகளில் அதிகம் பாதிப்பை உண்டுபண்ணிய மதம் கிறிஸ்தவ மதமே எனலாம். கல்வி, தொழில் வாய்ப்பு, பொருளாதார நலன்கள், சமூக அந்தஸ்து முதலான காரணிகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகள் சுதேசியப்பண்பாட்டு வழக்காற்று வகைமைகளில் பாரிய எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தி வருகின்றன. கவர்ச்சிகரமான இழுப்புகளுக்கு ஆட்பட்டுச் செல்வும் மக்களில் பலரும் புதிய மத அனுட்டான நடைமுறைகளுக்கும் பழக்கப்படுத்தப்படும்போது தலைமுறை தலைமுறையாகப் பேணிவந்த மதநம்பிக்கைகள் அது தொடர்பான வழக்கங்கள், வழிபாட்டு மரபுகள் மற்றும் சடங்குகள் முதலானவற்றை மறுதலித்தே வெல்கிறார்கள். இதனால் மேற்படி மரபுகளுடன் இயைந்து வளர்த்தெடுக்கப்பட்ட வழக்காறுகள் கைவிடப்படுகின்றன அல்லது மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன எனலாம்.

காத்தவராயன் கூத்து, கோவலன்கூத்து, உடுக்கடிப்பாடல், கரகம், காவடி முதலான ஆற்றுகைக்கலைகள் பலவும் சைவசமயச் சூழலைச் சார்ந்தே பயிலப்பட்டு வருகின்றன. சுதேசிய மக்கள் கிறிஸ்தவத்திற்கு மாறியதன் பின்னர் இவ்வழக்காறுகள் பலவும் கைவிடப்பட்டுள்ளன. தவிர பாரம்பரியக் கலை வடிவங்களின் உள்ளீடுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதம் தொடர்பான விடயங்கள் புகுத்தப்பட்டும் பயிலப்பட்டும் வருவதனையும் பார்க்க முடிகிறது. தவிர மதம் மாறுகின்ற போது ஏலவே கைக்கொண்டிருந்த மதம் தொடர்பான நம்பிக்கைகள், ஆசாரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு மரபுகள் முதலானவை கேள்விக் குறியாகின்றது.

சமஸ்கிருத மயப்பாடும் நாட்டர் வழக் காற்று வகைமைகளின் வழக்கிழப்பிற்று ஒருவகைக் காரணமாக இருந்து வருகிறது. நாட்டுப்புற வழிபாட்டில் இருந்த சிறு தெய் வக்கோவில்கள் பலவும் இன்று வேகமாக சமஸ்கிருதமயப்படுத்தப்பட்டு வருவதனைப் பார்க்க முடிகிறது. 'விளக்கு வைத்து' வழி பாட்டிலிருந்த சிறு தெய்வக் கோவில்கள் ஆக நிலைப்படுத்தப்பட்டபோது அது வரையும் அத்தெய்வங்கள் தொடர்பாக நடைபெற்றுவந்த வழிபாடடு மரபுகள் நம்பிக்கைகள், சடங்குகள் முதலானவை உள்ளிட்ட பல்வேறு மரபுகளும் மாற்றம் பெறுகின்றன அல்லது வழக்கிறக்கின்றன எனலாம். உயர்மரபுக்குள் நாட்டுப்புறத் தெய்வங்கள் கொண்டுவரப்படும்போது அடியவனுக்கும் ஆண்டவனுக்குமான இடைவெளி அதிகரிக்கின்றது. நாட்டுப்புற நிலையில் பல்வேறு விதமான சடங்குகள் மற்றும் வழிபாட்டு மரபுகளூடாகத் தெய் வங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்த பூசாரியும் நாட்டுப்புற மக்களும் அவ் வகையான தொடர்புகளுக்கு பிராமணன் என்ற ஊடகத் தொடர்பாளரை (mediator) தொடர்புகொள்ள தேவை வருகிறது.

அண்ணமார், பிடாரி, காளி, முனி, வைரவர், விறுமன், ஐயன், கண்ணகி முதலான கிராமியத்தெய்வங்கள் சமஸ்கிருதமயப் பாட்டில் பிள்ளையார், முத்துமாரி, முனீஸ் வரன், ஞானவைரவர், இராஜராஜேஸ்வரி முதலான புதிய பெயர்களைப் பெறுவதுடன் நாட்டுப்புற மரபில் வந்த குளிர்த்தி பொங்கல், கூத்துப்போடுதல், மடைபரவல்(மாமிசம் உட்பட), விளக்குவைத்தல், பலியிடல் முதலியனவும் மாற்றம் பெறலாயின. இவ் வாறான மாறுதல்கள் அனைத்தும் இவ்வழி பாட்டு மரபுகளைச் சார்ந்து வளர்த்தெடுக் கப்பட்ட கலைமரபுகளைப்பெரிதும் பாதிப் பனவாகக் காணப்படுகின்றன. ஆகம நிலைப்பட்ட வழிபாட்டு மரபில் நாட்டுப்புற வழக்காற்று வகைமைகள் பலவும் கைவிடப் பட்டுள்ளதனையும் பார்க்க முடிகிறது.

2.4 சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகளின் செல்வாக்கு

தமிழ்மக்களிடையே செந்நெறி மரபு அல்லது பெரும்பாரம்பரிய மரபு சார்ந்த கலைப்பயில்வு தொடர்பான ஈடுபாடு அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வ தனைப் பார்க்க முடிகிறது. தங்கள் பிள்ளை களுக்குப் பரதநாட்டியம், கர்நாடகசங்கீதம், வீணை மிருதங்கம் முதலானவற்றுள் ஒன்றையாவது பயிற்றுவிக்க இம்மக்களில் பலரும் விரும்புகின்றார்கள். உயர்கல்வித் தகைமையுடன் சாஸ்திரிய நிலைப்பட்ட இக் கலைகளுள் ஒன்றிலாவது தம்பிள்ளைகள் ஆட்சிபெற்றிருப்பதை சமூக அந்தஸ்தின் (social status) குறியீடாகவும் இம்மக்களில் பலரும் பார்க்கிறார்கள்.

மேற்படி நிலைப்பாடானது நாட்டார் மரபு சார்ந்த கலைப்பயில்வுகளுக்கான சாத்தியப்பாட்டை நிராகரிப்பதாக உள்ளது. குறிப்பாக நாட்டுப்புற நடனங்களான கும்மி, கோலாட்டம், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகளைப் பலரும் முன் வருவதில்லை. இக்கலை வடிவங்களைப் பயிற்றுவிக்கக்கூடிய வளவாளர்களும் போதிய அளவில் எம்மிடம் இல்லை. கல்வித் திணைக்களத்தினர் 'தமிழ்த்தினவிழா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான நிகழ்வுகளில் இவ்வாறான நாட்டுப்புற நிகழ்கலைகளையும் கட்டாயமாக இடம்பெறச்செய்கிறார்கள். தவிர தைப் பொங்கல், வருடப்பிறப்பு நிகழ்கலைகளைக் கட்டாயமாக இடம்பெறச் செய்கிறார்கள். தவிர தைப்பொங்கல், வருடப்பிறப்பு சிலர் இவற்றை நிகழ்த்துகிறார்கள். இவ்வாறான முயற்சிகள் நாட்டார் வழக்காற்று வகைமைகளின் அழிவைத்தடுத்து நிறுத்தல் போதுமானவை அல்ல என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

நாட்டார் வழக்காற்று வகைமைகளை அவை ஆற்றுகை செய்யப்படுகின்ற இயல்பான சூழலிலிருந்து விடுவித்து நவீன படச்சுட்ட மேடைகளிலும், பிற இடங்களிலும் அறிக்கை செய்யப்படும்போது அவற்றின் உயிர்த்துடிப்பு மற்றும் தனித்துவம் முதலியன பெரும்பாலும் இழக்கப்படுகின்றன என்றே சொல்லலாம்.

இயல்பாகத் தோன்றுகின்ற சூழலில் படைக்கப்படுகின்ற இவ்வழக்காறுகளை ஆய்வுக்காகவும், பிறரை மகிழ்விக்கவும் இன்னும் பலவற்றுக்காகவும் மேடையேற்றுகின்ற போது இவ் வழக்காற்று வடிவங்களினூடே புலப்படுகின்ற பண்பாட்டு அடையாளங்களைத் தரிசிக்க

2.5 பாடவிதானம்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் நடைமுறையிலிருக்கும் கல்விக் கொள்கை மற்றும் பாடவிதானங்களில் குறித்த பிரதேசத்து மக்களின் சுதேசியப் பண்பாடு சார்ந்த வழக்காற்று வகைமைகளுக்கு முக்கியத்துவம் தரப்படாமை இவ்விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட இப்பிரதேசங்களின் பல்கலைக்கழகங்கள் சுட தமிழர் களின் பண்பாட்டு அடையாளங்களையும் பேணித்தக்கவைத்துக் கொள்ளக்கூடிய இவ்வழக்காறுகள் தொடர்பான பயில்வைப் பெரிதும் முனைப்புறுத்தவில்லை என்றே சொல்லாம்.

நாட்டார் வழக்காறுகள் தொடர்பான கற்கைகளுக்கென தனித்துறை எதுவும் இப்பிரதேசத்து பல்கலைக்கழகங்களில் இல்லை என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்கள் சார்ந்த கல்விக்கொள்ளைகளில் பன்னாட்டு நிதிநிறுவனங்கள் குறிப்பாக உலக வங்கி முதலானவை பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. சந்தைக்கேற்ற கல்வி என்ற கொள்கையில் பெரும்பாலும் பொருளாதார நலன்களே முன்னிறுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் முதலாளித்துவத்தின் பொருளாதார இலக்கை திருப்திப்படுத்துவதாகவே இக்கல்விக் கொள்கைகள் அமைந்துள்ளன. நடைமுறையில் இருக்கும் கல்விக்கொள்ளைகள் உயர், சமூக , கலாச்சார விழுமியங்களை உயர்வாகச் சித்தரிப்பனவாக அமைந்துள்ளதால் இவ்வாறான ஒரு சூழலில் கல்வி பயிலுகின்ற மாணவன் ஒருவன் தன்னுடைய சுய அடையாளங்களை இழப்பதற்கான வாய்ப்புக்களே அதிகமாக உள்ளன எனலாம்.

2.5 புலமைச்சிரத்தை ஈடுபாடு

நாட்டுப்புறவியல் அறிஞர்களது புலமைச்சிரத்தையானது பெரும்பாலும் வாய்மொழி வழக்காற்று வடிவங்கள் மீதே குவிந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது. நாட்டுப்புறப் பாடல்கள் கதைகள், விடுகதைகள், பழமொழிகள் முதலான வழக்காறுகள் மீதான ஆய்வுகள் மற்றும் தொகுப்பு முயற்சிகளே அதிகமாக நடைபெற்றுள்ளதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானிக்க முடிகிறது. அத்துடன் இத் துறைசசார்ந்த ஆய்வுகளில்கூட ஆய்வு முறையியலைப் பெருமளவில் பார்க்கமுடிய வில்லை. நாட்டார் வழக்காற்று வகைகளை அவற்றின் சூழலமைவுகளுடன் பொருத்திப் பார்த்து முடிவுக்கு வருவதான ஆய்வுகள் இன்னும் முனைப்புப்பெறவில்லை என்னே சொல்லாம். இத்துறை சார்ந்த நவீன அணுகு முறைகள் மற்றும் ஆய்வியல் நுட்பங்களைப் பயின்று இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்போது இவ்வழக்காற்று வகைமைகளின் புலமை முக்கியத்துவம் தெரியவரும். பொருள்சார் மற்றும் வழக்கங்கள் சார்ந்த வழக்காறுகள் மீதான ஆய்வுலுகளை ஊக்கப்படுத்தவேண்டும்.

2.6 திறந்த பொருளாதாரகொள்கை மற்றும் உலகமயமாதல்

திறந்த பொருளாதாரகொள்கை மற்றும் உலகமயமாதல் என்பன காரணமாக சுதே சிய இனங்கள் பலவும் தமது தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களை இழந்துவரு கின்றன. அனைவருக்குமான ஒரே வகை யான பண்பாடு, பன்னாட்டுப்பண்பாடு ஆகியனவற்றை நேரடியாகவும் மறைமுக மாவவும் மேற்படிகாரணிகள் செயற்படுத்தி வருகின்றன.

ஒற்றைப்பண்பாடு குறித்த திணிப்புக்கு நாட்டார் வழக்காற்று வகைமைகள் குறிப் பாக நாட்டார் கலை இலக்கிய மரபுகள் பெரிதும் பயன்பட்டு வந்தாலும் அவை வெறும் விற்பனை உத்திகளாக மட்டுமே நிலைநிறுத்தப்படுவதனைக் காணக்கூடிய தாக உள்ளது. திறந்த பொருளாதாரக்கொள்கை காரணமாக எமது பொருளாதாரம் பெரிதும் இறக்குமதிகளிலேயே தங்கியுள்ளதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இதனால் சுதேசியப்பண்பாடு சார்ந்து வருகின்ற தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்தி களுக்கான வாய்ப்புக்கள் பெரிதும் பாதிப் படைகின்றன. இத்தன்மைகாரணமாக இத் துறைசார்ந்து வளர்த்தெடுக்கப்படும் வழக் காற்று வகைமைகள் பலவும் வழக்கிழந்து வருகின்றன. விவசாயம், கடல்வேளாண்மை, சிறு கைத்தொழில் மற்றும் கைவினை சார்ந்த தொழில்கள் பலவற்றிலும் இத்தகைய பாதிப் புக்களை இனங்காணமுடிகிறது. வகை மாதிரியாக மாடுகளின் உதவிகொண்டு நீர்இறைக்கும் சூத்திரக்கிணறுகளையோ, மரப்பலகைகளைக் கொண்டு கட்டப்படும் வத்தைகள், கட்டுமரங்கள், தோணிகள் முதலானவற்றையோ இன்று பெருமளவில் பார்க்க முடியாதிருக்கிறது.

இடியப்ப உரல்கள், திருகுவலை, புட்டுக்குழல் முதலான பல்வகைப்புழங்கு பொருட்களும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இன்று அலுமினியம், சில்வர், இரும்பு முதலான உலோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. இந்நிலமையானது இது தொடர்பான வினையாளர்களைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது.

2.7 பழைமை போற்றாத பண்பு

பழைமை போற்றாத பண்பு இன்று அதிகமாகி விட்டது. நவநாகரிகத்தின் மீதான நாட்டம் இன்று அனைத்துத்துறை களையும் பாதித்துள்ளது. இதற்கு நாட்டார் வழக்காற்றியலும் விதிவிலக்கல்ல. இருந் தாலும் இத்தகை போக்கினால் பிறதுறைகளை விட நாட்டார் வழக்காற்றியலே அதிகம் பாதிப்புக்குள்ளாகி உள்ளது எனலாம்.

முடிவுரை

தமிழர்களுடைய பண்பாட்டு அடை யாளங்களை மீட்டுருவாக்கம் செய்யக்கூடிய வழக்காற்று வகைமைகள் பலவும் இன்று வேக மாக வழக்கிழந்து வருகிறது. இவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்த்துடிப்புடன் அவற்றின் தனித்துவ மான அடையாளங்களோடு பேணிப்பாது காப்பது நம் கடமையாகும்.

இயற்கை சார்ந்த அழிவுகளைக் கட்டுப் படுத்துவதில் மனித முயற்சியின் பங்கு குறிப்பிட்டுச்சொல்லும் படியாக அமையப் போவதில்லை. ஆயினும் செயற்கையான காரணங்களினால் இவ்வழக்காறுகள் அழிந்து போகாமல் பாதுகாக்கப் பலவற்றை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

தமிழருக்கான கல்விக் கொள்கையில் நாட்டார் வழக்காற்றியல் முக்கியத்துவம் பெறவேண்டும். பல்கலைக்கழகப் புத்தி ஜீவிகளும், பாடசாலைச்சமூகத்தினரும், தமிழ் அரசியல் வாதிகளும் எனப்பலரும் இணைந்து இதனைச்சாதிக்க முனைய வேண்டும். இத்துறை சார்ந்து உலகளாவிய

நிலையில் ஏற்பட்டுவரும் ஆய்வு முறைமைகளை எமது புலமையாளருக்கும் எட்டும்படி செய்யவேண்டும்.

அழிந்துவரும் நாட்டார் வழக்காறுகள் தொடர்பான விளிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக இது தொடர்பான அரும்பொருளகம் உடனடியாக நிறுவப் படவேண்டும். பொருள்சார் வழக்காற்று வகைமைகள் பலவும் இந்த அரும்பொரு ளகத்தில் உடனடியாக நிறுவப்படவேண்டும். பொருள்சார் வழக்காற்று வகைமைகள் பலவும் இந்த அரும்பொருளகத்தில் காட்சிப்படுத் தப்படவேண்டும். தமிழர்களது அரும் பொருட்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான சட்டவலு அல்லது அரசியல் ஆதரவு இத்துறை சார்ந்து ஈர்க்கப்படவேண்டும்.

வழக்காற்று வகைமைகளைப் படைப் போர்களது சமூக பொருளாதார நிலைமை களை மேம்படுத்தவற்கான வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும். கூடவே இவ்வாறான பண்பாட்டு வினையாளர்களது ஒழுக்கங் களையும் சீர்படுத்துவதற்கும் ஆவன செய்யவேண்டும்.

நாட்டார் கலைமரபுகளைக் குறித்த ஒரு வட்டத்தினருக்கு மட்டும் ஆற்றுகை செய்யாமல் பிறமக்களும் பிற இனத்தவரும் இக்கலைமரபுகளின் தனித்துவங்களோடு அவற்றைத் தரிசிப்பதற்கான வாய்ப்பு களைக் கண்டறியவேண்டும். இத்துறை சார்ந்த கலைஞர்களது வரலாறுகள் மற்றும் மேதைகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆய்வுகள் இத்துறைசார்ந்த ஆய்வாளர் களால் முன்னெடுக்கப்படவேண்டும்.

துணை நின்ற நூல்கள்

1. விசாகரூபன். இ, 2003, நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம். முல்லை பதிப்பகம், கந்தர்தடம்
2. சிவத்தம்பி. கா (பதி) 1980, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்பல்கழகம்.
3. சிவசுப்பிரமணியம்.ஆ.1999 மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை.
4. சுந்தரம்பிள்ளை . செ , 1990, ஈழத்து இசை நாடக வரலாறு, யாழ் இலக்கிய வட்டம். யாழ்ப்பாணம்.
5. சுப்பிரமணியம். ச. வே , 1971, தமிழில் விடுகதைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை
6. பக்தவச்சல பாரதி . சி , 2002, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய் வகம், சிதம்பரம்.
7. பாலசுந்தரம். இ. 1979, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், தமிழ்ப்பதிப்பகம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பக்தவச்சல பாரதி . சி ,1999, பண் பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
9. பெருமாள் . ஏ. என் , 2003, தமிழக நாட்டுப்புறக்கலைகள், உலகத்தமி ழாராய்ச்சி நிறுவனம். சென்னை
10. லூர்து. தே, 1977, நாட்டார் வழக்காற் றியல் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
11. லூர்து.தே, 1977, நாட்டார் வழக் காற்றியல்-சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை
12. Dundes Alan, 1980, Interpreting folklore, Blooming, Indiana University press.
13. Don Yoder, 1972, Folklore and folk life – An introduction, The university of Chicago, U.S.A.
14. Bhagwat Durga 1958, An Outline of Indian Folklore, Popular Prakashan, Bombay
15. Lakshmanan Chettiar, S.M.L folklore of Tamil Nadu, National Book Trust, New Delhi, 1973.
16. Van Gennep Arnold, The Rites of Passage, Routleadge and Keganpall Limited, London 1960.
17. Shanmugampillai and Erica A.E.Folk beliefs of Tamil Mathuclaus pathippagam, Madurai, 1977.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழறிஞர் தர்மரட்ண தேரோ

தர்மரட்ண தேரர்
பழைய மாணவன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.
(வியாங்கொட)

மிகக் குறுகிய கால எல்லைக்குள் இலங்கையில் சிங்களமொழி மிக மிக வளர்ச்சியுற நல்ல தொண்டாற்றிய பெரு மக்களுள் புத்தமத குருவான அடிகளார் தர்மரத்தின தேரோ முதலிடம் பெறுகிறார். 1964 ஆம் ஆண்டுக்கு உரிய இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசை இவர் எழுதிய "தென்னிந்தியாவில் பௌத்தசமய வரலாறு" என்னும் நூல் பெற்றது.

இலங்கை சரசுவதி பல்கலைப் பிரிவினாவின் (Saraswathy University Piriwena) துணைத் தலைவர் என்னும் உயர் பதவியை ஏற்று மிகச் சிறப்புற நிருவகிக்கும் இவர் தமிழில் ஆன்ற புலமை உடையவர். ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை இவர் 1858 ஆம் ஆண்டில் சிங்கள மொழியில் ஆக்கி "பத்தினி தெய்யோ" என்னும் பெயரில் வெளியிட்டவர்.

1914ஆம் ஆண்டில் தை மாதம் 26ஆம் திகதியில் பிறந்த இவர் 1929 ஆம் ஆண்டில் பௌத்த சமய நெறிப்படி, பதினைந்தாம் ஆண்டில் புத்த பிக்குவாக மாறினார். சிங்களம், பாளி, வடமொழி ஆகிய மொழிகளைப் பயின்று மிகத் திறமையுடன் அந்த மொழிகளில் இவர் பண்டிதர் பட்டம் பெற்றார். 1945 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்குச் சென்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கே ஆவலுடன் தமிழையும் ஆங்கிலத்தையும் கற்கும்போதே, ஆரிய – திராவிட பாஷா விருத்திச் சங்கம் நடாத்தும் தமிழ் பால பண்டித தேர்வில் வெற்றியடைந்தார். 1946 ஆம் ஆண்டில் பலரும் ஆச்சரியப்படும் பாங்கில் ஆ.தி.பா.வி. சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் வெற்றி பெற்றுத் தமிழ்ப் பண்டிதரானார். 1950 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பி.ஏ பரீட்சையில் தமிழை இரண்டாவது மொழியாகப் பயின்று தேர்ச்சியடைந்தார். 1958 ஆம் ஆண்டு லண்டன் பி.ஏ.த். தேர்விலும் சிறப்பாக தேர்ச்சி பெற்று இரண்டு பி.ஏ. பட்டங்களைப் பெற்றார்.

1958 ஆம் ஆண்டுதொட்டுச் சரசுவதி பல்கலைக்கழகப் பிரிவகத்தின் துணைத் தலைவராக வீற்றிருக்கும் இவர், "பத்தினித் தெய்யோ" வை (பத்தினித் தெய்வம்) உருவாக்கியதற்கு இலங்கை அரசின் பெரும் சிறப்பை பெற்றதோடல்லாமல், 1958 ஆம் ஆண்டுக்காக சிங்களச் சாகித்திய மண்டலத்தின் முதற் பரிசையும் பெற்றார். பௌத்த சமய காப்பியமான "மணிமேகலை" யினை சிங்களத்தில் ஆக்கி வெளியிட்டார். தமிழ் - சிங்கள பேரகராதியை தொகுத்து வெளியிட்டார். அத்தோடு தமிழிலிருந்து சிங்களமொழியில் இயல்பாகவே இடம் பெற்றுள்ள சொற்கள், மரபுகள் முதலியவற்றை ஆய்வோடு புலப்படுத்தி, "சிங்கள மொழியில் தமிழின் செல்வாக்கு" (Tamil influence on Sinhala Language) என்னும் நூலை இதே பெயரில் 1965 இல் வெளியிட்டார். அன்றியும் "தமிழ் இலக்கணம்" பற்றிய நூலை இதே பெயரில் 1965 இல் அச்சிட்டார். "சீவக சிந்தாமணி"யை விரைவில் வெளியிட முயன்று வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தமிழிலிருந்து சிங்கள மொழிப்படுத்தும் பணியில் நான் இறங்கியது 1946 ஆம் ஆண்டில்" என்று கூறும் அடிகளார், யாழ்ப்பாணம் குமாரசாமிப் புலவரின் "இரகுவமிச சரிதம் மிருதம்" என்னும் நூலுக்கு முதலில் சிங்களத்தில் ஓர் உரை எழுதி வெளியிட்டார்.

இலங்கை அரசின் வேண்டுகோளின்படி சிங்களத்திலிருந்து தமிழுக்கு இவர் தந்த பரிசு, "பொருளாதாரச் சுருக்கம்" என்ற பொருளியல் நூல். மற்றது பாளி. மகாவம்சத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இது இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் வேண்டுகோளின்படி ஆக்கப்பெற்றது.

இது தவிர ஏனைத் தமிழ்க் காப்பியங்களையும் சிங்கள மக்களிடையே உலவ விட அடிகளார் முயன்று வருகிறார். அத்துடன், "தமிழ் சிங்கள பேரகராதிகளின்" இரண்டாம், மூன்றாம் பகுதிகளையும் எழுதி வருகிறார். இவ்வடிகளார் "இந்நாட்டில் (இலங்கையில்) இரு சாதிகளுக்குள் ஒற்றுமையை வளர்க்க வேலை செய்வதே என் முக்கியமான கடமை என்று யான் எப்பொழுதும் கருதுகிறேன்" என்கிறார்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

INFRASTRUCTURE DEVELOPMENT OF SRI LANKA



பேராசிரியர் க.தேவராஜா
பீடாதிபதி,
முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

1.0 அறிமுகம்

நாடுகளின் அபிவிருத்தி என்பது உட்கட்டமைப்புச் சேவை வளர்ச்சியுடன் இணைந்ததென்ற எண்ணக்கரு அண்மைக் காலத்தில் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. பொருளாதார செய் முறைகளின் அடித்தளமாக – கீழ்க் கட்டமைப்பாக இது விளங்குகிறது.

பொருள்சார் உற்பத்திப் பெருக்கம், சமூகத்துறைகளின் விருத்தி தொழில்நுட்ப மேம்பாடு, அரச நிதியின் உத்தம பயன்பாடு, பிராந்திய சமவளர்ச்சி, செலாவணி உழைப்பு நாட்டம் என்பவற்றுடன் தொடர் புடையதாவதன் மூலம் அபிவிருத்தி மீது உட்கட்டமைப்பு சேவைகள் பரவல் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பெருக்கத் தோடும், மக்களின் நேரடியான வாழ்க்கைத் தரத்துடனும் சுற்றுப்புறச் சூழல் பேணுதல் சார்ந்த இலட்சியங்களுடன் உட்கட்டமைப்பு நேரடியாகவும், ஒன்றிணைந்த வகையிலும் வலுவான தொடர்பைக் கொண்டுள்ளது. வளர்முக நாடுகளின் நீடித்து நிலைக்கும் அபிவிருத்திப் பார்வைக்குள் உட்கட்டமைப்பு பற்றிய முதன்மை பல்நிலைகளில் அங்கீகரிக் கப்பட்டது. அபிவிருத்தியும் உட்கட்டமைப் புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

2.0 உட்கட்டமைப்புச் சேவைகள்

பொருளாதாரத்தின் உற்பத்திக் கட்ட மைப்பில் விவசாயம், கைத்தொழில் என்பன பொருள் உற்பத்திப் பெருக்கத்தை நேரடியாக நிர்ணயிக்கின்றன. சேவைகள் துறை, என்பதில் பொருளாதார செய்முறைகளின் பின்னணித் தளமாக அமைவன உட்கட்ட மைப்பு சேவைகளாகக் கொள்ளப்படுகின்றன. வளங்களுக்கும் பொருளாதார செய்முறை களுக்குமாக தொடர்புகளை உட்கட்ட மைப்புச் சேவைகள் நிர்ணயிக்கின்றன. பொருளாதார வளர்ச்சி நிலைக்கும் தொழில் நுட்ப முன்னேற்றங்களுக்கு ஏற்ப உட்கட்ட மைப்புச் சேவைகள் தொகை ரீதியாகவும், தர ரீதியாகவும் வளர்ச்சியடையக் கூடியன. அபிவிருத்திச் செய்முறையின் ஆரம்ப நிபந்தனையாக உட்கட்டமைப்புத்துறை விருத்தி கருதப்படுகிறது.

உற்பத்தி சார்ந்த பொருளாதார துறைகள், பொது வாழ்க்கைத்தரம் சார்ந்த சமூகத்துறைகள் என்பவற்றுடன் உட்கட்டமைப்பு வலைய மைப்பு நெருக்கமாகத் தொடர்புபட்டுள்ளது. குடியேற்ற நாடுகளை நிறுவிய போது மேற்கு நாடுகள் தமது பொருளாதாரக் குறிக் கோள்களை அடைவதற்கு ஏற்ற வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்து வதில் கவனம் செலுத்தினர். குறிப்பாக பெருந் தோட்ட அபிவிருத்தியை மையமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே ஆங்கிலேயரின் போக்கு வரத்துத் துறைமுகம் போன்றவற்றின் அபிவிருத்தி இலங்கையில் மேற்கொள் ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாயத்துறை நவீனமயமாகும் நிலையிலும் வெளிமுக நோக்குடைய அபி விருத்தி உபாயங்கள் முதன்மை பெறும் போதும் உட்கட்டமைப்பு வசதிகளின் நிர்மாணம் விஸ்தரிப்பு, நவீனமயமாக்கம் என்பவற்றில் அதிகளவு முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதுண்டு. குடித்தொகைப் பெருக்கம், நகர் மயமாக்கம் என்பவற்றோடு தொடர்புடைய வகையில் உட்கட்டமைப்புச் சேவைகள் வளர்ச்சி அடைவதுண்டு. பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், நீர்ப்பாசனம், நீர்வழங்கல், மின்வலு, வாயு, துறைமுக வசதிகள், சௌக்கிய வசதிகள், தபால் தந்தி தொலைத்தொடர்பு வசதிகள் போன்ற பலவும் உட்கட்டமைப்புச் சேவை களாக அமைகின்றன. இவற்றை நிர்மாணித்தல் விரிவுபடுத்தல், நவீனமயப்படுத்தல், பரா மரித்தல் என்பவற்றுக்கு அதிகளவு மூலதன முதலீடு தேவைப்படுவதால் சர்வதேசிய உதவியுடன் நெருக்கமாக இணைந்துள்ளன. அண்மைக்காலத்தில் நீடித்திருக்கும் அபிவிருத்தி, வறுமை, தணிப்பு, எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுக்கான சௌக்கிய சேவை முயற்சிகள் சுற்றுலாத்துறை என்ப வற்றோடு உட்கட்டமைப்புத்துறை இணைந்து நோக்கப்படுவதன் மூலமும் பொருளிய லாளர்களின் கவனத்திற்குரிய அம்சமாக விளங்குகிறது.

3.0 வளர்முக நாடுகளின் உட் கட்டமைப்பு

வளர்முக நாடுகள் தமது தேசிய உற்பத்தியில் 4 சதவீதத்தையும், மொத்த முதலீடுகளில் 20 சதவீதத்தையும் உட்கட்ட மைப்பில் முதலிடுகின்றன. இது வருடாந்தம் 200 மில்லியன் டொலர்களாக காணப்படுவ தாக இன்கிறாம் [INGRAM] கெஸ்ஸைட்ஸ் [KESSIDES] என்போர் குறிப்பிடுகின்றனர். நேரடியாக விவசாயம் கைத்தொழிற்துறையில் முதலிடுவதால் உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவது போல் உட்கட்டமைப்பு அதி கரிக்கும் போது மொத்த உள்நாட்டு உற்பத்தி யிலும் அதே அளவான அதிகரிப்பு ஏற்பட முடியும்.

இந்த நாடுகளில் கடந்த 25 வருட காலப் பகுதியில் குடிநீர் கிடைக்கப்பெறும் குடித்தொகை 50% த்தினால் அதிகரித்துள்ள தோடு, உற்பத்தி, தொலைபேசி தொடர்பு என்பன இருமடங்கு அதிகரித்தது. ஆயினும் வளர்முக நாடுகளின் நிலைமை திருப்தி யற்றதாக இருப்பதாகவே உலக அபிவிருத்தி அறிக்கை [World Development Report] விபரிக்கின்றது. இந்த அறிக்கையில் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக் காட்டப் படுகின்றன.

1) இந்நாடுகளில் ஒரு பில்லியன் (1000 மில்லியன்) மக்கள் நல்ல நீர் பெற முடியாது துன்பமடைகின்றனர். குழந்தை கள் பள்ளிக்குச் செல்ல முடியாமல் நீண்ட நேரத்தை நீர் அள்ளுவதற்கு செலவிடு கின்றனர். பெண்களும் பெருமளவு நேரத்தை இதற்கெனச் செலவிடுகின் றனர். இதனால் கிராமியப் பெண்களின் உழைப்பு வருமானமும் பாதிக்கப்படு கிறது. இதனால் வறுமை நீடித்திருக்கும் நிலை ஏற்படுகிறது.
2) இந்த நாடுகளில் இரண்டு மில்லியன் மக்கள் போதுமான சுகாதார வசதிகள் இன்றியுள்ளனர். இதனால் உழைக்கும் ஆற்றல் பாதிக்கப்படுவதோடு உழைப்பு வருமானத்தில் கணிசமான பகுதியை, மருத்துவ தேவைக்கும் செலவிட வேண்டி யேற்படுகின்றது. இதனால் வளர்முக நாடுகள் தமது வருமானத்தில் 5%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது 170 பில்லியன் டாலர்களை – வருடாந்தம் சுகாதாரத் துறைக்கெனச் செலவிட வேண்டியுள்ளது. இன்றும் வளர் முக நாடுகளில் சராசரி ஆயுள் எதிர் பார்க்கை 63 வருடங்களாகவும், ஒவ் வொரு 100 பிள்ளையிலும் 10 பேர் ஒரு வருடத்திற்கு முன்னே இறந்து போவோ ராகவும், 15 – 60 வயதுக்குட்பட்டோரின் இறப்பு 1000க்கு 230 ஆகவும் காணப் படுகிறது. [Dean T.Jamison 2000]

3) வளர்முக நாடுகளின் மக்களின் இரண்டு பில்லியன் மக்களுக்கு மின்வலு வசதிகள் வழங்கப்படாமலேயேயுள்ளன. மக்கட் பெருக்கம், நகர மயமாக்க விஸ்தரிப்பிற்கேற்பவும் கிராமிய உற்பத்தித் தேவைக்கேற்பவும் மின்வலு வழங்கப்பட முடியவில்லை. கிராமிய உற்பத்திகளின் வினைத்திறன் அதி கரிப்பிற்கும் இது தடையாக அமைந்து விடுகிறது.

4) போக்குவரத்துப் பாதைகள் கூட போதி யளவு இல்லாமலும், நன்கு பேணப்படா மலும் உள்ளன. கிராமிய உற்பத்தி வல யங்களை சந்தைகளுடன் இணைப் பதற்கும், நவீன மயப்படுத்துவதற்கும் ஓரளவுக்கு போக்குவரத்து வசதி விருத்தி செய்யப்படவில்லை.

5) வளர்முக நாடுகளின் தாராளப் பொரு ளாதார நடவடிக்கைகள், சர்வதேச சந்தைக்கான போட்டியின் தன்மையை மேம்படுத்தல் போன்ற தேவைகளுக்கு ஏற்ற மாதிரி தொடர்பாடல் வசதி களின் தொகையும், தரமும் நவீனத் துவமும் விருத்தியடையவில்லை.

4.0 இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள்

பெருந்தோட்டத் துறையின் அறிமுகத் துடன் பிரித்தானியரால் துறைமுகம், பிர தான பெருந்தெருக்கள், புகையிரதப் பாதை கள் போன்ற உற்பத்தி இலக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பெருந்தோட்ட ஏற்றுமதிகளின் விரிவாக்கம், உணவுப் பாவனைப் பொருட்களின் இறக்குமதி, விநியோகம் என்பவற்றை மேற்கொள்ள உட்கட்டமைப்பு வசதிகள் பயன்பட்டன.

சுதந்திரத்தின் பின் தேசிய அரசாங்கம் இவற்றில் கவனம் செலுத்தியது. 1928 இல் அரச மின்சாரத் திணைக்களம் மின்சார சேவையைப் பொறுப்பேற்றது. 1929 இல் 3176 பாவனையாளர்கள் காணப்பட்டனர். 1948இல் இது 14,669 ஆக அதிகரித் துள்ளது. இக்காலத்தின் மின்வலு உற்பத்தியின் அலகு 703,700இலிருந்து 52875,736 ஆக அதிகரித்தது. 1979 களின் பின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், மகாவலி மின்வலு உற்பத்தி என்பவற்றால் மின்வலு உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. இருந்த போதும் எல்லா மக்களுக்கும் மின்வலு வழங்க முடியாமல் இருப்பதை இலங்கையில் ஏற்றுக்கொள்ளவே வேண்டும். போக்கு வரத்துத் தொடர்பாகவும், அசாதாரண வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1993 இல் 3750 பேருந்துக்கள் பணியாற்றின. பயணிகள் அளவும் 134,550 லட்சமாகக் காணப்பட்டது. சர்வதேசிய போக்கிற்கு இணங்க தனியார் துறையினரிடமும் போக்குவரத்து கையளிக்கப்படலாயிற்று. 1990 – 1993 காலப்பகுதியில் 750 பேருந்துத் தொகுதி மக்கள் மயப்படுத்தப்பட்டது. 1993 நவம்பரில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியை தன்னாட்சியுடைய சபையாக் கப்படும் நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டது. 1993 இல் 84,469 பதிவு செய்யப்பட்ட போக்குவரத்து திருத்துவது, புனரமைப்புத் தொடர்பாக 2556 மில்லியன் ரூபாவும், 1993 இல் செலவிடப்பட்டிருந்தன. இதன் பின்னர் தனியாரும் போக்குவரத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவான பேரூந்துகளும் மினிபஸ்களும் சேவையில் ஈடுபட்டிருப்பதுடன் அதனைக் கட்டுப்படுத்த தனியார் போக்குவரத்து அமைச்சின் பணிகளும் பெறப்பட்டுள்ளன.

தொடர்பாடல் துறை பெரிதும் கொழும்பு சார்ந்தே முதன்மை பெற்றது. கொழும்பு நிர்வாக, வர்த்தக, துறைமுகச், சுற்றுலா நகர மாக விளங்கியமையால் தொடர்பாடல் விளக்கம், நவீன மயப்படுத்தல் என்பன கொழும்பை மையப்படுத்தியே ஏற்பட்டன. பின்னர் கண்டி, மாத்தறை நோக்கியும் நகர வளர்ச்சியுடன் விருத்தி பெற்றன. முதலீட்டு ஊக்குவிப்பு வலய விஸ்தரிப்பு, சர்வதேச வங்கித் தொழிற்பாடு, தனியார் மயமாக்கம், பங்கு, மூலதனச் சந்தைகளின் விரிவாக்கம் போன்ற பொருளாதார முயற்சிகளுடன் இணைந்த வகையில் தொடர்பாடல் வசதிகள் விரிவடைந்தன. 1950இல் 210 ஆகக் காணப் பட்ட அஞ்சல் நிலையங்கள் 1993இல் 3895 ஆக அதிகரித்தன. இதே காலப்பகுதியில் தொலைத் தொடர்புக்காக விண்ணப்பித்தோர் தொகை 364 இல் இருந்து 124,066 ஆக அதிகரித்திருந்தது. இலங்கையின் தொடர் பாடல் சேவையில் தனியாரும் ஈடுபடத் தொடங்கியவுடன் இருபத்தோராம் நூற்றாண் டின் ஆரம்பத்தில் தொடர்பாடல் துறை பெரு வளர்ச்சி கண்டிருப்பதையும் காணமுடிகிறது.

நீர்ப்பாசன வசதிகளில் நீண்டகாலமாக அதிகளவு கவனம் செலுத்தப்பட்டது. குடியேற்றத்திட்டங்கள், தொழில் வாய்ப்பு, தானிய உற்பத்திப் பெருக்கம், மின்வலு உற்பத்தி குடிநீர் விநியோகம், நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற பல் நோக்கங்களுடன் இணைந்து சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத் தில் இத்துறையில் அதிகளவு மூலதன முதலீடு மேற்கொள்ளப்பட்டது. மகாவலித் திட்டம், கிருண்டி ஓயா, நில்வள கங்கை, மினிப்பே – நாகதீப திட்டங்கள் அண்மைக் காலங்களில் அதிக முதலீடுகளை உறிஞ்சி யுள்ளன. மகாவலிக்கு 5000 மில்லியன் ரூபாயும், ஏனையவற்றுக்கு 3000 மில்லியன் வரையிலும் செலவு செய்யப்பட்டுள்ளன.

துறைமுக விரிவாக்க முயற்சிகளிலும் அதிகளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பு, திருகோணமலை, காலி, காங்கேசன்துறை துறைமுக விஸ்தரிப்பு, நவீன மயப்படுத்தும் திட்டங்கள் அந்நிய முதலீட்டு ஊக்குவிப்புகளுடனும் ஏற்றுமதி மேம்பாடுகளுடனும் இணைக்கப் பட்டுள்ளன. விமான நிலைய விஸ்தரிப்பு, நவீன மயமாக்கல் முயற்சிகளும், சுற்றுலா ஏற்றுமதி, அந்நிய முதலீடு என்பவற்றுடன் வெகுவாக இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 1970 களில் நேரடியாக சகல பொருளாதாரத் துறைகளிலும் அர சாங்கம் முதலிடுவதில் அக்கறை காட்டியது. எனினும் சிக்கனமற்றனவாக விளங்கியதால் 1980களில் அரசு நேரடி முதலீடுகளை நிறுத்தி தனியார் துறையின் ஊக்கத்துடன் முதலிடு வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் உட்கட்ட மைப்புத்துறை வலையமைப்பை விரிவு படுத்தல், நவீன மயப்படுத்தல் என்பவற்றால் முதலீடு செய்வதில் அக்கறை காட்டியது. இவை மூலதன மாற்றங்களாக அரச செல வினங்களில் முதன்மை பெறலாயின. 1990 களில் மக்கள் மயப்படுத்தல் முயற்சிகள் உட்கட்டமைப்புத் துறைகளிலும் அரசு தனது பொறுப்புக்களை இறக்கி வைத்து உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் துறையினர் அவற்றைப் பொறுப்புடன் தூக்கி எடுத்துக் கொள்ளும் நிலைமைகளை ஊக்குவித்தது.

2000இன் ஆரம்பத்தில் ஏற்பட்டுள்ள புதிய கொள்கை மாற்றங்களும் உட் கட்டமைப்பை இலங்கையில் விருத்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் உட்கட்டமைப்பு தொடர்பான கொள்கை செயற்பாடுகள் என்பன பின்வருவனவற்றுடன் இடையுறவு கொண்டுள்ளன.

1) கிராமிய தானிய உற்பத்தியைப் பெருக்குதல்.
2) கிராமிய, நகர தொழில் வாய்ப்பை ஊக்குவித்தல்.
3) நகர, கிராமிய கைத்தொழில் வளர்ச்சியைத் தூண்டுதல்.
4) செலாவணி உழைப்புக்குரியதாக ஏற்றுமதி, சுற்றுலா, முதலீடு என்பவற்றைத் தூண்டுதல்.
5) வறுமை, தணிப்பு முயற்சிகளுடன் ஒன்றிணைதல்.
6) தனியார் துறை முயற்சிக்கான தூண்டு தல்களை அதிகரித்தல்.
7) ஊழியர் அசைவு, பண்ட அசைவு என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலமாக சந்தைத் தொழிற்பாடுகளை இயக்க முடையதாக்கல்.
8) சுகாதாரம், நலத்துறை, கல்வி வசதிகளை இயன்றளவு எல்லா மக்களுக்கும் நியாய மானவையாகக் கிடைக்கச் செய்தல். இதன் மூலம் சமூக நீதியை உருவாக்கல்.

நாட்டின் அமைதி நிலவும் சூழலில் மாத்திரம் இத்தகைய அபிவிருத்தி நலன்களை உட்கட்டமைப்பு வசதிகள் வழங்க முடியும் என்பதும் வலியுறுத்தப் பட்டு வருகிறது. யுத்தம் முடிவுக்கு வந்தி ருப்பது உட்கட்டமைப்பின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

5.0 உட்கட்டமைப்பின் பிரச்சினைகள்

இலங்கையுட்பட வளர்முக நாடுகளின் அனுபவத்தில் உட்கட்டமைப்புத் துறையில் பயனுறுதி விளைவுகளையும், செயற் திறனையும், பெறுவது தொடர்பாக பல தடைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பதாக உலக அபிவிருத்தி அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

1) உட்கட்டமைப்பு சேவைகள் பூரண இயலளவில் பயன்படுத்தப்படுவதில்லை. தொழில்நுட்பத் திறமையும் காணப் படுவதில்லை. இக்கட்டமைப்பின் தொழிற்பாடுகளில் விரயமும் அதிக முண்டு. தலா கிலோ வாட் மணித்தியா லத்திற்கான எரிபொருள் நுகர்ச்சியில் 18% - 44% வரை விரயமாகிறது. துறை முகப் பணிகளிலும் 60% விரயம் காணப்படுகிறது. இவை எல்லாவற்றையும் உற்று நோக்குகையில் கிராமிய மக்களும், ஏழைகளும் நலன் பெறக்கூடிய மாதிரி யிலும் இவை வடிவமைக்கப்பட்டு இருக்கவில்லை.
2) உட்கட்டமைப்பு வசதிகளைப் பேணும் ஆர்வம், திறமை என்பனவும் குறை வாக உள்ளன. வனத்துறையில் சரியான பராமரிப்பு உபாயங்கள் இல்லாமை யினால் இயலளவில் [Capacity] 60% மாத்திரமே பயன்படுத்த முடிகிறது. பராமரிப்பதில் திறமையின்றி, மீள மைப்பதால் அதிக நிதிவளம் வீணா கிறது என்பது ஒப்புக்கொள்ளப்படல் வேண்டும்.
3) பொருத்தக்கேடான வகையில், அவ சரமான வகையில் அதிக வளங்கள் உட்கட்டமைப்பில் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. அரசு தொகை ரீதியான அதி கரிப்பில் திருந்தி அடைகின்றது. ஆனால் தராதர ரீதியில் அதிருந்தி மட்டத்திலேயே வளப் பயன்பாடு உள்ளன.

இத்தகைய நிலைமைகளுடன் கால நிலைச் சீர்கேடுகள், உள்நாட்டுக் குழப்பங்கள், யுத்தம் என்பனவும் உட்கட்ட மைப்பின் நலன்கள் அதிகரிக்காமற் தடுக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்முக நாடுகளில் இத்தகைய பிரச்சினைகள் நிலவியமைக்குப் பொறுப்பான காரணங்களையும் உலக வங்கி ஆய்வாளர்கள் அடையாளங் கண்டுள்ளனர். அவை,

அ) அரச தனியுரிமையில் இச்சேவைகள் பெரிதும் இருந்தபோது வர்த்தக ஒழுங்குகள் கையாளப்படவில்லை. பொறுப்புக்கள் சரியாக ஒதுக்கப்படவில்லை. அரச தலையீடு அதிகம் இருந்தது. முடிவு எடுப்பதில் திறமையின்மை நிலவியது. இலங்கையின் அரச திணைக்களச் செயற்பாடுகளும் இவ்வாறேயமைந்தன.

ஆ) பாவனையாளர் கருத்துத் தேவை, பங்களிப்பு என்பவற்றுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. அரச உதவி மானியத்தில் அளவுக்கதிகமாய்த் தங்கியிருந்ததால் உட்கட்டமைப்பு சேவைகளின் விலைக்கொள்கை சரியான முடிவுகளை பிரதிபலிக்கத் தவறின.

இ) தொழில் நுட்ப மாற்றங்கள், முகாமை நிதியிடல், மனித வளப் பயன்பாடு தொடர்பாக திறமையின்மை, சரியான நடைமுறைகள் இல்லாமை காரணமாக உட்கட்டமைப்பு வினைத்திறன், பயனுறுதிப் பண்பு கொண்டனவாக விளங்க முடியவில்லை.

6.0 அபிவிருத்திக்கான உபாயங்கள்

இலங்கையுட்பட வளர்முக நாடுகள் எதிர்காலத்தில் உட்கட்டமைப்புத் தொடர்பாக முதலீடுகளைப் பயன்படுத்தும் போது நலன்கள், சூழல் பாதுகாப்பு என்ற அம்சங்கள் சார்ந்து திறமை, பயனுறுதி என்பவற்றை அதிகரித்தல் வேண்டும். அதற்கேற்ற வகையில் உட்கட்டமைப்புத் தொடர்பான திட்டமிடல் அமுலாக்கம், விஸ்தரிப்பு, பராமரிப்பு, நவீன மயப்படுத்தல் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

இவை தொடர்பாக பின்வருவன கவனத்திற்கொள்ளப்படுதல் அவசியம்

1) தனியார் துறையினர் கடைப்பிடிக்கும் நோக்கம், நிறையிடல், தயாரிப்பு முகாமை, நிதித் தன்னாதிக்கம், கட்டுப்பாடு போன்றவற்றை அரச துறைகள் கையாள வேண்டும். அரச துறை உட்கட்டமைப்புச் சேவைகளைத் தொடர்ந்து வழங்குவதாயின் இவற்றில் கவனம் செலுத்தி போட்டித் தகுதியை உயர்த்த வேண்டும். சர்வதேச ரீதியில் இவ்வசதிகளின் பயன்பாட்டைக் குறைக்கும் வகையில் இவற்றைப் பராமரிக்க வேண்டும். அல்லது சர்வதேச ரீதியில் முதலீட்டாளரைக் கவருதல் சாத்திய மற்றதாகிவிடும்.
2) தேவையான அளவுக்கு தனியார் துறைப் பங்காளராக்கல் அல்லது முகாமைப் பொறுப்புக்களை ஒப்பந்த முறையில் வழங்குதல் அவசியம். மலேசியா, கொலம்பியா அனுபவங்கள் இவ்வாறு குறிப்பிடத்தக்கன என்று குறிப்பிடுகின்றனர். இலங்கையும் அண்மைக்காலத்தில் இத்தகைய வழிமுறைகளைக் கையாளுகிறது.
3) முற்றாகவே தனியார் துறையிடம் இவற்றை ஒப்படைத்து அரசாங்கம் ஒழுங்குபடுத்தியும், தெளிவான கொள்கையுடன் உதவி மானியம் சிறிதளவு வழங்கியும் வரமுடியும். இதில் ஊழியர் பிரச்சினைகள் எழாதவாறு பார்த்துக் கொள்வதும், பாவனையாளர் சுரண்டப்படாதவாறு பார்த்துக்கொள்வதும், வள விரயம் அதிகரிக்காது பார்த்துக் கொள்வதும் மிக முக்கியமாகும். சிலி நாட்டில் இத்தகைய முறை வெற்றியளித்துள்ளது.
4) கிராமிய மட்டத்தில் சிற்றளவு உட்கட்டமைப்புச் சேவைகளில் கிராமிய கூட்டுறவு உற்பத்தியாளர், நலன்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பு, என்பவற்றைப் பொறுப்புடன் ஈடுபடுத்தி தேவையான அளவுக்கு உதவியும் ஊக்கமும் வழங்க முடியும். எதியோப்பியாவில் கடந்த மூன்று தசாப்தங்களாக இத்தகைய முயற்சி பலனளித்து வருகின்றது.

5) உட்கட்டமைப்புக்கான முதலீடுட்டு நிதியைத் திரட்டுவதற்கு உரிய நிதி மூலங்கள் பற்றிக் கூர்மையான அவதானம் தேவை. தனியார் துறையிடமிருந்தும், சர்வதேச நிறுவனங்களிடமிருந்துமே அதிகம் திரட்ட வேண்டியிருக்கும் என்பதால் அதற்குரிய நடவடிக்கைகளில் கவனத்துடன் செயற்படல் வேண்டும்.

6) தொழில் நுட்பப் பிரயோகத்தின் மூலம் சிக்கனங்கள், செயற்திறன் என்பவற்றை அதிகரிக்கவும், மானியச் செலவுகளைக் குறைக்கவும் முயற்சித்தல் அவசியம். சர்வதேசிய கூட்டு முயற்சிகளினூற்றான் இத்தகைய இலக்குகளை அடைய முடியும். சோவியத் யூனியனின் சிதை வுக்குப் பின் உலக வங்கி அத்துடன் இணைந்த நிறுவனங்களைச் சார்ந்தி ருந்தும் தவிர்க்க முடியாததாகி விட்டது.

7) இலங்கையின் உட்கட்டமைப்பு. அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் உதவி பெறப்படுவதுடன் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் உதவியும் பெறப்பட்டு வருகிறது. இத்தகைய சர்வதேச உதவிகள் பெறும் உபாயம் இலங்கையின் உட்கட்டமைப்பை வேகமாக வளர்க்கும்.

7.0 முடிவுரை

இலங்கையுட்பட வளர்முக நாடுகள் உள்நாட்டின் அபிவிருத்தித் தேவைகள், சர்வதேச ரீதியில் ஏற்பட்டு வரும் உலக வர்த்தக நிறுவனத்தின் [WTO] விதிமுறைகள், தொழில் நுட்ப வசதிகள், மாற்றங்கள், பிராந்தியக் கூட்டமைப்பு போன்ற பலவற்றையும் கவனித்து நீண்டகாலத் திட்டமிடல் அடிப்படையில் உட்கட்டமைப் புத்துறை தொடர்பான செயற்திட்டங்களை வடிவமைத்தல் வேண்டும்.

இலத்திரனியல் பயன்பாடுகளில் பொறிகளின் பாவனை, இணையத்தளப் பயன்பாடு, கம்பி தொடர் வலையமைப்பு, தொலைக்கடத்தி, வலையமைப்பு முகா மைத்துவத் தகவல் முறை [MIS] போன்ற பலவற்றையும் திட்டமிட்டுப் பயன்படுத்துவ தால் கூடிய நன்மைகளைப் பெறமுடியும்.

இலங்கையும் பொருளாதாரம் என்பதை யும் கவனித்து எதிர்காலப் பொருளாதார தந்திரோபாயங்களுடன் ஒத்துச் செல்லும் வகையிலும் உட்கட்டமைப்புத் துறையின் பயனுறுதியையும் வினைத்திறனையும் அதி கரிக்கும் வகையிலும் உட்கட்டமைப்புக் கொள்கை, நடைமுறைகள் என்பவற்றில் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

REFERENCE.

1) Gregory Ingram and Christine Kessides (1994) Finance and Development, World Bank Publication (pp 18 – 22).
2) Jamison, T (2003) Finance and Development, World Bank Publication (pp 26 – 29).
3) Department of Census and Statistics Ceylon Year Book, 1990 – 1998
4) இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை 1993 – 2008
5) Friedman, M (1986) Essays in positine Economics Deef and Deef Publication, Delhi (pp 64 – 69)

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமுதாய வளர்ச்சியில் மாணவர் வகிக்கும் பங்கு

மு. வேலாயுதபிள்ளை B.A., Dip.in.Edu.
பிரதி அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

இயற்கை அமைப்பிலே குழுமங்களின் சேர்க்கையை சமுதாயம் என்கிறோம். இன்னொரு வகையில் சொல்வதானால் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகங்கள் சேர்ந்ததே சமுதாயம் ஆகும். மேலும் இயற்கையில் இது ஒரு கூறு என்பது வெளிப்படை யானது. இயற்கையில் சமுதாயம் ஒரு கூறு என்பது போல சமுதாயத்தில் பல கூறுகள் உள்ளன. இதில் மனிதன் முதன்மை பெறு கிறான். இயங்கு நிலையில் சமுதாய மாற்றங் களில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு சக்தியாக மனிதன் விளங்குகிறான். அத்துடன் மனிதன் ஒரு சமூகப் பிராணி என்று தெளிவு படுத்தப் படுகிறார். இத்தகைய விவரணம் மிக்க மனித சமுதாயத்தில் மாணவர் என்பது மிக முக்கியமான ஒரு கூறாகும்.

சமுதாய வளர்ச்சியில் பெரும்பான்மை வீதமாக மிக அதிகளவில் தாக்கத்தைச் செலுத்தும் மனித சமூகத்தில் மாணவரு டைய பங்கு மிகவும் காத்திரமானது. சமூகத்தை நிர்ணயிக்கும் நிறுவனங்கள் பல அவற்றுள் தனித்துவமானது. பாடசாலை கள் இத்தகைய தனித்துவமிக்கவை என்று சுட்டிச் சொல்லப்படுகின்ற பாடசாலைகளே மாணவர்கள் உருவாகும் களம். நவீன கல்வி முறைமையில் அறிவு திறன், மனப் பாங்கு என்பவற்றை மிகச் சிறப்பாக வளர்க்கும் இடமாக பாடசாலை காணப்படுகிறது. இவற்றை வளர்ப்பதற்கு அப்பால் மனித வாழ்வியலில் சரியாகவும், பொருத்தமாக வும் இவற்றைப் பிரயோகிக்கக் கூடிய வகையில் மாணவர்கள் கற்பித்தலுக்கும் வழிகாட்டலுக்கும் உட்படுத்தப்படுகி றார்கள். சமூகத்துடன் ஒன்றி வாழ்தல் முதலான பல தளங்களிலும் மாணவனுக்கு சமுதாயத்தில் முக்கிய வகிபாகம் உண்டு. இதற்கெல்லாம் உறுதுணையான சிறந்த அத்திவாரத்தை நிறுவனமயப்பட்ட கல்விக் கூடங்களாகிய பாடசாலைகளே வழங்கு கின்றன. இதனால் மனித சமுதாயத்தில் பிரதிநிதியாக பிரவேசிக்கும் பொழுது பல்தகைமைகளும் நிறைந்த வளமாகவே மாணவர்கள் அமைகிறார்கள். இந்த தோற்று வாய் ஒவ்வொரு மாணவனதும் அடுத்த அடுத்த கட்டங்களுக்கும் உரிய முறையில் பல மூட்டுவதாக இருக்கிறது. எனவே தான் பாடசாலைகள் முறையாக சிறப்பாக இயங்கவேண்டும் என்று அழுத்தமாக குரல் கொடுக்கப்படுகிறது. எனவே பாடசாலை யில் வழங்கப்படும் அடிப்படைகளில் ஏற்படும் தவறுகள் தவறான பிரஜைகளாகவே மாணவர்களை சமூகத்திற்கு தரும் என்பது வெளிப்படையானது.

ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என்பது சங்க இலக்கியமான புறநானூறு தரும் செய்தி. எனவே குறைபாடு அந்த நிறைவான குழந்தையாக இவ்வுலகிற்கு தாயார் தருகிறார். இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி கேள்விகளைப் பெறும் பொருட்டு தந்தையார் நல்ல குருவிடம் சேர்க்கிறார். இவ்வாறு கல்விக்காகச் சேர்க்கப்படும் நிறுவனமாக இன்று பாடசாலைகள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்பதற்கமைய தோற்ற உருவாக்கத்தில் ஒன்றாக உள்ள குழந்தைகள் பாடசாலை களிலே மேம்பாடு அடைகிறார்கள். எனவே நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால் பாடசாலைகள் தம் கடமையைச் செவ்வனே ஆக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. மாணவருடைய வளர்ச்சிப்பாதையில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும் பல.

சமூகமயமாதல் எனும் முக்கிய விடயம் காரணமாக பண்டைக் காலத்தை விட தற்காலத்தில் மாணவர்களுக்கு உரிய கடமைகளும் பொறுப்புக்களும் பல மடங்கு அதிகமாயுள்ளன. இவற்றை உணர்ந்து செயற்பட வேண்டியது மாணவர்களின் தலையாய கடமையாகும். சமூகமயமாதல் என்பதனை சமுதாயத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பாரிய கடன் உண்டு. ஒரு வகையில் சமூகமயமாதலின் வெற்றி என்பது மாணவரிலேயே தங்கியுள்ளது. மாணவர் களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு என்று ஒரு ஒழுங்குமுறையான சில நியதிகள் எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலைக் கல்விக்கு மேலாக சமூக விழுமியங்களை அறிதல், அவற்றைப் பேணுதல், கடைப் பிடித்தல், அதனை அடுத்த தலைமுறைக்கு கடத்துதல், கையளித்தல் என்பது மாணவர் களாலேயே சிறப்புற மேற்கொள்ளப்படுகிறது.

பண்டைய கல்வி பாரம்பரியத்தில் பிரம்மசாரியத்தினை முடித்து கிரகஸ்தம் ஆகிய இல்லறத்தில் நுழையும் மாணவனுக்கு குரு பல அரிய சிந்தனைகளை வழங்குகிறார். இவ்வாறு குரு கூறும் போதனைகளைக் கேட்டு அதன்படி வாழ்க்கையில் ஒழுகும் ஒவ்வொரு மாணவனும் சமுதாய முன்னேற் றத்தின் படிக்கல் ஆகிறான். சத்தியம், தர்மம், விருந்தோம்பல், அன்புடைமை, முதியோரைக் கனம் பண்ணல் முதலானவையே விழுமியங் களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றைக் கற்றும் கேட்டும் வழக்கமாகவும், ஒழுக்க மாகவும் கடைப்பிடிக்கும் நிலையைப் பேணு வதாகும். முற்கூறிய படி விழுமியங்களைப் பெறும் மூல வளமாகிய குருவினை விடப் பெற்றோர், மூத்தோரிடமிருந்தும் விழு மியங்களை அறியும் வாய்ப்பு உள்ளது. பாடசாலைக்கு அப்பால் இவற்றைப் பேணுகின்ற, கடைப்பிடிக்கின்ற இடங்கள் பல உள. மைதானம், கோயில், மருத்துவமனை, பயணங்கள் எனப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. இத்தகைய சூழல்களில் எல்லாம் சமூக அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் முன்மாதிரியாக நடந்து காட்டுகின்ற முக்கிய பங்கு மாணவருக்கே உண்டு. தாம் கற்றவை, கேட்டவை, அனுபவமாகப் பெற்றவை எனத் தேவையான அனைத்தை யும் வருங்காலத்தின் உயர்வுக்காக தமக் கடுத்த தலைமுறையிடம் கையளிப்பதால் அடுத்த சந்ததி விட்ட பணியைத் தொடர வாய்ப்புக் கிடைக்கிறது. இந்த ஒழுங்கு பேணப்படும் போது சமுதாய முன்னேற் றத்தில் மாணவரின் பங்கு மகத்தானது என்பது தெளிவாக அறியக் கிடைக்கிறது.

மனித வாழ்க்கையில் தலைமுறை என்பது மிகப் பிரதானமான ஒரு விடய மாகும். மரபு, பாரம்பரியம், ஆளுமை என்பவற்றை முன் கூறியது போன்று தாம் கடைப்பிடிப்பதற்கு அப்பால் அடுத்த தலைமுறையினருக்கு கடத்தும் செயல் மிக முக்கியமானதொன்றாகும். இது சரியாக நடைபெறும் பொழுதே தலைமுறை என்ற சந்ததித்தொடர் செழுமை பெறுகிறது. எந்த மனிதனும் சிரஞ்சீவி அல்ல. இளமை, வாலிபம், முதுமை, தளர்ச்சி என்பன ஒரு சங்கிலித்தொடர். எனவே சமுதாயத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் மூத்தவர்கள் தாம் முதுமை காணும் பொழுது அல்லது தளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும் பொழுது தமக்கு அடுத்த தலை முறையினரிடம் தம் பொறுப்புக்களைக் கையளிக்கிறார்கள். இது உலகின் எவ்விடத் திலும் பொதுவாக உள்ள ஒரு பண்பாகும். அந்த வகையில் இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள். நாளைக்கு தலைமையேற்கப் போகின்றவர்களை, இன்றைய இளைஞர்களை செவ்வனே வழி நடத்துவது சமுதாயத்தின் தலையாய கடனாகும். அந்த வகையில் மாணவப் பருவம் எனபது வாலிபப் பருவத்திலேயே அமைகிறது. எனவே பெற்றோரோ, பாடசாலைச் சூழலைச் சார்ந்தவர்களோ அல்லது பொறுப்புக்குரிய எவருமோ முறையாக நாணயக் கயிறு பிடித்தல் அவ சியமாகும். இவ்வாறு சிறந்த கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு, விழுமியநெறி என்பவற்றின் ஊடாக வளர்பவன் சிறந்த மாணவனாக — சமூகத் தலைவனாக உருவெடுக்கிறான்.

முன்னைய தலைமுறை வெறும் அனுபவக் கல்வியோடு மட்டும் இருந்தி ருக்கலாம். சிலவேளை ஏட்டுக் கல்வியும் பெற்றிருக்கலாம். ஆனால் முறையாக நிறுவன மயக் கல்விப் பாரம்பரியத்தில் கல்வி அறிவைப் பெற்றுக் கொண்டு சமூகத்திற்கு முன்னே வரும் ஓர் இளைஞன் கூட்டு முயற்சி, தனியாள் விருத்தி, சமூக விருத்தி என்பவற்றில் தலைசிறந்து விளங்குவான் என்பதில் ஐயம் இல்லை. தலைசிறந்த ஒரு மாணவனை விட வேறெவரிடமும் எதிர்பார்க்க முடியாது. சில விடயங்களில் தனியாள் ஆளுமை முக்கியம் பெறுகிறது. சில சந்தர்ப்பங்களில் கூட்டு முயற்சி அத்தியாவசியமாகும். பொருத்தமான வேளைகளில் ஆக்க பூர்வமான நடைமுறைகளில் சிறந்த தலைமைத்துவத்தோடு சமூகத்தை வழி நடத்தக்கூடிய ஆற்றல் மாணவர்களிடம் இயற்கையாக உருப்பெறுகிறது. இதனால் விழிப்புணர்வு முதலான தேவைகள் ஏற்படுகின்ற போது சமூக அறியாமை, மூட நம்பிக்கைகள் என்பவற்றைக் களைவதில் மாணவர்களே பெரும் பங்கு வகிக்கிறார் கள். சமூகத்தில் தொற்று நோய் பரம்பலைத் தடுப்பதற்கும், சுற்றாடல் சுத்தத்தைப் பேணு வதற்கும் மேற்கொள்ளப்படும் விழிப் புணர்வு நடவடிக்கைகளில் மாணவர் சக்தியே பெரும்பங்கு வகிக்கிறது. பிரசார நடவடிக்கைகள் மூலமாகவும், வீதி நாடகங்கள் முதலானவற்றை நடாத்தியும், துறைசார் நிபுணர்களைக் கொண்டும், கருத்தரங்கு நடாத்தியும் குறித்த விடயத்தில் இருக்கக்கூடிய தவறான விளக்கங்களை மாற்றி மூட நம்பிக்கைகளை அடியோடு களைந்து சமூகத்தை விழித்தெழச் செய்வதில் மாணவருக்கு நிகராக எவரையும் சொல்ல முடியாது.

மாணவ சமுதாயம் இளம் பராயமாக இருப்பதால் உடற்பலம், மனோபலம் ஆகிய இரண்டும் இணைந்த தன்மையைக் காணமுடிகிறது. இதனால் முன்னெடுக்கும் நடவடிக்கைகளைப் பெருமளவில் வெற்றி கொள்வது இலகுவாக இருக்கும். ஆங்காங்கே ஏற்படும் சிறு எதிர்ப்புக்களைக் கூட கச்சித மாக எதிர்கொண்டு "தோற்பன தொடரேல்" என்று உற்சாகத்தோடு சமூகத்தை அவர்களால் வழி நடாத்த முடிகிறது. மாணவர் என்னும் போது பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இன்னும் பல கல்விச் சாலைகளைச் சார்ந்த மாண வர்களும் அடங்குகின்றன. இதனால் எண்ணிக்கை என்று பார்க்கும் போது சக்தி ஒரு மாபெரும் சக்தி.

நிகழ்காலத்தைக் கருத்திற் கொண்டு இன்று இந்த சமுதாயத்தில் என்ன தேவை என்பதைத் தெளிவாகக் கணித்து பகுத்தறிவு மார்க்கத்தில் பொது நல நோக்கில் இயங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவ சமுதாயம் உலகளாவிய ரீதியில் தனித்துவமானதொரு கணிப்பைப் பெற்ற தொன்றாகும். காலதேச வர்த்தமானங்களுக் கேற்ப கணத்திற்குக் கணம் வளர்ச்சி காண மாறிவிடும் உலகில் தாம் சார்ந்த சமூகத்தைச் சிறப்புறக் கொண்டு நடாத்தும் பாரிய பொறுப்பை இவர்களே தாங்குகின்றனர். அறிவு, அனுபவம், ஆற்றல், ஆளுமை என்ப வற்றில் முறையான பிரயோகங்களின் சந்தர்ப்பங்களால் உலகின் கவனத்தை தன்பால் ஈர்க்கும் திறனும் பலமும் மாணவருக்கு உண்டு.

இதனாலேயே நல்ல குரு, நல்ல வழிகாட்டல், நல்ல தலைமைத்துவம் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதனால் ஒரு மாணவனுடைய வாழ்க்கையில் நல்லாசிரியன் ஒருவன் ஞான விளக்காகிறான். அந்த வகையில் முறைப்படி வழிகாட்டப்பட்ட மாணவன் மையக் கருவாகிறான். அவனைச் சுற்றி வர பெற்றோர், மூத்தோர், கல்வி தந்த குருமார், இளையவர்கள், ஏனைய உறவுகள் என ஒரு சுற்று வட்டமே இருக்கிறது. இத் தகைய பெறுமதியான மாணவ சமுதாயத் தால் சமுதாய வளர்ச்சி பல மடங்கு பெருகிச் சிறக்கிறது. எனவே ஒட்டு மொத்தமாக நோக்கும் போது இங்கு நாம் கண்ட பல்வேறு காரணங்கள் தகைமைகளால் சமூக வளர்ச்சி யில் மாணவருடைய பங்கு அளப்பரிய தாகும்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைச் சட்டத்தில் மகளிர் தொடர்பான உரிமைகளும் நடைமுறைப் போக்குகளும்



திருமதி. பிரியதர்சினி லக்ஸ்மன்
L.L.B Ceylon,
சட்டத்தரணி.

மனித உரிமைகள் என்ற கருத்தேற்பு நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகின்ற ஓர் விடயமாகும். மனித உரிமைகள். என்றால் என்ன என்பது வரையறுக்கப்பட்ட முடியாத ஒரு நிலையிலுள்ளது. ஒருவன் இனம், மதம், பால், தேசியம் போன்ற காரணங்களுக்காக பாகுபாடு காட்டப்பட லாகாது. மனிதன் இயற்கையிலேயே பிறக்கும் போதே உரிமைகளுடன் பிறக் கின்றான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் தனது உரிமைகளை அனுபவிக்க முடி யாதுள்ளது. அவனது வாழ்க்கை கடினமான தாகவும் துன்பகரமானதாகவும் காணப்படு கின்றது.

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் பின் பொருளாதார, சமூக வாழ்க்கையில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்ட போதும் 2ம் உலகமகா யுத்தத்தின் பின்னரே மனித உரிமைகள் கருத்தேற்றம் வலுவடையத் தொடங்கியன. ஐக்கிய நாடுகள் சபையினால் 1948ம் ஆண்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இதன்பின் காலத்துக்குக் காலம் மனித உரிமைகள் தொடர்பில் பலசமவாயங்கள் உருவாக் கப்பட்டன.

சமவாயங்கள் உருவாக்கப்பட்ட போதும் பெண்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் தெளிவான ஏற்பாடுகள் இல் லாமை பெரிதும் குறைபாடாக காணப்பட்டது. பிள்ளை பிறப்பதற்கு முன்னும் பின்னும் பெண்களுடைய வேலை தொடர்பான சர்வதேச சமவாயங்கள் பிரசவகால நன்மைகள், தரைகீழ் (under ground) பெண்களுடைய வேலைகள் போன்றன தொடர்பில் சமவாயங்கள் உருவாக்கப் பட்டன.

1952ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பெண்களுடைய அரசியல் உரிமைகள் மீதான சமவாயத்தை (convention on the political right of women) உருவாகியது. வாக்களிக்கும் உரிமை எல்லாம் பொதுச் சபைக்கும் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை தொடர்பாகப் பெண்கள், ஆண்களின் உரிமைகளை இச்சமவாயம் சமமாக அங்கீகரித்துள்ளது.

கடந்த முப்பது வருடங்களில் முக்கிய மான வளர்ச்சிகளில் ஒன்றாக பெண்கள் உரிமைகளின் தோற்றம் இருக்கின்றது. உலகம் முழுவதும் மகளிர் அமைப்புக்களில் பெண்கள் உரிமை என்ற விடயம் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. பெண்கள் சகல விடயங்களிலும் சமஉரிமை தேவை என்று போராட்டம் நடத்துகின்றனர்.

திருமணத்திற்கான சம்மதத்தின் மீதான சமவாயம் திருமணத்திற்கான ஆகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த வயது தொடர்பான சமவாயம் (convention on consent to manage minimum age of married and registration of.... 1962) என்பன ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கப்பட்ட போது குடும்பத்திற்குள் பெண்கள் உரிமைகள் என்ற விடயத்தை ஆராய்ந்தால் பராமரிப்பு மரபுரிமை போன்ற விடயங்களில் பெண் கள் பேதம் பாராட்டப்பட்டு வருகின்றனர். சமூகத்தைப் பொறுத்தவரையில் திருமணம் முடிக்காத பெண்ணும், மணநீக்கம் பெற்ற பெண்ணும், விதவையான பெண்ணும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இதற்கு மேலாக திருமணம் முடித்த பெண்கள் தமது சொந்த நலனையும் தொழிலையும் பின்னுக்கு வைத்து குடும்பத்தையே முன்னுக்கு வைக்க வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு உள்ளாகின்றாள்.

இலங்கையைப் பொறுத்தவரை பல் வேறு வகையான சட்டமுறைமை காணப்படு வதால் ஒருவர் எந்த இனத்தைச் சார்ந்த வராக இருக்கின்றாரோ அதே இனத்தைச் சார்ந்த சட்டத்தால் ஆளப்படுவார். கண் டியச் சட்டம் தவிர்ந்த சகல ஆள்சார் சட்டங் களும் கணவனுக்கு முன்னுரிமை கொடுத்தே குடும்ப உறவு பாதுகாக்கப்பட வேண்டும் எனக்கருதுவனவாக உள்ளன.

பெண்கள் உரிமை தொடர்பில் ஓர் விசாலமான தொகுப்பு 1979ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது பெண்கள் சம வாயம் என அழைக்கப்படுகின்றது. இச்சம வாயமானது பால்களிற்கிடையிலான உண்மையான சமத்துவத்தை அமைவதையும் பால் அடிப்படையிலான பாகுபாட்டைத் தவிர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டது. இச்சமவாயமானது பொதுவாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அரசாங்கத் தினாலும், தனிநபர்களினாலும் ஏற்படுத் தப்படும் பெண்களுக்கு எதிரான பாகு பாட்டைத் தடுக்கிறது.

காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் மகளிர் அமைப்புக்களால் ஏற்படுத்தப்படு கின்றது. இதன் மூலம் பெண்களிற்கு ஏற்படும் அநீதிகளைத் தடுக்க முயலு கின்றார்கள்.

அடுத்ததாக இலங்கையில் பெண்கள் உரிமைகள் என்ற கருத்தேற்பு எவ்வாறு இருக்கிறது எனப்பார்க்கலாம். இலங்கையின் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு சட்டத்தின் முன் சகலரும் சமம் என்று கூறுவதுடன் பால் அடிப்படையிலான சமம் எனக் கூறுவதுடன் பால் அடிப்படையிலான வேறுபாட்டையும் தவிர்க்கிறது. வாழும் உரிமை அல்லது ஓர் நபரை பாதுகாக்கின்ற உரிமையை இலங்கை அரசியலமைப்பு பாதுகாக்கத் தவறுவதனால் பெண்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்பான வழக்குகளில் பரிகாரம் கிடைப்பதில்லை. சிக்கல் ஏற்படுகின்றது.

1993ஆம் ஆண்டு பங்குனிமாதம் அரசியலமைப்பில் பெண்களின் பட்டயம் (Women charter) உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் பால் அடிப்படையிலான பாகு பாட்டை அழிப்பதாகும். இப்பட்டயமானது பெண்களின் அரசியல், குடியியல் உரிமை களை பாதுகாக்கின்றது. குடும்பத்திற்குள் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக் கின்றது. பொருளாதாரம் சம்பந்தமான உரிமைகள், சுகாதார உரிமைகள் பாலை அடிப்படையாகக் கொண்ட தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்பான உரிமைகள் என்பவற்றை அங்கீகரிக்கின்றது.

ஆனால் இப்பெண்களின் பட்டயமானது சட்ட ரீதியாக கட்டுப்படுகின்ற ஆவணம் அல்ல எனவே உரிமைகள் மீறப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் நீதி மன்றத்தை நாட முடியாது.

இலங்கை குற்றவியல் சட்டமும் கூடி பெண்கள் மீது இடம்பெறுகின்ற தாக்குதல் தொடர்பில் சில ஏற்பாடுகளைக் கொண் டுள்ளது. 1995ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக்கோவை திருத்தப்பட்டதுடன் பெண்கள் மீது இடம்பெறுகின்ற தாக்குதல் தொடர்பில் புதிய ஏற்பாடுகள் உட்புகுத்தப் பட்டன. இதன்படி பாலியல் வல்லுறவு மீதான சட்டம் திருத்தப்பட்டதுடன் தண்டனைகளும் அதிகரிக்கப்பட்டன.

அடுத்ததாக குடும்ப வன்மைமுறை பற்றிப் (domestic violence) பார்ப்போம். குடும்பங்களில் நிலவுகின்ற புரிந்துணர்வு குறைவினால் இப்பிரச்சினை தோன்று கின்றது. பெண்ணுடன் நெருங்கிய உறவினைக் கொண்டிருக்கும் ஓர் நபரி னாலேயே இவ்வன்முறை ஏற்படுத்தப்படு கின்றது. குடும்ப வன்முறை தொடர்பில் 2005ம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது. வீட்டுக்குள்ளே அல்லது வெளியே தனிப் பட்ட முறையில் புரியப்பட்ட தவறான செயல் அல்லது துஷ்பிரயோகத்திற்காக ஒருவர் நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான உரிமையை இச்சட்டம் வழங்குகின்றது.

தென்னாசியாவில் உள்ள பெண்களின் ஏறக்குறைய ஐம்பது வீதத்தினர் அவர் களின் வாழ்வில் ஏதோ ஓர் கட்டத்தில் வன் முறையை எதிர்நோக்குகின்றனர். ஆய்வு களின்படி இலங்கையில் அறுபது வீதமான பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளா கின்றனர். தொழில் சட்டமும் கூட பெண் களிற்கு வேலைவாய்ப்பு, பதவி உயர்வு, ஊதியம் போன்ற விடயங்களில் பாரபட்சம் காட்டலாகாது எனக் கூறப்படுகின்றது. பன்னிரண்டு வாரங்கள் பெண்ணிற்கு மகப்பேறு விடுமுறை வழங்கப்படுகின்றது.

இவ்வாறு பெண்களின் உரிமைகள் தொடர்பாக பல்வேறு சட்டங்கள், ஏற்பாடு கள் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினாலும் இவை எந்தளவிற்கு நடைமுறைப்படுத்தப் படுகின்றது என்பது கேள்விக்குறியாகும். கல்வி, அரசியல், தொழில், விவாகம், விவா கரத்து போன்ற விடயங்களில் பெண் களிற்கான உரிமை சமமாக வழங்கப் பட்டுள்ளதா? என்று பார்த்தால் அதற்கான விடை இல்லை என்தாகும்.

சமூக. கலாசார, பொருளாதார பின் னணியில் பெண்கல்விக்கு இன்றும் தடை இருப்பதை அவதானிக்கலாம். சில சமூ கத்தில் இளம் வயதில் திருமணம் செய்வ தால் கல்வியைத் தொடர முடியாமல் உள்ளது.

அடுத்ததாக பெண்களின் அரசியல் பிரவேசம் பற்றிச் சற்று ஆராய்வோம். அரசியலில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எங்கள் நாடாளு மன்றத்தில் 5 வீதத்திற்கும் மேலாக பெண்கள் இருந்ததில்லை. குடும்பத்தைக் கவனிக்க வேண்டியிருந்தாலும் அரசி யலில் ஈடுபட்டால் நீண்ட நேரத்தை அதற் காகச் செலவழிக்க வேண்டியிருப்பதாலும் அரசியல் அறிவு போதாமல் இருப்பதாலும் பொருளாதாரப் பிரச்சினையாலும் பெரும் பாலான பெண்கள் அரசியலில் ஈடுபடு வதை விரும்புவதில்லை. ஆண்களும் குறிப்பாக கணவன்மாரும் விரும்புவதில்லை என்பதை விட தடுக்க முற்படுகின்றனர் என்றும் கூறலாம். பெண் அரசியலில் ஈடுபடுவதற்கு குடும்பத்தின் ஒத்துழைப்பு அவசியம். ஆண்வர்க்கம் ஒத்துழைப்பதற்கு எப்போதும் பின்னிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி தொழிற்துறையை எடுத்து நோக்கினால் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு, ஊதியம் போன்ற விடயங்களில் பாகுபாடு தொடர்கின்றது. உலகளாவிய ரீதியில் பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்படும் போது பெண்களின் வேலைதான் முதலில் பறிக்கப்படுகின்றது. அவர்களின் சம்பளம்தான் குறைக்கப்படுகின்றது. தொழில் ஸ்தானங்களில் பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டல்களிற்கு உள்ளாவது தொடரத்தான் செய்கின்றது.

விவாகம், விவாகரத்துப் போன்ற விடயங்களிலும் பெண்கள் பாகுபாடு காட்டப்பட்டுவிடுகின்றார்கள். திருமணம் சந்தோசமாக இருந்தால் பிரச்சினை இல்லை. அவ்வாறு இல்லாவிட்டால் பிள்ளை பராமரிப்பு, சொத்து போன்ற விடயங்களில் பிரச்சினைகள் தோன்றும்.

இலங்கையில் சீதனம் கொடுக்கும் வழக்கம் உள்ளது. இவ்வழக்கமானது ஏழைப் பெண்களைப் பொறுத்த வரையில் அனுகூலமற்றதாகக் காணப்படுகின்து. மனித உரிமை ஆர்வலர்களும் பெண்கள் அமைப்புகளும் பெண்களின் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்று கூறினாலும் பால்பாகுபாடு தொடரத்தான் செய்கின்றது. இதனை இல்லாதொழிக்க சகல தரப்பினரும் முன்வரவேண்டும்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Preventing Teen Drug Abuse Challenges and Solutions

K. Rameshkumar
Kokuvil Hindu College.

Drug abuse is one of the major problems in the world today. It is really a challenging task for each and every government, since it involves the younger generation of this universe. It is far more dangerous in the western countries like South America, U.S.A, and some of the European countries. But this has already spread even in the Asian countries in the recent past.

During the early part of 20th Century and even before that period, Opium and Ganja were extensively used in Ayurvedic Medicine. Opium is a Narcotic substance extracted from a plant called "Indian Hemp" or "Poppy". This plant was widely grown in India and Andaman Islands. It was smuggled into our country during the colonial period and cultivated in the southern forest areas. These plants were later introduced to other countries such as Brazil, Peru, Florida and California.

People used to take Opium with Ayurvedic medicine as a cure for all types of diseases. They believed that it can cure diseases even if taken for one or two days. It is such a quick healer for any disease. It has a stimulating effect in the human body and can stimulate blood circulation. But it has a toxic effort too and even if taken in small quantities it tends to affect the health in most cases. People start taking Opium and Ganja as an alternative for alcohol to get some kind of pleasure without realizing the side effects. This habit of taking Opium and Ganja for some kind of pleasure started all over the world. Especially, the younger generation in western countries were attracted to this habit. They became addicted to this bad habit. Those who have acquired this habit find it hard to get rid of it. Thus the demand for these Narcotics grows every day and people start to smuggle and sell Opium to meet these demands. This has become a very good business for some people. It has created lot of International problems. Most countries brought resolutions to ban the possession and selling of these substances and they imposed strict measures to destroy and eradiate (The growing of) these plants.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

This has resulted in people finding new types of narcotic drugs, such as Heroin, Cocaine and Morphine which are most dangerous than Opium and Ganja.

The trade name or the most popular name for heroin is "Brown Sugar". They use some other code words also when these are smuggled illegally from one country to another. From recent times, these drugs are manufactured in the form of capsules, pellets and pills so that it is easy to smuggle. These drugs can be consumed orally or in the form of injection.

The reasons for taking these drugs, as many people say, is that they can relief pain in the body, especially after accidents. They are taken also to seek pleasure when people are in distress. Some people say that they can completely forget their worries by taking drugs, but most of the teenagers, especially in the developed countries, are attracted by these drugs due to curiosity and also for pleasure. This habit spreads among the youngsters due to the influence of bad friends. Some youths take these drugs as an alternative for alcohol without realizing the side effects of them. Even good things can be harmful when done to excess. The abuse of psychotropic drugs is a phenomenon generally confined to students, athletes, sportsmen and athletes take these drugs in order to acquire more stamina and in some instances it has been proved to be true. During the last Seol Olympics Games, the famous runner Ben Johnson of Canada was found guilty of taking drugs when he won the 100 meters event. He was later debarred from taking part in future games.

Most of the young boys and girls get attracted by these drugs and become addicted to this bad habit. Some, even lose their senses under the influence of these drugs and commit murders. Some of the great international robberies are also carried out by such drug addicts. This has created a serious problem all over the world in recent times. It has affected the social. economic, medical and political factors of each country.

Drug trafficking has become a very good money making business in the present world. There are agents to smuggle these drugs from one country to another and they are called drug traffickers. These people demand more money and they become rich in next to no time.

Sri Lanka is also one of the transit points in the drug trafficking business. Some of the refugees also get attracted by this business in order to make money.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka and other Asian countries are also facing a big problem due to this. The use of drug is spreading rapidly in India, Indonesia, Taiwan and other developing countries. Thus the world as a whole is finding it very difficult to control this menace. It has become a great challenge for the government in most of these countries.

Many countries have introduced strict laws and regulations to overcome this problem. Countries like Middle East, Malaysia, Singapore have introduced the death penalty for drug traffickers and drug pushers. Recently, two persons were sentenced to death in Malaysia for smuggling drugs. But whatever strict measures are taken, it is very difficult to wipe out this problem because in the western countries, parents have given lot of freedom to their children. It is very difficult to control and convince them about this problem. Their affection and care for the parents are also going bad to worse.

The only solution for this great problem is to teach them the bad effects of these drugs at school levels, even at primary levels. They should be taught and shown hazardous nature of these drugs. Seminars, lectures and symposium could be arranged at secondary school levels. The radio and television could organize programmes to discourage the use of these drugs. Documentary video films could be produced to show what is happening around the world. The younger generation must be made to feel shy about this bad habit. The illegal manufacturers, drug traffickers and drug pushers must be exposed to the public and punished severely. Unless the younger generation realizes the real danger of drug abuse, it is not easy to control it completely.

From the magazine "The Breeze" published by the English Union of Kokuvil Hindu College.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காச நோய்



Dr. A.R. Vimalan, MD
Medical Officer
Teaching Hospital Jaffna.

காசநோய் என்பது பக்றீரியா நுண் கிருமிகளால் ஏற்படும் ஒரு தொற்று நோயாகும். பொதுவாக இந்நோயானது சுவாசப்பையைத் தாக்குகின்றது. இதைவிட உடலின் அனைத்து உறுப்புக்களும் இதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றன. காசநோயின் பாதிப்பு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாக உள்ளவர்களில் அதிகமாக காணப்படு கின்றது. உதாரணமாக :

- நீரிழிவு நோயாளிகள்
- HIV தொற்றுடையவர்கள்
- மதுபானம் அருந்துவோர்
- சிகரெட் பாவனையாளர்
- போசாக்கின்மையாற் பாதிக்கப் பட்டுள்ளோர்
- சிறைக் கைதிகள்

காசநோய் பரவும் முறை

சுவாசப்பையில் காசநோய் இருப்பது மற்றவர்களுக்கு ஆபத்தானதாகும். ஏனெனில் அது ஒருவரில் இருந்து மற்ற வருக்கு இலகுவாக தொற்றுகின்றது. காச நோயாளியான ஒருவர் மூக்குப் பகுதியை மூடாது இருமும் போதும், தும்மும் போதும், காசநோய்க் கிருமிகள் காற்றில் விசிறப் படும். அக்காற்றை இன்னொருவர் சுவாசிக்கும் போது நோய்க்கிருமிகள் அவரது சுவாசப்பைக்குள் சென்றுவிடு கின்றன. குடும்ப அங்கத்தவர்களுக்கு கிருமித்தொற்று ஏற்பட இலகுவாகின்றது. காற்றோட்ட வசதி குறைவான வீட்டில் பலர் வசிக்கும் போது தொற்றும் தன்மை அதிகமாகின்றது. போதியளவு சுத்தமான காற்று இல்லாதவிடத்தும் அவருக்கும் காசநோய் ஏற்படக்கூடும்.

காசநோயின் அறிகுறிகள்

- மூன்று கிழமைக்கு மேல் இருமல் காணப்படுதல்.
- சளியுடன் இரத்தம் வெளியேறுதல்.
- இரவில் வியர்த்தலுடனான காய்ச்சல்.
- உடல் நிறை குறைதல்.
- களைப்படைதல்.
- மார்பில் வலி
- நிணநீர்க்கணுக்களில் ஏற்படும் வீக்கம்.
- உணவில் விருப்பமின்மை.

நோய் நிர்ணயம் செய்தல்

1. நுரையீரல் காசநோயைக் கண்டறிவதற்கு நுணுக்குக் காட்டியின் உதவியுடன் மூன்று சளி மாதிரிப் பரிசோதித்தல்.
2. காசநோய்க் குணங்குறிகள்.
3. X-ray கதிர்ப்படம் (நெஞ்சுப்பகுதி)
4. மாண்டு பரிசோதனை (Mantoux test)
5. தொற்று ஏற்பட்டவர்களுடன் தொடர்புகள் உள்ளதற்கான சான்றுகள். (Contavt history)
6. பயொப்பி (Biopsy) பரிசோதனை
7. CT ஸ்கான் பரிசோதனை
8. குருதி, சிறுநீர் பரிசோதனை

சிகிச்சை முறை

காசநோய் உள்ளவர்களை இனங்கண்டு சரியான நேரத்தில் சரியான கால இடைவெளி யில் சரியான அளவில் காசநோய் எதிர்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகளை சுகாதார உத்தி யோகத்தர் நேரடி அவதானிப்பின் கீழ் நோயாளி யினால் உள்ளெடுக்கப்படுமிடத்து இந் நோயின் தாக்கத்திலிருந்து முற்றாக குண மடையலாம். மிகக் கடுமையான காச நோயாளிகள் மட்டும் வைத்தியசாலை யிற் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின் றார்கள். காசநோய் பரவுவதைத் தடுப்ப தற்கான நோயாளியை தனிமைப்படுத்தும் பொருட்டு வைத்தியசாலையில் அனுமதிப்பு அவசியமானதல்ல.

சிகிச்சை முறையின் நோக்கம்

1. நோயாளியை இனங்காணுதல்.
2. நோயில் இருந்து காப்பாற்றுதல்.
3. இந்நோயினால் ஏற்படும் இறப்பையும், பின்விளைவுகளையும் தடுத்தல்.
4. சமூகத்தில் இந்நோய் பரவுவதைத் தவிர்த்தல்.
5. காசநோய் மீள்வருவதைத் தடுத்தல்.
6. காசநோயக் கிருமிகள், காசநோய் எதிர்ப்பு மருந்துகளிற்கு எதிர்ப்புத் தன்மை பெறுவதைத் தடுத்தல்.
7. இந்நோய் பற்றிய அறிவினை ஏற்படுத்தி எதிர்காலத்தில் இந்நோயை முற்றாக ஒழித்தல்.

காசநோய் பரவுவதைத் தடுத்தல்

1. நோய்வாய்ப்பட்டவர்கள் இருமும் போதும், தும்மும் போதும் மூக்கு, வாய்ப் பகுதிகளை கைக்குட்டை யினால் மூடிக் கொள்ள வேண்டும்.
2. நோயாளியின் சளியினைச் சேக ரித்துப் புதைத்தல் அல்லது எரித்தல்.
3. நோயாளியை ஆரம்பத்திலேயே இனங்காணுதல்.
4. நோயாளிக்குப் பூரண சிகிச்சை அளித்தல்
5. இந்நோயினால் பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தவர்களைக் காசநோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தல்.
6. நல்ல ஒளியும் காற்றோட்டமும் உள்ள இடங்களில் வசித்தல்.
7. நல்ல போசாக்குள்ள உணவுகளை உட் கொண்டு நோய் எதிர்ப்புத் தன்மையினைப் பேணுதல்.
8. மக்களிடையே காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
9. காசநோய் பற்றிய மருத்துவ ஆலோ சனையைப் போதனா வைத்தியசாலை யிலும், யாழ் பண்ணை வைத்திய சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
10. குழந்தைகளுக்கு பிறந்த 24 மணித்தி யாலத்திற்குள் சுகதேகியாயின் பி.சி.ஜி. எனப்படும் தடுப்பூசி மருந்தைப் போட்டுக்கொள்ள வேண்டும்.

காசநோய் மருந்துகளை உட்கொள்ளும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்

1. ஓங்காளம், உணவில் விருப்பமின்மை. வயிற்று நோய், செம்மஞ்சள் அல்லது சிவப்பு நிறமான சிறுநீர் வெளி யேறுதல் போன்ற குணங்குறிகளைப் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

2. மூட்டுவலி, பாதத்தில் எரியுணர்வு போன்ற குணங்குறிகள் காணப்படு மிடத்து நோயாளி சுகாதார நிலையத்தை நாடவேண்டும்.

3. தோலில் சொறி, எரிச்சல், தோல் / கண்கள் மஞ்சள் நிறமாதமல், அடிக்கடி வாந்தி எற்படல், காதுகேளாமை, தலைச்சுற்று, கண்பார்வை குறை வடைதல் போன்ற குணங்குறிகள் காணப்படுமிடத்து சிகிச்சையை இடைநிறுத்தி உடனடியாக சுகாதார வள நிலையத்தினை நாடவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசநோய்க்கு நாளொன்றுக்குத் தேவையான உணவு

சைவபோசனம்

தானியங்கள்	200g
பருப்பு	50g
கச்சான்	50g
பால்	1.5L
பச்சை இலைகள்	650g
காய்கறிகள்	50g
கரட்	50g
பழம்	100g
தாவர எண்ணெய்	40g
சீனி	80g

அசைவ போசனம்

தானியங்கள்	200g
பருப்பு	30g
கச்சான்	30g
பால்	1L
முட்டை	1
இறைச்சி / மீன்	50g
காய்கறிகள்	50g
கரட்	100g
பழம்	200g
தாவர எண்ணெய்	30g
சீனி	80g

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Memories of my alma mater

Mr. S. Thadchanamoorthy
Malaitivu

My Arivari Amma (lower kindergarten teacher) was a polite and kind lady. She was slightly plum and of a dark complexion, but definitely not as dark as me!.

When the interval bell rings all the students would run to her table to take a piece of bread; I used to be seated on my bench during the interval, without joining the rush. One instance runs in my mind to date – her getting up from her seat and bringing me a fine loaf of bread with that tasty pinkish and beautiful sambol. I always liked that kind of sambol; my mum prepared it once in a way; but this one at the school must have been tastier because Maldivian dry fish would have been added – we were strict vegetarians at home! My Arivari Amma must have done the same for me every day, but one such instance lingers in my memory along with her countenance.

Let me explain to the readers about the bread we ate during the interval! It must have been 1949 and the Prime Minister of Ceylon – that was how people called the country – must have been Mr.D.S.Senanayake. It was the Minister in charge of education, Mr. Kannangkara, who introduced the free education bill, in 1944. It meant from Primary School to the completion of University education, one could get education without having to pay any fees – our school charged facilities fees, which was a very small amount. The government of the day didn't stop there. They gave free food during interval and milk at the community centers. We had surplus budgets and the government was bent on welfare too.

I don't remember my Arivari Amma ever resorting to physical punishment. At that time and in that era, caning, slapping on the cheek and pinching were very common among teachers. But the teacher, Raguamma (this is not her actual name!), of the next class, grade 1, was in sharp contrast to my Arivari Amma – this I came to know few months later, when I become a student of that class. Arivari Amma used to take her time to go to the end of the screen where she could meet and talk to Raguamma – it was a screen which stood between two classes at that time.

During such a discussion Raguamma and Arivari Amma took a decision , which affected my life. They decided to transfer me to go grade 1, almost at the middle of the academic year!. My Arivari

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Amma must have politely taken me to the grade one class. I don't remember an iota of any explanation she might have given me for such a "cruel" act!. My life went on in grade one classroom. Although my Raguamma never punished me, I used to see the agony of my mates when they are pinched. That was enough to make me tensed up and sad. I don't think I was much of a healthy fellow and I was very lean for my age. Anyhow I managed through the work she gave in the class.

One evening water was slowly moving along the narrow small channels down to distant plants in the compound of my house. Water was being poured out continuously from the well. Filled with joy, I was jumping and running about allowing paper boats to move along the channels and enjoyed myself in the pool of water collected under plants. But I would have been always closer to my mum who would have been diverting the water from one plant to other. When she went to the kitchen, I too followed her. She was preparing the tea for all, the workers and us. I sat down on the bottom bar of the wooden frame of the kitchen door and began packing at the bottom bar with a curved knife causing minor cuts on the bar. More than anything else it would have been a sound pollution to my mum!

She said, 'stop this; go and study. Raguamma will put you back at the kindergarten, if you play and waste your time like this. 'Before she completed, I began crying saying, 'Amma it has happened. Today Raguamma moved me to kindergarten' she didn't believe. She carried the message to my dad when she went with the tea. My parents postponed the matter and began talking to me later in the night. Finally they found out it was true that I was severely punished by my Raguamma that morning and violently moved to the kindergarten class.

She gave an addition having four numbers or so and each having three digits. I quickly finished and ran to the teacher. Looking at it she went wild and her fingers quickly help a large area of skin and flesh around my naval and screwed it to such a point, that I began standing on my toes and crying for mercy. Within that short time she took the decision to move me to the kindergarten class. I remember she didn't take her fingers off my naval and from the twisted hold until I reached my seat in the kindergarten class – but in retrospect, I feel it couldn't have been, unless she was extremely short!

In the kindergarten class my Arivari Amma was no more there to receive me, console me and inquire into the atrocity committed on me!. I don't know how and when it came into my mind that she had gone on maternity leave. I didn't even know she was expecting a

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

child while she was teaching me!. The teacher, now in charge was her husband, Mr. sathasivam – I am correct!. The name too, I don't know how it lingers in my mind to date.

Mr. Sathasivam was a lean, tall and straight man, wearing a heat well ironed white dress – verti, long national shirt and a Shaw!. He had a cane with him – which, I remember, he used sparingly! His relationship with the students was very formal he was a gentleman sort of and I don't remember he asked anything from Raguamma! Sathasivams were from Chavakacheri – which too I remember – perhaps because Chavakacheri was known to me from my childhood days as a place my dad goes to, to purchase large bundles of tobacco at the Friday market.

After confessing everything to my parents, I was somewhat relaxed, but must have subconsciously worried over the insult made about me. They called me much later and asked me about the addition that was given at the class. They must have figured out that it was an addition involving ¾ digits and ¾ numbers, written vertically. Then they gave me an addition and asked me to do.

They must have been shocked to see a very wrong answer. I used to work such additions at home and for that matter very quickly. I got the speed from my father. He used to do addition of very long list of numbers and I used to enjoy watching the speed and elegance with which he did. Those numbers he added to do his business transactions. I got from my mom, the basic principles of arithmetic; she used seeds to introduce to me the principles behind addition, multiplication, ones place, tens place, hundred place, etc. She was a good teacher indeed. Then how come that morning, I did it wrongly. I think my parents must have spent a lot of time thinking over the additions I had done for them on their request. One of them must have made the discovery - I had added the first vertical line of digits on the left – hand side first and move to the right, line by line!.

May I venture to give an example for the readers!

Add :
2341
3472
4691
2812
1238

Once they discovered my mistake, it must have been very simple for them to point out to me the mistake I made in the class that morning. It might not have taken even two minutes, not the six months my Raguamma thought for me, to put me back on that pedestal that led me to be promoted in the middle of the year! I was given my dinner and asked to sleep. Next morning I must

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have been given one or two additions, which I must have done very quickly and correctly!.

My father took me to the school on that day and I vaguely remember we were joined by my private tutor as we entered the school compound – the tutor, who could only teach rudiments of English, was a friend of my father and he always accompanied my dad when he came to the school. I walked with them not knowing what was on the agenda! We met the headmaster of the primary section of Kokuvil Hindu College. He must have been walking closer to his desk when we met him. My father presented the case to the Headmaster and after a brief discussion we were sent to my grade I teacher – she was in the class at her desk. My father spoke: son has a health difficulty; his hearing is not good; doctor is attending to it; yesterday it appears he made a mistake in addition. Before she responded to it, my father quickly added, please give him now any addition or multiplication or division! My teacher promptly gave a big addition. She must have got a shock of her life, when she saw my working. She quickly gave subtraction, multiplication etc as it became a challenge to the decision she had taken the previous day. In the mean time my father began talking about my hearing problem (what has hearing to do with the issue in front)! Raguamma sent me to my seat!

The Headmaster was Mr. Kanapathippillai. I don't think I got his appearance into my mind at that time I was with my father. I remember his large table was in the corridor in front of the row of classroom – all classrooms opened into the corridor and the each classroom was bounded on either side by moveable wooden screens.

But I remember vividly the appearance of Mr. Kanpathipillai, to date as a broad shouldered, tall and smart man; he was fair complexioned in white national uniform (long white shirt and verti) and his sparse hair was combed towards his nape; he carried a cane with him – and he often made an upward jerk of his broad shoulders, if my memory is right, and this added to his already imposing personality. This portrait of my Headmaster, as I said earlier, didn't get in when I was in grade one. Instead it happened while my dad was interacting with the Headmaster, when I was in grade 4 or 5, regarding a difficulty I had in the class in adjusting to a bully. The action taken by the Head master paved way for an understanding (a modus Vivendi) between us.

Interestingly the bully must have been a key musician cum dancer in the first ever Baila (a dance) I saw – much later, as an undergraduate of the University of Ceylon in Peradeniya, I saw and to some extent took part few times

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in the Baila my Singhalese friends performed in the hostel rooms.

It was the day we had the entrance examination to the secondary school. And for that examination students from few other smaller schools too had come – if they passed they too would join grade 6 at Kokuvil Hindu College. My cousin came from Gnana Panditha Vidhyasalai and I guided him inside the school. He was little careful and respectful to this 'big' school. I was proud and happy that day because, my cousin was seeing for the first time the inside of my 'great' school. But then there was nothing for me to show as big and great there. I was myself a backward child at the school and I used to come to the 28th or 29th position in a class of 30 students, in the terminal examinations! By the grace of God I was always in the A class. Then the miracle happened. The bully and others showed the greatness of our school! They formed a circle inside the examination hall and began singing and dancing – these are grown up ones and must have spent more than a year at a class. I was thrilled – there was something my cousin could see and feel the greatness of my school!

The Headmaster Mr. Kanapathipillai, my Arivari Amma, Raguamma, my parents, Mr. Sathasivam, my totor, the bread the bullies and the baila type of noisy dance the matured boys boldly performed before the examiners start arriving for the after – interval examinations and few more scenes make up my picture of mu primary school. I must warn my readers that there could be factual errors and exaggerations in my write – up as it is an attempt to draw a portrait of a part of my alma mater as I saw it decided ago. – I must confess to the readers that I didn't have the good habit of maintaining a diary, which I regret very much.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் நினைவாக...

செல்லையா சிவானந்தன்
பிராந்திய முகாமையாளர்
ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ்ப்பாணம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னை நூற்றாண்டு நிறைவு செய்வது கண்டு கல்லூரியின் பழைய மாணவன் ஆகிய நான் மட்டற்ற மனநிறைவடைகின்றேன். இக்கல்லூரியில் சிறு வயதில் கல்விகற்கும் வாய்ப்புக் கிடைக்காவிட்டாலும் உயர்தரம் கற்பதற்கு அனுமதி கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன். இக் காலத்தில் கால் பதிக்க முடிந்ததால் கிடைத்த காலத்தில் முழுமையாகக் கற்பதற்கு ஊக்கம் தந்த ஆசிரியர்களையும் நினைவு கூர்ந்து பொறியியற்துறைக்குத் தெரிவு செய்யப் பட்டதையிட்டுப் பெருமகிழ்வடைகிறேன்.

எமது அன்னையானவள் கடந்த நூறு ஆண்டுகளாகக் கல்விச் சேவையை வழங்கி இன்று யாழ்ப்பாணத்தின் கல்விக் கலைக்கூடமாக விளங்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி, கல்விப்புலத்தில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும் தனித்துவமான இடத்தைப்பெற்றுள்ளது.

சான்றாண்மைமிக்க மாணவர்களை உருவாக்கியதன் பயனாக எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் சர்வதேச ரீதியில் வியாபகம் பெற்றிருப்பதையிட்டு பெருமை அடையாமல் இருக்கமுடியாது.

ஆளுமைத் திறன் மிக்க அதிபர்களும், அற்பணிப்பு மிக்க ஆசிரியர்களும், பண்புடைமைக்கு உரித்தான மாணவர்களும் கொக்குவில் இந்து அன்னையின் பெருமைக்கு இலக்கணமாய் அமைந்துள்ளனர். இப் பெருமைகளோடு யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியில் நிமிர்ந்து நின்று நூற்றாண்டு காலமாக கல்விப் பணியை வழங்கிவரும் எமது கல்லூரியின் புகழ் மேன்மேலும் உலகமெலாம் பரவவேண்டும்.

வாழ்க உன் புகழ்! வளர்க கொக்குவில் இந்துக் கல்லூரி.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருதிச்சோகையைத் தவிர்க்க முடியுமா?

செல்வி. வி. கௌசல்யா
மருத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.
(இறுதியாண்டு)

அண்மைக்காலமாக எமது சமூகத்தில் அதிகரித்து வரும் பல்வேறுபட்ட நோய் நிலைமைகளுக்கு மத்தியில் குருதிச் சோகையானது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பொது சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஆய்வுகளின் அடிப் படையிலான தரவுகளின் படி இலங்கையில் காற்பங்கு வரையிலான பெண்களும், சிறுவர்களும் இந்நோய் நிலைமைக்காளாகி இருப்பதாக அறியப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக தொடர்ந்து இடம்பெற்ற போர்க்காலச் சூழல், இடப்பெயர்வுகள், உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு, மக்கள் மத்தியில் போசாக்கான உணவுகள் பற்றிய போதிய அறிவின்மை மற்றும் முறையற்ற சுகாதார பழக்கவழக்கங்கள் போன்றன எமது சமூகத்தில் இந்நிலைமைகளை மேலும் அதிகப்படுத்தும் காரணிகளாக உள்ளன. இந்நிலையில் குருதிச்சோகை பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும்.

குருதிச்சோகை என்பது மனித உடலில் உள்ள குருதியில் காணப்படும் ஹீமோகுளோபின் (Haemoglobin) எனும் புரதத்தின் அளவு குறித்த நபரின் பால் மற்றும் வயதிற்குரியதான அளவை விடக் குறைவடைதல் ஆகும்.

குருதியில் உள்ள ஹீமோகுளோபி னானது உடலிழையங்களுக்குத் தேவையான ஒட்சிசனை வழங்குதலுடன் தொடர்புடையது. ஒட்சிசனானது உடலிழையங்களிற்கு இன்றியமையாதொன்றாகும். எனவே, குருதிச்சோகை நிலைமையின் போது உடலிழையங்களிற்குத் தேவையான ஒட்சிசனை வினைத்திறனுடன் வழங்கும் ஆற்றலில் குறைவு ஏற்படுகின்றது.

இவ்வினைத்திறன் குறைவதனால் உடலில் பின்வரும் அறிகுறிகள் உணரப் படலாம்.

- உடல் வெளிறல் - பிரதானமாக நாக்கு, உதடுகள், கண் மடலின் உட்பகுதி போன்றவற்றில் அவதானிக்க முடியும்.
- உடல் இலகுவில் களைப்படைதல்.
- நெஞ்சு படபடப்பு, மூச்செடுக்க கடினமாக இருத்தல்.
- இலகுவில் உடையும் தன்மையுடைய நகங்கள்.

இவற்றிற்கு மேலதிகமாக சிறுவர்களில்,

- பசியின்மை.
- பொருத்தமற்ற பதார்த்தங்களை (மண், பற்பொடி, பெயின்ற்) உட்கொள்ளல்.
- உடல் வளர்ச்சி குன்றுவதுடன், ஆரோக்கியமான உடற் செயற்பாடு களில் ஈடுபடமுடியாமை.
- கற்றல், கிரகித்தல் போன்றன பாதிக்கப் படல்.
- அடிக்கடி நோய்த் தொற்றுக்கு உள்ளாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதிச்சோகையானது போசாக்கின்மை, குடற்புழுக்களின் தாக்கம், அதிகரித்த குருதிப் பெருக்கு, என்பு மச்சையின் செயலிழப்பு அடங்கலான பல்வேறுபட்ட காரணிகளால் ஏற்படுகின்றது. இவற்றுள் போசாக்கின்மையால் ஏற்படும் குருதிச் சோகையானது இரும்புச்சத்துக் குறைபாடு, விட்டமின் B_{12}, போலிக்கமில குறைபாடு ஆகியவற்றால் ஏற்படுகின்றது. இவ்வாறான இன்னோரன்ன காரணிகளிற்கு மத்தியில் இரும்புச்சத்து குறைபாடு உலகளாவிய ரீதியில் 50% ஆன குருதிச்சோகைக்கு காரணமாக உள்ளது.

இரும்புச்சத்து குறைபாடு ஏற்படுவதற்கான காரணிகள் யாவை?

இரும்புச்சத்து குறைபாட்டால் ஏற்படும் குருதிச்சோகையானது இரும்புச்சத்துக் கொண்ட உணவுகளை மிகக் குறைந்தளவில் உள்ளெடுத்தல், உடலில் மிகக் குறைந்த அளவில் அகத்துறிஞ்சப்படல், மற்றும் அதிகரித்த குருதியிழப்பு உதாரணமாக மாதவிடாய் காலங்களில் ஏற்படும் கடுமையான குருதிப்போக்கு போன்ற வற்றால் ஏற்படுகின்றது.

ஆண்களிலும் பார்க்க பெண்களில் சேமித்து வைக்கப்படும் இரும்புச்சத்தின் அளவு ஒப்பீட்டளவில் குறைவானது என்பதாலும், மாதவிடாய் காலங்களின் போது ஏற்படும் குருதியிழப்பு காரணமாகவும் பெண்களே அதிகளவில் குருதிச்சோகை நிலைமைக்கு உள்ளாகின்றனர். கர்ப்பிணித் தாய்மார்களிலும், பாலூட்டும் தாய்மார்களிலும் இரும்புச்சத்தின் தேவை அதிகரிப்பதனால் இவர்களும் இலகுவில் பாதிக்கப்படுகின்றனர். மேலும் உடலின் வளர்ச்சி வீதம் (குருதியின் அளவு, உடற் தசைகளின் பருமன்) அதிகரிக்கும் காலப் பகுதிகளில் அதிகளவு இரும்புச்சத்து தேவைப்படுவதால் இரும்புச்சத்துக் குறைபாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது. இவ்வாறான சந்தர்ப் பங்களில் உணவில் சேர்க்கப்படும் இரும்புச் சத்தின் அளவை அதிகரிப்பதன் மூலம் குருதிச்சோகையைத் தவிர்க்க முடியும்.

மேலும் குடற்புழுக்களின் தாக்கத்தின் போது அவை குருதியை அகத்துறிஞ்சுவதன் மூலமும், இவற்றின் மூலம் குடலினுள் ஏற்படும் குருதிக் கழிவுகள் மூலமும் குருதியானது இழக்கப்படுவதனால் இரும்புச்சத்துக் குறைபாடு மேலும் அதிகரிக்கின்றது. இக்குடற் புழுக்களின் தாக்கம் பொதுவாக சிறுவர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே குடற்புழுக்களின் தாக்கத்தையும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

பாடசாலை செல்லும் இளம்பரா யத்தினரின் உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றைய வயது வந்தவர்களிலும் பார்க்க அதிசயமானது. இவர்கள் தமது பிரதான உண வேளைகளை பெரிதும் அலட்சியப் படுத்துகின்றனர். பொதுவாக காலை வேளை உணவுகளை பாடசாலை செல்லும் போதும், பின்னர் மாலை நேர வகுப்புக்கள் காரணமாக மதிய உணவையும் தவிர்க் கின்றனர். மேலும் பெரும்பாலான சந்தர்ப் பங்களில் நண்பர்களுடன் வெளியிடங்களில் உண்ணும் பழக்கத்தைக் கொண்டிருப்ப தனால் பெற்றோர் தகுந்த முறையில் கண் காணித்து போதிய ஊட்டச்சத்துள்ள உணவை வழங்க முடியாது போய்விடு கின்றது.

சிற்றுண்டிகள், இனிப்புகள் போன்ற வற்றையும் அதிகளவில் இடைநேரங்களில் உட்கொள்வதனால் போசாக்கான உணவு களை உண்ணத் தவறுகின்றனர். அத்துடன் பழங்களையும், பச்சை மரக்கறிகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய அளவில் உண்பதில்லை. இந்த வயதினர் எளிதில் மூடநம்பிக்கைகளுக்கும், போலியான உணவுப் பழக்க வழக்கங்களுக்குமாளாகின்றனர். இதனைத் தடுக்க பெற்றோரின் வழிகாட்டல் இன்றியமையாததாகும்.

மேலும் தாய் தந்தையரின் வேலைப்பழு காரணமாக வீட்டில் தயாரிக்கப்படும் உணவுகளில் போசாக்கின் தரத்தை கருத்தில் கொள்ளாமல் விடுவதுடன் சிறுவர்களின் உணவுப் பழக்க வழக்கங்களையும் சரியான முறையில் காண்காணிக்க முடியாதுள்ளது.

குருதிச்சோகையைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் :

1) சிவப்பு நிற இறைச்சி, ஈரல், முட்டை மஞ்சட் கரு, மீன் மற்றும் கருவாடு போன்ற மாமிச உணவுகளையும், அவரையினங்கள், முழுத்தானியங்களாலான உணவுப் பண்டங்கள், பச்சை இலைவகைகள், மரக்கறிகள் போன்ற இரும்புச்சத்தை அதிகளவில் கொண்ட தாவர உணவுகளையும் பிரதான உணவில் கட்டாயமாக சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.
2) உணவு சமைத்தலின் போது தாவர உணவுகளில் உள்ள இரும்புச்சத்தின் அகத்துறிஞ்சலை மிகைப்படுத்தக் கூடிய வழிமுறைகளைக் கையாள வேண்டும். உதாரணமாக
   - தோசை, அப்பம் போன்ற புளிக்க வைத்து மாவாக்கிய தானியங்களில் இருந்து உணவு தயாரித்தல்.
   - முளைக்க வைத்த நிலையில் தானியங்கள், பருப்பு வகைகள் (பயறு, கடலை) என்பவற்றைப் பயன்படுத்தல்.
3) விட்டமின் C அதிகம் உள்ள எலுமிச்சம்பழம் போன்றவற்றையும், அமிலத்தன்மையுள்ள புளி என்பவற்றையும் உணவில் சேர்ப்பதன் மூலம் இரும்புச்சத்தின் அகத்துறிஞ்சலைக் கூட்ட முடியும்.
4) மேலும் சீரகம் போன்ற இரும்புச்சத்து அதிகம் கொண்ட வாசனைத் திரவியங்களையும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.
5) மாசிக் கருவாடு, நெத்தலித்தூள் போன்ற விலங்குப் புரதங்களை குறைந்த அளவிலேனும் ஒவ்வொரு தாவர உணவுகளிலும் சேர்ப்பதன் மூலம் அவற்றிலுள்ள இரும்புச்சத்தின் அகத்துறிஞ்சலை அதிகரிக்க முடியும்.
6) அதிக பழ வகைகளை உணவின் பின் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
7) தேநீரில் காணப்படும் தனின், கோப்பியில் காணப்படும் கபின் போன்ற பதார்த்தங்கள் இரும்பின் அகத்துறிஞ்சலைக் குறைப்பதனால் அவற்றைப் பிரதான உணவு வேளைகளிற்கு முன்னரோ அல்லது பின்னரோ குறைந்தது ஒரு மணித்தியாலத்தினுள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
8) பெற்றார்கள் தாமும் சரியான உணவுப் பழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் சிறுவர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும்.
9) ஒழுங்கான முறையில் கைகளைக் கழுவுதல், மலங்கழித்த பின்னரும், உணவு உண்ணவும், தயாரிக்கவும் முன்னரும் கைகளை சவர்க்காரமிட்டு கழுவுதல் போன்ற செயற்பாடுகளை வழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
10) பழங்கள், மரக்கறிகள் போன்றவற்றையும், சமையல் பாத்திரங்களையும் நன்கு நீரில் அலசிக் கழுவவேண்டும். (அத்துடன் தேவையேற்படின் தொற்று நீக்கியைப் பயன்படுத்தலாம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) எமது சுற்றாடலை மனிதனதும், விலங்குகளினதும் உடற்கழிவுகளில் இருந்து மாசடையாதவாறு துப்பரவாக பேண வேண்டும். இதன் மூலம் குடற் புழுக்களின் பரவலைக் கட்டுப்படுத்த முடியும். இதற்கு குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மலசலகூடங்களை பயன்படுத்துவதை கட்டாயமாக்கிக் கொள்ளல் வேண்டும். வீட்டு வளர்ப்பு பிராணிகளால் சிறுவர்கள் விளையாடும் இடங்கள் அசுத்தமாகாதவாறு அவற் றிற்கென தனியான இடங்களை ஒதுக்கி அங்கு வளர்த்தல் வேண்டும்.

12) மலசலகூடங்களிற்கு செல்லும் போது பாதணிகள் அணிந்து செல்லல் வேண்டும்.

13) சுற்றாடலையும் வீட்டையும் அடிக்கடி துப்பரவு செய்தல் வேண்டும்.

14) குடற்புழுத்தாக்கம் அதிகமாகக் காணப் படும் இடங்களில் ஒழுங்கான கால இடைவெளிகளில் குடற்புழுக்களை அழிக்கும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். (பொதுவாக 6 மாத கால இடைவெளிகளில் வழங்கப்படுகின்றது.)

சிகிச்சை முறை :

குருதிச்சோகையை தவிர்ப்பதற்கான சுயமான வழிமுறைகள் பயனளிக்காத விடத்தும், குருதிச்சோகையின் தாக்கம் தவிர்க்கமுடியாதவிடத்தும் வைத்திய ஆலோசனைப்படி மேலதிக சிகிச்சையை பெறுதல் அவசியமாகும். ஆரம்ப நிலையில் வாய் மூலம் உள்ளெடுக்கப்படும் மாத்திரைகள் பொதுவாக விட்டமின் C மற்றும் போலிக் கமில மாத்திரைகளுடன் வழங்கப்படுகின்றது. வெறும் வயிற்றில் உள்ளெடுக்கப்படும் போது ஏற்படும் அசாதாரண நிலைமைகளைத் தடுப்பதற்காக உணவு வேளைகளின் பின் உள்ளெடுக்கப்பட வேண்டும். எனினும் பால் மற்றும் கல்சியம் கொண்ட உணவுகள் அகத்துறிஞ்சலைக் குறைப்பதனால் இவற்றை ஒரே சமயம் உள்ளெடுப்பதைத் தவிர்க்க வேண்டும். இச்சிகிச்சையின் போது உடற் சேமிப்பையும் மீள் நிரப்பு வதற்காக தொடர்ந்து நான்கு அல்லது ஆறு மாதங்களுக்காவது வழங்கப்படு கின்றது.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலையும் சமூகமும் : தடைகளும் மாற்றங்களும்

The School and the Society : Constraints and Changes

போராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

பாடசாலைகள் உலகம் முழுவதிலும் ஒரே மாதிரியான கட்டமைப்பையும் தொழிற் பாட்டையும் கொண்டுள்ளன. அத்துடன் ஒரே மாதிரியான சமூக விளைவுகளையும் உருவாக்கி வருகின்றன. பாடசாலைகள் சிறியனவாகவோ, பெரியனவாகவோ இருக்கலாம். பொருளாதார வளங்கள் மற்றும் வசதிகளின்படி வசதி மிக்கனவாகவோ, வறியனவாகவோ இருக்கலாம் ஜனநாயக தன்மையுடனோ, மிகவும் இறுக்கமான தொழிற் பண்புடனோ இருக்கலாம் எல்லா நிலைகளிலும் பாடசாலைகளின் இயல்புகள் அவை சார்ந்துள்ள சமூகங்களின் பொருளாதார மற்றும் அரசியல் முறைமைகளுக்கும் தன்மைகளுக்கும் ஏற்பவே அமைகின்றன.

எல்லா சமூகங்களிலும் பாடசாலைகளினுள்ளே நிலவுகின்ற கலாசாரம் அதன் சமூகப் பண்புக் கோலங்களையே பிரதிபலிக்கின்றன. கத்தரித்து ஒட்டப்பட்ட சமூகத்தின் ஒரு துண்டாகவே பாடசாலையை இனங்காண முடிகின்றது.

ஆனால் இவ்வாறு சமூக இயல்புகளைப் பிரதிபலிப்பதாக எல்லா நிலைகளிலும் பாடசாலைகள் இயங்குதல் போதுமானதா? தன்னியல்புகளை மாற்றிக்கொண்டு — சாதகமான வழிகளில் மேல் நோக்கி நகர்த்திக் கொண்டு — அதன் வழியாக சமூக மாற்றங்களுக்கும் வழிகாட்டினாலென்ன? இது எவ்வளவு தூரம் சாத்தியமாகின்றதென்று ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூக — பாடசாலை தொடர்புகள்

சமூகம் வரலாற்றுக் காலத்தில் வளர்ச்சி பெற்ற குடும்பங்களின் தொகுதியாகும். மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் படிகளாக நிலத்தை உழத் தொடங்கியமை, சில்லுகளைக் கண்டுபிடித்தமை, வெடி மருந்துப் பாவனை, அச்சுக்கலை வளர்ச்சி என்பன போல் அல்லது இவற்றை விடவும் முக்கியமான மாற்றம் நிலையமாக குடும்பங்களின் தோற்றம் விளங்குகின்றது.

மனிதர்கள் தமது பாதுகாப்பு, தேவை நிறைவு செய்தல், முன்னேறுதல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்கு முறையில் உறவுகளையும் தொடர்புகளையும் வடிவமைத்து கூடி வாழவும், வளங்களையும், தியாகங்களையும் பகிர்ந்து கொள்ளவும், கூடி மகிழவும் தொடங்கினர். இதற்கான கட்டமைப்புத் தான் குடும்பம் என்பதாகும். இதனை அகலப்படுத்தி, ஆழப்படுத்திய — ஒன்றிணைத்த முறைமை தான் சமூகம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய தனிமத்துக்கும், சமூகம் என்ற கூட்டு உருவத்திற்கும் இடையிலான கருவியும், தொழிற்படு அமைப்பும், துணைச் சாதனமும் தான் பாடசாலைகள்.

யுத்தம், சுனாமி, எரிமலைத் தாக்கம், வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்த நிலைமைகளில் குடும்பங்கள் நிலைகுலையும் போதும் சமூகத்தின் சமநிலை குலையும் போதும் பாடசாலைகளில் அவற்றின் தாக்கம் துல்லியமாகப் புலப்படுகின்றன.

இலங்கையில் 2009இல் வடபகுதியில் யுத்தம் ஏற்பட்ட போதெல்லாம் பாடசாலை கள் பாதிக்கப்பட்டன. அவற்றின் வளங்கள் சிதைந்தன. தொழிற்பாடுகள் குலைந்தன. அல்லது இடைநிறுத்தப்பட்டன. பள்ளி மாணவர் வீதிச் சிறார்களாயினர் அல்லது ஊழியராயினர். கல்வி நிறுவனம் கற்றலை நிறுத்தியது. சிறுவர்களது நோக்கும் போக்கும் சிதைவுற்றன. இந்த துயருறு மாற்றங்கள் குடும்பங்களையும் சமூகங்களையும் பெரிதும் அலைக்கழித்தன. பாடசாலைகள் இடைத்தங்கல் முகாம்களாக தொழிற்பட வேண்டியதாயிற்று.

2010 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இலங்கைத் தீவு முழுவதிலும் லைலாப்புயல் ஏற்படுத்திய தாக்கம் சமூகத்தையும், குடும் பங்களையும் தீவிரமாகப் பாதித்த போது பாடசாலைகளே காப்பு மையங்களாகவும், பராமரிப்பு நிலையங்களாகவும் மாறின. ஏனெனில் பாடசாலைகள் அச்சமூகங்களின் உரிமைச் சொத்துக்கள் அதன் அங்கங்கள் என மக்கள் உறுதிபட நம்புகின்றனர்.

இதேபோல் சமூகங்களின் பிரசைகள் செல்வந்த நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு கருதி நகரும் போதும் வாழிடமாகக் கருதி புலம் பெயரும் போதும் அவர்களது வசதிகளும், இலக்குகளின் தரங்களும் மேலுயர்கின்றன. அப்போதெல்லாம் நூற்றாண்டுகள் பல நிலைத்திருந்து சமூகக் கட்டமைப்பை நிலைநிறுத்துகின்ற கோவில்களையும், பாடசாலைகளையும் செழுமைப்படுத்துவதற்குத் தமது நேரத்தையும், வளங்களையும் அதிகம் ஒதுக்குகின்றனர். தலைமுறைகளுக்கு பண்பாட்டை கைமாற்று கின்ற செயன்முறைதான் கல்வி. அதைச் செயற்படுத்துவன கோவில்களும், பாட சாலைகளும் தான். வரலாற்றுக் காலத்தி லிருந்து இதைத்தான் இவை செய்து வருகின்றன. கோவில்களே தூய்மையை நிலைநிறுத்தின. தங்குமிட வசதிகளை வழங்கின. குரு – சிஷ்ய உறவுகளை உருவாக்கி தூய்மைப்படுத்தின. அழகியல் கலைகளை வளர்த்தன. பள்ளி செல்லாத பெண்கள், முதியோரிடம் தூய்மையான மென்மைப் பண்புகளை தெய்வீகமாக வளர்த்தன. கோவில்களில் தான் கல்வி கற்பித்தனர். இதனால் கற்பித்தல் தூய்மை யான தொழிலாயிற்று. குரு தன்னை அறியவும், உலகை அறியவும், இறைவனை உணரவும் வழிகாட்டினார். இவை கோவில்களில் ஒன்றிணைந்து நிகழ்ந்தன.

வரலாற்று வளர்ச்சியில் மக்கள் கற் பித்தலை தனியாகப் பிரித்து பள்ளிகளை உருவாக்கினர். சமணத் துறவிகள் தாம் பள்ளி கொண்ட கற்படுக்கைகளிலிருந்த வாறே போதித்தமையால் – கற்பித்தல் நிகழ்ந்த இடங்கள் 'பள்ளிகள்' எனப் பெயர் பெற்றன. இன்று பள்ளிகளில் கடவுள் வழிபாடுகள் நிகழ்கின்றன் சமய பாடங்கள் போதிக்கப்படுகின்றன. சமய விழுமியங் களின் படி மாணவர்கள் வளம்படுத்தப்படு கின்றனர் பல இடங்களில் பள்ளிகளும், கோவில்களும் இணைந்து பணியாற்று கின்றன. அறிவை மாத்திரம் வழங்குவன வாக பள்ளிகள் விளங்குவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலைகளையும், காவல் நிலையங் களையும் குறைப்பதற்கான மென்மையான வழிமுறையாக கல்வியையும் கல்வி நிறு வனங்களையும் சமூகம் இனங்கண்டு பேணிப்பாதுகாத்து வருகின்றது. சமூகம் என்ற நெய்யப்பட்ட துணியின் வலுவான இழைகளாக பாடசாலைகளும், கோவில் களும் குறுக்கும் நெடுக்குமாக பின்னப்பட் டுள்ளன. சமுதாயத்துணியின் வலுவையும், நெகிழ்வையும் தீர்மானிப்பதில் பள்ளிக் கூடங்கள் மிகவும் முக்கியமானவை. பள்ளிகள் மூடப்படும் போதும் இலக்குத் தவறும் போதும் சமுதாயத் துணியில் (Social Fabric) ஓட்டைகள் விழ ஆரம்பிக் கின்றன. சமுதாயக்குற்றங்கள் பெருகு கின்றன. வகை தொகையின்றி சிறார்கள் தம்மைச் சீரழித்து வருகின்றார்கள். சமுதாயத்தின் இளம் குற்றவாளிகளாகி வீட்டையும், நாட்டையும் அமைதியற்ற வலயங்களாக்கி விடுகின்றனர்.

நல்ல பாடசாலைகளின்றி நல்ல குடும்பங்களும், நல்ல சமூகங்களும் உருவாக முடியாது. அதே போல் நல்ல சமுதாய அமைப்பும், தொழிற்பாடும் பண்பாடுமின்றி நல்ல பாடசாலைகள் உருவாகிவிட முடியாது.

நல்ல கல்வி வழங்கும் நல்ல பாட சாலைகள் தான் முதலில் சிறந்த சமுதாயத் தலைவர்களை உருவாக்குகின்றன. பின்பு அவர்கள் தேசியத் தலைவர்களாகவோ, சர்வதேச வழிகாட்டிகளாகவோ, புதிய கோட்பாடுகளின் சிருஷ்டி கர்த்தாக் களாகவோ மாறிவிடுகின்றனர்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தி யாவில் வங்காள மாநிலத்தை எடுத்துக் கொள்ளலாம். அதன் பெருநகரான கொல் கத்தாவையும் அதன் பாடசாலை – சமூக தொடர்புகளையும் நோக்கலாம். அவை சாதித்தவை எவை? அச்சமூகம் உலகிற்கு தந்தவை எவை? அச்சாதனைகளில் பாடசாலைகளின் பங்களிப்பு எத்தகையது? இதற்கு சில உதாரணங்கள்.

- **இராமகிருஷ்ண மிசனின் தோற்றமும் பணியும் :**

தவத்திரு இராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாதேவி, பரமஹம்சரின் சிஷ்யர் இளம்துறவி சுவாமி விவேகானந்தர் ஆகியோரைப் பாடசாலைகள் உருவாக்கின. அவர்கள் உலக சமுதாயத்தை புதிதாக வடிவமைக்க தம் அறிவையும் உணர்வை யும் பயன்படுத்தினர்.

இறைவன் சேவை மோட்சம் பெறுவது என்ற மரபுவழி அணுகுமுறையில் சிறுமாற்றம் செய்து கீழ் நோக்கிப் பார்த்து "சமுதாய சிறுமைகளைப் போக்குவது" என்ற புதிய வழிமுறையை வலிமைப் படுத்தியவர்கள் அவர்கள். இது கொல்கத் தாவில் வலிமை பெற்றிருந்தது பத்தொன்ப தாம் நூற்றாண்டின் ஆங்கிலக் கல்வியின் விளைவும் வெளிப்பாடும் ஆகும்.

இன்று புட்டபர்த்தியிலும், மேல் மருத்து வத்தூரிலும், தெல்லிப்பளையிலும் மானுட தர்மத்திற்கான வழிமுறையாக வழிபாட்டுத் தலங்கள் வளர்ந்தமைக்கு வழிகாட்டிய வர்கள் ஆங்கிலேயர் காலக் கொல்கத்தா நகர ஆங்கிலப் பாடசாலைகளில் கற்ற அன்றைய மாணவர்கள் தான். இது கல்வியின் சமுதாய சாதனையன்றி வேறென்ன? ஏழ்மைக்கு இரங்கு தலும், எளியோரைக் காத்தலும், ஏட்டைத் தொட இடமளித்தலும் இறையன் பின் வெளிப்பாடுகளே என வலியுறுத்தியவர்கள் கொல்கத்தா பாட சாலைகளின் அன்றைய மாணவர்கள் தானே! சுவாமி பரமஹம்சரும் விவேகானந்தரும் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வறுமை தணிக்கும் புதிய பார்வை :**

மேற்கு நாடுகளின் சிந்தனையாளர்கள் தெற்குலக நாடுகளின் வறுமை போக்கு வதற்கு காலம் காலமாக விதந்துரைத்த வழிகளை மாற்றியமைக்க புதிய கோட்டுபாடு சமைத்து நோபல் பரிசு வென்ற அமர்த்தயா சென் (Amarthaya Sen)னும் கொல்கத்தா பாடசாலைகளின் வெளியீடு தான்.

- **உலக மகாகவியின் கீதாஞ்சலி :**

உலகில் இனிமையான உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்வதன் மூலம் புத்தாக்கப் படைப்புக்களை உலகின் பெரு நுகர் பொருட்களாக மாற்றியமைத்தவர்களில் வங்கத்து மகாகவியும் நோபல் பரிசு பெற்ற வருமான ரவீந்திரநாத் தாகூர் குறிப்பிடத் தக்கவர். தலையானவர். அவரது கீதாஞ்சலி என்ற காவியம் உலகம் முழுவதற்கும் அவர் தந்த சமுதாய பொக்கிஷமாகும்.

- **யதார்த்த இயக்குநர் சத்யஜித்ரே :**

மின்னியல் இலக்கியமான (Electronic Literature) திரைப்படத்தை அங்கீகரிக்கச் செய்த பெருமைக்குரியவர் திரைப்பட இயக்குநர் சத்யஜித்ரே அவர்கள். உலக அங்கீகாரம் பெற்ற கலைமகன் அவர். இவரையும் கொல்கத்தா பாடசாலைகளே உருவாக்கின.

இவ்வாறு பல்திறப்பட்ட உலக மாந்தர் களை முதலில் தமது சமுதாய வெளியீடு களாக உருவாக்கிய பெருமை கொல்கத்தா பாடசாலைகளுக்குண்டு. இப்படி உலகம் முழுவதும் பல அறிவியல் மற்றும் பண்ணாட்டு நீரூற்றுக்களை உருவாக்கியவை சிறந்த பள்ளிக் கூடங்கள் தான்.

ஈழத்திருநாட்டின் வடபகுதியிலும் தமிழ் வளர்த்த மையங்கள் பல வளர்ந்திருந்தன. யாழ்ப்பாணத்தில் மட்டுவில், புலோலி, கோப்பாய், வட்டுக்கோட்டை, திருநெல்வேலி, வண்ணார்பண்ணை போன்ற பல கல்வி மையங்கள் ஏராளமான தமிழறிஞர்களை உருவாக்கியிருந்தன. யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப் பெருமையும் மகிமையும் எமது விருந்தோம்பல் சிறப்பினால் மாத்திரம் உருவானதல்ல. தூய தமிழாகவே பேசுதல், தூய தமிழாகவே எழுதுதல் என்பவற்றாலும் நாம் பெருமை பெற்றுள்ளோம். 'யாழ்ப்பாண சமூகம்" என்று உலகம் சுட்டுகின்றபோது அது இப்பிரதேச பாடசாலைகளையும் அது சார்ந்த கல்விமான்களையும் குறிக்கின்றமை மனங்கொள்ளத்தக்க பேருண்மையாகும். 1974 இலிருந்து தோற்றம் பெற்று துலங்கி வரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உல கிலேயே முதன் முதலாக இந்துப் பண் பாட்டுத்துறைக் கல்வியை இளநிலைப் பட்டம் மற்றும் முதுநிலைப்பட்ட நிலையில் வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஏறக்குறைய 460 பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டுக்கு உன்னதமான பங்களிப்புச் செய்துவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல்துறை இலங்கையில் தமிழ் மொழி மூலமான ஆசிரிய கல்வியில் முத்தாகவும் முதன்மையானதாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இதன் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த முன் னோடிகளாக பேராசிரியர் ப.சந்திரசேகரம், பேராசிரியர் வ. ஆறுமுகம், பேராசிரியர் சபா ஜெயராஜா போன்றோர் விளங்கு கின்றனர்.

கல்வி நிறுவனங்களையும், கல்வி யாளர்களையும் எந்தளவுக்கு சமூகங்கள் போஷிக்கின்றனவோ அந்தளவுக்கு அச் சமூகங்களிலும் மேன்மை மிக்க வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சமூகங்களும் நவீன பாடசாலைகளும்

இன்று நாம் எமது நாடுகளில் புதிய மாதிரி சமூகங்கள் தோற்றம் பெற்றிருப்பதை உணர்கின்றோம். ஒரே மொழி, சமயம், பண்பாடு, பொருளாதாரப் பாங்கும் கொண்ட சமூக்கள் முன்பிருந்தன. ஒரே யொரு பண்பாடு (Mamo Culture) சமுதாய மையமாகக் காணப்பட்டது.

இன்று தனிநபர்களாகவும், மதசபைத் தலைவர்களாகவும், பொருளாதார அலகு களாகவும் தொண்டு நிறுவனங்களாகவும், மதியுரைஞர்களாகவும் பலர் வேறுபட்ட கலாசார பின்னணிகளிலிருந்து வந்து கலந்து விட்டனர். இதனால் பன்மைக் கலாசாரம் (Multi Culture) மற்றும் பல்வகைமை (Diversity) என்பன கட்டாய சமூக பண்பாக மாறிவிட்டன.

உலகமயமாதல் (Globalization) என்ற ஒருமைக் கோட்பாடு 1990களின் பின் எல்லா நாடுகளுக்குமான சட்டமாகவும் எல்லைக் கோட்பாடாகவும் மாறிவிட்டது. மேற்கு நாடு கள் மாத்திரமே உலக சிந்தனையாளர்கள் போலவும், இரட்சகர்கள் போலவும், வழி காட்டிகள் போலவும் தோற்றப்பாடுகள் உரு வாக்கப்பட்டு அவை தூய்மையாக ஏற்கப் படவேண்டுமென்றும் அவ்வாறு ஏற்றுக் கொண்டால் பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவிகள் தாராளமாக கிடைக்குமென்றும் பல சமயங்களில் அரசியல் இராணுவ உதவி கள் கிடைக்குமென்றும் உறுதியாகவும் அச்சு றுத்தும் தொனியிலும் சொல்லப்படுகின்றது.

இந்த உலகின் புதிய மேலாண்மைப் பண்புடன் பரப்பப்படும் அரசியல், பொருளாதார சிந்தனையாளர்களுக்கு வழிகாட்டுவனவாக கல்விச் செயற்பாடுகள் நோக்கப்படுகின்றன. இதனால் நாடு களினதும் அதன் சமூகங்களினதும் கல்விக் கொள்கைகளையும், கல்வி நிறுவனங் களையும், கல்விச் செயன்முறைகளையும், அவற்றுக்கான அங்கீகாரங்களையும் தீர்மானிக்கும் பேராற்றலும் வலிமையும் தமக்கு மாத்திரமே இருப்பதாக உலகமய மாதலை வலிமைப்படுத்தும் உலக நாடுகளும் அவர்களின் நிறுவனங்களும் எண்ணுகின்றன. அதனை வலுவுடன் செயல்முறைப்படுத்த முனைகின்றன.

இந்தப்போக்கு புதிய சமுதாய பண்புக் கோலங்களை உருவாக்கி வருகின்றது. இந்தப் புதிய மாற்றங்கள் கல்வி மற்றும் பாடசாலைகள் மீது குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பல முரண்நிலைமை களுடன் புகுத்தி வருகின்றன என்பது உற்று நோக்கத்தக்கதாகும்.

இந்த உலகமயமாதல் போக்கு தோல்வி களற்ற உயர் தெய்வீக கோட்பாடு போலவும். இதனால் அதிக நன்மைகள் பெறுகின்ற நாடுகளினால் சுட்டிக் காட்டப்படுகின்றன. நவீன மயமாக்கமே முன்னேற்றத்தின் வழிமுறைபோல காட்டப்படுகிறது. பிற்ஸா, டெனிம, கொக்காகோலா, நோக்கியா, ஹொன்டா, டெல்லோ போன்ற வர்த்தகக் குறியீடுகளின் அசுர பிடிக்குள் சிக்குவோர் மாத்திரமே உலகின் நவீன கனவான்கள் போல் சித்திரிக்கப்படுகின்றனர்.

இவை எமது கீழைத்தேச வரலாற்று வளர்ச்சி மகிமையை துடைத்தெறிந்து எம்மை பலவீனமானவர்கள் போலவும், வழி காட்டும் தகைமை ஏதுமின்றி எல்லாவற்றை யும் ஏற்றுக்கொள்பவர்கள் போலவும் தோற்றப்பாட்டை உருவாக்குகின்றன.

இந்து சங்கை நாகரிகம், மொசபத்தேமிய நாகரிகம், குவாங்கோ நாகரிகம் என்பன உலகின் முன்னோடியான சமூக வாழ்வைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பவர்கள் ஆசிய நாட்டவர்தான் என்பதை வரலாற்றில் பதிவு செய்துள்ளன. வானசாஸ்திரம், மருத்துவம், அச்சுக்கலை, வெடிமருந்து, கடதாசி உற்பத்தி, சோதிடம் போன்ற பல அறிவியல் கண்டுபிடிப்புக் களின் தாயகம் ஆசிய நாடுகளே என்பதை மங்கச் செய்யவும், மறைக்கவும் உலகமய மாதலில் பிரச்சாரப் புயல் முயல்கின்றது.

இந்தப் புதிய உலக மாற்றங்களினால் புதிய சமுதாயப் பாங்குகள் உருவாகி யுள்ளன. பின்வருவன குறிப்பிடத்தக்கன.

- பிள்ளைகளின் எண்ணிக்கையை அரசு தீர்மானித்தல். இலவச மருத்துவ உதவிகளும் அதற்காக வழங்கப்படல்.
- தாய், தந்தை இருவரும் வீட்டுக்கு வெளியே தொழில் புரிதலும் குடும்பக் கடமைகள் நிறுவன மயப்படுத்தலும்.
- தந்தை, தாய், பிள்ளைகள் வெவ்வேறு சமூகங்களில் அல்லது நாடுகளில் வாழ்வின் பெரும்பாலான காலங்களில் வாழ்தல்.
- பொருள் தேடல் என்பது முன்னுரிமை பெற்று பிள்ளைகளின் படிப்பு, உணர்வு பகிரல், துணை செய்தல் என்பவற்றி லிருந்து பெற்றோர் விலகி விடுதல்.
- பிள்ளைகள் செல்லிடத் தொலைபேசி, தொலைக்காட்சி, இணையம், மோட்டார் வாகனம் போன்ற தொழில் நுட்பச் சாதனங்களின் மோசமான ஆக்கிர மிப்புக்கு உட்படுதல்.

6) இளம் வயதினர் கூடி விளையாடுதல், பெற்றோருக்கு உதவுதல், கோவில் தொண்டுகளில் ஈடுபடல், உறவினர் வைபவங்களுக்கு உதவுதல் போன்ற சமூக இடைவினையுறவுகளிலிருந்து துண்டிக்கப்படும் வகையில் வணிக மயப்படுத்தப்பட்ட தனியார் கல்வி முறைமை வலிமை பெற்றிருத்தல்.

- உடல் உறுப்புக்களைப் பயன்படுத்தும் தொடர்பாடல், கற்றல் தன்மையிலிருந்து முற்றாக தம்மை விடுவித்தலும் மின்னியல் கலாசாரத்தில் (Electronic Culture) அளவுக்கதிகமாக தங்கியிருத் தலும். தபால் அனுப்புவதிலிருந்து ஈ-மெயிலுக்கும் நூலகங்களில் புத்தகங் களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக இணையத்தின் வழியாக ஈ - நூலகங் களைப் பயன்படுத்துதலும், செல்லிடத் தொலைபேசியில் குறுஞ் செய்திகள் (SMS) அனுப்புதலும் பரவி வருதல்.
- பழைய தலைமுறையினரைப் பொருத் தக்கேடானவர்களாக இளம் தலை முறையினர் கருதுதலும் முடிவுகள் எடுப்பதில் சுயாதீனமாக இருப்பதை விரும்புதலும், பாடத்தெரிவு, கற்கைநெறித் தெரிவு, தனியார்கல்வி ஆசிரியர் தெரிவு, தொழிற் தெரிவு போன்ற பலவற்றிலும் பெற்றோர் வழிகாட்ட முடியாதவர்கள் என்று கருதுதலும் சுய அங்கீகாரத்தை வலியுறுத்துதலும் அதிகரித்து வருதல்.

இப்புதிய மாற்றங்கள் பாடசாலை களிலும் அவை சார்ந்த கல்வி நிகழ்வு களிலும், அணுகுமுறைகளினதும் குறிப் பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கி யுள்ளன. அவை

i) **பாடசாலை தொடர்பானவை :**

முன்பு பாடசாலைகள் அரசன், கோவில், கொடை வள்ளல்கள், ஆதீனங்கள் போன்றவற்றினால் உருவாகி பொது மக்களுக்கு அவர்களுக்கு ஏற்ற வகையில் கல்வி வழங்கின. கல்வியும் தொழில் திறனும், பண்பாடும் சமமான முன்னுரிமை பெற்றிருந்தன.

இன்று பெரிதும் மக்களின் வரிப் பணத்தில் அரசினால் ஒரே மாதிரியாக நிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிக்கப்படும் அரச பாடசாலை முறைமை வளர்ந்துள்ளது. ஒரே மாதிரியான பாடங்களும், கற்றல் முறைகளும், மதிப்பீட்டு முறைகளும் காணப்படுகின்றன.

தொழில்நுட்பம் நோக்கியும், வேற்று மொழி நோக்கியும், தொழில்வாய்ப்பு (சம்பளத்துக்காக பிறரிடம் பணியாற்றுதல்) நோக்கியும் போட்டி, பொறாமையை வலுப்படுத்தும் வகையிலும் கல்வி கற்பிக்கப்படுகின்றது.

முரண்பாடான பொருளாதார, தொழில் நுட்ப, கலாசார பின்னணியுடையவர்களே இவற்றை வழிகாட்டியும், கண்காணித்தும், மாற்றியும் வருகின்றனர். அது நிபுணத்துவ ஆலோசனை எனப்படுகின்றது.

பாடசாலைகள் இலக்கு நோக்கியும் தன்னம்பிக்கை விருத்தி செய்யும் வகையிலும் சுயமுனைப்பை விருத்தி செய்யும் வகையில் ஊக்குவிக்கப்படவில்லை.

சம்பளத்துக்கான வேலைக்குத் தயார் செய்தல், பாடசாலைகளிடையில் போட்டியை ஊக்குவித்தல், வெற்றி பெறுவோர்க்கு பின்னால் நின்று கொண்டு தோல்வி யடைவோரை கண்டுகொள்ளாதிருத்தல், சடங்கு முறையான எழுத்துப் பரீட்சைகளின் மூலம் திறமையானோரை இனங்காணுதல் போன்ற புதிய இலக்குகளுடன் பாடசாலைகள் தொழிற்படுகின்றன.

வீடுகளிலிருந்து நிறுவனங்களுக்கும் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் வளர்முக நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கும் முன்னேற்றங்களை நகர்த்துவனவாக பாடசாலைகள் தொழிற்படும்படி ஊக்குவிக்கப்படுகின்றன.

ii) பொறுப்புதாரர் தொடர்பானவை :

பாடசாலைகளின் வளர்ச்சி, தாமதங்கள் என்பன மாணவர், ஆசிரியர், பெற்றோர், அரசாங்கம் போன்றோரில் தங்கியிருப்பதுண்டு.

புதிய மாற்றங்களினால் பாடசாலைகளின் நவீனமயமாக்கம், பொருத்தப்பாடு, துரித வளர்ச்சி நிலை மாற்றங்கள் என்பவற்றில் பங்கு வகிப்போராக பலர் புதிதாக நுழைந்துள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள், வளர்ச்சி பெற்ற உள்ளூர் தொழிற்துறை நிறுவனங்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர், புலம் பெயர்ந்து வாழும் செல்வந்தர்கள், தனியார்துறை கல்வி நிறுவனங்கள், சமூக உளவியலாளர்கள் போன்ற பலரும் யுத்தத்துக்குப் பிந்திய சமூகங்களில் பாடசாலைக் கல்வியை மேம்படுத்துவதற்கு முனைப்புடன் செயற்படுகின்றனர். அரசாங்கங்களும் தமது சட்டப் பிரமாணங்களையும் மாற்றியுள்ளனர்.

இத்தகைய புதிய பொறுப்புதாரர்கள் சமூகத்துக்கும் பாடசாலைக்குமான நோக்கிலும் போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கி வருகின்றனர்.

iii) வளவு ஒதுக்கீடும் பாடசாலை வகையீடும் :

இலங்கையில் 10,000 க்கு நான்கு மில்லியன் நான்கு மில்லியன் மாணவர்களுக்கு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

ஐந்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு, பதின்மூன்றாம் வகுப்பு ஆகிய நிலைமைகளில் தேசிய பரீட்சைகள் அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதனை கடந்து செல்பவர்கள் அரசின் இலவச நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களைத் தொடர்ந்து பயன்படுத்தலாம், கல்வியைத் தொடரலாம். உயரிய அரச, தனியார் தொழில் வாய்ப்பை பெறலாம். திறன்களை விடவும் அறிவு சார்ந்த, மனனம் செய்யும் சாதனையாளர்களும் மேசைகளிலிருந்து கடதாசிகளினூடாக திறமையை வெளிப்படுத்தும் மதிப்பீடுகளும் உயர் அனுகூலங்களைப் பெறுகின்றன. இதில் பாடசாலைகளுக்கு கிடைக்கும் வளங்களும், வசதிகளும், வாய்ப்புக்களும் பிரதான பங்கு வகிக்கின்றன.

வள ஒதுக்கீட்டு உரிமைகளுக்கு அமைவாக பல பாடசாலை மாதிரிகளை இலங்கையின் கல்வி அமைச்சு இனங் கண்டுள்ளது.

(1) தேசிய பாடசாலைகள்
(2) இசுரு பாடசாலைகள்
(3) வெளிச்ச வீட்டு பாடசாலைகள்
(4) சிறிய பாடசாலைகள்
(5) புனரமைப்புத் தேவை கொண்ட பாடசாலைகள்.

பாடசாலைகளிடையிலான ஏற்றத் தாழ்வுகளை அகற்றாமலும் நகர – கிராமிய ஏற்றத்தாழ்வைக் குறைக்காமலும் பள்ளிக் கல்வியை மேம்படுத்தும் முறை தொடர்ந்து நிலவுகின்றது.

வசதி மிக்க செல்வந்தர்களும், மேட்டுக்குடியினரும், கனவான்களும் ஆங்கில மொழியில் வளர்ச்சியடைந்த நாடுகளில் உயர்கல்வி பெறுவதற்குதவும் கலைத் திட்டத்தை தமது சொந்தச் செலவில் தம் பிள்ளைகளுக்கு கற்பிக்க இடமளிக்கப் பட்டுள்ளது. இதற்கான தனியார் (உள்ளூர்) பாடசாலைகளும், சர்வதேசப் பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

இதனால் கல்வி பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றிவிடும் என்ற கற்பனைக் குறிக்கோளுக்கு வெளியே தான் இலங்கைப் பாடசாலை முறை வலுவான நிலையில் வளர்ச்சியடைந்து வருகின்றன.

பழைய மாணவரும் புதிய சிந்தனையும் :

பழைய மாணவர்கள் தம்மை வளர்த்த இரண்டாவது தாய் என்ற வகையிலும் தமது சந்ததியை கற்பிக்கும் உன்னத நிறுவனம் என்ற வகையிலும், சிறந்த பாடசாலை இருத்தல் தமது சமுதாயத்தினை (Status of the community) பலமடங்கு மேலுயர்த்தும் என்ற வகையிலும் தாம் கற்ற பாடசாலைகளுக்கு உதவுகின்றனர். இது உன்னதமான பங்களிப்பு ஆகும். இதற்கு கைமாறாக பாடசாலைகளும் அவர்களை அங்கீகரித்தும், முன்மாதிரிகளாக மாணவர்களுக்கு காட்டியும் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். எனினும் பழைய மொந்தையை புதிய போத்தலில் அடைத்தல் கூடாது.

புதிய சிந்தனையுடன் பாடசாலைகள் புதிய திசையில், புதிய மாதிரியில் தொழிற் பட்டு வளர்வதற்கு பழைய மாணவர்கள் தம் பங்களிப்பைச் செய்தல் வேண்டும். குறிப்பாக செல்வந்தர்களாக வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர் நிறைய உதவுதல் வேண்டும். பின்வரும் வழிகளில் எதிர்காலத்தில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

- திறமையான மாணவர்கள் சிலருக்கு வருடாந்தம் வெளிநாட்டு நவீன பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற உதவ வேண்டும். ஆனால் பட்டம் பெற்றபின் பாடசாலைக்கு உதவுவது பற்றிய கடப்பாடு ஒப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதிபர்கள் ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம், பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான தரமான கல்வியையும் பயிற்சியையும் வெளிநாட்டில் பெறுவதற்கு உதவும் வகையில் ஒரு வருட முதுமாணிப் பட்டம் பெற புலமைப் பரிசில் வழங்க முடியும். கிறீஸ்தவ மதப் பாடசாலைகள் பல தற்போது இவ்வாறு வழங்கி வருகின்றன.
- சிறந்த ஈடுபாட்டுடன் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கும் ஆறுமாத கால மற்றும் மூன்று மாதகால பயிற்சி களை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் வழங்க நிதியுதவி செய்தல் வேண்டும். இது ஆசிரியர்களுக்கு ஊக்கம் தருவதாக அமையும்.
- பழைய மாணவர்கள் அதிபர்களாக வரவேண்டுமென விரும்பினால் உண்மை ஈடுபாடும் திறமையும் கொண்ட பழைய மாணவரான ஆசிரியர்கள் அதிபர் தகைமைப் பரீட்சைகளில் சித்திபெறுவதற்கு உதவுதல் வேண்டும்.

அவர்களுக்கும் குறுகியகால பாடசாலை முகாமைத்துவ பயிற்சியை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் வழங்குவதற்கு புலமைப்பரிசில் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

பழைய மாணவர்களிடம் குழு உணர்வு, முறைசாராத தீங்குறு நடத்தை முற்சாய்வு என்பன வளராது பார்த்துக்கொள்ள வேண்டும்.

நவீன மாற்றங்கள் தமது புகழின் தரத்தைப் பாதிக்கும் என்று பழைய அதிபர்களும், ஆசிரியர்களும் எண்ணி விடாதவாறு வளர்ச்சி நோக்கி அறிவையும் உணர்வையும் செப்பனிட வேண்டும்.

நிதியுதவி, பங்கேற்றல், புதிய சிந்தனை, நவீன மாற்றங்களை உள்வாங்குதல், தொலைநோக்கு போன்ற பல மாதிரிகளில் பழைய மாணவர் சிந்தித்து செயற்பட்டால் பாடசாலைகளும் சமூகங்களும் ஒரே நேரத்தில் வளர முடியும்.

முடிவுரை :

சமூகத்தில் தொடர்ந்து மாறிச் செல்லும் பொருளாதார, அரசியல், கலாசார, தொழில் நுட்ப மாற்றங்கள் இயல்பானவை. இவற்றின் செல்வாக்கினால் சமூகம் தானாக மாறும். இதற்கேற்ப பிள்ளைகளை இணக்கப் பண்பும், வினைத்திறனும், விளைதிறனும் கொண்டவர்களாக மாற்றுவதில் பாடசாலைகள் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

இதில் தடைகள் ஏற்படுவது இயல்பு. இதனை கவனமாக அகற்றுவதில் சமூக அங்கத்தவர்களும், சமூக நிறுவனங்களும் ஆக்க பூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

இதில் பொருளாதார வசதியும், உயர் கல்வியும் சமூக தலைமைத்துவமும், அரசியல் பலமும் கொண்ட பழைய மாணவர் கட்டாயமாக தமது பாடசாலைகளை மேம்பாடடையச் செய்வதன் மூலம் தமது சமூகத்தை பலமானதாகவும் வளர்ச்சி மிக்கதாகவும் பேண முடியும். இதுவே வளர்ச்சிக்கான வழிமுறை என்பதை ஏற்றுக்கொள்வோம்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய அறிவு விருத்தியில் தமிழ்க் கல்வியின் வகிபாகம்

பேராசிரியர் கலைவாணி இராமநாதன்,
M.A, Ph.D.

அறிமுகம் :

இறைவனுடன் தொடர்புடைய துறை சமயம் என்ற பெயரால் குறிக்கப்படும். மனித இனம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் சமய உணர்வு, அறிவு இரண்டும் இருப்பதனைக் காணலாம். "சமையம் என்ற சொல் சமைக்கப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது" எனப் பொருள் தரும். சமைத்தல் என்றால் உணவினைப் 'பக்குவப்படுத்தல்' எனப்படும் பச்சை மாமிசம் உண்டு வேட்டைத் தொழில் புரிந்த ஆதி மனிதரை "நாகரிகமற்றவன்" எனவும், சமைத்து உணவுண்ணும் முறையறிந்து வளர்ந்த பிற்கால மனிதரை 'நாகரிக முடையவர்' எனவும் மனிதப் பண்பாட்டு வரலாறு குறிப்பிட்டுள்ளது. உணவினைப் பக்குவப்படுத்தும் நெருப்பினைப் போன்று மனித இனத்தினைப் பக்குவப்படுத்தும் ஞான ஒளியை அடைய வழிகாட்டும் நெறி முறைகள் 'சமயம்' எனப் பெயர் பெற்ற தெனலாம்.

ஆங்கிலத்தில் சமயத்தைக் குறிக்க Religion என்ற சொல் வழக்கிலே யுள்ளது. இச்சொல்லானது இலத்தீன் மொழியிலுள்ள றெல்-இஜியோ (Religio) என்ற சொல்லிலிருந்து அமைக்கப்பட்டது. மனிதனுக்கும் மனிதனுருள் உயர்ந்த ஒரு வனுக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் காட்டுவது என்பது இதன் பொருளாகும். எந்த மொழியாயினும் எந்தச் சொல்லாயினும் இறைமையுடன் தொடர்பு கொள்ளும் நெறி ஒன்று உலகெங்கும் பரவியிருப்பதில் ஐயமில்லை. "ஆயிரம் தெய்வம் உண்டென்று தேடியலையும் அறிவிலிகாள் - பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வம் உண்டாம் எனல் கேளீரோ?" என்ற பிற்கால பாரதியாரின் தமிழ்க்கவிதை பிரக்ஞானம் பிரமம் என்னும் அறிவே பிரமம் எனப்படும் வேத வசனங்களின் தாற்பரியமாகவே மலர்ந்தது. தமிழ் நூலான திருக்குறளும் மெய்ப் பொருளைக் காண்பதே அறிவு எனக் கூறியதிலிருந்து தமிழ் நூல்களில் கல்வியை வழங்கும் அறிவுக்கொள்கையானது இங்ஙனம் சிறப்பிடம் பெற்றிருப்பதை எளிதில் உணர முடியும்.

பழந்தமிழ் நூல்களில் காணும் செய்திகள் :

தமிழ் நூல்கள் ஆதியிலிருந்து கல்விக்குரிய கடவுளைப் பெண்ணாகப் படைத்தது மட்டுமன்றி அத்தெய்வத்தின் உயரிய படைப்பையும் அறியாமை என்ற இருளினை நோக்கி அறிவொளியை ஏற்றி வைக்கும் இலட்சியப் படைப்பாகவே உருவகித்தன. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவியின் திருவுருவமானது அறிவென்னும் செம்பொருளைப் பெற்றவர்களது உருவமும் உள்ளமும் வெண்மையும் தூய்மையுமாக அமையப் பெற வேண்டும் என்பதனை உணர்த்துவதாயுள்ளது. அறிவினால் மனிதன் மனப்பக்குவமடைந்து சிறந்த பண்பாளனாகத் திகழ வேண்டும் என்ற இலட்சிய உணர்வினை சங்ககாலம் முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலம் வரையும் எழுந்துள்ள பல்வேறு துறைகள் சார்ந்த தமிழ் நூல்களிலும் பரக்கக் கண்டு கொள்ளலாம்.

தமிழ் நூல்களது அமைப்பிலும் உள்ள டக்கத்திலும் பல்வேறு அம்சங்கள் வெவ்வேறு காலங்களில் போற்றப்பட்டு வந்துள்ளன. இந்து சமயத்தின் எல்லா அம்சங்களும் எல்லாக் காலங்களிலும் இருந்தன என வாதிப்பதுமுண்டு. தமிழ் நூல்களிலோ ஒவ்வோர் காலப்பகுதியிலும் ஒவ்வோர் அம்சங்கள் வளர்ந்து வந்துள்ளன. சங்ககாலப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் சடங்குகளும், விழாக்களும், தெய்வங்கள் பற்றிய அறிவும் கூடுதலாகக் கூறப்பட்டிருக்கின்றன. போர்க் காலத்தில் இறந்த மக்களின் பிணங்களை சுடுகாட்டிலே உண்ணும் பெண்கள் முதல் குறமகள் கண்ணில் ஏற்படும் ஊறுகளைத் தீர்ப்பதற்கு நெய்யுடன் வெண்கடுகைத் தூவும் கண்ணூறு என்பது பற்றிய செய்திகள் வீட்டிலிருந்து புறப்பட்டுத் திரும்பி வரும் வரை நல்நிமித்தம் பார்க்கும் முறைகள் யாவும் நற்றிணை, நெடுநல்வாடை, புறம், குறுந்தொகை போன்ற பல நூல்களிலும் விரவி வருகின்றன. குறிசொல்லுதலும், அதற்கான சடங்கு வகைகளும் கூட அகப்பொருள் இலக்கியத்தில் இருத்தலை குறுந்தொகை, பொருநராற்றுப்படை என்பன பெருவாரியாக எடுத்துரைத்துள்ளமை அக்காலத்தமிழ் நூல்களின் கல்விச் சிந்தனையில் சமயம் பெற்றுள்ள சிறப்பினை நடைமுறை வாழ்க்கையூடாக அவை பிரதிபலிக்கச் செய்திருப்பதனை அவதானிக்க முடியும்.

சங்க காலம் பெருவழக்காயிருந்ததில் வெறியாடல் பற்றி இலக்கண நூலான தொல் காப்பியம் கூறுமிடத்து, இந்த ஆட்டத்தில் கையிலே வேல் கொண்டு ஆடுவதால் வேலன் எனப் பெயரிய ஒருவன் முருகனை வாழ்த்துவான் எனக் குறிப்பிடுதல் தமிழ் கல்வியறிவின் ஊடாக கடவுளர்க்குக் கூத்து, ஆட்டம் உகந்தது என்ற அறிவினையும் அது அறிவிப்பதாயுள்ளது. வீரர்கள் நினைவாக நடுகல் இடப்பட்டு வழிபடும் முறையினையும், பட்டினப்பாலை, ஐங்குநுறூறு முதலியனவும் கல் தெய்வத்தை வழிபடுதலை அகமும், கற்களை விட்டு நீங்கிய தெய்வங்களின் பாழடைந்த அம்பலத்தைப் பற்றிப் புறமும் கூறுவதானது சமய நெறியிலே உருவ வழிபாடு பற்றிய அறிவினைத் தருவதாகவும் அமைந்துள்ளது. இவை தவிர முருகன், திருமால், கொற்றவைக் கடவுள் பற்றிய செய்திகளுடன் சிவனைப் பற்றிய வர்ணனைகளையும் இந்நூல்கள் பெருமளவிலே கொண்டுள்ளன. சிவம் ஒரு நிலத்துக்குரிய கடவுளாக இல்லாமல் ஐவகை நிலப்பிரிவினருக்குமுரிய பொதுக்கடவுளாக பெயர் சுட்டியறியப்படாத பெருந்தெய்வ நிலைப்பாட்டிலே வைத்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. சைவசித்தாந்தப் பதிக் கொள்கையின் அடிப்படைகள் பல அவற்றிலே கருக்கொண்டுள்ளன. ஐம்பூதங்களைத் தோற்றுவிப்பவன், நஞ்சை உண்டவன், இடபக்கொடியுடையவன், ஆலமர்ச் செல்வன், முக்கட்செல்வன், காலக்கடவுள், இமையத்தில் உறைபவன் என்று இன்னோரன்ன சிவனது வர்ணனைகள் மட்டுமன்றி இவ்விதமான வர்ணனைகளைக் கொண்ட இறைவன் 'கடவுள்' என்ற பொதுப் பெயரால் பல இடங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளான். இதற்கான சான்றுகளை அகநானூறு நற்றிணை, ஐங்குறுநூறு, மலைபடுகடாம் என்பன போன்ற நூல்களிலே பெருமளவு இடங்களில் அவதானிக்க முடியும்.

இவ்வாறாக சித்தாந்தக் கடவுட் கொள்கையினை நெறிப்படுத்தும் ஆரம்பக் கருவூலங்கள் பற்றிய அறிவினைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவனவாக பழந்தமிழ் நூல்கள் பல விளங்குகின்றன. இச்சிவனார் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என சிலப்பதி காரத்தில் சிறப்பிக்கப்பட்டு 'அன்னோன் இறைவன்' என மணிமேகலையில் நிரூபணம் செய்யப்பட்டவர். இத்தகைய கடவுட் சிந்தனைகளே காரைக்கால் அம்மையார், திருமூலர், திருவள்ளுவர் போன்றவர்களது தமிழ் நூல்களிலும் கடவுள், ஈசன், இறைவன், பெம்மான், பெரியோன், அன்னவன் எங்கள் சிவன், அவன் என் சிந்தையுள் நிறைந்தவன் என தேவார திருவாசகங்கள் வரை தொடர்ந்து பேணப்பட்டு சித்தாந்த நூல்களில் தத்துவ சாஸ்திர முறைமைகளுடன் உறுதி செய்யப் பட்டன. இவ்வாறு சமயக் கல்வியிலும், சாஸ்திரக் கல்வியிலும் தமிழ் நூல்கள் நீண்ட பணியாற்றின.

அறிவின் முனைவன் :

இவ்விதமான சமய சிந்தனை அறிவாற்றலானது தொல்காப்பியர் காலம் முதல் வளர்ச்சி பெற்று வந்துள்ளமையினை அதன் செய்யுளில் 106வது நூற்பாவும், புறத்திணையில் 33வது நூற்பாவும் சான்று பகருகின்றன. "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் - முனைவன் கண்டது முதல் நூல்" என்பதாலும் "ஆகம அளவை" நூல் பற்றி மணிமேகலையில் வரும் குறிப்புக்களினாலும் சிவாகமங்களது சமய அறிவு நிலை பற்றியும் இத்தமிழ் நூல்கள் சில குறிப்புக்களைத் தம்முள் கொண்டி ருக்கின்றன எனக்கருதலாம். அறிவின் முனைவன் - இறைவன் என்ற தோன்றாப் பெயரால் குறிக்கப்பட்ட சிவன் பற்றிய செய்திகளைக் கூறுமிடத்து இக்கடவுளர்க்கு அந்திநேரம் செய்யப்பட்ட பூசைகள், சேரன் செங்குட்டுவன் சிவன் அருளால் பிற்நதவன் என்பது போன்ற குறிப்புக்கள், அவ்வரசனது சபையில் ஆடப்பட்ட சிவனாரின் கொடு கொட்டி நடனம் பற்றியும், சிலம்பு மணிமேகலை என்பவற்றிலே பல தகவல்கள் தரப்பட்டுள்ளன.

இந்த நூல்களிலும் சிவன் என்ற சொல்லாட்சி இடம்பெறாவிட்டாலும் இதுவரை தமிழ் நூல்கள் கடவுள் என்னும் பொதுப்பெயரால் சுட்டப்பட்டு வந்த மக்களின் சமயம் சைவம் என மணிமேகலையில் தான் முதல் சான்று காணப்பட்டது. இப்பாடற் பகுதியில் சிவனது ஐந்தொழில் முறைமை, அவனது உலகாய் - உயிர்களால் கலந்துறையும் மாண்பு யாவும் சித்தாந்த மரபு வழி காட்டப்பட்டுள்ளது. சைவத்தினதும் சித்தாந்த வளர்ச்சியினதும் முன்னோடியாக தமிழ்க்கல்வியின் இக் காவிய நூல்களின் பங்களிப்பு அமைந்துள்ளது.

அறநீதிக் கருத்துக்கட்கும் சங்கமருவிய காலத்தமிழ் நூல்களில் பெருமளவு பங்களிப்புக் காணப்படுகின்றன. சிறப்பாக வேள்விகளில் உயிர்ப்பலி தவிர்க்கப்பட்டு கடவுள் வழிபாட்டிலே பூசை முறைகள் இடம் பெற்றன. அத்துடன் பழைய சமயக் கூறுகளை கைவிடாமலே புதிய பிரிவுகளையும் இணைத்துக்கொண்டு வந்தனர். இவற்றிலே பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் பணி இன்றியமையாதவிடற்கரியவை. அறநூல்களில் திருக் குறளுக்கு அதிக மகத்துவம் அனைத்து சமயத்தாராலும் வழங்கப்பட்டது. தமிழ் நூல்களின் கல்விப் பணியில் திருக்குறள், திருமந்திரம் முதலிய நூல்கள் கல்வி, கல்லாமை, அறிவுடைமை, மெய்யுணர்தல் போன்ற பகுதிகளில் சிறப்பாக சமய அறிவிற்கும், சமூக அறிவியலுக்குமான பல நற்சிந்தனைகளை முன்வைத்தன. கல்வி என்பது அறிவைப் பெறும் வழி எனலாம். அறிவுக் கண்ணைத் திறப்பது கல்வி ஆதலால் "கண்ணுடையார் கற்றார் - கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறள் கூறிய உண்மையினை "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என ஔவை வாக்கும் ஆமோதித்தது. திருமந்திரமோ ஒருபடி இன்னும் மேற்சென்று "கணக்கறிந்து உண்மையைக் கண்டு அண்ட நிற்கும் கணக்கறிந்தார் கல்வி கற்றாரே" என்ற படி தத்துவங்களின் கணக்கறிந்து மெய்ப் பொருளை அடைதற்குரிய முறைமைகளைக் கற்றவரே கற்றறிந்தார் எனக்கூறியது. இதன் தாற்பரியமே 'பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' எனத் தமிழ்மறை உணர்த்தியது. இவற்றால் தமிழ்க் கல்வியின் வகிபாக மேம்பாடு புலனாகும்.

அறிவில் காணும் இரு இயல்புகள் :

அறிவு என்பது அன்பின் ஒரு பண்பு எனவும் விளக்கப்பட்டது. ஏனெனில் அறிவுடையோரிடத்து அன்பில்லாமை காணப்பட்டால் அதுவே அவர்களை அழிக்கும் கருவியாகவும் மாறிவிடுகின்றது. "அறிவினால் ஆகுவதுண்டோ — பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை" என்பது போல பிறரது துன்பத்தைத் தன் துன்பமாக எண்ணி உதவ முற்படாதவர்களின் அறிவினால் என்ன பயன் என தட்டிக் கேட்கவும், தமிழ்ப் புலமை தயங்கவில்லை. அன்பிற்கும் அறிவிற்குமுள்ள பிணைப் பினை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர், அன்பே சிவமாவது யாரும் அறிகிலர் அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" எனத் திருமந்திரம் இச்சீரிய பண்பினை விளக்கியுள்ளது. அறிவானது கனிந்து அன்பாக முதிர்ச்சி யடைவதனையே சமயத் திருநூல்கள் 'ஞானம்' அல்லது 'பேரறிவு' என அழுத்திக் கூறின. அதனால் அறிவு என்பது இலக்கியங்கள் அனைத்திலும் பேரறிவு - சிற்றறிவு எனவும், மெய்ஞானம் - விஞ்ஞானம் எனவும், அறவியல் - அறிவியல் எனவும், ஆன்மீகக் கல்வி — உலகியற்கல்வி எனவும் பல பெயர்களில் இரு பிரிவிலே பேசப் பட்டுள்ளது. இவ் உண்மையினை வேதங்கள் வித்தை — அவித்தை எனவும், உபநிடத நூல்கள் பரஞானம் - அபரஞானம் எனவும் வகுத்து விளக்கின. பரஞானம் என்பது பதிஞானம் அல்லது சிவஞானம் என்ப தாகவும், அபரஞானம் என்பது பசு ஞானம், பாச ஞானம் எனப்படும் எனவும் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் அறிவுக் கொள்கையினை மேலும் தெளிவுபடுத்தின. இவற்றிலே பரஞானம் மெய்ஞானமாகவும், அபர ஞானம் விஞ்ஞானமாகவும் காலப் போக்கில் விளக்கம் பெற்றதாகக் கொள்ளலாம்.

இங்ஙனமாகக் கல்வி என்பது சாதாரண அறிவு அல்லது சிற்றறிவு எனவும், ஞானம் என்படுவது பேரறிவாகவும் சான்றோர் களால் உணர்த்தப்பட்டுள்ளது. கல்வி யறிவானது சமய ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து மனப்பக்குவம் அடைந் தோரிடத்து மெய்ஞானமாகப் பரிமளிப் பதுண்டு — பரிமளிக்காது போவதுமுண்டு. ஆதலால் கல்விக் கேள்விகளில் மேதைத்தவம் அடைந்தோரை பேரறிஞர், விஞ்ஞானிகள் எனவும் (Experts) ஞானத்தில் பரிபக்குவம் அடைந்தோரை தீர்க்கதரிசிகள் மெய்ஞானிகள் எனவும் உலகத்தோர் வேறுபடுத்திக் காட்டியதில் இருந்து இவ் உண்மையினை உணரலாம். ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து என்பது போல தமிழ் நூல்களின் பாரம்பரியக் கல்விக் கொள்கையானது பல பிறவிகளின் வாயிலாகப் பெற்றுப் பேணிப் பாதுகாக்கப் பட்டு வரும் ஒரு நெறிமுறையினைக் கொண்ட ஒரு கொள்கையாகப் பேணப்படுகின்ற ஒரு மரபு வளர்ச்சியடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைக் கல்வியின் குறிக்கோள் :

உண்மைக்கல்வி என்பது மனிதனது உள்ளத்திற்கும் அறிவாற்றலுக்கும் ஆலோசனை, நெறிப்படுத்தல் என்ப வற்றினை வழங்கித் தூய சாத்வீக இன்பத்தை ஈட்டுவதற்கு அழைத்துச் செல்வதாகும். பிறருடன் பகிர்ந்து கொள்வது, பிறருக்குச் சேவை செய்வது இவையே வித்தையின் பிரதான நோக்கங்களாகும். மரங்கள் பழங்களைப் பிறருக்கு வழங்கும், நதிகளும் தாமே நீரைப் பருகாது பிறருக்குத் தாகசாந்தி செய்யும், பசுக்கள் பாலை கன்றுக்கும் மக்களுக்கும் உணவாக வழங்கும், நிலமானது பயிரை விளைவித்துத் தானே அனுபவியாது பிறர் பொருட்டே அவ்வுணவினையும் உதவி வருகின்றன. இவ்வாறாக இயற்கையிலே எல்லாம் சேவை மனோபாவத்தையும், துறவின் பற்றற்ற உயர் தாராண்மைக் கொள்கை யினையுமே கற்பிப்பனவாகவுள்ளன. அவ்வாறே கல்வியறிவினைப் பெற்ற வர்கள் சுயநல விருப்புக் கொள்ளாது சேவை, தொண்டு எனப்படும் பரந்த நோக்கிலே அவற்றினைப் பிறருக்கும் வழங்க முன்வர வேண்டும். கல்வியறிவு அற்றவர்களிடமே சேவை மனப்பான்மை இருக்கும் போது கற்றவர்களிடமே அது அருகிப் போவது எவ்வளவு வருந்தத்தக்கது என்பதனைகற்றவர்கள் எண்ணிப் பார்ப்பது அவசியமாகும். இன்றைய கல்வி அதிக பொருட்செலவுடையதாகவும், விரிவான தாகவுமுள்ள அதேவேளை அறநீதிப் பண்புகளைப் போதியளவு ஊக்கப் படுத்துவதாயில்லை. அற ஒழுக்கங்களை நூல்களில் பெற்று விடமுடியாது. நடத்தையே மிக முக்கியமானது. மனம், வாக்கு, காயம் என்ற திரிகரண சுத்தி மிக இன்றியமை யாதது. ஒழுக்கத்தை சந்தையிலே வாங்க முடியாது – அது இதயத்திலிருந்து பிறக்க வேண்டும்.

கல்வியின் இலக்கு ஒழுக்கம், அறிவின் இலக்கு அன்பு. இவை வெறும் புத்தக அறிவில் மட்டும் சாத்தியப்படாது. கல்வி என்பது வாழ்வதற்கான சம்பாத்தியம் என்ற நோக்கத்தை கைவிடும் போது தான் மனிதன் அன்பெனும் ஆன்மீக முன்னேற்றத்தை அடையமுடியும். கல்வி வாழ்க்கையாக இருக்க வேண்டுமே தவிர – பிழைப் பதற்காக மட்டும் இருத்தலாகாது என்பதே மெய்ஞானக் கல்வியின் அடிப்படைக் குறிக்கோளாகும். அறிவு வெறும் புத்தக இயல் அன்று. அது புத்தக உள்ளடக்கத்தை மூளைக்கு மாற்றும் நடவடிக்கையுமன்று. உள்ளத்தை உன்னதமாக மாற்றியமைக்கும் உயரிய நோக்கத்தைக் கொண்டதே உண்மைக்கல்வி. உண்மையறிவு என்பது ஒரு புறம் விஞ்ஞானத்தையும், மறுபுறம் ஆன்மீகம், அறவொழுக்கம் இவற்றிற் கிடையேயும் ஒருவித இசைவையும் தொகுப்பையும் ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞானத்தைக் குறித்து விளக்கத்தக்க வர்கள் அறிவில் தம்மை மேம்பட்டவர்களாக நினைக்கின்றார்கள். ஆனால் பௌதீக விஞ்ஞானத்திற்கு அப்பாலுள்ள அறிவினை விளக்க முற்படும் போது தான் அறிவு முழுமையான பலனைத் தரும் பௌதீகவதீத ஞானமுடையதாக ஆகமுடியும்.

விஞ்ஞான அறிவின் உபயோகம் ஐயத்திற்கிடமற்றது. அதன் சரியான பிரயோகம் அறிந்து செயற்படும் போதே அதனுடைய பயன்பாடும் அறிவு விருத்தியும் உலகினர்க்குப் பயன்பாடுடையதாகும். விஞ்ஞானக் கல்வியிலும் சரி மெய்ஞானக் கல்வியிலும் சரி அன்பினை வளர்ப்பதே அதன் இலட்சியமாக அமையவேண்டும். பெற்றார், உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர், தெய்வம் என்றின்னோரன்ன வகையில் அன்பு செலுத்துதலின் தொடர்ச்சி யானது சரியான ஒழுக்க நடத்தையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தெடுக்கும் உபாயமாகவும் அமை கின்றது. இன்றைய கல்வி முறையிலே பெரும்பாலும் கடவுள் நம்பிக்கை தளர் கின்றது. பக்தி உணர்வு தள்ளுபடியாகின்றது. இறுமாப்புணர்வு தீவிரமடைகின்றது. ஆசிரியர் மீதுள்ள கணிப்புத் தவறாகின்றது. கடவுள் பூஜைக்கு முக்கியத்துவம் குறை கின்றது. பாரம்பரியப் பண்பாடு புறக் கணிக்கப்படுகின்றது. அதனால் கல்வியின் உள்ளார்ந்த நிலைமாற்றம் என்பது புறப் பொருளாக மட்டும் அமையாது மனிதனை மேம்படுத்தும் - அகப்பொருளாகவும் பரிணமிக்க வேண்டும். உள்ளம், உடல், மனஎழுச்சி, ஆன்மீகம், உலகியல் என்ற அனைத்துப் பரிமாணங்களையும் மேம் படுத்தவல்ல ஆற்றலாக கல்வித் தரிசனம் அமைய வேண்டும் என்பதனையே மேற்குறிப்பிட்ட தமிழ் நூல்களின் கல்விக் கொள்கையானது திட்டவட்டமாக எடுத் துரைத்திருக்கின்றது.

சமயக் கல்வியும், விஞ்ஞான அடிப்படைகளும் :

சமயக் கொள்கைகள் விஞ்ஞான அடிப்படைகட்கு முரணானவை என்பது பலரது கொள்கை. விஞ்ஞானம் புறக் கருவிகளைக் கொண்டு பிரபஞ்சம் பற்றிய அடிப்படைகளை அளந்து பரிசோதனைகள் மூலம் விளக்கும் தன்மைகளைக் கொண்டது. சமயஞானம் அகக் கருவிகளால் (அந்தக் கரணங்கள்) உள்ளுணர்வு என்னும் தொலை நோக்கி மூலம் பிரபஞ்ச அடிப்படை களையும் அதன் உண்மைப் பொருளையும் அளவிட்டுக் காண்பிக்கின்றது. இருவகை ஞானத்திற்கும் பிரபஞ்ச ஆராய்ச்சியே மூலகாரணமாக இருக்கின்றது. விளக்க முறையிலே தான் அவரவர் அளவுகோல் களைப் பொறுத்து அவை வேறுபடுகின்றன. அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எல்லையுண்டு என விஞ்ஞானம் நம்புவதில்லை. குருட்டுக் கட்டளைகளை ஒப்புக்கொள்வதுமில்லை. விஞ்ஞான விடயங்களில் உலகம் முழுவதுமே ஒப்புக்கொள்ளும் அச்ச உணர்வு ஒன்றுண்டு. சமய ஞானத்திலே இத்தகைய அச்சம் கிடையாது. மாறாக ஆன்ம வீரம் பளிச்சிடுவதனைக் காண முடியும். குறைகளோ, தவறுகளோ இல்லை எனக் கூறப்படும் சமய நூல்கள் பற்றிய மதிப்பீடுகள் விஞ்ஞான அடிப்படைக் கல்வி முறைக்கு மாறுபட்டுத் தோன்றலாம். ஆனால் சமய அறிவின் உள்ளொளியினை குற்றங்குறைகளையுடைய மக்கள் மனதிலே ஏற்றுவதற்கு அந்த ஒளி தொடர்பான அனுபவங்களை உருவாக்கும் எண்ணங் களையே சமய நூல்கள் உபதேசிக்கின்றன. இந்த உபதேசங்கள் குற்றம் குறையில்லாதன என நினைப்பதும் சரியல்ல. எல்லா இடங்களிலும் ஆய்வுகளும் சரியான முறையைக் காட்டும் என்பதும் சரியல்ல. காலத்துக்கு காலம் விஞ்ஞான உண்மைகளும் மாறுகின்றன. இம் மாற்றமே முன்னேற்ற மாகும். அதுவே வளர்ச்சியின் ஏணிப்படி யாகும். இறைமை பற்றிய சமயமும் தமிழ் நூல்களிற் பெரும்பாலனவும் இதே இலக்கண மரபுகளுடன் தான் வரையறை செய்திருப்பதனை நோக்குமிடத்து நன்மை, தீமை என்ற வேறுபாடுகள் இயற்கையிடத்து இருப்பதில்லை. அவை இயற்கையினைப் பயன்படுத்தும் மனித மனதின் செயற் பாட்டிலேயே தங்கியிருக்கின்றன என்ற உண்மை புலப்படும்.

பஞ்சபூதக் கோட்பாடுகளும் இதற்கு முரணானவையல்லவாம். உதாரணமாக அளவான மழை – வளம் பெருக்கும். அளவுக்கு மீறிய மழை வெள்ள அபாயத்தை உண்டாக்கும். அளவான நெருப்பு சமையலைப் பதப்படுத்தும். அளவுக்கு மீறிய நெருப்பு வீட்டையும் கொழுத்தி விடும். அளவான காற்று உயிர் வாழ்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றியமையாதது. அது அளவுக்கு அதிகமானால் பெரும்புயலாகி வாழ்க்கையில் அனர்த்தங்களையே ஏற்படுத்தும். அவ்வாறே பேனாவானது நல்லதையும் எழுதும், கெட்டவற்றையும் எழுதும். அது எழுதுகோலின் தவறு அல்ல. அதனைக் கையாளுவோரின் நோக்கத்திலேயுள்ள தவறாகும். சிந்தனை தவறானால் செய்கையும் தவறாகும் என்னும் மெய்ஞானக் கல்வி முறையின் அடிப்படை இலட்சியமே இது தான். இந்த நிலைப்பாட்டிலே விஞ்ஞானமும் மெய்ஞானமும் அடிப்படையில் முரண் பட்டவையல்ல எனலாம்.

ஒழுக்கவியல் அடிப்படைகள் :

சமய அறிவின் உண்மையான உபதேசம் ஒழுக்கச் சீர்திருத்தமே தவிர கொள்கை உறுதிப்பாடு என்பது மட்டுமல்லவாம். கொள்கைகளை வரையறுப்பதுடன் சமயப் பற்று முடிந்து விடுவதில்லை. வரையறை செய்த கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதே அதன் செயல்முறைத்திட்ட மாகும். நாம் ஏறிச் செல்கின்ற வாகனம் எது என்பது முக்கியமல்ல. வாகனத்திலே வருகின்ற பொருளின் பெறுமதி எத்தகையது என்பதைப் பொறுத்தே வாகனத்திற்கும் பெருமையுண்டாகும். மறைஞான சம்பந்தர் திண்ணைக்கட்டிலில் இருந்தார். உமாபதி சிவாச்சாரியார் எதிரே பல்லக்கில் அமர்ந்து வந்தார். மறைஞானிக்கு அது பல்லக்காகத் தெரியவில்லை. பட்ட கட்டையாகத் தெரிந்தது. உமாபதி சிவாச்சாரியாரால் திண்ணைக் கட்டுக்கும் மகிமை உண்டானது. விமானம் பயணிகளையும் ஏற்றி வருகிறது. குண்டுகளையும் ஏற்றி வருகிறது. வாகனத்தை உபயோகிக்கும் மனிதனில் தவறு இருக்கிறதே தவிர, வாகனத்தில் அல்லவாம். அதே போன்று சமயம் என்ற வாகனத்தில் தவறுகள் கூறமுடியாது. அந்த வாகனத்தைப் பயன்படுத்தும் மக்கள் இனம் செய்யும் தவறுகள் வாகனத்தின் தவறுகள் ஆகிவிடுமா? வருணக்கல்வியினைச் சமயம் சமுதாய ஒழுங்கு மேன்மை கருதிக் கற்றுக்கொடுத்தது எனப்படும் போது அதனை சாதி என்ற போர்வையில் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் சதிச்செயலுக்குப் பயன் படுத்தும் சமுதாயத்தினரின் செயற்பாட்டைக் கண்டிக்கலாமே தவிர சமய அறிவின் ஒழுக்கத் திட்டத்தைக் கண்டிப்பது முறை யாகாது. 'நாலு குலம் படைத்தான் - அதை நாசமுறச் செய்தனர் மூடர்' எனப் பாரதி யாரும், சமூகத்தின் இச்செயற்பாட்டினைக் கண்டித்தாரே தவிர சமயத்திட்டத்தின் உயர்நிலை ஞானத்தை அல்ல என்பதனை எவரும் எளிதில் புரிந்து கொள்வர்.

இன்றைய கல்வி முறையானது சமய வாழ்வு, உலக வாழ்வு இவற்றிடையே பிரிவென்னும் ஒரு பள்ளம் தோண்டும் அளவிற்கு முரண்பாடுகளைக் கற்பிப்பதால் உலகின் பரிதாபமான செயல்களால் மனம் உருகாதபடி நெஞ்சத்தைக் கல்லாக்கிக் கொள்வதனாலும், மனித சமூகத்தில் ஏற்படும் தொல்லைகளினின்றும் பின்வாங்கி விடுவதாலும் சாவுக்குப் பின் தான் மனிதனுக்கு நீதி கிடைக்கும் எனப் போதிப்பதனாலும் சமய வாழ்வினைச் சீர்திருத்தும் வாய்ப்பே சமயத்திற்கு இல்லாமல் போய் விடுகிறது. சமூக ஸ்தாபனம் என்ற கட்டிடத்தின் அடிப்படைக் காரணம் ஆத்மீக தத்துவம் தான். இந்த உறுதிப்பாட்டினை வழங்குவதற்கும் அறிவியல் அடிப்படைகளை வளர்க்கவும் தொழில் அறிவும், சமய அறிவும் தேவைப் படுகின்றன. சமயம் சமூக ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஒரு சாதனமாகும். மனிதர்கட்குத் தொண்டு செய்வதே சமயங்கட்குள் உயர்ந்த சமயம் என்றார் வள்ளலார். அவரது பாடல்களில் வறுமை, பசிப்பிணி அகல வேண்டும் என்பதே சமய உயர் அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையின் கருப்பொருளாக அமைந்துள்ளது. உண்மையான மனிதத் தன்மையினை வெளிப்படுத்துவதே சமயத்தின் இலட்சிய மாகும். அத்தகைய நிறைவாழ்வு வாழ்ந்து காட்டியவர்கள் கடவுளாகப் போற்றப் பட்டனர். கிருஷ்ணர், இராமர், புத்தர், யேசுபிரான், முகமது நபி, இராமகிருஷ்ணர் இவர்களின் பெயரால் சமய ஸ்தாபனங்கள் இவ்வாறு தான் உருவாகின.

தர்க்க விதிகள் :

கடவுள் என்ற கொள்கைக்கு மனச் சாட்சியே நிச்சயமான ஆதாரம் என்ற மேல் நாட்டறிஞர் கான்ற்றும் (Kant), மனித அறிவே ஆதாரம் எனக் கொள்ளும் ஹெகலும் (Hegel) கூறுவது "ஸத்யஸ்ய ஸத்யம்" எனச் சமய நூல்கள் கூறும் உண்மை அறிவிற்கு புறம்பானவை அல்ல எனலாம். விஞ்ஞானம் அல்லது நூல்கள் அறிவு, ஆனந்தம் அல்லது ஆத்ம விடுதலை அவைகள் யாவும் தத்தமதளவில் விளக்க வேறுபாடுகளேயாகும். கான்றின் காரண காரிய இலட்சியவாதமும் (Dialectical Idealism) சரி, மாக்ஸின் தத்துவமான லோகாதயவாதமும் சரி (Materialism) படிப்படியான முன்னேற்றம் உலகப் பொருட்களில் காணப்படுவதனை ஒப்புக்கொள்வனவாகும். பிரபஞ்சத்தின் இலட்சியமே உயிர்கட்கு மனதையும், விஞ்ஞான அறிவினையும் ஊட்டி முடிவில் ஆத்மானுபவமான பேரின்பத்தை அடையச் செய்வது தான். இவற்றிலே உலக பரி மாணத்தின் வெற்றியும் கைகூடிவிடும்.

பழங்காலக் கிரேக்கர் Logos என வழங்கும் பிரபஞ்சத்தின் உயிர்த்தத்துவமான ஒழுங்கும் இயக்கமும் தொழிற்படவில்லை யானால் உலகமே இயக்கமில்லாத ஒரு பிண்டமாக இருக்குமென்றனர். இறை மைக்கும் பிரபஞ்ச இயக்கத்துக்குமிடையே உள்ள ஒரு இணைப்பாக இருப்பதே சமய தத்துவ அறிவியல் எனலாம். பிரபஞ்ச நடைமுறைக்குச் செல்லப்படும் விஞ்ஞானம் இயற்கையிலும் சரி, உலக வரலாற்றிலும் சரி காணப்படும் எல்லா முயற்சிகட்கும் காரணம் ஆத்மாவில் இருந்து கிளம்பும் தூண்டுதல் என்பதனைப் பற்றியே தமிழ் நூற் கல்வியும் இலக்கியமாயினும், இலக்கணமாயினும், காவியமாயினும், புராணங்களாயினும், தத்துவ சாஸ்திரங் களாயினும் சரி ஆதிமுதல் இவ்வடிப்படை உள்பொருளையே உட்கருவாகக் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ளன என்பதனையே புலப்படுத்துகின்றன. 'அறிவானும் நானே அறிவிப்பானும் நானே அறிகின்ற அறிவும் நானே' என்ற அற்புதத் திருவந்தாதியின் ஒரு குறிப்பு இவ்வுண்மையினைத் தெளிவு படுத்தப் போதுமானது.

கர்மநியதியும் தமிழ்க் கல்வியும் :

தமிழ்க் கல்வியானது இன்னுமொரு விடயம் பற்றி சமய அறிவில் தன் வகி பாகத்தைச் செலுத்தியுள்ளது. கருமநியதி பற்றிய இச்சிந்தனை மனித சமூகத்தின் மனிதாபிமான முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டுமென்ற உயர் நோக்கிலேயே முன்வைக்கப் பட்டுள்ளதெனில் தவறாகாது. ஒவ்வொரு வரும் வாழ்வின் யாத்திரை முடியும் வரை கர்மா என்ற சட்டத்திற்குக் கட்டுப்பட்ட வர்களாக இருக்கின்றார்கள். ஒருவனது ஆசைகளும் செயல்களுமே அவனது முன்னேற்றத்தைத் தீர்மானிக்கின்றன என்பதே கர்மா என்ற சட்டமாகும். எந்நேரமும் தொழிற்படுவது மனிதனின் வாழ்க்கை நியதி. நீ தொழிலாற்றப் பிறந்தவன் - கடமையைச் செய் - முயற்சியை நிறுத்தாதே இது கீதா வாசகம். ஒருவன் வாழ்வின் ஆரம்பத்திலேயே செய்யும் முயற்சிகள் அவனது வருங்காலத்தை நிர்ணயிக்கும். இதனையே தமிழ் நூற்கல்வியானது ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியில் ஒருவனால் ஆற்றப்பட்ட செயல்களின் எதிர்விளைவுகள் அவனது அடுத்த பிறவியினைத் தீர்மானிக்கின்றன என விளக்கலாயின. "முற்பகல் பிறர்க்கின்னா செய்யின் பிற்பகல் தமக்கின்னா தாமே வரும்" என்ற குறளும், "இந்த ஊனெடுத்த பின் செய்த தீவினை யாதொன்றுமில்லை – பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனம் வந்து மூண்டதுவே" எனப் பட்டினத்தார் பாடலும், "நன்றும் தீதும் பிறர்தரவாரா" என்ற புறநானூறின் அறி வுரையும், "அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும் என்பதும், ஊழ்வினை உகுத்து வந்தூட்டும்" என்ற சிலம்பின் கூற்றும், "முன் புரிந்த தீவினையே கொன்றிடும் – வேறு கூற்றும் வேண்டுமோ" என்னும் கந்தபுராணம் போன்ற இன்னோரன்ன நூல்கள் தரும் செய்திகள் யாவிலும் இவ்வுண்மை வலியுறுத்தப்பட்டது.

இப்படியே தான் இருக்க வேண்டும் என்பது விதியின் கட்டளையல்ல. நமக்கு மட்டும் தைரியமும் தன்னம்பிக்கையும் இருந்தால் நமது வருங்காலத்தை நாமே புதுமுறையிலே அமைத்துக்கொள்ள முடியும். ஒருவரது கர்மா மாற்ற முடியாதது அல்ல. அவரவர் எண்ணங்களில் வஞ்சனை, சூது, பொறாமை இல்லாமல் தூய்மையாக இருந்தால் போதும் முயற்சியில் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும் பரவா யில்லை. வெளியே காணும் பலன் எப்படி இருந்தாலும் உள்ளே முன்னேற்றம் ஏற்படுவது நிச்சயம் எனத் தமிழ் நூல்கள் கற்பிக்கின்றன. 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம் எனவும் வஞ்சனைகள் செய்வாரோடிணங்க வேண்டாம்' எனவும் ஆத்திசூடி என்னும் தமிழ் நூல் கூறுவது போன்று "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என வள்ளலார் போன்ற பலரும் இக்கருத்தினை வலியுறுத்தினர். ஆதனால் திரிகரணசுத்தியினால் காரியசித்தி நிச்சயம் எனக் கற்பிப்பதுடன், பிறர்க்கு சேவை செய்தலையும், மனித சமுதாயத்திற்கு உதவியாகச் செயற்படுவதனையும் ஊக்கப் படுத்தும் முகமாகவே சமய அறிவிலே இக்கருத்தானது திட்டவட்டமாக நிரூபணம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

முடிவுரை :

இவ்வாறாக நவீன விஞ்ஞான உலகமும் பாராட்டிப் பேணத்தக்க பல்வேறு விதமான சமய அறிவினைக் கொண்ட ஆழமான உண்மைத் தத்துவங்கள் தமிழ் நூற்கல்வியில் காலம் தோறும் தமிழ்ப் பண்பாட்டிற்கமைய பிரபல்யமடைந்தே வந்துள்ளன. பல்லவர் காலம் முதல் சோழர் காலம் வரை எழுந்த தேவாரத் திருமறைகள், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள், 15ம் நூற்றாண்டின் பின்வந்த அருணகிரிநாதர், தாயுமானவர், அபிராமிப்பட்டர், இராம லிங்க வள்ளலார் போன்ற அருளாளர்களது நூல்கள் யாவற்றிலுமே மேற்குறிப்பிட்ட செய்திகள் அனைத்தின் உட்பொருளையும் தொகுத்துப் பார்க்க முடியும். ஈழத்திலும் நாவலரதும், அவரது மாணவர் பரம்பரை யினரதும் நூல் வெளியீடுகளிலும், பண்டிதமணி அவர்களின் சைவ நற் சிந்தனைகள், சமயக் கட்டுரைகள் போன்ற அனைத்துத் தமிழ் கல்வியினை வளர்த் தற்குத் துணைபுரிந்த நூல்களிலும் சமய ஞானத்தின் மேல்வரும் சிந்தனைகளையே அவை தம் அறிவுக் கருவூலங்களாகக் கொண்டிருக்கின்றமை சமய விருத்தியில் தமிழ்க் கல்விச் சிந்தனையின் வகிபாகத்தை நிரூபணம் செய்வதாகவே அமைந்துள்ளது.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும்
– நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும்
– இமைத்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும்
– மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம்
– குணம்மிக்கார்".
(பெரிய புராணம்)

சான்றாதாரங்கள் :

1) மு.வரதராசனார், திருக்குறள், தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1996.
2) பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், சென்னை 1982.
3) லோறன்பறோஸ், மனித விழுமியத் திற்கான சத்யசாயிக்கல்வி, (ஆங்கி லத்தில்) (தமிழாக்கம் - சபா ஜெயராசா)
4) வித்தியானந்தன்.அ, தமிழர் சால்பு, கண்டி, 1954.
5) ராதாகிருஷ்ணன்.எஸ், நம்பிக்கையின் மறுமலர்ச்சி.
6) வேலுப்பிள்ளை.ஆ, தமிழர் சமய வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1980.
7) திருமந்திர ஆராய்ச்சி, சென்னை, 1982.
8) இராசமாணிக்கனார், சைவசமய வளர்ச்சி, பாரிநிலையம், சென்னை, 1972.
9) திருமந்திரம், திருப்பனந்தாள் காசிமட வெளியீடு, 1968.
10) சுப்பிரமணியபிள்ளை.கா, இலக்கிய வரலாறு, (இரண்டாம் பாகம்), சென்னை, 1949.
11) Gandhi.M.K., Truth is God.
12) Bonquet.A.C., Comparative Religion.
13) Sanathathe Sarathy, Monthly Magazine, Jauha, April, 1985.
14) கலைக்களஞ்சியம், தொகுதி, 4.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் சோழர் கலை மரபுகள் திராவிடக் கலைகளின் வளர்ச்சி

பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராசா
வரலாறு – தொல்லியற்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
22-05-2010

அறிமுகம்

ஈழமான மும்முடிச்சோழ மண்டலம் சோழசாம்ராட்சியத்தில் ஒன்பதாவது மாகாணமாக இணைக்கப்பட்டு முகாமைப் படுத்தப்பட்டது என்பதனை பிரஸஸ்தி, மற்றும் சாசனச் சான்றுகள் உறுதிப்படுத்தி யுள்ளன. கி.பி993 ஆம் ஆண்டிலிருந்து கி.பி1070 ஆம் ஆண்டு வரைக்குமுள்ள 77 வருடங்கள் இலங்கையில் வலிமை வாய்ந்த சோழப் பேரரசர்களின் முடியாட்சி நிலவியிருந்தது. முதலாம் இராஜராஜன் தொடக்கம் முதலாம் குலோத்துங்கனின் ஆட்சித் தொடக்கம் வரைக்கும் (1070) வலிமை வாய்ந்த பேரரசர்கள் சோழ சாம்ராட்சியத்தினை நிர்வகித்திருந்தமையின் பின்னணியில் இலங்கையிலும் சோழரது அரசியல், மற்றும் மொழி, பண்பாட்டு விருத்தி போன்றன ஏற்படக் காரணமாயின. "சோழராட்சியின் தவிர்க்கமுடியாத விளைவு என்னவெனில் இலங்கையின் மதத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் இந்து, பிராமண – சைவ நடைமுறைகளும், திராவிடக் கட்டிடக்கலையும் தமிழ் மொழியும் ஊடுருவி மிகப்பலமடைந்து மேலோங்கியமையே" என K.M. de சில்வா தனது நூலில் குறிபிட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. புராதன பழம்-பெருமை வாய்ந்த தேரவாத பௌத்தப் பண்பாட்டினைக் கொண்ட இலங்கைத்தீவில் இந்து திராவிடப் பாணியில் அமைந்த கட்டிட, சிற்ப, விக்கிரஹவியற் கலை மரபுகள் உச்ச நிலையில் நன்கு வளர்ச்சிபெற்ற காலமாக இச் சோழர் காலப்பகுதி மிளிர்கிறது. புலத்திநகர் எனப்பட்ட பொலனறுவை சோழர்கால அரசியல் முகாமைத்துவத்தின் தலைநகராக, ஜனநாத மங்களம் என்ற பெயருடன் இலங்கைப் பண்ணாட்டு வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியிருந்த மையைக் காண்கிறோம். பன்மொழி, பன்மத, பல்லினக் கலாசாரத்தினை உள்வாங்கிக் கொண்ட பொலனறுவை, முதலில் சோழவம்ச ஆதிக்கத்தின் கீழ் இந்துமதக் கோட்பாட்டுக்குரிய கலைத்துவ நகராக வடிவமைக்கப்பட்டது என்பது இடைக்கால இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும்.

கலைவரலாற்று மூலாதாரங்கள்:

இலங்கையில் சோழமன்னர்களது அரசியல், நிர்வாக மற்றும் பண்பாட்டு அபிவிருத்திகளைக் குறித்த சான்றா தாரங்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. மன்னர்களது ஆட்சியைக் குறித்த மெய்கீர்த்திச் சாசனங்கள் (பிரஸஸ்தி) கல்வெட்டுக்கள், நாணயங்கள் மற்றும் வெண்கலச் சிற்பங்கள், கருங்கற்சிற்பங்கள் பொலனறுவையில் அகழ்ந்து வெளிப் படுத்தப்பட்ட 13 இந்துக் கோவிலகள், கலாசார முக்கோண வலயப்பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இந்து வெண்கலச் சிலைகள் சோழரோவியங்கள், நடனச் சிற்பங்கள், போன்றன இலங்கையில் சோழ மன்னர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப்பணி பற்றி அறிவதற்கு உதவும் மூலங்களாகவுள்ளன. பிராந்திய ரீதியில் சோழர் கலைமரபு தொடர்பான சான்றுகள் கிடைத்தவண்ணமிருப்பதனையும் காண் கிறோம். திருகோணமலை, கந்தளாய், பதவியா, தம்பலகாமம்போன்ற நகரங் களிலிருந்து வெண்கலச்சிற்பங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள்,போன்ற மூலாதாரங்கள் சோழர் காலத்தினைச் சேர்ந்தவையாகக் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்தும் சோழர் காலதிற்குரிய அரிய கலைப்பொக்கிசங்கள் கிடைத்த வண்ணமிருப்பதனைக் காணலாம். கந்தரோடையிலிருந்து சோழர் காலத்திற் குரிய இருவெண்கலச்சிற்பங்களும், தாம்பாளம் போன்ற கோயிற் தட்டுமுட்டு பொருட்களும் கிடைத்துள்ளன. யாழ்ப் பாணம் பழைய சோனகத்தெருவில் உள்ள ஒர வீட்டின் அடித்தளத்திலிருந்து சோழர் காலத்திற்குரிய சண்டேஸ்வரர் சிலையும் கிடைக்கப்பெற்று, அவை இன்று யாழ்ப் பாண அரும்பொருளகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். மன்னார் திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் பெரிய சிவலிங்கம் உட்பட சோழர் சிற்பங்கள், வெண்கலச் சிலைகள் மீட்டெ டுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அனுராத புரத்திலுள்ள ஜெதவதன விகாரை வளவிலிருந்து சோழர்கால கலைப் பொருட்கள் பெருந்தொகையாக அகழ் விலிருந்து மீட்டெடுக்கப்பட்டமையைக் காண்கிறோம். அபயகிரி விகாரை வளவிலிருந்து சோழர்கால அர்த்த நாரீஸ்வரர் வெண்கலப்படிமம் கிடைத் திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இலங்கையில் சோழர் காலைப்பணிபற்றி படித்துக் கொள்வதற்கு எமக்கு ஏராளமான சான்றாதாரங்கள் கிடைத்துள்ளன, இப்பொழுதும் கிடைத்து வருகின்றன.

சோழர் கால இந்துக்கோயிற் கட்டிடக் கலை மரபு

இலங்கையில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்துக் கோயில்களின் தனித்துவத்தினை இரண்டு அடிப்படைகளில் வகுத்து நோக்கலாம். ஆவையாவன.

1. பேரரசுச் சோழர்களது ஆட்சிக்கு முன்னர் கட்டப்பட்ட இந்துக்கோவில்கள்
2. முதலாம் இராஜனுக்குப் பின்னர் கட்டப்பட்ட கோயில்கள் என்பனவாகும்.

முதலாம் ஆதித்தியன், முதலாம் பராந்தக சோழன் ஆகியோரால் இலங்கையில் வட பகுதியில், குறிப்பாக பூநகரி, நெடுந்தீவு, யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கட்டப்பட்ட கோயில்கள் ஆய்விற்குரிய கவனத்தினை ஈர்க்கின்றன. முதலாம் ஆதித்யன் காலத்து இந்துக் கோயில்கள் எனக் கருதப்படும் அயட்டையப் புலத்திலுள்ள (வல்வெட்டித் துறைக் கண்மையில் உள்ள ஆதித்யன்புலம்) ஆதிவைரவர் கோவில் மந்திகைக்கு அண்மையில் உள்ள மடத்துவாசல் பிள்ளையார் கோயில் இவை இரண்டும் கட்டிடக் கலை ரீதியாக மிக அண்மைக்காலம் வரைக்கும் முற்பட்ட சோழர் மரபினையே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. முதலாம் பராந்தக சோழனது இந்துக் கோவில் பாணியில் பூநகரியில் காணப்பட்ட மண்ணித்தலை சிவாலயம், நெடுந்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட சிவாலயம் என்பன இற்றை வரைக்கும் அதன் பழைய தோற்றப் பாட்டிலேயே இருந்து கொண்டிருப்பதனைக் காணலாம். கருவறை, அந்தராளம், முகப்பு மண்டபம் என்ற மூன்று பிரதான அலகு களும் முதலாம் பராந்தகன் மாதிரியில் (style) கட்டப்பட்டிருந்தமையைக் காணலாம். கருவறையின் மீது விமானம் இரட்டைத்தனி (Tires)யில் அமைக்கப்பட்டிருப்பதனைக் காண்கிறோம். ஆடித்தளம், குமுதம், கபோதம், பிட்டி (சுவர்) பந்தனம், விமானவரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடி என முதலாம்பராந்தகனுடைய கோவிலமைப்பு நிலத்திலிருந்து மேலே விமானம் வரைக்கும் மேலே குறிப்பிடப் பட்ட கட்டிட அலகுகளைக் கொண்டிருப் பதனைக் காண்கிறோம்.

நல்லூரில் உள்ள சட்டநாதீஸ்வரர், தென்மராட்சியிலுள்ள கல்வத்தை சிவன் கோவில், வாரிவன நாதேஸ்வரர், உருத்திரபுரம் சிவன் கோவில் ஆகியன முதலாம் இராஜராஜனால் கட்டப்பெற்ற சிவாலயங்களாகும். யாழ்ப்பாணக் கோட்டை யிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட முதலாம் இராஜேந்திரனது சோழத் தமிழ்க் கல்வெட்டு ஒன்று நல்லூரில் இருந்த சிவன் கோவில் ஒன்றுக்கு தேவதானமாக" சாவா மூவாப் பேராடுகள்" பத்து வழங்கப்பட்ட செய்தியைக் குறிக்கின்றது. நல்லூரில் அமைந்த அச்சிவன்கோவில் ஜனநாதேஸ் வரம் என முதலாம் இராஜராஜனின் விருதுப் பெயரினால் இக் கல்வெட்டில் பொறித்திருக்க வேண்டும். துர்ரதிஸ்ட வசமாக அக் கோயிற் பெயரையுடைய வரிகள் எழுத்துக்கள் அழிந்து விட்டன. இந்த நான்கு கோயில்களும் சோழர்காலக் கோயில்கள் என்பது அங்கிருந்து பெறப் பட்ட கற்சிற்பங்கள். மரபுகள் எனபவற்றின டியாக நிருபிக்கப்படட்டிருக்கின்றன. உருத்திரபரம் சிவன் கோயிலின் இடிபாடு களிலிருந்து அதுவும் சோழர்காலத்துப் பெரிய சிவன் கோவில் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உருத்திரபுரம் சிவன் கோவிலின் புராதன இடிபாடு களுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட செங்கட்டி களில் "மேசள் மார்க்" ஆக தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். இந்த வரிவடிவங்கள் சோழர்காலத் தமிழ் எழுத் துக்களாக காணப்படுகின்றன. சாவகச்சேரி வாரிவனநாதேஸ்வரர் கோயிலின் பழைய இடிபாடுகளிலிருந்து சோழர் கலைப்பணியிலான செம்பு விக்கிரகங்கள், நாகவடிவங்கள் என்பன கிடைத்தவண்ணமுள்ளன. நல்லூரின் கண் அமைந்து காணப்படும் சட்டநாதேஸ்வரர் கோயிலின் பழைய இடிபாடுகளிலிருந்து சோழர்பாணியிலான சதுரஆவுடையார், மற்றும் கோமுகி என்பன கிடைத்துள்ளன. அந்த அடிப்படையில் இக்குறிப்பிட்ட சிவன் கோவில்கள் முதலாம் இராஜராஜனின் கலைப் பாணியைத் தழுவி எழுந்தவையாக கொள்ள முடிகிறது.

பொலனறுவைச் சிவன் கோயில்கள்

பேராசிரியர் கா. இந்திரபாலா இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை என்ற நூலில் பொலனறுவையில் உருவாக்கப்பட்ட சோழர் காலச் சிவன் கோயில்கள் தொடர்பாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இதுவரையில் நடாத்தப்பட் அகழ்வா ராய்ச்சியின் விளைவாகப் பொலனறு வையிலே பத்துச்சிவன் கோயில்களும் ஐந்து விஷ்னு கோயில்களும் ஒரு காளிகோயிலும் வெளிப்படுத்தப்பட் டுள்ளன. இவற்றுள் எவை சோழர் காலத்தில் அதாவது சோழர் இங்கு ஆடசி புரிந்த போது கட்டப்பட்டவை என்று கண்டு கொள்வது ஓரளவிற்கு பிரச்சினையாய் உள்ளது. இந் நிலைக்குப் பல காரணங்கள் உள. கோயில்களின் காலத்தினை நிர்ண யிப்பதற்கு பொதுவாக மூன்று காரணிகள் உதவுகின்றன. ஒன்று கோயிலின் அமைப்பு முறையும் கட்டிடப்பணியும், இரண்டாவது கோயிலிலே காணப்படும் படிமங்கள் போன்றவற்றின் பாணி இறுதியாக கோயிலிலே செதுக்கப்பட்டுக் காணப்படும் கல்வெட்டுக்களின் சான்று. பழைய கோயில் ஒன்று பூரணமாக அல்லது பெரு மளவிற்குப் பேணப்பட்டிருந்தால் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடப் பணியைக் கண்டு அதன் அடிப் படையிலே அதன் காலத்தையும் நிர்ணயிக்க முடியும். பொலனறுவையிலுள்ள இந்துக் கோயில்களுள் ஒரு சில பூரணமாகப் பேணப்பட்டுள்ளன. வேறு சிலவற்றின் பாகங்கள் குறிப்பிடத்தக்களவிலே எஞ்சி யிருக்கின்றன. ஏனையவை பெருமளவிற்கு அழிந்து அவற்றின் அடித்தளமும் ஒருசில அறுகற்களுமே எஞ்சியுள்ளன. இந்த நிலையில் அங்குள்ள கோயில்களுள் சில வற்றின் காலத்தைக் கட்டடப் பாணியின் உதவி கொண்டு நிர்ணயிக்க முடியும்."

பொலனறுவையில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்துக்கோவில்களுள் மூன்று திட்டவட்டமாக சோழர் காலக் கோயில்களாக அடையாளம் காணப்பட் டுள்ளன அவையாவன: இரண்டாம் சிவதேவாலயம். ஐந்தாம் சிவதேவாலயம், ஆறாம் சிவதேவாலயம் என்பனவாகும்.

இரண்டாம் சிவதேவாலயம்:

"வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார்" என்ற சிறப்புப் பெயர் கொண்ட இச் சிவாலயம் இற்றை வரைக்கும் முழுமை யாகப் பேணப்பட்டுள்ளது. முதலாம் இராஜேந்திர சோழனுடைய கல்வெட்டு இக்கோயிலில் காணப்படுவதிலிருந்து அம் மன்னனுடைய தாயாரது பெயரில் அவனால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்டது என்ற முடிவினை வயரலாற்றாசிரியர் கொண் டுள்ளனர். பேராசிரியர் கா.இந்திரபாலா பின்வருமாறு இரண்டாம் சிவாலயயத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கையிலே சோழர் கட்டிடப் பாணியில் அமைக்கப்பட்ட கட்டிடங்களுள் மிகச் சிறந்தது வானவன் மாதேவி ஈஸ்வர மாகும். அது ஈழத்தில் வளர்ந்த திராவிடக் கட்டிடக் கலையின் வரலாற்றிலும் ஒன்றுண்டு. பொலனறுவையிலே சிங்கள மன்னரும் பிறரும் எத்தனையோ சிறந்த கட்டிடங்களை அமைத்து, கட்டிடக் கலையை வளர்த் திருந்தாலும் அந் நகரத்தில் இன்று பூரண மாகக் கல்லினால் கட்டப்பட்டுக் காணப்படும் ஒரேயொரு கட்டிடம் வானவன் மாதேவி ஈஸ்வரமே. கருங்கல்லும் வுண்ணக்கல்லும் கலந்து கட்டப்பட்ட இக்கட்டிடம் தென்னிந்தி யாவிலுள்ள சோழர் காலக் கட்டிங்களின் சிறப் பியல்புகள் பலவற்றை உடையதாக விளங்கு கின்றதென்பதைத் தென்னிந்திய வரலாற் றாசிரியர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்."

"சோழர்களுடைய இப் பெருங்கோயிற் கட்டிடக் கலையின் " இரத்தினச் சுருக்கம்" இக்கோயில் எனலாம் மிக நுட்பமான அமைப்பில் அழுத்தமான கற்களால் எழுப் பப்பட்டிருக்கும் அழகான இக்கோயிலின் கர்ப்பக்கிருகம் 6.25 மீட்டர் (16அடி 04 அங்குலம்) அகலமுடைய அந்தராளத்தையும் கொண்ட கட்டிடமாகும். ஆதன் விமானம் நிலமட்டத்திலிருந்து 9.7 மீட்டர் (31 அடி 09 அங்குலம்) உயரமுள்ளது. இதிலே உள்ள அழகான சிற்ப வேலைப்பாடுகள் அளவாகச் சேர்க்கப்பட்டிருப்பது இதற்கு ஓர் அடக்கமான அழகைக் கொடுக்கின்றது." இவ்வாறு பேராசிரியர் கா.இந்திரபாலா தனது இலங்கையில் திராவிடக் கட்ட டக்கலை என்ற நூலில் பெலனறுவையில் உள்ள வானவன் மாதேவி ஈஸ்வரமுடையார் என அழைக்கப்பட்டட இரண்டாம் சிவ தேவலயத்தைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.

சோழருடைய பிறகோயில்கள்

பொலனறுவையில் உள்ள 5ஆம் சிவ தேவாலயம். தற்போது பதவியா என வழங்கப்படுகின்ற ஸ்ரீபதிக் கிராமத்தில் உள்ள இரவி குலமாணிக்கம் ஈஸ்வர முடையார். மாதோட்டதில் இருந்த இராஜேஸ்வரம், திருவிராமீஸ்வரம் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு கோயில்களும் மிகவும் பிரசித்தி பெற்றவையாக விளங்கியிருந்தன. வட மத்திய மாகாணத்திலிருந்த அத்தாகட என்ற ஊரில் சோழராட்சிக் காலத்தில் உத்தம சோழ ஈஸ்வரம் பிரசித்தமாக இருந்த வகையை தமிழ்க் கல்வெட் டொன்றால் அறிய முடிகிறது. பொலனறுவைக் கண்மையில் மண்டலகிரி என்னு மிடத்தில் பண்டித சோழ ஈஸ்வரம் என்ற கோயில் கட்டப்பட்டிருந்தது. கந்தளாயிலும், தம்பலகாமத்திலும் சோழர் காலக்கோயில்கள் அமையப் பெற்றிருந்தன. கந்தளாயில் ராஜராஜேஸ்வரம் என்ற பெயரில் காணப் பட்ட இந்துக்கோயில் பின்னர் சிங்கள மன்னனான விஜயபாகுவின் பெயரால் 'விஜயராஜேஸ்வரம்' எனப் பெயர் மாற்றத் திற்குள்ளாயிற்று. இவ்வாறு சோழர் இந்துக் கோயில்கள் நாட்டின் வடக்கு வடகிழக்குப் பிராந்தியங்களில் கட்டப்பட்டிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகளும் கிடைத்துள்ளன. இக்கோயில்களின் முழுமையான தோற்றம் எவ்வாறு காணப்பட்டிருந்தது. என்பதனை அவை அழிக்கப்பட்டமையினால் கண்டு கொள்ள முடியவில்லை.

சோழர்களது ஈழத்து வெண்கலச் சிற்பக்கலை மரபு

இலங்கையில் 19ம் நூற்றாண்டின் இறுதியில் தொடக்கி வைக்கப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளினதும் அகழ் வாய்வுகளினதும் விளைவாகவும், தனிப் பட்டோரது சேகரிப்பு முயற்சி காரண மாகவும் ஈழத்தில் சோழரது வெண்கலப்படி மங்களைப் பற்றிய சேகரிப்புக்கள் குறிப்பிடக்கூடியளவிற்கு காலம் காலமாக நிகழ்ந்துள்ளமையைக் காணலாம். இவ்வாறு கிடைத்துள்ள வெண்கலப்படிமங்கள் பெரு மளவிற்கு இந்து விக்கிரஹவியற் கோட்பாட்டு நெறிமுறையின் கண்நின்று உருவாக்கப்பட்டவையாகவே காணப்படு கின்றன. இதுவரையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளின் விளைவாக 60 க்கும் மேற்பட்ட இந்து வெண்கலப்படிமங்கள் சோழர் காலத்திற்கேயுரித்தான வகையில் இலங்கையில் கிடைத்திருப்பது ஈழத்து இந்து சமய வரலாற்றிற்கு உரம் சேர்க்கின்ற நிகழ்வாக அமைந்துள்ளது. 08 நடராஜா வெண்கலப்படிமங்கள் 22 பார்வதி வெண் கலப் படிமங்கள் 08 சைவ நாயன்மார்களது வெண்கலப் படிமங்கள் 03 விநாயகர் படிமங்கள் ஒரு காரைக்காலம்மையாரது படிமம், ஓர் அர்த்த நாரீஸ்வரர் படிமம் சிவனுடைய வடிவங்கள் 09, வைஸ்ணவப் படிமங்கள் 06, ஸ்கந்தர் மற்றும் சூரியன் படிமங்கள் 02 என இது வரையில் கிடைக்கப்பெற்ற படிமங்களின் பட்டியலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. கிடைத்துள்ள இவ்வெண்கலப்படிமங்களுள் செம்பாகத் திற்கும் மேற்பட்டவை ஈழத்துத்தமிழ்த் திராவிடத் தோற்ற மூலத்தினைச் சுட்டி நிற்பதனைக் காண்கின்றோம். குறிப்பாக சிவனது வடிவமான அர்த்தநாரீஸ்வரர் சிலை, காரைக்காலம்மையின் பேயுருக் கொண்டநிலை, சுந்தரமூர்த்தி சுவாமிகளது சிலை, திருகோணமலையில் கிடைத்த மீனாச்சி சிலை ஆகியன ஈழத்து உற்பத்தியின் மூலங்களை எடுத்துக்காட்டு வனவாக உள்ளமை சிறப்பாக நோக்கத் தக்கதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட வெண்கலப் படிமங்கள் யாவும் கிடைத்துள்ள மையங் களாகப் பின்வருவன காணப்படுகின்றன. ஈழத்துச் சோழரின் தலைநகரான "ஜனநாத மங்களம்" என்ற தமிழ்ப்பெயரால 'மத்திய காலத்தில் அழைக்கப்பட்ட பொலனறுவை யில் இருந்தே மிகக்கூடுதலாக இந்து வெண்கலப்படிமங்கள் அகழ்வாய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன. இங்குள்ள ஐந்தாம் சிவதேவாலயப் பரப்பிலிருந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக எண்ணிக்கையிலான சிற்ப படிமங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தன. தற்பொழுது பதவியா என்றழைக்கப்படுகின்ற சிற்பக் கிராமத்திலிந்தும் எண்ணிக்கையில் அதிகமான பார்வதி வெண்கலச்சிலைகள் வெளிக்கொணரப்பட்டன. பார்வதிபுரம் எனவும் பதவியா அக்காலத்தில் அழைக்கப்படிருந்மை குறிப்பிடத்தக்கது. திருகோணமலையிலிருந்தும் தங்க உலோகம் அதிகளவில் கலந்து செய்யப்பட்ட ஏழு வெண்கலச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஐந்து படிமங்களே கோணேஸ்வரர் கோயிலில் வழிபாட்டுக்காக இருந்து வருகின்றன. திருக்கேதீஸ்வரத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட வெண்கலப்படிமங்கற் வளர்ப்புக் கலையின் பிராந்திய வேறுபாடுகளை, அல்லது பிராந்தியத்திற்குரிய சோழரின் கலைப்பண்புகளை தனித்துவமான வகையில் விளக்கிக் நிற்கின்றன எனலாம். தற்பொழுது கண்டி, அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மையங்களை இணைக்கும் கலாசார முக்கோணத் திட்டத்தின் கீழ் யுனெஸ்கோவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பண்பாட்டு ஆய்வுகளின்போது குறிப்பிடத்தக்களவிலான இந்து வெண்கலப்படிமங்கள் கிடைத்து வருகின்றன. இவ்வாறு கிடைத்துள்ள இந்து வெண்கலப்படிமங்களுள் பார்வதி படிமங்களே எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன.

பார்வதி வெண்கலப் படிமங்களும் சோழர் கலைப்பாணியும்

ஈழத்தில் சோழர் கலைப்பாணியை மிகவும் இலகுவாக அடையாளம் காணத்தக்க வகையில் எமக்குக் கிடைத்துள்ள மிகச்சிறந்த சான்றாதாரங்களாக பார்வதி வெண்கலப்படிமங்கள் விளங்குகின்றன. கொழும்பிலுள்ள தேசிய அரும்பொருட்காட்சிச் சாலையிலும், அனுராதபுரத்திலுள்ள தேசிய நூதன சாலைகளிலும் பொலநறுவை, மற்றும் கண்டி ஆகிய இடங்களிலும் அதிக எண்ணிக்கையிலான பார்வதி படிமங்கள் சோகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை சோழர் கலைப் பாணியைப் பிரதிபலிப்பவையாகவே உள்ளன.

22 பார்வதி வெண்கலப்படிமங்களில் இரண்டு படிமங்கள் மட்டுமே இருக்கின்ற நிலையில் சமபங்கு, திரிபங்கு, துவிபங்கு நிலைகளுக்குட்பட்ட வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. நிற்கின்ற நிலையை உடைய பார்வதி படிமங்கள் யாவும் முழுமையாக மலர்ந்த தாமரைப்பீடத்தின் மீது உருவாக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியப் பிராந்தியத்தின் பண்பாடு வெளிப்பாட்டினை "பெண்மை" எவ்வாறு வெளிக்கொணரத்தக்க ஊடகமாக விளங்குகின்றதோ அதனையொப்ப இத்தாய்த் தெய்வ உருவங்களும் குறிப்பிட்ட இனத்தினதும் மதத்தினதும் இயல்பான கலைமரபுகளை வெளிக்கொணரும் ஊடகமாக விளங்குகின்றன எனலாம். அந்த வகையில் ஈழத்தின் மத்திய காலப்பண்பாட்டு வளர்ச்சியில் சோழர் பணியிலான பார்வதி வெண்கலப் படிமங்கள் பிரதான பங்கினைப் பெற்றிருந்தன என்றால் அக்கூற்று மிகையாது.

உதாரணமாக திருகோணமலையில் வடக்குக் கடற்கரை வீதியில், கிணறு தோண்டும் போது தற்செயலாகக் கிடைத்த பெரும் கலைக் களஞ்சியங்களுள் கிடைத்த இரண்டு பார்வதி வெண்கலப் படிமங்களின் இயல்புகளை இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாகும். இப்பார்வதி சிலைகள் இலக்கம் 11,12 என (Find No 11,12 – 1950 Tri) அடையாளமிடப்பட்டு அவற்றின் சிறப்பியல்புகள் வெளியே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப்படிமங்களுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது இருக்கின்ற நிலையிலும், இரண்டாவது நிற்கின்ற நிலையிலும் முறையே 47.6 சென்ரிமீற்றர். 50 சென்ரி மீற்றர் உயரங்களுடையதாக அமைக்கப் பட்டமையைக் காணலாம்.

ஈழத்திற்கேயுரிய-காலத்தால் முந்திய தனித்துவமான தமிழர் படிமக்கலை மரபு ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்திருந் தமைக்கு இவை சிறப்பான சான்றுகளாகும். வரத முத்திரையுடன் கூடிய, இருக்கின்ற நிலையில் உள்ள பார்வதியின் வலது கரத்திலே நீலோற்பலமலர் மொட்டு ஒன்று காணப்படுகிறது. சுகாசன நிலையில் அமைந்த இந்த சிலையின் வலது பாதத்தின் பெருவிரல் ஒரு சாய்வான நிலையில் கீழே தொங்கிக் கொண்டிருக்கும் இடது பாதத்தின் முழங்காலினை மெல்லத் தொட்டபடி காணப்படுவது அதன் பழமைத் தன்மையை சோழர் கலைப்பாணியை எடுத்துக்காட்டுகின்ற அம்சமெனலாம்.

நிற்கின்ற நிலையில் அமைந்த பார்வதி வெண்கலப்படிமத்தின் சிறப் பியல்புகள் பலவாகும். இந்திய, ஐரோப்பிய சிற்பக்கலை ஆய்வாளர்களை ஒருங்கே தன்வசம் ஈர்த்துள்ள பார்வதி வெண்கலப் படிமமாக இது விளங்குகின்றது. இப்படி மத்தின் விசேடஅம்சங்கள் என்னவெனில் பிரபா மண்டலம் எனப்படும் திருவாசியினுள், தாமரையாசனத்தின் மீது உருவாக்கப்பட்ட ஒரேயொரு உதாரணம் இதுவாகும். துர திஷ்டவசமாக அத்திருவாசியின் மேற்பாகம் எமக்கு கிடைக்காமற் போயிற்று இப்படி மதத்தினை மீனாட்சி என்று வர்ணிக்குமள விற்கு எடுத்த தோற்றத்தில் ஒரு மீனைப் போன்ற தோற்றத்தில் உண்மையான திரிபங்க நிலையில், பெண்மையின் இலட்சியப் பிம்பம் பிரதிபலிக்கும்படி வடிவமைக்கப்பட்ட விதமே ஈழத்து சோழர் பாணியை வெளிப்படுத்துவதற்கு அடிப் படையாயிற்று. H.Zimmer என்ற மேலைத் தேயக் கலைப்புலவரை ஒருங்கே ஈர்த்துள்ள வெண்கலப்படிமம் இதுவாகும் ஈழத்திலே சோழர் பண்பாட்டில், சமுத்திரவியல் வழிவந்த குணவியல்புகள் இலகுவில் இயங்கும்படி வடிவமைக்கப்பட்ட ஒரு படிமமாகவே இதனைக் கொள்ளவேண்டும். ஈழத்து இந்துத் தமிழர் படிமக்கலை வரலாற்றில் இப் பார்வதி படிமமானது தனித் துவமான உள்ளூர் கலைமரபின் வளர்ச்சிக்கு ஒர் உதாரணமாகத் திகழ்கின்றது. கிருஸ்ண ஐயர் என்பவரது கருத்துப்படி இப்படிம மானது கிபி11ம் நூற்றாண்க்குரியது எனக் கொள்ளபடுகிறது.

சிவநடராஜ வெண்கலப்படிமங்கள் காட்டும் ஈழத்துச் சோழர் கலைமரபு

சிவனது ஒரு வடிவமான நடராஜ வடிவங்களினுடைய வெண்கலப்படிமங்கள் முழுவதுமே பொலனறுவை என்ற மையத் திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடதக்கது. மிகவும் அண்மையில் ஜெதவனராமயவிலிருந்து அகழ்வின் போது சிவநடராஜர் வடிவம் ஒன்று சக்தியுடன் சேர்த்துக்கிடைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதுவரையில் எல்லா மாக 08 நடராஜ வெண்கலப்படிமங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பொல நறுவையிலுள்ள சைவக்கோயில்களில் இடம்பெற்றிருந்த இப்படிமங்கள்,பின்னர் பொலனறுவை வீழ்ச்சியடைந்த காலத்தில், கோயில்களில் புதைக்கப்பட்டும், வேறிறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டும், நீண்டகாலமாக அவை மறைக்கப்பட்டு இருந்தன. கடந்த நூற்றாண்டின் முடிவதும், இந்நூற்றண்டின் நடுப்பகுதியிலும் பொல னறுவையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு களின் விளைவாகவே இந்தச் சிற்பப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமங்கள் வெளிக்கொணரப்பட்டன. இவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கலைக் கருவுலங்களானவை ஈழத்துச் சுதேச வெண் கலப்பாரம்பரியத்தின் தனித்துவமான இயல்புகளை தெளிவாகப் பிரதிபலிப் பனவாக விளங்குகின்றன. பேராசிரியர் கா.இந்திரபாலா பொலனறுவையில் கிடைத்த நடராஜர் படிமங்களைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

"தமிழ் நாட்டிற்போல, இலங்கையிலும் நமக்குக் கிடைத்துள்ள சைவ லோகச் சிற்பங்களுள் மிகச்சிறந்தவையாய் இருப்பவை நடராஜர் சிலைகளே. இங்கு கிடைத்த இரண்டு நடராஜர் சிலைகளைப் போன்று சிறந்தவையாய் தமிழ்நாட்டிலும் கூட அதிக சிலைகள் கிடைக்கவில்லை என கலாவிமர்சகர்கள் கருத்துத் தெரி வித்துள்ளனர். தஞ்சாவுரிலே கிடைத்துக் தற்போது சென்னை அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலையும், பொலனறுவையிலே கிடைத்துக் கொழும்பு அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள முதலாவது (01) நடராசர் சிலையும் நடராஜர் சிலைகளுள் வைத்தெண்ணத்தக்கவை".

பொதுவாக நடராஜர் சிலை இல 01 (CMR No 13-89-283), நடராஜர் சிலை இல 02 (CMR No 13-89-283), நடராஜர் சிலை இல 05, இல 06 என்பன அவ்வ வற்றின் தனித்துவமான கலைவெளிப் பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் ஈழத்துத் தமிழர்களது வெண்கலப்படிமக் கலையின் வளர்ச்சி நிலையை உறுதி செய்வனவாக அமைந்துள்ளன. நீள்சதுரமுக வெட்டுத் தோற்றப் பொலிவுடன் விளங்கும் நடராஜர் சிலை இல 01 உம், விரிந்த பின்னற்சடையுடன் திருவாசியின்றி, ரிசபகுண்டலத்துடன் விளங்கும் நடராஜர் சிலை இல 02 உம், ஈழத்திற்கேயுரிய உருவாக்கத்தினைப் பிரதிபலித்து நிற்கின்றன. சி.சிவராமமூர்த்தி என்ற கலா விமர்சகரது கருத்துப்படி தமிழ்நாட்டில் எங்குமே கிடைத்திருக்காத வகையில் தேவாரங்களில் பாடப்பட்ட வருணனை களுக்கமைய ஈழத்தில் நடராஜர் சிலை இல.02 கிடைத்துள்ளது என்பதாகும். நாகபாம்பினை ஆபரணங்களாக அணியப் பெற்ற தோற்றப்பாடுடைய இப்படிமத்தி னைப்பற்றி சிவராமமூர்த்தி தனது "தென்னிந்திய வெண்கல உருவங்கள்" என்ற நூலில் விபரித்துள்ளார். இப்படிமத்தின் சடையானது தென்னிந்திய சிற்பங்களில் பொதுவாகக் காணப்படுவது போலல்லாது திரிந்து, முறுகி, பின்னி அமைந்துள்ளது. தேவாரங்களில் 'புரிபுன் சடையீர்" போன்று வர்ணிக்கப்பட்டதற்கேற்ப நடராஜர் சிலை இல 02 அமைந்துள்ளமையை சிவராமமூர்த்தி அவதானித்துள்ளார்.

சிலை இல.01 உம், விரிந்த பின்னற் சடையுடன் திருவாசியின்றி, ரிஷப குண்ட லத்துடன் விளங்கும் நடராஜர் சிலை இல 02 உம், ஈழத்திற்கேயுரிய உருவாக் கத்தினைப் பிரதிபலித்து நிற்கின்றன. சி.சிவராமமூர்த்தி என்ற கலாவிமர்சகரது கருத்துப்படி தமிழ்நாட்டில் எங்குமே கிடைத்திருக்காத வகையில் தேவாரங் களில் பாடப்பட்ட வருணனைகளுக்கமைய ஈழத்தில் நடராஜர் சிலை இல 02 கிடைத் துள்ளது என்பதாகும். நாகபாம்பினை ஆபரணங்களாக அணியப்பெற்ற தோற்றப் பாடுடைய இப்படிமத்தினைப்பற்றி சிவராமமூர்த்தி தனது "தென்னிந்திய வெண்கல உருவங்கள்" என்ற நூலில் விபரித்துள்ளார். இபபடிமத்தின் சடை யானது தென்னிந்திய சிற்பங்களில் பொதுவாகக் காணப்படுவது போலல்லாது திரிந்து, முறுகி, பின்னி அமைந்துள்ளது. தேவாரங்களில் 'புரிபுன் சடையீர்" போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணிக்கப்பட்டதற்கேற்ப நடராஜர் சிலை இல 02 அமைந்துள்ளமையை சிவராம மூர்த்தி அவதானித்துள்ளார்.

முடிவுரைக்கான முன்வைப்புக்கள்

ஈழத்தில் சோழர் கலைமரபு தொடர்பாக ஆராய்வோர்க்கு இன்னும் பலவகையான கலைவடிங்கள் மூலாதாரங்களாக விளங்குகின்றன. சோழர் பாணியில் அமைந்த நடனசிற்பங்கள் ஓவியங்கள், நாணயங்கள், சுடுமண் சுதையினால் செய்யப்பெற்ற உருவங்கள், இன்னும் பல்வேறு வகையான படிமங்கள் சான்று சேர்க்க உதவுகின்றன. திருகோணமலை, திருக்கேதீஸ்வரம் ஆகிய இடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற சோமாஸ்கந்தமூர்த்தங்கள், சைவநாயன்மார் வெண்கலப்படிமங்கள், விநாயகருடைய வெண்கலப்படிமங்களையொத்த வேறு எவையும் தமிழகத்திலும் இதுவரையில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இங்கு கிடைக்கப்பெற்ற அர்த்த நாரீஸ்வரர் வெண்கலப்படிமம், காரைக்காலமையாருடைய பேயுருக் கொண்ட தோற்றத்தினையுடைய வெண்கலப்படிமம் என்பன ஈழத்தில் சோழப்படிமக்கலை வரலாற்றிற்கு மேலும் மெருகூட்டுபவையாக உள்ளன. மாங்கனிக்குப் பதிலாக கையிலே மோதகத்துடன் தனது இருக்கையில் காட்சியளிக்கும் விநாயகருடைய வெண்கலப் படிமம் ஈழத்தின் அழகியற்கோட்பாட்டினை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்றது எனக் குறிப்பிடலாம். ஒட்டு மொத்தத்தில் இலங்கையில் 77 வருடகால சோழர் பாணிக் கலை வளர்ச்சியே இலங்கைத்தமிழர்களை சங்ககால குழம நிலை வாழ்க்கைமுறையை கைவிடச்செய்ததோடு, நிலமானியவடிப் படையிலான சமூகத்தினராக அவர்களை உருவாக்க உதவியது.

இக்கட்டுரையாக்கத்திற்கு உதவிய நூல்கள்

1. கிருஷ்ணராசா.செ - இலங்கையில் இந்து வெண்கலப் படிமக் கலைமரபுகள் (உருவாக்கமும் உருவாக்கியவர்களும்) (Ed) குமரன் புத்தக இல்லம் 2008
2. Coomarasamy A.K – Bronzes of Ceylon chiefly from the Colombo Museum. 1914
3. Leelananda Prematilleke : Sri Lankan Bronzes (Buddhist and Hindu) National Museum, Colombo 1986.
4. Krishnarajah . S : Saiva Bronzes in Srilanka (10 – 12th C.A.D) Unpulished Thesis, Uni of Mysore, 1983.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழரின் அறிவியல் கோட்பாடுகள்

திருமதி. விக்னேஸ்வரி பவனேசன்
முதுநிலை விரிவுரையாளர் தரம் - I
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

இலக்கியங்கள் மக்கள் வாழ்ந்த கால கட்டத்தோடு அவர்களின் வாழ்வியலையும் பதிவு செய்யும் காலக்கண்ணாடிகளாகும். மிகவும் வரலாற்றுப் பழமை கொண்ட சங்கத்தமிழரின் வாழ்வியல் நெறிகளை தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றி நிற்கின்றன. பழந்தமிழர்கள் தாம் வாழ்ந்த காலச்சூழலுக்கு ஏற்றாற் போலக் காதலையும், வீரத்தையும் மிகுதியாகப் பாடியுள்ளனர். மேலும் அவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினர் என்பதால் பழந்தமிழ் இலக்கியங்கள் இயற்கையையும் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ளன. பழந்தமிழர்கள் இலக்கியங்களை மட்டுமன்றி அறிவியல் சார்ந்த கருத்துக்களையும் இவ்வுலகிற்கு எடுத்தியம்பியுள்ளனர். அத்துடன் தங்களின் அறிவுசார்ந்த அனுபவம் மற்றும் நுட்பமான திறன் மூலம் அறிவியல் சார்ந்த செய்திகளை இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் பழந்தமிழ் மக்களின் அறிவுப் புலமையை நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. தமிழர் அறிவியலில் வானியல், சோதிடவியல், தொழில்நுட்பவியல், மருத்துவவியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் போன்ற கோட்பாடுகளை எடுத்தியம்பியுள்ளனர்.

அறிவியல் :

மனிதன் பகுத்தறியும் குணத்தை வெளிப்படுத்திய காலத்திலேயே அறிவியலும் தோன்றியிருக்கும். மனிதன் கற்களைக் கொண்டு நெருப்பைக் கண்டறிந்தவுடன் அறிவியல் பற்றிய பரிணாமத்தைப் பெற்றிருப்பான். அறிவியல் குறித்து அறிஞர்கள் கூறும் போது "இலக்கியம் கற்பனை வளம் மிக்கது. அறிவியல் உண்மைச் செறிவுடையது"[1] என்றும், "உள்ளதை உள்ளவாறு அறிவிக்க முயல்வது அறிவியல், உள்ளதை உணர்ந்தவாறு உணர்த்துவது கலை, கருவிகளால் அளந்து வரையறுத்துக் கூறுவது அறிவியல்"[2] என்று அறிவின் உதவியுடன் சரியான பொருண்மையை உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஆராய்ந்து அறிவிப்பதே அறிவியல் என்று புலப்படுகிறது.

ஆதி மனிதன் அறிவியலைக் கண்டறியப் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கலாம். மனிதன் நாகரிக வளர்ச்சிக்கு முதற்படியாக அமைந்தது அறிவியல். தனக்குத் தேவையான குடியிருப்புக்களை மனிதன் ஏற்படுத்தும் போது பொறியியல் துறை வளர்ச்சி பெற்றிருக்கும். தம் நோய்க் கெதிரான மருத்துவத்தேடலில் ஈடுபடும் போது மருத்துவத்துறையும், தம்மைச் சூழ்ந்துள்ள இயற்கையின் மூலம் வானியல் அறிவையும், தாவரவியல் அறிவையும், விலங்கியல் அறிவையும் பெற்று அறிவியல் துறையில் வளர்ச்சியடைந்திருப்பான். இக்கருத்தை "மனிதன் இம்மண்ணுலகில் எல்லையில்லாத காலம் முதல் வாழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறானென்பதும், அவன் காட்டு மிராண்டியாக இருந்து அறிவிலும் ஒழுக்கத்திலும் நாகரிகத்திலும் படிப்படியாக முன்னேறி வந்திருக்கிறான் என்பது தற்கால ஆராய்ச்சிகளால் வெளியாகியுள்ளன[3]. என்ற கருத்து அறிவின் துணையால் மனிதன் நாகரிகம் பெற்றதை மெய்ப்பிக்கின்றது.

பழந்தமிழர் வாழ்வியலில் இலக்கண இலக்கியங்களோடு அறிவியல் சார்ந்த செய்திகளும் காணப்பட்டன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய தொல் காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் வாயிலாகப் பழந்தமிழர் இவ்வுலகிற்கு அறிவியல் செய்திகளை எடுத்தியம்பியுள்ளனர் என்பதை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

இன்றைய நவீன உலகிற்கு அறிவியல் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கை, காதல், வீரம் ஆகியவற்றுடன் அறிவியலையும் இணைத்து வாழ்ந்துள்ளதை சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகின்றது. சங்ககாலத் தமிழர்கள் பல வகைப்பட்ட கோள்கள் மற்றும் விண்மீன்களின் இயக்கங்களைக் கண்டறிந்து வானியலை உருவாக்கினர். தாம் வாழும் காலத்தில் தொழிலைப் பெருக்கிக் கொள்ளவும், நாகரிகத்தை உருவாக்கவும் தொழில்நுட்பங்களைக் கண்டறிந்துள்ளனர். உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் நோய்வாய்ப்படுவது இயல்பு. பிற விலங்குகளிடம் இருந்து வேறுபட்ட மனிதன் தன் நோய்க்கெதிரான மருத்துவத்தேடலின் மூலம் மருத்துவக் கலையைக் கண்டறிந்துள்ளான். மேலும் தாவரம் மற்றும் விலங்குகளின் பயன்பாட்டோடு கூடிய வாழ்வியலைப் பதிவு செய்தனர். இவை யாவும் அறிவியலின் அடிப்படையாக அமைந்தன. எனினும் இங்கு கட்டுரைச் சுருக்கம் கருதி சிந்தனைகளைச் சங்க இலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

மருத்துவவியல் :

மனிதன் இவ்வுலகில் தோன்றியது முதல் நோயும் தோன்றிவிட்டது. மனிதனை நோய் என்று பீடித்ததோ அன்று முதல் நோய்க்கெதிரான போராட்டத்தில் மனிதன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான். விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் பகுத்தறியும் அறிவு நோய்க்கெதிரான மருத்துவத் தேடலில் மனிதனை ஈடுபடுத்தியது. மனிதன் தாவரங்களின் மருத்துவப் பயனை அறிந்து அறிவியல் சார்ந்த மருத்துவக் கலையைப் படைத்தான். சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினர் என்பதால் சங்க இலக்கியங்களில் இயற்கை மருத்துவமுறை மேலோங்கி நிற்கிறது. மனிதனைத் துன்பப்படுத்தும் நோய்களை மருத்துவர்கள் நீக்குகின்றனர். இம்மருத்துவர்கள் அறவழிப்பட்ட சமூக சேவகர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். போரில் காயமடைந்த ஒருவனின் வீட்டில் வேம்பு, வெண்கடுகு, அகில் போன்றவற்றின் மருத்துவப்பயனை அறிந்து பயன்படுத்தியுள்ளனர். மேலும் சங்ககாலத்தில் இருந்த இசை மருத்துவம் இன்றைய நிலையில் சிறப்பாக வளர்ச்சியுற்றிருப்பதை நாம் அறியமுடிகின்றது. மனிதன் மட்டுமன்றி நாய் போன்ற விலங்குகளிடமும் இயற்கை மருத்துவம் காணப்படுகிறது. உணவு சமிக்காத வேளைகளில் புல், பூண்டு முதலியவற்றை நாய் உட்கொண்டு வாந்தி எடுக்கிறது. இந்நிகழ்வு சமிக்காத உணவை வெளியேற்றும் இயற்கை முறையாகும். இடைக்காலத்தில் சித்தர்களின் துணையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த இயற்கை வைத்திய முறையானது சித்தவைத்தியம் எனப் போற்றப்படுகின்றது.

சங்கநூல் ஆசிரியர்களில் மருத்துவர்கள் சிலரும் இருந்திருக்கின்றனர். தம்கருத்தை வெளிப்படுத்திக் கவிதை எழுதிய அவர்கள் தாம் மேற்கொண்டு போற்றிய வாழ்வாதாரமாகிய மருத்துவம் குறித்தும் எழுதியிருப்பர். எனினும் அவ்வாறான தனிப்பாடல்களோ, மருத்துவ நூல்களோ எதுவும் கிடைக்கவில்லை. எனவே பிறவகை இலக்கியங்களிடையே காணப்படும் மருத்துவம் பற்றிய குறிப்புக்களைக் கொண்டே பண்டைத் தமிழரின் மருத்துவ அறிவை முற்றாக அறிந்து கொள்ள முடியாது. பல்துறை அறிவியல் சிறந்திருந்த தமிழினம் மருத்துவத்துறையில் சிறந்த அறிவு படைத்ததாகவே திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது உறுதியாகின்றது.

பழந்தமிழர்கள் தம்மைத் துன்பப் படுத்தும் செயல்களை "நோய்", "பிணி" என்ற சொற்களால் குறித்துள்ளனர். தொல்காப்பியர் பொருளதிகாரப் பகுதியில் முதன் முதலாக "நோய்" என்ற சொல்லும் "பிணி" என்ற சொல்லும் வருகின்றன. இதனை,

"நோய் மிகப் பெருகித் தன்நெஞ்சு கலுழ்ந்தோளை"[4]

என்றும்

"நோயும் இன்பமும் இருவகை நிலையில் காமம் கண்ணிய மரபிடை தெரிய"[5]

என்றும்

வரும் நூற்பாக்களில் "நோய்" என்ற சொல்லும் "மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு யாப்புற வந்த இனிவரல் நான்கே"[6]

என்ற நூற்பாவில் "பிணி" என்ற சொல்லும் இடம் பெற்றுள்ளன. இவ்விரு சொற்களில் இங்கு நோய் என்பது மனத் துயரையும், பிணி என்பது உடல் துயரையும் சுட்டி வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, எவ்வநோய், பசிப்பிணி, மருத்துவன் என்னும் தொடர்களைக் காட்டலாம்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள்ளுள் "மருந்து" பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்ககாலப் புலவர்களுள் இருவர் மருத்துவத் தொழில் வல்லவர்களாகக் கவிதை பாடும் வல்லமை பெற்றிருந்தனர். மருந்து வல்லுனரை "மருத்துவன்" என்று குறிக்கும் வழக்கு சங்ககாலத்தில் நிலவியிருந்தமை தெரிகிறது. சங்கப் புலவர்களுள் ஒருவர் உறையூர் மருத்துவன் தாமோதரனார். மற்றவர் மருத்துவன் நல்லச்சுதனார். தாமோதரனார் பாடியனவாக புறநானூற்றில்[7] மூன்றும், குறுந்தொகையில்[8] ஒன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்துள்ளன. நல்லச் சுதனார் பரிபாடல் என்ற நூலில் ஆறு பாடல்களுக்கு இசையமைதி கண்டுள்ளார்.

ஆசிரியர் பெயரோடு இணைத்துப் பேசப்பட்டுள்ள மருத்துவன் என்ற சொல் கலித்தொகை மலைக்கலியில்

"திருந்திய பார்க்கையில் மருத்துவன் ஊட்டிய மருந்து போல் மருந்தாகி மனழுவப்ப"[9]

என்ற அடிகள் இடம்பெற்றுள்ளன. குறைபாடுகள் ஏதுமில்லாத தாங்கும் சக்தியுடைய உடலில் ஒரு நோய் வந்த விடத்து மருத்துவனால் வழங்கப்பட்ட மருந்து அந்நோய் தீர்த்தலின் அதனை நல்ல மருந்து என்று சிறப்பித்தல் போல என இப்பகுதி பொருள் கொள்ள நிற்கிறது. ஆரோக்கியமான உடலில் மருந்து நன்கு வேலை செய்து உரிய நலம் பயக்கும் என்பதை இப்பகுதி எடுத்துரைக்கிறது. நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்தளிக்கும் வல்லமை மிக்கவனை நற்றிணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறவோன்" என்று குறிக்கிறது. மேலும் பசிக்குச் சோறு அளித்த ஒருவனைப் புறநானூறு 'பசிப்பிணி மருத்துவன்' என்று குறிப்பிடுகிறது.

நோயின் குணத்தை நன்காராய்ந்து நோய் போக்க வல்லவனே மருத்துவன் ஆவான். சங்ககாலத்தில் மருத்துவத்தொழில் உயிரைக் காக்கும் தொழிலாகவும், மக்கள் சேவையாகவும் மதிக்கப்பட்டுள்ளது. நோயுற்றவருக்கு மருத்துவன் அவர் விரும்பியதைக் கொடாமல் அவரது நோய்க்குத் தகுந்த மருந்தை ஆராய்ந்து கொடுத்தான். இதனை,

"அரும்பிணி உறுநர்க்கு கேட்டது கொடாது மருந்தாய்ந்து கொடுத்த அறவோன் போல"[10]

என்ற பாடலடிகள் சான்று பகர்கின்றன. இங்கு மருத்துவர் நோய்க்கான தக்க மருந்தை ஆராய்ந்து கொடுத்துள்ள பாங்கு பதிவாகிறது. உடல் நிலைக்கு ஏற்றாற் போல மருத்துவர்கள் உணவை உட்கொள்ள வற்புறுத்துவதை சங்ககாலம் முதல் இக்காலம் வரை காணமுடிவதால் சங்கத்தமிழ் மருத்துவரின் அறிவுநுட்பம் தெளிவாகின்றது. இங்கு மருத்துவன் "அறவோன்" என்று சுட்டப்படுகிறான். இதன் மூலம் மருத்துவத்தொழில் தமிழ்ச் சமூகத்தில் அறத்தொழிலாக செயற்பட்டதை நாம் அறிய முடிகின்றது.

நோயைக் குணப்படுத்தும் பொருள் மருந்து என்றழைக்கப்பட்டது. நோயின் தன்மைக்கு ஏற்றாற் போல மருந்து அமையும். நோய் உள்ளவர்களுக்கே மருந்து தேவைப்படும். வள்ளுவர் நோய் என்ற ஒன்று எம்மை நெருங்காமல் இருப்பதற்கும், மருந்தை நாம் உட்கொள்ளாது இருக்கவும் மருத்துவ வழியைக் கூறுகிறார். முன் உண்ட உணவு சமித்ததை அறிந்து பின் உண்டால் நோயும் வராது, உடம்புக்கு மருந்தும் தேவையில்லை என்பதை,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்"

என்ற குறள் மூலம் தெரிவிக்கிறார்.

நோய் :

மனிதனைப் பிணித்து அடிமைப்படுத்துவதனைப் 'பிணி' என்று தமிழர் வழங்கினர்[12]. மனிதனை நோய் மிகவும் துன்பப்படுத்தியதால் சான்றோர் பிறரையும், முதியோர், இளையோரையும் வாழ்த்தும் போது நோயின்றி வாழ்வாயாக என்று வாழ்த்துவது மரபாக உள்ளது. நன்னெறியில் ஆட்சி புரியும் அரசனை நோயின்றி வாழ வாழ்த்தும் புலவர்களை சங்க இலக்கியத்தில் காணமுடிகின்றது. இதனை,

'நோயிலை ஆகுமதி பெரும்"[13]
நோயில ராநின் புதல்வர்"[14]

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றியுள்ளதன் மூலம் அவர்களின் வீரம் வெளிப்படுகின்றது. போர்க்களத்தில் புண்ணொடு திரும்புதல் பெரும் வீரமாகக் குறிக்கப்படுகிறது. போரின் போது புண்பட்ட வீரர்களுக்கு அத்திப் பாலையும், ஊசிகொண்டு தைத்தும் புண்ணைக் குணப்படுத்தியுள்ளனர். இன்றைய நிலையிலும் காயம்பட்ட இடத்தை ஊசிகொண்டு தைத்தல் மரபாக உள்ளதை அறியமுடிகின்றது. இதன் மூலம் சங்கத் தமிழரின் மருத்துவ முறையும், தற்கால மருத்துவமுறையும் ஒத்த தன்மையுடையது என்று நோக்கும் போது அடிபட்ட இடத்தில் இரத்தப்பெருக்கைக் கட்டுப்படுத்துவதே முதல் நோக்கம் என்பது தெளிவாகின்றது.

இவ்வாறாக பழந்தமிழர் அறிவியல் பற்றிய தெளிவான சிந்தனை படைத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக விளங்கியுள்ளனர் என்பதை இக்கட்டுரை விளக்கி நிற்கிறது.

அடிக்குறிப்புகள் :

1) அண்ணாத்துரை.கு தமிழில் பொது அறிவியல், ஆசிரியர் மன்றம், தஞ்சாவூர். 2003, ப-248
2) வரதராசன்.மு இலக்கியத்திறன், பாரிநிலையம், சென்னை. மறுபதிப்பு 2003, ப – 16.
3) கந்தையாபிள்ளை.ந.சி.இ தமிழர் சரித்திரம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, நான்காம் பதிப்பு 1964, ப–2.
4) இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகார உரை, நூற்பா 42, வரி 6–11.
5) மேலது நூ.194, வரி 1 – 2.
6) மேலது நூ.250
7) புறநானூறு, பாடல் 60, 170, 321.
8) குறுந்தொகை, பா, 92.
9) கலித்தொகை, பாலைக்கலி. பா.16
10) நற்றிணை 136 : 2-3, ப – 185.
11) புறநானூறு : 95:2, ப – 197.
12) தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப – 360.
13) புறநானறு 209:14, ப – 23.
14) மேலது 196 :10, ப – 423.

துணை நூல்கள் :

1) அண்ணாத்துரை.கு தமிழில் பொது அறிவியல், ஆசிரியர் மன்றம், தஞ்சாவூர், 2003.
2) இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகார உரை.
3) கந்தையாபிள்ளை.நசி, தமிழர் சரித்திரம், ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, நான்காம் பதிப்பு 1964.
4) தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும்.
5) வரதராசன்.மு இலக்கியத்திறன், பாரிநிலையம், சென்னை. மறுபதிப்பு 2003.
6) கலித்தொகை, சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1975.
7) நற்றிணை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1976.
8) புறநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973.
9) Kosambi, D.D The Culture and Civilization of Ancient India, Vikas Publishing House Pvt.Ltd, 1982.
10) Srinivasa Iyengar, P.T, History of the Tamils from the Earliest Tamies to 600 A.D, New Delhi, Asian Educational Services, 1983.
11) கைலாசபதி.க, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை, 1991.
12) J.N.Farquhar, An outline of the Religious Literatures of India.
13) C.Rajasingham, Cultural Contribution of Tamils.
14) அறவாணன்.க.ப, தமிழ்ச் சமுதாய வரலாறு, சிதம்பரம், 1995.
15) Tamil Lexicon, University of Madras, 1982.
16) Iravatham Mahadevan, Early Tamil Epigraphy Fro the Earliest Times to the Sixth Century A.D; Cre –A! Chennai, India and the Development of Sanskrit and Indian Studies Harvard University, USA, 2003.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குக் கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியில் கைத்தொழில் உற்பத்தித்துறை விரிவாக்கத்தின் முக்கியத்துவம்

Mr.S.S.Uthayakumar,
B.A (Hons), M.Phil (Econ).
Senior Lecturer,
Department of Economics,
University of Jaffna.

அறிமுகம் :

யாதாயினும் ஒரு உற்பத்தி சந்தையை நோக்கமாகக் கொண்டு முன்வைக்கப்படும் பொருளியல்சார் செயற்பாடு கைத்தொழிலாக்கம் அல்லது கைத்தொழில் செயற்பாடு எனப்படும். அதாவது சூழலில் அமைந்து காணப்படும் பொருளாதாரங்களின் ஆரம்ப இயல்புகளை மாற்றி அமைப்பதன் மூலம் மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாடினையே கைத்தொழில் என்றபதம் சுட்டிநிற்கின்றது. இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதியில் கைத்தொழில் உற்பத்தித்துறை எந்தளவிற்குப் பொருத்தமான துறையாக இருக்க முடியும் என நோக்கின், இலங்கைப் பொருளாதாரத்தில் மொத்த நிலப்பரப்பில் வடக்குக் கிழக்கு பிரதேசமானது 18,333 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையும் (20 வீத நிலப்பரப்பையும்) 2/3 பங்கு கடற்கரைப்பிரதேசத்தையும் கொண்டுள்ளது. அத்துடன் நாட்டின் பல இன மற்றும் பல மத மக்கள் வாழ்ந்து வருவதனால் பல்கலாச்சார (multi-cultiural) பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசமாகவும் காணப்படுகின்றது. எந்த ஒரு நாட்டிலும் கைத்தொழில் உற்பத்தித்துறை பிரதேச அபிவிருத்திக்கு வழிவகுக்கின்றது. அந்த வகையில் இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதியின் கைத்தொழில் உற்பத்தி துறையானது இப்பிரதேச அபிவிருத்திக்குப் பொருத்தமான துறையாகக் காணப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள கைத்தொழில் வளங்களைப் பொறுத்த வரை நாட்டின் பல பகுதிகளோடு ஒப்பிடும் இடத்து இப்பிரதேசத்தில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. இருப்பினும் சீராகப்பிரயோகிக்கக் கூடிய வளங்கள் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் இங்குள்ள வளங்களை நாம்

1) கனிப்பொருள் வளம்
2) விவசாய வளம் மற்றும்
3) கடல் உயிர்சார் வளம் எனப்பிரித்து நோக்க முடியும்.

இந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இயங்கிய, தற்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய கைத்தொழில்கள் என்ற அடிப்படையில் இப்பிரதேசத்தின் கைத்தொழில் உற்பத்தித்துறை இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு எந்தளவுக்கு பொருத்தமான துறையாக இருக்க முடியும் என்பதையும் எத்தகைய கைத்தொழிற் துறைகள் பொருத்தமாக உள்ளன என்பதையும் படிமுறையாக நோக்குவோம்.

பொருளாதாரம் ஒன்றில் கைத்தொழிற் துறை அபிவிருத்தியின் அவசியம் :-

ஒரு பொருளாதாரத்தில் உள்ள முக்கிய துறைகளான விவசாயத்துறை மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிற் துறை என்பவற்றில் விவசாயத்துறையினை விட கைத்தொழிற்துறையானது பின்வரும் விடயங்களில் முக்கியமானதாக உள்ளது. அந்த வகையில் :

- விவசாயத்துறை உற்பத்திகள் இயற்கை அனர்த்தங்களினால் முற்றாகவோ, அல்லது பகுதியாவோ பாதிப்புறலாம். அதே நேரம் கைத்தொழிற் துறை வெளியீடுகள் அவ்வளவாகப் பாதிப்படைவதில்லை.
- கைத்தொழிற்துறை உற்பத்திகளை குறுகியகாலத்தில் அதிகரிக்க முடியும். ஆனால் விவசாயத்துறையினைப் பொறுத்தவரை பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க குறிப்பிட்ட காலம் தேவையாகும்.
- விவசாயத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான கேள்வியானது சனத்தொகை அதிகரிப்பின் போது தான் அதிகரிக்கும். பொதுவாக கைத்தொழில் பொருட்களுக்கான கேள்வி நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கின்ற போது சார்பளவில் அதிகரிக்கும்.
- சந்தைப்படுத்தல் செலவானது கைத்தொழில் வெளியீடுகளுக்கு விவசாயத்துறை வெளியீடுகளை விடக் குறைவாகும்.
- விவசாயத்துறையானது கல்வியறிவு குறைந்த ஆண்களையே கவரக்கூடிய தன்மையுடையதாக இருப்பினும் வேலை வாய்ப்பை வழங்குவதில் ஊழியப்படையில் கைத்தொழிற்துறை : கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு கூடியவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் என அதிகளவானோருக்கு வேலை வாய்ப்பைத் தரவல்லது.
- கைத்தொழிற் பொருட்களின் நிரம்பல் நெகிழ்ச்சி உடையதாகவும் காலநிலை கட்டுப்படுத்தாததாகவும், விலை உயர்வுக்கு ஏற்ப நிரம்பலை மாற்றியமைத்து இலாபத்தினை உழைக்க வாய்ப்புள்ளது எனலாம். இந்த நிலைமை விவசாயத்துறைக்குப் பொருந்துவதில்லை.
- விவசாயத்துறையில் தொழில் விரிவாக்கத்திற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகும். ஆனால் கைத்தொழில் துறையில் பல உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியை உருவாக்க முடியும். உதாரணமாக வீட்டு நிர்மாணம், மரம், சீமெந்து, உலோகம் போன்றவற்றின் உற்பத்தியைத் தூண்டிவிடும்.
- கைத்தொழிற் துறையில் உற்பத்தி வேறாக்கம் என்பது அதிகளவில் உண்டு. இதனால் உபயோகத்திற்கான பொருட்களையே பல்வேறு வடிவங்களில் பல்வேறு விலைகளில் விற்க முடிவதால் கேள்வி அதிகமாக இருக்கும். ஆனால் விவசாயத்துறையில் இது சாத்தியப்படாது. உதாரணம் : யப்பான் – கைக்கடிகாரம்

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி

ஏறக்குறைய கைத்தொழிலமயமாக்கல் இடம் பெறாத காலப்பகுதி (1948–1960)

கி.பி. 1505 இல் இருந்து சுமார் 443 வருடங்கள் அந்நியராட்சியின் கீழிருந்து 1948 இல் சுதந்திரமடைந்து சுதேச ஆட்சியாளர்களின் ஆட்சியின் கீழ் வந்த இலங்கைப் பொருளாதாரமானது ஆரம்ப தசாப்த காலகட்டத்தில் பொருளாதாரக் கொள்கையில் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக 1951 இல் இலங்கைக்கு வருகை தந்திருந்த உலக வங்கித் தூதுக்குழுவானது கைத்தொழில் அபிவிருத்திக்கு அரச மொத்த முதலீட்டில் 4.7 சதவீதமான பங்கு போதுமானதென்றும் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் சிபார்சு செய்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிபார்சானது அரச முதலீட்டுக் கொள்கை களில் செல்வாக்குச் செலுத்தியதையும் அதன் விளைவாக இக்காலப்பகுதி கைத் தொழில்மயமாக்கல் குறைந்த அல்லது இல்லாத காலப்பகுதியாகவே இருந்துள்ளது. இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட் களின் விலைகள் அதிகரித்துக் கொண்டி ருந்தமையால் சுதந்திரம் அடைந்தகாலத்தில் நிலவிய பொருளாதார சுபீட்சமானது 1950 இன் இறுதிப்பகுதியில் குறைந்து மிகவும் குறைவடைந்து காணப்பட்டது. இந்நிலைமை யானது நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை மிகவேகமாக குறையச் செய்தது. இதனால் கைத்தொழிற் துறை அபிவிருத்தி மீது கவனம் செலுத்தவேண்டிய தேவையும் ஏற்பட்டது.

இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கல் இடம்பெற்ற காலப்பகுதி (1961–1965)

இலங்கையில் கைத்தொழிற் துறை அபிவிருத்தியானது நாட்டின் அபிவிருத் திக்கான ஒரு நிலையாக ஒரு கொள்கையாக அன்றி அவ்வப்போது நிலவிய பொரு ளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஒன்றாகவே பெரும்பாலும் இருந்துள்ளது. 1950களின் பிற்பகுதியில் நாடு எதிர் நோக்கிய பொருளாதாரப் பிரச்சினை களுக்குத் தீர்வாக 1960களின் ஆரம்பத்தி லிருந்தே இறக்குமதிப் பதிலீட்டு கைத் தொழில்மயமாக்கல் உபாயத்தினை நாடு முழுவதும் அமுல்படுத்தத் தொடங்கியது. இறக்குமதி செய்யப்படுகின்ற கைத்தொழிற் பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டில் கைத்தொழிற் பொருட்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் புதிய நடைமுறையும் அமுலாக்கப்பட்டது.

1977 இன் பின்னர் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில் மயமாக்கல் இடம்பெற்ற காலப்பகுதி

இலங்கையின் பொருளாதார வரலாற்றில் முக்கிய திருப்புமுனையான ஆண்டாகத் திகழும் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட 1977 இல் இருந்து கைத்தொழில் கொள்கையானது வெளி நோக்கிய பார்வை கொண்டதாக மாற்றங் கண்டது. இவ்வகையில் –

- வங்கி, காப்புறுதி, வீதிப்போக்கு வரத்து, கப்பற் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து என்பன போன்ற பல சேவைகள் பல்கிப் பெருகின.
- வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தது.
- நாட்டின் ஏற்றுமதி வருமானம் கைத்தொழிற் துறை சார்ந்திருக்கும் நிலை உருவானது.
- நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு குறைந்த கைத்தொழில், சேவைத்துறைகளின் பங்கு அதிகரித்து ஒரு சாதகமான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் ஏற்படத்தொடங்கியது.
- வேலைவாய்ப்பு அதிகரித்து வேலை யின்மை குறைவடைந்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சி ஓரளவிற்கு உறுதியாகச் செல்லத் தொடங்கியது.

வடக்குக் கிழக்கில் கைத்தொழிற் துறை அபிவிருத்தி : அதன் வாருத்தப்பாடு :–

பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப் படையில் நோக்கும்போது பொதுவாக விவ சாயத்துறையின் மிகையிலிருந்து கைத் தொழில்துறை உருவாக வேண்டும் ஆனால் இலங்கைப் பொருளாதாரத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலைமையினை எடுத்து நோக்கும் போது அவற்றின் வள அடிப்படையில் நோக்கினால் இப்பிரதேசங்களில் காணப்படும் மூலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் கைத்தொழில் துறையை உரு வாக்குவதற்கு ஏதுவாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப் படும் கைத்தொழிலுக்கான வளங்கள் :

வடமாகாணத்தில் காணப்படும் கனிய வளங்களில் ஒன்றான கண்ணாடிமணல் (படிகமணல்) நாகர் கோவில் பகுதியில் காணப்படுகின்றது. இது வீடு கட்டுதல், சீமெந்துக்கல் போன்ற பொருட்கள் உற்பத்திக்காக மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சிலிக்கா மணல் வல்லிபுரக் கோவில் பகுதியில் காணப்படுகின்றது. இதனைக் கண்ணாடி உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்.

திருக்கோவில் தொடக்கம் புத்தளம் வரை தொடர்ந்து மன்னார் கரையோரப் பிரதேசம் வடகிழக்கிற்குரிய பிரதேச மாகும். இப்பகுதியில் கைத்தொழிற் துறைக்குத் தேவையான வளங்கள் காணப்படுகின்றன. இல்மனைற் எனப்படும் கனியவளம் கடற்கரையில் குவிக்கப்படும் ஒருவகை மணலிலிருந்து பெறப்படு கின்றது. இக்கனியவளமானது புல்மோட்டை, திருக்கோவில் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றது. புல்மோட்டையில் இல்மனைற் தொழிற்சாலை உள்ளது. இங்குள்ள இல்மனைற் 75 வருடங்களுக்குப் போதுமானதாக இருப்பதாகவும் இங்கு தோண்டி எடுக்கப்படும் இல்மனைற் கனியவளத்தை இறக்குமதி செய்வதில் யப்பான் முதனிலை வகிக்கின்றது. இந்த வகையில் ஒரு வருடத்திற்கு 6000 தொன் இல்மனைற் கனியவளத்தை யப்பான் இறக்குமதி செய்கின்றது. இங்கு இக்கனியவளத்தில் ஆக இதுவரை 20 சதவீதமே தோண்டி எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் கனியவளங்களில் முன்னிலை வகிப்பது உப்பு ஆகும். இது வடக்கில் ஆனையிறவு, கல்லுண்டாய், செம்மணி போன்ற இடங்களில் உப்பளங்கள் உண்டு. கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் உப்பு உணவின் சுவையூட்டலுக்குப் பயன்படுத்தப் படுகின்றது.

களிமண்ணும் வடக்குக் கிழக்கு பகுதி களில் காணப்படும் கனியவளங்களில் ஒன்றாகும். களிமண்ணை அடிப்படை யாகக் கொண்ட கைத்தொழில்கள் உண்டு. சாதாரண களிமண், ஒட்டுக்களிமண் என்பன ஒட்டிசுட்டான், அம்பாறை ஆகிய இடங்களில் காணப்படுகின்றது. செங்கல், ஓடு, சட்டி மற்றும் பானை என்பனவற்றின் உற்பத்திக்குப் பயன்படுகின்றது.

காரீயம் என்ற கனியவளமானது, வவுனியாவிலும் முருகைக்கல் என்ற கனிய வளமானது குச்சவெளி, கல்குடா, நெடுந்தீவு, மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரை யோரப்பகுதிகளிலும் காணப்படுகின்றது.

சிப்பி பெரியவிளான் பகுதியில் காணப்படுகின்றது. சிப்பியிலிருந்து நீறிய சுண்ணாம்பு, நீறாத சுண்ணாம்பு என்பன உற்பத்தி செய்யப்படுகின்றது. இதன் மூலம் குடிசைக்கைத்தொழில் விருத்தி செய்யலாம்.

சுண்ணக்கல் - இதில் $CaCo_3$ (Calciam Carbonate) அடங்கும் பாறைகளையே சுண் ணாம்புகற்கள் என்பர். இது யாழ்குடாக் கரையோரங்களில் காணப்படுகின்றது. குறிப்பாக காங்கேசன்துறை, மயிலிட்டி போன்ற இடங்களில் உள்ளது. சீமெந்துக் கைத்தொழில் உற்பத்திக்கு இது பயன்படுத் தப்படுகின்றது. இதனால் தான் காங்கேசன் துறையில் சீமெந்துக் கைத்தொழில்சாலை அமைவிடம் பெற்றிருந்த போதிலும் யுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமைகளால் தற்போது அது இயங்குவ தில்லை எதிர்காலத்தில் அது மீள இயங்கு வதற்கான வாய்ப்புக்கள் கனிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரும்புத்தாது என்னும் கனியவளம் இரும்பு சேர்வைகள் அடங்கும் மண் இரும்புத்தாது எனப்படும். இதிலிருந்து இரும்பையும், உருக்கையும் உற்பத்தி செய்யலாம். சேருவில் பகுதியில் உள்ளது.

வடக்குக் கிழக்கில் அமைந்துள்ள கைத்தொழில்கள் தொழிற்சாலைகள் :-

சீமேந்துக் கைத்தொழில் :

இது 1953 இல் தொடங்கப்பட்ட இலங்கையில் பாரிய கைத்தொழிலாகும். இத்தொழிற்சாலை காங்கேசன்துறையில் காணப்பட்டது. இக்கைத்தொழிற்சாலைக்குத் தேவையான 70 சதவீதத்திற்கு மேற்பட்ட மூலப்பொருளான சுண்ணக்கல் யாழ்ப் பாணப்பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற காரணத்தால் இக்கைத்தொழிற்சாலையானது குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறையில் நிறுவப்பட்டது.

இரசாயனக்கைத்தொழில் :-

இலங்கையின் ஒரேயொரு இரசாயனத் தொழிற்சாலை பரந்தன் என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் இரசாயனத் தொழிலுக்கு வேண்டிய அடிப்படை மூலப்பொருளான உப்பு பரந்தனுக்கு அண்மையிலுள்ள ஆனை யிறவில் காணப்படுகின்றமையாலாகும்.

சீனிக்கைத்தொழில் :-

சீனி தொடர்பான உள்நாட்டுத் தேவை யில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அம்பாறைக்கு அண்மை யிலுள்ள கிங்குராணை என்ற இடத்தில் சீனித் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணாடிக் கைத்தொழில் :-

இத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருளான சிலிக்காப் படிவுகள் 98 சதவீதமானவை யாழ்ப்பாணத்தில் உள்ள குடத்தனை, வல்லிபுரம், நாகர் கோவில் பகுதிகளில் ஏறத்தாழ 20 சதுரகிலோ மீற்றர் பகுதியில் காணப்பட்டது. இருப்பினும் இன்றுவரை பயன்பாட்டிற்கு உட்படுத்தப் பட்டதில்லை.

காகிதக் கைத்தொழில் :-

இது கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வடக்கில் உள்ள வாழைச்சேனை என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட்ட தற்குக் காரணம் காகிதம் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருட்களில் ஒன்றான வைக்கோல் இப்பகுதியில் ஏராளமாகவும் மலிவாகவும் கிடைக்கின்றமை என்பத னாலாகும்.

பிற கைத்தொழில்கள் :-

உப்பு, தீப்பெட்டி, சவர்க்காரம், பசளை உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இதேபோல கீழ்வரும் இடங்களில் அவற்றோடு தொடர்புடைய வளங்கள் அதிகமாகக் காணப்படுவதனால் அவற்றிக் குரிய கைத்தொழிற்சாலைகளும் காணப் படுகின்றது.

திக்கத்தில் - வடிசாலை சாராய உற்பத்தி
வவுனியாவில் - பால் உற்பத்தி
மட்டக்களப்பில் - அரிசி ஆலைகள்
கும்புறுமலையில் - முந்திரிகை, பால் பதனிடும் நிலையங்கள்.

வடபகுதியில் இயங்கிய தொழிற் சாலைகள் அண்மைக்காலங்களில் ஆரம் பிக்கப்பட்டவை அல்ல. இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே இவை முயற்சியாண்மையாளரால் ஆரம் பிக்கப்பட்டது. வடக்குக் கிழக்கில் குறிப்பாக வடக்கில் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளை விட முயற்சியாண்மை யாளரால் ஆரம்பிக்கப்பட்டவை அதிக மாகும். பின்வரும் கைத்தொழிற்சாலைகள் இதற்கு சான்றுபகருகின்றது.

- 1914 பங்குனியில் 'மச்சாடோ' சோடா குளிர்பான தொழிற்சாலை (நிறுவுனர் – யோசவ் மச்சாடோ)
- 1914 பங்குனியில் சீனித்தொழிற்சாலை நிறுவப்பட்டது. (நிறுவுனர் A.Weighal)
- 1916 பங்குனியில் சீனித்தொழிற்சாலைக் கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. (இரண்டும் ஒன்றா என்பது தெளிவாக இல்லை)
- பேபி மார்க் என்ற பெயரில் சோடா குளிர்பான தொழிற்சாலை வல்வெட்டித் துறையில் ஆரம்பிக்கப்பட்டது திறமையாகவும் நிர்வகிக்கப்பட்டது (நிறுவுனர் சுப்பிரமணியம்)
- டாலர் அலுமினியத் தொழிற்சாலை மாவிட்டபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அலுமினியத் தொழிற்சாலை யாகும். (நிறுவுனர் சம்பந்தர்) ஆரம் பத்தில் சீனத் தொழில்நுட்பவிய லாளர்கள் வந்து இத்தொழிற்சாலையில் பணிபுரியவிருந்த தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கியிருந்தனர்.
- 'எல்பிகெம்' வாளி உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படது. (நிறுவுனர் சின்னத்தம்பி)
- மஸ்கன்ஸ் என்ற பெயருடன் அஸ்பெக்டஸ் கூரைத்தகடுகள்,
- மில்க்வைற் சோப், லாலா சோப், பிறைற் சோப், உற்பத்திகள்
- அன்டசன் என்னும் பெயருடன் இறால் பதனிட்டு ஏற்றுமதி செய்தல்.
- கண்ணாடித்தொழிற்சாலைகள் நீர்வேலி யிலும் கீரிமலையிலும் நிறுவப்பட்டு கண்ணாடிக்குவளைகள் போன்றவை உற்பத்தி செய்யப்பட்டது.
- ஆணி உற்பத்தி, ரயர் உற்பத்தி, மை உற்பத்தி,
- கடல்பாசியை தகரத்தில் அடைத்து (உணவிற்காக) ஏற்றுமதி செய்தல்,
- அண்ணா கைத்தொழில் நிறுவனம் எனப் பல கைத்தொழில்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
- வடக்குக் கிழக்கு பகுதியில் மீன்வளம் அதிகமாக இருப்பதால் மீன்பிடித்த லுடன் தொடர்புடைய மீன் பதனிடல் கைத்தொழில், ஐஸ்கட்டி கைத்தொழில், படகு கட்டும் கைத்தொழில், வலை தைத்தல் கைத்தொழில் என்ற பல தொழில்கள் காணப்படுகின்றன.

தொகுப்புரை

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிகளின் அனுபவத்திலிருந்து நாம் பல பாடங்களை எமது நாட்டிற்கும் குறிப்பாக வடக்குக் கிழக்கு பிரதேசத்திற்கும் பெற்றுக் கொள்ளலாம். 19 ஆம் நூற்றாண்டில் ஆரம் பத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளான ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழிற் துறையின் வளர்ச்சியினால் ஏற்பட்டதாகும்.

NIC நாடுகள், சீனா, இந்தியா என்பவற் றினது வளர்ச்சிக்கும் கைத்தொழில் விரி வாக்கமே ஏதுவாகின்றது. இலங்கையில் சுதந்திர காலப்பகுதியிலிருந்து நோக்குகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிற் துறையின் பங்கு அதிகரித்து வருகின்றது.

எனவே நாடுகளாக அன்றி பிரதேசங் களில் அவை பேணத்தகு பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி அடைய பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமானது உலக வளர்ச்சிப் போக்கில் அதாவது வடக்குக் கிழக்குப் பிர தேசத்தைப் பொறுத்தும் கைத்தொழில் அபிவிருத்தியின் தேவை உணரப் பட்டுள்ளது.

கைத்தொழிற் துறை வளர்ச்சியடைந்து செல்லும் போது அத்துறையுடன் இணைக் கப்படவேண்டிய வேறு உற்பத்திகளும் (அதாவது முன்கொழு, பின்கொழு அடிப்படையில் உற்பத்திகளின்) வளர்ச்சி யும் ஏற்படுவது மட்டுமல்லாது பொருளா தாரக் கட்டமைப்பின் இன்னொரு முக்கிய துறையான சேவைத் துறையின் கேள்வியும் அதிகரித்துக் கொண்டே செல்லும். எனவே அரசு நேர்மையான முறையில் தேசிய வளர்ச்சி நோக்கில் பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து நடைமுறைப் படுத்துமானால் வடக்குக் கிழக்கு பிரதேசங் களின் வளர்ச்சியானது கைத்தொழில்துறை மூலம் துரிதமாக்கப்படுவது மட்டுமல்லாது அதிகரித்துச் செல்லும் என்பது குறிப் பிடத்தக்கது.

உசாத்துணைகள் :

1. இலங்கை மத்திய வங்கி பல்வேறு வருட ஆண்டறிக்கைகள்.
2. இலங்கை மத்தியவங்கியின் பல்வேறு வருட பொருளாதார மீளாய்வுகள்.
3. இலங்கை மத்திய வங்கியின் மாதாந்த வெளியீடான குறிப்பேடுகள்.
4. இலங்கை முதலீட்டு சபையின் பல்வேறு வருட ஆண்டறிக்கைகள்.
5. இலங்கை நுகர்வோர் சமூகப் பொருளாதார ஆய்வு அறிக்கைகள்.
6. கைத்தொழிற் துறை தொடர்பான பல்வேறு வருடாந்த அறிக்கைகள்.
7. இலங்கை மத்திய வங்கியின் சுதந்திர பொன்விழா மலர் (1998).
8. மக்கள் வங்கியின் மாதாந்த வெளி யீடான பொருளியல் நோக்குகள்
9. பேராசிரியர் L.D. லக்ஷ்மன் என்பவரால் தொகுக்கப்பட்ட Delimmas of Developmemt (1998)
10. வடக்குக் கிழக்கு மாகாண சபை வெளியீடுகள்
11. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களிலுள்ள மாவட்ட புள்ளிவிபர திரட்டுக்கள்.
12. இப்பிரதேச கைத்தொழில் முயற்சி யாளர்களுடனான நேர்காணல்.
13. Asian Development Bank/Japan Bank for international cooperation/Japan International cooperation Agency/World Bank.
14. Planning and development Secretariat (2005) Post Tsunami Construction.
15. "From relief and Rehabilitation to peace in Sri lanka" written by Stokke, Krishnan and Shanmugaratnam Vol. 02 No. 03 Social Scientists Association, Colombo
15. Mahinda Chintanai written by the Government 2005.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EFFECTIVE TEACHING AND TEACHING STRATEGIES

Mrs. Aarabee Sivakugan
K. H. C.

The importance of teaching and how the teachers teach in their classrooms is being recognized in many ways. Teachers have more responsibility to make their teaching more effectively. An effective teacher should care about improving students; skills, knowledge and attitude. Teachers have to motivate their students to extend their abilities as per the need of the new era. The results from TALIS (Teaching and Learning suggest that in many countries, education is still far from being a knowledge industry in the sense that its own practices are not yet being transformed by knowledge about the efficacy of those practices. Teachers must guide and support students to improve skills for successfully adapt to rapidly changing, interdependent global world in the information era. Students should be guided to improve the skills in critical thinking analysis, problem solving, developing their capacities to synthesize, imagine and create.

The most important questions are :

1. *What makes the difference between good teacher and a poor teacher?*
2. *How and why do particular approaches to reaching help or hinder students' learning?*

Media (Journals, conference papers, books and the internet) tells the answers, for the above questions. The answer suggests how can the teachers help learners to develop knowledge of skills, but they all conclude that no single teaching strategy is effective all the time for all learners.

The following factors should be considered to determine the appropriate teaching strategies.

- → *Number of students*
- → *Competency level*
- → *Syllabus, learning materials*
- → *Available resources*
- → *Time allocation*
- → *Subject content*
- → *Education goal*
- → *Age of students*
- → *Facilities.*

21st centenary teachers will have to deal with the above factors that are more diverse in terms of ethnicity, educational goals, background, learning styles and socio economic status. These factors influence to decide the suitable strategies. However, a mix of teaching techniques can be an effective strategy for increasing student involvement. This competitive world will demand students to think critically and synthesize large quantities of new information, show sensitivity to diversity and cultivate

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

attitudes, perceptions and skills that promote lifelong learning. So, the teachers should become as lifelong teachers. Moreover, to enhance the quality of education teachers must practice strategies that foster students' motivation to continue learning beyond the classroom. Teaching strategies design with active learning activities and they should be the first hand experience for students to develop their skills and capacities.

Teaching – learning methodology in the Sri Lankan Education System has been changed as learning – teaching methodology. Priority has been given to the learners. The attention has been paid to develop student competencies through "Exploration" by students which would develop their competencies.

There are many methods to facilitate effective classroom teaching and active learning. All these methods can be classified into two major groups.
(a) Teacher centered classroom
(b) Student centered classroom

Teacher centered classroom concentrate on instructions in which the teacher is the focus of learning activity. In contrast, the student centered strategies concentrate student as the focus of learning activity.

- **Changing role of students in 21st century.**

→ From passive receptacles to constructors of own knowledge.
→ From fact memorizers to solvers of complex problems.
→ Practice as team workers.
→ More autonomous, independent, self – motivated managers of own time.
→ Discuss their own work with great interest.
→ Performers and users of knowledge from observers of instructor expertise.
→ Focusing to acquiring learning strategies than pass the examinations.


As per the changes of students' roles, following are the changes in teachers' roles.

→ Teachers as the consultants, guides resource "Oracles" and lectures.
→ Encouraging self – direction and free from total control of learning environment to sharing with student as fellow learners.
→ Teacher – student hierarchy broken down and good relationship among them should be built.
→ Chalk and talk or monotonous method totally avoided.

◆ ◆ ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Student centered strategies in teaching can be found in some methods.



Features

1. Peer teaching & learning

(a) Tech their peers
(b) Learn together
(c) Interacting each other
(d) Learn active and alert.

2. Group Work

(a) Development of communication skills.
(b) Improve skills such as analyzing, thinking critically, logical reasoning, problem solving and transferring skills.
(c) Team work, compromise and tolerance.

3. Co-operative learning

(a) Working together
(b) Interaction and share ideas.
(c) Individual responsibility.
(d) Effective group function.
(e) Team work.
(f) Positive interdependence.

Example for co-operative learning: brain storming, role plays, debating, concept mapping, simulations / games, Jigsaw.

4. Group Discussions

→ *Exchange information and opinion.*
→ *Motivate critical thinking.*
→ *Express ideas.*
→ *Support and modify their assumptions, opinions and conclusions.*
→ *Communicate and interact openly.*

Teachers must facilitate group dynamics by monitoring and intervening all groups on a rotating basis.

Teachers have the great deal with their work. They want to use many techniques and methods to help the students to achieve their goals. Teaching strategies with ample of teaching aids will better support the active learning. Giving first hand experience to learners is the best method in teaching. Students should be allowed to see, smell, taste, hear and touch. Field trip, excursions, tours and exhibition should be included in annual planning. Children do not like the same environment or same conditions. Often they like changes. Yes. CHANGES.

Television, Computers, Internet and Multimedia are the powerful learning sources. If a teacher handle them properly the expected goals of teaching will be achieved certainly. Power point presentations (ppt) become very famous today and they make the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

teachers' works very easy. The following poem (written by chris clark) is described the uses of power point.

I am power point
I am the dispenser of knowledge
organizer of content
Displayer of charts
I am power point
I tell you what to do
I require that you switch off the lights
I insist that you use me the entire class period
I control the course, do not stray from my linear path
I am the absolute corruptor the pushy punisher
I disrupt, dominate and demean
You can misuse me, even abuse me
But you can't refuse me.

Outside the class can have an education and give experiences for a sustainable future. It helps to develop understanding of planning, organizing and risk management, because self motivation does not need lots of direction, motivation for teachers. Self – disciplined students enjoy the challenge of learning.

There are vast range of benefits of effective teaching are revealed by researchers, however, still it is problematic in classrooms. If the classroom teaching more effective, teachers should devote extra time, effort, commitment on planning, preparing and integrating activities into the course, preparing materials in order to provide students with appropriate background, stimulate students to think critically and provide feedback or evaluate activities.

Good teaching and appropriate learning structure are at the heart of Government agenda for individual choice and achievement. Best wishes for effective teachers.

References :

1. Roy Killen, Effective teaching strategies ; Lesson from Research and Practice, 4th Edition – Social Science Press.
2. Daniel Muijs and David Reynolds, Effective teaching evidence and practice, 2005.
3. Harvey, Stephanie, Goudris, Anne, Strategies that work.; Teaching comprehension for understanding and engagement, paper book, 2007.
4. Kenneth Moore, D. Effective instructional strategies; From Theory to practice, SAGE publications, 2005.
5. www.youtube.com
6. www.ehow.com
7. www.theteachersguide.com
8. www.amazon.com

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுக்கல்வி; தொடர்பாடல் ஊடக அடிப்படைகளும், ஏற்பாடுகளும்

ப. இராஜேஸ்வரன்,
ஆசிரியர்,
தொடர்பாடல் ஊடகக்கல்வி,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

கட்டுரைச் சுருக்கம்

புதிய சகத்திரத்திற்கான கலைத்திட்ட மறுசீரமைப்பிலும், கல்விச் செயன்முறைசார் நிலைமைகளிலும் தொடர்பாடல் மற்றும் ஊடக திறன் தகவு நிலைகளின் அடிப்படைகளை அதன் உள்ளடக்கப் பரிமாணத்திலும், எதிர்பார்க்கைகளிலும் இனங்காணக்கூடியதாக உள்ளது. பொதுக்கல்வி; தொடர்பாடல் ஊடக அடிப்படைகளும், ஏற்பாடுகளும் என்ற இக்கட்டுரை தொடர்பாடல் கருத்தியல், தொடர்பாடல் செயன்முறை, தொடர்பாடலும் வகுப்பறைச் செயல் ஒழுங்கும், கற்றல், கற்பித்தலில் தொடர்பு ஊடகங்கள், தொடர்பியல் தடைகள், தொடர்பாடலும் ஆசிரியர் வகிபாகமும், பாடசாலை முகாமையும் தொடர்பாடல் செயன்முறையும், ஆய்வும் தெடர்பாடல் சிந்தனையும், கல்வி – ஊடக புதிய எண்ணக்கரு, முடிவுரை ஆகிய உப கருத்தியல்களை உசாவுவதாக அமைகின்றது.

தொடர்பாடல் கருத்தியல் :

தொடர்பாடல் செயன்முறையானது ஆரம்ப காலம் முதலே மனிதனிடம் மட்டுமன்றி விலங்குகளிடமும் தோற்றம் பெற்றதாக உள்ளது. சமூக, பொருளாதார, அரசியல், சமூக விழுமியங்களுக்கு மையமாக இயங்குகின்றது. மனித அறிவு, ஒழுங்கமைப்பு, வலு என்பவற்றை இணைக்கும் தொழிற்பாடாக இதன் செயற்முறையை நோக்க முடியும். கேட்டல், பேசுதல், பார்வையிடுதல், கையெழுத்திடல், சின்னங்களைப் பயன்படுத்தல், அங்க அசைவுகள், முக பாவனைகள், எழுத்துக்கள், உருக்கள், வாசித்தல், எழுதுதல் மூலம் கருத்தை பரிமாறிக் கொள்ளும் செயன் முறையாக அமைகிறது. பிறந்த கணம் முதலே தொடர் பாடல் செயன்முறையில் ஈடுபடுகின்றோம். அதேவேளை மற்ற வர்களும் எம்முடன் தொடர்பாடல் செய்ய முனைகின்றனர். பிள்ளையின் முதல் தொடர்பாடல் நிலை அழுதல் ஆகும். அடுத்த நிலையில் குடும்ப உறுப்பினர், அயலவர்களின் ஒலி, முக பாவங்களை பிரதி பண்ணுகின்றனர். இவ்வாறான நீட்சித் தன்மையில் தொடர்பாடல் விருத்தி நிலைகள் செயலுருப் பெறுகின்றன.

புறூக்கர் (Floydo Brooker) "கருத்தினைக் காவிச் செல்லும் செயலினையோ அல்லது ஒருவனிடமிருந்து இன்னொருவருக்கு ஒரு செய்தியை காவுகின்ற செயற்பாட்டை தொடர்பாடல்" எனக் குறிப்பிடுகின்றார். Communication என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழ் வடிவம் தொடர்பாடல் என்பதாகும். இதன் வினைவடிவமான Commnicate என்பது Communicare என்னும் இலத்தீன் சொல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அடிப்படையாகக் கொண்டது. இதன் பொருள் கொடுத்தல், பகிர்ந்து கொள்ளல், பொதுவாக வெளிப்படுத்தல். அலை வழித் தொடர்பு என்பதாகும். தகவல்களையும், கருத்துக்களையும் கொடுத்தல் அல்லது பகிர்ந்து கொள்ளுதல் என்ற கருத்தியலையும், உயிர் வாழ்வனவற்றிடையே உணர்வுகள், எண்ணங்கள், அனுபவங்கள், தெரியப் படுத்தல் அல்லது அறிவித்தல் செயன் முறையை பொருள்படுத்துகின்றது. ஓர் ஆள் இன்னுமொரு ஆளுக்கு தகவல்களைக் கடத்துகின்ற செயன்முறை. தகவல்கள் கருத்துக்கள், சிந்தனைகள், உணர்வுகள் ஆகியவற்றைக் கடத்துவதன் மூலம் பிறரை அடைதல், பெறுநரின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்ற செய்தி என்றும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன.

ஹெரல் டீ லக்ஸ்வெல் (1948) "ஒரு நபர் ஏதாவது ஒரு தகவலை ஏதாவது ஒரு அலை வரிசையில் யாரேனும் நபருக்கு ஏதேனும் தாக்கம் ஏற்படுத்துவதற்காக முன் வைப்பது" என்று குறிப்பிடுகிறார். இங்கு தொடர்பாடுபவர், செய்தி அல்லது தகவல், ஊடகம், பெறுநர், தாக்கம் போன்ற செயற் கூறுகள் வலியுறுத்துவதை அவதானிக்க முடிகிறது. ஒருவர் ஒரு செய்தியை ஊடகம் ஒன்றைப் பயன்படுத்தி மற்றொருவருக்கு வெளிப்படுத்துவது அல்லது ஒவ்வொரு வருக்கிடையில் தகவல்களையும், கருத் துக்களையும் பரிமாறிக் கொள்வதாகும். தொடர்பாடல் செயன்முறையில் வினைத் திறன் மிக்க தொடர்பாடல் இடம்பெறுவதற்கு தகவலை அனுப்புவதில் மாத்திரமல்லாது அத்தகவல் பெறப்பட்டு விளங்கிக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது.

தொடர்பாடல் செயன்முறையின் அடிப் படையில் அகமுகி, ஆளிடை, குழு, மக்கள் தொடர்பாடல் என்ற வகை நிலை களையும், வாய் மொழி, வாய்மொழியற்ற, கட்புல, செவிப்புல, எழுத்து மூல தொடர் பாடல் செயன்முறைகள் என அவற்றின் வடிவங்களை இனங்கண்டு கொள்ள முடிகிறது. அதேவேளை முறைசார், முறை சாரா தொடர்பாடல்களையும், ஒரு வழி, இரு வழி தொடர்பாடல் செயன்முறை களையும் பிரயோக நிலமைகளில் அவதானிக்க முடிகிறது.

தொடர்பாடல் செயன்முறையின் அடிப் படையில் தூண்டலை உருவாக்குதல், தக வல்களை வழங்குவது, கல்வி வழங்குதல், மகிழ்வூட்டல், மாற்றத்தை உருவாக்கல், விழிப்புணர்வை விருத்தியாக்கல், அறி வித்தல், அறிவுறுத்தல், அறிவூட்டல் என்பன பிரதான நோக்குகளாக வரையறுக்கப்பட்

தொடர்பாடல் செயன்முறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளன. தொடர்பாடற் செயன்முறையின் செயல் ஒழுங்கை விபரிப்பதாக பின்வரும் வரைபடம் காணப்படுகின்றது.

குறித்த ஓர் ஆள் ஒரு தகவலை அல்லது கருத்தை இன்னொருவருக்கு அனுப்ப முயற்சிக்கும் போது தொடர்பாடல் செயன்முறை உருவாகின்றது. தொடர் பாடலுக்காக தொடர்பாடுபவர் அதாவது அனுப்புநர் ஏதாவது வழிமுறையைக் கையாளலாம். இச் செயன்முறையில் கருத்துருவாக்கம், மறைப்படுத்தல், கடத்துதல், மறைநீக்கல், கருத்துருவாக்கம், திரும்பவும் மறைப்படுத்தல், கடத்தல், பெறுதல் செயன் முறையாக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. தொடர்பாடல் செயன்முறையில் தனியாள், பௌதிக, சொற்பொருள் சார்ந்த தடைகள் ஏற்படுகின்றன. இவை தொடர் பாடல் செயற்பாடுகள் முறிவடைவதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவனவாக அமைந்து விடுகின்றன.

எடுத்துக் காட்டாக இருவழித் தொடர்பாடல் குறிப்பிடப்படுகின்றது. கற்றல் - கற்பித் தலில் இரு வழித் தொடர்பு நிலைகள் கட்டியெழுப்பப்படுவதாக கல்வி உளவிய லாளர்கள் குறிப்பிடுகின்றனர். உயிர்ப் புள்ளதாகவும், செயலூக்கமுள்ளதாகவும், துலங்களையும், பின்னூட்டலையும் உட னுக்குடன் பெறக்கூடியதாகவும், பெறுபேற்றை அதே நேரத்தில் பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளதாகவும் அமைவதால் இதன் பிரயோக நிலைப்பாடுகள் முதன்மைப் படுத்தப்படுகின்றன.

கற்றல் செயற்பாட்டின் போது தன்னுள் தான் தொடர்புபட்ட வகையில் அதாவது அகமுகி தொடர்பு நிலைகள் ஊடாகவும், சகபாடிகள் மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்புபடும் போது ஆளிடை தொடர்பு நிலையூடாகவும், குழு நிலையில் சக மாணவர்களுடன் செயற்படும் போது குழுரீதியான தொடர்பாடல் செயன்முறை



தொடர்பாடலும் வகுப்பறைச் செயற் பாடுகளும் :

கற்றல் - கற்பித்தல் மற்றும் கல்வி நிர்வாக செயற்பாட்டிலும் பல்வேறு வகை தொடர்பாடல் வகைப்பாடுகள், வடிவங்கள், தொடர்பு சாதன கருவிக் கையாளுகைகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் நிகழ்கையில் ஒரு வழி தொடர்பாடல், இரு வழி தொடர்பாடல் முறை ஊடான செய லாற்றுகைகள் இடம்பெறுகின்றன. வினைத் திறன் மிக்க தொடர்பாடல் செயன்முறைக்கு ஊடாகவும், வெகுஜன கருவிகள் ஊடாக கற்றல் - கற்பித்தலை மேற்கொள்ளும் போது மக்கள் தொடர்பு முறை மூலமான கற்றல் நிலைகள் உருவாக்கப்படுகின்றன. வகுப்பறையில் வாய்மொழி முறை ஊடாகவும், வாய் மொழியற்ற வகையிலும், எழுத்து மூலம், கற்புல, செவிப்புல சாதனங்களின் துணையூடாகவும் கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்றைய பொதுக்கல்வி, உயர்கல்வி கலைத்திட்ட தொலைநோக்குகளில் தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சி முதன்மைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டு கலைத்திட்ட உள்ளடக்கங்கள், கற்பித்தல் முறைமைகள், துணைச்சாதன பயன்பாடுகள், வகுப்பறை ஒழுங்கமைப் புக்கள், முதன்மைப்படுத்தப்படுவதைக் காண முடிகின்றன. ஆசிரியர்களின் வகிபங்கு நிலைப்பாடுகளில் சிறந்த தொடர்பாடல் தேர்ச்சி நிலைகள் விருத்தி செய்யப்படுதல் வலியுறுத்தப்படுகின்றன. சுமூகமான தொடர்பாடல், நேர்மயமான தொடர்பாடல், வன்முறையற்ற தொடர்பாடல், வன்போக்கு, மென்போக்கு தொடர்பாடல் திறன்கள், அபிவிருத்திக்கான தொடர் பாடல், தொடர்பாடல் முகாமை, தொடர் பியல் சமூக மயமாதல், தொடர்பாடலுக்கான உளவியல் அணுகுமுறைகள் போன்ற கருத் தியல்கள் தொடர்புத்துறையில் முதன்மை பெறுவதை அவதானிக்க முடிகிறது.

கற்றல் – கற்பித்தலில் தொடர்புகங்கள்

வகுப்பறையில் ஆசிரியர் வாய்மொழி யற்ற தொடர்பாடல் நுட்பங்களைக் கையாளும் வழிமுறைகளாக நடிப்பு, சைகை, போலச்செய்தல் முறைமைகள் குறிப்பிடப்படுகின்றன. பாட்டுப் பாடுதல், இரசனையுடன் கதைகூறல், பேச்சுத் தேர்ச்சியை வளர்க்கும் செயற்பாடுகள் என்பன வாய்மொழித் தொடர்பாடல் விருத்தி நிலைகளின் பயன்பாட்டைப் புலப்படுத்துவனவாகவுள்ளன. இவற்றின் பிரதிபலிப்புகளை அதிகளவு ஆரம்ப நிலை வகுப்பறைச் செயற்பாடுகளில் அவதானிக்க முடிகின்றன.

கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்காக வகுப்பறை மற்றும் கற்றல் நிகழ்வு இடம்பெறும் சந்தர்ப்பங்களில் பல்வேறு தொடர்பாடல் சாதனங்கள் கட்புல, செவிப் புல, பல்லூடக அடிப்படையில் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றினை பின்வரும் இரண்டு வகைப்பாட்டினுள் உள்ளடக்க முடியும்.

1) எறிவையில்லாத ஊடக உபகரணங்கள். (கரும்பலகை, வெண்பலகை, காந்தப் பலகை பக்கப்புரட்டி)
2) எறிவை ஊடக உபகரணங்கள். (மேந்தலை எறிவை, பல்லூடக எறிவை, வழுக்கி எறிவை, துரித எறிவை)

வகுப்பறையில் இடம்பெறும் கூட்டத் தொடர்பாடலுக்கு இவற்றைப் பயன்படுத் துவதன் ஊடாக கல்விச் செயற்பாட்டில் வினைத்திறனானதும், விளைதிறனான துமான அடைவுகளை எட்ட முடியும். இவற்றினை கற்றல் - கற்பித்தலுக்கான துணைச்சாதனங்கள் என்றும், கற்றல் - கற்பித்தலுக்கான உபகரணங்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. வகுப்பறையில் தொடர்புபடுபவர் ஆசிரியராவார். தம் முன்னால் உள்ள மாணவர்களுடன் தொடர்பாடல் செயல் ஒழுங்கில் ஈடுபடுகிறார். மாணவர்கள் தொடர்பாடல் செயல் ஒழுங்கின் பங்குதாரர்கள். ஆசிரியர் சில வேளை தொடர்பாடுபவராகவும், சிலவேளை பெறுநராகவும் வகிபங்கு பெறுகின்றார். வகுப்பறை கற்பித்தலில் செயன்முறையின் முதன்மை நோக்கு குறிப்பிட்ட நேரத்தினுள் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கருமமாற்றுவதைக் குறிக்கும். இதற்கு ஆசிரியர் வாய்மொழி மூல தொடர்பாடலை மட்டும் உபயோகிப்பது வினைத்திறனாக அமையாது. அதற்கு அப்பால் ஊடக உபகரணப் பயன்பாடுகளும் வலியுறுத்தப் படுகின்றன.

தொடர்பாடல் ஊடக கருவிகளை பயன்படுத்துவதற்கு திட்டமிடுகின்ற போது, பாடத்தின் குறிக்கோளை அடைந்து கொள்ள முடியுமா?, வகுப்பறை மட்டத்திற்கு பொருத்த மானதா?, மூலப்பொருள் இலகுவில் கிடைக்குமா?, குறைந்த செலவுடையதா?, பயன்படுத்தினால் விளைதிறன் கூடுமா?,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடநேரத்திற்குப் பொருத்தமா?, அலகுகளுக்குப் பொருத்தமா? ஆர்வத்தை மாணவர்களுக்கு விளைவிக்குமா?, ஊக்கலுக்கான வாய்ப்பை ஏற்படுத்துமா? போன்ற விடயங்களைக் கருத்தில் கொள்ளல் அவசியமாகிறது. மேலும் அவற்றை உபயோகிக்கும் போது பாடத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்துதல், அனைத்து மாணவருக்கும் காட்சிப்படுத்தக் கூடியதாக இருத்தல், படிமுறை ஒழுங்கில் விளக்கிச் செல்லுதல், குறிக்கோளை மையப்படுத்தி நெறிப்படுத்தல், உபகரணங்களை கையாள மாணவருக்கு வாய்ப்பளித்தல், தேவையான போது மீள்பாவனைக்கு உட்படுத்தல் அம்சங்களைக் கவனத்தில் கொள்ளுதல் பயனுறுதியானதாகும்.

கல்விச் செயற்பாட்டை முன்னெடுக்கும் அதாவது நிர்வகிக்கும் பாடசாலை அமைப்புக்கு தொடர்பாடல் கருவிகள் அடிப்படையாகின்றன. குறிப்பாக அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், தகவல் தொடர்பு சாதன கருவிகள், அவற்றின் பயன்பாடுகள் விரிவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றன. தகவலைச் சேகரிக்கவும், களஞ்சியப் படுத்தவும், தகவலை தயாரிக்கவும், தகவலை வெளியிடவும், அறிவித்தல், அறிவுறுத்தல்களை வெளியிடவும் இவற்றின் பயன்நிலைகள் கணிசமான பங்கை வகிக்கின்றன. பாடசாலையின் உள்ளக மற்றும் வெளியக தொடர்பாடல் செயன்முறைக்குப் பல்வேறு முறைகளும், கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆசிரியர் சிறந்த தொடர்பாடல் திறனும், தொடர்பாடல் கருவிகளை கையாளும் திறனும் உள்ளவராக மாற்றம் பெறுதல் அவசியமாகியுள்ளது. மொழி சார்ந்த தொழில்நுட்ப அறிவுசார் நிலை பிரயோக நிலைப்பாடுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. ஒருவருடன் தொடர்புகொள்ளல், உறவுகளைக் கட்டியெழுப்புதல், தேவைகளை நிறைவு செய்தல், எவ்வாறு புரியவைப்பது, விடையளிப்பது, செவிமடுத்தல், எழுதும் திறன், அவற்றிற்கான நுட்பமுறைகளைக் கையாளுதல், தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தல், அதனூடாக தரவு சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், முடிவுகளை எடுத்தல் செயன்முறைகள் அனைத்தும் தொடர்பாடல் தேர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

அறிவுசார் உளவியலாளர்கள் அறிவைப் பெற்றுக்கொள்ளல், களஞ்சியப்படுத்தல், பரிமாற்றம் செய்தல், உற்பத்தி செய்தல், அறிவைப் பிரயோகித்தல் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றனர். தகவலை நினைவிலிருத்தல், பகுப்பாய்தல், கற்பித்தல், தீர்த்தல், மனனம் செய்தல் போன்ற தகவல் ஒழுங்கமைக்கும் உளச்செயற்பாடுகள், அகமுகி சார்ந்த தொடர்பாடல் செயன்முறையுடன் இணைந்து செல்வதாக உள்ளது.

பாடசாலை மற்றும் வகுப்பறை செயற்பாட்டில் மாணவர் அடைவு நிலை தொடர்பாகவும், அவர்களின் எதிர்கால விருத்தி நிலைக்கான ஆயத்தங்களுக்காகவும் பல்வேறு விதமான தொடர்பு நிலை சார்ந்த செயற்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மாணவர்களின் அடைவைக் கையளிப்பதில் மதிப்பீடு மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகள், மாணவர் சுயவிபர அறிக்கைகள், சம்பவப் பதிவேடுகள், பதிவேடுகள், விளையாட்டுப் போட்டி அறிக்கைகள் முக்கியமாக அமைகின்றன. அத்துடன் பெற்றோர் - ஆசிரியர், பெற்றோர் - மாணவர் - ஆசிரியர், தொடர்பாடல் சந்திப்புக்கள் கல்வி செயன்முறையுடன் தொடர்புபட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைக் காட்டுகின்றன. இவற்றுக்கு ஆசிரியருக்கு விசேட தொடர்பாடல்களை கட்டியெழுப்பும் பயிற்சி நிலைகள் அவசியமாகின்றன.

மகிழ்ச்சிகரமான பாடசாலை, பிள்ளை நேயப் பாடசாலை, செயலூக்கமான வகுப்பறை, கவின்நிலையான வகுப்பறை, போன்ற சிந்தனைகள் உருப்பெறுவதற்கு தொடர்பு நிலையூடாக செயற்படுகின்ற துலங்கல்களே அடிப்படைக் காரணிகளாக அமைகின்றன. பாடசாலையில் சிறந்த சமூகத் தொடர்பை உருவாக்க ஆளிடைத் தொடர்பு நிலைகள் வலுவடைதல் அவசிய மாகின்றன. சமூகமயப்படுத்தல் செயற்பாடு களை முன்னெடுத்து பாடசாலை அலகு சமூக மாற்றத்துக்கான முகவராக மாற்றம் பெற தொடர்பாடல் செயன்முறை ஆரோக் கியமாக அமைதல் வேண்டப்படுகின்றது.

பிள்ளையினுடைய ஆளுமை வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பிரதான வகுதியாக தொடர்பாடல் தேர்ச்சி உள்ளடக்கப்பட்டுள்ளது. நேர்மயமானதும், சுமூகமானதுமான தொடர்பாடல்திறன் தகவு நிலைகள் விருத்தி செய்யப்படுதல் பொதுக் கல்வியில் முதன்மைப்படுத்தப்படுகின்றது. வன்முறையற்ற தொடர்பாடல் நிலைகள் தேவைகளை நிறைவு செய்தும், பிரச்சினைகளைத் தீர்த்தும், அக மகிழ்விற்கும், உறவு நிலைகளின் விரிவாக்கத்திற்கு ஆற்றுப் படுத்தி வன்முறையற்ற தனிமனித உருவாக் கத்திற்கும், சமுதாயத்திற்கும் உதவுகின்றது.

தொடர்பியல் தடைகள்

தொடர்பாடல் செயன்முறையில் ஏற்படும் தடைகள் தொடர்பாடலில் முரண் நிலைகளையும், திரிவுபடுத்தல்களையும், தவறான புலக்காட்சி மற்றும் அவதானிப் புக்களை ஏற்படுத்துவதுடன், தொடர்பாடல் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ தடைப்பட வாய்ப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. இவற்றினை கவனத்தில் கொண்டு குறிப்பாக தனியாள் வேறுபாடுகள், விசேட தேவையுள்ளோருக்கான தேவைப் பாடுகள், பல்லின சமூக வேற்றுமை மற்றும் சமூகப் பொருளாதார நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதும், விளங்கிக் கொண்டதுமான தொடர்பாடலைக் கல்விச் செயற்பாட்டின் போது முன்னெடுத்தல் வினைத்திறனான அறிகை விருத்திக்கு வழிகாட்டுவதாக அமையும். இதன் மூலம் ஆசிரியர் - மாணவர் இடைவினையுறவுகள் வலுப்பெறும். உளவியல் தொலைவு நிலைமைகள் ஏற்படும் போது தொடர்பாடலில் வினைத்திறனும், விளைதிறனும் குறை வடைய சந்தர்ப்பங்கள் ஏற்படும். அனுப்புநர், பெறுநர் புலக்காட்சிகள் நெருக்கமடைகின்ற போது தொடர்பாலும் வலிமையுடையதாகின்றது.


கற்றல் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்ட கல்வித் திட்டமிடல் அடிப்படை அம்சமாக கொள்ளப்படுகின்றன. சூழலில் ஏற்படும் மாற்றங்கள், வேறுபாடுகள், கவின் நிலைப்பாடுகள், தூரம் தொடர்பாடல் புலக்காட்சியை தீர்மானிப்பதாக அமை கின்றது. வாய் மொழி தொடர்பாடலில் தனியாள் இடைவெளிகள், நேச இடை வெளிகள் (15 – 20cm), தனியாள் இடைவெளி (30 – 60cm), சமூக இடைவெளி (1.2 – 1.8cm), மக்கள் இடைவெளி (3.6 -4.8cm) இடம்பெறுவதாக ஆய்வுகள் குறிப்பிடப் படுகின்றன. இதனை "இடஅணிமை" என்று குறிப்பிடுவர். இவற்றினை அறிந்து வைத்திருப்பது வகுப்பறை மட்ட அறிகை செயற்பாட்டில் ஆசிரியர் - மாணவர் - சகபாடி உறவு நிலைகளைக் கட்டியெழுப்ப உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதசிந்தனை, தர்க்கஞானம், கட்டுருவாக்கம், மானிடப் பண்புகள், பரஸ்பர புரிந்துணர்வு, சமாதான செயற் பாட்டு விருத்தி, கலந்துரையாடல்முறை விருத்தி நிலைகளுக்கு வாய்மொழித் தொடர்பாலும், ஊடகமான மொழியும் அடிப்படையாகின்றது. மொழி சார்ந்த திறன் தகவுகளை விருத்தி செய்வதனூடாக வாய்மொழித் தொடர்பாடல் தேர்ச்சி நிலைகளான பேச்சுக் கோலப் பயிற்சி, சொற் களஞ்சியத்தை விருத்தி செய்தல், முன்வைக்கும் திறன், செவிமடுக்கும் திறன், கலந்துரையாடல், குழுத் தொடர்பாடல்திறன் நிலைகள் விருத்தியாகின்றன. இவற்றி னூடாக சொற்பொருள் சார்ந்த தடைகள் நீக்கப்படுகின்றன. ஒரு கலாசாரத்தில் பயன் படுத்தப்படும் மொழி கையாளுகை இன்னொரு கலாசார பின்னணியில் இழி வானதாக அமையலாம் அல்லது பொருள் வேறுபட்டு அமையலாம். ஒரு பதத்திற்கு வேறுபட்ட கருத்தியல்கள் வழங்கப்படலாம். வகுப்பறையில் ஆசிரியர் பேச்சிலும், எழுத்திலும் இவற்றினைக் கவனத்தில் கொண்டு எளிமையான மொழிப் பிரயோகங்களைப் பிரயோகிப்பது பயனுறுதியுடையது.

ஆசிரியர் எளிமையான, பரீட்சயமான சொற்களையும், சொற் தொடர்களையும் பயன்படுத்தல், சிறு சிறு வசனங்கள், பந்தி களை எழுதுதல், தேவையான சொற்களை மட்டும் பயன்படுத்தல், தெளிவான கட்ட மைப்பைப் பயன்படுத்தல் (தலைப்புக்கள், உப தலைப்புக்கள், அழுத்தம் தருவதற்கு அடிக்கோடிடல்) போன்றவற்றை எழுத்து மூலமான தொடர்பாடல் விருத்திக்கான வழிகாட்டல்களாக வழங்க முடியுமென்று Newsturm, J.W and Davies, K.(1997) குறிப்பிடுகின்றனர்.

வலுவுடைய தொடர்பாடல் செயன் முறைக்கான அணுகுமுறைகள், அறிகை அடைவு மட்டங்களில் உயர் விளைவைத் தருவதாக அமையும். பிள்ளை ஐம்பொறி மூலம் தொடர்பு நிலைகளில் ஈடுபடுகின்றது. பார்வை மூலம் - 83%, கேள்வி கேட்டல் (காதின் மூலம்) — 11%, தொடுகை, நுகர்வு, சுவை — 6% மூலமும் பெறப்படுவதாக அமெரிக்க ஆய்வு முடிவுகள் குறிப்பிடு கின்றன. வில்பர் ஸிறாம், தனது நூலில்



(மூலம் - புதிய சகத்திர கலைத்திட்டம் 2007)

பார்வை — 75%, கேள்வி — 13%, தொடுகை — 6%, நுகர்வு — 3%, சுவை - 3% மூலம் தொடர்பாடல் நுகரப்படுவதாகக் குறிப்பிடு கின்றார்.

புதிய சகத்திரத்தின் கலைத்திட்ட மறுசீரமைப்பில் (2007) பொதுக் கல்வியின் செயற்பாட்டில் ஒன்றிணைந்த ஆளுமை விருத்தியில் அடங்கியுள்ள சிந்தனைத் திறன், சுயதிறன்கள், சமூகத்திறன்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கையில் சமூகத்திறன் உள்ளடக் கத்தில் பின்வரும் தொடர்பாடல் தேர்ச்சி நிலைகள் மற்றும் ஏற்பாடுகள் முதன்மைப் படுத்தப்படுவதை அவதானிக்கமுடிகிறது.

தொடர்பாடலும் ஆசிரியர் வகிபாகமும் :

ஆசிரியர் வகிபாக நிலைகளில் தொடர்பாடுபவராக சுட்டிக்காட்டப்படு கின்றார். கடத்தல் வகிபாகம், கொடுக்கல் வாங்கல் வகிபாகம், நிலைமாற்று வகிபாக நிலைகளில் தொடர்பாடல் வடிவங்கள், முறைமைகள் ஊடாட்டம் பெறுவதை உணரக் கூடியதாக உள்ளது. கடத்தல் வகிபாகத்தில் ஒரு வழி தொடர்பாடல் முறைமையில் அமைந்த அடிப்படைகளை அதிகளவில் காணமுடிகிறது. கொடுக்கல் வாங்கல் வகிபாக நிலையில் இரு வழி தொடர்பு செயல் முறையில் அமைந்த தொடர்பாடல் அணுகு முறைகளையும், பல்வழித் தொடர் பாடல் அணுகுமுறைகளையும், நிலைமாற்ற வகிபாகத்தில் தொடர்பாடலாளராக, தொடர்பியலைத் தூண்டுபவராக அதற்கான தூண்டிகளை வசதிப்படுத்துபவராக, தகவலை பரிமாறிக் கொள்பவராக, தேட லுக்கான தொடர்புகளை விருத்தி செய்பவராக எதிர்பார்க்கப்படுவதை கொண்டு வினைத்திறன் மிக்க ஆசிரியர் வகிபாங்கை உணரக்கூடியதாக உள்ளது.

தொடர்பாடலில் உயர் நிலைப்பாட்டை பேணுவதற்கு கவனமாக செவிமடுத்தல் செயல்நிலை முதன்மையாகின்றது. செவி மடுப்பவரின் கவனத்தை தன் பக்கம் திருப்பிக் கொள்ளல், செவிமடுத்தல் திறன் விருத்திகளை விரிவடையச் செய்தல், இருவழி மற்றும் பல்வழி தொடர்பாடலை ஊக்குவித்தல், மொழி கையாளுகையை அவதானத்துடன் மேற்கொள்ளல், நம்ப கத்தன்மையைப் பேணுதல்,அனுப்புநர், பெறுநர் புலக்காட்சியில் விழிப்பாகவும் தெளிவாகவும் இருத்தல், தொடர்பாடல் தடைகளை கருத்தில் கொள்ளல், என்பன அறிகை செயல்நிலையில் உயர் வினை யாற்றலை விளைவிக்க ஊக்குவிப்பதாக அமையும்.

பாடசாலை முகாமையும் தொடர்பாடல் செயன்முறையும் :

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் இடம்பெறுகின்ற தொடர்பாடல்கள் முறை சார்ந்த, முறை சாரா வகையில் அமைவதைக் காணமுடிகிறது. அதிபரிடமிருந்து பிரதி அதிபர், பகுதித் தலைவர், பாட இணைப் பாளர், வகுப்பாசிரியர், ஆசிரியர், மாணவர் தலைவர், மாணவர்கள் என்ற செயல் ஒழுங்கில் தகவல்கள் பரிமாற்றப்படுதல். மேலிருந்து கீழ் நோக்கிய தொடர்பாடல் முறைமையாகவும், இவற்றிற்கு மாறாக மாணவனிடம் அல்லது ஆசிரியரிடமிருந்து தேவைகள், வேண்டுகோள்கள், விருப்பங்கள் அதிபருக்கு பரிமாற்றப்படுதல் கீழிருந்து மேல் நோக்கிய தொடர்பாடலாகவும் அமை கின்றது. அன்றாட கலந்துரையாடல்கள், முன் மொழிவுக்கான பெட்டி வைத்தல், குழுக்கள், கூட்டங்கள், விசாரணைகள், ஆலோசனை வழிகாட்டல் சேவை போன்ற நடைமுறைகள் இவற்றிற்கான எடுத்துக் காட்டுகளாக அமைவதை அவதானிக்க முடிகிறது. ஆளனியினருக்கு இடையில் குறிப்பாக ஆசிரியர் - ஆசிரியர், மாணவர் - மாணவர், இடையே இடம்பெறும் தகவல் பரிமாற்றம் குறுக்குத் தொடர்பாடலை குறிக்கும். இவை முறைசார் தொடர்பாடலை புலப்படுத்துவதாக உள்ளன. இவற்றிற்கு வெளியே இடம்பெறும் சகல தொடர்பாடல் களும் முறைசாரா வகைப்பாட்டினுள் உள்ள டங்குகின்றன. தகவலைப் பரிமாறுவதற்கான நல் முறைமையோ, மூலாதாரமோ, நம்ப கத்தன்மையோ காணப்படாது. வதந்தி அல்லது கட்டுக்கதையை ஏற்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை காணப்படும். இது தனிச்சங்கிலி முறை, நிகழ்தகவுச் சங்கிலி முறை, கொத்தணி முறை, அமைப்பியலில் செயலாக்கம் பெறுவதையும் அவதானிக்க முடிகிறது.

தொழில்நுட்பப் புரட்சியின் செல்வாக்குகளினால் ஏற்பட்ட தொடர்பியல் விருத்தி நிலைகள் கல்வித் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைவதை அவதானிக்க முடிகிறது. அறிவுசார் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதாக "தகவல்வளம்" மாற்றம் பெற்றுள்ளது. தகவல் முகாமை, தகவல் களஞ்சியப்படுத்தல், தகவல் உரிமை, தகவல் புரட்சி போன்ற எண்ணவாக்கங்கள் கல்விப் புலத்தை தீர்மானிப்பவையாக உள்ளன. நீயூமீடியா உபகரணங்களின் பயன்பாடு, அவை சார்ந்த தேர்ச்சி நிலைகள், கல்விப்புல ஆளணியினருக்கு அடிப்படையாகியுள்ளன. கற்றல் - கற்பித்தலில் இணையவழிக் கல்வி, இணையவழி மாநாடு, நிகர்நிலை பல்கலைக்கழக கல்வி போன்றன அறிமுகமாகியுள்ளன. கல்வி தொடர்பான உள்ளடக்கங்கள் ஊடகங்களின் பிரதான நிகழ்ச்சிகளாகவும், அறிக்கையிடங்களாகவும் முதன்மை பெற்றுள்ளன. ஊடகங்களைத் தெரிவு செய்தல், அவற்றைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தல், மாணவர்களின் பிரதான சவால்களாக இனங்காணப்பட்டுள்ளன. வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் ஆசிரியர்களாக சித்தரிக்கப்படுகின்றன. ஊடக வழி மூலமான கற்கைகள் விரிவடைந்துள்ளன.

ஆய்வும் தொடர்பாடல் சிந்தனையும் :

ஆய்வு முயற்சிகளிலும், செயல் நிலை ஆய்வுகளிலும் தொடர்பாடல் அணுகு முறையிலான தரவு சேகரிப்புக்கள், பகுப்பாய்வு முறைமைகள் இடம்பெறுதைக் காணலாம். நேர் காணல், உற்று நோக்கல், அவதானித்தல், கலந்துரையாடல், ஆவணங்கள், குறியீடுகள் என்பவற்றினூடான தரவு சேகரித்தல் இடம்பெறுகின்றன. ஆவண ரீதியான ஆய்வுகளுக்கு அச்சு ஊடகங்களின் பயன்பாடு அதிகளவு பயன் பெறுகின்றன. மாணவனை இனங்காணவும், பலம், பலவீனங்களை அறிந்து ஆற்றுப்படுத்த தொடர்பாடல் நுட்ப முறைகள் உதவுகின்றன.

கல்வி – ஊடக புதிய எண்ணக்கரு

ஊடகங்களை செய்தி பெறுனர் இரண்டு முக்கிய காரணங்களுக்காக பயன்படுத்துகின்றனர். முதலாவது பொழுதுபோக்கு, இரண்டாவது தகவல், செய்திகள் அறிந்து கொள்வதாகும். இன்று புதிய எண்ணக்கருவாக கல்வியையும், பொழுதுபோக்கையும் ஒன்றிணைத்து அதாவது Education and Entertainment ஆகிய இரு சொற்களையும் இணைத்து Edutainment என்ற புதிய சொற்றொடர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்கள் அறிவூட்டல், கல்வியூட்டல் பணிநிலைகளை ஆற்றுவது தொடர்பாக புதிய சிந்தனைகளை இவை புலப்படுத்தி நிற்கின்றன.

வெகுஜன ஊடகங்கள் தமது அறிக்கையிடலில், தமது நிகழ்ச்சி தயாரிப்பில் கல்விசார் உள்ளடக்கங்களுக்கு கணிசமான முக்கியத்துவத்தை வழங்கி வருவதை அவதானிக்க முடிகின்றது. செய்திகள் மூலம் வாசிக்கக் கற்றல், சொற்களஞ்சிய விருத்திகள், வாக்கிய அமைப்புகள், இரசனை உணர்வு, எண்ணக்கரு விருத்திகள் என்பனவும், வானொலியூடாக செவிமடுத்தல், பேச்சு பாணிகள், ஆக்கத்திறன், அழகியல்சார் திறன்களை மேம்படுத்தல் என்பனவும், தொலைக்காட்சி மூலம் ஐம்புல விருத்திக்கான புலக்காட்சி விரிசிந்தனைகளும் அதனூடான அறிகை விரிவாக்கங்களும் ஊடகங்களின் நேரடி, மறைமுக கல்வியூட்டல்களை உணர்த்துவதாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை :

தொடர்பாடல் சமகால சூழல் ஒழுங்க மைப்பின் இயங்காற்றலை உந்துப்படுத்தும் வலுவுடைய சக்தியாகவும், அறிகை விருத்தி, அறிகை பரவலாக்கம், அறிவு பெருவாக்கம் என்பவற்றை சாத்தியப்படுத்தும் காரணியாக மாற்றம் பெற்றுள்ளது. தகவல் மூலமான அறிகை செயன்முறைக்கு பல்வேறு வழிவகைகளில் செல்வாக்குச் செலுத்துவதாகவும், வகுப்பறை மட்டம், பாடசாலை மட்ட செயற்பாடுகளினது உள்ளடக்கமாகவும், கலைத்திட்ட நியதிகளின் பிரதான கருத்தியலாகவும் மாற்றம் பெற் றுள்ளது. அதேவேளை நியூ மீடியாவின் பயன்பாட்டு நிலைகள் சமூகத்தில் பார பட்சமான வகையில் உபயோகிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. உயர் வர்க்கத் துக்குரிய ஊடகங்களாகவும், மின்சார வசதியான நகரப்புற சூழலுக்குரிய ஊடக மாகவும் அதிக செல்வாக்கைப் பெற்றுள்ளன. தனியாளினுடைய ஆற்றல்களை பல்லூடக எறிவை கற்பித்தல் ஊடகம் பாதிப்ப தாகவும், மாணவர் - ஆசிரியர் இடைவினை உறவை குறைவடையச் செய்கின்றன என்ற விமர்சன கருத்தியலையும் உணரக் கூடியதாகவுள்ளது.

உசாத்துணை நூல்கள் :

- இராசா,கி. *மக்கள் தொடர்பியல் அறிமுகம்*, பாவை பப்ளிகேஷன்ஸ்,2003.
- ஐயாத்துரை,அ. *தொடர்பியல் சிந்தனைகள்*, விக்னேஸ் பிரசுரம், 2000.
- கிருட்டிணசாமி,வெ. *தகவல் தொடர்பியல்*, மணிவாசகர் பதிப்பகம், 2001.
- நாகராஜன்,கி *கல்விசார் அறைகூவல்கள்*, இராம் பதிப்பகம்,2003.
- கினிக்கே, *புதிய சகத்திரத்திரத்திற்கான இடைநிலை கல்வித்திட்டம்*, 2007.
- **Ragavan, V.L.** *Communication Techiques*, CBH Publishers,2004.
- AGGARWAL,J.C. *Essentials of Educational Technology Teaching Learning Innovations In Education*, Vikas Publishing house Pvt.Ltd,1995.
- **VENKATASUBRAMANIAN, V.** *Technology Communication and Audio Visual Aids in Extension Education*, New Century Book house,2001.
- தனராஜ்,தை. *தொடர்பாடல் வினைதிறன் மிக்க ஆசிரியருக்கான அடிப்படைத் தேர்ச்சிகள்*, அகவிழி (மே – 2005), பார்வை - 9.
- சின்னத்தம்பி,க. *தொடர்பாடலும் சிறந்த கற்றலுக்கான அதன் பங்களிப்பும்*, கலைஞானம் (1994) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

♦ ♦ ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளமான வாசிப்பு மானுடத்தின் மேம்பாடு

S. ஸ்ரீகாந்தலட்சுமி
கல்விசார் நூலகர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடை கின்றான்" என்பது பதினாறாம் நூற் றாண்டின் தத்துவமேதை பிரான்சிஸ் பேகனின் புகழ் பெற்ற வாசகங்களில் மிக முக்கியமானது. வெறும் வாசிப்பே மனிதன் பூரணமடைய வழிசெய்யும் என இவ்வாசகம் கூறும் போது, வாசிப்பு என்பதற்கு "வளமான" என்ற அடைமொழி தேவை தானா என்ற வினாவுக்கு பதிலளிப்பதே அதாவது அதன் உட்பொருளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தனி மனிதனும் மானுடமும்

மனிதன் உயிரி என்ற வகையில் சிந்தித்தால் இவ்வுலகில் வாழும் உயிரி னங்களுக்குள் உயர்வான ஓர் உயிரி. சமூகவியல் ரீதியில் சிந்தித்தால் தனித்து வாழ முடியாத ஒரு சமூகப் பிராணி. பொரு ளாதார ரீதியில் சிந்தித்தால் இவ்வளவு தான் என்று வரையறுக்க முடியாதளவுக்குத் தேவை களும் பிரச்சினைகளும் கொண்டவன். அரசியல் ரீதியில் சிந்தித்தால் நாட்டின் எதிர் கால வாரிசு. அறிவியல் ரீதியில் சிந்தித்தால் உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கு மளவிற்கு அறிவியல் தொழில்நுட்பச் சாதனைகளின் உச்சிப்படியில் வீற்றி ருப்பவன். மனிதப்பண்புகளின் அடிப்படை யில் சிந்தித்தால் அறிவை ஆக்கத்துக்குப் பயன்படுத்துவதை விடவும் அழிவுக்குப் பளன்படுத்துவதில் ஆர்வம் அதிகமுள்ளவன்.

மனிதன் மனிதத் தன்மையுள்ளவனாக இருக்கும் நிலை மானுடம் எனப்படுகின்றது. மனித இனம் அனைத்தையும் கூட்டாகக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொதுப் பதமாகவும் இது பார்க்கப்படுகின்றது. மனிதன் ஒரு விலங்கு தான் என்பதை அடிக்கொருதரம் நினைவூட்டிக் கொண்டி ருக்கும் கோபம், வெறுப்பு, குரோதம் போன்ற எதிர்மறைப் பெறுமானங்களைப் பகுத்தறிவின் துணை கொண்டு கூடியவரை தவிர்த்து அன்பு, இரக்கம், கருணை, பாசம், காதல், ஈடுபாடு, மரியாதை, பக்தி போன்ற உயரிய மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்வதே மனிதத்தன்மைக்கு அடிப்படை தன்னைச் சுற்றி தான் போட்டுக் கொள்ளும் குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வந்து, உலகை அகலக் கண்கொண்டு பார்க்கும் தன்மையை வளர்த்து நான், எனது என்ற குறுகிய மனப்பான்மைகளை விலக்கி, "நாம்" என்ற உணர்வை வளர்ப்பத னூடாக அடுத்தவரை நேசிக்கும் தன்மையை அடுத்தவருக்கு உதவும் தன்மையை உருவாக்கிக் கொள்ளும் பண்பு மானுடம் எனப்படுகின்றது. மதம் சார்ந்த நம்பிக்கை களுக்கு மேலாகப் பகுத்தறிவுக்கு அதிக முக்கியத்துவமளித்து மனிதப் பிரச்சினை களுக்குத் தீர்வு காண பரிசீலிக்கும் ஒரு சித்தாந்தப் போக்கே மனித நேயம் என ஒக்ஸ்போட் அகராதி குறிப்பிடுகின்றது.

இன்றைய மானுடம்

மனிதத்தன்மை குறைந்து விலங்குத் தன்மை அதிகரித்துக் கொண்டு போகும் இன்றைய உலகில் மானுடம் என்பதன் உண்மையான அர்த்தத்தை மிக அழகாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகின்றது. மகிழினியப்பன் என்ற பெயரில் கவிஞர் ச.வேடியஞ்சாட்சரம் அவர்கள் வடித்த மானுடம் வாழ்கிறது என்ற கவிதையில் உள்ள பின்வரும் வரிகள்,

மானுடம் ஒன்று வன்முறையால் வழியக்
- குருதி புண்படுத்த
மானுடம் ஒன்று வன்முறையால் வழியக்
- குருதி புண்படவே
மானுடம் ஒன்று மனம் பதைத்து
- மருத்துவமனையில் அதைச் சேர்க்க
மானுடம் ஒன்று மருந்து கட்டி மரணம்
- தடுத்துக் காக்கிறது.

ஒன்றாய் பலவாய் மானுடங்கள் ஒன்றை
- யொன்று கெடுத்துவர
ஒன்றாய் பலவாய் மானுடங்கள் ஒன்றை
- யொன்று காப்பதனால்
ஒன்றை அழித்த பழிதீர ஒன்றுக்குதவ
- முனைவதனால்
இன்று மட்டும் மானுடங்கள் இணக்கம்
- மண்ணில் வாழ்கின்றது.

பம்பர வேகத்தில் சுழலும் தகவல் சமூகத்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வலுவின்றி விவேகமின்றியே அதனுடன் இழுபட்டு ஓடிக்கொண்டிருக்கின்றன இன்றைய மானுடங்கள். பக்கத்து வீட்டில் என்ன நடக்கின்றது என்பதை அறிய விருப்பமோ அதற்கான நேரமோ இல்லாத மானுடங்கள். தனது வீட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் சில மானுடங்கள். அன்பு, பாதுகாப்பு, பரஸ்பர உறவு என்பவற்றைப் புறந்தள்ளி பணத்துக்கும், அந்தஸ்துமிக்க தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிறுவனமாக மாறிக்கொண்டு வருகின்ற குடும்பம் என்ற அமைப்பின் வார்ப்புகள். கொடிய விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்க, கூடி வாழ முற்பட்ட மானுடங்கள் இன்று மானுடங்களிலிருந்து தம்மைப் பாதுகாக்க வேண்டிய தன்மைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

சிதைந்து கொண்டு போகும் மனிதப் பண்பை விருத்தி செய்வதற்கு அடிப்படையாக இருப்பது அறிவு. விலங்குத் தன்மையைக் கூடியவரை தவிர்த்து மனிதத் தன்மையைத் தக்க வைப்பதற்கு மனிதனுக்கு இன்றியமையாததாக இருப்பது அறிவு, ஆறுதல், இன்பம், ஈடுபாடு, உறுதிப்பாடு, ஊக்கம் போன்றவை. மானுட மேம்பாட்டுக்கு அடிப்படை அறிவு. தொடர்ச்சியான கற்றல் செயற்பாட்டினூடாக ஒரு பொருட்துறை பற்றி ஒரு மனிதன் மூளையில் பதிந்து வைத்திருக்கின்ற அல்லது அனைத்து மக்களாலும் பயன்படுத்தப்படும் பொருட்டு பகிர்ந்து கொள்ளப்படுகின்ற தகவலும் அது தொடர்பான புரிதலும் அறிவு எனப்படுகிறது. மனித வாழ்வைச் சரியான முறையில் கொண்டு நடத்துவதற்கு முக்கியமானது சிந்தனைகள். செயலுக்கு அடிநாதம் சிந்தனைகள். ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு அத்தவாரமாக இருப்பது அவனது எண்ணங்கள். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வதற்கு அவசியமானது வாசிப்பேயாகும்.

மானுடத்தின் மேம்பாடு

மேம்பாடு என்ற கருத்து நிலை வெறுமனே பொருளாதார மேம்பாட்டை மட்டும் மையப்படுத்தியதொன்றல்ல. அது பரந்துபட்ட ஒரு கருத்துநிலையாக சமூக அரசியல், நிறுவன அழகியல் ஒழுக்க அம்சங்களில் மாற்றத்தை வேண்டுவதொன்றாக உள்ளது என்பதையே சிறந்த கல்வி, உயர்ந்த போசாக்கு, சுகாதாரம், குறைந்த வறுமை, சுத்தமான சூழ்நிலை, மக்கள் யாவருக்கும் சம சந்தர்ப்பம் கிடைத்தல், அதிகளவு தனிமனித சுதந்திரம், செழிப்பான கலாசார வாழ்க்கை என்பவற்றை உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்கியதொன்றாக பல்பரிமாணத்தன்மை நிறைந்ததொன்றாக, சமூக மேம்பாட்டை மையப்படுத்தியதொன்றாக உள்ள 1991இன் உலக வங்கி அறிக்கையானது எடுத்துக் காட்டுகின்றது. [World Bank 1991]

சமூக மேம்பாட்டுக்கு அடிப்படை மானுட மேம்பாடு. மனித இன முன்னேற்றம், சமூக முன்னேற்றம் ஆகிய இரண்டையும் பரிணாம வளர்ச்சி அடிப்படையில் ஆராய்ந்து இரண்டும் வெவ்வேறானவை அல்ல. மனித முன்னேற்றத்தினூடாகவே சமூக முன்னேற்றம் நிகழ்கின்றது என்கிறார் சமூகத்தை அறிவியல் முறையில் ஆய்வு செய்த 19ஆம் நூற்றாண்டின் புகழ் பெற்ற சமூகவியலாளர் ஒகஸ்ட் கோம்த் (Auguste Comte). மரபு, வயது, பயிற்சி, சூழல் என்பன மனித உருவாக்கத்துக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. பிறப்பால் விலங்காக இருக்கும் மனிதன் மனிதனாக வார்க்கப் படுவது குடும்பம் என்ற அச்சில் தான். மனிதன் சந்திக்கின்ற முதலாவது உறவான தாய், சேய் உறவு மனிதனுக்கு தன்னுணர்வையும், தன்னைச் சுற்றியுள்ள கூட்டாளிகளின் உறவு, சமூக உணர்வையும் தோற்றுவிக்கிறது. சமூகத்தின் வளம், சமூகத்தின் மரபு, சமூகத்தின் தேவைகள், சமூகத்தின் சூழல் என்பவற்றின் அடிப்படையிலேயே மனிதனின் முன்னேற்றம் தங்கியுள்ளது. அதே சமயம் தனித்தன்மை மிக்க மனிதர்கள் இன்றி சமூகம் வேரூன்றி நிலைத்து நிற்க முடியாது. தனிமனித வளர்ச்சியை சமூக முன்னேற்றத்தினின்றும் பிரிக்க முடியாதளவுக்கு அவை நெருங்கிப் பின்னிப் பிணைந்திருக்கின்றன.

எவனொருவன் தன்பால் அன்பு கொள்கின்றவனாக, தன்னை மதிப்பவனாக, தன்னை நேசிப்பவனாக விளங்குகின்றானோ அவன் பிறருக்குத் தொல்லை தரமாட்டான். ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அளப்பதற்கு தன்னையே அளவுகோலாகக் கொள்கிறான். கவனக்குறைவு, அலட்சியப்பாங்கு, தான்தோன்றித்தனம், அக்கறையின்மை போன்றவற்றை தனது நடையுடை பாவனை, நடத்தை, பண்பு, சமூக ஒழுக்கம் அனைத்திலும் நிறைத்து வைத்திருக்கும் ஒருவன் தன்னை அளவுகோலாகக் கொண்டு அடுத்தவனை அளக்கும் போது அது எத்தகைய அபாயகரமான போக்குக்கு இட்டுச்செல்லக்கூடியது என்பது அனுபவித்தவருக்குத் தான் தெரியும். அதிலும் யுத்தம், வறுமை, பண்பாட்டு படையெடுப்புகள் போன்ற வற்றால் தனது அடையாளங்களை மெல்ல மெல்ல இழந்து வரும் ஒரு சமூகத்தில் மானுடத்தின் இருப்புத் தொடர்பான வினா எழுவது இயற்கையானது. இதற்கு எமது சமூகமும் விதிவிலக்காக முடியாது. மானுட மேம்பாட்டுக்கு வழி என்ன? மிக அழகாக எடுத்தியம்புகின்றது புரட்சிக் கவியின் அர்த்தம் பொதிந்த பின்வரும் வரிகள்.

மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண
-மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை
புனித முற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.

ஆம்! மானிட மேம்பாட்டுக்கு அடிப்படை அறிவு என்றால் அதை அடக்கிக் கொண்டிருப்பவை நூல்கள். நூல்கள் வைக்கப்பட்டிருக்கும் இடம் நூலகம். ஒரு நூலானது கல்வியறிவு தந்து, நடைமுறை நிலை தெரிவித்து கடமைகளைக் காட்டி, உரிமைகளைச் சேர்த்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தை வளர்த்து, கலாசாரத்தைக் காக்கும் செயற்பண்புகள் கொண்டது என்று இந்திய நூலகவியல் விற்பன்னர் வே.தில்லைநாயகம் என்பவர் கூறுகிறார்.

நூலகம் என்பது ஆத்மாவுக்கான மருத்துவம் என்ற வாசகம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. நூலகங்களின் வரலாறு என்பது நாகரிகங்களின் தொட்டில் எனப் படும் சுமேரியர் காலத்திலேயே ஆரம்பித் திருக்கக்கூடும். எனினும் யூலியஸ் சீசர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் Diodorus sicily என்ற கிமு 1ம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் கிரேக்க வரலாற்றாசிரியர். எகிப்தில் உள்ள திபிஸ் பழங்குடி மக்கள் வாழும் பிரதேசத்தில் நினைவுச் சின்னங்களை விபரிக்கும் போது இச்சின்னங்கள் அமைந்துள்ள இடத்தின் நுழைவாயிலில் பொறிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்ற இந்த வாசகமே நூலகங்களின் தொன்மையைக் குறிப்பிடப் போதுமான தென்றால் நூல்களின் தோற்றமோ அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன் களிமண் பலகை களிலிருந்து தோற்றம் பெறுகின்றது. (Shera, 1976) இயலாமை என்பதையே இல்லாமல் செய்வேன் என்று முழங்கிய மாவீரன் நெப்போலியன் கூட தான் செல்லும் போர்க்களங்கள் அனைத்துக்கும் தன்னுடன் ஒரு நூலகத்தையே கொண்டு செல்வானாம். உறங்கக்கூட நேரமின்றி ஓடுகின்ற குதிரை மீதமர்ந்து கொண்டே உறங்கி ஓய்வெடுக்கும் இவன், பதட்டம் தரும் போர்ச் சூழலிலும் நூல் களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தந்தி ருக்கும் போது நாகரிகத்தில் வளர்ச்சியடைந்து இருக்கும் இன்றைய மனிதர்களிடம் நூலுணர்வு இல்லாமல் போனது ஏன்?

வாசிப்பு

1940 ஆம் ஆண்டு Mortimer Adler என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூலை வாசிப்பது எவ்வாறு? (How to read a book) என்ற நூலானது சிறந்த புகழ் பெற்ற நூல்களை தருக்க ரீதியாக வாசிப்பதற்கான வழி காட்டுதலை உள்ளடக்கியது. எனினும் மேற்கத்தைய பாரம்பரியத்துக்குள் உட் படாத எந்த நூலையும் வாசிக்குமாறு அது பரிந்துரை செய்யவில்லை. (Wikipaedia)

வாசிப்பு என்பது பல கருத்துக்களை தனக்குள் உள்ளடக்கியிருப்பது. படித்தல், கற்றல், சொல்லுதல் போன்றவை மட்டுமன்றி இசைக் கருவியை வாசித்தலும் வாசிப் பாகவே கொள்ளப்படுகிறது. எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட அல்லது பொறிக் கப்பட்ட வாசகங்களை கண்ணால் பார்த்து அல்லது கரங்களால் தொண்டுணர்ந்து வாயாலோ மனதாலோ உச்சரித்து அறிவால் பொருளுணரும் ஒரு செயலே வாசிப்பு எனப்படுகிறது.

அறிவுத்திறம், மொழித்திறம், பார்வை நலம், கேள்வி நலம், உடல் நலம், மனநலம், சூழல் நலம் ஆகியன வாசிப்புக்கு இன்றி யமையாததாக உள்ளன. (moyle 1976)

பரந்த ரீதியில் நோக்கின் வாசிப்பை பாடத்திட்ட வாசிப்பு, பரந்துபட்ட வாசிப்பு என இருவகைப்படுத்தலாம்.

கற்றல், கற்பித்தல் நோக்கங்களின் அடிப்படையில் வாசிப்பு என்பது பல்வேறு செயல்களை உள்ளடக்கியதொரு நிகழ்வாகப் பார்க்கப்படுகின்றது.

1) வரிவடிவத்தைப் புரிந்து கொள்ளுதல்.
2) புதிய சொற்களின் பொருளை ஊகித்தறிதல்.
3) வெளிப்படையாகக் கூறப்படும் செய்திகளைப் புரிந்து கொள்ளல்.
4) வெளிப்படையாகக் கூறப்படாத செய்திகளைப் புரிந்து கொள்ளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வாக்கியங்களுக்கிடையிலான தொடர்பைப் புரிந்து கொள்ளல்.
6) பகுதியின் பல்வேறு கூறுகளின் இணைப்பைப் புரிந்து கொள்ளல்.
7) மையக் கருத்தைக் காணுதல்.
8) மையக் கருத்து, துணைகருத்தின் வேறுபாட்டை உணர்ந்து கொள்ளல்.
9) முதன்மைச் செய்திகளைத் தொகுத்துப் பார்த்தல்.
10) படிக்கப் பெறும் பகுதி தரும் நீதியையும் பண்பாட்டையும் தெரிந்து கொள்ளல்.

ஆகிய பத்து அம்சங்களை உள்ள டக்கியது வாசிப்பு என்கிறார் யோகவதி பாலகிருஸ்ணன். பக்.225)

வாசிப்பின் நோக்கங்கள் :

கற்றல் நோக்கம் (Learning)

படிக்கும் பருவத்திலிருப்போருக்கு நாட்டு நடப்புப் பற்றி அறியும் ஆவல் பெரிதாக இல்லை. தூக்கத்துக்கு முன்னரும் பின்னரும் அவர்கள் கையில் பெரும்பாலும் பாடப் புத்தகங்களையே பார்க்க முடியும். சிலர் காலை 4.00 மணிக்கே எழுந்து விடுவர். சிலர் இரவு 11.00 மணிக்கும் அரைத்தூக்கத்துடன் படித்துக் கொண்டி ருப்பர். புத்தகத்தைப் பிரித்துப் படிக்கா மலேயே 24 மணிநேரமும் புத்தகமும் கையுமாகத் திரிவோரும் எம்மிடையே உண்டு. பரீட்சையில் வெற்றி பெறும் ஒரு நோக்கத்துக்காகவே பாடப்புத்தகங்களை இவர்கள் வாசிக்கின்றனர். பாடப்புத்த கங்களுடன் நெருங்கிய தொடர்புள்ள புத்தகங்களையும் பரீட்சை வினாத்தாள் களையும் இவர்கள் வாசிக்கின்றனர். இதை வாசிப்பு என்று கருதுவதை விட படிப்பு என்றே கொள்ள வேண்டும். இந்த வாசிப்பு மனனம் செய்தலாகக் கூட இருக்கலாம். பரீட்சை முடிவடைந்ததும் படித்தவையும் விலகி விடும். இவர்களை வைத்துக்கொண்டு எம்மை ஒரு வாசிக்கும் சமூகமாகக் கற்பனை பண்ணுதல் பொருத்தமானதல்ல. குறிப் பிட்ட பொருட்துறையில் எழுதப்படும் தனிப்பொருள் சார்ந்த தகவல் வளங்கள், கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் பாட நூல்கள், ஆய்வுக்கு உதவும் அறிக்கைகள், ஆய்வுக் கட்டுரைகள், பருவ இதழ்கள் போன்ற அடிப்படைத் தகவல் வளங்கள், தேவைப்பட்ட உடனேயே குறிப்புகளை வழங்கும் உசாத்துணைத் தகவல் வளங்கள் என்பன கற்றல் நோக்கத்தைப் பூர்த்தி செய்பவை.

குறிப்பிட்ட ஒரு பொருட்துறையை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கென உருவாக்கப்படும் நூல்களே பாட நூல்கள் ஆகும். இவை பொதுவாக பரந்த பொருட் துறையை உள்ளடக்குபவை. வாசிப்பு நோக்கம் என்பதே இங்கு முக்கியமானதாக இருப்பதனால் தகவல் வழங்கப்படும் விதம் இங்கு மிக முக்கியமாக கருத்தில் கொள் ளப்பட வேண்டியுள்ளது. வண்ணப்படங் களும், போதிய விளக்கப் படங்களும், கவரச்சிகரமான வடிவமைப்பும் வாசிப்பில் தூண்டலை ஏற்படுத்துபவை. நல்லதோர் பாட நூலானது வாசிப்பை மட்டுமன்றி நல்லதோர் கற்பித்தலுக்கும் வழிகாட்டக் கூடியது. புதிய அபிவிருத்திகள், மாறி வரும் கற்பித்தல் முறைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இவை அடிக்கடி மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளன.

கற்பித்தல் நோக்கம் (Teaching)

பாடசாலை ஆசிரியர் முதற்கொண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் வரை மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொருட்டு வாசிக்கின்றனர். கல்வித் திட்டங்களில் மாற்றங்கள் ஏற்படும் போக்குக்கு அமைய இத்தகைய வாசிப்பின் தன்மையில் மாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றங்கள் கூடவோ குறையவோ இடமுண்டு. இத்தகைய வாசிப்பையும் ஆழமான வாசிப்பு என்று கருத முடியாது. இதையும் ஒருவகைப் படிப்பு என்றே கொள்ள இடமுண்டு.

கருத்தைத் தெரிவிக்கும் நோக்கம் (Motive of Expression)

புதிய ஆக்கம் ஒன்றைப் படைத்ததற் காகவோ சொற்பொழிவாற்றுவதற்காகவோ ஒரு நூலுக்கான மதிப்பீட்டுரையை எழுது வதற்காகவோ வாசிப்பு என்ற செயற்பாடு இடம்பெறுகின்றது. நூல்கள் எதையும் வாசிக்காமலேயே இத்தகைய செயற்பாடு கள் வெற்றிகரமாக நிறைவேறுகின்றன என்பதும் இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது. ஒரு நூலிலிருந்து ஒரு நூலகத்தையே அலசுமளவிற்கு இத்தகைய வாசிப்பு நீண்டு கொண்டு போகும். 'எழுத்தாளர் களின் நேரத்தின் பெரும்பகுதி வாசிப் பிலேயே கழிகின்றது. ஒரு நூலை எழுது வதற்கு ஒரு நூலகத்தின் அரைப்பங்கு நூல்களின் பக்கங்கள் புரட்டப்படுகின்றன' என்கிறார் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் பெற்ற பொருளியல் மேதையான சாமுவேல் ஜோன்சன் அவர்கள். நூல்களை வாசிக்கும் போது ஏற்படும் நன்மையைப் போன்று நூல்களிலிருந்து பெறப்படும் விரிவுரைகள் நன்மையைத் தருவதில்லை என இவர் வாசிப்புக்கு மிகவும் அழுத்தம் தருகின்றார்.

ஆய்வு நோக்கம் (Research)

ஆய்வு நோக்கத்துக்கான வாசிப்பானது பல படிநிலைகளைக் கடந்த பின்னரேயே முழுமை பெறக் கூடியது. ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் தொடர்பான கலைச் சொற்களை அறியும் ஆரம்பப் பணியில் முதலாவது படிநிலையான துறை சார்ந்த கலைச் சொல் அகராதிகள், இக்கலைச் சொற்களின் பொருளைத் தருகின்ற அகராதிகள், எடுத்துக் கொண்ட பொருள் தொடர்பான பின்னணித் தகவல்களைத் தருகின்ற கலைக் களஞ்சியங்கள் என்ப வற்றைக் கடந்து உண்மையான ஆய்வு அபிவிருத்திகளை, அவற்றின் புதிய பிரயோகங்களின் விளக்கங்களை, அல்லது பழைய கருத்துக்களுக்கான புதிய விளக் கங்களை உடனுக்குடன் தாங்கி வரும் முதல் நிலைத் தகவல் வளங்கள் அனைத்துமே இங்கு வாசிப்புக்குரிய மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத வளங்களாக இவை இருப்பதனால் இதனைப் பயன்படுத்துவது எளிதல்ல. ஆய்வு முறை யியல், மற்றும் மொழி அறிவு, தேடுதல் திறன்கள் போன்ற அனைத்துத் திறன்களும் தேவைப்படுகின்ற வாசிப்பாக இது கருதப்படுகிறது.

மனமகிழ்வு நோக்கம் (Research)

இத்தகைய வாசிப்பானது உண்மையோ பொய்யோ, நல்லதோ தீயதோ படிப்பவருக்கு ஒரு புதிய உணர்வை, புதுவித எழுச்சியை, புதுவித கிளர்ச்சியை, பொழுதுபோக்கு உணர்வைத் தருவதாக உள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், நாளிதழ்கள் என்பன பொழுதுபோக்கு நோக்கத்தைப் பூர்த்தி செய்வன என்றாலும் சிறப்பாக கவிதை, நாடகம், நாவல்கள், சிறுகதைகள் போன்ற இலக்கியங்களும், ஓவியம், சிற்பம் போன்ற கலைத்துவ ஆக்கங்களும் வாசிப்பவருக்கு அமைதியையும், நிறைவையும் தருகின்ற ஆன்மீக வளங்களும், பழம்பெரும் இலக்கியங்களான புராண இதிகாசங்கள், திருமுறைகள் போன்றவை மனமகிழ்வு நோக்கத்தைப் பூர்த்தி செய்பவை.

ஈழத்தமிழ்ச் சமூகத்தின் விடலைப் பரு வத்தினருக்கான வாசிப்பை பாலூக்கத்தை அதிகம் தூண்டும் மலினப்பட்ட காதல் கதைகள் பெருமளவில் ஆக்கிரமித்திருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. வாழ்விற்கு வழிகாட்டக்கூடிய எத்தனையோ புனைகதைகளை மிகச் சிறந்த எழுத்தாளர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு தந்திருந்தும் கூட ரமணிச்சந்திரன் என்ற ஒரே யொரு எழுத்தாளரின் கதைகளில் விடலைப் பருவம் மட்டும் தொங்கிக் கொண்டிருக்க வில்லை. திருமணம் முடித்து குழந்தைகளைப் பெற்றெடுத்த நடுத்தர வயது குடும்பப் பெண்களையும் இவை தான் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன. எண்டமூரி வீரேந்திரநாத், பட்டுக்கோட்டை பிரபாகர், இந்துமதி, லட்சுமி என இவர்களின் தெரிவுகள் குடும்பக் கதைகளைத் தவிர்த்து காதல் கதைகளை நோக்கியே நகர்கின்றன. மனமகிழ்விற்கென்று நாடும் இத்தகைய நூல்கள் "நூல்கள் தனிமையில் இருப்பவர்களுக்கு உற்ற நண்பர்களாகின்றன. துக்கத்தைப் போக்கி மகிழ்வையும் சாந்தியையும் தருகின்றன. தடுமாற்றத்தைத் தெளிய வைத்து மன உறுதியைத் தருகின்றன. ஒருவர் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க வழிகாட்டியாகின்றன. ஒரு வருடைய வாழ்வில் தன்னம்பிக்கையை விதைத்து மேம்பாடுகளை வளர்க்க உதவுகின்றன. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர்கள், நல்ல மனிதர்கள் ஆகியோருடன் ஆத்மார்த்த நிலையில் சிலமணி நேரம் வாழ வைக்கின்றன" என்று மறைந்த பேராசிரியர் நந்தி அவர்களின் கூற்றுக்கு மாறாகப் படித்து முடித்ததும் ஏக்கத்தையும் விரக்தியையும் நிரந்தரமாகவே வாசிக்கும் மனங்களிடம் ஏற்படுத்தி விடுவதே நடைமுறை யதார்த்தமாக உள்ளமை கண்கூடு.

தகவல் பெறும் நோக்கம் (Information)

நம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறியும் ஆவல் பலரை வாசிக்கத் தூண்டுகின்றது. இந்த வாசிப்புக்கு உதவும் வளமாக நாளிதழ்களும், வார இதழ்களும் கருதப்படுகின்றன. தூக்கம் விட்டு எழுந்ததும் காலை நேரக் கோப்பியுடன் செய்தித்தாளை வாசித்தால் தான் சிலருக்குப் பொழுது நன்கு விடியும். காலைக் கடனை முடிக்கப் போகும் போதே செய்தித்தாளுடன் கழிவறைக்குப் போகின்றவர்கள் எம்மிடையே பலர். ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தவர் பலரையும் காலை நேரத்தில் வீட்டின் முன்புற வராந்தாவில் மூக்குக் கண்ணாடியுடன் செய்தித்தாளில் மூழ்கியிருக்கும் நிலையை பரவலாகப் பார்க்க முடியும். எம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியும் ஆவல் பொதுவாக வயது வந்தோருக்கே இருக்கிறது என்பதையே இது காட்டுகின்றது. இதற்காகவே இவர்கள் பணம் கொடுத்து நாளிதழை வாங்குகின்றனர். பணம் கொடுத்து வாங்க விருப்பம் இல்லாதவர்களும், வாங்கும் வசதியற்றவர்களும் காலை எழுந்ததும் வாசிகசாலை நோக்கி ஓடுவதை அவதானிக்க முடியும். அலுவலகம் செல்பவர்கள் அலுவலகத்தின் தேநீர் இடைவேளையின் போது செய்தித்தாளை வாசிக்கின்றனர். நேரம் இல்லை என்று தமக்குள் முடிவெடுப்பவர்கள் மாலையில் வாசிக்கின்றனர். தூர இடங்களுக்குப் பயணம் செய்பவர்கள், வீட்டில் வெட்டியாக பொழுதைக் கழிக்கும் வாய்ப்புள்ளவர்கள் ஆனந்தவிகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளையும் கற்கண்டு, முத்தாரம் போன்றவற்றையும் வாசிக்கின்றனர்.

நாளிதழ்களில் பெரும்பாலானவை வார இறுதியில் ஞாயிறு சிறப்பிதழைக் கொண்டுள்ளன. தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கியமான வாசிப்புச் சாதனமாக கருதப்படுவது நாளிதழாகும். நேற்றைய நாட்டு நடப்புகளை இன்றைய நாளிதழ்களில் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்பதால் காலையில் எழுந்ததுமே நாளிதழும் கையுமாக இருப்பவர்களை எம்மிடையே அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கலாம். நாளிதழ்களை சாப்பாடு கட்டப் பயன்படுத்தும் குடும்பங்களும் எம்மிடம் உள்ளன. ஓரிரு நூலகங்களைத் தவிர மற்ற எல்லாப் பொது நூலகங்களுமே மாத முடிவில் நாளிதழ்களை மொத்தமாக விற்றுக் காசாக்குவதுமுண்டு. ஆனால் எமது சமூகத்தில் 'இன்றைய செய்தித்தாள் நாளைய குப்பைத் தாள்' என்ற மேலைத்தேய கருத்துநிலை பொருத்தமானதல்ல. ஏனெனில் இத்தகைய செய்தித்தாள் உடனே படித்து விட்டுப் போகும் செய்திகளை மட்டுமன்றி மாணவரின் பாடவிதானம் சார்ந்த தகவல் களையும், ஆய்வு முயற்சிகளுக்கு உதவு கின்ற பலதரப்பட்ட பொருட்துறை சார்ந்த கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகளையும் உள்ளடக்கும் தகவல் வளமாகவே காணப்படு கின்றன. எனவே இவற்றைக் கிழித்து எறியாது இவற்றிலுள்ள முக்கியமான தகவல்களையும் செய்திகளையும் வெட்டி யெடுத்து பொருட்துறை சார்ந்து ஒழுங்கு படுத்தி வைக்கும் போது இதனது ஆய்வுப் பெறுமதி அதிகரிக்கும் என்பது சிலருக்கே தெரிந்த உண்மையாக இருக்கிறது.

சிந்தனை விருத்தி நோக்கம் (Inspiration)

வாசிப்பு நோக்கங்களில் மிக உன்னத நிலையிலான வாசிப்பாக இதைக் கருத இடமுண்டு. மனிதனின் அறிவைத் தூண்டு கின்ற, சிந்திக்கச் செய்கின்ற, மனிதனையும் சமூகத்தையும் முன்னேற்றுகின்ற நூல்களின் வாசிப்பாக இதைக் கருத இடமுண்டு. பொருளாதார தத்துவத்தைப் புகுத்திய அடம்ஸ்மித்தின் "தேசங்களின் செல்வம்", பொதுவுடமைத் தத்துவத்தைத் தந்த கார்ல்மார்க்ஸின் "மூலதனம்", உயிரின உருவாக்கத்தை விளக்கிய டார்வினின் 'பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு", மக்கள் தொகைப் பிரச்சினையை விளக்கிய மால்தசின் 'மக்கள் தொகைக் கோட்பாடு", மனித மனத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டிய சிக்மண்ட் பிராய்டின் 'மனித மன சிந்தனை", சத்திய வாழ்க்கையை எடுத்தியம்பிய "அரிச்சந்திரன் கதை", அதர்மத்துக்கும் தர்மத்துக்குமிடையிலான யுத்தத்தில் தர்மமே வெல்லும் என்பதை உணர்த்தும் 'பாரத இராமாயணக் கதைகள்", ராகுல சாங்கிருத்தியானின் 'வால்காவிலிருந்து கங்கை வரை" போன்றவை இவ்வகைப் படுவன.

இன்றைய வாசிப்புச் சூழல்

வாசிப்பு என்ற கருத்து நிலை தொடர்பாக எமது சமூகத்தில் நிலவுகிறது. ஆரம்ப வகுப்பில் வரி வடிவத்தைப் புரிந்து கொள்வதற்காக எழுத்துக்கூட்டி வாசித்தல் என்பதை வாசிப்பாகக் கருதும் போக்கே ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் களிடம் காணப்படுகிறது. குமரப் பருவத்தில் விரிவுரைக் குறிப்புப் புத்தகத்தின் நடுவிலோ அல்லது அனைவரும் படுத்து உறங்கிய பின்னர் விளக்கு வெளிச்சத்திலோ படிக்கப்படுகின்ற பாலியல் உணர்ச்சியைத் தூண்டுகின்ற நூல்களை வாசிப்பதும் வாசிப்பாகத் தான் கருதப்படுகின்றது.

வாசிப்புக்கு அடிப்படை தரமான நூல்களின் தேர்வு. நூல்கள் தொகையாலோ, தரத்தாலோ அதிகரித்துச் செல்லும் தன்மை இல்லாத ஒரு காலப்பகுதியில், நூல்கள் புனிதமானவை என்ற கருத்து நிலை மேலாதிக்கம் செய்த ஒரு காலப்பகுதியில் நூல்கள் அனைத்துமே அறிவுப் பொக்கி சங்களாகவே இருந்தன. கோவில்கள், மடாலயங்களில் பேணிப் பாதுகாக்கப்பட்ட எத்தனையோ பதிவேடுகளை இதன் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம். நூல்களின் தொகை விரல் விட்டு எண்ணத் தக்க அளவிலும், நூல் உருவாக்கத்தில் நீண்ட கால அறிவும் அனுபவமும் பிரயோ கிக்கப்பட்ட ஒரு காலத்திலேயே நூலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்து கற்க வேண்டும் என்ற பொருள் தரும் "கல்வி கரையில கற்பவர் நாள் சில, மெல்ல நினைக்கிற் பிணி பல — தெள்ளிதின் ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, பாலூன் குருகிற றெரிந்து" என்கிற அடிகளை மிகப்பழமை வாய்ந்த இலக்கண நூலான நாலடியார் தனக்குள் பொதிந்து வைத்திருக்கிறது. அதாவது நீருடன் கலந்துள்ள பாலை அன்னம் எவ்வாறு பிரித்துப் பருகுகின்றதோ அவ்வாறே நூல்களின் சாரத்தைக் கிரகிக்க வேண்டும் என்கிறது. நூல் அழகுகள் மட்டுமன்றி நூல் குற்றங்களையும் பட்டியலிட்டிருக்கிறது தொல்காப்பியம்.

ஆனால் இன்றைய உலகம் அப்படிப் பட்டதல்ல. நிமிடத்துக்கு மில்லியன் கணக்கில் உருவாகும் இன்றைய நூல் உலகில், கணனி அறிவே நூலுருவாக்கத் துக்குப் போதுமானது என்ற கருத்து நிலையில் இருக்கும் சமூகத்தில் குப்பைக்குள் குன்றிமணியைத் தேடிப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வாசகனுக்கு ஏற்படுகின்றது.

'தரமான புத்தகங்களைத் தேர்ந் தெடுப்பது ஒரு அரிய கலை. தரமற்ற புத்தகங்களை ஈவிரக்கமில்லாமல் நிரா கரிப்பது அதை விடப்பெரிய கலை. நம்மை ஏமாற்ற வீசப்படும் தந்திர வலைகளுக்கெல்லாம் டிமிக்கி கொடுத்து விட்டு மிக மேலான புத்தகங்களைத் தேடி, அவற்றைப் படைத்திருக்கும் உன்னத ஆசிரியர்களைத் தேடி நாம் செல்ல வேண்டும்' என்கிறார் எழுத்தாளர் சுந்தரராமசாமி.

'அரிசியில் கல்லைக் கலந்து விட்டால் பிரித்து விடலாம். ஆனால் அறிவிலே நஞ்சைக் கலந்து விட்டால் பிரிப்பது கடினம். எனவே நூல் தேர்வு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல்கள் நூலகங்களுக்கு கிடைக்க வழிசெய்யப்பட வேண்டும்' என்கிறார் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா.

'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என்றவாறு எதுவித நோக்குமில்லாது நூல்களை வாசிப்பதில் பயனில்லை. நோக்கத்தோடு வாசிக்கும் போது தான் எமக்கு வேண்டியவற்றை நூல் எங்களுக்குக் காட்டும். 'கேளுங்கள் கொடுக்கப்படும் என்பது புத்தகங்களுக்கும் பொருந்தும்' என்று நாடறிந்த நாடகாசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் மேற்கண்ட வரிகள் வாசிப்புக்கு நோக்கம் இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது.

'சில நூல்கள் ருசிக்கப்பட வேண்டும். சில விழுங்கப்பட வேண்டும். இன்னும் சில சப்பி மென்று சமிக்கச் செய்யப்பட வேண்டும்' என்று புகழ் பெற்ற தத்துவமேதை பிரான்சிஸ் பேகனின் மேற்கண்ட வரிகள் நூல்களை எப்படிப் படிப்பது என்ற அம்சத்தை மிக ஆழமாகக் கோடிட்டுக் காட்டுகின்றன.

வாசிப்பு அனுபவத்தை வார்த்தைகளில் வரைய முயற்சி செய்யலாம். வாசிக்கத் தொடங்க முன்பு மனசுக்குள் ஒரு உலகம் இருக்கிறது. உயிரோடும் சுறுசுறுப்போடும் இயங்கும் புற உலகம் போல் இதுவும் இன்னொரு உலகம். மரபு, நம்பிக்கை, லட்சியங்களால் உருவாகும் உலகம். வாசிக்க வாசிக்க வாசிக்கப்படுகின்ற விடயம் மனசில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த உலகத்தோடு கரைந்து கொண்டே இருக்கிறது. மன உலகத்துக்கும் வாசிப் புக்குமான உறவு இது. இந்த உறவு தான் வாசக அனுபவத்தை உன்னதமாக்கவோ அருவருப்பாக்கவோ செய்கிறது என்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமணி தமிழ்மணி இதழில் கட்டுரையாளர் பாவண்ணன்.

வளமான வாசிப்பு

ஒருவனுக்குத் தேவையான கருவிகள், ஆற்றல்கள், அதிகாரம் அனைத்தும் வாசிப்பின் மூலம் கிடைக்கக்கூடியது என்பதையும், இவற்றைப் பிரயோகித்தலும், கருவிகளைக் கையாள்வதில் நிபுணத்துவம் பெறுவதும் மனிதனை முழுமையாக்கும் என்பதையும் குறிப்பிடுவது தான் 'வாசிப்பு மனிதனை முழுமையாக்கும்' என்ற பிரான்சிஸ் பேகன் அவர்களது சுலோகத்தின் உட்பொருள். இந்த சுலோகமானது இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் 'வளமான' என்ற அடைமொழியை யாசித்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது.

வியாபார மயப்படுத்தப்பட்டிருக்கும் நூல் உற்பத்தி, படித்து முடிந்ததும் குப்பைக்கூடைக்குள் போடக் கூடியளவுக்க உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நூல்களின் உற்பத்தி, தரங்குறைந்த தாள்களில் உருவாகும் மலிவுப் பதிப்புகளின் அதிகரிப்பு ஆகியவை நூல்கள் புனித மானவை என்ற கருத்து நிலையைத் தகர்த்து விட்டன. குப்பைக்குள் குன்றிமணிகளைத் தேடிப் பொறுக்க வேண்டிய நிலையி லிருக்கும் இன்றைய தலைமுறையினருக்குக் 'கண்டதும் கற்கப் பண்டிதனாவான்' என்ற பழமொழி பொருத்தமற்றதொன்று. கருத்துக் கொவ்வாத கதைப்புத்தகங்களே கதியென்று கிடப்பவர்கள் கூட வாசிப்பில் முழு நாளையே தாம் செலவிடுவதாகத் தான் வாதிடுகின்றனர். இங்கு தான் வளமான வாசிப்பு என்பதன் முழுமையான அர்த்தம் கிடைக்கிறது.

வளமான என்ற தமிழ்ச்சொல்லுக்கு இணையாக ஆங்கில மொழியில் richness, enhancement, enrichment எனப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இவற்றுக்கிடையில் சிறுசிறு வேறுபாடுகள் உண்டு. ஒன்றின் மதிப்பு, தரம், கவர்ச்சி என்பவற்றை மேம்படுத்துதல் எனப் பொருள்படுவது Enhancement. இதனை மேலும் வளப்படுத்துவதன் மூலம் பெறப்படுவது Enrichment. [Oxford 1995]

வளமான வாசிப்புக்கு அத்திவாரம் இடும் பயனுள்ள முயற்சியில் ஒன்று சிறுவயதில் கதை சொல்லல் ஆகும். கதை சொல்லல் என்பது காதினால் வாசித்தல் என்ற பொருளில் ஜப்பானின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்கான சிறந்த செயற்திட்டமாகப் பின்பற்றப்படுகிறது. பாடசாலைக்குச் செல்லும் முன்னரே குழந்தைகளுக்குப் பிடித்தமான கதைகளைப் பெற்றோர்கள் அவர்களுக்கு முன்பு உரத்து வாசிப்பார்கள். தனக்குப் பிடித்த விளை யாட்டில் ஈடுபட்டிருக்கும் குழந்தைகள் கூட ஆர்வமாகக் கதை கேட்பர். பாடசாலைக்குப் போகத் தொடங்கியதும் அங்கிருந்து புத்தகங்களை எடுத்து வந்து படிக்கும் பழக்கத்தை இக் குழந்தைகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்தக் கதை கேட்கும் பழக்கமே அடிப்படையாக இருக்கிறது.

வளமான வாசிப்புக்கு உதவும் இன்னொரு உத்தி வாசிப்பில் பாய்ந்து செல்லல் என்பதாகும். எல்லா நூல்களையும் எவரும் படிக்க முடியாது. ஒரு தினசரியின் வார வெளியீட்டில் இருப்பத்துநான்கு பக்கங்களுக்கு மேல் கண்ணைக் கவரும் வண்ணப்படங்களுடன் பல்துறையிலும் கட்டுரைகள் வெளியாகின்றன. நோயியல், மருத்துவம் எல்லா வார வெளியீடுகளிலும் காணலாம். அரசியல் அலசல், போர் நிலைகள், சினிமா இப்படிப் போகின்றது. இப்படியான நீர்ப்பாலில் பாலைத் தெரிவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கலை. வாசிப்போர் இந்தக் கலையைக் கற்கவேண்டும். ஒரு பந்தியில் இரண்டொரு சொற்களை, வசனங்களை வாசித்தவுடன், என்ன சொல்லப்படுகின்றது என்று விளக்குவது ஒரு அறிவுக்கலை. அந்தக் கலை கைவந்தவர்கள் ஒரு நூலில் பக்கம் பக்கமாகப் புரட்டி அந்த நூல் முழுவதிலும் என்ன சொல்லப்படுகிறது என்று சொல்லு வார்கள். Skipping in Reading, "வாசிப்பில் பாய்ந்து செல்லல்" என்று சொல்லலாம் என்கிறார் பண்டிதர் சச்சிதானந்தம் அவர்கள். (சச்சிதானந்தம் 2005)

எனக்கு இப்படி வாய்க்கவில்லையே என்ற ஏக்கத்தைத் தருவதற்குப் பதில் மற்றவரை விட நான் மேல் என்ற மனோ நிலையைத் தருகின்ற நூல்கள்..., தான் வாழுகின்ற சமூகத்துக்குப் பொருத்தமான புதுப்புது ஆய்வு முயற்சிகளைத் தூண்டும் நூல்கள்., விரக்தியால் விழுந்து கிடப்பவரைத் தூக்கி நிறுத்தித் துணிவு தந்திடும் நூல்கள், பற்றிப் பிடித்து ஏறுவதற்கு கொழுகொம்பாக இருக்கும் நூல்கள் இவை தான் வளமான வாசிப்புக்குத் தேவைப்படுபவை. இத்தகைய தொரு வாசிப்புத் தான் 'நான்' என்ற உணர்வை இல்லாதொழித்து 'நாம்' என்ற உணர்வைத் தோற்றுவிக்கும். நாம் என்ற உணர்வு தோன்றிவிட்டால் சமூக மேம்பாடு தொடர்பாகக் கவலைப்பட வேண்டிய அவசியமேயிருக்காது.

Reference :

1) Hornby, A.S Oxford Advanced learner's Dictionary. 5th ed.London:Oxford, 1995.
2) Moyle.D.[1976] **The Teaching of Reading.** 4th ed.London: Ward Lock Educational, 1976.
3) Shera,Jesse.H. (1976) Introduction to Librarary Science : Basic elements of Library Science. Littletone:Libraries unlimited. p14.
4) Sodex, Elle Benetti. What is reading?. A joint position paper of the International Reading Association and National middle school association. www.reading.org
5) World Bank [1991 Annuual World Bank conference on development economics. Ed by Boris Pleskovic and Joseph E. Stiglitz. Key note address by Joseph E. Stiglitz – Wachington:World bank .p17 – 31.
6) www.Wikipedia.org.
7) சச்சிதானந்தம்,க. "புத்தகங்களே சிறந்த தோழர்கள்". அறிவாலயம் திறப்பு விழாச் சிறப்பு மலர், இணுவில் : இணுவில் திருவூர் ஒன்றியம், 2005.
8) யோகவதி பாலகிருஸ்ணன். முதல் உலகத் தமிழாசிரியர் மன்ற மாநாட்டு மலர். பக்கம் 225.

* * *

- தன்னம்பிக்கை சாதிக்கப்படுகிறது. பொறுமை மதிக்கப்படுகிறது. சகிப்புத்தன்மை வெற்றி பெறுகிறது.
- நல்லதோ கெட்டதோ அவர்களுடைய செயலின் விளைவுகள் அவர்களிடமே திரும்பிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகள் திறக்கட்டும்

வலஜி சிவஞானராஜா
யாழ். பல்கலைக்கழகம்.

இன்னுமொரு விடியல்பொழுது சில, பலபாத்திரச் சப்தங்கள், நீர்க்குழாய் திறந்து தண்ணீர் பிடிக்கும் ஓசை சின்னத் தம்பி யருக்கு விழிப்பு வந்துவிட்டது. விளக் கொளியில் கடிகாரத்தைப் பார்க்கின்றார். நேரம் நான்கு முப்பது. வழமை போலவே முணக்கென்று எரிச்சல் பரவுகின்றது. இனி அவருக்கு நித்திரை வராது. சும்மாவே நித்திரைக் குறைச்சல் சின்னச் சத்தம் கேட்டாலும் அவரால் உறங்க முடியாது. இனி என்ன விடியும் வரை வெறுமனே புரள வேண்டியதுதான். கடுப்போடு போர்வையை இழுத்து முகம் வரை மூடிக்கொள்கின்றார்.

இதே நேரம் கனகமாயிருக்க வேணும். காற்றைக் கூட வடிகட்ட அனுப்பியிருப்பாள். அவரிடத்தில் அவ்வளவு மரியாதை. மரியாதை என்பதை விடப் பயம். அவர் நாக்கிலிருந்து சொட்டும் அமில வார்த்தை களின் சுவாலைபட்டுவிடக் கூடாதென்ற மிதமிஞ்சிய கவனம். அவர் மற்றவர்களுக்கு மட்டுமன்றி மனைவிக்கும் கூட. அந்நிய மாகத்தான் இருந்தார். அவர்களுக்கிடை யிலான இடைவெளி இறுதிவரை நிரவப் படாமலேயே இருந்துவிட்டது. அவர் வீட்டிலிருக்கும் போது கனகத்தின் குரலே கேட்காது. பிள்ளைகளையும் அதட்டி ஒடுக்கி அறைகளுக்குள்ளேயே அடக்கி விடுவாள். என்ன வேலையாயிருந்தாலும் அவர் ஒரு முறை அழைத்தால் போதும் கண்களில் பயத்தைத் தேக்கியபடியே ஓடிவரும் அந்த வேகத்தைக் கூட அவர் உள்ளூர ரசித்ததுண்டு.

அரசாங்கத்தில் உயர்ந்ததோர் பதவியில் இருந்த போது கூட அவர் ஒரு தனிக்காட்டு ராசா தான். தானிருக்கும் கதிரைக்குத்தான் மதிப்பு என்பதை மறந்து தான், தான், தான் என்ற மயக்கத்தில் இருப்பவர்களின் வரலாற்றில் சிங்கத்தம்பியருக்கும் ஓர் இடம் இருந்து. அவரின் ஆணவ ஆட்டங்களுக் கெல்லாம் வகித்த பதவி சாதகமானதாய் இருந்தது. தனக்கு முன்னே அமரந்திருந்து பேசக்கூட அருகதையற்றவர்கள் என்ற தன் நிலைப்பாட்டினால் இருக்கைகள் இருந்தும் வயதில், அனுபவத்தில் மூத்தவர்களைக் கூட அமரச் சொல்லாத இங்கிதம் உண ராதவர் சின்னத்தம்பி. தனக்குப் பணியாத வர்களைத் தன் உச்சபட்சமான அதி காரத்தைப் பிரயோகித்து விரட்டியடிப்பதில் எல்லாம் முன்மாதிரி என்று சொல்லக்கூடிய வகையில் தான் சின்னத்தம்பியரும் இருந்தார். அதே சூழலைத்தான் வீட்டிலும் விரும்பினார். மூன்று வேளை சாப்பாடு, வருடத்திற்கு நான்கு உடுப்புகள் இவை தவிர கனகத்திற்கும், பிள்ளைகளிற்கும் வேறு என்ன தேவையிருக்கும்? இந்த ரீதியில்தான் அவரால் சிந்திக்க முடியும்.

இரண்டு பெண்களும் ஒரு ஆணுமாய் மூன்று பிள்ளைகள். அவர்களுக்குக் கூட அவர் மீது பயம்தான். ஒருநாள் கூட அருகே அழைத்து தலைதடவிப் பேசாத அப்பா என்றால் அளவற்ற பயம். அம்மா, அம்மா என்று அம்மாவுடனேயே ஒண்டிக்கொள் வார்கள். சின்னத்தம்பி கொடுக்காத அன்பை யும் பாசத்தையும் சேர்த்து இரட்டிப்பாகத் தந்து அரவணைக்க மட்டுமே கனகத்தால் முடிந்தது. அவரின் நக்கல், நையாண்டிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் புன்சிரிப்போடு பொறுத்துப் பொறுத்தே அவளது ஆயுளும் சுருங்கிப் போனது. ஏதோ ஒரு ஓர்மத்தில் இரண்டு பெண்களுக்கும் திருமணம் செய்து வைத்து விட்டு மகன் வேலையில் அமரும் வரை கூட பொறுத்திருக்க அவளால் முடியவில்லை. காய்ச்சல் என்று படுத்தவள் மீளவே இல்லை. அந்த அந்திம தருணங்களில் என்னை மட்டும் தனியே விட்டுப் போகின்றாயா என்ற குற்றஞ்சாட்டுதல் படிந்த மகனிக் கண்களின் யாசிப்பினைத் தாங்க முடியாமல், அந்த யாசிப்பினால் மனம் கரைந்து போய் இறுக மூடிய விழிகளூடாகக் கண்ணீர் சிந்தவே அவளால் முடிந்தது. அப்போது அவர் தனது கடமைக் காலத்தின் இறுதித் தருணங்களில் இருந்தார். முப்பது, முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்வில் கைகோர்த்து நடந்தவளுக்காக ஏவல்களைப் பூர்த்தி செய்தே தன்னைக் கரைத்துக் கொண்டவளுக்காக ஒரு சொட்டுத் கண்ணீர் ம் ம் வரவே இல்லையே. அவளின் இறுதித் தருணங்களில் கூட கண்களில் ஈரம் கசியாமல், நெஞ்சில் ஈரம் தெரியாமல் நின்றவரை சில அடியொற்றிகள் கம்பீரம் என்று விமர்சித்ததைக் கேட்டு நெஞ்சு வலிக்க மட்டுமே பிள்ளைகளால் முடிந்தது. கனகத்தின் காலத்திற்குப் பிறகு அவரது சௌகரியங்கள் வீட்டில் குறையத் தொடங்கியது. கூட்பிட்ட குரலுக்கெல்லாம் ஒரு நாய்க்குட்டியாய் காலைச் சுற்றி வந்து, காலால் இட்டதைத் தலையால் செய்து முடிக்கும் கனகத்தின் வெற்றிடம் நிரப்பவே முடியாத ஒன்றாகி விட்டது. பெண்மையின் நளினத்தோடிருந்த வீட்டின் சோபிதம் பொலிவிழந்து போயிற்று. அவனுடைய முயற்சியால் கிடைத்த வேலைக்கு போகப் போவதாக உத்தரவு கேட்காமல் அதை ஒரு தகவலாகத் தெரிவித்த மகன் முதன் முதலில் சின்னத்தம்பியருக்குப் புதியவனாகத் தோன்றினான். எத்தனையோ பெரியவர்களின் தொடர்பு, செல்வாக்கு இவைகளைப் பயன் படுத்தி அவனுக்கு ஒரு சிறந்த வேலையைப் பெற்றுத்தர அவரால் இயலுமானபோது அவரது கையை எதிர்பாராது, வழித்தடத்தை மகன் மாற்றியது முதன் முதல் அப்போது தான். அதே போலத்தான் அவருக்குச் சிறிதும் விருப்பமில்லாத அவளின் திருமணமும் அவருடைய விருப்பமில்லாமல் அவருடைய சம்மதம் இல்லாமல் ஒரு காரியம் எப்படி வீட்டில் நடக்கலாம் என்ற பிரமிப்புத் தீர்வதற்கு முதலே மருமகள் வீட்டினுள் காலடி எடுத்து வைத்து விட்டாள். அப்போது வீழ்ந்தவர் எழுவதற்கிடையில் அவருடைய இளைப்பாற்றுக்காலம் வந்துவிட்டது. மாலை, மரியாதை, புகழ் மாலை, பளிச்சிடும் கமராக்கள் எல்லாம் முடிந்து சகலமும் ஒப்படைத்து வாகனத்தில் ஏறப் போகையில் மறந்து போன ஏதோ வொன்றை எடுப்பதற்காக திரும்பியவர் காதில் "ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடினவர் இன்டையோட ஆட்டம் குளோஸ். வில்லங்கம் பிடிச்ச மனிசன் வீட்டுக்குப் போறார் நிம்மதி" என்ற விமர்சனங்கள் விழுந்தன. சொன்னவர்கள் அவருக்கு கீழே வேலை செய்தவர்கள். தன்னில் மிக மரியாதை வைத்திருப்பவர்கள் என்று அந்தக் கணம் வரை அவர் நம்பிக்கொண்டிருந்தவர்கள்' சூழ இருப்போரின் வாயிலிருந்து உதிர்ந்து காற்றிலே மிதந்த வார்த்தைகளை கஷ்டப்பட்டு ஜீரணிக்க முயன்றார். முன்னர் தினசரிப் பத்திரிகைகளில் தினம் இடம் பிடித்தவரை இப்போது திரும்பிப் பார்க்கவும் ஆளில்லாமல் போய்விட்டது.

பதவிக்காலத்தில் பெயரைக் கேட்டவுடன் பதறி எழுந்தவர்கள், பணிந்து நின்றசல்கள், பயந்து ஒதுங்கியவர்கள் எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது எங்கே? ஓய்வுக்குப் பின்னான பொது நிகழ்வுகளில் கலந்துகொள்வது இது வரை மூச்சடைக்க வைத்தது. பாராதது போலப் பார்ப்பவர்களும், பார்த்தும் பாராமர் அலட்சியம் செய்பவர்களுமாய் இந்த வாழ்க்கை உசிதமானதாய் இல்லை. பல்லுப் பிடுங்குப்பட்ட பாம்பாகத் தன்னை உணர்ந் தவர் வீட்டை விட்டு வெளியேறுவதை அறவே வெறுத்தார். ஓய்வுக்குப் பின்னான காலமும் மகிழ்ச்சிக்குரியது என்று அவருக்குப் புரியாமலே போயிற்று. எதையும் மனம் விட்டுப் பேச ஒரு நண்பரைக் கூட சம்பாதித்துக்கொள்ளாத கையறு நிலை உளநெருக்கடியை அதிகரித்தது. வீட்டின ருடன் கூடி ஒட்டி உறவாட ஈகோ விடுவதில்லை. இவருடைய குதர்க்கங் களால் காயப்பட்டுப் போன மருமகள் அனாவசியமாக இவரிடம் வாய் திறப்ப தில்லை. பேரப்பிள்ளைகள் கூட அதட்டல் உருட்டல்களால் அண்டுவதில்லை. தனக்குத் தானே ஒரு வட்டத்தைப் போட்டுக்கொண்டு அதிலிருந்து மீள முடியாமல், சுற்றி இருப்ப வர்களையும் காயப்படுத்திக் கொண்டு... சிங்கத் தம்பியர்கள் என்றைக்குத் திருந்தப் போகின்றார்கள்? சின்னச் சின்ன விடயங் களுக்கும் மற்றவர்களோடு ஒத்துப் போகா மல், குறைகளைப் பெரிது படுத்தவே பிறப் பெடுத்தது போல விசித்திரப் பிறவிகள்.

மருமகளின் சமையலில் ஏதாவதொரு குறை காணாமல் சாட்பிட அவரால் முடிவ தில்லை. அப்படியொரு தருணத்தில் அவர் வாயிலிருந்து நான் இப்போதொல்லாம் ருசிக்குச் சாப்பிடுவதில்லை. பசிக்குத் தான் சாப்பிடுறது என்பது வெளிவந்தது. மனைவி யின் கண்களில் தென்பட்ட இறைஞ்சுதல் களையும் மீறி மகன் சொல்லிவிட்டார். "உங்களுக்கு இங்கே சிரமமாயிருந்தால் உங்களுக்குப் பிடிச்ச இடத்தைச் சொல்லுங்கோ கொண்டு போய் விட்டு விடுகிறேன்" சின்னத்தம்பி ஒருகணம் ஆடித்தான் போனார். அந்த ஒரு பதில் தன்நிலை விளக்கத்தைக் கொடுக்கப் போதுமாயிருந்தது. தன்னுடைய நிலை எது என்பதும் அவருக்குப் புரிந்து போனது.

காலை எட்டு மணிக்கு நிதானமாக எழுந்தார். பள்ளி, அலுவலகம் என்று எல்வோரும் போய்விட்ட வீடு நிசப்தமாய் இருந்தது. தேநீர் அருந்தி, காலை உணவை முடித்துக் கொண்டார். காலைப் பத்தி ரிகைகளை எடுத்துக்கொண்டு முன்ன றைக்கு வந்தார். பக்கத்து வீட்டுப் பரமசிவத்தின் முற்றத்தில் சின்னக் குழந்தைகள் விளையாடும் சத்தம். பரம சிவம் இவருக்குப் புதியவரல்ல. இவரை யொத்த வயதுள்ள இவரின் கீழ் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஆனால் இவரால் தான் இன்னமும் அவருடன் சிநேகமாய்க் பேச முடிவதில்லை. பழைய இடைவெளியின் இருப்பினைத் தாண்ட முடியாமலே கரைந்து போயின. காலங்கள். பரம சிவத்திற்கு குழந்தைகளோ, பேரக் குழந்தைகளோ இல்லாத போதிலும் அவருடைய முற்றம் தான் குழந்தைகள் குதூகலிக்கும் இடம். சின்னத்தம்பியரின் சின்னப் பேரக்குழந்தை கூட பகல்பொழுது களில் அங்கே தான். இதோ, இப்போது கூட தா.த்.தா என்ற பிஞ்சுக் குரல்கள் சுவரையும் ஊடறுத்து செவிப்பறையில் மோதின. ஏதோ ஒன்று உந்தித் தள்ள, உயர மான படி மீது ஏறிநின்று பார்க்கின்றார்.

மாமரத்தின் கீழிருந்த பெரிய ஊஞ்சலில் சின்னத்தம்பியின் பேரக் குழந்தையை தன் மடிமீது வைத்து பரமசிவம் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தார். இன்னும் இரண்டு குழந்தைகள் பரமசிவத்தின் மனனவியின் மடியில் குழந்தைகளோடு குழந்தைகளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலிக்கும் அவர்களைப் பார்க்கையில் அவருக்குப் பொறாமையாய் இருந்தது. தான் தொலைத்துவிட்ட வானிவில் பொழுதுகள் நினைவுக்கு வந்து நெஞ்சை அடைத்தது. பரமசிவத்தின் வீட்டினுள் நுழைந்தார். கதவைத் திறந்த பரமசிவம் முகத்தில் அத்தனை வியப்பு. அதனையும் தாண்டிய புரிதலோடு கையை நீட்டியவரிடம் குழந்தையைக் கொடுத்தார். குழந்தையின் முகத்திலும் வியப்பின் தீற்றுதல்.

"தா.த்.தா" என்று குழந்தைக் கட்டிக் கொண்ட அதன் மணிக் கண்களிலிருந்து மின்னல்கள் தெறித்தன. அந்த வசீகரத்தில் ஈர்க்கப்பட்டவராக அதன் குண்டுக் கன்னத்தோடு தன் கன்னங்களை ஒத்திக் கொள்கின்றார். ஒரு பூமாலையை சுமப்பவர் போன்று நளினத்துடன் சின்னப் பேர்த்தியைச் சுமந்தபடி போய் கதவைத் திறக்கின்றார். காற்று வீசத் தொடங்கியது.

* * *

- பின்னால் வருபவர் மேலும் சிறப்பாகப் பணிபுரிந்தால் அதனால் பாராட்டப்படவேண்டியவர், அவருக்கு முன்னால் பதவி வகித்தவரே.
  Beginner deserves the merit, should his successor even better.
  - Burrows.

- தூரத்தில் இருப்பதை விரும்புவதன் மூலம் அருகில் இருப்பதைக் கோட்டைவிட்டு விடாதீர்கள்.
  Slight not what is near through aiming at what is far.
  - Eurifides.

- ஒரு மனிதனின் உள்ளம் எப்படியோ, அப்படியே அவனது தீர்ப்பும் இருக்கும்
  Such as every man is in wardly so he judges outwardly.
  - Kempis -

- கடுமையினால் சாதிக்கமுடியாததை அன்பு சாதித்துவிடும்.
  Kindness effects more than severity.
  - Aesop -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் புரியும் சாதனைகள்

செல்வி. ய. சங்கீதா
தரம் 10G.

இன்றைய நவீன உலகிலே விஞ்ஞானம் புரிந்துவரும் சாதனைகள் அளப்பரியன. ஆரம்பகாலத்திலிருந்தே மனிதன் தனது நுண்ணறிவைப் பயன்படுத்தி பல சாதனைகளை செய்தான். அது இன்றுங்கூட தொடர்ந்து வந்து விஞ்ஞானமானது இவ் இயந்திர உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை வியப்பிற்குரிய ஒரு விடயமாகும். ஆதியிலே மனிதன் தனது முதலாவது விஞ்ஞானக் கண்டு பிடிப்பாகக் கல்லோடு கல்லை உரசி நெருப்பைக் கண்டுபிடித்தான். இவ்வாறாகப் படிப்படியாக முன்னேற்றமடைந்தான். ஆம் பாம்பைக் கண்டான், புகைவண்டியைப் படைத்தான். மீனைக் கண்டான், கப்பலைப் படைத்தான். இவ்வாறாக தனது விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை படிப்படியாக அதிகரித்த வண்ணமே உள்ளான். காட்டினில் வாழ்ந்த மனிதன் ஏட்டை எடுக்க மறந்தான். காலம் செல்லச் செல்ல தனது நிலையை உணர்ந்த மனிதன் தனது சிந்தனைகளை தட்டிவிட்டு இன்று பரிணாம வளர்ச்சியடைந்துள்ளான்.

விஞ்ஞானமானது இன்று அளப்பரிய சாதனைகளைப் பல்வேறு துறைகளிலே ஆற்றிய வண்ணம் உள்ளது. உதாரணமாக வைத்தியத்துறை, தகவல்துறை, போக்கு வரத்துத்துறை என எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானமானது பல அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திக் கொண்டுள்ளது. விஞ்ஞான வளர்ச்சியின் நன்மைகள் அளப்பரிய மக்கள் பெருக்கத்திற்கேற்ப புதுப்புது கண்டுபிடிப்புக்கள் துரித வேகத்தில் மின்சார ரயில்கள், தூரஇட தொலைத் தொடர்புகள், கண்ணிமைக்கும் நேரத்தில் வேலைகள் முடிவடைதல் என எல்லா விதமான செயற்பாடுகளிலும் விஞ்ஞான மானது தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

விஞ்ஞானமானது அன்றாடம் பல சாதனைகளைப் புரிந்த வண்ணமே உள்ளது. அவற்றில் சிலவற்றைப் பற்றி இங்கே நோக்கலாம். உதாரணமாக சோலர் கப்பலை எடுத்துக் கொண்டால் எரிபொருட் தேவையை சிக்கனப்படுத்தவும், சுற்றுச் சூழல் மாசுகளைக் குறைக்கவும் சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொள்ளும் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது.

சமீபத்தில் சூரிய ஒளியில் இயங்கும் விமானம் உருவாக்கப்பட்டது. இது விரைவில் உலகையே வலம்வர இருக்கின்றது. இதுவும் விஞ்ஞானத்தின் அளப்பரிய சாதனைகளில் ஒன்றேயாகும். இதே போல் உலகில் முதல் முறையாக சூரிய ஒளியில் இயங்கும் சரக்குக்கப்பல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சரக்குக் கப்பலின் பெயர் "எம்வி அரிகர்" என்பதாகும். இந்தக் கப்பல் ஜப்பானின் டொயோட்டோ நகருக்கும் அமெரிக்கா வின் நியூயோர்க் நகருக்கும் இடையே இயக்கப்படுகின்றது. விஞ்ஞானத்தின் அளப்பரிய பல விந்தைகளை இந்தக் கப்பலிலே காணக்கூடியதாகவுள்ளது. இந்தக்கப்பல் 6,400 கார்களை எடுத்துச் செல்லும் திறன் கொண்டது. மற்றக் கப்பலை விட 10சதவீத எரிபொருள் செலவே இதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமானது. அதற்காகக் கப்பலின் மேற்புறத்தில் 325 சூரிய ஒளித்தகடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் மூலம் 40kw மின்சாரம் தயாரிக்க முடியும்.

விஞ்ஞானமானது தனது சாதனைகளை உலகம் பூராகவும் விஸ்தரித்தது மட்டுமன்றி இன்று நிலவினுள் கூட சென்று பல சாதனைகளை நிலைநாட்டும் நிலைக்கு வளர்ந்து சென்றுவிட்டது. கடந்த 300 ஆண்டுகளாக விஞ்ஞானமானது அளப்பரிய சாத னைகளை நிலைநாட்டிய வண்ணம் உள்ளது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் விண்ணகத்தின் நிலைகளை அதாவது வானிலைகள் முதற்கொண்டு அதன் தாற்பரியங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. மேலும் பூமியில் மனித உயிரினங்களும் ஏனைய உயிரினங்களும் பல்கிப் பெருகி வருகின்றன. இவற்றை வேறு கிரகங்களில் குடியேற்றுவதற்கும் விஞ்ஞான சாதனைகள் பயன்படுகின்றன. இவ்விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக் களினால் மனிதன் ஒருவனுக்கு இயற்கை யாகவுள்ள பொருட்களைக்கூட செயற்கை யாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. உதாரணமாக இன்று விற்பனையில் முதலிடம் வகிக்கும் செயற்கைத் தோலினை எடுத்துக் கொண்டோமேயானால் சுற்றுப் புறச் சூழல் மாறும் சூரிய கதிர் தாக்கல் ஆகியவற்றினால் தோல் பாதிப்படை கின்றது. இப்பாதிப்புகளையெல்லாம் ஈடுசெய்ய நவீன விஞ்ஞான தொழில்நுட் பத்தில் செயற்கைத்தோல் உற்பத்தி செய் யத்தொடங்கி விட்டனர் விஞ்ஞானிகள். இவ்வாறாக விஞ்ஞானமானது தினமும் தனது வெற்றிப் பாதையின் ஒவ்வொரு படிகளையும் எடுத்து வைத்த வண்ணம் உள்ளது. வைத்தியத் துறையிலே விஞ் ஞானமானது அளப்பரிய பல சேவைகளை ஆற்றியவண்ணம் உள்ளது. உதாரணமாக எக்ஸ்ரேப் பொறியை எடுத்துக் கொண்டோ மேயானால் மனித உடலின் உள்ளுறுப் புக்களை அறிந்துகொள்ள முடியும். அது மட்டுமன்றி விஞ்ஞானத்தின் சாதனையால் அளப்பரிய பாரிய மருந்து வகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை பல பாரிய நோய்களைக்கூடிய இலகுவாகக் குணப்படுத்தக் கூடியதாக உள்ளது.

விஞ்ஞானத்தின் சாதனையானது மருத்துவத்துறையில் மட்டுமன்றி பல துறைகளிலும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. ஊதாரணமாக தொடர் பாடற்துறையை எடுத்துக்கொண்டோ மேயானால் இன்று எங்கு பார்த்தாலும் பெரியவர் தொடக்கம் சிறியவர் வரை எல்லோரது கைகளிலும் கையடக்கத் தொலைபேசி. இதுவும் விஞ்ஞானத்தின் ஒரு அளப்பரிய சாதனை என்றுதான் குறிப்பிட வேண்டும். ஏனெனில் உலகில் எந்தவொரு மூலையிலும் வாழும் எந்த உறவுகளுடனும் நாம் இலகுவாகப் பேச முடியும். உறவுகளை இணைக்கும் ஓர் பாலமாக விஞ்ஞானத்தின் சாதனையான கையடக்கத் தொலைபேசி அமைந்துள்ளது.

இவ்வாறாக விஞ்ஞானம் புரியும் பலவிதமான சாதனைகளும் மனிதனுக்கு சாதனை தருவனவாக அமைந்துள்ள போதிலும் சில சாதனைகள் மனிதனுக்கு வேதனை தரும் வகையிலும் அமைகின்றன. மனிதர்கள் தாங்களாகவே தங்களுக்கு அழிவைத் தேடிக்கொள்கின்றார்கள். விஞ்ஞானத்தின் பயனால்தான் இன்று மனிதன் மிக வேகமாக ஆக்கங்களை செய்கின்றான். நாம் பல ஆக்கங்களைப் பெறுவற்கு சில அழிவுகளையும் பெற்றுக் கொள்ளத்தான் வேண்டும். எங்கும் எதிலும் அழிவில் இருந்துதான் ஆக்கங்கள் தோன்றுகின்றன. நெருப்பில் இரும்பைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவதன் மூலம் இரும்பில் இருந்து புதிய வடிவங்களை உருவாக்கவில்லையா? அது போன்றுதான் அழிவில் இருந்துதான் ஆக்கங்கள் தோன்ற முடியும் இது நியதியே. விஞ்ஞானத்தின் சில தீமைகளும் ஏற்படுகின்றன. உதாரணமாக இன்று விஞ்ஞானத்தால் பலவகை உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றை பயிருக்கு போட்டால் பயிர்கள் செழித்து வளர்ந்து நல்ல பயனைத் தருகின்றது. இதனை மக்கள் விரும்பி வாங்கி உணவாகப் பயன்படுத்தும் போது பயிரிலுள்ள விஷ இரசாயனங்கள் மனித உடலிற் சென்று மனிதனுக்கு நோயை ஏற்படுத்துகின்றன. விஞ்ஞானத்தை ஆராயத்தான் வேண்டும். விஞ்ஞான விதிகளைச் சரியாகப் பயன்படுத்தினால் நோயின்றி வாழமுடியும். எனவே நாம் விஞ்ஞானத்தின் சாதனைகளை சிறந்த முறையில் பயன் படுத்தி நன்மையடைவோமாக.

* * *

உலகப் பெருந் தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சியில்லா இன்பம்
பண்பில்லாத அறிவு.
நல்லொழுக்கமில்லாத வணிகம்.
மனிதாபிமானமில்லா விஞ்ஞானம்.
தியாகமில்லாத வணக்கம்.
அடிப்படைக் கொள்கையில்லாத அரசியல்.

-மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு இல்லம்

செல்வி. சி. குமாரி
தரம் 12G.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்று மில்லாதவாறு அதிகாலை மூன்ற மணிக்கே எழுந்து சமையல் வேலைகளில் ஈடுபட்டி ருந்தாள் வசந்தி. அவசர அவசரமாக காலைச் சாப்பாட்டை சமைத்த பின்னர் மதிய உணவுக்காக அரிசியை உலையிலே இட்டாள். அடுப்பை நன்றாக எரித்து விட்டு வீடு வாசல்களை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந்தாள். அவளது கணவன் சுரேஷ் அவசர அவசரமாக எழுந்து சமைய லறைக்குட் சென்று மதிய உணவிற்கான மரக்கறியை வெட்டிக்கொண்டிருந்தான். சமையலறைப் பக்கம் சென்ற வசந்தி கணவனைக் கண்டவுடன் பூரிப்புடன் "உங்க என்ன செய்கிறீங்க? உதெல்லாம் நான் பார்க்க மாட்டேனா? போய்க் குளித்து விட்டு வாங்க, கோப்பி தாரேன்" என்று தனக்கே உரிய பாணியில் கூறினாள்.

வசந்தியின் அன்பிற்குக் கட்டுப்பட்ட சுரேஷ் எழுந்து சென்றான். கணவனுக்காக தயாரித்த கோப்பியை மேசையில் வைப்ப தற்காகச் சென்ற வசந்தியின் கண்களிலே அங்கே இருந்த புத்தக அலுமாரிகள் தெரிந்தன. அவை வசந்தியைப் பார்த்து வா, வா என அழைத்தன. மேசையில் கோப்பியை வைத்து விட்டு திரும்பி அலுமாரி அருகிலே வந்து நின்றாள் வசந்தி.

அத்தனை புத்தகங்களும் அவளது முப்பது வருடகால வாழ்க்கையில் தோன்றியவை. சகல நூல்களிலும் "எழுத்தாளர் வசந்தி" என எழுதப்பட்டி ருந்தது. இதனைப் பார்க்கப் பார்க்க வசந்திக்கு ஒரே பூரிப்பாக இருந்தது. ஆம்! வசந்தி தற்போது ஒரு சிறந்த சிறுகதை ஆசிரியர். சிறுகதை ஆசிரியர் மட்டுமல்ல நாவலாசிரியரும் கூட. நினைவுகள் அவளை அறியாமல் அவளது பூர்வீகத்துக்குப் பயணமானது.

சுந்தரலிங்கம், ரேணுகா ஆகிய ஏழைப் பெற்றோரின் ஒரே மகள் வசந்தி. பிறக்கும் போதே தாயாருக்கு இயமனாக விளங்கியவள். இவளது காலடி பூமியிற் பட்ட கணமே அவளது தாயாரின் காலடி பூமியை விட்டகன்றது.

அன்று முதல் அவளது தந்தையே அவளது தாயாகவும், தந்தையாகவும் இருந்து அவளைக் கவனித்து வளர்த்தார். தந்தையின் உழைப்பு ஒரு பிஞ்சின் கால்வயிறு நிரம்பவே போதாது. தகப்பனும் மகளும் பசியால் வாடினர், உடல் சோர்ந்தனர். இப்படியே இவளுக்கு ஐந்து வயதாகும் போது நிகழ்ந்த கார் விபத்தில் சுந்தரலிங்கமும் பலியாகினார்.

அன்று முதல் வசந்திக்கு சமூகத்தால் அனாதை என்ற பட்டம் சூட்டப்பட்டது. அயலிலுள்ளோரால் அங்குள்ள சிறுவர் இல்லத்திலே வசந்தி சேர்க்கப்பட்டாள்.

வசந்தி சிறு வயதிலிருந்தே நன்றாக வாசிப்பாள். கண்டது கற்கப் பண்டித னாவான் என்பதற்கிணங்க கண்டதையும் கற்பாள். நல்ல ஆற்றலும் திறமையுமுடை யவளாக மிளிர்ந்தாள். சிறுவர் இல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகிகளால் அருகிலுள்ள பாடசாலை யில் வசந்தி சேர்க்கப்பட்டாள்.

பாடசாலையிலேயே சிறுகதை, நாடகம், பேச்சு, கவிதை போன்ற போட்டிகளில் வசந்தியே முதலிடம் பெற்றாள். அவள் க.பொத சாதாரண தரம் கற்கும் போது அவள் எழுதிய ஒரு சிறுகதை தேசிய மட்டத்திலே முதலிடம் பெற்று அனைவருக்குமே பெருமையைத் தேடித் தந்தது.

அன்று முதல் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், சிறுவர் நலன்புரி நிலையங்களும் சிறுதொகைப் பணத்தை உதவிப் பணமாக வழங்கி அவளை மேலும் பல சிறுகதைகள், நாவல்களை எழுதுமாறு தூண்டின.

வசந்தி க.பொ.த உயர் தரத்திலே கலைத் துறையைத் தெரிவு செய்து நன்றாகப் பயின்றாள். இவளுக்கு இன்னும் இன்னும் எழுத்தில் ஆர்வம் பொங்கியது. தனக்கு சிறுகதை எழுத தேவையான மேலதிக செலவுக்கான பணத்தை ஈட்டு வதற்காக வசந்தி பல இடங்களில் வேலை தேடிச் சென்றாள். "முல்லை" எனும் வார இதழின் ஆசிரியரான கிருஷ்ணன் தனது இதழிலே சிறுகதைகளைப் பிரசுரிக்க சம்மதம் தெரிவித்தார். அவ்வாறே வசந்தி தான் எழுதிய சிறுகதைகளை ஆசிரியரிடம் காண்பித்தாள். அவர் அவளை அமோக மாகப் பாராட்டியவாறே "எவ்வளவு தொகையம்மா வேணும்? நீ எழுதிய இக்கதைக்கு எவ்வளவு வேணுமானாலும் தரலாமம்மா" என்றார் பரிவுடன். வசந்தி மிகத் தாழ்மையாக "ஐயா நான் தற்பொழுது பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளேன். எனக்கு அங்கு இணைந்து கொள்வதற்காக ஒரு இரண்டாயிரம் ரூபாய் தாருங்கள் போதும்" என்றாள். "இரண்டாயிரம் என்னம்மா இருபதாயிரம் கேட்டாலும் தருகிறேன்" என்று கூறியவாறே இலாச்சியைத் திறந்து எவ்வளவு தொகை என்று கூடப் பார்க்காமல் அப்படியே பொத்தி அள்ளிக் கொடுத்தார் கிருஷ்ணன். அதை அப்படியே வாங்கி கண்ணில் ஒற்றியவாறே அவருக்கு மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்து வெளியேறிய வசந்தி தன் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர்ந்தாள்.

அன்று முதல் வசந்தியின் சிறுகதைகள் முல்லை இதழை அலங்கரித்தன. "முல்லை" இதழின் விற்பனையாற் கிடைத்த வருவாய் இவளது சிறுகதைகளால் பல மடங்காயின. வாசகர் கூட்டம் பெருகியது. வசந்தியிடம் தாராளமாகப் பணம் வந்து குவிந்தது. ஆனாலும் அவள் நம்மவர் போன்று ஓகோ என்று ஆடம்பரமாக வாழாது அமைதி யாகவும், அடக்கமாகவும், எளிமையாகவும் வாழ்ந்தாள். தனக்குக் கிடைக்கும் பணத் திலே தன் கல்விக்குப் போதுமானவற்றை வைத்துக்கொண்டு, மிகுதியைத் தான் தங்கியிருந்த சிறுவர் இல்லத்துக்கும், வறியோருக்கும் வழங்கி மகிழ்ந்தாள். காலம் நகர்ந்தது. இவளுடன் 'கம்பஸில்' ஒன்றாகப் பயின்ற 'சுரேஷ்' என்பவன் இவளது தீவிர ரசிகன். இவளது சிறுகதை களையும், நாவல்களையும் காதலித்ததோடு இவளையும் சேர்த்துக் காதலித்தான். சுரேஷ் தனியார் நிறுவனம் ஒன்றிலே மனேஜராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தான். இவர்கள் இருவரும் மனமொத்து விருப்பம் தெரி விக்கவே இருவருக்கும் எளிதான முறையில் திருமணம் நடைபெற்றது.

அன்றிலிருந்து சுரேஷ் இவளது கணவனாகவும், இரசிகனாகவும், உதவி யாளனாகவும் இருந்து இவளது சிறுகதை களை நேசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி தனக்குக் கிடைத்த ஆசிரியர் வேலையையும் விடாது சிறுகதைகளைத் தொடர்ந்தும் எழுதினாள்.

திடீரென பின்னால் ஒரு உருவம் அசைவது போல் தெரியவே திடுக்குற்று சுயநினைவு வரப்பெற்ற வசந்தி தன்நிலையை எண்ணி வெட்கினாள். பின்னால் கணவன் சுரேஷ் கோப்பியை இரசித்துக் குடித்தவாறே "என்னம்மா வசந்தி இன்னும் வெளிக்கிட வில்லையா? நேரமல்லவா போகுது? வசந்திக்குப் பழைய ஞாபகங்கள் வந்துட்டுது போல" என்று சிரித்தவாறே அவளை அவசரப்படுத்தினான்.

ஆம்! இன்று தான் அவள் இத்தனை காலமும் எழுதிக் குவித்த ஏராளமான சிறுகதைகளின் பலனையும், அவற்றிற்கான புகழையும் பெறப்போகின்றாள். திரு நெல்வேலி பிரதேசச் செயலகத்தில் நடைபெற இருக்கும் கலை இலக்கிய விழாவில் அவளுக்கு "சிறுகதை நாயகி" எனும் விருது வழங்கிக் கௌரவிக்க வுள்ளார்கள்.

தன் கணவனுடன் வசந்தி நிகழ்விலே கலந்து கொண்டாள். அவளுக்கு யாழ் மாவட்ட அரச அதிபரால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. நிகழ்வு முடிவடைந்த வுடன் அங்கே அவளுக்காகக் காத்திருந்த வாசகர் கூட்டம், "நீ முந்தி நான் முந்தி "என 'ஓட்டோ கிறாவ்'களை நீட்டினர். இவள் புன்னகைத்தவாறே அனைவருக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தாள். நிகழ்வை விட்டு வெளியேறும் போது எதிரேயுள்ள கட்டடம் அவள் கண்களில் பட்டது. அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது. ஆம் சுந்தரலிங்கம் ரேணுகா ஞாபகார்த்த மண்டபம். ஐந்து வயதில் அனாதை என்ற பட்டத்துடன் வாழ்க்கைப் பயணத்தில் காலடி வைத்தவள் இன்று ஐம்பது வயதில் நூறு ஏழைக் குழந்தைகளுக்கு தாயாக விளங்குகிறாள். அவளது கால் நூற்றாண்டு கால உழைப்பு முழுவதும் சேர்ந்து உருவாக்கப்பட்டதே பிரமாண்டமாகக் கட்டப்பட்ட அந்த மண்டபம். "அன்பு இல்லம்" என்ற அழகான அதன் எழுத்துக்கள் மின் ஒளி படும்போது கண்களைப் பறித்தது.

நாளை அவளது பெற்றோரின் திருமண நாள். நாளைக்கு இதே அரச அதிபரால் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட உள்ளது.

"என் பெற்றோருக்கு என் அன்புக் காணிக்கைகள்".

* * *

- நல்ல சிந்தனைகள், உயர்ந்த எண்ணங்கள் மனவலிமைக்கு ஆக்கம் தரக்கூடியன.
- தீய சிந்தனைகள் தாழ்ந்த எண்ணங்கள் மனவலிமையைச் சிதைக்கக் கூடியன.
- என்னைத்தவிர யாரும் எனக்குக் கெடுதல் செய்துவிடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக மயமாக்கலும் அதன் விளைவுகளும்

செல்வி. க. தனுஷியா
தரம் 13 வர்த்தகப் பிரிவு.

உலகமயமாக்கலானது இன்று உலக மட்டத்தில் பேசப்பட்டு வரும் ஒரு விடய மாகக் காணப்படுகின்றது. அந்த வகையில் உலகமயமாக்கலானது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒன்றி ணைக்கும் ஓர் செயற்பாடாகும்.

உலகமயமாக்கல் என்பது சந்தை அடிப்படையிலான பொருளாதாரம் மற்றும் திறந்த பொருளாதாரம் போன்றவற்றின் ஓர் இணைந்த வடிவமாகக் காணப்படுகின்றது. இது பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம், கலாசாரம் என்ப வற்றின் பிண்ணினைப்புகளூடாக உலக மக்களை நெருக்கமாக்குவதுடன் அவர்களில் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலைமை யினையும் அதிகரிக்கச் செய்கின்றது. இவற்றின் மூலம் பொருட்கள், சேவைகளின் வர்த்தகத்தில் மட்டுமன்றி நாணயங்களின் பரிமாற்றம், மூலதன அசைவுகள், தொழில் நுட்ப முன்னேற்றங்கள், சர்வதேச பயணங் கள் மற்றும் புலம்பெயர்வுகள் மூலமான மக் களின் அசைவுகள் தகவல் மற்றும் கருத்துக்கள் என்பவற்றின் சர்வதேச ரீதியான பாய்ச்சல் என்பவற்றிலும் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உலகமயமாக்கல் என்ற பதமானது பல்வேறு துறை சார்ந்த அறிஞர்களாலும் பல்வேறு நிறுவனங்களாலும் வேறுபட்ட வகையில் வரைவிலக்கணப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

Alfread.P.Slone

உலகமயமாக்கல் என்ற பதமானது கால வீச்சுக்கு ஏற்ப பரிவுபட்டுச் செல்லும் பதமாகவோ / மாற்றமடைந்து செல்லும் பதமாகவோ உள்ளது எனக் குறிப்பிட்டார்.

Worders

சமூகம் மற்றும் கலாசார செயற்பாடுகள் மீதானதும் சர்வதேச பொருளாதார முறைகளில் ஒன்றான சமவுடமை முறை பின் தள்ளப்பட்டுள்ள பொருளாதார நட வடிக்கைகள் மீதானதுமான புவியியல் ரீதி யான இடையூறுகள் மற்றும் இறுக்கங்கள் தளர்வடையும் / தளர்த்தப்படும் செயற்பாடே உலகமயமாக்கல் என்று குறிப்பிட்டார்.

உலகமயமாக்கத்தின் ஆரம்பத்தினை 04 கட்டங்களாக நோக்குகின்றனர். அந்த வகையில்,

1) 1900 – 1913 வரை
2) 1913 – 1950 வரை
3) 1950 – 1973 வரை
4) 1973 இன்று வரை

உலகமயமாக்கலில் கால வரையறை காணப்படுகிறது. உலகமயமாக்கல் என்ற பதத்தை இலகுவாக ஆராயும் பொருட்டு வாங்வாறியாலியோங் என்பவர் நான்கு வகையாக பிரித்து ஆராய்ந்தார்.

1) உயிரின ரீதியான உலகமயமாக்கல்
2) பொருளாதார ரீதியான உலகமயமாக்கல்.
3) தொழிற்நுட்ப ரீதியான உலகமயமாக்கல்.
4) சமூக ரீதியான உலகமயமாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் உலகமயமாக்கலானது ஜனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள், சமத்துவம், ஒழிவு மறைவில்லாத ஆட்சி மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்ப வற்றின் பெருக்கம் என்ற வகைகளிலே கருதப் பட்டு வருகின்றது. மக்களையும் பிரதேசங் களையும் கட்டுப்படுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மீதும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

உலகமயமாக்கலினூடாக வளர்முக நாடுகள் கடன் பெறுதலை அதிகரிக்கவும், அந்நிய முதலீடுகள் அதிகரிக்கவும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. இதன் மூலம் கைத்தொழில் ஆற்றல் மிக்க அறிவையும் முன்னேற்ற கரமான தொழில்நுட்பத்தினையும் பெற்று வருகின்றது. வருங்கால Global Village உலக மயமாக்கல் மூலமாக உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது பின்னடைந்த சமூக நிலவரங்களை, சூழ்நிலைகளை அழித்து ஒழித்து விடலாம் என்றும், வளர்முக நாடு களின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தடுத்து விடலாம் என்றும் கருதப்படுகிறது.

கூடுதலாக உலகமயமாக்கலானது வளர்முக நாடுகளிலே பண்டங்களின் விலை வீழ்ச்சி, தொழில் மற்றும் வருமான பாதுகாப்பு தொடர்பாக நிச்சயமற்றதன்மை காணப்படல், வருமான ஏற்றத்தாழ்வு உரு வாக்கும், குற்றச் செயல்களின் பெருக்கம், சூழல் மாசடைதல் போன்றன தாக்கத்தை செலுத்தி வருகின்றது. மற்றும் இயற்கை வளங்கள், கொடூர ஆயுதங்கள், தொழில் நுட்பம், தொடர்பாடல் போன்ற துறைகளும் தாக்கத்திற்கு உள்ளாகின்றன.

இது தவிர பொருளாதார அனுகூலங் களின் அடிப்படையில் உலக நெருக்கடிகளைக் குறைக்கவும், நீண்டகால வளர்ச்சியில் உறுதிப்படுத்தக்கூடிய தொலை நோக்கு டனான பல கொள்கைச் சீர்திருத்தங்கள் வலியுறுத்தப்பட்டமை, தொடர்புசாதன முறை, தகவல் தொழில்நுட்பவியல், மின்னியல் முன்னேற்றங்கள் என்பவற்றால் நாடுகளுக்கிடையிலான காலம், தூரம் தொடர்பான தடைகள் வேகமாக அகற்றப் பட்டமை, நாடுகள் பிராந்திய அடிப்படை யிலான பொது நலன்கள் முன்னேறுவதற்கும் உலகலாவிய ரீதியில் ஏற்பட்ட வர்க்கப் போராட்ட வீழ்ச்சியும், இதனை வேகமாக செயல்வடிவமாக்கியது மற்றும் புதிய கைத்தொழில்கள், புதிய தொழில்நுட்பங் களின் வளரச்சியில் சந்தைகள் ஒன்றாக இணைக்கப்பட்டு உலக சந்தை உருவாகும் நிலை வலுப்பெற்றது. சமூக பண்பாட்டு ஒழுங்குகள் தமது நிலையிலிருந்து நீங்கிச் செல்ல பூவுலகின் எல்லைகளைக் கடந்து ஓர் சமூகப் போக்கு உருவாக்கப்படும். இது தவிர நாடுகள் தம் வளர்ச்சிக்காக இன்னொரு நாட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றன. போன்ற காரணிகள் இதனூடாக எழுந்தவையே.

இதன் உள்ளார்ந்த பிரச்சினைகள் பிராந்திய ரீதியில், தேசிய ரீதியில், சர்வதேச ரீதியில் காணப்படுகின்றன. அந்த வகையில்,

- **வருமான சமமின்மை**

  தனிநபர்கள், நிறுவனங்கள், பிராந்தி யங்கள், நாடுகள் என்பவற்றுக்கிடையே உலகமயமாக்கல் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பகிர்வதில் நியாயத் தன்மைப் பிரச்சினைகள் கணிசமாகவே காணப்படுகின்றன. வளர்ந்த நாடுகள் மிகவேகமாக வளர்கின்ற அதே நேரம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மிகக் குறைந்த வேகத்திலேயே வளர்ச்சி யடைந்து வருகின்றன. இதன் காரணமாக வறிய நாடுகள் அதிகளவில் ஓரம் கட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **உறுதியின்மை**
  உலகலாவிய ரீதியில் நாடுகள் ஒன்றில் ஒன்று அதிகமாகத் தங்கியிருப்பதனால் பிராந்திய ரீதியான / உலகலாவிய ரீதியான தளம்பல்கள் / நெருக்கடிகள் தாக்கத்தை செலுத்துவதன் காரணமாக அவற்றுக்கிடையே ஓர் நம்பகத்தன்மை அதாவது உறுதியற்ற தன்மை காணப்படு கின்றது.
- **நாடுகளின் இறைமைக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் :**
  இங்கு பலம் பொருந்திய நாடுகள், பல்தேசிய நிறுவனங்கள், சர்வதேச ஸ்தாபனங்கள் என்பவற்றினால் இறைமை உள்ள நாடுகள் கட்டுப்படுத்துவது அதி கரித்துக் கொண்டிருக்கிறது. இதனால் தீவிர தேசிய வாதம், இனவெறி என்பன வெளிக் கிளம்புகின்றன.
- **ஏனைய பொருளாதாரம் சாராப் பிரச்சினைகள் :**
  இதன் மூலம் முக்கியமாகப் பாதுகாப்புப் பிரச்சினையானது நாடுகளிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்து யுத்தத்திற்கு வழிவகுக்கின்றன. இவ்யுத்த மானது ஆயுதம் தாங்கியதாகவோ அல்லது மனிதர்களிற்கிடையிலான சாத்வீகப் போராட்டமாகவோ அமை யலாம்.
- மேலும் உலகமயமாக்கலானது சூழல் மாசடைதல், சுகாதாரம், புவி வெப்ப மடைதல், கொடிய வியாதிகளின் பரவல், கலாசாரப் பண்பாட்டு ரீதியான சீர்கேடுகள் (போதைவஸ்து பாவனை, உறவுமுறை, ஆபாசப்படங்கள், நவநாகரீக உடைகள்) வளர்ச்சியடைந்து வருகின்றன.

இந்த வகையில் உலகமயமாக்கலானது பல்வேறு தாக்கங்களை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற அதே வேளை உலகமயமாக்கலின் ஊடாக ஏற்படுத்தக்கூடிய நன்மைகள், தீமைகள் என ஆராயும் போது உலகமயமாக்கலின் நன்மைகள் என்ற அடிப்படையில் சந்தை வாய்ப்பு ஏற்படுகின்றது. வளர்முக நாடுகள் தமது சேமிப்புக்களை அதிகரிக்கவும், கடன்கள் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கின்றது. வளர்முக நாடுகள் நவீன தொழில்நுட்பங் களையும் கைத்தொழில் விருத்தியையும் பெறக்கூடியதாக உள்ளது. பலநாடுகளில் வாழும் மக்களது வாழ்க்கைத்தர முன்னேற்றத் திற்கும் வருமான அதிகரிப்பிற்கும் உதவி புரிந்து வருகின்றது.

அடுத்து உலகமயமாக்கலின் தீமை களாக சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை களை பின்பற்றுகின்றன, வளர்முக நாடு களின் ஆற்றல்களை உலகமயமாக்கம் கட்டுப்படுத்துகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீது அபிவிருத்தியடைந்த நாடுகள் தமக்குரிய அபிவிருத்தி உத்தி களைத் திணிக்கின்றன. வறுமையில் வாழும் மக்களுக்கு எதிராக அமைந்து வருகின்றது. வளர்ந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லக் காரண மாகின்றது. பண்பாட்டின் தனித்துவமான அர்த்தங்கள், எல்லைகள் உடைக்கப்பட்டு பண்பாட்டுத் தனித்துவம் சிதைவடைந்துள்ளது. அத்துடன் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையும் தோன்றுகின்றது. போதைவஸ்து பாவனை அதிகரித்து பாரிய சமூக சீரழிவை ஏற்படுத்துகின்றது. வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கின்றது.

எனவே உலகமயமாக்கலானது உலக ளாவிய ரீதியில் அரசியல், சமூக, பொரு ளாதார, கலாசார ரீதியில் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைய நிஜங்கள் நாளைய விடியலுக்காய்

செல்வன். தே. விதுஷன்
தரம் 13[1] Bio

"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்"

என்று தீர்க்கதரிசியான பாவேந்தன் பாரதிதாசன் அன்றே இந்த உலகிற்கு அழைப்பு விடுத்துள்ளான். எம் பூவுலகம் புதிய உலகமாக மாறவேண்டுமாயின் இங்கே போர் இல்லாத, சமாதானப்பூ மலர்கின்ற பிரதேசங்கள் தோன்ற வேண்டும் என்பதே பாவேந்தனின் விருப்பு. இதற்கிணங்க நாம் இப் பூமித்தாயில் சமத்துவ விதைகளை விதைப் பதற்கு முயற்சிக்க வேண்டும். வன்முறையற்ற ஓர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

'வன்முறையற்ற சமுதாயம்' என்பதை உச்சரிக்கவே எவ்வளவு ஆசையாய் இருக்கிறது. பாரதியார் கூறியது போல் 'இன்பத்தேன்' வந்து காதில் பாய்வது போல் இனிமையாக இருக்கிறது. ஆனால் அதெல்லாம் இன்று கற்பனையிலே மட்டும் காணக்கூடிய ஒன்றாக மாறிவிட்டது மட்டுமே நிதர்சனமான உண்மை. அன்று தொட்டு இன்று வரையில் இந்தப்பூமியில் 'வன்முறைகளற்ற சமுதாயம்' என்று ஒன்று இருந்ததாக வரலாறுகள் இல்லை.

இன்று தொடர்பாடல் விருத்தியாலும், கணனிப் புரட்சியாலும் உலகம் 'புவிக் கிராமம்' என்ற மிகக் குறுகிய நிலைக்குச் சுருங்கி விட்டது. எண்ணற்ற இயந்திரங்கள், சேவை புரியக் காத்திருக்கும் இயந்திர மனிதர்கள், எண்ணற்ற பொழுது போக்கு அம்சங்கள், வானளாவிய கட்டடங்கள், அணுச்சக்தி வளங்கள், காற்றையும் கடலையும் கிழித்துக்கொண்டு செல்லக் கூடிய போக்குவரத்து சாதனங்கள் என இன்றைய விஞ்ஞான இலத்திரனியல் உலகின் சாதனைகள் பற்பல! உண்மைதான். ஆனால் உலகம் கடந்து வந்த பாதையைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போமானால் அதில் பெரும்பகுதி இரத்தத்தாலும், சதைகளாலும் தோய்க்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

சங்க காலத்திலேயே வன்முறைகள், போர்கள், யுத்தங்கள் என்பன சர்வசா தாரணமாகி விட்டதைப் பார்க்கிறோம். சேரர், சோழர், பாண்டியர்களின் பெரும் போர்கள் இல்லாத காலங்களே இல்லை. அந்தக் கால காப்பியங்களில் கூட, பாட்டுடைத் தலைவனை மிகப்பெரும் போர் வீரனாக வர்ணித்து, அவன் போர்களில் செய்த கொலைகளை எல்லாம் போற்றி, ஏடுகளில் அழியாத சித்திரமாகத் தீட்டி வைத்திருப்பதைக் காணலாம்.

இராஜராஜசோழன் புலிகேசியினுட னான போரில் வாதாபி சாளுக்கியரைக் கொன்ற வீரம் தான் பேசப்படுகிறதே தவிர, எத்தனை பெண்களை அவன் விதவை யாக்கினான், எத்தனை நகரங்களை நிர்மூல மாக்கினான் என்ற பேச்சே எழுப்பப்படுவ தில்லை. போர்களின் அழிவுகள் பற்றிய கவலை அந்தக் கால அரசர்களுக்கு இருந்ததே இல்லை. கீழைத்தேசம் மட்டுமல்ல மேலைத் தேசத்திலும் கூட புகழ் பெற்ற போர்களைப் புரிந்த அரசர்களை எல்லாம் சிலைகளாக்கி விட்டு, ஒரு கொலை செய்தவனை மட்டும் ஊசியேற்றிக் கொல்லும் வழக்கம் தான் அங்கும் இருந்து வருகிறது. அலெக்ஸ்சாண்டர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெப்போலியன் எல்லோரும் 'மாவீரர்கள்" அவர்களைப் பொறுத்தமட்டில்!

அயல் நாடான இந்தியாவை நோக்கு வோமானால் அது அகிம்சை என்ற போர் வையைப் போர்த்தியிருந்தும் உண்மையில் அதன் வரலாறு புழுதி பறக்கப் புரவிகள் பறந்த போர்களினாலும், ஈட்டிகளும், கேடயங்களும் மோதிக்கொண்ட ஒலி களாலும், ஆறாகப் பெருக்கெடுத்தோடிய இரத்தத்தினாலும் தான் எழுதப்பட்ட தெனலாம். மூவேந்தர்கள், மொகலாயச் சக்கரவர்த்திகளின் சண்டைகள், அட்ட காசங்கள் என வன்முறைகள் தலைவிரித் தாடிய தேசம் அது. தந்தையைக் கொன்று அரசேறிய ஔரங்கச்சிப்பின் ஆட்சியின் கீழ் வன்முறைகளற்ற சமுதாயம் ஒன்று உருவாகியிருக்கக் கூடும் என நம்பலாமா? தன் வாள் வலியால் சிற்றரசுகளை இணைத்து மௌரியப் பேரரசாக்கிய அசோகனையும், ஹர்சவர்த்தனர்களை சாணாக்கியரின் தந்திரத்தோடு வெற்றி பெற்ற சந்திரகுப்த மௌரியனையும், "வீரர்கள்" என்று தலையில் தூக்கி, சரித்திரத்திலெல்லாம் போற்றி வழிபடுகிறது பாரததேசம்.

நம் நாடு இலங்கை தேரவாத புத்த சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. மூப்பு, பிணி, சாக்காடு என்பவற்றை வெறுத்து போதி மரத்தின் கீழ் ஞான மடைந்த புத்தரைப் போற்றும் நாடு. ஆனால் தந்தை தாதுசேனனைக் கொன்ற மகன் காசியப்பனின் கதையையும், நாட்டின் தலைநகரங்கள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்ததையும், மாறி மாறி அரசபீடத்துக்காய் நடந்த போர்களையும், கடைசியில் ஐரோப்பியரிடம் கண்டி இராச தானியைப் பறிகொடுத்ததையும் நாம் வர லாறாகப் பதிந்து வைத்திருக்கிறோம். ஜீவ காருண்யத்தை அடிப்படையாகக் கொண்ட இந்நாட்டிலேயே இத்தனை வன்முறைகள் என்றால் இடிஅமீனிடமும், ஹிட்லரிடமும் மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியுமா?

பழைய கதைகளையெல்லாம் முற்றாக மறந்து விட்டு புதிதாக இன்றைய நிகழ் காலத்தைத் திரும்பிப் பார்த்தாலும் கூட உலகில் எந்த ஒரு மூலையிலும் எப்போதும் ஏதாவது ஒரு கலவரம் நடந்து கொண்டே யிருக்கின்றது. கடலில், வானில், தரையில் என்று எங்கெல்லாம் முடியுமோ அங் கெல்லாம் யுத்தங்கள், அவை இன்றேல் கடத்தல், கொலை, ஊழல், பாலியல் துஸ்பிர யோகம் என்று எப்போதும் ஏதாவது ஒரு வன்முறைச் சம்பவம் நடந்து கொண்டே யிருக்கின்றது. உலக நாடுகளைப் பார்க்கும் போது கூட வன்முறையற்ற சமுதாயம் ஒருபோதும் கண்ணில் படப்போவதில்லை. தீவிரவாதிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல், கொரில்லாப் போர் என வன் முறையே மேலோங்கிக் காணப்படுகின்றது. அணுகுண்டுப் பரிசோதனை என நாட்டுக்கு நாடு போட்டி, இந்தியா – பாகிஸ்தான் இடை யறாத எல்லைப் பிரச்சினை, இவற்றோடு வெள்ளையர் - கறுப்பின மக்களுக்கிடையே யான கசப்புணர்வுகள் கூட இன்னும் தீர்ந்த பாடில்லை. இப்படியாக அன்று தொட்டு இன்று வரையில் வன்முறைகள் மட்டுமே பழகிப் போய் சூடு சுரணையற்ற நடைப்பிணம் போல் நிற்கும் உலகத்தில் 'வன் முறையற்ற" சமுதாயத்தை எங்கே போய்த் தேடுவது? இதற்கெல்லாம் காரணம் தான் என்ன?

எம்முள்ளே தாண்டவமாடும் சுயநலம், பொறாமை, போட்டி, ஆசை, வெகுளித்தன்மை, போலிக் கௌரவங்கள் என்பவையே இதற்குக் காரணங்கள். இன்று பூமியிலே எங்கு பார்க்கினும், எங்கு நோக்கினும் போர் ஒன்றே தெரிகிறது. இதற்குள் சிக் குண்ட ஏழைகளினதும், ஏதிலிகளினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் மண்ணைக் கழுவாத நாளேது? வாழ்வின் கலாசாரம் செழிக்க வேண்டிய தருணத்தில் சாவின் கலாசாரமே தலை விரித்தாடுகிறது. வீட்டிலும், வீதியிலும், ஊரிலும், நாட்டிலும் இறுதியாக உலகத்திலும் மண், பொன், பெண், இனம் என்ப வற்றைக் காரணங் காட்டிப் போர்கள் வெடிக்கின்றன. மனித நேயத்தை மருந்துக்கும் காண முடிவதில்லை. புரிந்துணர்வு துளியளவுமில்லை. அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தாலும், பாகிஸ்தானின் பிடிவாதத்தாலும், வடகொரியாவின் ஏதேச்சைப் போக்காலும், ஈரானின் தான்தோன்றித்தனத்தாலும், மூன்றாம் உலகப்போர் மூழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆயதங்களின் சடசடப்பால் காதுகள் செவிடுபடுகின்றன. வெடிமருந்து வாசனையால் மூக்குகள் செயலிழக்கின்றன. நிலக்கீழ் வெடிகளால் பாதங்கள் பறக்கின்றன. பாவிகள் இழப்புக்கு வருந்தி ஒப்பாரி வைப்பதால் நாக்குகள் மரத்துப் போகின்றன. யுத்தத்தின் கோரங்களைக் கண்டு கண்கள் நீரூற்றி வற்றிப் போகின்றன.

புத்தபிரான், இயேசுநாதர், மகாத்மாகாந்தி, அன்னை தெரேசா என அன்பின் உருவங்கள் வாழ்ந்த நிதர்சனமற்ற இம்மண்ணில் நியாயங்கள் எல்லாம் நித்திய கல்லறைகளாய்த் தவிப்புகளும், ஏமாற்றங்களும் மண்ணில் புழுதியாய் உருமாறிய மயானங்களாகிவிட்டன. எது எப்படி இருந்தாலும் இனியாவது போர் மேகங்கள் கலைய வேண்டும். அமைதி வாழ்வு பிறக்க வேண்டும். இந்தியாவின் முதற்பிரதமர் நேரு அவர்கள் கூறியதுபோல் போர் என்பது ஒரு முட்டாள்தனமான விடயம். போரை மறந்து உலக நாடுகள அமைதி காக்க வேண்டும் மனங்கள் மென்மையாக வேண்டும். அப்போதுதான் சமுதாயங்கள் வன்மையாக இருக்கமாட்டாது. புத்தர், இயேசுநாதர் போன்ற மகான்கள் போதித்தவை பரந்து கிடக்கின்றன. அவற்றை ஏறெடுத்துப் பார்ப்பதிலும் அன்பே வேதமாகக் கொள்வதிலும் தான் வன்முறையற்ற சமுதாயம் உருவாகுவதில் தங்கியிருக்கின்றது.

நாட்டிற்கு நாடு சண்டை வேண்டாம். இனத்திற்கு இனம் பூசல் வேண்டாம். மதத்திற்கு மதம் பிரச்சினை வேண்டாம். மனங்களுக்கிடையே பிணக்குகள் வேண்டாம்.

நாளைய வாழ்வில் காலடி பதிக்கும் வரை இன்றைய வாழ்வின் இனிமையை நுகர்வோம். நாளைய கனவுகள் நிறைவேறும் வரை இன்றைய நிஜங்களில் இணைந்திருப்போம். மானுடமே! உன்னுடைய சுவடுகளில் பூசப்பட்டிருக்கும் கருமையைத் துடைத்துக்கொள். மனங்களில் ஒட்டிக்கொண்ட இருளினை அகற்றிவிடு. உலகில் வியாபித்திருக்கும் அடிமைத்தனத்தை அனுப்பிவிடு. வாழ்க்கைப் பாதையில் பரப்பப்பட்டிருக்கும் முட்செடிகளை விலக்கிவிடு. வறுமை எனும் தூரிகை வரைந்து விட்ட கண்ணீர்க் கோலங்களை அழித்து விடு. துன்பங்களால் வளைந்திருக்கும் முதுகுகளை நிமிர்த்தி விடு. பூலோகமெங்கும் அமைதிக் காற்று எல்லை வீச பசுமையின் செழிப்பு எங்கணும் பரவட்டும். நாளைய விடியலின் அமைதி மலர் பூக்க நம்பிக்கை வானில் போரின் முரசொலி அடங்கி உலக அமைதிப் பூங்காவில் மானுடம் சிறக்க நீ மனிதம் கொள்! மூளையும் அறிவும் பிறந்த நிலையில் மக்களை மாக்களாக மதிக்கும் காலமல்ல, மிதிக்கும் காலமிது. இந்நிலை அழிய வேண்டியதே. அழிவின் பின்னர் ஏற்படும் கோலங்களில் நேற்றைய நிஜங்களைப் பாடமாகக் கொண்ட நாளைய விடியலின் நாளைய தலைமுறையினர் கால் பதிக்க வன்முறையற்ற புதியதோர் உலகை இன்றே படைப்போம்!

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்வு

செல்வி. க. மயூரா
தரம் 9A.

"தம்பி செந்தூரன் இஞ்சை வாடா அரிசி முடிஞ்சுது இனிச் சமைக்கவும் அரிசியில்லை. தாத்தாவின்ர பென்சன் காசும் இண்டைக்குத்தான் வந்தது. இதைக்கொண்டு போய் ரெண்டு கிலோ அரிசி வாங்கிக் கொண்டு வாடா தம்பி. என்னாலையும் ஏலாமல் கிடக்கு என்னாலை நடந்து போகவும் ஏலாது". என்று மூச்சு விடாமல் பேசி முடித்த தனது பாட்டியைப் பார்க்கிறான் செந்தூரன். அவனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் செந்தூரனின் தந்தையார் ஒரு வங்கியில் முகாமையாளராகப் பணியாற்றியவர். அவனுடைய தாயார் ஒரு பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றியவர். செந்தூரனின் தாத்தாவும் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர் தான்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் அவனது தாய், தந்தையார் தமது பணிபுரியும் இடங்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். செந்தூரனையும் அவனது பாடசாலைக்குக் கூட்டிச் சென்றனர். அன்று நடந்த சம்பவத்தை யாரால் தடுக்க முடியும். அவர்கள் சென்ற கார் லொறி ஒன்றுடன் மோதியதில் செந்தூரனும் அவனது பெற்றோரும் படுகாயமுற்றனர். வைத்தியசாலையில் அனுமதித்து சில நிமிடங்களிலே செந்தூரனின் பெற்றோரைக் காலன் கவர்ந்து விட்டான். செந்தூரன் தெய்வாதீனமாக உயிர் தப்பினான். அப்போது செந்தூரனுக்குப் பத்து வயது தான். தாய், தகப்பனுக்கு அவன் ஒரே பிள்ளை.

அன்று முதல் அவனது தாத்தாவும், பாட்டியும் தான் அவனைக் காப்பாற்றி வளர்த்து வந்தனர். மகளினதும், மருமகனினதும் பிரிவு அவர்களுக்குத் தாங்கொணாத் துயரத்தைக் கொடுத்தது. ஒரு வருடத்துக்கு முன்னர் தான் செந்தூரனின் தாத்தாவும் பரலோகம் சென்று விட்டார். அன்று முதல் இன்று வரை பாட்டியுடனேயே வாழ்ந்து வருகிறான். அப்போது நடந்த சம்பவங்களை மீட்டுப் பார்க்கும் போது அவனுக்கு கவலையில் கண்கள் கலங்கின. ஒருவாறு சுயநினைவுக்கு வந்தான். "பாட்டி எனக்கு ரியூசனுக்கு நேரம் போட்டுது. கெதியாய்க் காசைத் தாங்கோ வாங்கிக் கொண்டு வந்து தாறன்" என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

ஆண்டுகள் பல கழிந்தன. செந்தூரனின் பாட்டியும் அவனைத் தனியே விட்டு விட்டுப் பரலோகம் சென்று விட்டாள். அதன் பிறகு அவனது பாடசாலையில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் சிவகுமார் மாஸ்ரர் தான், தன்னுடைய செலவில் அவனைப் படிக்க வைத்தார். தன் மீது அவர் வைத்துள்ள அன்பை நினைத்து மனம் நெகிழ்ந்தான் செந்தூரன்.

அவனுக்கு மாகாண மட்டப் பரீட்சைகள் நடைபெற்றன. சிறப்பாகப் பரீட்சை எழுதினான். பரீட்சைக்கான அனைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவையும் சிவகுமார் மாஸ்ரரே பொறுப்பேற்றுக் கொண்டார். "நீ நன்றாகப் படித்து முன்னேற வேண்டும்" என அவர் செந்தூரனிடம் அடிக்கடி கூறுவார்.

மாகாண மட்டப் பரீட்சை முடிவுகள் வெளியாகின. செந்தூரன் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றான். தொடர்ந்து படித்தான். பதினோராம் ஆண்டுக்கான O/L பரீட்சையிலும் தோற்றி அதிலும் அதிவிசேட சித்தி பெற்று, உயர்தரத்தில் விஞ்ஞானத்துறையில் கல்வி கற்று அதிலும் அதிவிசேட சித்தி பெற்று, மருத்துவத்துறையில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானான்.

பல்கலைக்கழகத்திலும் சிறப்பாகக் கல்வி கற்று ஒரு வைத்தியரானான். மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்தித்தும் விடா முயற்சியால் அவன் உயர்வு பெற்றான். தன்னை இந்நிலைக்கு ஆளாக்க ஊன்று கோலாக இருந்து உதவி புரிந்த சிவகுமார் மாஸ்ரரையும் அவன் மறக்கவில்லை. "நன்றி மறப்பது நன்றன்று" அல்லவா.

* * *

அறிவு என்பது மனிதருள் மறைந்துகிடப்பது. அம்மனதில் ஆழ்ந்து உறங்கும் அறிவாற்றலைக் கட்டியெழுப்பி மாணவனைத் துலங்கச் செய்பவனே ஆசான். அன்றி ஆசான்கள் மாணவனுக்கு அறிவை அள்ளிக்கொடுப்பதில்லை என்பதே உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவள்ளுவர் கூறும் வெற்றிக்கு வழி

செல்வி. த. நாராயணி
2011 Bio

மக்கள் தம் வாழ்விலே வெற்றி காணாமல் வருந்துவதற்குக் காரணம் அவர்கள் தத்தம் ஆற்றலை அறியாமையேயாகும். இத னாலேயே அவர்களிடம் தாழ்வு, தோல்வி, சோர்வு மனப்பான்மைகளும் உண்டா கின்றன. இவை உண்டானால் மக்களும் அவர்களுடைய இனமும் உயர்வடைதல் இயலாத காரியம்.

இந்த மனப்பான்மைகளை வளர்ப்பதற்கு "எல்லாம் விதியின் விளையாட்டு" என்ற சாட்டுங் கூறப்படுகின்றது. இந்த "விதி" என்ற மாயச்சாட்டினால் சோர்வடைந்து கெட்டுப்போனவர்கள் அளவில்லாதவர்கள். பிறரைக் கொடுமைப்படுத்தி அடக்கி ஆள்பவர்களும், சுரண்டிப் பிழைப்பவர் களும், ஏமாற்றி வாழ்பவர்களும் இந்த விதியின் துணையினால் அதிகமாக வளர்ந்து வருகின்றனர். தன்னம்பிக்கை யையும், முயற்சியையும் இந்த விதி கெடுத்து விடுகிறது. "எல்லாம் விதிப்படி" என்ற கொள்கை, மக்களுக்குச் செய்தி மாபெரும் கொடுமையெல்லாம் கண்டார் வள்ளுவப் பெருமான். 'விதி'யினைப் பற்றி விரிவாக ஓரதிகாரத்தில் அவர் விளக்குகிறார். விதியிலும் மிகுந்த வலிமையுள்ளது வேறொன்றும் இல்லை என்று கூறுவதையும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்"

என்றியம்புகிறார். இத்தகைய பேராற்றல் வாய்ந்தது என்று கூறப்படும் இந்த விதியையும் வெல்லலாம் கம்பர் கூறுவது போல "விதிக்கும் விதியாகலாம்" என்று அவர் உறுதி கூறுகிறார். தளராத முயற்சியினால் விதியை வெல்லலாம் என்று வழிகாட்டுகிறார் முயற்சியின் பெருமையை வெற்றிக்கு வழியை மக்கள் மனதில் பதியச் செய்கிறார். மக்கள் மனதில் வள்ளுவப் பெருமான் உண்டாக்கிய திருப்பங்களில் அரிய பெரிய புரட்சித் திருப்பம் இதுதான் எனலாம். "ஊழையும் உப்பக்கங் காண்பர்" எனும் திருக்குறள் 'விதியின் விளையாட்டு', 'ஊழின் விளைவு', 'தெய்வச் செயல் ' என்று கூறிக் கூறிச் சோர்ந்து, உக்கி உடைந்து போன உள்ளங்களுக்கு நம்பிக்கை எனும் ஊசி மருந்தை ஏற்றி ஊக்கம் அளிக்கிறது.

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

எனும் குறளில் "விதி விளையாடினாலும்" உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும். முயற்சிக்குத் தக்க கூலி பெறலாம் என அவர் கூறி மக்களை உழைக்குமாறு ஊக்குவிக்கிறார். உழைக் காமல் உயர்ச்சி அடைய முடியாது, வெற்றி பெற முடியாது என்பதை எல்லோருடைய உள்ளத்திலும் பதிய வைக்கிறார். முன்வினைப் பயனைக் கருதாமலும், பிறர் உதவியை நாடாமலும் மக்கள் தம்மைத் தாமே உயர்த்தலாம் என்று அழுத்தந் திருத்த மாக எடுத்துக்காட்டி, அவ்வாறு உயர்த்து வதற்கு வழிவகுத்த தனிப் பெருமையும் வள்ளுவப் பெருமானுக்கே உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய கருமங்களைச் செய்கிறவர் களுடைய ஆற்றலும், தகுதியும், பெருமையும் பலரிடத்து இல்லை என்பது உண்மை தான். "இல்லையே" என்று எண்ணித் தளர்ச்சி அடைந்துவிடக் கூடாது. அவற்றைப் பெற்ற பின்னரே நாம் முயல்வோம் என்று தளர்ச்சியுடன் இருந்துவிட்டால், எக் காலத்திலும் அவற்றைப் பெறுதல் முடியாது. ஆதலால் தளர்ச்சியடையாமல் முயலுங்கள். பெருமை தானாகவே வந்துவிடும் என்று அருமையான வழியினைக் காட்டுகிறார் வள்ளுவர்.

"எண்ணிய எண்ணியாங்கு"

என்ற குறளின் மூலம் மனத்திண்மையுடனும், உறுதியுடனும் முயன்றால் எண்ணியதை எண்ணியவாறு பெறலாம் என்பது இதன் கருத்தாகும்.

நெப்போலியனுடைய அகராதியில் "செய்ய முடியாதது" எனும் சொல் இல்லை. எதையும் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் அவன். ஆனால் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவள்ளுவர் இந்த உலகத்துக்கு ஓர் உண்மையை அறி வுறுத்தி இருக்கிறார். வள்ளுவர் கூறிய உண்மைக்கு இலக்காகப் பல பெரியார்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களுள்ளே நெப் போலியனும் ஒருவன் எனலாம். மறதியால், சோர்வால் தளர்வடையாமல் உள்ளத்து உறுதியுடன் ஆராய்ந்து செய்பவர்களுக்குச் செய்ய முடியாத காரியம் இல்லை என்று வள்ளுவர் உரைக்கிறார். காரிய சித்தியின் இரகசியத்தை

"அரியவென்று ஆகாதவில்லை
-பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்"

எனும் குறள் மூலம் அழகாக எடுத்தியம்புகிறார்.

கலக்கமின்றிச் செய்யும் பொழுது பின்னர் செய்வோம் என்று சிலவற்றைத் தள்ளிப் போடும் வழக்கமும் மக்களிடையே உண்டு. இவ்வாறு ஒரு தொழிலை நீடிப்பதால் அத் தொழிலில் வெற்றி பெற முடியாமற்போகலாம். எனவே காலத்தைக் கடத்தாமல் தொழிலை விரைந்து செய்தல் வேண்டும். வெற்றியீட்ட விரும்புபவர்களுக்கு அசையாமையைத் துளங்காமை எனவும், நீடிக்காமையைத் தூங்காமை எனவும் கூறிய வள்ளுவர்

"கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது
தூக்கங் கடிந்து செயல்"

என்பது அவருடைய அறிவுரை.

ஒரு தொழிலைச் செய்யும்பொழுது துன்பம் உண்டாகலாம். அவ்வாறு தொடக் கத்தில் உண்டாகும் துன்பத்தைக் கண்டு தளராமலும், தயங்காமலும் செய்தல் வேண்டும். தொழிலைச் செய்து முடிக்கும் பொழுது அதனால் பெறும் இன்பத்தை நினைத்தால் தொடக்கத்தில் உண்டாகும் துன்பத்தைத் தாங்கித் தளராமல் செய்யும் துணிவு பிறக்கும். எனவே,

"துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என வள்ளுவர் பணிக்கிறார். இவ்வாறு வள்ளுவர் கூறும் திருக்குறள்களில் ஒன்றைப் பின்பற்றினாலும் எல்லாத் துறையிலும் யாவரும் வெற்றி ஈட்டலாம் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

♣ ♣ ♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெகுஜன ஊடகங்களின் முக்கியத்துவம்

சந்திரநாதன் கோபிகன்
13H

இன்றைய நவீன உலகத் தகவல்களே (Information) ஆட்சி செய்து கொண்டிருக்கின்றன. உலக இயக்கத்தின் அன்றாட நடவடிக்கைகளாலாயினும் சரி, ஒரு சமூகத்தின் அல்லது தேசத்தின் பாதுகாப்பு, கலாசாரம், ஒற்றுமை, பொருளாதாரம், அரசியல் என்பவற்றைத் தீர்மானிக்கும் அல்லது வளர்க்கும் சக்திகளாக தகவல்களே விளங்குகின்றன.

